An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

EISSN 2456-5571

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 8 | SPECIAL ISSUE 1 | FEBRUARY 2024 | E-ISSN: 2456-5571

## அரசு கலைக் கல்லூரி, மேலூர்

தமிழ் உயராய்வு மையம் நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

## தமிழ் இலக்கிய ஆய்வுப் போக்குகள்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் பா. சிங்காரவேலன்

முனைவர் இர. ஷீலாராணி

# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science

**An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal**

Vol. 8 Special Issue 1 February 2024 E-ISSN: 2456-5571

**CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)**

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

## AUTHOR GUIDELINES

**About Bodhi**

The BODHI International Journal of Research in Humanities, Arts and Science (E-ISSN:2456-5571) is open access, peer reviewed, referred and quarterly journal, which is powered & published by center for Resource, Research and Publication Services, (CRRPS) India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the field of humanities, arts and science.

**Subjects for Papers**

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. Agriculture, anthropology, education, geography, advertising botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Call for Papers**

The journal invites balanced mix of theoretical or empirical, conceptual papers to publish including research articles, case studies, review papers, comparative studies, dissertation chapters, reports of projects in progress, analytical and simulation models, technical notes, and book reviews, leading academicians, business peoples, corporate sectors, researcher scholars and students from academic institutions, research organizations, non-government organizations (NGOs), corporate sectors, civil societies, industries, and others from India and abroad.

**Submission of Manuscript**

1. Submit your article by email to **bodhijournal@gmail.com**
2. The manuscripts/papers should be research based or related, original and comprise of previously unpublished material and must be presented following scientific methodology.
3. Authors must send an abstract of the paper not exceeding 250 words, all manuscripts must be in font style of Times New Roman, size: 12, line spacing: double spaced and submitted only in MS Word 2003/ 2007 version.
4. All manuscripts should follow the MLA or APA style manual. The full paper must not exceed 3000 words, including tables and references.
5. The manuscript should be well-organized to have Title page, Abstract, Keywords, Introduction, Literature Survey, Problem Definition, Material & Methods, Findings & Results, Interpretation & Discussion, Conclusion and References.
6. All quoted, reproduced material should clearly be referenced.
7. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text.
8. All contents should be original – authors' own words, ideas, findings and arguments.

9. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text. All figures and tables must have an intelligible caption in relation to the text.
10. Photographs must be sharp, and exhibit good contrast.
11. Correct and complete referencing of quoted and reproduced material is the obligation of the author. In the text, references should be inserted in parentheses in full.
12. If author uses a reference from an out-source, author should cite relevant source giving credit to the original author/contributor.

**Review of Article / Manuscript**

1. The manuscript will be numbered and sent to the review committee for review -report.
2. The author will be intimidated of the review and the process will take a maximum period of 15 – 20 days.

**Ethical Policy**

1. Authors are advised to adhere to the ethics of publication of his/her article to be considered for publication.
2. Acknowledgement of the original ideas, borrowed from other sources is imperative.
3. The authors of original research work (previously unpublished / under process for the publication elsewhere) should be an accurate submission of the work carried out, provide the rationale of the significance of the research work in context with previous works, and should contain sufficient details to allow others for further research.
4. It will be the wholesome responsibility of the authors for such lapses if any on legal bindings and against ethical code of publication or communication media.

**Plagiarism Alert & Disclaimer**

1. The publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts.
2. All submissions should be original and must have a "statement of declaration" assuring their research paper as an original and fresh work and it has not been published anywhere else.
3. It will be authors are sole responsibility for such lapses, if any on legal bindings and ethical code of publication.
4. Contributors are advised to be aware about Plagiarism and ensure their paper is beyond plagiarism as per UGC norms.

**Publication Policy & Peer-review Process**

Peer review exists to ensure that journals publish article which is of benefit to entire research community. Peer reviewers' comments and recommendations are an essential guide to inform the editor's decision on a manuscript that revisions and improvement. They are part of the publication process and actually help raise the quality of the manuscript. It also helps the readers to trust the research integrity of the article.

1. The Editor-in-Chief will primarily examine each manuscript.
2. The editor-in- Chief will advise the authors about the acceptance of the manuscript by email.
3. The manuscript will be evaluated on parameters of originality, practical importance, subject relevance, scientific level and contribution to the current academic scenario.
4. If the manuscript is accepted following publication policies.

5. Accepted manuscript will be forwarded to the double-blind peer review process. Such that the journal does not disclose the identity of the reviewer(s) to the author(s) and does not disclose the identity of the author(s) to the reviewer(s).
6. The review committee is not responsible for stripping of any information during panel review as the original author is not known to the committee.
7. Manuscript/paper will be published only when the article is 'commended for publication' from the review committee/editorial board.
8. If necessary the copy-editing work will be done by the members of the Editorial Board.
9. The review process may take minimum 20 working days.
10. In case of acceptance of the manuscript and commended for publication favorably, the manuscript will be published in online mode of time. If paper/article/manuscript is not commended for publication, the rejected manuscripts shall not be returned.

**Copyright Notice**

Submission of an article implies that the work described has not been published previously (except in the form of an abstract or as part of a published lecture or academic thesis), that it is not under consideration for publication elsewhere, that its publication is approved by all authors and tacitly or explicitly by the responsible authorities where the work was carried out, and that, if accepted, will not be published elsewhere in the same form, in English or in any other language, without the written consent to the Publisher. The Editors reserve the right to edit or otherwise alter all contributions, but authors will receive proofs for approval before publication.

Copyrights for articles published in Bodhi International Journal of Research in Humanities, Arts and Science are retained by the authors, with first publication rights granted to the journal. The journal/publisher is not responsible for subsequent uses of the work. It is the author's responsibility to bring any infringement action if so desired by the author.

**Indexed & Open Access**

The journal will be indexed as per database norms. The Indexing will provide the manuscript to achieve its purpose of being accessible to worldwide readers. Easy accessible will increase as manuscript's and journal's reputation. It will be a source of the quality information in respective areas/studies.

**Privacy Statement**

We may collect the contact details from authors like names, designation with Institutional address, email addresses, postal address, phone numbers and other information to understand needs and provide with a better service that are entered in this journal site and will be used exclusively for the stated purposes of this journal.

**Frequency of Publication of the Journal**

BODHI is a quarterly journal, will be published in January, April, July and October on respective Years.

**Review and Evaluation Committee**

Quarterly review committee meeting will be convened by the editor-in-chief. Authors are expected to submit their manuscript before 20 working days of the publication of the respective month. The journal will be published regularly as per Journal publication policy.

**Article Submission**

Authors are kindly advised to send manuscripts along with registration & copyright forms. (Duly filled-in Registration form is mandatory with the paper for acceptance) Soft copy of the papers should be mailed to **bodhijournal@gmail.com**

**Conference Proceedings**

Bodhi will be published as special issues for the national / international conference and seminars volumes. The group of papers also will be published in Bodhi journal.

# வாழ்த்துரை

**முனைவர் ச. மணிமேகலாதேவி**

*முதல்வர்*

*அரசு கலைக் கல்லூரி, மேலூர்*

‘தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ என்றும். ‘வாழ்வுக்கே இலக்கணம் வகுத்த வண்டமிழ்’ என்றும் அறிஞர் பெருமக்களால் புகழப்படும் மொழி நம் தமிழ்மொழி. செம்மொழித் தகுதி பெற்ற மொழிகளில் என்றும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மொழி, மங்காப்புகழ் கொண்ட தமிழ்மொழி மட்டுமே. தமிழ் தொடாத துறையே இல்லை என்னும் பெருமைபெற்ற தமிழ் இலக்கியப் பெரும்பரப்பில் ஊடும் பாவுமாய் நிறைந்துள்ள தமிழரின் வாழ்வியலையும் அவர்தம் கலை பண்பாட்டு அடையாளங்களையும், தமிழறிஞர்களால் ஊடுருவிக் காணச் செய்து, தமிழமுதின் சுவையை அனைவரும் அறியும் வகையில் அரங்கேற்றும் நோக்கத்துடன் ‘தமிழ் இலக்கிய ஆய்வுப் போக்குகள்’ என்ற பன்னாட்டுக் கருத்தரங்கம் நிகழ்த்தப் பெறுவது மகிழ்வைத் தருகிறது.

“உயர் கல்வியின் பயன் கிராமப்புற மாணவர்களைச் சென்றடைய வேண்டும்” என்ற உயரிய நோக்கத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் எம் கல்லூரியில், தமிழரின் வாழ்வியலை மாணவர்களால் அவதானிக்கச் செய்து, கற்க கசடற கற்பவை கற்றப்பின் அதற்குத்தக நிற்பதற்கு உரிய முயற்சியைத் தமிழ்த்துறையும், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா.சிங்காரவேலன் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார். தெள்ளூற்ற தமிழமுதினைச் சுவைப்பதற்கு உகந்தாற்போல் இருக்கும் ஆய்வுக்கட்டுரைகள் ‘போதி’ என்னும் சர்வதேச ஆய்வு இதழில் இரண்டு தொகுதிகளாக வெளிவருவது கருத்தரங்க முயற்சிக்கு மெருகூட்டுகிறது. “போதி” என்னும் சொல் புத்தனையும், நியூட்டனையும் நினைவூட்டுவதாய் நிறைவளிக்கிறது. கருத்தரங்க முயற்சிக்குப் பாராட்டுக்கள். முயற்சிகள் மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்.

இப்படிக்கு

ச. மணிமேகலை

# மகிழ்வுரை

**முனைவர் ஆ. கணேஸ்வரி**
*இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ் உயராய்வு மையம்*
*அரசு கலைக்கல்லூரி, மேலூர்*

தமிழர் பண்பாடு பல்லாயிரம் ஆண்டு பழமையுடையது. நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமையுடையது என்பதற்குச் சான்றாக கடைச்சங்ககாலத் தமிழர்களும் அவர்களுடைய முன்னோர்களும் நகரம் முதல் சிற்றூர்களின் மூலை முடுக்குவரை அனைவரும் எழுதவும், படிக்கவும் தெரிந்த கல்வி சார்ந்த சமூகத்தினராக விளங்கினர் எனத் தொல்லியல் ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. அத்தகைய கல்வி சார்ந்த தமிழ்ச் சமூகம் நமது பக்குவப்பட்ட தெளிந்த மன இயல்புடன் கூடிய பண்பாட்டு நெறிகளை வாழ்ந்து காட்டியதோடு மட்டுமல்லாமல் இலக்கியங்களின் வழியாகவும் பதிவு செய்துள்ளது.

**“பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்”**

**“பண்டையார்ப் பட்டுண்டு உலகம்”**

என்றெல்லாம் நம் இலக்கியங்கள் பண்பாடு பற்றிப் பேசுகின்றன. அத்தகைய பண்பாட்டின் பன்முகத் தன்மையை, சிறப்புகளை ஆய்வறிஞர்கள் இலக்கியச் சான்றாதாரங்களுடன் வெளிக்கொணரும் விதமாக தமிழ் இலக்கிய ஆய்வுப்போக்குகள் என்ற பொருளில் மேலூர் அரசு கலைக்கல்லூரி தமிழ்த்துறையில் கருத்தரங்கம் ஒன்றை நடத்துவதென நாங்கள் அனைவரும் திட்டமிட்டோம். எங்களது கருத்தை ஏற்று கருத்தரங்கம் நடத்துவதற்கு அனுமதியளித்து ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது கல்லூரி முதல்வர் பேரா. சு.மணிமேகலாதேவி அவர்களுக்குஎன் சார்பாகவும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது அறிவிப்பு மடல் கண்டவுடன் ஆய்வறிஞர்கள் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை உரிய நேரத்தில் மிகச் செம்மையாகச் சமர்ப்பித்துள்ளனர். அவர்களுக்கும் தமிழ்த்துறை சார்பாக வாழ்த்துக்களையும் நன்றியையும் உரித்தாக்குகின்றேன். கட்டுரைகள் நூலாக்கம் பெற எமது துறைப் பேராசிரியர்களின் பெருமுயற்சி மேற்கொண்டதன் விளைவு இந்நூல். ஆய்வறிஞர்களின் கட்டுரைகளைப் பதிப்பிக்கும் பெரு முயற்சியில் ஈடுபட்ட முனைவர் பா.சிங்காரவேலன் அவர்களுக்கும், உறுதுணையாக உடன் நின்ற முனைவர் லோ.மணிவண்ணன், முனைவர் சு.தமிழரசி, முனைவர் இர. ஷீலாராணி ஆகியோருக்கும் நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கருத்தரங்கம் செம்மையுற நடைபெற ஆக்கமும் ஊக்கமும் தந்து பல்வேறு நிலையில் உறுதுணையாய் விளங்கிய நமது கல்லூரியின் அனைத்துத் துறைப் பேராசிரியர்களுக்கும், தமிழ்த்துறை மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


# தொகுப்புரை

உயர் கல்வியின் பயனைப் பின்தங்கிய கிராமப்புற மாணார்களைச் சென்றடைய வேண்டும் எனும் தமிழக அரசின் உயரிய நோக்கில் மதுரை மாவட்டம் மேலூரில் அரசு கலைக்கல்லூரி தொடங்கப்பட்டது. இக்கல்லூரியின் தமிழ்த் துறைப்பேராசிரியர்கள் அனைவரும் முனைவர்பட்டம் பெற்று பல ஆய்வாளர்களுக்கு முனைவர் பட்டம் பெற்றுத் தந்துள்ளனர். இவர்களது நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளில் பாட நூலாக இடம்பெற்றுள்ளன. தகுதியும் திறமையும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்ட தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் இணைந்து ஆறாம் ஆண்டாக பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்திக் கொண்டு வருகின்றோம். இந்த ஆய்வரங்கிற்கு ஆர்வத்துடன் கட்டுரை வழங்கி இரண்டு தொகுதிகளாக வெளியிட உதவிய பேராளர்களுக்கு நன்றிகள் பல.

தமிழ் உயராய்வு மையமாக உயர்த்தப் பாடுபட்ட பேராசிரியர்களுக்கும் கருத்தரங்கம் நடத்த அனுமதி வழங்கிய கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. மணிமேகலாதேவி அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆ.கணேஸ்வரி அவர்களுக்கும், பணி நிறைவு செய்யவிருக்கும் அன்பு நண்பர் முனைவர் லோ. மணிவண்ணன் அவர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன். பணி நிறைவுக்குப் பின்னும் கருத்தரங்கம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கி வரும் முனைவர் செ.எபனேசர் அவர்களுக்கும் பதிப்புப் பணிக்கு உற்ற துணையாக விளங்கிய முனைவர் சு.தமிழரசி மற்றும் முனைவர் இர.ஷீலாராணி அவர்களுக்கும் நன்றிகள்.

ஆண்டுதோறும் ஆய்வரங்கிற்கு சிறந்த பங்களிப்பை வழங்கி வரும் மதுரை செந்தமிழ் கல்லூரி பேராசிரியர்களுக்கும், ஈரோடு நந்தா கலை அறிவியல் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும், கட்டுரைகள் வழங்கிச் சிறப்பித்த அனைத்துக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் நன்றி. பதிப்புத் துறையில் புத்தனின் பெயர் கொண்ட போதி ஆய்விதழ் நிறுவனர் முனைவர் செ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றி. தொடர்ந்து எழுதுங்கள்..தமிழாய்வுக் களங்களைப் பலரும் அறியும் படி செய்வோம்.


**இவண்**



**முனைவர் பா. சிங்காரவேலன்**

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் மற்றும்

முதன்மைப் பதிப்பாசிரியர்



**முனைவர் இர. ஷீலாராணி**

இணைப்பதிப்பாசிரியர்

**BODHI**
**INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**
An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol: 8** **Special Issue 1** **February 2024** **E-ISSN: 2456-5571**

**Aim & Objectives**

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

**CONTENTS**


| S. No. | Chapters | Page No. |
|---|---|---|
| 1 | முல்லைப்பாட்டில் காதலும் கடமையும்<br>**முனைவர் சூ. ஆரோக்கியமேரி** | 1 |
| 2 | மதுரை, உசிலம்பட்டி - நல்லுத்தேவன் பட்டி பாட்டையா கோவில் ஒலைச்சுவடிகள்<br>**முனைவர் ந. இரத்தினக்குமார்** | 4 |
| 3 | மு. தங்கராசனின் ‘‘நாட்டுப்புறத்தில்’’ தாலாட்டுப் புலப்படுத்தும் தமிழா் வாழ்வியல்<br>**நா. இளமாறன் &**<br>**முனைவர் பா. சிங்காரவேலன்** | 12 |
| 4 | பத்துப்பாட்டினில் அறிவியல் விழுமியங்கள்<br>**முனைவர் மு. இளங்கோவன்** | 17 |
| 5 | ஆருயிர் மருந்து<br>**முனைவர் பி. கி. இளையராஜா** | 21 |
| 6 | தமிழ் இலக்கியங்களில் ஐம்படைத் தாலி<br>**முனைவர் இரா. இராமதிலகம்** | 24 |
| 7 | சிலப்பதிகாரம் காட்டும் மதுரை<br>**முனைவர் மா. உமா மகேஸ்வரி** | 27 |
| 8 | சிறுபாணாற்றுப் படையில் கொடைச்சிறப்பு<br>**முனைவர் சா. கணேசன்** | 31 |
| 9 | முத்தாரம் கூறும் காதை<br>**முனைவர் பூ. காயத்ரி** | 35 |
| 10 | சங்க இலக்கியத்தில் இயற்கை வழிபாடு<br>**முனைவர் சீ. காயத்ரி தேவி** | 40 |
| 11 | ஜி. நாகராஜனின் ‘‘நாளை மற்றுமொரு நாளே’’ பிரதியினூடாக யதார்த்தத்திலிருந்து விலகுதலும் மறுத்தலும்<br>**முனைவர் செ.ர. கார்த்திக் குமரன்** | 44 |
| 12 | வாலியின் எழுத்தோவியம்<br>**முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம்** | 48 |
| 13 | பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கல்வி<br>**ச.சங்கர லெட்சுமி**<br>**முனைவர் உ. கருப்பத்தேவன்** | 53 |

14 ஐங்குறுநூறு கூறிடும் சங்ககால வாழ்க்கை 59
**த.சங்கீதா**

15 பாத்திரப்படைப்புகள் 64
**ரா. சத்தியசீலா**

16 அம்பை சிறுகதைகள் அடையாளப்படுத்தும் பாலின பாகுபாடு 68
**வெ. சந்தியா**

17 சமூகவியல் நோக்கில் நாட்டுப்புறக் கலைகள் 71
**முனைவர் பா. சிங்காரவேலன்**

18 முல்லைநில மக்களின் உணவுப்பொருட்களும் மருத்துவமும் 79
**முனைவர் க. சிங்காரவேலு**

19 எஸ்.ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் காணலாகும் புனைவுத் திறன்கள் 88
**ரா. சுமித்ரா**
**முனைவர் வளர்மதி**

20 ‘விளக்கின் கீழே நிழல்’ ஹைக்கூக் கவிதைகளில் பன்முகச் சிந்தனைகள் 92
**முனைவர் மு. செந்தில்குமார்**

21 சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள் - ஓர் அறிவு உயிர் 95
**முனைவர் கோ. தேவிபூமா**

22 திருக்குறளில் போர் மேலாண்மை விழுமியங்கள் 99
**முனைவர் அ. தேன்மொழி**

23 தமிழ் நாவல்களில் பாலின வேறுபாடு 105
**முனைவர் எஸ். துரைமுருகன்**

24 சித்தர் இலக்கியத்தின் சிறப்புக்கள் 112
**ப. ரதிதேவி**

25 பாவலர்மணி ஆ. பழநியின் அன்னிமகள் நாடகத்தில் வரலாற்றுச் செய்திகள் 116
**ரா. ரம்யா**

26 பனையடி புதினத்தில் இயற்கை வேளாண்மை 121
**முனைவர் இரா. நித்யா**
**முனைவர் ப.சு. செல்வமீனா**

27 வள்ளுவரின் எண்ணும் எழுத்தும் 125
**முனைவர் பா. நேருஜி**

28 வைரமுத்துவின் படைப்புலகம் 130
**முனைவர் ச. பத்மா**

29 தற்காலத் தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலில் கட்டுரை இலக்கியத்தின் இடமும் இருப்பும் 135
**முனைவர் ஆ. பூமிச்செல்வம்**

30 சித்தர்களின் பார்வையில் மானுடத்தின் ஓர்மை 141
**முனைவர் பா. பெரியவர்**

31 சங்க இலக்கியத்தில் உணவு முறைகள் 145
**முனைவர் த. மலர்விழி**

32 கண்ணதாசன் படைப்புகளில் இலக்கியச்சுவை 151
**முனைவர் அ. மோகன்ராஜ்**

33 இன்குலாப் கவிதைகள்: வர்க்கப் போராட்ட சுடரொளி 158
**முனைவர் ஆ. முத்துலட்சுமி**

34 ‘‘குப்பை’’ சிறுகதை தொகுப்பில் நா. இளங்கோவின் மொழிநடை 164
**த. முத்துலெட்சுமி**

35 கலைஞர் போற்றும் குறள் இல்லறம் (திருக்குறள் கலைஞர் உரையை மூலமாகக் கொண்டு) 168
**முனைவர் கீழடி கரு முருகேசன்**

36 சங்க இலக்கியத்தில் வீட்டுப் பயன்பாட்டு இரும்புப் பொருள்கள் 173
**முனைவர் ப. முருகேசன்**

37 சிற்றிலக்கியங்களில் இழையோடும் புலம்பெயர்க் கூறுகள் 176
**நா. மணிகண்டபிரபு**
**முனைவர் ஆ. பூமிச்செல்வம்**

38 உமா மகேஸ்வரியின் ‘‘புதர்கள்’’ சிறுகதை : விளிம்பு நிலை வாசிப்பு 181
**பு. வினோதா**

39 இமையத்தின் சிறுகதைகளில் மருத்துவமனையும் பெண்களும் 187
**முனைவர் கு. ஜெயசித்ரா**

40 தமிழ்க்காப்பியங்களில் ‘‘மக்களாட்சி’’ தத்துவக் கூறுகள் 194
**முனைவர் சை. ஜெஸிமா**

# முல்லைப்பாட்டில் காதலும் கடமையும்

***முனைவர் சூ. ஆரோக்கியமேரி***
அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்

*சங்ககால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம் போல் எடுத்துக்காட்ட வல்லன சங்க நூல்கள். சங்க கால மக்கள் குறிஞ்சி, முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற ஐவகை நிலங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவற்றில் காடும் காடு சார்ந்த மக்கள் ஆயர்கள் எனப்பட்டனர். இந்நிலத்தின் ஒழுக்கம் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும். பத்துப்பாட்டுள் இடம் பெற்றுள்ள நெஞ்சாற்றுப்படை என வழங்கப்படும் இம்முல்லைப் பாட்டினை இயற்றியவர் நப்பூதனார் என்றும் இப்புலவர் பெருந்தகை "காவிரிப்பூம்பட்டினத்து பொன் வணிகனார் மகனார் நப்பூதனார்" என வழங்கப்படுகிறார். பண்டைக்காலத்தே சோழ நாட்டுத் தலை நகராகச் சிறந்தோங்கிய காவிரிப் பூம்பட்டினத்தே இவர் பிறந்தவர் என்றும், அந்நகரத்தே அக்காலத்திற் சிறப்புற்று ஓங்கிய வணிகர் குடிகளுள் ஒன்றில் தோன்றியவர் என்றும், இவர் தந்தையார் சிறந்த பொன் வணிகம் செய்தவர் என்பது நன்கு விளங்குகிறது. பண்டைத் தமிழர்கள் இரு கண்களாக போற்றிய காதலையும் வீரத்தையும் இந்நூல் வலியுறுத்துகிறது. முல்லைப்பாட்டு அறியலாகும் காதலும் கடமையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## *வழிபாட்டு முறை*

*மனித வாழ்வை செம்மைப்படுத்துவது வழிபாடாகும் இயற்கை வழிபாடு ஆதி காலத்திலேயே தோன்றி விட்டது முல்லை நில மக்களின் கடவுள் மாயோன் ஆகும். "மாயோன் மேய காடுறை உலகம்" (தொல். அகம் 5) பாட்டின் தொடக்கத்திலே திருமாலை பற்றிய புராணச் செய்திகள் இடம்பெறுகின்றன.*

***நனந்தலை உலகம் வளைஇ நேமியொ***
***வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை***
***நீர் செல நிமிர்ந்த மாஅல் போலப்***

***(முல்லை 1-3)***

*பரந்த இடத்தை உடைய உலகத்தை வளைத்து எழுந்த மேகம் சங்கு சக்கரம் ஆகிய குறிகளையும் திருமகளை அணைத்திருப்பதாக வலிமை பொருந்திய கைகளை உடையவனும் மாவலிச் சக்கரவர்த்தி மூன்றடி மண் கொடுப்பதன் பொருட்டு நீரைக் கையில் ஊற்றிய அளவில் வான் உயரத்திற்கு வளர்ந்து நின்றவன் ஆகிய திருமாலை போற்றும் விதமாகவும் மழைக்கடவுள் என்பதாலும் மாயைகளைச் செய்யக்கூடியவன். ஆகவே மாயோன் எனவும் அழைக்கப்படுகிறான" பிரார்த்தனையும் சகுனமும் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தை தவிர்க்கும் படி வழிபடு தெய்வத்தை வணங்கி வேண்டிக் கொள்ளும் வழக்கம் சங்க காலத் தமிழர்களிடம் இருந்தது. மாயோனை வழிபட்ட முல்லை நில மக்கள் நெல்லையும் மலரையும் தூவி இறைவனை வழிபட்ட செய்தியை,*

***............நெல்லொடு***
***நாழி கொண்ட நறுவீ முல்லை***
***அரும்பவிழ் அலரி தூய்உய்க்கை தொழுது***
***பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப***

***(முல்லை (8-11)***

*முல்லைப் பாட்டில் விரிச்சி கேட்ட தன்மையும் அறியலாகிறது. மேலும் ஊர் புறத்தே உள்ள தெய்வங்களை வழிபடும் வழக்கமும் இருந்துள்ளது என்பதை "அருங்கடி மூதூர் மருங்கிற்போகி (முல்லை 7ஆது வரி)*

*மாரிக்காலம் வந்துவிட்டது தலைவனைக் காணவில்லை மனம் வெதும்பிருக்கிறாள் தலைவி. பெரியவர்களான மகளிர் சிலர் இனி நடக்க*

இருப்பதை அறியும் வேட்கை மிக்கவராய் நாழியில் கொண்டு வந்த நெல்லையும் மலர்ப்பிடாவில் கொண்டு வந்த மலர்களையும் வழிபடு தெய்வங்களுக்குத் தூவி அத்தெய்வ அருள்வாக்கை எதிர்நோக்கி இருந்தனர். அப்போது இளங்கன்று ஒன்றின் துயர் கலந்த ஒலி ஓயாமல் கேட்டது. தாயைப் பிரிந்து தனித்து விடப்பட்ட துயரம் மாலையாகியும் தாய்முகம் காணாத துயரம் அந்நேரத்தில் ஆய் மகள் ஒருத்தி வாய்விட்டு கூறிய நன்மொழி .கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர இன்னே வருகுவர் தாயர் என்போள்

**“நன்னர் நன்மொழி கேட்டன மதனால்**
**நல்ல நல்லோர் வாய்ப்புள்”**

***(முல்லை 15 - 18)***

தலைவன் பிரிந்து போவது தன் இல்லறம் இனிது நடைபெறுவதற்குத் துணைநிற்கும் பொருட்டு பெரும் பொருள் ஈட்டி வருவதற்கே என்பதை உணர்ந்து பிரிவுத் துயரை ஒருவாறு தாங்கி இருந்த தலைவி தலைவன் குறித்துச் சென்ற கார்காலம் வரவும் தலைவன் வராததைக் கண்டு வருந்தினாள். மேலும் முல்லை நில மக்களாகிய கோவலர்கள் ஆநிரை மேய்த்தல் தொழிலை உடையவர்கள் என்னும் செய்தியை இந்நூல் பதிவு செய்துள்ளது.

**தலைவனின் கடமை உணர்வு**

பாண்டிய மன்னன் ஊருக்குச் சென்றுள்ளான் கார்காலம் தொடங்குகின்றது அவன் மனைவி அவனுடைய வரவை எதிர்பார்த்து அரண்மனையில் காத்துக் கொண்டிருக்கிறாள் பாசறை அமைப்பு, யவனர் மிலெச்சர் பணிபுரியும் பெண்கள் நாளிகை கணக்கர் காவலர் ஆகியோர் மன்னனின் கடமை நிறைவேற்ற உடன் இருக்கின்றனர்.

யார்யார் என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டும் என்று மகனைப் பெற்ற தாய் ஒருத்தி கூறுகிறாள்.

**“ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே ;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே;**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;**
**ஒளி றுவாள் அருஞ்சமம் முறுக்கிக்**
**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.**

***(புறநா :312)***

புறநானூறு 312 ஆவது பாடலில் பொன்முடியார் வாளைச்சுழற்சிப் போர்க்களத்தில் பகைவேந்தன் யானையை வீழ்த்திவிட்டு வெற்றியுடன் திரும்புதல் மகனாகிய காளையின் கடமை என்கிறார். கடமையைத் தவறவிடுவது என்ப எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு ஆண் பெண் மீது காதல் கொள்வது இயற்கை

காதலுக்காக கடமையைத் தவிற விட்டு விட்டு இறுதியில் அவனும் மரணத்தை தழுவி தன் காதல் மனைவியையும் பிரிந்த செய்தி சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்தில் சச்சந்தனின் இறுதி முடிவு யாவரும் அறிந்ததே. ஆதி காலத்தில் பெண்கள் இல்லறதோடு தொடர்புடையவர்களாகவும் ஆண் என்று சொன்னால் வீரமிக்கவனாகவும் விளங்கியதை சங்க இலக்கியத்தில் தெளிவாக காணலாம்.

**பாசறையில் மன்னன்**

மன்னன் போரில் தனது படைகள் புண்பட்டுள்ள நிலையை உணர்ந்து படுக்கையில் துயில் கொள்ளாமல் திருமால் பள்ளிகொண்ட காட்சி போல மன்னன் போரின்கள் நடந்தவற்றை நினைந்து துயிலது

**“ஒரு கை பள்ளி ஒற்றி ஒரு கை முடியோடு**
**கடகம் சேர்த்து நெடிது நினைந்து”**

***(முல்லை 75 - 76)***

இருந்ததாக ஆசிரியர் கூறியுள்ளார்.

**பாசறையில் மகளிர்**

பெண்கள் பாசறைக்கு செல்லும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்துள்ளது அவர்கள் இரவு காலத்தில் பாசறையில் வைக்கப்பட்டிருக்கும் பாவை விளக்குகளை அணையாமல் பார்த்துக் கொள்பவர்களாகவே இருந்துள்ளனர் என்பதை முல்லைப்பாட்டு தெளிவுபடுத்துகிறது. “முந்நீர் வழக்கம் மகடூஉ இல்லை” என்ற நூற்பா தொல்காப்பியம் அகத்திணையியலில் உள்ளது.

பெண்கள் கடல் கடந்து செல்லும் வழக்கம் இல்லை என தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார். பொருளுக்காக ஆடவர் மகளிர் பிரிந்து சென்றதை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

### தமிழகத்தில் வெளிநாட்டார்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டில் அந்நிய தேசத்து மக்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் நமது மன்னர்களிடம் பணியாளர்களாக இருந்துள்ளனர். ஐரோப்பியர் நமது நாட்டில் வணிகர்களாகவும் மத போதகராகவும் மொழிப் பற்றாளர்களாவும் வாழ்ந்துள்ளனர். இதனால் நம் நாட்டிற்கும் கிரேக்க நாட்டிற்கும் தொடர்பு இருந்தமையை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. கிரேக்க நாட்டினரைத் தமிழர்கள் யவனர் என்று அழைத்துள்ளனர். பாசறையில் அரசனுக்கு காவலர்களாய் யவனர்கள் இருந்ததை முல்லைப்பாட்டு

**"மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**
**வலிப்புணர் யாக்கை வன்கண் யவனர்"**

*(60 -61)*

**"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்**
**படம் புகு மிலேச்சர் உழையர் ஆக"**

*(65 - 66)*

ஊமையராய் உள்ள மிலேச்சர்களை நமது நாட்டு அரசர்கள் அரண்மனையில் பள்ளியறை காவலர்களாக நியமித்து இருந்ததை முல்லைப் பாட்டு பதிவு செய்துள்ளது.

### தலைவனின் வருகை

**"கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை"**
என்பதற்கு ஏற்ப ஆற்றாமை உணர்வுடன் தலைவனின் வரவுக்காகவே காத்திருக்கும் தலைவியை நினைத்து தலைவன் போரில் வெற்றி பெற்று "பிறர் வேண்டு புலம் கவர்ந்த ஈண்டு பெருந் தானையொடு" *(முல்லை 89 - 90)* தலைவன் தலைவியை காண விரைந்து வந்து கொண்டிருக்கின்றான். கடமையோடு கூடிய காதல் தான் சிறப்பு வாய்ந்தது என்பதை முல்லைப்பாட்டில் நப்பூதனார் அழகாக பதிவு செய்துள்ளார்.

### முடிவுரை

பத்துப்பாட்டு இலக்கியங்களில் ஒன்றாக திகழ்கின்ற முல்லைப்பாட்டு இருத்தல் ஒழுக்கம் ஆகிய அகத்திணையையும் அதன் புறத்திணை ஆகிய வஞ்சித் திணையையும் இணைத்து பாடுகின்றன. முல்லை நில மக்கள் சமய நம்பிக்கை கொண்டிருந்தனர் அவர்கள் வழிபட்ட தெய்வம் மாயோன்.

தமிழகத்திற்கும் கிரேக்க நாட்டிற்கும் தொடர்பு இருந்ததை முல்லைப்பாட்டு வழி அறிய முடிகின்றது. கடமையோடு கூடிய காதல் தான் சிறப்பு வாய்ந்தது என்பதையும் இளைஞர்களுக்கு காதலோடு கடமையும் இன்றியமையாதது என்பதை இக்கட்டுரை பதிவு செய்கிறது .

### துணை நின்ற நூல்கள்

1. பத்துப்பாட்டு மூலமும் உரையும், உரையாசிரியர் பெருமழைப் புலவர், திரு.பொ.வே. சோமசுந்தரனார்.
2. திருநெல்வேலிற் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1962. திருநெல்வேலி - 6.
3. செவ்வியல் நூல்களில் தமிழ்ச்சமுதாயம் தொகுதி - 1. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன். மெய்யப்பன் பதிப்பகம். வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு பேரா.முனைவர். பாக்யமேரி.

# மதுரை, உசிலம்பட்டி – நல்லுத்தேவன் பட்டி பாட்டையா கோவில் ஓலைச்சுவடிகள்

***முனைவர் ந. இரத்தினக்குமார்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரைக் கல்லூரி, மதுரை

**Abstract**

*A Temple footprints occupy a major place in archeology. These help a lot in understanding the cultural dynamics of a region. Temple scrolls are time vaults that record the beliefs, rituals, medical practices, customs, and offerings of various ethnic groups living in a region. These are even more important because they are the ancestral shrines known as the Siddhar Maths. They highlight the cultural history of the area and are also social documents of a particular period. The Patiya temple at Nalludevan Patti's footprints speak of the social history of the people and the medicinal practices of the villagers and methods of protecting the people from evil spirits. As it is four hundred years old, folk customs are naturally occurring. Studying, compiling and publishing these prints will pave the way for local historical research. This article preliminarily records the method of discovery of the leaf traces, the participation of the people, the value of the traces and the existence of the Patiya temple. This article sets the stage for a detailed research methodology.*

***ஆய்வுச் சுருக்கம்***

*தொல்லியல் ஆய்வில் பிரதான இடத்தைப் பெற்று வருபவை கோவில் ஓலைச்சுவடிகள். ஒரு வட்டாரத்தின் பண்பாட்டு அசைவாக்கங்களைப் புரிந்து கொள்ள பெரிதும் இவை உதவுகின்றன. ஒரு வட்டாரத்தில் வாழும் பல்வேறு இனக்குழுக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மருத்துவக் குறிப்புகள், வழக்காறுகள், கொள்வினை கொடுப்பினைகள் போன்றவற்றைப் பதிவு செய்யும் காலப் பெட்டகங்களாகத் திகழ்கின்றன கோவில் ஓலைச்சுவடிகள். அமரத்துவம் பெற்ற சித்தர் மடங்களாக, பள்ளிப்படைகளாக அறியப்படும் முன்னோர் வழிபாட்டு இடங்களாக இருப்பதால் இவை இன்னும் முக்கியத்துவம் பெற்றவை. அவை, அந்த வட்டாரத்தின் பண்பாட்டு வரலாற்றை எடுத்துரைப்பதோடு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக ஆவணங்களாகவும் அமைவன. நல்லுத்தேவன் பட்டியில் உள்ள பாட்டையா கோவில் ஓலைச்சு வடிகள் மக்களின் சமூக வரலாற்றைப் பேசுவதோடு கிராம மக்களின் மருத்துவச் செயல்பாடுகளையும் தீய சக்திகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் வழிமுறைகளையும் எடுத்துரைக்கின்றன. நானூறு ஆண்டுகள் பழமை கொண்டிருப்பதால் மக்கள் வழக்காறுகள் இயல்பாக இடம்பெறுகின்றன. இச்சுவடிகளை ஆய்வு செய்வதும் தொகுப்பதும் பதிப்பிப்பதும் உள்ளூர் வரலாற்று ஆய்வுகளில் பயணிப்பதற்கு தடங்கள் சமைக்கும். ஓலைச் சுவடிகளைக் கண்டடைந்த முறையையும் மக்களின் பங்கேற்பையும் சுவடிகளின் பெறுமதியையும் பாட்டையா கோவிலின் இருத்தலையும் முன்னோட்டமாக இக்கட்டுரைப் பதிவு செய்கிறது. விரிவான ஆய்வு முறையியலுக்கு இக்கட்டுரை முன் களம் சமைக்கிறது.*

***திறவுச் சொற்கள்:*** *பள்ளிப்படை, எடுத்துரைத்தல், சமூக ஆவணம், பாட்டையா, அமரத்துவம்*

**ஓலைச் சுவடிகள் - அறிமுகம்**

மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டிக்கு அருகே பேரையூர் செல்லும் ‘‘வழியில், ஆறுமைல் தொலைவில் வலதுபுரத்தில் உள்ளது நல்லுதேவன் பட்டி. இங்கு ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். ஊரின் தென்மேற்கே இரண்டு மைல் தொலைவிற்கு அப்பால் ஊருக்கு வெளியே பாட்டையா கோயில் உள்ளது. அக்கோவிலில் ஓலைச்சுவடிகள் இருப்பதைப் பாட்டையாவின் மகள் வழி வாரிசான நண்பர்

முகுந்தன் (உசிலம்பட்டி), பாட்டையாவின் சம்மந்த வழி வாரிசான பேராசிரியர் அ.க.அழகர்சாமி (காளப்பன்பட்டி) வழியாக அறிந்து, அவர்களின் அழைப்பின் பேரில் 2017இல், கருத்துப் பட்டறை பரமன் அவர்களும் இரத்தினக்குமார் ஆகிய நானும் நல்லுத்தேவன் பட்டிக்குச் சென்றோம். உடனடியாகச் சுவடிகளைப் பார்க்க கோவில் பூசாரி எங்களை அனுமதிக்கவில்லை. தொடர்ந்து இரண்டு, மூன்று முறை அதே ஆண்டில் அங்கு சென்ற பிறகே சுவடிகளைப் பார்க்க முடிந்தது.

கோவிலிற்கு நாங்கள் வரும்போது சுத்தபத்தமாக வருவதன் அவசியம், ஓலைகளை எடுத்துச் சென்று திரும்பித் தராதவர்களின் நிலை, பங்காளிகள் பலர் சண்டையிட்டு ஓலைச் சுவடிகளையும் பங்கு போட்டு பாகவிஸ்தியாகப் பெற்றுச் சென்ற சம்பவங்கள், சிலர் காட்டோடைத் தண்ணீரில் ஓலைகளை எறிந்துவிட்டுக் குடும்பத்துடன் ஊரை விட்டு வெளியேறிய வேண்டிய சூழல் எனப் பூசாரி ஓலைச் சுவடிகளை மையமிட்டு நடந்த நிகழ்வுகளைக் குறிப்பிட்டுக் காட்டி, பாட்டையா எழுதிய சுவடிகள் சக்திவாய்ந்தவை என்பதை யதார்த்தமாகச் சொன்னார். நாங்கள் பாட்டையாவை வணங்கி, பூசாரியிடம் திருநீறு பெற்றுக்கொண்டோம். நாங்கள் தூய்மையாக வந்திருப்பதை அறிந்து கொண்ட பிறகு சுவடிகளைப் பார்க்க அனுமதித்தனர். கோவிலின் கருவறைக்குப் பின் மஞ்சள் தடவி வைத்திருந்த பழைய டிரங்க் பெட்டியைப் பூசாரி தூக்கி வந்தார். அதில் சிறிதும் பெரிதுமாகக் கட்டுக்கட்டாக ஓலைச்சு வடிகள் மஞ்சள் பூசப்பட்ட வெள்ளைத் துணியால் சுற்றி வைக்கப்பட்டும், திருநீறு போட்டும் பாது காப்பாக வைத்திருந்ததைப் பார்த்தோம். ஒத்த அளவுடையவை சுவடிகள் ஒவ்வொன்றும் ஒரு கட்டு என ஐந்து கட்டுகள் காணப்பட்டன. முப்பபதுக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் இருந்தன, முதலில் பாட்டையாவின் வாரிசு களான முகுந்தன், அழகர்சாமி மட்டுமே கையில் எடுக்கவும், புரட்டவுமாகவும் இருந்தனர். ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளாமல் கையில் எடுக்க யோசித்துக்கொண்டும் தயக்கத்துடனும் பார்த்து கொண்டிருந்தோம். சிறிது நேரம் கழித்து பூசாரி சொல்லவும் நண்பர்கள் எங்களிடம் தந்தார்கள். முதன் முதலாக ஓலைச் சுவடிகளை எடுத்துப் பார்க்கும் அனுபவமே தனிதான். கைகளில் வாங்கிப் புரட்டிய போது புதுவித உணர்வுகள் தோன்றி மறைந்தன. சிலவற்றை எழுத்தெண்ணி வாசிக்கவும், கூட்டாக சேர்ந்து வாசிக்கவும் சுவடிகளின் காலத்தைத் தேடிக் கண்டறிய முயன்றும் பொழுதுகள் கடந்தன. இவற்றை என்ன செய்வது? இவற்றை எப்படிப் பாதுகாப்பது? எத்தனை தலைமுறைகள் இவற்றைப் பாதுகாத்து வந்திருப்பார்கள்? எனப் பல்வேறு வினாக்களுடன் முடிவில் இவற்றை வல்லுநர்கள் கொண்டு ஆவணப்படுத்துவது, சுவடித்துறையில் பாண்டியத்தியம் பெற்றவர்களைக் கொண்டு வாசித்துத் தொகுப்பது என முடிவு செய்து, பூசாரியிடம் பேச்சுக் கொடுத்தோம். அவர் தயங்கியபடி எனக்கும் வயசாகிக்கிட்டே போகுது.. சுவடிகளும் நொறுங்க ஆரம்பித்து விட்டன.... ஏதாவது செய்யனும், கலந்துகிட்டுச் சொல்றேன் என்றார். இன்னொரு முறை சென்ற போது பூசாரி பல்வேறு கேள்விகளைக் கேட்க, சுவடிப் பதிப்பு முறைகளை எடுத்துரைத்தோம். முக்கியமாகச் சுவடிகள் கோவிலை விட்டு எந்த சூழலிலும் வெளியே போகக்கூடாது. எது செய்தாலும் கோவிலிலே செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடுடன் அனுமதி தந்தார். நாங்கள் பணிகளைத் தொடங்கினோம். கோவிலின் பின்புலங்களை அறியத் தொடங்கினோம்.

### பாட்டையா கோவிலின் அமைப்பும் தொன்மக் கதையாடலும்

பாட்டையாவின் வம்சா வழியினர் பாட்டையா கோயில் என்றும் பிறர் சித்தர்மடம் என்றும் அழைக்கின்றனர். கோவிலின் வளாகம் முழுக்கப் புளியும் வேம்பும் அடர்ந்தும் பனை ஒன்றிரண்டுமாகவும் நிற்கின்றன. கோவிலைச் சுற்றியுள்ள புஞ்சைக் காடுகளில் நான்கடுக்கு விவசாய முறை(அவரை, துவரை, கல்லுப்பயர், கடலை) காணப்படுகிறது. சுற்றிலும் இரண்டு, மூன்று கிராமங்கள் மட்டுமே உண்டு. பெரும்பாலும் கூலிவேலைகள் செய்து வாழ்பவர்கள் அதிகம். நன்செய் விவசாயம்

இல்லை. அவ்வட்டாரம் முழுவதும் வனாந்தரமாகவே காணப்படுகிறது. அதனால் வழிப்போக்கர்கள் காட்டுக்கோவில் என்றும் இக்கோயிலை அழைக்கின்றனர். ஊர்களைச் சூழ்ந்து காணப்படும் நெடிய மலையை இரத்தினகிரி மலை என்கின்றனர். இரத்தினகிரியின் அடிவாரத்தில் மலைக்குச் செல்லும் காட்டுப் பாதையின் இடப்புறத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. வலப்புறம் மலையிலிருந்து வரும் காட்டோடை உள்ளது. இதன் நீரைச் சேமிப்பதற்கு ஊரின் நுழைவாயிலில் பெரிய கண்மாய் அமைக்கப்பட்டுள்ளது. கண்மாயிலிருந்து முறையான வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. வாய்க்கால்கள் காளப்பன்பட்டிவரை பல கிராமங்களை இணைத்துள்ளது. கண்மாயின் இரண்டு புறமும் நீர் வெளியேறும்படியாக கலுங்குகள் தனித்துவமாக அமைக்கப்பட்டுள்ளன.

சாமதிகளால் அமைந்த சிறிய கல்கூடமாக நெடுங்காலம், இருந்த இந்த இடத்தை நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, எடுத்துக் கட்டியதாகக் குறிப்பிட்டார் பூசாரி. தான் சிறுவனாக இருக்கும்போது அடர்ந்த புளியந்தோப்பாக இருந்த இடம். புதிய கோவிலுக்குப் பூஜை செய்ய வந்த ஒருவர் கோவிலில் பனை வைப்பது கெட்டதுனு சொல்ல,சிலபங்காளிகள்அதைநம்பி பனைகளை வெட்ட வேண்டியதாயிற்று. பின்புதான் தெரிந்தது தலைமுறை தலைமுறையாக ஓலைகளில் எழுது வதற்காகப் பனந்தோப்பை, எங்க சிய்யான் பாட்டன் உருவாக்கியருக்காங்க அதை அழிச்சிட்டோம்னு. அதனாலதான் ‘‘ஒங்க பூசாரித்தனமும் வேண்டாம். ஒங்க பொங் கச்சோறும் வேண்டாம்னு’’ முன்னோர் சொல்லும் வழக்காறு புரிந்தது. அன்றிலிருந்து வெளிப்பூ சாரிகள் வைத்துக் கொள்வதில்லை என்றார். ஒன்றிரண்டு குறும்பனைகள் மட்டுமே இன்று காணப்படுகின்றன. கருவைறைக்குள் சடைமுடி, தாடிவைத்த சித்தர் போன்ற சிற்பம் காணப்படுகிறது. அதற்கு அருகில் இன்னும் சில சித்தர் உருவங்களாலான சிலைகள் உண்டு, அதில் ஒன்று தோழாண்டி என்ற சாமியாரின் சிலை, பாட்டையாவோடு இருந்தவர், மூப்பர் சமூகத்தைச் சார்ந்தவர் என்கின்றனர். இரத்தினகிரி மலையில் வாழ்ந்த பளியர்கள் கீழே வந்தால் தங்கிச் செல்லும் மடமாக நீண்டகாலம் இந்த பாட்டையா கோவில் இருந்து வந்திருக்கிறது. மலைத்தேன், பாறையில் எடுத்த பாசம். மூலிகைத் தாவரங்களால் ஆன மருந்துகள். சாரக்கடாய்ப் பாம்பின் எண்ணெய் போன்றவற்றை உசிலம்பட்டியில் விற்றுவிட்டு இரவு இந்தக் கோயிலில் பளியர்கள் தங்கி, அதிகாலை மலைக்குச் செல்வர் என்ற பூசாரி, அவங்க கொடுத்த தைலங்களால் சுவடிகள் துடைத்தால் சுத்தமா இருக்கும். தற்போது பளியர்கள் மலையில் இல்லை ஆதனாலே சுவடிகள் பூராம் நொறுங்க ஆரம்பிச்சிறுச்சு, அவ்வப்போது மலையில இருக்கிறவங்க சிலர் வருவாங்க தங்கி விட்டுப் போவாங்க என்றவர் பின்பு பாட்டையாவின் கதையைச் சொன்னார்.

இந்த ஊரில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளப்புன்னைத் தேவர் என்பவர் இந்த வட்டாரத்துக்கு தலைவராக இருந்து நீதி பரிபாலனம் செய்து வந்தார். ஆஸ்தி, அந்தஸ்து என்று வாழ்ந்தவர் திடீரென்று குடும்பத்தை விட்டு அகன்று துறவறம் பூண்டு இரத்தினகிரி மலைக்குப் போனார். பல மாதங்கள் கழித்து சித்தராகி இந்த இடத்திற்கு வந்து குடிகொண்டு பல்வேறு சமூக, மக்கள் பணிகளைச் செய்து வத்துள்ளார். சித்த வைத்திய முறைகளில் நோய் நீக்குதல், விஷக்கடிகளை முறித்தல், நாடி பார்த்து நோய் தீர்த்தல், சோதிடம் பாரத்தல், சுவடிகள் எழுதுதல், எண், எழுத்து பயிற்றுவித்தல், எனத் திண்ணைப்பள்ளியை ஒத்த பணிகளை நடத்தி வந்துள்ளார். பல்வேறு கிராமங்களை இணைத்து கண்மாயை அமைத்துப் பாசணமுறைகளை வகுத்திருக்கிறார். பொதுக்கிணறு உருவாக்குதல், காட்டோடையை செம்மைப்படுத்தல், சுவடி எழுதப் பலரைப் பயிற்றுவித்தல் எனப் பல (சுவடிகளில் பல்வேறு படி எடுத்த முறைகள் அவற்றைப் பாரக்கும்போது தெரியவருகிறது). முன்னெடுப்புகளை இந்த மடம் செய்திருக்கிறது. வெள்ளைப்புன்னைத்தேவர் மடச்சித்தர் போன்று வாழ்ந்து இங்கே ஜீவ சமாதியானதாகப்

பூசாரி குறிப்பிடுகின்றார். நல்லுத்தேவன் பட்டி வட்டாரத்தில் கள்ளர்மடம், கோவலன் கணவாய்மடம், போத்தம்பட்டி சித்தர்மடம். தர்மத்துப்பட்டி, கிண்ணிமங்கலம், அல்லிகுண்டம் (குருகுலக் கல்வி) ஆகிய இடங்களில் தர்ம காரியங்களும் படிப்பித்தல் பயிற்சிகளும் நடந்திருக்கின்றன.

வெள்ளைப்புன்னைச் சித்தரின் வம்சாவழிகள் அவரது சாமாதியைக் கோவிலாக்கி தொடர்ந்து வழிபட அது ‘பாட்டையா கோவில்’ என்று இன்று வரை அழைக்கப்பட்டு வருகிறது. முன்னாள் பேராசிரியர் அன்பழகன் ‘‘எட்டுநாட்டுக் கள்ளர் தலைவர் - வெள்ளைப்புன்னைத்தேவர் (1994) என்ற ஆய்வு நூலில் இவ்வரலாற்றை எடுத்துரைக்கிறார். அது இங்கு கிடைத்த ‘கதிர் காம மாலைச் சுவடித் தகவல்களிலிருந்தே எழுதப்பட்டுள்ளது. அந்நூல் பத்து தலைமுறைகளைக் குறிப்பிடுகிறது. பத்தாவது தலைமுறையான திருமலைப் புன்னைத்தேவன் வம்சாவழியில் வந்த கொள்ளுப் பேரனான பெரியவர் தான் தற்போது பூசாரியாக இருக்கிறார். அவர் இன்றும் கோவிலில் நாள் பார்த்துத் தருவது, உடலில் ஏற்பட்ட சிறிய காயங்களுக்கு மருந்து கட்டுவது, மூலிகைச் சாறுகள் தருவது, மந்திரித்துத் தயாத்துக் கட்டுவது, ஜாதக சுவடிகளைப் படித்துக் குறி சொல்வது, மலைத்தைலங்கள் தருவது எனக் கோவிலின் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார். ஊர் முழுவதும் அடர்த்தியாக வாழும் அங்காளி, பங்காளிக் குடும்பங்கள் எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன்பு நல்ல நாள் பார்த்துத் தருகிறார் பூசாரி, இவற்றிற்கெல்லாம் நான்கைந்து சுவடிகளை எடுத்து வாசித்த பிறகே சகுணங்களைக் கணித்துக் கூறுகிறார். ஊருக்கு வரும்போது பெண்மக்கள் பாட்டையாவை வழிபட்டுச் செல்வது உண்டு. மகள் வழி வந்த மருமகன்களும் கோவிலிற்கு வந்து நல்லது கேட்டது. கேட்டுச் செயல்படுகின்றனர். பெண்கள் மட்டும் காட்டுப்பாதையில் பணிவாகக் கோவிலிற்கு வந்து காத்திருந்து ஓலையைப் படிக்கச் சொல்லி சகுணம் கேட்டுச் செல்கின்றனர். புது மணத் தம்பதிகள் முதலில் பாட்டையா கோவிலை வணங்கியே குடும்ப வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். காட்டுக்குச் செல்லும் போதும் வரும்போதும் பிற சமூகங்களும் வழிபட்டுச் செல்கின்றனர். ஓலைச் சுவடிகளால் கோவிலின் பெரும் பணிகளைச் செயல்படுத்துவது ஓலைச்சுவடிகள்தான்.

**ஓலைச்சுவடிகள் - ஆவணமாக்குதல்**

ஓலைச் சுவடிகளை ஆவணமாக்கத் திட்டமிட்டோம். பாண்டிச்சேரியில் உள்ள பிரெஞ்சு இன்ஸ்டியுட்டில் ஓலைச்சுவடிகள் துறையில் ஆய்வுத்திட்ட உதவியாளராக இருக்கும் மதுரையைச் சார்ந்த பூபதிராஜ் அவர்களின் உதவியை நாடினோம். அவரும் மகிழ்ச்சியுடன் சம்மதிக்க அவரை அழைத்துக் கொண்டு டிசம்பர் 2018இல் மீண்டும் பாட்டையா கோயிலிற்குச் சென்றோம். முதல் இரண்டு நாட்கள், பிரெஞ்சு இன்ஸ்டியுட் வழங்கிய தரப்படுத்தப்பட்ட எலுமிச்சை அமிலங்களால் சுவடிகள் முழுக்க சுத்தம் செய்யப்பட்டது. பின்பு பூபதி உயர்தரத் திலான நவீன நிழற்படக் கருவியால் ஒளிப்படம் எடுக்கத் தொடங்கினார். விளக்குத்திரியில் கருக்கித் தயாரிக்கப்பட்ட மையுடன் பிற தைலங்களைக் கலந்து சுவடிகளைச் சுத்தம் செய்வது போன்ற உதவிகளை அழகர், நான், முகுந்தன் செய்து தந்தோம். கிராமத்திலிருந்து பாட்டையாவின் வாரிசுகளின் குடும்பங்களில் உள்ள ஆண்கள், பெண்கள் யாராவது ஒருவர் தினம் வருவதும் எங்களைக் கண்காணிப்பதும் விசாரிப்பதுமாக இருந்தனர். அவ்வளவு எளிதில் நல்லுத்தேவன் பட்டி மக்கள் எங்களை நம்பவில்லை என்பது புரிந்தது. வெவ்வேறு ஊர்களிலிருந்து கோவிலுக்கு உரிமைப்பட்ட ஆட்கள் வரத்தொடங்கினர். ஊரில் உள்ள பலரின் கவனமும் பாட்டையா கோவிலும் ஓலைச்சுவடிகளுமாக இருப்பதை அறிந்தோம். தண்டட்டி அணிந்த கிழவி ஒருவர் கம்பை ஊன்றி மெதுவாக வந்து தனது தந்தை, சிய்யான், பாட்டன் யார்? என்ன என்பதை சொல்லி விட்டு சென்றார். அதை எங்களிடம் சொல்ல வேண்டியது, அவர் கடமை என்றே கருதி, சொல்லிச் சென்றார். ஒருவர் நீங்கள் அரசாங்கத்துல

இருந்து வந்திருக்கீங்களா? என்று கேட்டுவிட்டுச் சென்றார். பூசாரி எங்கள் மீதான நம்பிக்கையைச் சிலரிடம் சத்தமாகவும் சிலரிடம் சன்னமாகவும் வெவ்வேறு தொனிகளில் சொல்லிக் கொண்டே இருந்தார்.

ஓலைச்சுவடிகள் என்பது பாட்டையாவின் கூட்டம் முழுதுக்கும் சொந்தம் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். சுவடிகள் ஊரின் பொதுச்சொத்து மட்டுமல்ல குலசாமியின் சொத்தும்கூட, மூத்த குலப்பாடகளின் வாக்குகள் நிரம்பியவை அவை. ஊரின் நில விவரங்கள், கண்மாய், ஓடை, மலை, பங்கு, பாகவிஸ்தி, குத்தகை விவரங்கள் குறித்த செய்திகளும் அதில் உண்டு என்பதை அவர்கள் தெரிந்தே வைத்திருந்தனர். ஓலைச்சுவடிகளை அத்தனைப் பங்காளிகளும் உரிமையாகப் பாவித்து வாழ்ந்து வருகின்றனர். கால்வழிக் குலங்கள் சுவடிகளை முதன்மைப்படுத்தி தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருவதும் தங்களின் பண்பாட்டு நடவடிக்கைகளில் பின்பற்றி வருகின்றனர். கோவிலின் வெளி வராண்டாவில் தைலம் பூசிப் பரப்பி வைக்கப்பட்ட சுவடிகளை, இரவு நேரங்களில் பங்காளிகள் மாற்றி மாற்றித் தங்கி கண்காணித்து வந்ததை, அவர்களின் பேச்சின் வழியாக அறிந்தோம். அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் துண்டுடன் காட்டில் வேலை செய்து கொண்டிருப்பார். திடீரென்று கோவில் வளாகத்தில் உள்ள ஏதாவது ஒரு மரத்தின் அருகில் நின்று கொண்டு, எங்களை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருப்பார், பிறிதொரு சமயம் எங்கள் அருகில் அமர்ந்து சுவடிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார். பிறகு தூரத்தில் நடுக்காட்டில் வேலை செய்து கொண்டிருப்பார். ஒருநாள் மாலை வேலை முடித்து ஓணிப் பாதையில் வந்துகொண்டிருந்தபோது இருளில் நின்று கொண்டிருந்தார். அவர் எப்போது எங்களைப் பார்க்க வருகிறார், எப்போது போவார். எங்கு நிற்கிறாரென்று எதுவும் தெரியாது, தூத்தில் இருந்தாலும் கூர்ந்து எங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார். எழுநாளில் எதுவும் அவர் எங்களுடன் பேசியதில்லை. ''பாட்டையாதான் வந்துபோறாப்ல'' என்றுஅழகர்கிண்டலடிப்பார். பூபதிதொடர்ச்சியாகஒருவாரகாலம்ஒளிப்படம் எடுக்க, அழகர், பரமன், முகுந்தன், நான் உள்பட அவருக்கு உதவிகள் செய்ய பூபதி அப்பணியைத் திறம்பட முடித்தார். ஒரு வாரமும் கோவிலிற்குச் சென்றவுடன் பாட்டையாவை வணங்கி, நாங்களே திருநீறு பூசி வேலையைத் தொடங்குவதென்பது எங்களிடம் யதேச்சையாகவே'' மாறியிருந்ததைப் பின்னால் அறிந்தோம். நாற்பதற்கும் மேற்பட்டச் சுவடிகள், நான்கைந்து முத்திரைத்தாள்கள், இருந்தன. அவற்றைப் பத்திரமாக மீண்டும் ஒப்படைத்தோம். பூசாரி அவற்றை சரிபார்த்து சூடம் காட்டி மீண்டும் பழைய நிலைக்குக்'' கொண்டு சென்றார். எங்களுக்கும் ஓலைச்சு வடிகளில் படித்த வாசகங்களைச் சொல்லிதிருநீறு பூசி ஆசி வழங்கி நன்றி கூறி விடையனுப்பினார். ஏழாம் நாள் வேலை முடித்து இரவு நாங்கள் வீடு திரும்பினோம், மனம் நிறைந்து காணப்பட்டது. நிழற்படங்களைப் பாண்டிச்சேரிக்குக் கொண்டு சென்று கணினிமயப்படுத்தி சில மாதங்கள் சென்ற பிறகு மீண்டும் கோவில் பூசாரியிடம் டிவிடி வடிவில் கொடுத்தோம். கருவறையில் உள்ள பாட்டையாவின் முன்பு வைத்துப் பூசனை செய்து அதில் திருநீற்றைத் தடவி டிரங்குபெட்டிக்குள் பாதுகாப்பாக வைத்தார். பாட்டையா எழுதிய பனைஇலைகள் நவீன மின் தகடுகளை இணைத்துக் கொண்டன. கணினியில் பதிவேற்றிப் பாதுகாத்துக் கொள்ள இரண்டு டிவிடிக்கள் தயார் செய்து ஒன்றை முகுந்தனிடமும், மற்றொன்றை அழகர் அவர்களிடமும் கொடுத்தோம்.

**ஓலைச்சுவடிகள் வாசித்தலும் பகுத்தலும்**

பின்பு பூபதி, பேரா. சிவக்கொழுந்து, பாவெல்பாரதி (வைகைத் தொல்லியல் கழகம்) அழகர் உட்பட ஓலைச்சுவடிகளை வாசித்து அவற்றைப் பகுத்துக் கொண்டோம். நாற்பதற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள்வெவ்வேறுவிதமான தன்மைகளில் இருந்தன. அவற்றை இவ்வாறு தொகுத்துக் கொள்ள முடியும்.

***1. எண்சுவடிகள்***
***2. அரிச்சுவடிகள்***
***3. ஜாதகச் சுவடிகள்***
***4.மருத்துவச் சுவடிகள்***
***5. மந்திரச் சுவடிகள்***
***6. ஓலைச் சுருள்கள்***
***7. பழைய முத்திரைத் தாள்கள்***
***8. சமூகச் சுவடிகள்***
***9. கதிர்காப்பு மாலை எழுதப்பட்ட சுவடிகள் - 2***

எனப் பலப் பொருள்களைக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் சுவடிகள் கிடைத்துள்ளன.

**ஓலைச்சுவடி காட்டும் குறிப்புகள்**

ஓலைச் சுவடிகளில் சில கட்டுகள் கலைந்து உதிரியாய்க் கிடந்தன. சில சுவடிகள் நடுவிரல் அளவே நீளம் இருந்தன. சில சுவடிகளின் அளவு ஓரடி வரை இருந்தன. சில சுவடிகள் அரையடி அளவே நல்ல பனைமர ஓலைகளால் நான்கு பக்கமும் கத்தரிக்கப்பட்டு ஒருபுறம் இரட்டைத் துளையிடப்பட்டு கோர்க்கப்பட்டிருந்தன. நல்ல வேலைப்பாடுடன் அமைந்த அவை பிற்காலத்தைச் சேர்ந்தவை. சில ஓலைச்சுவடிகளில் இருபுறமும் எழுதப்பட்டிருக்கின்றன. சில பழைய ஓலைச் சுவடிகள் ஒரு புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. சாதகச் சுவடிகளில் கட்டங்களும், மருத்துவச் சுவடிகளில் பாம்பு படமும் வரையப்பட்டுள்ளது. பழைய ஓலைச்சுவடி ஒன்றில் பொ.ஆ.*1558* எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னொரு ஓலைச் சுவடியில் ***1786*** எனத் தமிழ் எண்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓலைச் சுருள்கள் ஈக்கு குச்சியற்ற ஓலைகளால் சுருட்டி வைக்கப்பட்டுள்ளன. மடையில் வேலை பார்த்த நீர்பாய்ச்சிக்கு கூலி வழங்கிய செய்தியிலிருந்து கருமதிக்கு மொய் வழங்கப்பட்ட விவரங்கள் வரை காணப்படுகின்றன. இன்று இந்த வட்டாரத்தில் மொய் எண்பது பெருவழக்காக இருக்கிறது. கண்மாய் காவல், மடைக்காரருக்கு கூலிப்பணம் தந்தது. காட்டோடையைச் செம்மைப்படுத்தியது எனச் சமூக அசை வாக்கங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆறு எண்சுவடிகள் உள்ளன. நெல்லிலக்க எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நெல்லை அளக்கும் முறைகள் காணப்படுகின்றன. தேவன் என்பவர் நெல்லை அளக்கும் எண்ணியல் முறைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. முத்திரைத் தாள்களில் பாட்டையா கோவிலிற்குச் சிலர் கொடையாகக் கொடுத்த நிலம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கதிர் காம மாலைச் சுவடித்தொகுப்பில் முப்பதுக்கும் மேற்பட்ட ஓலைகள் உள்ளன. இவை இரண்டு மூன்று முறை படியெடுக்கப்பட்டுள்ளன வெவ்வேறு காலங்களில் திருப்ப திரும்ப எழுதப்பட்டிருக்கிறது. ஒரு சுவடித் தொகுப்பு புத்தம் புதிதாக இருந்தது. வெள்ளைப் பின்னத் தேவரின் வரலாறு அதில் சொல்லப்பட்டுள்ளது. பிரமலைக் கள்ளர்களிடம் காணப்படும் கரை, கால் வழிமரபு எனும் கிளைப் பிரிவுகள் குறித்த செய்திகள் உள்ளன. இனக்குழுக்களின் பிரிவுகளாக இவை இருக்க வணிகத்தோடு தொடர்புடையதாகச் சில சுவடிகள் காட்டுகின்றன. உசிலம்பட்டி வட்டாரத்தில் அடர்த்தியாக வாழும் இனக்குழுக்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றை அறிய இச்சுவடிகள் உதவும். ஒரு வகையான இனக்குழு சார்ந்த பண்பாட்டு நடவடிக்கைகளைப் *(*manuscript of Ethnics*)* பிரதிபலிக்கும்படியாகச் சில சுவடிகள் இருக்கின்றன.

இவற்றை விரிவாக அறிந்து கொள்வதற்கு பாட்டையா கோவிலின் வரலாறும் உசிலம்ப்பட்டி வட்டாரத் தொல்லியல் செய்திகளையும் இனி விவாதிக்கலாம்.

நல்லுத்தேவன் பட்டியும் உசிலம்பட்டி வட்டாரத் தொல்லியல் வெளிகளும்

இந்த வட்டாரத்தில் பல்வேறு மானிடவியல், தொல்லியல் ஆய்வுகள் நடைபெற்றுப் புதிய கண்டுபிடிப்புகள் வெளிவந்துள்ளன. மானிடவியலைப் பொருத்தவரை Louis Dumont, A South Indian Sub & Caste: Social Organisation and Religion of the Piramalai Kallar, 1948. B#Ä® c.n. நடராசனின் மேக்கிழார்பட்டியை மையப்படுத்திய கூட e piraimalaikallar of Tami Nadu a study of their marriage kinship clan system (1978) என்ற தலைப்பில் செய்த ஆய்வும் மேரி திபுவா வாலாந்தூர் பெண்கள் குறித்து செய்த கூட e Piramaai

Kallars of vallantur nadu Madurai district & village women in local politics and the non Traditional work force என்ற ஆய்வும் இந்த வட்டாரத்தில் நிகழ்ந்த முக்கிய மானிடவியல் ஆய்வுகளாகும். தொல்லியல் அறிஞர்கள் கே.வி.ராமன், சொ.சாந்தலிங்கம், வேதாச்சலம், வீ.செல்வக்குமார், பா.ஜெயக்குமார், காந்திராஜன், பாவெல் பாரதி ஆகியோர் இப்பகுதி குறித்த பல முக்கியத் தொல்லியல் ஆய்வுகளைச் செய்துள்ளனர். தொல்லியல் அறிஞர் கே.வி. ராமன் திடியனில் நுண்கற்காலக் கருவிகள் இருந்ததை வெளிப்படுத்தியுள்ளார் *(பாண்டியர் வரலாறு, 1977).* வீ.செல்வக்குமாரின் உசிலம்பட்டி பகுதியில் தொல்லியல் கண்டுபிடிப்புகள் *(ஆவணம்- 11,1999)* வேதாச்சலம் அவர்கள் செய்த மதுரை மாவட்ட நடுகற்கள், செப்பேடுகள் குறித்த ஆய்வுகள், சாந்தலிங்கம் செய்த மதுரைத் தொல்லியல் ஆய்வுகள்.கு.சேதுராமன் செய்த அம்மையநாயக்கனூர் கணக்காயர் செப்பேடுகள் *(ஆவணம் 6,1995),* என விரிந்து காணப்படுகின்றன. தென்கல்லக நாடாக நெடுங்காலம் அறியப்பட்ட இவ்வட்டாரம் பின்பு எட்டு நாடு 24 உபகிராமங்களாக மாறியிருக்கிறது. தென்கல்லக நாட்டில் வாழ்ந்தவர்கள் கல்லர்கள் என்று தொடக்கத்தில் அழைக்கப்பட்டனர் பின் அது மருவி கள்ளர் என வந்தது எனத் தனது ஆய்வை முன்வைத்துள்ளார் ஜெயக்குமார். அருண் பேய்க்காமன் தனது தென்கல்லக நாட்டின் நடுகற்கள் நூலில் நூற்றுக்கு மேற்பட்ட நடுகற்களைத் தொகுத்துள்ளார். மாலிக்காப்பூர் படையெடுப்பை எதிர்த்து மரணித்த கீழக்குயில்குடியைச் சேர்ந்த வீரத்தேவர், கழுவத்தேவர் தொடங்கி பண்டு கலவரத்தில் பலியானவர்கள் வரை பதிவு செய்துள்ளார். ஆக இசுலாமிய படையெடுப்பில் தொடங்கி, நாயக்கர், ஆங்கிலேயர்(ரேகைச் சட்ட எதிர்ப்பு) வரை எண்ணூறு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த படைவெட்டுக்கள், அரசமறுப்பும் வரிகொடா இயக்கமும் நடத்தி வந்ததனால் ஏற்பட்ட வாழ்வியல் நெருக்கடிகள், காவல் நடைமுறைகள், இடம்பெயர்ந்து கொண்டே இருக்கும் வாழ்க்கைச் சூழல் என பலதரப்பட்ட காரணிகளின் விளைவு இவ்வளவு நடுகற்கள் இந்தப் பகுதிதியில் காணப்படுவதை மறைமுகமாகச் சுட்டுகிறது தென்கல்லக நாட்டில் நடுகற்கள் நூல். இந்தப் பின்புலத்தில் பாட்டையா கோவில் கல்விப் பணிகள் தனித்துவமாக பார்க்க வேண்டிய ஒன்ற. ஐந்து படைவெட்டுக்களை சந்தித்த இந்த இனக்குழுக்களை கல்வி, விவசாயம், தொழில் என அமைப்பு சார்ந்து கொண்டு வருவதற்க வெள்ளைப் புண்ணைத்தேவரும் அவரது மடமும் முக்கிய காரணகளாக அமைவது யதேச்சையானது அல்ல.

இரத்தினகிரி மலையில் மீனாட்சி கோவில் எனும் கல்கோவில் உண்டு. கண்ணகி நடத்த சென்ற பாதை இது எனவும் மக்கள் கர்ண பரம்பரையாகச் சொல்லி வருகிறார்கள். மிகச் சிறிய கண்ணகி கோயில் ஒன்றும் நல்லுதேவன் பட்டியிலே உள்ளது. இரத்தினகிரியில் இருந்த மீனாட்சி ஆனையூருக்கு மாற்றப்பட்டப் பின்பு மதுரைக்குச் சென்றதாகவும் சிலர் சொல்கிறார்கள். ஆணையூரில் சோழர் நிலைப்படை (Standing Army) இருந்ததை பா.ஜெயக்குமார் தனது பாண்டிய நாட்டில் ஆனையூர் *(2008)* எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இராஜராஜ சோழனின் புனைப்பெயர்களில் ஜனநாதன் என்பது மிகவும் பிரசித்தி பெற்றதாகும். சோழவந்தானில் உள்ள ஜெனகை மாரியம்மன் கோவில் இன்றும் காணப்படுகிறது'' *(பாண்டுரங்கன், விடுதலை வேள்வியில் தமிழகம், 2017, ப.5)* சோழர் படையில் போர் வீரர்களாக வந்த பிரமலைக் கள்ளர்கள் ஆனையூரில் நிலைப்படையில் பங்கேற்றுத் தொடர்ந்து பரவியதால் தொடக்கத்தில் ஆணையூர்க் கள்ளர்கள் என்று அழைக்கப்பட்டனர். உசிலம்பட்டி வட்டாரத்தில் ஜனநாதன், என்பதைப் பலர் இன்றும் பெயராக வைத்திருப்பதைப் பார்க்க முடிகிறது. கீழக்குயில் குடியில் ஜனநாதன் என்பவரின் வம்சாவழி பாட்டனார் இஸ்லாமியப் படையெடுப்பில் பங்கெடுத்ததையும் கீழக்குயில்குடி கருப்பு கோயிலில் உள்ள நடுகல் அதை நினைவுபடுத்துவதையும் இணைத்து வாசிக்க முடியும். மேலும் தனது தென்கல்லக நாடு *(2016)* எனும் நூலில் வாலாற்றுக் காலம் தொட்டே

இந்தப் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்ததைக் குறிப்பிட்டுள்ளார் ஜெயக்குமார். பத்துக்கும் மேற்பட்ட பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. அண்மையில் காந்திராசன் புத்தூர் மலையில் உள்ள நரிப்படை புடவில் 50க்கும் மேற்பட்ட மூவாயிரம் ஆண்டு பழமையான பாறை ஓவியங்களை கண்டறிந்துள்ளார். மேட்டுப்பட்டி, ஆனையூர், திடியன், கிண்ணிமங்கலம், கல்யாணிபட்டி பாறை ஓவியங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பல்வேறு சமணக் குடவரைகள், பிராமிக் கல்வெட்டுக்கள் எனப் பல தொல்லெச்சங்கள் வழியாக நாம் நல்லுத்தேவன் பட்டி ஓலைச்சு வடிகளுக்கு வந்து சேர முடியும். செல்வக்குமார் ஆய்வுசெய்த பேரையூர் பகுதிகள், நடராசன் ஆய்வு செய்த மேக்கிழார்பட்டி ஆகிய வெளிகளுக்கும் நல்லுத்தேவன் பட்டிக்குமான தூரம் முப்பது கி.மீட்டருக்குள்தான் இருக்கும். மேலும் தொட்டப்பநாயக்கனூர், உத்தப்பநாயக்கனூர் ஜமீன்களுக்கும் நல்லுதேவன் பட்டிக்கும் மிக நெருங்கியத் தொடர்பு உண்டு. அங்கும் செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் உள்ளன. ஆக இவை வலைப்பின்னல் போன்ற தொல்லியல் வெளிகளாக இருந்திருக்க வேண்டும். இந்த வெளிகளில் ஒன்றாக வைத்துத்தான் நாம் நல்லுத்தேவன் பட்டி ஓலைச்சுவடிகளை வாசிக்க வேண்டும். குறிப்பாக இனக்குழுக்கள் மூவாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் பகுதியில் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிறகு பள்ளிப்படை மரபில் வரும் பாட்டையாக கோவில் என்பது மக்கள் கூடமாக எப்படி அறிவசார் பணிகளைச் செய்கிறது என்று நோக்க முடியும்.

**அனுபந்தம்**

தொல்லியல் பொருள்கள் தொடர்ந்து கிடைக்கும் பகுதியாக மதுரையின் மேற்கு வட்டாரம் காணப்படுகிறது. மேலே குறிப்பிட்ட தொல்லியல் ஆய்வு வெளிகளை விஸ்தரிப்பதற்கு நல்லுதேவன் பட்டி ஓலைச்சுவடிகள் உதவும். வேளாண்மை, வணிகம், சமயம், நிலமானிய முறைகள், கூலிமுறைகள். கொடுக்கல் வாங்கல் வரவு செலவுகள், இனக்குழு மருத்துவமுறைகள் பிற்கால நாயக்கர் காலத்தைப் பின்புலமாகக் கொண்டு நடந்த அளவை முறைகள், பாசன முறைகளை அறிந்துகொள்ள இந்த ஓலைச் சுவடிகள் உதவும். இன மரபு வட்டாரங்களில் அறுபடாக் கொடிபோல் பற்றிப் படர்ந்து வாழும் கால் வழிக் குலங்களில், தலைமுறை மரபு ஏற்படுத்தும் தாக்கங்களை ஓலைச்சு வடிகளைப் பின்பற்றி அறிந்து கொள்ள ஏற்ற களம் நல்லுதேவன் பட்டி பாட்டையா கோவில் ஓலைச்சுவடிகள்.

**துணை நின்ற நூல்கள்**

1. அன்பழகன், பேரா. ''எட்டுநாட்டுக் கள்ளர் தலைவர் - வெள்ளைப் புன்னைத்தேவர்'' அன்புக்கவி பதிப்பகம், உசிலமப்பட்டி, மதுரை, 1994,
2. சாந்தலிங்கம், சொ. மாமதுரை, பாண்டியநாட்டு வரலாற்றுப் பேரவை, மதுரை, 2015.
3. பரமசிவம்.த.கோ, சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்- 613 010,1989.
4. பாவெல் பாரதி, வைகை தொல்லியல் வெளி, கருத்து பட்டறை, மதுரை, 625 006. 2021.
5. ஜெயக்குமார், பா. தென்கல்லக நாடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 613 010, 2016.
6. அருண் பேக்காமன், தென்கல்லக நாட்டில் நடுகற்கள், கருத்து-பட்டறை, மதுரை

# மு. தங்கராசனின் ‘‘நாட்டுப்புறத்தில்’’ தாலாட்டுப் புலப்படுத்தும் தமிழர் வாழ்வியல்

***நா. இளமாறன்***
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***முனைவர் பா. சிங்காரவேலன்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைகல்லூாி மேலூா், மதுரை

## முன்னுரை

மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றி விட்டன. மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண் மையான வெளி ப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். எழுதப்பெற்ற இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்றால். நாட்டுப்புற இலக்கியம் சமுதாயத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி எனலாம்.

மக்களின் வாழ்க்கை தாலாட்டுப் பாடலில் தொடங்கி, விளையாட்டு, காதல் பாடல்களில் வளர்ந்து, திருமணப் பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் நிறைவு பெறுகிறது.

தாய் உலகிற்கு தந்த முதன்மையான இலக்கியப் பரிசுதான் தாலாட்டு வாழ்வின் தொடக்கவுரை.

**‘‘நெருப்பைச் சந்திக்காத தங்கமோ**
**உளியைச் சந்திக்காத சிற்பமோ**
**யுத்தத்தைச் சந்திக்காத தேசமோ**
**பிரசவத்தை சந்திக்காத பெண்ணோ**
**முழுமையடைவதில்லை’’**

எனவே முழுமை அடைந்த அந்தத் தாய்மை கொடுத்த கொடைதான் தாலாட்டு. ‘‘தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல். அக்கடலில் விளைந்தவலம்புரிமுத்தேதாலாட்டு’’ என்கிறார். முனைவர் ஆறு அழகப்பன்.

இனி, மு.தங்கராசன் எழுதிய நாட்டுப்புறத்தில் என்ற நூலில் தாலாட்டுப்பாடல்களில் காணலாகும், தமிழரின் பல்வேறு வாழ்வியல் நெறிகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## தாலாட்டுப் பயன்பாடு

குழந்தையை தூங்கச் செய்வதே தாலாட்டுப் பாடலின் முதன்மைப் பயன்பாடு. இது அழும் குழந்தைகளை அமைதிப்படுத்தும் கருவியாக அமைகிறது. பசித்து அழும் குழந்தைக்கு பசி போக்கும் நோக்கத்துடன் மடியில் வைத்துக் கொண்டும் ஆட்டிக் கொண்டும் பாடுவர்.

குழந்தைப் பற்றிய தன் கனவுகளைச் சொல்லவும், பட்ட இன்னல்களைச் சொல்லவும், குலப் பெருமையைச் சொல்லவும், தாய் தன் நினைவோடையில் சிதறும் முத்துக்களாய் தாலாட்டைப் படைக்கிறாள்.

குழந்தைக்காக தாய்பாடும் வண்ண வண்ணப் பாடல்களைக் கேட்கும்போது அப்பாடல்களில், குழந்தையின் அழுகைக்குக் காரணம் வினவுதல், குழந்தையைப் பேசத் தூண்டுதல், தாய்மாமனின் சிறப்பு, குழந்தைக்குரிய சடங்கு முறைகள், வருங்காலத்தில் குழந்தையைப் பற்றிய தாயின் கனவுகள், தாயின் தவமும் தவப்பயனும், குலத் தொழிலின் பெருமைகள் போன்றவை தாலாட்டின் கூறுகளாக இருப்பதை அறிய முடிகிறது.

**தாலாட்டில் தாய்மை**

தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் ''தாலாட்டு''. இது உலகிற்குப் பொதுவான கலை தமிழகத்திற்கு தனிச்சிறப்பு தரும் கலை.

இருவர் கொள்ளும் காதலை விட, உடன்பிறந்தவர் கொள்ளும் வாஞ்சையை விட, நாடு இனம் மொழியிற் படியும் பற்றுதலை விட, ஏன் உலகளக்கும் அருளினை விட பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது. உணர்ச்சிமயமானது! இத்தகைய தாயும் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு.

மலை மீதிருந்து பாயும் வெள்ளருவி போல, மணல் வெளியில் மதிவார்க்கும் நிலவொளி போல, இனிமை தரும் தென்றல் போல், உள்ளங்கவரும் இசை தாயுள்ளத்தில் ஊற்றாகிறது. தாலாட்டும் கவியாகிறது.

***மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்***
***மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்த***
***கண்ணேரீ'' எங்கள்குலம் மங்காமல் எதிர்த்தகுலம்***
***ஏசாமல் தங்கமணிப் பொக்கிஷத்தைத் தானாள***
***வந்த கண்ணோ?***
***கண்ணுமணி பொன்னுமணி கந்தரோட***
***வேலுமணி***
***வேலுமணி தொட்டிலிலே விளையாட***
***வந்த கண்ணோ?***

***(மு.தங்கராசன் நாட்டுப்புறத்தில் ப.16)***

என்ற பாடல் அடிகள் மூலம் தாய்மார்கள் மலடி என்ற சொல்லை நெஞ்சைத் துளைக்கும் ஒரு நெருஞ்சி முள்ளாகவே காண்பார்கள். வேறு எந்த வசையாக இருந்தாலும் பொறுத்துக் கொள்வார்கள். மலடி என்று மட்டும் யாராவது ஏசிவிட்டால் பேசிவிட்டால் இதனை மட்டும் பொறுக்கவே முடியாது. குழந்தை பெற்றவுடன் தான் தாய்மை முழுமை அடைகிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**தாலாட்டில் தெய்வம்**

அவனின்றி ஓர் அணுவும் அசையாது, கடவுளை வணங்கி எச்செயலையும் தொடங்குவது தமிழர் மரபு. கடவுளிடம் குழந்தையைக் காக்க வேண்டும். எந்த நோயும் தீங்கும் அணுகக் கூடாது என்று கடவுளை வேண்டுவது தாயின் இயல்பு. சாமீ! எம்புள்ள நல்லா இருக்கணும் என்பதே தாயின் வேண்டுதலாக இருக்கும்.

***''உறங்காத கண்ணுக்கு ஊசி கொண்டு***
***மையெழுதி***
***தூங்காத கண்ணுக்கு தூசிகொண்டு***
***மையெழுதி***
***தொட்டிகட்டி எங்க துரைக் கண்ணணைப்***
***போட்டுவிட்டா***
***தொட்டிலுக்கும் கீழே துணையிருப்பாள்***
***மாரியம்மா''***

***(மு.தங்கராசன், நாட்டுப்புறத்தில் ப.15)***

இங்கு ஆண் குழந்தையைக் கண்ணன் என்றும் அவனைக் கிராமத் தெய்வமான மாரியம்மா துணையிருந்து காப்பாள் என்றும் கூறுவது நோக்கத்தக்கது. நாட்டுப்புற வழிபாட்டில் பெண் தெய்வ வழிபாடு மிக முக்கியமானது என்றும். அத்தெய்வந்தான் மக்கள் துயரைப் போக்கும் என்பதும் நம்பிக்கையாகும். குலதெய்வ வழிபாட்டினை அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்பதும் இதன்மூலம் புலனாகிறது. தாய் தன் குழந்தைக்கு சிறு வயதிலேயே குலதெய்வத்தைச் சொல்லி வளர்ப்பது கடமை என அறிய முடிகிறது.

இருப்பினும் முல்லை நிலத் தெய்வம் திருமால் ஆவார். திருமாலுக்கு கண்ணன் என்ற பெயரும் உள்ளது. எனவே அன்றைய காலக்கட்டத்திலேயே கண்ணனை மக்கள் கடவுளாக ஏற்றிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. ஆண் குழந்தையாதலால் அவனை ''கண்ணன்'' என்றும் ''துரை'' என்றும் தாய் கூறுகிறாள். குழந்தை வருங்காலத்தில், வளமையுடையவனாகவும் அரசாளும் திறமையுடையவனாகவும் வர வேண்டும் என்பது ஒரு தாயின் எதிர்ப்பார்ப்பாகும்.

**தாயின் கனவு**

***''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்***
***சான்றோன் எனக்கேட்ட தாய்''***

***(திருக்குறள், அறம், 69)***

இக்குறளானது தாயின் கனவை அழகாகச் சித்தரிக்கிறது. நல்ல மகனைப் பெற்றெடுத்தவன் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சியை தாய் அடைவாள் என்று உணர்த்துகிறது.

ஒரு குழந்தை, சான்றோர்கள் பாராட்டும் போற்றும், ஒழுக்கம் நிறைந்த செயல்களால் தான் அன்னை மனம் மகிழும்.

***''மாபெரும் சபைகளில் நீ நடந்தால்***
***உனக்கு***
***மாலைகள் விழ வேண்டும் ஒரு***
***மாற்றுக் குறையாத மன்னவன்***
***இவனென்று***
***போற்றிப்புகழ வேண்டும்''***

என்ற கவிஞர் கண்ணதாசனின் வரிகள் தாயின் கனவை பிரதிபலிப்பதாக உள்ளது.

***''மானே மருக் கொழுந்தே - கண்ணே நீ***
***மலர்விரிந்த மல்லிகைப்பு***
***வாடாத புவோ - கண்ணே நீ***
***வானகத்துத் தாரகையோ***
***கோட்டை அதிகாரி - கண்ணே உன்***
***கொடிபறக்குது ஆகாயம்!***
***கேட்பதெல்லாம் நான் கொடுப்பேன்***
***கேவியழ வேண்டாமே!''***

***(மு.தங்கராசன், நாட்டுப்பறத்தில் பக்-15-16)***

எனத் தாய் பாடுகிறாள். இப்பாடலில் குழந்தையை மலராக, வானத்துத் தேவதையாக உயர்ந்த அதிகாரியாகப் புகழ்ந்து பாடுகின்றாள். ஆனாலும் நீ கேட்பதையெல்லாம் நான் தருவேன் என்று தாய் கூறுவது அவளின் தன்மானத்தையும் சுயமரியாதையையும் எந்நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டாள் என்பதும் புலப்படுகிறது.

இருந்தாலும் தன் குழந்தை ஓர் உயர்வான சமூக வாழ்வில் வாழ வேண்டுமென்றும் எதிர்காலத்தில் அவன் பெரிய அதிகாரியாக வரவேண்டும் என்று அவள் ஆசை கொள்வது மிகத் தெளி வாகப் புலப்படுகிறது. தியாகத்தின் மறுஉருவம் தாய் என்பதை நாம் இந்த இடத்தில் நினைவு கூற வேண்டியது முக்கியமானதாகும்.

***தாலாட்டில் விழாக்கள்***

தமிழன் ஏற்படுத்திய கலாச்சார நிகழ்வுகளுள் முக்கியமானது விழாக்களாகும். அதிலும் குழந்தைக்கு, முதல் விழா காதணி விழாவாகும். இது வெகு சிறப்பாக கொண்டாடப்படும் விழாவாகும்.

''குழந்தையின் அழகைக் கண்டு பிறர் ரசித்து விட்டால் அதற்கு நோய் வரும் என்று தாய்மார்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை புரதான மந்திரவாதத்தின் அடிப்படையில் எழுந்தது. சில கண்களுக்குத் தீமையை விளைவிக்கும் சக்தியுண்டென்பது மந்திரவாதக் கருத்து. கண்பட்டால் நோய் நொடி வரும் என்பது நம்பிக்கை. காதுகுத்தும் குழந்தை உடலில் ஏதாவது சிறுகாயமொன்றை ஏற்படுத்துவதும் எமனை ஏமாற்றச் செய்யும் தந்திரங்கள். அழகான குழந்தைகளைக் கண்டு எமன் ஆசைப்பட்டு விடுவானாம். அதனால் குழந்தைகள் இறந்து போகும். ஏமனை ஏமாற்ற உடலில் சிறுகாயம் ஏற்படுத்தி விட்டால் போதுமாம். இந்த நம்பிக்கை தமிழ்நாடு மட்டுமல்லாமல் மத்திய ஆசியாவிலும் உலகமெங்கும் நிலவி வந்தது. குழந்தையின் ஆயுளைப் பாதுகாக்கும் சடங்கு ஆகையால் இதனைப் பெண்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடுவர்'' *(தமிழர் நாட்டுப்பாடல்கள், நா. வானமாமாலை, பக்.100-101)*

***''மாம்பிஞ்சு கொண்டு மதுரை சிமிக்கி கொண்டு காதுகுத்த வாராக கனகமுடி உங்களம்மான் - என் ராசா***
***காதுகுத்த வந்திருக்கும் வாழ்த்து சொல்லும் ஆசாரி!***
***பாக்கு பதக்கு பச்சரிசி முக்குறுணி***
***எள்ளு இருநாழி இளந்தேங்கா முன்னூறு***
***அள்ளி விளம்புங்க அருமைமகன் காதரிசி***
***சிந்தி விளம்புங்க செல்வமகன் காதரிசி''***

***(மு. தங்கராசன், நாட்டுப்புறத்தில், பக் 43-44)***

இப்பாடலில் மாம்பிஞ்சு கொண்டு, மதுரை சிமிக்கி கொண்டு, கனகமுடி கொண்டும் வாழ்த்துச் சொல்லவும் பலபேர் வந்துள்ளனர், பாக்கு, பச்சரிசி, எள்ளு, இளந்தேங்காய் போன்றவை விழாவிற்கு கொண்டு வரப்பட்ட பொருள்கள் என்பதை இப்பாடலின் மூலம் அறியலாம்.

மேலும், செல்வமகன் காதுகுத்தல் விழாவினைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற பேராவலில், ''அள்ளி விளம்புங்க - சிந்தி விளம்புங்க'' என்று கூறுவதும் பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாக அமைகிறது.

### தாய் வீட்டின் பெருமை

பெண்ணுக்கு என்றுமே தாய்வீட்டு உறவினர்கள் மேல் மதிப்பு அதிகம். ஏனென்றால் பிறந்ததில் இருந்து அங்கு வளர்ந்த நாட்களே அதிகம், பழகிய உறவுகளே அதிகம். குழந்தையின் அழுகைக்குக் காரணமான தாலாட்டுப் பாடலில் தாய் தன் உறவினர்களின் பெயர்களைச் சொல்லிப்பாடுகிறாள்.

***''ஆரடிச்சா கண்ணழுவ, அடிச்சாரைச்
சொல்லியழு
மாமா அடிச்சாரோ மருக்கொழுந்துப்
புவாலே
தாத்தா அடிச்சாரோ தாழம்புச் செண்டாலே
அப்பா அடிச்சாரோ அரளிப்புச்
செண்டாலே
பாட்டி அடிச்சாரோ பால் வளர்க்கும்
சங்காலே
அம்மா அடிச்சேனா அமுதூட்டும் கையாலே
ஆரடிச்சு கண்ணழுவ, அடித்தாரைச்
சொல்லியழு!''***

***(மு. தங்கராசன், நாட்டுப்புறத்தில், பக்-18)***

பிறந்த வீட்டு உறவுகளை ஒரு வகையிலும், தன் கணவன் வீட்டார் உறவுகளை இன்னொரு வகையிலும் ஏசுவது போல் பாடுவது அக்கால நாட்டுப்புறப் பாடல்களின் வழக்காகும். இதனை நாட்டுப்புற அங்கதம் எனலாம்.

இப்பாடலில், அப்பா அடிச்சாரோ அரளிப்புச் செண்டாலே என்று சொல்வது நஞ்சுச்செடியாகக் குழந்தையின் அப்பாவைப் பார்க்கும் பார்வையும், தன்னுடன் பிறந்த அதாவது குழந்தையின் தாய்மாமன் அடித்தது.

மருக்கொழுந்து என்று சொல்வதில் தாழ்வும் உயர்வும் காணப்படுவதை உணரலாம்.

ஆனால் தாய்மார்கள் எல்லோரும் தந்தையையும், சகோதரனையும் சிறிதும் தாழ்வின்றி உயர்த்து வதை மரபாகக் கொண்டுள்ளனர்.

''இரு உறவினர்களும் (தந்தை, மாமன்) அவர்கள் கொண்டு வரம் பரிசுகளும் (பசு, சங்கு) உயர்வு தாழ்வு கற்பிக்கப்படாமல் ஒரு சமநிலையுடன் விவரிக்கப்பட்டுள்ளனர். தந்தை மகாபாரதக் கதைப்பாத்திரமான தர்மருடன் ஒப்பிட்டால் மாமன் வானுறை இந்திரனுடன் ஒப்பிடப்படுகிறான். தந்தை கொண்டுவந்த பசுவின் அங்கங்கள் பொன்னிறத்தன என்று பாராட்டப்பட்டால் மாமன் தெரிந்தெடுத்த சங்கு வைர நிறத்'தது, என்று போற்றப்படுகிறது. இச்செயல் சமநிலைப் பாட்டிற்கு பொருளாழம் தருகிறது'' (தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள், பக்-97) என்கிறார் தே. லூர்து. இதனால் பிறந்த வீட்டுப் பெருமை எவ்வாறு ஆழப்பதிந்துள்ளது என்பதைக் காண முடிகிறது.

***''எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகி
ஈர்க்கிபோல் சேக்கொதுக்கி
இங்கிலீஸ்க்கார் எடுத்து வரும் இளராஜர்
உன் மாமன்''***

***(மு. தங்கராசன், நாட்டுப்புறத்தில் பக்-19)***

இளவரசனாகத் தன் உடன் பிறந்தவனை எண்ணுவதும், தன்னுடைய கணவனை அரளிப்பு என்று சொல்லுவதும் இங்கே ஒப்பீட்டு நோக்கத்தக்கதாகும்.

தன் சகோதரன் பெரிய வீரன் என்று அவள் பாடுவது புகுந்த வீட்டில் பாதுகாப்பு கருதிய ஒருவகை பயமெனவும் தெரிகிறது.

***''பால்சங்கு போட்டால் என் கண்ணே உன்
பவளவாய் நோகும் என்று
பொன்னாலே சங்கெடுத்து
போயிருக்கிறார் உன் மாமன்''***

***(மு. தங்கராசன், நாட்டுப்புறத்தில், பக்-19)***

இப்பாடலில் தன் பிறந்த வீடு அதிகமான செல்வங்களைப் பெற்ற வீடு என்ற பொருளை நாம் உணர முடிகிறது.

***''கடைக்குக் கடை பார்த்து - என் கண்ணே
கல்லழுத்திச் சங்கெடுத்து
சுத்தி சிவப்புகட்டி சுழவரப் பச்சைகட்டி
வாய்க்கு வைரம்கட்டி வாங்கிடுவார் உன்
மாமன்
மதுரையிலே கூடாரம் மல்லிகைப்பு வியாபாரம்***

***மல்லிகைப்பு வித்தவுடன் - உன் மாமன்***
***மாலை வாங்கி வந்திடுவார்***
***கொச்சியிலே கூடாரம் கொத்தமல்லி வியாபாரம்''***
***(மு. தங்கராசன் நாட்டுப்புறத்தில், பக்-20)***

என்ற பாடலின் மூலம், தன் உடன் பிறந்த சகோரன் வணிகத்திலும், பிற ஊர்களுக்குச் சென்று வருவதிலும் சிறந்தவன், என்றும் தொலைதூர ஊர்களுக்கும் சென்று வணிகம் செய்யத் தெரிந்தவன் என்றும் பிறந்த வீட்டின் பெருமையைப் பறைசாற்றுவதை இப்பாடலின் மூலம் அறிகிறோம்.

**நிறைவுரை**

தாலாட்டுப் பாடல்கள் காட்டும் வாழ்வியல் முறைகள் ஏராளம். தாயின் அன்பையும் சேயைச் சுற்றி எழும் கற்பனையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டாகும். தாலாட்டு உறங்க வைக்கும் பாட்டு என்றாலும் கிறங்க வைக்கும் பாட்டாகும். இலக்கண, இலக்கிய அமைதி அறியாத ஒரு கிராமத்துத் தாயின் சிந்தனை, தமிழரின் பண்பாடு, வாழ்வியல் நெறிகள் எவ்வாறெல்லாம் உறைந்து கிடக்கின்றது என்பதை நன்கு அறிந்தோம், அன்றைய காலக் கட்டம் தாய்வழிச் சமூகமாகவே இருந்த, போதிலும் ஏன் பெண் பிள்ளை பற்றிய தாலாட்டுப் பாடல்கள் இல்லை என்பது ஆராய்தலுக்குரியதாகவே உள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. மு. தங்கராசன், நாட்டுப்புறத்தில், காவ்யா பதிப்பகம் கோடம்பாக்கம், சென்னை - 600024, 2021.
2. நா. வானமாமாலை, தமிழர் நாட்டுப்பாடல்கள், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை-600098 ஆறாம்பதிப்பு 2006.
3. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள் தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி) பாளையங்கோட்டை - 627002, 2000.

# பத்துப்பாட்டினில் அறிவியல் விழுமியங்கள்

***முனைவர் மு. இளங்கோவன்***
முன்னாள் மாணவர் சங்கத்தலைவர், நான்காம் தமிழ்சங்கம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

### முன்னுரை

ஆறிவியல் அறிஞர்கள் எதையும் நம்பிக்கை அடிப்படையில் மட்டுமே ஏற்க மாட்டார்கள். எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும், எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருளின் உண்மைப் பொருளைக் காண்ப அறிவியல் உலகின் அடிப்படையாகும். கோள்கையானாலும் கோட்பாடானாலும் அவை, முறையான விவாதங்களுக்கும் பரிசோதனைகளுக்கும் உட்படுத்தி மெய்ப்பிக்கப்பட்ட அவற்றின் முடிவுகளின் அடிப்படையில் ஏற்கப்படவேண்டும் என்பது அறிவியல் துறையின் மரபாகும். உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்தும் செவ்விலக்கியக் கூறானப் பத்துப்பாட்டினில் உள்ளதை உள்ளவாறு அறிவிக்கும் அறிவியல் கருத்தாக்கங்களை காணமுடியும். வெளி நாட்டார் வணக்கம் செய்யும் அளவிற்கு, ‘‘திறமையான அறிவியல் புலமை” பத்துப் பாட்டினில் புதைபொருள் போல் அமைந்திருப்பதனை இக்கட்டுரை அகழாய்பு செய்கிறது.

### தொல்காப்பியத்தில் அறிவியல்

அறிவியல், இலக்கியத்திற்கு மாறுபட்டு நிற்பது மட்டும் அல்லாமல், இலக்கியத்தின் வாழ்வில் அது பற்பல மாறுதல்களையும் ஏற்படுத்தி வருகின்றது. இங்கிலாந்து அறிஞர், லீ, ஹன்ட் என்பார். ‘‘அறிவியல் எங்கே அறிவியலாக விளங்காமல் நிற்கிறதோ, அங்கே பாட்டுக்கலை தொடங்குகிறது. அங்கிருந்து அறிவியலால் உணர்த்த முடியாத உண்மையை உணர்த்துகிறது’’[1] என்கிறார். இக்கருத்திற்கு ஏற்ப அறிவியல் விளங்கமுடியாதத் தொல்காப்பியத்தில் நூற்பாக்கள் வடிவில் அறிவியற்கருத்துகள் இடம்பெறக்காணமுடியும். தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரப் பிறப்பியல்,

**‘‘உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும்**
**நிலைஇப்பல்லும் இதழும் நாவும் முக்கும்**
**அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்**
**உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி எல்லா**
**எழுத்தும் சொல்லுங் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல’’[2]**

என மொழிந்து எழுத்துக்களின் பொதுப்பிறப்பு பற்றி இலக்கணம் கூறுகின்றது. ஒலிதான் பேச்சு உறுப்புக்களின் எழுத்துகளாகின்றன என்பது இந்நூற்பாவின் உட்பொருளாகும். இந்நூற்பா கருத்து உடற்கூறு அறிவியல் (Anatomy Science) சார்ந்ததாகும். உலகில் வேறு எந்த உயிர்களுக்கும் இல்லாத, மனிதனிடம் மட்டுமே உள்ள பேசும் திறனால் உலகம் நவீனத்துவம் அடைந்து வருகிறது என்ற அறிவியலும் இதனுன் அடங்கி உள்ளதெனலாம்.

தொல்காப்பியத்தின் சொல்லதிகாரக் கிளவியாக்கம், ‘‘ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்’’[3] என்கிறது. ஞாயிறு, திங்கள் இரண்டையும் இருகோள்களாகக் கொண்டு, அவற்றுடன் மேலும் ஐந்து கோள்கைளக் கணக்கிட்டப் (செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி) பழந்தமிழர் வாரத்தின் ஏழுநாள்களை வகுத்தனர் என்பது கோள்களோடு தொடர்புடைய அறிவியல் செய்தி எனலாம்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் புறத் திணை இயல், ‘‘நாள் கோள்’’[4] என்கிறது. இதற்கு, நாள்மீன், நட்சத்திரம் என்னும் பெயர்கள் உண்டு. அந்த நாள்கோள் மொத்தம் இருபத்தேழு எனக் கணக்கிட்டு உள்ளனர். அவை, புரவி,

அடுப்பு, ஆரல், சகடு, மான்றலை, மூதிரை, கழை, காற்குளம், கட்செவி, கொடுநுகம், கணை, உத்தரம், கை, அறுவை, விளக்கு, முறம், பனை, துளங்கொளி, குருகு, உடைகுளம், கடைக்குளம் முக்கோல், காக்கை, செக்கு, நாழி, முரசு, தோணி என்பனவாகும்.

தொல்காப்பியம், களவியல் ''ஓரையும் நாளும்''[5] என்கிறது. இதில், ஓரை என்பது இராசி என்னும் பொருளையும் நாள் என்பது நட்சத்திரம் என்னும் பொருளையும் முறையே உணர்த்து கின்றன. இவை போன்று, வானத்தில் உள்ள பல கோள்களையும் ஆராய்ந்து அவற்றிற்குப் பெயர் சுட்டி, அவற்றைக் கொண்டு, தம் வாழ்விற்கான காலமுறையினையும் பழந்தமிழர் வகுத்தனர். வானத்தில் பலகோள்கள் காணப்படுகின்றன என்ற அறிவியல் உண்மையைப் பழந்தமிழர் அறிந்து வாழ்ந்தனர் என்பதற்கு மேலும் பல சான்றுகள் உள்ளன.

### பத்துப்பாட்டினில் அறிவியல் விழுமியங்கள்

இலக்கியம், பறப்பது போன்றது. அறிவியல் நடப்பது போன்றது பறப்பது போன்ற இலக்கியத்தில் நடப்பது போன்ற அறிவியல் கருத்துகளைப் பத்துப்பாட்டு நூல்கள் மூலம் விளக்கலாம்.

### சிறுபாணாற்றுப்படை

வானில் பல விண்மீன்களுக்கு நடுவே பால்போல் ஒளி உடைய திங்கள் காட்சி அளிக்கிறது என்ற அறிவியல் கருத்தை, சிறுபாணாற்றுப்படை ''பல்மீன் நடுவண் பால்மதி போல''[6] என்கிறது. இங்கு, திங்கள் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நட்சத்திரத்தின் அருகே காட்சி அளிக்கும் அறிவியல் கருத்தை, அகநானூறு,

**''மழைக்கால் நீங்கிய மாசு விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்''[7]**

எனப் பாடுவதை ஒப்பிடல் பொருத்தமாகும். இதில்வரும் ''மாக'' என்பதற்கு, பரிபாடல் உரைகாரர் பரிமேலழகர். ''மாகமாவது பூமிக்கும் சுவர்க்கத்துக்கும் நடுவ''[8] என்று அறிவியல் சிந்தனையோடு விளக்குவது சிந்திப்பதற்கு உரியது.

### பெரும்பாணாற்றுப்படை

கருமேகம், மழை பெய்யத் தொடங்கும் முன் வானவில்லின் ஒருபகுதி ஓரிடத்தில் தோன்றியும் பிறிதோர் இடத்தில் ஒருபகுதி தோன்றாமலும் இடையிடையே இற்றுப்போயும் குறைபடத் தோன்றும் என்ற நுண்நோக்கு அறிவியல் உண்மையை, பெரும்பாணாற்றுப்படை,

**''உறைகால் மாறிய ஓங்குஉயர் நனந்தலை**
**அகல் இரு வானத்துக் குறைவில் ஏய்ப்ப''[9]**

என்கிறது. இதில், குறைந்து காணும் வானவில், ''குறைவில்'' என்னும் சொல் நயத்தோடு குறிப்பிடப்பட்டுள்ளது.

காற்று மண்டிலம், வாய மண்டிலம், மேக மண்டிலம் என்பன போல பகல் செய் மண்டிலம் என்ற ஒன்று இருந்த அறிவியல் கருத்தை, பெரும்பாணாற்றுப்படை,

**''குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்**
**பகல் செய் மண்டிலம் பாரித் தாங்கு''[10]**

என்கிறது. இதில், பகல்செய் மண்டிலம் என்பது ஞாயிற்று மண்டிலம் என்பதை நயம்படச் சுட்டும் தொடராகும்.

### முல்லைப்பாட்டு

கடலையும் அதிலிருந்து எழும் கருமேகத்தையும் அம்மேகம், சூரியனை வலமாகச் சென்று வானை எட்டுவதையும் முல்லைப்பாட்டு,

**''பாடு இமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு**
**கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு**
**எழிலி''[11]**

என்கிறது. அண்டத்தின் (Universe) விரிவுக்கொள்கைப்படி சூரியக் குடும்பத்தோடு இணைந்து சூரியனும் ஒரே இடத்தில் நில்லாது இடம்மாறி நகரும் தன்மை இதனால் புலனாகிறது.

### மதுரைக் காஞ்சி

உலக அமைப்பு, காற்று மண்டலம், விண்மீன்களின் இயக்கம் ஆகிய அறிவியல்

செய்திகளை, மதுரைக்காஞ்சி,

**"ஓங்கு திரை வியன் பரப்பின்**
**ஒலி முந்நீர் வரம்பு ஆக**
**தேன் தூங்கும் உயர் சிமைய**
**முலை நாறிய வியல் ஞாலத்து**
**வல மாதிரந்தான் வளி கொட்ப**
**வியல் நாள்மீன் நெறி ஒழுக**
**பகற் செய்யும் செஞ் ஞாயிறு"[12]**

என்கிறது. இதில், நீர்ப்பரப்பு முதலில் தோன்ற அதன்பின் நிலப்பரப்பு கடலில் இருந்து தோன்றியது என்ற அறிவியல் குறிப்பு, "முந்நீர் வரம்பு ஆக, மலை நாறியவியல் ஞாலம்" எனும் தொடராலும், நாள்மீனின் விரிந்த தன்மை எனும் அறிவியல் உண்மை, "வியல் நாள்மீன்" என்ற தொடராலும் உணர்த்தப்பட்டுள்ளது.

மன்னரைச் சந்திக்க வருபவர்களுள், சென்ற கால நிகழ்வுகளை அறிவியல் பார்வையொடு பார்ப்பவர்கள், நடப்புக்கால நிகழ்வுகளை நடத்தும் முறையினை வகுப்பவர்கள், எதிர்காலத்தில் நடப்பனவற்றை உறுதிபடக் கூறுபவர்கள், வான் உலகில் உள்ளவர்களின் செயலை நன்கு அறிந்தவர்கள். பிற மண்டலத்தில் நடப்பனவற்றை அறிவியலோடு உணர்ந்தவர்கள், அத்தகையோர் கைகளில் ஆய்வு நூல்களுடன் இருப்பவர்கள் ஆகியோர் இருந்ததை, மதுரைக்காஞ்சி,

**"சென்ற காலமும் வரூஉம் அமயமும்**
**இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடுநன்கு உணர்ந்து**
**வானமும் நிலனும் தாம் முழுது உணரும்**
**சான்ற கொள்கை சாயாய யாக்கை**
**ஆன்று அடங்கு அறிஞர் செறிந்தனர்"[13]**

ஏன்கிறது. இதனால், முக்காலமும் உணர்ந்த அறிஞர்கள், அறிவியலாளர்கள் வாழ்ந்திருந்தனர் என்பது விளங்கும். ஆறிவியலால் பெறும் அனுபவம் முளைக்கு விருந்தாகும். இலக்கியத்தால் பெறும் அனுபவம் உணர்வுக்கு விருந்தாகும்.

## நெடுநல்வாடை

வானியல் (Astronomy) கூறும் சூரியன் இயக்கம், விண்மீன்களின் இயக்கம், சந்திர மண்டலம் விண்மீன் கூட்டங்களுடன் விளங்குதல் ஆகிய அறிவியல் செய்திகளை, நெடுநல்வாடை,

**"புதுவது இயன்ற மெழுகு செய் படமிசை**
**திண் நிலை மருப்பின் ஆடு தலையாக**
**விண் ஊர்பு இழிதரும் வீங்கு செலல் மண்டிலத்து**
**முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய**
**உரோகிணி நினைவனள் நோக்கி நெடிது உயிரா"[14]**

என்கிறது. வானில் நிலவை விட்டுப் பிரியாமல் உரோகிணி நட்சத்திரம் செல்கிறது. நானோ, தலைவனை விட்டுப் பிரிந்து வாடுகிறேன் என்று தலைவி வருந்தும் வாழ்வியல் விழுமியத்தோடு வானியல் விழுமியம் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

## குறிஞ்சிப்பாட்டு

பல கதிர்களை உடைய கதிரவன், ஏழு குதிரைகள் பூட்டப்பட்டத் தேரில் ஏறி பகற்பொழுது நீங்குமாறு மேற்கில் மறைகிறான் என்ற கருத்து அமைந்த சங்கப்புலவரின் ஆய்வுத் திறன் இலக்கியத்தோடு இணைந்த அறிவியலும் ஆகும் என்பதை, குறிஞ்சிப்பாட்டு,

**"எல்லை செல்ல ஏழ் ஊர்பு இறைஞ்சி**
**பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய"[15]**

எனப்பாடுகிறது. இலக்கியம், பயில்வார் மனத்திற்கு இன்பம் தரும் அறிவியல், துய்ப்பார் மனத்திற்கு இன்பம் தரும். இரண்டிலும் மறக்கமுடியாத அனுபவங்களை உணரமுடியும்.

## பட்டினப்பாலை

கீழ்வானில் தோன்றும் விண்மீன் ஆகிய வெள்ளி, தான் நிற்கும் திசையாகிய வடக்கில் நிற்காமல் தெற்கு நோக்கிச் சென்றால் மழை பெய்யாது என்ற அறிவியல் செய்தியை, பட்டினப்பாலை,

**"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்கு ஏகினும்**
**தற் பாடிய தளி உணவின்**
**புள் தேம்பப் புயல் மாறி**
**வான் பொய்ப்பினும்"[16]**

என்கிறது. இச்செய்தியை, மணிமேகலை, துயில் எழுப்பிய காதை, "கோள்நிலை திரிந்திடின்

மாரிவறம் கூரும்"[17] எனவும் பாடுகிறது. அறிவியல், மனவளர்ச்சியை நினைவுபடுத்துகிறது. இலக்கியம், மனச் செழுமையைப் புலப்படுத்துகிறது.

## முடிவுரை

தொல்காப்பியத்தில் அறிவியல் விழுமியங்கள் ஆழ்கடல் முத்துகளைப்போல் மறைந்து கிடக்கின்றன. சிறுபாணாற்றுப்படை, நட்சத்திரங்களுக்கு நடுவே நிலவு காட்சி அளிப்பதைப் பாடுகிறது. பெரும்பாணாற்றுப்படை, ஞாயிற்று மண்டிலத்தைப் பகல் செய் மண்டிலம் என சொல்நயத்துடன் சுட்டுகிறது. முல்லைப்பாட்டு, சூரியன், ஒரே இடத்தில் நிற்காமல் இடம்மாறி நகரும் இயக்கநிலையைக் கூறுகிறது. மதுரைக்காஞ்சி, நிலப்பரப்பு, கடலில் இருந்து தோன்றியது என்ற அறிவியல் ஆய்வையும் சங்க காலத்தில் அறிவியல் சிந்தனை உடையோர் வாழ்ந்ததையும் பதிவு செய்கிறது. நெடுநல்வாடை, உரோகிணி நட்சத்திரம் நிலவைவிட்டுப் பிரியாமல் நகர்வதைப் புலப்படுத்துகிறது. குறிஞ்சிப்பாட்டு, பல வண்ணக் கதிர்களை உடைய சூரியனைக் காட்சிப்படுத்துகிறது. பட்டினப்பாலை, வெள்ளி என்னும் நட்சத்திரம் தெற்கே நகர்ந்தால் மழை பெய்யாது என்று கூறி, மழைமானியை (Rain guage) நினைவுபடுத்துகிறது. இவ்விழுமியங்களை ஒப்புநோக்குகையில், இலக்கியத்தைத் திறம்படத் திறனாய்வு செய்ய விரும்புவோர் அறிவியலையும் பயின்று உணர்ச்சியோடும் அறிவோடும் பண்பட்டு விளங்க முயலவேண்டும் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

## துணைநூற்பட்டியல் -குறிப்புகள்


1. மு. வரததாசன், இலக்கிய ஆராய்ச்சி, ப.159, பாரி நிலையம், சென்னை, மறுபதிப்பு, 2008.
2. நச்சினார்க்கினியர் (உரை.), தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பிறப்பியல் நூ.1, கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, மே, 1950.
3. கு.சுந்ரமூர்த்தி (உரை.), தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூ.58, கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, ஆகஸ்ட், 1962.
4. இளம்பூரணர் (உரை.), தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூ.11, கழக வெளியீடு, சென்னை, முதல்பதிப்பு, சூன், 1953.
5. மேலது., களவியல், நூ.45.
6. உ.வே.சாமிநாதையர் (பதி.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், சிறுபாணாற்றுப்படை, வ.219, கபீர் அச்சுக் கூடம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1956.
7. பொ.வே.சோமசுந்தரனார் (உரை.), அகநானூறு (மணிமிடை பவனம்), 141: 6-8, கழக வெளியீடு, சென்னை, முதல்பதிப்பு, மே, 1970.
8. உ.வே.சாமிநாதையர் (பதி.), பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும், 1:47, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, 2017.
9. உ.வே.சாமிநாதையர் (பதி.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் பெரும்பாணாற்றுப்படை, வரி, 291, 292, கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1956.
10. மேலது., வரி.441, 442.
11. மேலது., முல்லைப்பாட்டு, வரி.4,5.
12. மேலது., மதுரைக்காஞ்சி, வரி.1-7.
13. மேலது., வரி.477-481.
14. மேலது., நெடுநல்வாடை, வரி.159-163.
15. மேலது., குறிஞ்சிப்பாட்டு, வரி-215,216.
16. மேலது., பட்டினப்பாலை, வரி.1-5.
17. உ.வே.சாமிநாதையர் (பதி.), மணிமேகலை, 7-9, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு, 2013.

# ஆருயிர் மருந்து

***முனைவர் பி.கி. இளையராஜா***
கௌரவ விரிவுரையாளர், தமிழ் உயராய்வு மையம்
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

## முன்னுரை

மணிமேகலைக் காப்பியம் என்றவுடன் அமுதசுரபி தான் நினைவுக்கு வரும். மணிகேமலையின் கையில் இருக்கும் அமுத சுரபியின் இயல்பு குறித்து அறிகையில், நாடு வறங்கூரினும் ஒடுவறங்கூராது "எடுக்க எடுக்கக் குறையாது அவ்வோட்டில் சோறுவரும்" வாங்குநர் கையகத்தை வருத்தும் "தான் சோற்றில் குறையாது எனும் கருத்தை அறவிளக்கு நூலில் கோ.சிவ குருநாதன் குறிப்பிடுவது இவ்விடம் நினைவு கூரத்தகும்.

மனிதனின் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக விளங்குவன உணவு, உடை, இருப்பிடம் என்பர். மணிமேகலைக் காப்பியத்தின் தலையாய நோக்கமாக பசித்தோர்க்கு உணவு வழங்குவது அமைகிறது. மணிமேகலா தெய்வம் உணவின் முக்கியத்துவம் குறித்து மணிமேகலையிடம் குறிப்பிடுகையில்,

**மக்கள் யாக்கை உணவின் பிண்டம்**
**இப்பெ ருமந்திரம் இரும்பசி யறுக்கும்**
***- மணி.கா-10, 90-91***

என்கிறது.

மக்கள் உயிர்க்குச் சோறாகிய உணவு எங்ஙனம் ஆருயிர் மருந்தாக அமைகிறது என்பதை மணிமேகலை காப்பியத்தின் வழி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## அறம்

அறம் என்பதற்கு மணிமேகலை விளக்கம் கூறுகையில், மன்னுயிர்கள் அனைத்திற்கும் உணவு வழங்குவதே அறம் எனக் கூறுவதைக் காணமுடிகிறது.

**அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டதில் *மணி.கா.25. 228 - 231***

எனச் சுட்டுகிறது மணிமேகலை. மணிமேகலை காப்பியம் பௌத்த சமயக் கொள்கை பரப்பும் காப்பியம் என்ற போதும், பௌத்த சமயத்தின் தலையாயக் கோட்பாடுகளில் ஒன்றாக பசிப்பிணித் தீர்த்தல் இடம்பெறுகிறது. அறத்தான் வருவதே இன்பம் என்கிறது வள்ளுவம்.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல *(குறள் - 39)***

எனச் சுட்டுகிறது.

## உணவின் இன்றியமையாமை

மனித வாழ்க்கை உணவால் தான் இயங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாத உண்மை. அதனால்தான் பிறரிடம் பிச்சை பெற்று வாழும் வாழ்க்கை ஏற்பட்டால், இவ்வுலகை படைத்த இறைவனும் அழியட்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக**
**இவ்வுலகு இயற்றி யான் *(குறள் - 1062)***

எனச்சுட்டுகிறது. வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கு எல்லாம், என்றும், தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இச்சகத்தை அழித்திடுவோம் என்றும் மகாகவி பாரதியார் குறிப்பிடுவது இவ்விடம் ஒப்பு நோக்கத் தகும் எனலாம்.

மணிமேகலைக் காப்பியத்தின் முதல் காதையான விழாவறைக் காதையில், பசி இல்லா நாடு வேண்டும் எனச் சாத்தான் எடுத்துரைப்பதை அறியலாம்.

***பசியும் பிணியும் பகையும் நீங்கி***
***வசியும் வளனும் சுரக்கு***

***மணி.கா.-1, 70-71***

*என்கிறது மணிமேகலை அமுதசுரபி கிடைக்கப் பெற்ற மணிமேகலை அப்பாத்திரத்தால் முதலில் யாருக்கு உணவிடல் வேண்டும் எனக் குறிப்பிடும் காப்பிய ஆசிரியர், காயசண்டிகை எனும் பாத்திரப் படைப்பை கிளைக்கதையாக எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. காயசண்டிகைக்கு சாபத்தால் உண்டான யானைத்தீ பசியை மணிமேகலை அமுத சுரபியால் அமுது வழங்கி, அவள் துன்பத்தைப் போக்கியதைக் காணலாகிறது.*

*பசியால் உயிர்களுக்கு ஏற்படும் தீங்குகள் பற்றியும் பசியைத் தீர்ப்பவரின் பெருமைகள் பற்றியும் தீவதிலகை என்பாள் மணிமேகலையிடம் எடுத்துரைப்பது பற்றி அறியப்படுகிறது.*

***குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்***
***பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉமட***
***நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்***
***புண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்***
***பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்***
***இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது***

***- மணி.கா.11, 76-81***

*எனச் சுட்டும் மணிமேகலை. குடிப்பிறப்பு, உயர்வு கல்வி, நாணம், அழகு இவையணைத்தும் பசி வந்தால் நம்மைவிட்டு நீங்கும் என்றும், பசியாகிய பிணியைத் தீர்த்தவரின் புகழை எடுத்துரைக்க முடியாது என்றும் தீவதிலகை குறிப்பிடுவதன் மூலம் பசிப்பிணி தீர்ப்பதன் முக்கியத்துவத்தை மணிமேகலை நன்கு அறிந்து கொண்டனள் எனலாம்.*

**ஆருயிர் மருந்தானாள்**

*அமுதசுரபி கிடைக்கப்பெற்ற மணிமேகலை பசித்தவரின் துயர் போக்கும் ஆருயிர் மருந்தாக விளங்கினள். ஈன்ற குழவியின் முகங்கண்டு பால்சுரக்கும் தாயைப் போல் பசியால் வருந்து பவரின் வருத்தம் போக்கும் இப்பாத்திரத்தில் அமுது சுரத்தலைக் காணும் விருப்பம் உடையேன் என மணிமேகலை குறிப்பிடுவதை அறியமுடிகிறது.*

***ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித்***
***தீப்பால் சுரப்போள் தன்முலை போன்றே***
***நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்***
***தகன் சுரைப் பெய்த ஆருயிர் மருந்தவர்***
***முகங் கண்டு சுரத்தல் காண்டல்வேட்***
***கையேன் என***

***-மணி.கா.11, 114-118***

*எனச் சுட்டுகிறது. ஆபுத்திரன் என்பான் வீடுகள் தோறும் பிச்சை பெற்று, அவ்வுணவை கண் தெரியாதவர், காதுகேளாதவர், கால்முடப்பட்டவர், பேணுநர் இல்லாதவர், பிணிவாய்ப்பட்டவர் என அனைவருக்கும் உணவு வழங்கி ஆதரவளித்தான். பசியால் துன்பம் அடைபவரின் துயரினை உணவளித்து காத்தலே உயிர்காக்கும் அருமருந்து என்பதை இவ்வுலகிற்கு உணர்த்தியவன்.*

***மையறு சிறப்பின் மனைதொறு மறுகித்***
***காணார் கேளார் கால்முடப் பட்டோர்***
***பேறுநரில்லோர் பிணிநடுக்குற்றோர்***
***யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி***
***உண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடுத்துக்***
***கண்படை கொள்ளுங் காவலன் றானெ***

***- மணி.கா.13, 110-115***

*எனச் சுட்டுகிறது. உண்டொழி மிச்சிலுண்டு என்பதற்கு, விருந்தோம்பி மிச்சின் மிசைவான் என்பதன் பொருளைத் தழுவி வந்துள்ளது என மணிமேகலைக் காப்பியத்தின் உரை விளக்கத்தில் உரையாசிரியர் ந.மு.வேங்கடசாமிநாட்டார் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.*

*விருந்தினர், மூத்தோர் போன்றோர்க்கும் பசு, பறவை முதலானவைகளுக்கும் ஒழுக்கத்தில் பிறழாத சான்றோர் உணவு கொடுத்துத்தான் பின்பு தாம் உணவு உண்பர் என்கிறது ஆசாரக்கோவை.*

***விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை***
***இவர்க்கூண் கொடுத்தலால் உண்ணாரே என்றும்***
***ஒழுக்கம் பிழையாதவர்***

***(பாடல் - 96)***

*எனச் சுட்டும் ஆசாரக்கோவைப் பாடல் கருத்து இவ்விடம் ஒப்பு நோக்கத்தகும் எனலாம்.*

*ஆருயிர் மருந்து எனும் சொற்றொடர் மணிமேகலை காப்பியத்தில் பல காதைகளில்*

இடம்பெறுவதைக் காணமுடிகிறது. பசிப்பிணி போக்கும் ஆருயிர் மருந்தாம் உணவின் முக்கியத்தை உலகறியச் செய்தல் வேண்டும் என்பதற்காகத் தான் காப்பிய ஆசிரியர் கையாண்டுள்ளார் எனக் கருதலாம்.

***ஆங்கதிற் பெய்த ஆருயிர் மருந்து***
***- மணி.கா.11, 48***

***தகன் சுரைப் பெய்த ஆருயிர் மருந்தவர்***
***- மணி.கா.11, 117***

***ஆருயிர் மருந்தாம் அமுதசுரபி***
***- மணி.கா.12, 114***

***ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென***
***- மணி.கா.16, 135***

***ஆருயிர் மருந்தே யந்நாட் டகவியின்***
***- மணி.கா.28, 160***

***ஆருயிர் மருந்தா லகனில் முடியும்***
***- மணி.கா.28, 195***

***அருந்தியோர்க்கெல்லாம் ஆருயிர் மருந்தாங்***
***- மணி.கா.28, 228***

என மணிமேகலைக் காப்பியத்தில் பல இடங்களில் ஆருயிர் மருந்து எனச் சொல் இடம்பெறுகிறது.

## முடிவுரை

மனித உயிர்களுக்கு அடிப்படை ஆதாரம் உணவாகும். மக்கள் தேவர் என இருவருக்கும் பொருந்தும் ஓர் அறமாகப் பசிப்பிணி தீர்த்தல் அமைவதாக அறவணடிகள் மணிமேகலையிடம் எடுத்துரைத்தலைக் காணமுடிகிறது. உயிர்களைக் காக்கும் அருமருந்தாகிய உணவினை வழங்கும் அமுதசுரபியால் மணிகேமலை எங்ஙனம் ஆருயிர் மருந்தாக விளங்கினாள் என்பதை ஆராய்ந்து இவ்வாய்வு வெளிக்கொணர்ந்துள்ளது.

## பார்வை நூல்கள்


1. ஐம்பெருங்காப்பியம் மணிமேகலை- உரையாசிரியன்மார் நாவலர். ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரைவேந்தர் ஔவை சு.துரைச் சாமிப் பிள்ளை
2. அறவிளக்கு கோ.சிவகுருநாதன்
3. திருக்குறள் பரிமேலழகர் உரை
4. தமிழ் இலக்கிய வரலாறு காப்பியம் மற்றும் சங்க இலக்கியம், முனைவர் மு.சந்தானம், முனைவர் அ.ஆனந்தன்

# தமிழ் இலக்கியங்களில் ஐம்படைத் தாலி

**முனைவர் இரா. இராமதிலகம்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
திரவியம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, பெரியகுளம்

இலக்கியங்கள் அந்தந்தக் காலச் சமுதாய பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அன்றைய மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழிபாடுகள் முதலியன குறித்தான செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஐம்படைத் தாலி குறித்து விளக்கமுறைக் கட்டுரையாக இவண் சுருங்கக் காண்போம் .

அணிகலன்களை அணிவது என்பது தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும். அவைகள் நம்பிக்கை, வீரம், அழகுணர்வு முதலியவற்றின் அடிப்படையில் பலவகையாய்ப் பலவடிவாய் அமைந்துள்ளன எனலாம். புலிப்பல் தாலி, ஐம்படைத் தாலி போன்ற தாலி அணியும் வழக்கம் அன்று இருந்துள்ளதனைத் தமிழ் இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது

டாக்டர் உ.வே.சா அவர்கள் தமது மணிமேகலை பதிப்பில், ஐம்படை (ஐம்படைத் தாலி)- காவலாகக் குழந்தைகளின் கழுத்தில் பூட்டுவதோர் ஆபரண விஷேடம்; காத்தற் கடவுளாகிய திருமாலுடைய ஐந்து ஆயுதங்கள் போலப் பொன்னாற்ச் செய்யப்படுதலின் இது இப்பெயர் பெற்றது;[1] என்று அகராதி பகுதியில் குறித்துள்ளார்.

மேலும், நூலினுள் மலர் வனம் புக்க காதைப் பகுதியில், ஐம்படைத்தாலியில் காத்தற் கடவுள் ஆன திருமாலின் சங்கு, சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைப்பது இதனைப் பஞ்சாயுதம் என்றும், ஐந்தாம் நாளில் பிள்ளைகளுக்கு இதை தாரணம் செய்தல் மரபு என்றும் க்ருஹ்யரத்நம் என்னும் வடநூலில் இதற்கு விதி உள்ளதென்று கூறுவர்[2] என்று குறிப்புரை வரைந்துள்ளார்.

இதன் மூலம் காத்தற் கடவுளான திருமாலின் ஐந்து படைகளின் வடிவங்களைத் தாங்கிய தாலியைக் குழந்தைகளுக்குச் சூட்டும் மரபு உண்டு என்பதனை அறியலாம்.

அகநானூற்றில், மாற்றூர் கிழார் மகனார் கொன்றங் கொற்றனார் என்னும் புலவர், முல்லைத் திணையில் தலைமகன் கூற்றாய்ப் பாடிய பாடலில் பொன்னாலாய தாலியினையுடைய என் மகன் என்பதைப், பொன்னுடைத் தாலி யென்மகன்[3] எனச் சுட்டியுள்ளார்.

இங்கு பொன்னுடைத் தாலி என்பதனை ஐம்படைத் தாலியைக் குறித்ததாகக் கொண்டு டாக்டர் மா.இராசமாணிக்கனார், தமது தமிழ் மொழி-இலக்கிய வரலாறு என்னும் நூலில் சங்க காலத் தமிழர் தம் பிள்ளைகளுக்குத் தாலி அணிவித்தல் வழக்கம், அத்தாலி காத்தற் கடவுளாம் திருமாலின் ஐந்து படைகளின் உருவங்களும் பொறிக்கப்பெற்றிருந்தது, அது ஐம்படைத் தாலி எனவும் பெயர் பெற்றது. அதனை ஆண்மகனும் பெண்மகளும் அணிந்திருந்தனர்[4] என்று அதற்குரிய விளக்கத்தினைத் தந்துள்ளார்.

புறநானூற்றில் இடைக்குன்றூர் கிழார் எனும் புலவர் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிப் பாடும்பொழுது, அவன் தாலி களையாத மிக இளம் வயதிலேயே போருக்குச் சென்றதனைச் சுட்டும் முகத்தான் தாலி களைந் தன்று மிலனே பால்விட் டயினியு மின்றயின் றனனே[5] என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதிக்கு இளஞ்சிறார்க்குக் காலிற் கிண்கிணியும், தலையில் குடுமியும், கையில் குறிய வளையும், மார்பில் ஐம்படைத் தாலியும் அணிவதும், பாலுணவளிப்பதும் பண்டைத் தமிழ்ச்

செல்வர் மரபு 6 என்று ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை பொருள் உரைத்துள்ளார்.

டாக்டர் உ.வே.சா இவ்விடத்தும், மணிமேகலையில் ஐம்படைத் தாலிக்குத் தந்த குறிப்புரை போன்றே, தாலி என்பது ஐம்படைத் தாலி என்றும், காத்தற் கடவுளான திருமாலின் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைக்கப்படும் ஒரு வகை ஆபரணம், பிறந்து ஐந்து நாட்களில் பிள்ளைகளுக்கு இதனை அணிவித்தல் மரபு என்றும் கூறுவர்[7] என்றும் குறிப்புரை தந்துள்ளார்.

திணை மாலை நூற்றைம்பதில் கணிமேதாவியார், செல்வமுடையார் தம் சிறார்களுக்குப் பொன்னாலாகிய தாலியைச் (ஐம்படைத் தாலி) செய்வர். முருக்க மலரின் புற இதழாகிய அடிப்பாகமானது பசுமை கலந்த மஞ்சள் நிறமாய் அந்த பொன் தாலி போல் காட்சி அளிக்கின்றது என்று பொன் தாலியியை உவமை நிலையாக வைத்துக் கூறுகிறார்.[8] இங்ஙனம் தமிழர் தம் சிறார்களுக்கு பொன் தாலி (ஐம்படைத் தாலி) அணியும் மரபு குறிப்பிடப்பட்டுள்ளது.

**மணிமேகலையில், பாலகுமாரர்களுக்கு**
**ஐம்படைத் தாலி அணிவித்திருந்த மரபினை**
**சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப[9]**

என மலர் வனம் புக்க காதையிலும்,

**அமளித் துஞ்சு மைப்படைத் தாலிக்**
**குதலைச் செவ்வாய்க் குறுநடைப்**
**புதல்வருக்கு[10]**

எனத் துயில் எழுப்பிய காதையிலும் சுட்டப் பட்டுள்ளன.

பெருங்கதையில் உதயணகுமாரன், நரவணதத்தன் பொன்னாலாகிய தாலியை அணிந்திருந்தமையை, பசும்பொற் பல்படை யிலங்குல கழுத்தினன்[11] என்று சுட்டப்படுகிறது.

கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கன் ஐம்படைத் தாலி அணிந்து இருந்ததை,

**பண்டுவசு தேவன்மக னாகிநில மாதின்**
**படர்களையு மாயனிவ னென்றுதெளி வெய்தத்**
**தண்டுதனு வாள்பணில நேமியெனு நாமத்**
**தன்படைக ளானதிரு ஐம்படைத ரித்தே.[12]**

என்று ஜெயங்கொண்டார் தெளிவுறக் குறிப்பிட்டுள்ளார்.

கோசல நாட்டின் வளத்தை, சிறப்பை, கூறும் பொழுது, தாலி ஐம்படை தழுவு மார்பிடை[13] என்று குழந்தைகள் ஐம்படைத் தாலி அணிந்து இருந்த வழக்கினைக் கம்பரும்,

சுந்தரரர், தம் சிறு பருவத்தில் ஐம்படைத் தாலி அணிந்திருந்ததை,

**நம்பியாரூர் என்றே நாமமுஞ் சாற்றி மிக்க**
**ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி**
**சாத்தி[14]**

என்று சேக்கிழாரும்,

**ஐம்படை மார்பிற் காணேன்[15]**

என்று பரஞ்சோதி முனிவரும் சுட்டியுள்ளனர்.

**எழிலார் திருமார்வுக்கு ஏற்கு மிவையென்று**
**அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு[16]**

என்றும்

**மங்கல ஐம்படையும் தோள்வளையும் குழையும்**
**மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்து இலக[17]**

என்றும்

**நீலநிறத் தழுகாரைப் படையின் நடுவே**
**நின் கணியவாய முதம் இற்று முறிந்துவிழ[17]**

என்றும், பெரியாழ்வார் கண்ணனுக்கு ஐம்படைத் தாலி அணிவித்திருந்ததனை நயம்பட எடுத்தியம்பியுள்ளார்.

இதுகாறும் கண்டதன் வழி, சங்க இலக்கியங்கள் தாலி, பொன் தாலி என்று குறிப்பிட, மணிமேகலையும் பின்வந்த இலக்கியங்களும் ஐம்படைத் தாலி என்று குறிப்பிட்டுள்ளன என்பதனையும்; சமய வேறுபாடின்றி தம் பிள்ளைகளுக்குப் பொன் தாலி-ஐம்படைத் தாலி காப்பணியாக அணிவிக்கும் வழக்கம், தமிழர்களுக்கு இருந்து வந்துள்ளதனையும் அறிய முடிகின்றது.

## குறிப்புகள்


1. டாக்டர். உ. வே.சா . பதிப்பு, மணிமேகலை, ப.429
2. மேலது, பக்.39-40
3. கழக வெளியீடு, அகநானூறு, களிற்றியானை நிரை, 54: 18
4. இராசமாணிக்கனார். மா., தமிழ் மொழி - இலக்கிய வரலாறு, ப.227
5. கழக வெளியீடு, துரைசாமிப் பிள்ளை. சு. (உ.ஆ) புறநானூறு - 1, 77: 7

6. மேலது, ப.195
7. டாக்டர். உ. வே.சா . பதிப்பு, புறநானூறு மூலமும் பழைய உரையும், ப.182
8. கழக வெளியீடு, நடராசபிள்ளை, அ. (உ. ஆ.), திணைமாலை நூற்றைம்பது , ப-66
9. டாக்டர். உ. வே.சா . பதிப்பு, மணிமேகலை, 3: 138
10. மேலது, 7 : 56
11. டாக்டர். உ. வே.சா . பதிப்பு, பெருங்கதை, பகுதி -4, 5 : 8 : 29
12. கலிங்கத்துப் பரணி, 240
13. கம்பன் அறநிலை பதிப்பு, கம்ப ராமாயணம், பால காண்டம், பகுதி -1 , நா. ப.89
14. வர்த்தமானன் பதிப்பு, பெரிய புராணம், முதல் தொகுதி, த. பு.150
15. டாக்டர். உ. வே.சா . பதிப்பு, புறநானூறு மூலமும் உரையும், ப.182
16. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ. (ப. ஆ.) நாலாயிர திவ்யப் பிரபந்தம், பெரியாழ்வார் திருமொழி, 1-3-5 .
17. மேலது, பெரியாழ்வார் திருமொழி, 1-5-10
18. மேலது, பெரியாழ்வார் திருமொழி, 1-5-9

# சிலப்பதிகாரம் காட்டும் மதுரை

***முனைவர் மா. உமா மகேஸ்வரி***
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
அருள் ஆனந்தர்கல்லூரி, கருமாத்தூர், மதுரை

## முன்னுரை

சங்க காலத்திலும், காப்பிய கால கட்டத்திலும் மதுரை எவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை சங்க இலக்கியங்களில் மதுரைக் காஞ்சியும், காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மதுரையை ஒரு வணிக நகரமாகக் காட்சிப் படுத்துகின்றன. சிலப்பதிகாரத்தை ஒரு வணிக காப்பியம் எனலாம். வணிகக் குலத்தைச் சேர்ந்த கோவலன், கண்ணகி ஆகிய இருவரின் கதையைச் சொல்வதற்காக எழுந்த காப்பியம் சிலப்பதிகாரமாகும்.

## மதுரையின் தோற்றுவாய்

பாண்டியரின் தலைநகராக இருந்தது தென்மதுரை. முதல் தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டது. பின்னர், கடல்கோளால் அழிந்துபட, அடுத்து "கபாடபுரம்" தலைநகராகக் கொண்டு இரண்டாம் தமிழ்ச்சங்கம் நடைபெற்றது. இதுவும் கடல் கோளால் அழிந்துபட மூன்றாம் தமிழ்ச்சங்கமும் பின்னர் நான்காம் தமிழ்ச் சங்கமும் மதுரையில் உள்ளது.

மருத மரங்கள் மிகுதியாக இருந்ததால் "மருதத்துறை" என்பது மருவி "மதுரை" ஆனது என்ற ஒரு கருத்தும், இந்துக் கடவுள் சிவனின் தலையில் இருந்து பொழிந்த மதுரத்தால் (இனிப்பு) என மற்றொரு கருத்தும் உள்ளது. தமிழ்பிராமி கல்வெட்டு "மதிரை" எனக் குறிக்கிறது. இதற்கு "மதிலால்" சூழப்பட்ட நகரம் என்று பொருள். பூலோக கைலாயம், கடம்பவனம், கன்னியாபுரம் போன்ற புராண பெயர்களைக் கொண்டது. சுமார் 2500 ஆண்டுகள் பழமையானது. மதுரை நகரின் சிறப்பம்சமாகப் பேசப்பட்டது அதன் நகரமைப்பு ஆகும். வானளாவிய மாடங்கள், கோட்டைகள், மதில்கள், அகழிகளைக் கொண்டதாகவும், மிகுந்த பாதுகாப்பு உடையதாகவும் அமைந்திருந்தது. மதுரைக் கோயிலை மையமாக வைத்து அகன்ற வீதிகளும், தெருக்களும் இருந்துள்ளது. வையைக் கரையில் தோன்றியமையாலே மதுரையம்பதியும் சிறப்புற்றது. மதுரையின் சிறப்புக்களை தமிழ் இலக்கியங்கள் மிகச் சிறப்பாக மொழிகின்றன.

**'தமிழ் கெழு கூடல்'[1]**

***(புறம்:58:13)***

என்று புறநானூறும்

**'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும்'[2]**

***(சிறுபா:66-67)***

என்று சிறுபாணாற்றுப்படையும்,

**'தென்தமிழ் நாட்டுத் தீதுதீர் மதுரை
மதுரைத் தென்றல்'[3]**

***(சிலம்பு: 13:132)***

என்று சிலம்பும்

**'தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்'[4]**

***(மணி: 25:143)***

என்று மணிமேகலையும் சுட்டுகின்றன. இத்தகு நகரம் உருவாகக் காரணமாமாயிருந்த வையையைப் பற்றி நம் பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமின்றி திரைப்படப் பாடல்களும் அதன் சிறப்பினை வெகுவாக எடுத்து மொழிகின்றன. அத்தகு சிறப்புடையதாகத் திகழ்வது வையையாகும். இதனைத்

**'தமிழ் வையைத் தண்ணம் புனல்'[5]**

***(பரி:6)***

என்று பரிபாடல் சுட்டுகிறது.

**'நீரோடும் வைகையிலே'**
**'வைகைக் கரைக் காற்றே நில்லு'**
**'வைகை நதி ஓரம்'**
**'தென்மதுரை வைகை நதி'**

என்று திரைப்படப் பாடல்களும் வையையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**அங்காடி வீதி**

மதுரை நகர அங்காடிகளில் வாணிபம் சிறப்பாக நடைபெற்றதை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. கோவலன் மதுரை நகரைச் சுற்றி வரும் போது, அந்நகரின் வணிகச் சிறப்பைக் கண்டு களிக்கிறான். பின்னர் மதுரை நகரின் கடைத்தெருக்கள் பற்றிக் கூறும் போது,

> **'வையமும் பாண்டிலும் மணித்தேர்க் கொடுஞ்சியும்,**
> **மெய்புகு கவசமும் வீழ்மணித் தோட்டியும்,**
> **அதள்புனை அரணமும் அரியா யோகமும்**
> **வளைதரு குழியமும் வால்வெண் கவரியும்**
> **ஏனப் படமும் கிடுகின் படமும்**
> **கானப் படமும் காழூன்று கடிகையும்**
> **செம்பிற் செய்நவும் கஞ்சத் தொழிலவும்**
> **வம்பின் முடிநவும் மாலையிற் புனைநவும்**
> **வேதினத் துப்பவும் கோடுகடை தொழிலவும்**
> **புகையவும் சாந்தவும் பூவிற் புனைநவும்**
> **வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய**
> **அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்'[6]**
> **-சிலம்பு - ஊர்காண். அடி 168-179.**

என்கிறார் இளங்கோவடிகள். அதாவது இரண்டு சக்கரங்களுடைய வண்டி, அழகிய தேர்மொட்டு, கவசம், அங்குசம், தோற்கைத் தளம், அரைப்பட்டிகை, வளைதடி சாமரை, மூன்று வகைக் கேடயங்கள், முத்துக்கோல்கள், செப்புப் பொருட்கள், வெண்கலப் பொருட்கள், கயிற்றால் முடிந்து செய்யப்பட்டப் பொருட்கள், கிடையால் புனையப்பட்ட மாலை, ஈர்வாள், தந்தத்தைக் கடைந்து செய்யப்பட்டவை, வாசனைப் புகைக்குரியவை, மயிர்ச்சாந்து செய் வதற்குரிய பொருட்கள், பூ மாலைகள் முதலியவை அங்காடி வீதியில் விற்கப்பட்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

**நவமணி வீதி**

சங்க காலத்தில் மதுரை வெளி நாட்டுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்ததை சிலப்பதிகாரம், பட்டினப்பாலை ஆகிய இலக்கியங்கள் குறிக்கின்றன. பெரிப்ளஸ் என்னும் நூலின் ஆசிரியர், மதுரைக்கு இறக்குமதியான பொருள்களுள் செம்பு, ஈயம், வெள்ளீயம் ஆகிய உலோகங்களும் அடங்கும் என்று குறிக்கின்றார். மதுரை அங்காடியில் செம்பை நிறுத்து வாங்கிக் கொள்பவரை மதுரைக்காஞ்சி குறிக்கின்றது. இங்கு செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப் பெற்ற பொருள்கள் மிகுதியாகக் கிடந்தன என்று சிலம்பு குறிக்கின்றது. செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் வேலை செய்பவர்கள் வாழ்வு முறைகள் தரப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் அனைத்து உலோகங்களும் பொன் என்றே குறிக்கப்பட்டன. செப்புத்திருமேனிகள் என்று சொல்லும் போது செம்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட திருவுருவங்களும் இதில் அடங்கும்.

பொற்சிலம்பை விற்க வேண்டிய சூழலில் இருந்த கோவலன் பொன்கடை வீதியைச் சுற்றிப் பார்க்கிறான். நான்கு வகைப் பொன்னும் மதுரையில் கிடைத்ததாக அறிய முடிகிறது. கோவலன் நகரைச் சுற்றிப் பார்க்கும் போது நவமணிகள் விற்கும் கடைவீதிகளைச் சுற்றி வருவதாகக் கூறப்பட்டுள்ளது. கண்ணகியின் பொற்சிலம்பை விற்கும் நோக்கில் கோவலன் இருந்ததால் பொன் மற்றும் நவமணிகள் விற்கப்படும் வீதியைச் சுற்றிப் பார்ப்பதாக இளங்கோவடிகள் படைத்து, அதன் வழியாக மதுரை நகரின் பொன் மற்றும் நவமணி வணிகம் குறித்து விளக்கிச் செல்கிறார். மதுரையில் ஒன்பது வகையான மணிகளும் கிடைத்ததாகத் தெரிகிறது.

> **'காக பாதமும் களங்கமும் விந்துவும்**
> **ஏகையும் நீங்கி இயல்பிற் குன்றா**
> **நூலவர் நொடிந்த நுழை நுண்கோடி**
> **நால்வகை வருணத்து நலம்கேழ் ஒளியவும்**
> **ஏகையும் மாலையும் இருளொடு துறந்த**
> **பாசார் மேனிப் பசும் கதிர் ஒளியவும்**
> **பதுமமும் நீலமும் விந்தமும் படிதமும்**
> **விதிமுறை பிழையா விளங்கிய சாதியும்**
> **பூச உருவில் பொலந்தெளித் தனையவும்**
> **தீதறு கதிர் ஒளித் தெண்மட்டு உருவமும்**
> **இருள் தெளித் தனையவும் இருவேறு உருவவும்**
> **ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்**

***இலங்கு கதிர் விடுஉம் நலம் கெழுமணிகளும்***
***காற்றினும் மண்ணினும் கல்லினும் நீரினும்***
***தோற்றிய குற்றம்துகள் அறத் துணிந்தவும்***
***சந்திர குருவே அங்காரகன் என***
***வந்த நிர்மைய வட்டத் தொகுதியும்***
***கருப்பத் துளையவும் கல்லிடை முடங்கலும்***
***திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்***
***வகைதெரி மாக்கள் தொகைபெற்று ஓங்கிப்***
***பகைதெறல் அறியாப் பயம்கெழு வீதியும்'[7]***

***- சிலம்பு. ஊர். அடி 180-200***

இவ்வாறு மதுரையில் நவமணிகள் விற்கப்படும் வீதிகளில் கிடைத்த வைரங்கள். மரகதங்கள், நான்கு வகையான மாணிக்கக் கற்கள், புருடராகக் கற்கள், வைடூரியங்கள், நீலமணிகள், கோமேதகக் கற்கள், முத்துக்கள், பவளங்கள் ஆகிய நவமணிகளைப் பற்றிச் சுட்டப்பட்டுள்ளது.

***சாதரூபம் கிளிச்சிறை ஆடகம்***
***சாம்பூநதம் என ஓங்கிய கொள்கையின்***
***பொலம் தெரிமாக்கள் கலங்க அருர்ஓழித்து - ஆங்கு***
***இலங்கு கொடி எடுக்கும் நலம் கிளர்வீதியும்[8]***

***-சிலம்பு. ஊர். அடி 201-204***

என நான்கு வகைப் பொன் பற்றிக் கூறுகிறது. நான்கு வகைப் பொன் என்பது சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் ஆகியவை ஆகும். சங்க காலத்திலிருந்தே மதுரையில் பொன் வணிகம் சிறப்புற்று இருந்துள்ளது. தற்போதைய மதுரையிலும் நகைக்கடைவீதி என்பது பொன் வணிகத்துக்கென்று இயங்கும் தனிப்பட்ட பகுதியாகும். கோவலன் கண்டு வந்த கடைவீதி இன்றைய நகைக்கடைத் தெருவாக இருக்கலாம்.

### துணிக்கடைவீதி

பல்வேறு ஆடைகள் மதுரையில் விற்கப்பட்ட செய்திகளை சிலப்பதிகாரம் தருகின்றது. ஆடைகள் விற்கப்பட்ட அறுவைக்கடைவீதி பற்றி,

***'நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்***
***பால்வகை தெரியாப் பல்நூறு அடுக்கத்து***
***நறுமடி செறிந்த அறுவை வீதியும்'[9]***

***- சிலம்பு. ஊர். அடி 205-207***

பருத்தி நூலினாலும், விலங்குகளின் மயிரினாலும், நுண்மையான பட்டு நூலாலும், என்னென்ன வகையென்றே தெரியாத நிலையில் நுண்மையான வேலைப்பாடுகள் அமைந்த துணிவகைகள் பலநூறு அடுக்குகளாக வைக்கப் பட்டிருந்ததாகச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

### கூல வீதி

பல வகைக் கூலங்களும் மிளகும் விற்கப்பட்ட கடைத்தெருவைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

***'நிறைக்கோல் துலாத்தர் பறைக்கண் பராரையர்***
***அம்பண அளவையர் எங்கனும் திரிதரக்***
***காலம் அன்றியும் கரும்கறித மூடையொடு***
***கூலம் குவித்த கூலவீதியும்'***

***-சிலம்பு. ஊர். அடி.208-211***

எனும் வரிகளில் நிறுக்கும் கோலாகிய துலாம் எனப்படும் தராசினை உடையவர்கள், முகந்தளக்கும் அளவையாகிய பறை எனும் அளவையை உடையவர்கள், மரக்கால் எனும் அளவுக் கருவியை உடையவர்கள், எல்லா இடங்களிலும் பொருளை வாங்க மற்றும் விற்கத் திரிந்து கொண்டிருப்பவர்கள், காலமல்லாத எல்லாக் காலங்களிலும் மிளகு மூட்டைகளுடன் பதினெண் வகைக் கூலங்களையும் விற்பனை செய்யக் குவிந்துள்ள கூலவீதியும் என்று பரபரப்பான கூல வீதியைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

### நாளங்காடி - அல்லங்காடி

சிலப்பதிகாரத்தில் கோவலன் பகற்பொழுதில் கடைத்தெருவைச் சுற்றிப் பார்ப்பதாகப் படைக் கப்பட்டுள்ளதால் அல்லங்காடி எனப்படும் இரவு நேரக் கடைகள் பற்றிய குறிப்புகள் தரப்படவில்லை. சிலம்பில் சுட்டப்பெறும் கடைத்தெருக்கள் நாளங்காடி எனப்படும் பகல்நேரக் கடைகளைப் பற்றியதாகவே கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் கூல வீதியைப் பற்றிக் குறிப்பிடும் போது,

***'காலம் அன்றியும் கரும்கறித மூடையொடு***
***கூலம் குவித்த கூல வீதியும்'[10]***

***-சிலம்பு. ஊர். அடி 210-211***

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

காலம் அன்றி என்பது பகல், இரவு என்கிற கால வேறுபாடின்றி கூல வீதியில் வணிகம் நடைபெற்றதைக் குறிக்கிறது. எனவே இரவு நேரத்திலும் மதுரையில் கடைவீதிகள் இயங்கியதை இளங்கோவடிகள் சுட்டுகிறார். இதனால் தான் மதுரை ‘தூங்கா நகரம்’ என பெயர் பெற்றிருக்கலாம்

**முடிவுரை**

மதுரை மக்களின் வாழ்வியல் முறைகள் வியக்கத்தக்க வகையில் இருந்தன. தமிழர் குலத் தொன்மை மற்றும் பெருமை ஆகியவற்றைப் பறைசாற்றும் மதுரை மாநகர் ஒட்டுமொத்த தமிழகத்துக்கே மணிமகுடம் என்று கூறலாம். சிலப்பதிகாரத்தின் மூலம் மதுரை ஒரு வணிக நகரமாக சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதை அறிந்து கொள்ள முடிகின்றது. மதுரையின் சிறப்பையும், நான்கு வகைத் தெருக்களையும், அங்கு இருந்த கடை வீதிகளையும் நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. புறநானூறு 58-13
2. சிறுபா -66 -67
3. சிலம்பு - 13 - 132
4. மணிமேகலை 25 - 143
5. பரிபாடல் - 6
6. சிலம்பு ஊர்காண் - 168 -179
7. மேலது - 180 - 200
8. மேலது - 201 - 204
9. மேலது - 205 -507
10. மேலது - 210 -511

# சிறுபாணாற்றுப் படையில் கொடைச்சிறப்பு

***முனைவர் சா. கணேசன்***
உதவிப் பேராசிரியர்
செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசை கல்லூரி, மதுரை

***முன்னுரை***

*சங்க இலக்கியங்களில் அதாவது பத்துப் பாட்டில் சிறிய யாழைக் கொண்டு இசை பாடிய புலவர்களினால் சிறுபாணாற்றுப்படை என்னும் பெயரினைப் பெற்ற நூல். பாணனின் பரிசில் பெறும் முறை, மன்னனின் கொடைத்தன்மை, வள்ளலின் கொடைத்தன்மை போன்றனவற்றை ஆய்வது இக்கட்டுரையாகும். இந்நூல் 269 அடிகளால் ஆன நூலாகும். ஓய்மாநாட்டு நல்லியக் கோடானை நல்லூர் நத்தத்தனார் பாடிய நூலாகும். இந்நூல் ஒரு சுற்றுலா சென்று இப்புலவர் இந்நூலை படைத்திருக்கிறார். சேர, சோழ, பாண்டியர், குறுநில மன்னர்களின் வரலாற்றுச் செய்திகளையும எடுத்தியம்புகிறது. இக்கட்டுரையில் பாணர்களின் செயல்கள், மன்னனின் கொடைத்தன்மை போன்றவற்றை ஆராய்வதாக அமைகிறது.*

***பாணர் மரபு***

*பண்டைக் காலத்தில் பண் என்னும் சொல்லின் அடிப்படையில் பிறந்ததுதான் ''பாண்'' என்ற சொல். இசைத்தமிழைப் போற்றி வளர்த்தவர்கள் ''பாணர்'' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பல வகைப்படுவர். யாழ்ப்பாணர் சிறுபாணர், பெரும்பாணர் என இரு வகைப்படுவர். சிறிய யாழை இசைத்துப் பாடுவோர் ''சிறுபாணர்'' என்றும் பெரிய யாழை இசைத்துப் பாடுவோர் பெரும்பாணர்[1] என்றுஅழைப்பர்(இரா.மோகன், பத்துப்பாட்டு உரை, பகுதி-1, ப.135) பாணரை ஆற்றுப்படுத்துவது பாண் ஆற்றுப்படை, பாணருக்கு வழிகூறி அவ்வழியிலே போகவிடுவது என்பதே இதன் பொருள். பாண்-யாழ், பாண் வாசிப்பவர் பாணர். பாண் வாசிக்கும் பெண் பாணினி, பாண் - இசை, பண்ணைப் பாடுவோர் பாணர் என்றும் கூறுவர். பழந்தமிழ் நாட்டிலே பாணர் என்று ஒரு வகுப்பினர் இருந்தனர். பாண் வாசிக்கும் தொழில் காரணமாக இவர்களைப் பாணர் என்றழைத்தனர்.[2] (சாமி.சிதம்பரனார், தமிழர் வாழ்வும் பண்பாடும், ப.219) பாணர் மரபு என்பது தொல்காப்பியம் காலந்தொட்டு இருந்து வருகின்றதென்பதை*

> **'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
> **பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறிஇச்**
> **சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்'**
> ***(தொல்.பொருள்.புறத்.36)***

*என்று தொல்காப்பியர் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் குறித்த பதிவினை எடுத்தியம்புகிறது. புலவர்களை ஆற்றுப்படுத்தும்போ ''பாணருக்குப் பாணரும்,கூத்தருக்குக்கூத்தரும், பொருநருக்குப் பொருநரும், விறலிக்கு விறலியும் வழிகாட்டுவது வழக்கம்''[3] (கா.சுப்பிரமணியன், சங்ககாலக் சமுதாயம், ப.72).*

*பாணர் மரபு, ''பாண் - பாட்டு பாணர் - பாடுவோர். இவர் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பலராவர். இசைப் பாணர், மிடற்றுப் பாடல் பாடுவதில் வல்லவர், ''யாழ் வாசித்தல் பாடுவோர் யாழ்ப்பாணர் மண்டை என்னும் பெயர் கொண்ட உண்கலத்தை வைத்திருப்பவர் மண்டைப்பாணராவர். யாழ்ப்பாணர் சிறிய யாழை இசைத்துப் பாடுவோரும் பெரிய யாழை இசைத்துப் பாடுவோரும் என இருவகையினராவர்[4] (மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.50) ஆக பாணர் மரபில் இருவகை இருந்துள்ளனர். ஆனால்*

அவர்கள் பிற்காலத்தில் ''சாதித் தோற்றக் காலத்தில் இப்பாணர் ''இழிசனர்'' ஆயினர். கணவன் மனைவி ஊடலைத் தீர்க்க உதவினர். பரத்தையர் தொழிலுக்கு உதவினர். பிரிந்தவரைக் கூட்டி வைப்பது அவர்களது தொழிலாகிவிட்டது[5] என்று கா.சுப்பிரமணியன் (சங்ககாலச் சமுதாயம், ப.73) குறிப்பிடுகிறார். தவறான புரிதலே பாணர்களின் மீது சுமத்தும் பலியாகிவிட்டது எனலாம்.

### விறலியின் அழகு

விறலியின் வர்ணனை மிகவும் நேர்த்தியாக வர்ணிக்கும் புலவர் ''இவர்கள் ஆடல் பாடல் ஆகியவற்றில் சிறந்த மகளிர் கூத்தர் பொருநர் போல் திறமைபெற்ற கலைஞர் போர்ப் பாடல்கள் பாடினர் பாசறைகளுக்குச் சென்றனர். விறலியர் அழகினை, கேசாதிபாத வருணனையாகவும் வேறு வகையிலுமாகப் பத்துப்பாட்டுப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன''[6] (மேலது, ப.74) இதனை

***''மணிவயின் கலாபம், பரப்பி, பலஉடன்***
***மயில், மயிற் குளிக்கும் சாயல் சாஅய்***
***உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ,***
***வயங்குஇழை உலறிய அடியின் அடிதொடர்ந்து,***
***ஈர்ந்துநிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின்***
***சேர்ந்து உடன் செறிந்த குறங்கின், குறங்கு என***
***மால்வரை ஒழுகிய வாழை வாழைப்***
***பூஎனப் பொலிந்த ஓதி ஓதி***
. . . . . . . . . .
. . . . . . . . . . .
***குல்லைஅம் புறவில் குவிமுகை அவிழ்ந்த***
***முல்லை சான்ற கற்பின் மெல்இயல்***
***மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்''***

***(சிறுபாண்: 15.31)***

என்று விறலியர் வர்ணிக்கப்படுகிறாள். மேற்சொல்லப்பட்ட அடிகளில் விறலியர் கற்பில் சிறந்தவளாக இருந்துள்ளது இதன் சிறப்பு எனலாம்.

### வஞ்சியின் சிறப்பு

வஞ்சி மாநகரின் சிறப்பினைக் கூறும் போது சிறுபாணாற்றுப்படை காலத்தில் குட்டுவன் என்ற மன்னன் ஆண்டான் என்பதும் அவனிடத்தில் பரிசில் பெறலாம். மேலும் அவன் வடபுல சென்று இமயத்தில வில் பொறியை நட்டவன் என்றும் கூறப்படுகிறது. இதனை,

***''குடபுலம் காவலர் மருமான் ஒன்னார்***
***வடபுலம் இமயத்து, வாங்குவிற் பொறித்த***
***எழுஉறழ் திணிதோள், இயல்தேர்க் குட்டுவன்''***

***(சிறுபாண், அடிகள்:47-49)***

என்று வஞ்சி மாநகர் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. மிளகு, மஞ்சள், பலா மரம் போன்றவை அங்கு செழித்து இருந்துள்ளதனை பதிவிடும் புலவர் அவனை விட என்று மேலும் ஒரு படிசென்று தமிழ் நிலைபெற்ற மதுரையம்பதி சென்றால் கிடைப்பதனை புலவர் உமணர்கள் மாட்டுவண்டி ஓட்டிச்சென்றதும் குழந்தையோடு குரங்குகள் கிளுகிளுப்பைக் கொண்டு விளையாடுவதும், கொற்கை கோமான் என்றும் இதனை,

***''தென்புலம் காவலர் மருமான் ஒன்னார்***
***மண்மாறு கொண்ட, மாலை வெண்குடை***
***கண்ஆர் கண்ணி, கருந்தேர்ச் செழியன்***
***தமிழ்நிலை பெற்ற, தாங்குஅரு மரபின்***
***மகிழ்நனை, மறுகின் மதுரையும் வறிதே''***

***(சிறுபாண்:63-67)***

என்று மதுரையின் சிறப்பும் அங்கு மன்னனாக ஆட்சி செலுத்தியவன் பெரிய படையை உடைய செழியன் என்றும் தென்புலத்தில் தமிழ்ச் சங்கம் நிலைபெற்ற இடம் மதுரை என்பதனை பதிவிடும் புலவர் அவனை விடவும் என்று கூறி உறந்தை வருகிறார். உறந்தை என்பது உறையூரைக் குறிக்கும். இவ்வூர் திருச்சியில் உள்ளது. காவிரி பாய்வதால் சோழ நாட்டில் வயல்களில் தாமரை பூத்திருக்கிறது. ஆகவே இயற்கையோடு பொழில்களில் வண்டுகள் பூக்களில் முரல்கிறது. அப்படி வளப்பமுடைய குணப்புலக் காவலன் என்றது. இதனை,

***''குணபுலம் காவலர் மருமான் ஒன்னார்***
***ஓங்குஎயிர் கதவம் உருமுச்சுவல் சொறியும்***
***தூங்குஎயில் எறிந்த தொடிவிலங்கு தடக்கை***
***நாடா நல்இசை, நல்தேர்ச் செம்பியன்''***

***(சிறுபாண்:79-82)***

எனச் சோழனின் குணபுலம் எடுத்தோதும் புலவர், சோழ நாட்டைத் தொடர்ந்து குறுநில வள்ளல்கள் பற்றிய செய்தியைத் தருகிறார். கடையெழு வள்ளல்களின் கொடைத் தன்மையை குறிப்பிடுகிறார். கான மயிலுக்கு ஆடை நல்கிய ஆவியர் குடியில் பிறந்த பேகனைக் கூறும்போது

***"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய***
***அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்***
***பெருங்கல் நாடன் பேகனும்''***

***(சிறுபாண்: 85-87)***

என்றும், முல்லைக்கு தன் தேரினை கொடையாகக் கொடுத்தப் பாரியும்,

***"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய***
***. . . . . . . . . .***
***மறம்பின் கோமான் பாரியும்''***

***(சிறுபாண்: 89-91)***

என்றும், காரி என்பவன் குதிரை வழங்கியவன் என்பதனை,

***"வால்உளைப் புரவியொடு வையகம் மருள***
***. . . . . . . . . . . . . . . . . . .***
***கழல்தொழத் தடக்கை காரியும்''***

***(சிறுபாண்: 92-95)***

என்றும், நாகம் நல்கிய ஆடையை ஆலமர்: செல்வன் என்று கூறப்படும் இவனுக்கு ஒருவன் ஆடை வழங்கியனை,

***"நீல நாகம் நல்கிய கலிங்கம்***
***ஆல்அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த***
***சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்,***
***ஆர்வ நன்மொழி ஆயும்''***

***(சிறுபாண்:96-99)***

என்றும் மலைச்சாரலில் அரிதான நெல்லிக் கனியை ஔவைக்கு வழங்கியதனை,

***"கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி***
***அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த***
***. . . . . . . . . . . . . . . . . .***
***அரவக் கடல்தானை அதிகனும்''***

***(சிறுபாண். 100-103)***

என்றும், விறலியின் வீட்டிற்குத் தேவையான நல்ல பாத்திரத்தினை வழங்கியவன் என்று நள்ளியை,

***"நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்***
***. . . . . . . . . . . .***
***நளிமலை நாடன் நள்ளியும்''***

***(சிறுபாண்:104-107)***

என்றும், கூத்தர்களுக்கு நாடுகளையும் கொடையாகக் கொடுத்துள்ளதனை,

***"குறும்பொறை நல்நாடு கோடியர்க்கு ஈந்த***
***காரிக் குதிரைக் காரியொடு மலைந்த***
***ஓரிக் குதிரை ஓரியும்''***

***(சிறுபாண் - 109-111)***

என்று கடையெழு வள்ளல்கள் கொடுத்தப் பரிசாகும். புலவர்கள் மெய்மறந்து வருவது கூறல் பற்றிய நேரடியான விளக்கங்கள் இல்லை. வீரநிலைக் காலத்தில் செய்யுள் என்பது அறிவு நிலையான கலையாகும். வருவது கூறுவதும் குறி சொல்வதுமான கூற்றுக்கள் முற்காலத்திற்கு உரியன. அவை செய்யுளின் முந்தைய வரலாற்றைக் காட்டுகின்றன. ஆனால் அடிக்கடி இந்த அடைமொழியைப் பாணர்க்கும் கூத்தர்க்கும் பயன்படுத்துதலும், அதன்வழி அவர்கள் மரபுவழியாக வருவது உரைத்தலோடு தொடர்பு பெற்றிருத்தலும் ஓர் எச்சமான செயல் என விவாதிக்க முடியும் என்று க.கைலாசபதி கூறுவதாகக் குறிப்பிடுகிறார்.[7] *(சங்க இலக்கியக் கொள்கை, கு.வெ. பால சுப்ரமணியன், பக்.29-30)*

புலவர்கள் வருவதை அறிந்து கூறுதல் மரபாக இருந்துள்ளது. வள்ளலிடத்தில் செல்லும் போது பாடல் பாடி பொருளைப்பெற்றனர்.

**நல்லியக் கோடனின் கொடை**

**ஓவியர் குடியில் பிறந்தவனும் களிற்றின் தழும்பு இருந்த கழல் அணிந்தவன், மழை போன்ற தடக்கை உடையவன் என்று வருணிக்கப்படும் நல்லியக் கோடன் நல்ல இலங்கை என்னும் நகரை ஆண்ட மன்னர் பலருள்ளும் சிறந்தவன் என்பர்.**

***". . . . . . . . . . . . . . பேர் இசை***
***நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு''***

***(சிறுபாண், 125-126)***

என்று புகழப்படுகிறார். பாணர்களின் வருத்தம் குறிப்பிடும்போது புலவர் அவர்களின் உண்மை நிலையினையும், உணவிற்கு அவர்கள் குப்பை வேலைக்கீரையை சமைத்து உப்பில்லாமல் கதவடைத்து உண்டனை,

***“வளைக்கை கிணைமகள் வள்உகிர்க் குறைந்த***
***குப்பை வேலை உப்புஇலி வெந்ததை***
***மடவோர் காட்சி நாணி, கடைஅடைத்து’’***

***(சிறுபாண்:136-138)***

என்று அவர்களின் வறுமைநிலை பேசப்படுகிறது. மேற்கூறிய மூவேந்தர்கள், வள்ளல்கள் விட நல்லியக்கோடனிடம் சென்றால் வருத்தம் தீறும் என்பதனை எயிற்பட்டினத்தில் தேறல் வேலூர் வளமும் இன்புளி வெண்சோறும், ஆமூரில் மாண்அரிசி அமலை வெண்சோறும் நண்டு குழம்பும் கிடைக்கும் என்றும்,

***“காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ***
***பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,***
***காளரி யூட்டிய கவர்கணைத் தூணிப்***
***பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்’’***

***(சிறுபாண் 236-239)***

என்றும்,

***“விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி***
***ஆனா விருப்பின், தான் நின்று ஊட்டி’’***

***(சிறுபாண்: 244-245)***

என்றும்,

***“நயவர் பாணர் புண்கண் தீர்த்தபின்***
***வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு’’***

***(சிறுபாண்:248-249)***

***கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி***
***ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு***
***. . . . . . . . . . . . . . . . . . . . . .***
***. . . . . . . . . . . . . . . . . . . . . .***
***வான்முகப் பாண்டில் வலவனொடு’’***

***(சிறுபாண்:257-260)***

என்று நல்லியக்கோடன் பாணர்களுக்கு பரிசில் வழங்கினான்.

## முடிவுரை

சிறுபாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் மாவிலிங்கையை தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்திய நல்லியக்கோடனை மிகவும் சிறப்பாகப் படைத்துக் காட்டுகிறார். இவர் பாணர்களின் ஏழ்மை நிலையும் தேர், குதிரை, எருது போன்றவைகளையும் பொற்கலத்தில் வேண்டிய உணவினையும் அளித்துள்ளான். மேலும் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களின் சிறப்பையும்விட, குறுநிலமன்னர்கள் வழங்கிய கொடையைக் காட்டிலும் இவன் கொடுத்தக் கொடைத்தன்மையை உயர்த்திக் காட்டியுள்ளார். இதில் இருந்து இப்புலவர் சுற்றுலா செல்வதைப் போல பல்வேறு இடங்களுக்கு நம்மை அழைத்துச் செல்வதில் இருந்து இவர் காலத்தில் பல்வேறு ஊர்களுக்கு இவர் சென்று அங்கு கிடைக்கும் பொருளினை மிகவும் அழகாக தன்னுடைய நூலில் பதிவு செய்து, நல்லியக்கோடனின் கொடைத்தன்மையை மிகுந்து புகழ்ந்து கூறியுள்ளார் என்பதனையும் தாண்டி வள்ளல் தன்மையை கொடைச்சிறப்பை மிகவும் நுட்பமாக உணவின் தன்மையையும், உணவின் தேவைக் குறித்தும் எடுத்துக்காட்டுகிறார்.

# முத்தாரம் கூறும் காதை

***முனைவர் பூ. காயத்ரி***
ஆய்வக உதவியாளர்
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு

***ஆய்வுச் சுருக்கம்***
*இக்கட்டுரை முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன*
*1.வையைப் பால் காதை*
*2.பொருநைப் பால் காதை*
*3.காவிரிப் பால் காதை*
*4.பாலாற்றுப் பால் காதை*

**முன்னுரை**

காப்பிய அணிகளால் அழகுற விளங்கும் கன்னித் தமிழுக்கு மேலும் அழகு சேர்க்க "முத்தாரம்" என்னும் முத்தமிழ்க் காப்பியத்தைப் படைத்துள்ளார் மி.காசுமான் அவர்கள். மி.காசுமான் அவர்களின் முத்தாரம் காப்பியம் கூறும் கதைகளின் சுருக்கத்தை இவ்வாய்வு கட்டுரையின் வாயிலாகத் தெளிவாகக் காணலாம்.

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காப்பியம் ஆகும். முத்தாரம் காப்பியம் அமைந்துள்ள போக்கும் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட மணிமேகலைப் போன்று விரிவடைந்துள்ளது. இனி முத்தாரம் கூறும் காதைகள் பற்றி விரிவாகக் காணலாம்.

**வையைப் பால் காதை**

அழகப்பன் மாதவனோடு பசுமலை நோக்கி வந்து கொண்டிருந்த போது மதுரையில் இருந்து வருவோரைப் பார்த்து மதுரையின் நலம் கேட்டறிந்தான். அதன் பின் வையை நோக்கி புகழ்ந்தவரேஅறக்கருத்துக்களை மாதவனிடம் கூறி மகிழ்ந்தான்.

> **"வாழிய வையை! வாழிய வையை!**
> **வையைத் தாயே,வாழிய வாழியவே!**
> **வாழிய வையை! வாழிய வையை!**
> **பாண்டியன் மகளே,வாழிய வாழியவே!"[1]**

மனையகம் சேர்ந்த அழகப்பன் மாதவச் சேயை வாழ்த்தி மனையிடம் கொடுத்தான். தனது கடமைகளைக் கூறி முடித்தபின் மனைவி ஞான அவளைப் பாராட்டி முத்தமிட்ட பின் தான் கண்டு வந்த காட்சிகளை எடுத்துரைத்தான். ஞான வடிவும் மனம் புரித்து மாதவனைப் பெற்றது யான் முன் செய்த நலமேஎன்று கூறி அவனை வளர்க்கலானாள். மாதவன் புகழைக் கண்டோரும், கேட்டோரும் மகிழ்ந்தனர். மருதன் என்ற புகழ்மிக்க ஆசிரியரிடம் மாதவன் கல்வி கற்றான் அவனுடன் அமைச்சர்மகள் அருண்மொழி, அரசனின் தங்கை மகள் மாதேவி, மதுரை மருத்துவன் மகன் இனியன் போன்றோர் கல்வி கற்றனர். அருண்மொழி மாதவனோடு கல்வி கற்றதனையும், அதன்பின் தனக்குப் பெற்றோர் வரன் தேடியதையும், கோட்டையில் வெற்றிவிழா பொழுது மாதவன் பாடியதைக் கேட்டு நெடுநேரம் படுக்கையில் நினைத்தபடி உறங்கினாள். அதேபோல் மாதவன் கல்வி கற்றதையும், தன்னோடு பயின்றவர்களையும், அருண்மொழியைக் கோட்டையில் சந்தித்ததனையும், வெற்றிரு விழாவில் பாடியபோது அருண்மொழி காதல் வயப்பட்டதையும் நினைவு கூர்ந்துபின் தான் அருண்மொழியை விரும்பல் சரியன்று என நினைத்து குற்றாலம் செல்ல முடிவெடுத்தான்.

***"மின்னொளிர் ஆரமும் நூலும் அளித்ததும்
அன்னக் கையினள் விருந்து விளம்பினள்
இனிய விருந்தை உண்டு முடித்தவர்
பின்னைய கடமையும் நன்கு முடித்தபின்
நன்னெறி வளர்க்குஞ் செய்திகள் விளம்பி
வழிபடு கடவுளைத் தொழுது
நலிவிலாப் பாயலைக் கொண்டார் நன்றே."[2]***

**பொருநைப் பால் காதை**

மாதவன், அழகப்பன், இனியன், மருதன் ஆகிய நால்வரும் மாட்டு வண்டியில் ஏறி குற்றாலம் நோக்கிச் சென்றனர். செல்லும் வழியில் அருவிகள், மணிகள், சந்தனம், அகில், மிளகு முதலியவற்றை தருவது பொதிகையே என்றும், மதுரைக்கும், பாண்டியனுக்கும் சிறப்பைத் தருவது அம்மலையே என்றும் பாடிச் சென்றனர். மேலும் வழியில் சித்தர்கும்மிப் பாடலைக் கேட்டும் மகிழ்ந்தனர். சிந்துபாடும் பொதிகையினைக் கண்டதோடு பொதியனையும் கண்டு வணங்கினர்.

அகத்தியரின் மருத்துவப் பணியைக் குற்றாலத்தில் வளர்க்கும் பொதியனிடம் மாதவன் முதலான ஏழு மாணவர்கள் கற்றனர். அதில் நாடிப்பயிற்சியும், பிணிதீர்க்கும் மூலிகைகளும், சூரணம், குளிகை, இலேகியம், தயிலம் முதலியவற்றைச்செய்யும்முறைகளும், நோயைக் குணப்படுத்தும் நெறிமுறைகளையும் கற்று பயிற்சியும் செய்தனர். பொதியன் மனையில் மருத்துவக் கல்விபயின்ற மாதவன் மற்றும் உடன் பயின்றவர்கள் நாஞ்சில் நாட்டைக் கண்டு மகிழ மாட்டுவண்டியில் பாபநாசம், அம்பாள் சமுத்திரம், குறுங்குடி வழியே பணகுடி நெருங்கியபோது, எதிரேகள்ளர்மறித்தலைக் கண்டு அவர்களைத் துரத்தி அடித்தனர். போதியமலை மீது சென்று அதன் எழிலையும், ஆசான் காட்டிய நெறியையும் உணர்ந்துதம் வருங்கால வாழ்வுக்குத் திட்டமிட்டனர்.

முக்கூடற்கண் வந்த மாதவன் பொருநையின் வடக்குத்திக்கில் மனையை அமைத்து பல மூலிகைகளையும், குளிகைகளையும் வளர்த்ததோடு மருந்து வகைகளையும் தயாரித்து வந்தவர்க்கு மருத்துவம் செய்தான். மாதவனால் பிணி நீங்கிய ஒருவன் கண்ணாயி என்ற பெண்ணிற்கும் அவள் குழந்தைக்கும் வாழ்வு தர துணிந்தான். ஆற்றுநீரில் மகன் மாள, கணவனும் மாள வீணேவாழ்வு கழியுது என்று கண்ணாயி கூறினாள். படைத்தவன் காப்பான். பேணற்குரியவரை எண்ணித் துயர்விடுக வேண்டும் உதவிகள் செய்வேன்" என மாதவன் குழந்தையம்மாளோடு அன்பும், கருணையும் உடையவனாகப் பழகினான்.

சித்திரை முதல் நாள் கோவிலில் மாதவன் தன் பெற்றோரோடு கூத்தினைப் பார்க்க வந்திருந்தான். குழந்தையம்மாளும் கண்களோடு கண்கள் பேசி நிலை குலைந்த உள்ளத்தவராகத் தங்கள் மனைக்கண் சென்றனர். மாதவன் கனவு கண்டு விழித்து நீராடிச் செல்லவே தோழியருடன் குழந்தையம்மாளும் வருதலைக் கண்டு வீட்டுக்கு வருமாறு கூறவே, அவளும் வந்தபின் "நின்னை மணக்க நெஞ்சம் விரும்புது'' என அவளும், "அன்னை கேட்டு விருப்பம் கொள்'' என அவன் கூற அவள் சென்றுவிடவே. அவன் மீது அவன் நீண்ட நேரம் சிந்தை செலுத்த அப்பாவின் குரல் கேட்கவே பணிமேல் கருத்தினைச் செலுத்தலானான்.

பிணியுற்ற ஏழை தாயும், மகளும் இருப்பதைக் கண்ட மாதவன் அவள் பிணி நீங்க மருந்தளித்து உதவினான். ஏழை தாயின் பெயர்வள்ளி அவள் காதலித்தவன் பகைவர்களால் வாள் வீசி மாய்த்துவிட்டதால், சகடன் என்பவனை மணந்து ஒரு பெண் குழந்தை பிறந்தவுடன் அவளை விட்டு போய்விட்டான். வள்ளியின் நிலையைக் கண்டு வருந்திய மாதவன் அவளுக்கு பொன் நாணயங்களைக் கொடுத்து ஆறுதல் கூறி அனுப்பினான். "காரணமின்றிக் காரியமில்லை. மாரி, மாகடல், மலை ஆகியவற்றின் செயல்களே இதனை உணர்த்தும். அடியேன் அவளை நோதலின் பொருளில்லை தஞ்சை செல்வேன்'' இன்னணமே பலவாறு மனத்தோடு கூறிவிட்டுச் சோலைவழி வீடுபுக்கான்.''[3]

**"காரணம் யாதுமின்றிக் காரிய மில்லை
காரியம் காரணத்தின் பயனே ஆகும்**

***மாரியின் பெருக்கின்றி மாகடல் இல்லை***
***மாகடற் புரட்சியின்றி மாரியும் இல்லை***
***மாரியின் நெறிமுறையை மயலயம் மாற்றும்***
***மலையின் வடிவுதனை மாரியும் மாற்றும்***
***ஆரவர்விதியறிவர்அகிலந் தன்னில்***
***அடியனும் அவணோதல் பொருள் தாமோ?"[4]***

### காவிரிப் பால் காதை

மாதவன் கோவில்கள் உள்ள ஊர்கள் வழியே தஞ்சையைச் சென்றடைந்து காவிரி கரையிலிருந்து "காவிரியே! வானம் உன் தாயனதால் தானமும், கடல் உன் தந்தையானதால் ஊன்மீன்களும் உன்னிடம் உள்ளன. நீ சோழனுக்குதாயானாலும் சிவனின் சடையுள் இருப்பவளே ஆவாய்'' எனப் பாடிக் கொண்டிருந்தான். அப்போது பிணியுற்ற ஒருவன் பிச்சை வேண்டி அவனிடம் வரவே மாதவன் அவனிடம் ஊர், பெயர், பிணிக்கானக் காரணங்களை வினாவினான். அதற்கு அவன் என் பெயர்சகடன். மற்றவற்றை பிறகு சொல்கிறேன் எனக் கூறி, மாதவனைப் பற்றி கூறுமாறு கேட்டான். பசுமலை எனது ஊர், முக்கூடலில் வாழ்ந்துவிட்டு வந்துள்ளேன். உன்னைப் பற்றி கூறு எனச் சகடனிடம் கேட் டான். நானும் என் மனைவி வள்ளியும் பிறந்தது முக்கூடல். உறவினர்களின் வஞ்சகத்தால் மனைவி மேல் ஐயத்தை ஏற்படுத்தி மனைவியையும், மகளையும் விட்டுப் பிரிந்தேன். அவள் நல்லாள் என அறிந்தும் ஊர் திரும்பாமல் பிணியால வாடுகிறேன் என்றான். அதைக் கேட்ட மாதவன் உன் பிணியை இருபது நாள்களில் நீ க்குவேன். உன்னுடைய மனைவியும், மகளும் அவள் கணவருடன் என் வீட்டில் நலமாய் வாழ்கின்றனர். என்னுடன் தஞ்சைக்கு வருவாயாக என்றான்.

குழந்தையம்மாள் அவள் தாய் மற்றும் மூவர்அவளுடன் வருவதை மாதவன் கண்டான். குழந்தையம்மாளின் தாய் மாதவனிடம் நாங்கள் மணம் காண வேண்டி இருப்பதால் வந்ததாகக் கூறிவிட்டுச் சென்றாள். குழந்தையம்மாள் இரண்டு ஓலைகளை மாதவனிடம் கொடுத்தால் அதில் ஒன்று இலக்கிய ஓலை, மற்றொன்று பொறாமை குணம் கொண்ட ஒருத்தியின் பேச்சுக்கு மயங்கி நன்றில்லா மொழிகளைப் பேசிவிட்டேன். தாயின் முன் எனக்கு ஒரு பரிசுத் தருக மீண்டும் வருவேன் என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு கணையாழி ஒன்றினை குழந்தையம்மாளிடம் தந்து அனுப்பினான்.

மாதவனும் பதினேழு மாணவர்களும் புகார் நோக்கி சென்றனர். அப்போது காவிரியையும், செந்நெல், கரும்பு பிறவும் கம்பும் விளைந்து செழித்து இருப்பதைக் கண்டு மகிழ்வோடு சென்றனர். புகாரில் உள்ள புத்த பீடிகைகையில் இருந்தபோது, இரு சமணரை நான்கு வைணவர் தாக்கலைக் கண்டு தடுத்து அவர்களைக் காத்தனர். சைவரும், வைணவரும் சண்டை போட்டதையும், மாதவனையும் புத்தரையும் நீரோடை அருகே இருவர்பழித்ததையும் எண்ணிப் பார்த்தான்.

"மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியன் குலைந்ததால் வஞ்சங்கொண்ட சுந்தர பாண்டியன் மூன்றாம் இராசராசனை இருமுறை தோற்கடித்துச் சேதம் செய்தமையால் வறுமை, அறியாமை, வழிப்பறி, மதவெறி முதலியன சோழ நாட்டில் பெருகியுள்ளதையும், அறியா வயதில் சுந்தர பாண்டியனின் முதல் வெற்றியைப் புகழ்ந்து பாடியதையும் போரின் கடுமையினையும் உணர்ந்து புசலை அகற்றும் பணியே நற்பணி''[5] என எண்ணி தஞ்சை சென்று சடையன் உத வியோடு அமைதி மாநாடு நடத்த எண்ணினான். அதன்பின் குழந்தையம்மாளை மணக்க விரும்பியதை ஒரு ஓலை வழியாக எழுதி அனுப்பினான்.

மாதவனின் கனவில் கோவலனும், மாதவியும் தோன்றி முப்பிறவியின் வினையால் இப்பிறவிக் கண்டதாகக் கூறி நிலவின் பின் மறைந்தனர். பள்ளியின் வடப்புறம் மாதவன் இருந்தபோது குழந்தையம்மாளும் அவள் தாயும் வருவதைக் கண்டான். மாதவனிடம் குழந்தையம்மாள் தாய் செல்வா! நீ குழந்தையம்மாளை மணக்க ஓலை அனுப்பியதைக் கண்டேன். என் அண்ணன் மகன் சிறந்த வணிகன், குழந்தையம்மாள் பிறந்த உடன் மணமக்களாக்க என்னிடம் உறுதிப் பெற்று விட்டனர். என் அண்ணி முப்பது நாளுக்கு முன்

இருவரையும் சேர்த்துவிட்டு காலமானாள். உன்னை மணக்கும் பாக்கியம் அவளுக்கு இல்லை. புமணம் பெறப் புத்தனை வேண்டி தருமாறு கூறினாள். இதனை கேட்ட மாதவன் மனம் வருந்தி கண்ணீர் விட்டான். இனி அனைத்தையும் துறந்து முக்தி அடைவதே நலம் என எண்ணிப் புத்தரை வழிபடத் தொடங்கினான்.

தஞ்சையில் நீண்டதோர் நிலப்பகுதியில் சான்றோரும், ஏனையோரும் ஒன்று கூடித் தங்களது அறக்கருத்துகளையும், சமயக் கருத் தினையும் கூறினர். இறுதியாக மாதவன் கன்ம வின்ம வினைகள் மீண்டும் தொடரும் என்னும் முடிவினை மறுக்கவில்லை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் செ ால்லைப் போற்றுவோம் என்று கூறி முடித்தான்.

**"இறைவன் நெறியினை அறிந்து நடக்கின்**
**கறைபடு பிறப்பு நீங்கி மாயும்**
**இறைவுரை பருகிய அழிவிலா நல்லீர்!**
**இருள்சேர்இருவினையுஞ் சேரர்இறைவன்**
**பொருள்சேர்புகழ்புரிந்தார் மாட்டெனக் கூறிய**
**பொய்யில் புலவன் பொன்னுரை போற்றுமின்**
**ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல**
**ஒற்றுமை யாக வாழத் தெரியின்**
**யாவரும் வாழ்வோம் இல்லையேல் அழிவோம்.**
**''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாளுமேசுசு**
**என்றே நுவன்ற மூலரின் சொல்லை**
**நன்றே போற்றுமின் நன்மை பெறற்கே''[6]**

**பாலாற்றுப் பால் காதை**

அமைதி விழா முடிந்தபின் மாதவன் ஏவலனுடன் காஞ்சி நோக்கி புரப்பட்டான். வழியில் பாலாற்றின் கரையில் முருகன் கோவிலில் இருந்த போதும் வறியவன் ஒருவனைக் கண்டு, உன்னை நான் அறிவேன் நீ வறியவனாக என்ன காரணம்? இந்த ஊர் வந்ததும் ஏன்? என்று மாதவன் அவனிடம் வினாவினான். தஞ்சைக்கு அருகில் உள்ள ஊரில் பிறந்த நான் சமயவெறியால் உன்னை ஒரு நாள் ஏசினேன். நான் செய்த வினையின் பயனாகத்தாய், மனைவி, சேய் செல்வம் அனைத்தையும் இயற்கையின் சீற்றத்தால் இழந்தேன். வேண்டும் பொருளைத் தருகிறேன் நல்லபடியாக வாழ்க என மாதவன் அவனிடம் கூறினான். அதற்கு அவன் உன்னிடம் பணிசெய்ய விரும்புகிறேன் என்று கூற மூவரும் காஞ்சிநோக்கிப் பயணமாயினர்.

கரிகால வளவன் வளப்படுத்தியதும், இளந்திரையன் செழுமைப் படுத்தியதுமாகிய காஞ்சிநோக்கிப் பாலாற்று நீருண் வயலும் நிரம்பியதடம் வழியே மூவரும் சென்றனர். அப்போது அங்குள்ள கோவில்கள், புத்த பீடங்கள், புத்த பள்ளி, வைணவக் கடிகை, சைவக் கடிகை, பட்டு நெய்யும் காட்சி போன்றவற்றை கண்டபின் இராசராசன் கட்டிய கைலாசநாதர் கோவிலையும் கண்டனர். பின்னர் தோழர் ஒருவரின் துணையோடு மனையும் புத்தன் உருவத்தினையும் அமைத்து மாதவன் மருத்துவப் பணியே இறைவன் பணியென இருந்தான். மாதவன் மருத்துவப் பணியைச் செய்தவாறே, கேட்பவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தும், அறவுரை என விரும்பி வந்தோரின் குறையினை நீக்கியும், கிருஸ்துவைப் பற்றி கேட்பவருக்கு விளக்கம் கொடுத்தும், சமயம் சார்ந்த காரணமாகத் திருமண வழக்கு ஏற்பட்டரைப் பார்த்து அறிவுரை கூறினான். எல்லா சமய தெய்வங்களும் ஒன்றே, சமணரின் பாவம் புண்ணியம் ஆகிவிட முடியாது. அதுபோல சைவரின் புண்ணியம் பாவம் ஆகாது. அவரவர் வினையின் பயனை அவரவர் அனுபவிப்பார்.

உண்மைக் காதலரைப் பிரித்தாலும் அவர்கள் உணர்வுதழுவியே நிற்கும். பிரித்தவர்களும் அதன் பயனை அனுபவிப்பர். எனவே காதலரை மணமுடித்து வைப்போம் எனக்கூறிக் காதலர் மணங்கொளம் செய்வித்தான்.

காஞ்சியில் மருத்துவப் பணியைச் செய்து வந்தான் மாதவன். அப்போது ஒரு நாள் குழந்தையம்மாள் தன் நோயுற்ற கணவரோடு மருந்து வேண்டி வந்தாள். மாதவன் நோயினை ஆய்ந்தபின் அவனுக்கு தேவையான மருந்தினைக் கொடுத்தான். அதன் பின் அவளின் தாயின் நலம் விசாரித்தான். குழந்தையம்மாள் கணவனிடம் கணையாழி, பொன்மணி வைக்கப்பட்டிருந்த

*சிறிய பேழையை தந்தான். பேழையைப் பெற்றுக் கொண்டு மாதவன் காட்டியவழியில் இருவரும் சென்றனர். நிலவு தோன்றிய வேளை மாதவன் தன் நண்பன் இனியன் வருதலைக் கண்டு மகிழ்ந்தான். இனியன் மதுரையில் மருத்து வப்பணிச் செய்து வருவதாகவும் கூறினான். அருண்மொழி கல்வி கற்கும் காலத்திலேயே துறவி ஆகிவிட்டாள். பொற்கொடி விண் சேர்ந்து பத்து திங்கள் ஆயிற்று என்றான். அறம் உன்னிடம் இருக்கவே உன்னை காண முடிந்தது என்று கூறியதைக் கேட்ட மாதவனின் மனம் தியானத்தை நடவே இருவரும் மகிழ்வுடன் உறகினர்.*

*நிலவின் உச்சியில் தாமரை மலரொன்று விண்ணகந்தோன்றி விரிய, அதிலிருந்து ஒளியுருவு மாதவனின் கண் முன் நோக்கி இறங்கி ''புத்தன் அருளால் தோன்றிய நீ! சென்ற பிறவியில் புகாரில் மணிமேகலையாய் பிறந்தாய்! உன்னை விரும்பிய உதயகுமரன் நானே! இந்த பிறவியில் அமைச்சன் மகள் அருண்மொழியாகப் பிறந்தேன். தவத்தின் மேன்மையை உணர்ந்ததால் இப்பிறவியில் துறவியாக மாறினேன். இறைவனின் அடியை வந்து சேர்வாயாக என்று கூறி மலரகம் மறைந்தது. புத்தனின் கருத்தினை உணர்ந்த மாதவன் கவுதமனை வணங்கிவிட்டு தியானத்தில் மூழ்கினான். குழந்தையம்மாளும் அவள் கணவனும் மாதவனைக் காண வந்தபோது முத்தாரம் புத்தனின் கைமலர்மீது வீழ்ந்ததும் ஆலயமணி ஒத்திசையோடு முழங்கியது.*

***“கவுதமன் முன்னில் வணங்கி நிற்கக்
கணவனின் கையகங் கனிவொடிருந்த
முத்தின் ஆரமும் மணம்பெறல் விரும்பி
முத்தியை விரும்பிய மாதவன் போலப்
புத்தனின் கைமலர்மீது வீழ்ந்ததும்
ஒத்திசை முழங்க ஆலயம் ஒலித்தவே''[7]***

## *முடிவுரை*

*“முத்தாரம்'' என்னும் இக்கட்டுரையானது சிலப்பதிகாரத்தை ஒத்திருந்தாலும் பல புதுமைகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. காப்பியங்களின் பகுப்பு “சுகாண்டம்” என அழைக்கப்படும். முத்தாரத்தில் “பால்” எனப் பகுக்கப்பட்டுள்ளது புதுமை ஆகும். முத்தாரம் கற்பனைத் திறனும், கவி நயமும், கருத்து வளமும் திரண்டு கிடக்கும் நல்லதொரு காப்பியம் ஆகும். அதனால், இதனை படிப்போருக்கு இன்பம் ஊட்டுவதாகவும், அறிவிற்கு நல்ல விருந்தாகவும் இருக்கின்றது என்பதை இக்கட்டுரை வாயிலாகத் தெளிவாக உணர முடிகின்றது.*

## *துணை நூற்பட்டியல்*


1. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.17)*
2. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.70)*
3. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.79)*
4. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.181)*
5. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.185)*
6. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.241)*
7. *புலவர் மி.காசுமான், முத்தாரம் (பக்.281)*

# சங்க இலக்கியத்தில் இயற்கை வழிபாடு

***முனைவர் சீ. காயத்ரி தேவி***
தலைவர், தமிழ்த்துறை
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

இயற்கையின் அச்சந்தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் சென்றதென்பது மானிடவியலாரின் கருத்தாகும். மனிதன் தன் ஆற்றல் சில வரம்புக்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுட் கோட்பாடு உருவாகியது. தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் முறையே புலப்படாத, உட்படாதவற்றின் மீது அச்சத்தின் காரணமாக மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். அந்நம்பிக்கையின் அடிப்படையில் கடவுள் நம்பிக்கை தோன்றியது. இயற்கையின் புதிரான செயலை மனிதன் உணர இயலாத நிலையில் அதனை வழிபட்டு அமைதிப்படுத்த முயன்ற போது வழிபாடு உருவாகியது.

**கருதுகோள்**

- மனிதன் தான் வாழ்விடத்தில் விளங்கிய இயற்கையை புரிந்து கொள்ள வழிபாடு தோன்றியது.
- இயற்கை என்பதை மறுத்து வழிபாடு செய்வதன் மூலம் கட்டுப்படுத்தவும், நீடிக்கவும் செய்ய முடியும் என்று நம்பி சடங்குகளைத் தோற்றுவித்தான்.

ஆகியவற்றை கருதுகோளாக கொண்டு கட்டுரை அமைகின்றது.

## இயற்கை வழிபாடு

இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்றவற்றை வழிபடும் தன்மையினை இயற்கை வழிபாடாகக் கருதுவர். தொல்காப்பியர் ஞாயிறு, திங்கள், தீச்சுடர் ஆகிய இயற்கையின் முக்கூறுகளை வழிபட்டமையினைப் பாடாண் திணையில்

**கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே**
***(தொல்.புற-33)***

என்ற வரிகள் தொல்காப்பியத்தில் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்று வாழ்த்து நிலைகள் சொல்லப்படுகின்றன. இம்மூன்றுக்கும் நச்சினார்க்கினியர் தத்துவார்த்த முறையில் விளக்கம் தருகிறார். இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழ்மக்கள் இயற்கை வழிபாடு செய்தார்கள் என்பதற்கு அடிப்படையாக இம்மூன்றும் அமைந்துள்ளது. கொடிநிலை, கால மாற்றத்தால் பரிணாம வளர்ச்சி பெற்று, திருக்கோயில் கொடி ஏற்றப்படும் கொடிமரமாக, வழிபாடாகியது.

முதலில் கொடிநிலை கானகத்தில் இருள்பட வளர்ந்த மரங்களின் மீது இயற்கையாகவே தழைத்துச் செழித்த கானகத்துக் கொடிகள் சுற்றிப் படர்ந்து நெடிதுயர்ந்து சென்றிருப்பது இயல்பு. இதைக் கண்ணுற்ற அக்கால மக்கள் மன உணர்வில், அப்போது அவர்களுக்கு இருந்த அனுபவறிவில் கொடிசுற்றிப் படர்ந்துள்ள மரங்களின் மீது தெய்வத்தன்மை பொருந்தி இருப்பதாக மதித்துக் கடவுளுக்குச் சமமாகக் கருதி வணங்கினார்கள்.

இரண்டாவது கானகத்துக் கொடிகள் சுற்றிய மரத்தின் வற்றி உலர்ந்துபோன அடிப்பகுதி. அந்த அடிப்பகுதியைப் பார்த்த அம்மக்கள் மனத்தில், பழைய மனநிலை உணர்வு காரணமாக, முன்பு கொடி சுற்றிப் படர்ந்த மரத்தைத் தெய்வத்துக்கு நிகராகக் கருதி வணங்கியதைப் போன்று, வற்றி உலர்ந்த அந்த மரத்தின் அடிப்பகுதியிலும் தெய்வம் குடிகொண்டிருப்பதாக மதித்து வழிபட்டனர் என்பதை

**“கடவுள் போகிய கருத்தாள் கந்தத்து**
**உடன் உறை பழமையின் துறத்தல் செல்லாது**
**இரும்புறாப் பெடையோடு பயிறும்**
**பெருங்கல் வைப்பின் மலை’’**

***(அகம்.307-12-15)***

என்ற வரிகள் “கடவுள் நிலை பெற்றிருந்து இப்போது நீங்கிச் சென்றுவிட்ட கரிய அடிப் பகுதியை உடைய கந்தழி’’ என்று அகநானூறு நித்திலக்கோவை கூறுகிறது. “கந்தழி’’ என்பது, தனிப்பரம் பொருளாகிய “கந்தக் கடவுள்’’ எனச் சுப்பிரமணிய பராக்கிரமம் என்னும் நூலில், சகத்திரான்ம பரிபாலன மூர்த்திப் படலத்தில் ஒரு குறிப்பு வருகிறது.

மூன்றாவது வள்ளி - வள்ளி என்பது கொடி. மரம் வற்றி உலர்ந்து கீழே சாய்ந்து முற்றிலும் சிதைந்துபோன நிலையில், மரத்தைச் சுற்றிப் படர்ந்து மேலே சென்ற கொடி, படர்ந்து செல்லுவதற்குப் பற்றுக்கோடு இன்றித் தரையில் பரவிக் கிடந்தது. பழைய பெருமை கருதி, இக்கொடியிலும் தெய்வம் குடிகொண்டிருப்பதாக மதித்து அவர்கள் வழிபாடு செய்தனர். இந்த இயற்கை வழிபாட்டு முறையை அறிந்த ஆசிரியர் தொல்காப்பியனார் கொடிநிலை, கந்தழி, வள்ளி எனப் பெயரிட்டு அவற்றையும் வழிபடத் தக்கனவாக மதித்து அழைத்துள்ளனர் என்பது புலப்படுகின்றது. கன்னிப் பெண்கள் தங்களின் திருமணம் தாங்கள் விரும்பும் வண்ணம் நிறைவேறுதல் வேண்டும் என வேண்டிப் பிறையைத் தொழுவது தொன்மை வழக்கு. அவ்வியற்கை வழிபாட்டினைப் போன்றே கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய இயற்கைப் பொருள்கள் மூன்றுக்கும் தெய்வத் தன்மை ஏற்றி வழிபட்டனர்.

இயற்கையாகவே கொடிசுற்றி மேலே சென்றுள்ள மரத்தைக் கொடிநிலை எனப் போற்றி வணங்கினர் அல்லவா! இந்த வழிபாட்டுநிலை பரிணாம வளர்ச்சி பெற்றது; காலம் தோறும் படிப்படியாக வளர்ந்தது. கானகத்து இயற்கை வழிபாட்டோடு தொடர்புடைய இம்மரம்தான், நமது பண்பாட்டு வளர்ச்சியின் சின்னமாகத் தோன்றுகின்ற திருக்கோயில்களில், கால வளர்ச்சியில் கோயில் கொடி மரமாக” வடிவம் பெற்று உயர்ந்தது. கானகத்தில், அம்மரத்தைச் சுற்றிப் படர்ந்து மேலே சென்ற கொடியே, திருக்கோயில் கொடி மரத்தில் ஏற்றப்படும் கொடியாக வடிவம் பெற்று உயர்ந்தது. அரசனுக்கு உரிமைப்படுத்தப்பட்ட கொடியிலும் சின்னம் அமைக்கப்பட்டது.

தொல்காப்பியனார் கூறியுள்ள கொடி நிலையே, பிற்காலத்தில் கோயில் கொடிமரமாக உருவெடுத்தது என்று கூறுவது பண்பாட்டு வரலாற்று நோக்கிலும், சமுதாய வரலாற்று நோக்கிலும், மானிடவியல் நோக்கிலும் மிகவும் பொருத்தமாகும். தொல்காப்பியனார், கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் இம்மூன்றையும் இத்தகைய எளிய பொருளிலா கூறியிருப்பார் என்னும் ஐயவினா எழும். கொடி நிலையானது, அரி, அயன், அரன் என்னும் மூவர் கொடிகளும் ஒன்றனோடு உவமித்துத் தன் அரசன் கொடியைப் புகழ்தல். கந்தழியாவது, திருமால் வாணாசுரனின் சோ நகரத்து அரணை அழித்த வெற்றியைச்சிறப்பிப்பது. வள்ளியாவது, முருகக் கடவுள் பொருட்டுப் பெண்டிர் வெறியாட்டு அயர்வது என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. மேலும்

**“தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்’’**

***(தொல்.1061:7)***

என்றும், அச்சந்தரும் களவு காலத்தில் காவலாக இருந்து காத்தக் கடவுளைத் தோழி வழுத்திய போது தெய்வத்தை வணங்கி வழிபடுகிறாள். மேலும்

**ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்**

***(தொல்.1092)***

என்ற நூற்பா வழி, தான் வழிபடும் தெய்வத்திற்கு அஞ்சி நடந்த செய்தியினைப் பதிவு செய்துள்ளதன் மூலம் அறியமுடிகின்றது. நற்றிணையில் வேட்டுவர்கள் காட்டுப்பசு மீது எய்த அம்பு குறிதவறியதால் தெய்வக் குற்றம் என நம்பி அத்தெய்வத்தை வழிபடும் பொருட்டுத் தன் சுற்றத்தாருடன் தலைவன் சென்றதனை

**கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டு எழுந்து**

***(நற்.165:4)***

**பலிபெறு கடவுட் பேணி, கலி சிறந்து''**

***(நற்.251:8)***

**கணம் கெழு கடவுட்கு உயர்பலி தூஉய்ப்**
**பரவினம் வருகம் சென்மோ தோழி''**

***(நற்.358:6-7)***

எனும் பாடலடி வேடர்கள் தெய்வ வழிபாடு செய்து உயிர்பலி செய்தனர் என்பது புலப்படுகிறது. குறுந்தொகையில் கடவுள் நம்பிக்கையினை மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்

**"கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்''**

***(குறுந்.87:1-2)***

என்ற பாடல் வரிகள் பொதுமரத்தில் தங்கும், பிறர்க்கு அச்சம் செய்யத்தக்கத் தெய்வம் கொடுமையுடையவரைத் தண்டிக்கும் என்றும்

**"கடியுண் கடவுட்கிட்ட செழுங்குதல்''**

***(குறுந்.105:2)***

எனும் பாடலடியும் அச்சம் தரும் வகையில் பொதுமரத்தில் தெய்வம் உரைவதாக பதிவு செய்யப்பட்டுள்ள தன் வாயிலாக உணர முடிகின்றன. ஐங்குறுநூற்றில் களவொழுக்கம் மேற்கண்ட காலத்தில் தலைவி உடல்மெலிந்து காணப்பட்டாள். அம்மெலிவைக் கண்ட பெற்றோர் இது தெய்வத்தால் வந்தது என்று நம்பினர். இதனை,

**'கைபுனை நறுந்தார் கமழு மார்பன்**
**அருந்திறல் கடவுள் அல்லன்**
**பெருந்துறைக் கண்டு இவள் அணங்கியோளே'**

***(ஐங்.182:2-4)***

எனும் பாடலடிகளும்,

**"கறிவளர் சிலம்பின் கடவுட் பேணி"**

***(ஐங்.243:1)***

எனும் பாடலடியும்,

**"மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்**
**தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையல்"**

***(ஐங்.259:3-4)***

எனும் பாடலடியும் முருக கடவுளை வழிபட்டு உடல் மெலிந்த தலைவிக்கு வெறியாட்டு செய்து இறைவனை வழிபாடு செய்தனர் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்தில் இக்கடவுள் நம்பிக்கையினை,

**காடே கடவுள் மேன**

***(பதிற்.13:20)***

**உருகெழு மரபின் கடவுட் பேணியர்**

***(பதிற்று.21-5)***

எனும் பாடலடியும் எடுத்துக் காட்டுகின்றன. முரசில் வீற்றிருக்கும் தெய்வத்தை வழிபட கருங்கண் பேய்மகள் கைகொட்டி அஞ்சும்படி தெய்வத்திற்குப் பலிகொடுக்கும் பிண்டத்தை உயர்ந்தோர் ஏத்தினர் என்பதை *(பதிற்.30: 34-35)* என்ற பாடலடிகளும், ஆடல்துறைக்கு வேண்டிய பொருட்களை இளையர் சுமந்து செல்லும்போது வழியில் தீங்கு நேராமலிருக்கக் கடவுளை வாழ்த்திப் பாடிச் சென்றனர் என்பதனை *(பதிற்.41:6)* எனும் பாடலடியும் கடவுள் நிலை பெற்ற கற்களில் உயர்ந்து விளங்கும் என்பதனை *(பதிற்.43:6)* எனும் அடியிலும், கொற்றவைத் தெய்வம் வீற்றிருக்கும் அயிரை மலையினைப் போன்ற பெருமை சான்ற வேந்தே என *(பதிற்.79:18)* தெய்வத்துடன் சிறப்பித்துக்கூறியதன்வாயிலாக விளங்குகின்றன. பரிபாடலில் இந்நம்பிக்கையினை

**"பதினாயிரம் கை முதுமொழி முதல்வ!**
**நூறாயிரம் கை ஆறுஅறி கடவுள்"**

***(பரி.3:43-44),***

எனும் பாடலடிகளும், உன்னைவிடச் சிறந்தது உன் திருவடிகள். அவை கடவுள் தன்மையைக் கொண்டுள்ளன என *(பரி.4:63-64)* பாடலடிகளும், கடவுள் கற்பினையுடைய அருந்ததியைத் தவிர ஏனைய கார்த்திகைப் பெண்டிர் உண்டனர் என்பதனை *(பரி.5:4)* எனவும், யார் சென்று கண்டாலும் மயக்கத்தைப் போக்கும் வழிபடு தெய்வம் போன்றது அம்மலை என *(பரி.15-37)* பாடலடியும் விளக்குகின்றது. மேலும்

**"நிலை உயர் கடவுட்குக் கடம் பூண்டு, தன்மாட்டுப்**
**பல சூழும் மனத்தொடு பைதலேன் யானாக**

***(கலி.46:16-17)***

எனக் கலித்தொகைப் பாடலடிகள் தெய்வத் தன்மையைப் புலப்படுத்துகின்றன. தோழி நீ வெளியே செல்லும் போது நான் உன்னிடம் இவனைக் கோவில்களுக்கு அழைத்துச் சென்று வணங்கச் செய்து திரும்பி வா என்று கூற, நீ குறித்த நேரத்தில் வரவில்லை என *(கலி.84:6-7)* பாடலடியும், *(கலி.93,101:24)* எனும் பாடலடிகளும்

பதிவு செய்துள்ளன. பிறரால் வெல்வதற்கு அரிய அம்மலைவாழ் முருகன் வேலைப் பூசை செய்து குறவர்கள் கொண்டு வந்து தந்த அந்த மாலையாகிய ஆரமும் என்பதனை அகநானூற்றில்,

**“தெறல் அருமரபின் கடவுட் பேணி**
**குறவர்தந்த சந்தின் ஆரமும்”**

***(அகம்.13:3-4)***

எனும் பாடலடிகளும்

**“அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணா அது**

***(அகம். 90:9)***

எனும் அடியும்,

***கைதொழு மரபின் கடவுள் சான்ற***

***(அகம்.125:14-15)***

***கடிநகர் புனைந்து கடவுட் பேணி***

***(அகம்.136:6)***

***கடவுள் காந்த ளுள்ளும், பலஉடன்***

***(அகம்.136:6)***

எனும் பாடலடிகளும் இயற்கை வழிபாட்டுரை தெய்வம் சார்ந்த நம்பிக்கையைப் பதிவு செய்துள்ளன.

**முடிவுரை**

இயற்கை வழிபாடு என்பது ஆதி மனிதன் சிந்தையில் தோன்றியது. தன்னை சுற்றி நிகழும் இயற்கை மாற்றங்களை புரிந்து கொள்ள அவன் முயன்றான். அதன் விளைவே இயற்கை வழிபாடு. வேடன் வேட்டையின் பொழுது குறி தவறுதல் இயற்கை தான் அங்கு உரையும் காடுரை தெய்வம் என்பதை உணர்ந்து செயல்படுவது. இயற்கை செயல்பாடுகளுக்கு அவற்றில் நீக்கமின்றி கலந்திருக்கும் தெய்வம் என்று உணர்ந்தான். அதனையே வழிபாடு செய்து கட்டுப்படுத்த முயன்றான். அதுவே சங்க இலக்கியங்களின் பல்வேறு இடங்களில் தெளிவாகவெளிப்படுவதைக்காணமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. ஐங்குறுநூறு - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
2. மலைபடுகடாம் - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
3. குறுந்தொகை - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
4. அகநானூறு - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
5. பெரும்பாணாற்றுப்படை - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
6. தொல்காப்பியம் - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
7. நற்றிணை - நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்

# ஜி. நாகராஜனின் "நாளை மற்றுமொரு நாளே" பிரதியினூடாக யதார்த்தத்திலிருந்து விலகுதலும் மறுத்தலும்

***முனைவர் செ.ர. கார்த்திக் குமரன்***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

**தொடக்கமாக**

மேற்கத்திய நாடுகளில் தோற்றம்பெற்ற புனைகதைகளானது, தமிழில் ஏறத்தாழ நூறாண்டு காலத்திற்கு பிறகுதான் தோன்றியது. இதற்கான வரையறைகளைக் கொண்டு, தொடக்கக் காலகட்டத்தில் படைப்புகள் படைக்கப்பட்டிருந்தாலும் அவையாவும் யதார்த்தமான தன்மையிலும் சில அதனையும் மீறிய சமூகக் கண்ணோட்டத்துடனும் எழுத்துருவாக்கம் பெற்றுள்ளன. காலமாற்றத்தின் காரணமாக இப்புனைகதைகள், தங்களுக்கேதுவான மாற்றத்தினை உலகளாவிய அளவில் பெற்று வந்துள்ளதோடு, பலவிதப் புதியதொரு உள்ளடக்கக் கருத்தாக்கங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தன. சாதாரணமான கதைகளத்திலிருந்து விலகிய, மனித மனத்தின் வேறுபட்ட குணாம்சங்களைக் கதைக் கருவாக்கொண்டு படைப்புகளைப் படைக்கலாயினர். இத்தகைய மாற்றத்திற்கு காரணியாக உலகப்போர்கள் பல தேசங்களைச் சிதைத்ததோடு, தன்னளவில் இருத்தலின் அவசியம் குறித்த சிந்தனை மேலெழுந்து, வாழ்தலின் நோக்கம் மற்றும் அர்த்தத்தை சிதறடிக்கச் செய்தன. இதனால், கட்டுப்பாடுகளற்ற வாழ்க்கை முறையும் தனக்கான தேவையை எவ்வகையிலும் நிறைவேற்றிக் கொள்ளும் மனநிலைக்கு ஆளாகி, சுயமாக இயங்குகின்றனர். சிலர் அனைத்துவிதமான கருத்துகளுக்கும் எதிர்வினை ஆற்றுவதோடு, அதற்கான நியாயத்தையும் தர்க்கரீதியில் எடுத்து ரைக்கின்றனர்.

சமூகச்சுழல்கள், தனிமனிதனின் அகம் மற்றும் புறம் சார் மாறுதல்களை ஏற்படுத்தி, அவனை அந்நியமாக்குகிறது. இதன் காரணமாக தனிமை மற்றும் புறக்கணிப்பு ஏற்பட்டு, நிபந்தனையற்ற வாழ்க்கையை வாழப் பழக்கப்படுத்தப் படுகின்றான். இறுதியில், மரணத்தையும் தேடிக்கொள்கிறான். இதனைத்தான் சில குறிப்பிட்ட புனைகதைப் பிரதிகளானவை, யதார்த்தத்திலிருந்து விலகுதல் அல்லது மறுத்தலை தன் எழுத்தினூடாக வெளிப்படுத்தியுள்ளனர். இத்துடன், ஒரு மனிதனுக்கு தனிப்பட்ட காரணங்களினாலும் சமூக வாழ்வியல் நிகழ்வுகளால் ஏற்படும் பிரச்சினைகளையும் படைப்பாக்கியுள்ளனர். அந்தவகையில், தமிழ்ப் படைப்பாளரான ஜி. நாகராஜனின் "நாளை மற்றுமொரு நாளே" என்ற பிரதி இங்கு எடுத்தாளப்பட்டு, இவற்றிலுள்ள கருத்தாக்கங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

**ஜி. நாகராஜன்**

நவீனத் தமிழ்ப் படைப்பாளர்களில் பிறர் சொல்லத்தயங்கிய மற்றும் சமூகத்திலிருந்து மறுக்கப்பட்டவர்களின் அல்லது விலக்கப் பட்டவர்களின் வாழ்வினை கதையாக, தனக்கெனவொரு தொனியில் எடுத்துரைத்தவர் ஜி. நாகராஜன். **1963**இல் 'குறத்தி முடுக்கு' என்ற குறுநாவல் இவரின் பித்தன் பட்டறை பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டார். விபச்சாரத் தொழில் செய்யும் பெண்களின் உடல், மனம் சார்ந்த உளவியல் பிரச்சினைகளையும் சமூகத்தில் அவர்களுக்கான இடம், மதிப்பு ஆகியவற்றையும் இப்படைப்பினூடாக வெளியுலகிற்கு எடுத்துகாட்டியுள்ளார். இவர் பரத்தையர் பற்றி "அடுத்து வருபவன் ஆணா, அலியா, கிழவனா, வாலிபனா, அழகனா, குரூபியா, முரடனா, சாதுவானவனா என்றெல்லாம் கவலைப்படாது அவனிடத்துத் தன்னைத்தானே ஒப்படைத்துக் கொள்கிறாளே அந்தச் சிறுமியிடத்து யாரும் ஒரு

தெய்வீக உணர்வைச் சந்திக்காமல் இருக்க முடியாது. சமுதாயம் அவ்வப்போது கற்பிக்கும் போலி ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகளுக்கு இரையாகாமல் இருப்பவன் ஒருவனே இதைப் புரிந்துகொள்ள முடியும். எது எப்படி இருப்பினும் 'தேவடியாள்' என்பதை ஒரு வசைச் சொல்லாகப் பயன்படுத்த நியாயமே இல்லை. வேண்டுமென்றால் தி. ஜானகிராமனது 'கோவில் விளக்கு' என்ற சிறுகதையையோ அல்லது ஈஜின் ஓனீலின் 'அன்னா கிறிஸ்டி' நாடகத்தையாவது படித்துப் பாருங்கள்... பரத்தை மாதவியின் நல்லியல்புகள் தானே மணிமேகலையிடத்துக் குடிகொண்டன."[1] (ஜி. நாகராஜன், ஜி. நாகராஜன் ஆக்கங்கள், 'உரைநடை', ப. 494.) என்று 'சதங்கை' (ஏப்ரல் 1984) இதழில் எழுதிய இக்கருத்தே 'குறத்தி முடுக்கு' என்னும் படைப்பாக்கத்தின் கதைக்கரு. இதன் வழி, சமூகத்தால் புறக்கணிக்கப்படும் விபச்சாரப் பெண்களை, மாற்றுக் கருத்தாக்கத்துடன்கூடிய, போலிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக உணர்வுடன் இருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இக்குறுநாவலுக்கு பிறகு ஞானரதம் என்ற மாதாந்திரச் சிற்றிதழில் 1973 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையான 12 இதழ்களில் 'நாளை மற்றுமொரு நாளே' நாவல் தொடராக வெளிவந்தது. பின்னர் இதனை ஜி.என். 1974இல் தன் பதிப்பகத்தின் வழி புத்தமாக்கினார்.

கந்தன் என்ற கதாபாத்திரத்தின் ஒரு நாளைய வாழ்க்கையே இந்நாவல். தரகர் என்ற தொழில் செய்வதாகச் சொல்லிக்கொண்டாலும், எவ்வித நோக்கமுமில்லாமல் (கையில் கத்தியுடன்) நாட்களைக் கடத்துகிறார். ஒரு நாளில் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று தான் சந்திக்கும் நபர்களான ராக்காயி, சோலை, முத்துச்சாமி, திருமூர்த்தி, சுப்பையா செட்டியார், சிவனாந்தம், அந்தோணி, மானேஜர், அன்னக்கிளி, மருத மூப்பனார், ஏட்டையா, சப்-இன்ஸ்பெக்டர், நீதிபதி, விசாரணை, சிறைச்சாலையோடு கதை முடிகிறது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வகையில் கந்தனுக்கு பழக்கமானவர்களான இருப்பினும் அவனுடைய குணாதிசயங்களை முற்றிலும் அறிந்தவர்களாக இல்லை. குடும்பம், சமூகம், அரசியல் பற்றிய அக்கறையோ, புரிதலோ இல்லாமல், விட்டேத்தியாக சுற்றித்திரிபவர். மது அவருக்கு தக்கதுணையாக இருப்பதுடன், போகிற இடங்களிலெல்லாம் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் தன் முரட்டுத்தனத்தால் தீர்த்து வைக்கிறார். வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக அனைவரும் முயன்று, பல்வேறு மாறுதல்களை அடையும்போது கூட, அவருடைய வாழ்வில் எவ்வித முயற்சியும் மாற்றங்களும் நிகழ்வதில்லை.

"ஐம்பத்தைந்து வயதாகிவிட்ட அந்தோணியிடத்துக் கந்தனுக்கு மதிப்பு உண்டு. அந்தோணியும் அவரது பழைய நண்பர்களில் உருப்படியானவர்களை இன்னும் மறந்துவிடாது, அவ்வப்போது அவர்களுக்குச் சிறுசிறு உதவிகள், பெரும் ஆலோசனைகள் இவற்றைத் தருவதுண்டு. பொதுவாக ஆறுதலும் உலக ஞானமும் வேண்டுமளவுக்குத் தருவார். வீட்டை விற்பதில் சோலைப்பிள்ளையால் ஏமாற்றப்பட்டுவிட்ட கந்தன் அந்தக் காலத்திலேயே தரகர் அந்தோணியிடம்தான் சென்றான். சோலைப் பிள்ளையினுடைய காலையோ கையையோ வாங்கிவிடப் போவதாக அவரிடத்து ஆத்திரத்தில் பேசினான். அந்தோணி அவனுக்குச் சமாதானம் சொன்னார்.

"தம்பி, ஏமாத்தறவங்களும் ஏமார்றவங்களும் இருக்கிறது தான் உலகத்தின் தன்மை அதன் அழகூன்ட்டுக்கூட எனக்குப்படுது. எல்லோரும் நேர்மையா நடந்துகிட்டா, வாழ்க்கைலே போட்டியோ முன்னேற்றமோ இருக்காது வாழ்க்கையே 'சப்'னு இருக்கும். என்னைப் பொருத்தவரை, யாரையாவது கவுக்க, எதைப் பத்தியாவது சுழ்ச்சி செய்யும் போது தான் எனக்கு உசிரோட இருப்பதாகவே தெரியிது. இல்லாட்டி ஏதோ தலையாட்டி பொம்மை மாதிரி இருப்பதுபோல்தான் இருக்கு. சுழ்ச்சி செய்யற தெறமெதான் மனுஷனே மனுஷனாக்குது அதுதான் மனிதருக்கும் மிருகங்களுக்கும் உள்ள பெரிய வித்தியாசம். சுழ்ச்சி செய்யத் தெரியாதவன் வாத்தியாராவோ குமாஸ்தாவாவோ வாழ்நாள் புரா இருக்க வேண்டியதுதான். அவன் பெரிய வக்கீலாவோ, டாக்டராவோ, வியாபாரியாவோ, அரசியல்வாதியாவோ, போர் வீரனாவோ வர முடியாது."[2] (ஜி. நாகராஜன், ஜி. நாகராஜன்

ஆக்கங்கள், 'நாளை மற்றுமொரு நாளே', பக்.100-101.) என்று, தன் படைப்பினூடாக வாழ்வின் யதார்த்தத்தை விளக்குகிறார். இப்படிப்பட்டதொரு வாழ்க்கையில், தான் தேர்ந்தெடுக்கும் பாதையின் வழியே அவனுக்கான முன்னேற்றம் அடங்கியிருக்கிறது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் வாழும் வாழ்க்கையைத்தான் யதார்த்திலிருந்து விலகிச் செல்லுதலைக் குறிக்கும். சுழ்ச்சி செய்யவும் அதிலிருந்து மீளவும்தான் சிந்தனை வழிவகுக்கிறது. இதனூடாக தன் வாழ்வில் மேன்மையடைகிறான். இதனை மறுத்து, ஒதுங்கி அல்லது எதிர்த்து(வன்முறை) செல்வோரின் வாழ்வானது சுன்யமாவதுடன், வாழ்வதற்கும் தகுதியற்றவன் ஆகிறான். மேலும் அவன் சமூகத்திடமிருந்து விலக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்படுகிறான்.

தன்னுடைய சுயநலத்தின் காரணமாக, மற்றவர்களைப் பற்றிய அக்கறை இல்லாமல் வாழும் மக்களுக்குத்தான் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் பெறுவதோடு, அவர்கள் செய்யும் அனைத்து காரியங்களும் நியாயமாகவே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதனால்தான் சுயநலமற்ற தன்மைகொண்ட மனிதர்கள் அந்நியமாகின்றனர் அல்லது அந்நியப்படுத்தப் படுகின்றனர். மேலும், அவர்கள் வாழ்வின் யதார்த்தத்தை உணர்ந்துகொள்ளத் தவறியவர்களாக இருக்கின்றனர். கந்தனும் இப்படிப்பட்டதொரு வாழ்வினை மேற்கொண்டதால்தான் தொடர்ந்து இழப்புகளை மட்டுமே பெறுகிறான்.

"அவன் ஷெனாய் நகருக்கு இதற்கு முன்னால் வந்தது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது நகரம் மிகவும் விஸ்தாரம் அடைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் புதுப்புது வீடுகள்' எல்லாமே மாடி வீடுகள். ஷெனாய் நகரில் முதல் முதலாகக் கட்டப்பட்ட ஓரிரு வீடுகள் மட்டும் ஒளியிழந்து, பள்ளிச் சிறுமிகள் மத்தியில் நிற்கும் பிச்சைக்காரக் குழந்தைகள் போலத் தென்பட்டன. எங்கு பார்த்தாலும் வளர்ச்சி எங்கு பார்த்தாலும் மாறுதல். ஆனால் தன் வாழ்க்கையில் மட்டும் மாறுதலே இல்லை போல் அவனுக்குப்பட்டது. எல்லாரும் அவனை விட்டுவிட்டு எங்கேயோ சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு எல்லாம் எங்கு செல்ல வேண்டும். எப்படிச் செல்ல வேண்டும் என்று தெரிந்திருந்தது. அவனுக்கு மட்டும் தெரியவில்லை. மீனாவுக்கும் தெரியவில்லை. திருவிழாக் கோலாகலத்தில் எல்லாரும் உற்சாகத்தோடு அங்குமிங்கும் சென்றுகொண்டிருந்தனர். கந்தனும் மீனாவும் மட்டும் எங்கு போவது, எதைப் பார்ப்பது, எதை வாங்குவது, எப்படி வாங்குவது ஒன்றும் அறியாமல் தெருவோரம் தனித்து உட்கார்ந்திருந்தனர். அவனுக்கும் அவளுக்கும் இருந்ததெல்லாம் 'இன்று' மட்டுந்தான் 'நாளை' கூடப் பிடிபடவில்லை. ... ஷெனாய் நகரவாசிகள் தத்தம் வீடுகளுக்குள்ளேயே உலகம் முழுமையும் கண்டுகொண்டிருக்கும் நேரத்தில் அவர்கள் நடுவே, ஒரு வேற்று நாட்டவன்போல் கந்தன் நடந்து செல்கிறான். நடையில் வேகமோ நோக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. அவனைப் பொருத்தமட்டில் இன்னும் கொஞ்சம் நாட்கள்தாம். ஆனால் அவனுக்குப் பிறகும் அவர்கள் எல்லாம் இன்னும் பெரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு அவற்றில் வசிப்பார்கள் அவற்றில் இன்னும் பிரகாசமான விளக்குகள் எரியும். அவ்விளக்குகளின் ஒளியில் இன்னும் இன்னும் மகிழ்ச்சி நிறைந்த குழந்தைகள் விளையாடுவார்கள். கந்தன் சுற்றும்முற்றும் பார்த்தான்."[3] (ஜி. நாகராஜன், ஜி. நாகராஜன் ஆக்கங்கள், 'நாளை மற்றுமொரு நாளே', பக்.107-108.) காலச்சுழலுக்கேற்ப தன்னுடைய வாழ்க்கைமுறையை அமைத்துக் கொண்டாலொழிய, மனிதனால் முன்னேறிச் செல்ல இயலாது. நவீன உலகத்தின் அசுர வளர்ச்சியினால், பொருளாதார ரீதியாக சகமனிதர்களிடத்து பிரிவினை உண்டாக்கி, ஏற்றத்தாழ்வுகளை கற்பிக்கச் செய்கின்றன. இதற்கேற்றாற்போல் வாழப் பழகிக்கொள்ளவில்லை எனில், ஒவ்வொரு நாளுமே கடத்துவதற்கு சிரமமாகத்தான் இருக்கும் என்பதனை ஜி.என். தன் வாழ்ந்த வாழ்க்கையினுடாகவே விளக்கியிருக்கிறார். உறவுகள் இருந்தும் யாதுமற்ற வெளியில் தன்னந்தனியாக இருப்பதில் அலாதியான பிரியம்கொண்ட அவரின் வாழ்வே நாளை மற்றுமொரு நாளாகத்தான் இருந்திருக்கிறது. யதார்த்தமான மற்றும் உன்னதமான படைப்புகளைப் படைக்கும் படைப்பாளர்களுக்கே தமிழ்ச் சமூகத்தில் கவனம்பெறாத நிலையில் சாதாரண மனிதனைப்

(கந்தன்) பற்றிய அக்கறையின்மை குறித்து வியப்படையத் தேவையில்லை. அதிகாரம், பணம், செல்வாக்கு கொண்டிருப்பவர்கள்தான் சகலத்தையும் தீர்மானிக்க முடிகிறது. மற்ற அனைவரும் அவர்களைச் சார்ந்தே இருக்கவேண்டியதொரு நிர்பந்தத்தைதான் நவீனத்துவம் ஏற்படுத்தியிருக்கிறது. நிலையற்ற, யதார்த்தமான வாழ்வியலில், எந்தவித நோக்கமுமின்றி வாழும் மனிதனுக்கும் இவற்றிலிருந்து விலகி, விடுபட நினைக்கும் மனிதனுக்கும் சமூகத்தில் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை ஜி.நாகராஜன் இப்பிரதியினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

**நிறைவாக**

ஜி. நாகராஜனின் 'நாளை மற்றுமொரு நாளே' என்ற பிரதி, யதார்த்த வாழ்வியலை மீறிய தன்மையில், தன்னுடைய வாழ்க்கையை வாழ நினைக்கிறான் கந்தன். இதன் விளைவாக அவனுக்கு ஏற்படும் அரசியல், சமூக நெருக்கடிகளைதான் இப்பிரதி சுட்டிக்காட்டுகிறது. உலகப் போர்களும் நவீனயுக அசுரவளர்ச்சியும் மனித மனங்களுக்குள் பல்வித தாக்கத்தினை ஏற்படுத்தி, சிந்தனை ரீதியான மாற்றத்திற்கு தன்னை உட்படுத்திக்கொள்ள விளைகிறது. இத்தகைய சுழலை ஏற்றுக்கொள்ளாமல் விலகியிருப்பவர்களை, மறுக்கின்றவர்களை அந்நியமாக்கி தனிமைப்படுத்துகிறது. இதனால் ஒவ்வொரு நாட்களிலும் தொடர்ந்து இன்னல்களுக்கும் மனவிரக்திக்கும் ஆளாகி, கவனிப்பாற்று மரணமடைய நேர்கிறது என்பதைத்தான் மேற்கண்ட படைப்பின் வழி அறியலாகிறது.

# வாலியின் எழுத்தோவியம்

***முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம்***
தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர்
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***ஆய்வுச்சுருக்கம்***
*கவிஞர் வாலி நிறை வாழ்க்கை வாழ்ந்து மறைந்து விட்டார். அகவை 81 ஆண்டுகள் வாழ்ந்த அவர் படுக்கையில் வீழ்ந்த 4 நாள்களில் இவ்வுலக வாழ்வை நீக்கி எங்கோ பறந்து விட்டார். தனது மரச் சுரங்கத் தில் புட்டி வைத்திருந்த பல்லாயிரம் பாடல்களோடு சென்றுவிட்டார். கவிஞர் வாலி இன்னும் சில ஆண்டு கள் வாழ்ந்திருக்கலாம் என்ற ஆதங்கம் ஒரு புறம் இருந்தாலும் இத்தனை ஆண்டுகள் வாழ்ந்ததே பெரிய சாதனை.அவரைதொலைக்காட்சியில்பார்த்தவர்களுக்குஅவரதுதோற்றத்தில்முதுமைகாணப்படவில்லை. அவரது நகைச் சுவைப் பேச்சில் தடுமாற்றம் இல்லை. குரல் முன்னர் போல் கணீரென்று இருந்தது. வாலி பக்தி, நட்பு, காதல், தத்துவம் என பலவிதமான பாடல்கள் எழுதி இருக்கிறார். எழுத்தின் மீது இருந்த காதல் போல் சித்திரம் தீட்டுவதிலும் காதலோடு இருந்தார்.*

*உறவு என்றொரு சொல் இருந்தால்*
*பிரிவு என்றொரு பொருள் இருக்கும்*
*காதல் என்றொரு கதை இருந்தால்*
*கனவு என்றொரு முடிவு இருக்கும்.*

*பிரிவு காலங்கள் சில ஆன பின்னே காயங்கள், வடுக்களை காலகாலத்திற்கும் காயங்களாக மாறி நம்மை வதம் செய்யும். அதற்கு பெயர்தான் பிரிவு. பிரிவின் வலி வலியது கொடியது. பிரிவு ஓர் பங்கமா? அல்லது வாழ்வின் ஒரு அங்கமா? பிரிவுத் துயரை பாடலாக வடித்து நெஞ்சை பிழிய வைத்திருக்கும் இந்த நேசமிகு கவிஞன் யார்? அவர் தான் கவிஞன் வாலி.*

***திறவுச் சொற்கள்:*** *நுழையும் முன், அரசியல் மற்றும் சமுதாயம், விமர்சகர்களை வென்றவன், கண்ணதாசன், வாலி, வைரமுத்து வேறுபாடுகள், நிறைவாக*

## நுழையும் முன்

### சத்தான தமிழில் முக்காலும் முத்தான கவிதை பாடிய கவிஞர் வாலி

மகாகவி பாரதி தனது 39 ஆவது அகவையில் இயற்கை எய்தினார். இருந்தும் மிகக் குறைந்த வாழ்நாளில் பாரதி வான் புகழ் கவிதைகள் படைத்தார். அவர் பதித்த சுவடுகள் காலத்தால் அழியாதவை. புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத் தமிழ்மொழியைப் புகழி லேற்றும் கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும் வசை அவராற் கழிந்தது என்று அவரே சொன்னார். பாரதியாரின் பாஞ்சாலி சபதம் தாகூரின் கீதாஞ்சலியைக் காட்டிலும் உயர்ந்தது. தனக்குப் பின் தமிழ்க் கவிதைத் தளத்தில் ஒரு நீண்ட பரம்பரையைத் தோற்றுவித்தவர் பாரதியார்.

“நான் நிரந்தரமானவன், அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லைசுசு என்று சுளுரைத்த கவியரசர் கண்ணதாசன் வாழ்ந்த காலம் வெறுமனே 55 ஆண்டுகள்தான். ஆனால் வாழும் காலத்தில் கவிதை உலகில் அரியணை போட்டு அதில் உட்கார்ந்து கொண்டு ஒக்காரும் மிக்காரும் இல்லாத கவிஞனாக ஆட்சி செய்தவன். ஆறாயிரம் பாடல்கள், நாவல்கள், திரைப்பட உரையாடல்கள், கதை, காவியம், கட்டுரைகள் என எழுதிக் குவித்து விட்டுத்தான் மறைந்தார். அப்படிப் பார்க்கும் போது கவிஞர் வாலி கொடுத்து வைத்தவர்! எண்பத்தொரு ஆண்டு நிறை வாழ்க்கை வாழ்ந்தார். படுக்கையில் நாலு நாள்தான் படுத்தார்.

பாரதியால் தமிழ் உயர்ந்ததும் தமிழால் பாரதி உயர்ந்ததும் நாம் அறிந்ததே. கவிஞர் வாலியால்

தமிழ் உயர்ந்தது. தமிழால் வாலி உயர்ந்தார். எதுகை, மோனை, கற்பனை எதற்கும் பஞ்சம் இல்லாத கவிஞர் வாலி. திரைப்படப் பாடல்களை எழுதும் போது இசையமைப்பாளருக்கு ஒரு பல்லவிக்கு நான்கு பல்லவி எழுதிக் கொடுப்பார். அதே போல் ஒரு சரணத்துக்கு நான்கு சரணம் எழுதிக் கொடுப்பார். படித்தது என்னமோ எஸ்எல்சி வரையும்தான். ஆனால் படைத்ததோ எண்ணில் அடங்காதவை. பெற்ற விருதுகளோ கணக்கில் அடங்காதவை.

இந்திய அரசின் பத்மஸ்ரீ (2007) விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது. எங்கள் தங்கம், இவர்கள் வித்தியாசமானவர்கள், வருடம் பதினாறு, அபுர்வ சகோதரர்கள், கேளடி கண்மணி, தசாவதாரம் படங்களுக்கு பாடல்கள் எழுதியதற்காக தமிழக அரசினால் சிறந்த பாடல் ஆசிரியருக்கான விருது ஐந்து முறை வழங்கப்பட்டது. பாரதி விருது, முரசொலி அறக்கட்டளை விருது இப்படி ஏராளமான விருதுகள். 1973 இல், பாரத விலாஸ் படத்தில் இடம்பெற்ற "இந்திய நாடு என் வீடு இந்தியன் என்பது என் பேரு' என்ற பாடல் வரிகளுக்காக, தேசிய விருது கிடைத்தது. ஆனால், வாலி விருதை ஏற்க மறுத்து விட்டார்.

கவிஞர் வாலியின் முதல் பாடல் பின்னணிப் பாடகர் சவுந்தரராசன் பாடி பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த பக்திப் பாடல். அந்தப் பாடல் அவரை பாராட்டு மழையில் நனைய வைத்தது.

**"கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்**
**கந்தனே உன்னை மறவேன்**
**அற்புதமாகிய அருட்பெருஞ் சுடரே''**

இந்த முதல் பாடலிலேயே கவிஞர் வாலியின் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது. அவரது இந்தக் கவித்துவம் கடைசிவரை அவருக்கு வசப்பட்டது.

கவிஞர் வாலியை கவியரசு கண்ணதாசனுக்கு அறிமுகம் செய்து வைத்த போது தனக்குப் போட்டியாக வரக் கூடிய ஒரே கவிஞன் என கண்ணதாசன் மற்றவர்களிடம் சொன்னார். கவியரசு கண்ணதாசனின் கவிதைகளின் தாக்கம் வாலியிடம் காணப்பட்டது. இதனால் வாலி எழுதிய சில பாடல்கள் கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடல் எனப் பலர் நினைத்தார்கள்.

**அரசியல் மற்றும் சமுதாயம்**

- மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்
- புதிய வானம், புதிய புமி எங்கும் பனிமழை பொழிகிறது
- நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே
- ஏமாற்றாதே ஏமாறாதே
- நான் ஆணையிட்டால்

போன்ற அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பாடல்களை எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எழுதி தமிழகத்தை மலைக்க வைத்தவர் கவிஞர் வாலி. இலக்கியக் கற்பனைகளில் புதுமையைப் புகுத்தியவர்.

"மதுரையில் பறந்த மீன்கொடியை உன் கண்களில் கண்டேனே. போரில் புதுமைகள் புரிந்த சேரனின் வில்லை, உன் புருவத்தில் கண்டேனே. தஞ்சையில் பறந்த புலிக்கொடியை, உன் பெண்மையில் கண்டேனே. இவை மூன்றும் சேர்ந்து தோன்றும் உன்னை தமிழகம் என்பேனே" என பெண்ணை, தமிழகத்தோடு ஒப்பிட்டு எழுதியவர்.

"இதோ எந்தன் தெய்வம் முன்னாலே, நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே," என்று எல்லோருக்கும் புரியும் வகையில் எண்ணங்களைத் தெளிவுபடுத்தியவர்.

பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வைரமுத்து, வாலி போன்ற கவிஞர்கள் தங்கள் கவிதைப் புக்களால் அன்னைத் தமிழுக்கு அழகும் பொருளும் இனிமையும் சுவையும் சேர்த்து அவளை அழகு படுத்தியுள்ளனர். இது நாம் செய்த புண்ணியம்.

"பு முகத்து புன்னகையே இனி யார் முகத்தில் பார்ப்போம்! புது நடையில் சொற்பொழிவை யாரிடத்தில் கேட்போம்! நடை துள்ளும் தமிழுக்கு பகை வந்தால், அங்கே உடைவாளை எடுக்கின்ற பெரும் வீரர் எங்கே? இமை மூடிக் கொண்டாய்! புதை குழியில் மெல்ல தமிழே உன் தலையெழுத்தை நான் என்ன சொல்ல?" இது அறிஞர் அண்ணாத்துரை இறந்த போது கவிஞர் வாலி எழுதிய இரங்கல் கவிதை.

கவிஞர் வாலிக்காக எழுதப்பட்ட முற்றிலும் புதிதான எழுத்தோவியங்கள் கொண்ட சிறப்பு மலர்.. காலத்தை வெல்லும் கவிஞனின் வரிகள்..

தமிழகத்தின் கரையோரங்களிலும்.. ஈழத்தின் கரையோரங்களிலும் மீனவர்களுடன் பழகும்

வாய்ப்புக் கிடைத்தவர்களுக்கு வாலியின் பெருமை புரியும்.

**"தரை மேல் பிறக்க வைத்தான் - எங்களை**
**தண்ணீரில் மிதக்க வைத்தான்**
**கரை மேல் இருக்க வைத்தான் - பெண்களை**
**கண்ணீரில் குளிக்க வைத்தான்.."**

என்ற பாடலே தேசிய கீதமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்.. இந்திய சுதந்திர கீதத்தை எழுதிய ரவீந்திரநாத் தாகூரின் வரிகளை சுதந்திரதினத்தில் கடமைக்கு பாடுகிறார்கள் ஆனால் வாலி எழுதிய இந்தப் பாட்டையோ மீனவர்கள் அல்லும் பகலும் பாடுகிறார்கள் இதுதான் கவிதையின் வெற்றி, மீனவர் தேசிய கீதம்.

**இது மட்டுமா..**
**"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் - அது**
**முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்**
**உள்ளம் என்றொரு ஊரிருக்கும் - அந்த**
**ஊருக்குள் எனக்கொரு பேரிருக்கும்."**

எம்.ஜி.ஆர் என்ற மூன்றெழுத்தில் அவருடைய மூச்சிருந்தது, அவர் இறந்துவிட்டார் ஆனால் இன்றும் அவரைப் பற்றிய பேச்சிருக்கிறது, ஒவ்வொரு ரசிகனின் உள்ளமும் ஊர் போன்றது, அதில் புரட்சித் தலைவருக்கு ஒரு நல்ல பேர் இருக்கும், இதைவிட வேறென்ன யதார்த்தாம் வேண்டும்.

**"பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்**
**அறிவுட்டும் தந்தை நல் வழிகாட்டும் தலைவன்**
**துணையாகக் கொண்டு நீ நடைபோடு இன்று**
**உருவாகும் நல்ல எதிர்காலம் ஒன்று.."**

இந்த வரிகள் காலத்தை வென்ற வரிகள் அல்லவா..? இப்படி எழுதிக்கொண்டே போகலாம் அவன் சாகா வரிகளை. "வாலி வாழ்க உன் புகழ் வாழ்க"

**விமர்சகர்களை வென்றவன்**

கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதம் எழுதினார்பதிலடியாகவாலி "அர்த்தமுள்ள இந்து மதம் என்ன சொன்னது அது அவரவர் வழமைகளை வகுத்துத்தந்தது" என்ற சினிமாப் பாடலை எழுதி தன் பாணியில் அதற்குப் பதில் சொன்னார்.

**கட்டியவள் கொடுத்ததெல்லாம் வாய்க்கு ருசி - அதற்கு**
**கையளவு நீ போட்டாய் வாய்க்கரிசி**

என்று அதே பாடலில் எழுதி பலதார மணமுடித்த கண்ணதாசனுக்கும் அவர் எழுதிய அர்த்தமுள்ள இந்து மதத்திற்கு விமர்சனத்தை முன் வைத்தார் வாலி. அதே வாலி திரைப்பட இயக்குநர் ஷசங்கருடன் இணைந்து வேலை செய்தபோது இயற்றிய ஒரு பாடல் அவருக்கு பெரிய அவமானத்தை ஏற்படுத்தியது.

**"சக்கரை வள்ளிக்கிழங்கு சமைந்தது எப்போது"**

என்ற அருவருக்கத் தக்க வரியை வாலி எழுதிவிட்டார் என்று விமர்சகர்கள் களமிறங்கினார்கள். வாலி போல தமக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று காத்திருந்த பலர் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். அன்று இராமாயண இராமன் வாலி மீது மறைந்திருந்து அம்பு விட்டது போல விட்டார்கள். வாலியைக் கண்டித்து தனியாக புத்தகம் ஒன்றே வெளி வருமளவுக்கு நிலமை மோசமாக இருந்தது. அப்போது கல்லறைக்கு போன வாலி அவர்களுக்குச் சென்னது நான் சில நேரம் சில்லறைக்கும் பாட்டெழுதுகிறேன் பொறுத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய குற்றத்தை அவர் பணிவோடு ஏற்று தனது வாழ்வின் யதார்த்தத்தைப் பேசினார், தவறு உண்மை ஆனால் விமர்சித்த சில்லறைகளை அவருடைய 'சில்லறை' என்ற சொல் சில்லறைகள் ஆக்கியது. இருந்தாலும் அவர் ஏன் அப்படி ஒரு பாட்டை எழுத வேண்டும், வாலி மரணித்ததும் இயக்குநர் ஷசங்கர் மனம் பொறுக்க முடியாமல் அந்த உண்மையைச் சொன்னார்.

இயக்குநரின் விருப்பத்தின் உச்சம்வரை நான் எழுதுவேன் என்று எழுதிய கவிஞர் வாலி என்று நேற்று தெரிவித்துள்ளார். ஆம்.. 'சக்கரை வள்ளிக்கிழங்கு சமைந்தது எப்போது' என்ற வரியைக் கொடுத்து, இந்த வரியை வைத்து பாடலைத் தாருங்கள் என்று வாலியிடம் சொன்னவர் சங்கர்தான். இயக்குநரின் திருப்திக்காகவும், சில்லறைக்காகவும் எழுதப்பட்ட பாடல் அது.

எப்போதுமே பாடல் என்பது சரியாகத்தான் வரவேண்டும் என்ற அவசியம் இல்லை பின்னணிச் சுழலால் அது தவறாகவும் வரலாம்.. சுழலைப் புரிந்து பார்த்தால் தவறான பாடலையும் ரசிக்க முடியும்..!!

**இதிலிருந்து நாம் அறிவது என்ன..?**

**தவறை ஒப்புக்கொண்டு திருந்துவதே கவிஞனுக்கு அழகு..**

“இதுபோன்ற வரிகளை கவிஞர்களிடம் கொடுத்து அவர்களை சங்கடத்தில் மாட்டக்கூடாது என்ற தெளிவை பல இயக்குநர்களுக்கு தந்ததே அதன் சிறப்பு.. அதேவேளை கவிஞர்கள் சில்லறைக்காக விலை போகக் கூடாது..’ என்பதும் இன்னொரு செய்தியாகும்..

**தவறு செய்தவன் திருந்தியாகணும்..! தப்பு செய்தவன் வருந்தியாகணும்! வாலி**

**கண்ணதாசன் - வாலி - வைரமுத்து வேறுபாடுகள்**

- கண்ணதாசனும், வைரமுத்துவையும் வாலியுடன் ஒப்பிட்டால் இருவரும் விட்ட தவறுகளில் இருந்து புதுமை பெற்றவர் வாலி என்பதைப் புரிந்து கொள்ளலாம்.
- வாலி எந்தவொரு இசையமைப்பாளருடனும் ஈகோ கொண்டு முரண்பட்டு வெளியேறிய ஒருவரல்ல.
- வைரமுத்தால் தனது நண்பன் இளையராஜாவுடன் தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை நான் ஒரு திசையில் போகிறேன் இளையராஜா ஒரு திசையில் போகிறார் இருவரும் சந்திக்க முடியாத இரு துருவங்கள் என்று கூறினார் வைரமுத்து.
- சின்னதம்பி படம் முதற்கொண்டு இளையராஜா படைத்த எத்தனையோ சாகாவரம் பெற்ற பாடல்களை எல்லாம் இழந்துபோனார் வைரமுத்து.
- அதுபோல கண்ணதாசனால் இளையராஜாவுடன் வேலை செய்ய முடியவில்லை, அதைவிட முக்கியம் கண்ணதாசன் காங்கிரசில் சேர்ந்து அரசியல் செய்து தன் மீது சாக்கடை அரசியல் சாயம் புசிக்கொண்டதுதான்.
- ஆனால் வாலி எம்.ஜி.ஆரிடம் ஒன்றை தெளிவாக சொன்னார், ‘உங்களுக்கு பாட்டு எழுதுகிறேன் அதற்காக அ.தி.மு.கவில் சேர மாட்டேன்’ என்று சொன்னார்.
- கலைஞர் மு.கருணாநிதியுடன் 40 வருடங்களாக உறவாக இருந்தாலும் ‘தி.மு.கவின் பிரச்சார மேடைகளுக்கு வரமாட்டேன்..’ என்றார் இப்படி அரசியலில் சிக்குப்பட்டு பகை வளர்க்காதவர் வாலி.

இன்றைய சுண்டங்காய் இசையமைப்பாளர் முதல் பெரும் பெரும் ஜாம்பவான்கள் வரை இணைந்து பணியாற்றினார், ஈகோ இல்லாமல் எல்லோரையும் வென்று வாழ்ந்தார். ஆக.. கலைஞர்கள் வீண் அரசியலில் ஈடுபடக்கூடாது, தம்மீது அரசியல் சாயம் புசக்கூடாது, ஈகோ கொண்டு பகை வளர்க்கக் கூடாது என்பதுதான். ஏ.ஆர். ரகுமானுக்கும், இளையராஜாவுக்கும் ஒரே நேரத்தில் பாட்டெழுதியதே அவருடைய சிறப்பாகும். வாலியின் கவிதைகள் உலகம் உள்ளவரை வாழும் என்று பாராட்டுக்களில் உச்சக்கட்டமாகும்.

**“ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் குளிரில்லை – அவள் கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன் மலரில் ஒளியில்லை..”**

உலகம் உள்ளவரை இந்த வரிகளுக்கு ஏது அழிவு.. ஆக, இதிலிருந்து நாம் அறிவது என்ன..?

படைப்பாளிகள் ஒவ்வொருவரும் காலத்தை வென்று வாழும் படைப்புக்களைத் தருவதற்குப் போராட வேண்டும் என்பதேயாகும்.

வாலியிடம் இளம் மாணவர்கள் கற்க வேண்டிய பாடம் என்ன..?

கவிஞர் வாலியுடன் சமகாலத்தில் திரையிசைப் பாடல்களை எழுதிய வைரமுத்து, வாலி பற்றிக்கூறும்போது இட்டு நிரப்ப முடியாத இழப்பு என்று தெரிவித்தார். கண்ணதாசன் என்ற மாபெரும் திரையிசைக் கவிஞனின் பக்கத்திலேயே நடந்தவர், நான்கு தலைமுறைகளுக்கு பாட்டெழுதியவர். அவருடைய உடலை ஐம்புதங்கள் பிரித்தாலும் அவர் தமிழ் மரணம் எட்டித்தொட முடியாத இடத்தில் இருக்கிறது.

வைரமுத்து பற்றி வாலி சொன்னதையும் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும். வாலிக்கு பாராட்டு விழா நடைபெற்றபோது வைரமுத்து அவருக்கு ஒரு மோதிரத்தை அணிவித்தார். மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட வாலி எல்லோரும் ‘வைரமுத்துவும் நானும் மோதுறம்’ என்று கூறுகிறார்கள் அது தவறு என்பதற்கு வைரமுத்து

அணிவித்த மோதிரமே சான்று என்று தனது அடுக்கு மொழியால் எடுத்துச் சொன்னார்.

சிவகுமார் கூறும்போது வாலி தனக்கு முன்னர் ஓவியக் கல்லூரியில் படித்தவர் என்றும், இரண்டு ஆண்டுகளில் அங்கிருந்து வெளியேறிவிட்டார் என்றும் தான் ஆறு வருடங்கள் படித்ததாகவும் சொன்னார். ஓவியனாக படித்த சிவகுமார் படித்த தொழிலை செய்ய முடியாது ஓவியக்கலையை சினிமா கலையாக மாற்றி நடிப்புத் துறையில் வெற்றி பெற்றார். பழைய ஓவியர் மாலி போல வரவேண்டுமென்று தன் பெயரை வாலியென்று மாற்றிய இவரோ ஓவியராக முடியாமல் சினிமாவில் கவிதை ஓவியங்களைத் தந்தார்.

நாம் எதாவது ஒரு கலையை மனம் விரும்பிப் படித்தால் அந்தத் துறையைவிட இன்னொரு துறையில் பரிமளிக்குமளவுக்கு அது நமக்கு உதவும் என்பதற்கு சிவகுமாரும், வாலியுமே சான்றாகும்.

### நிறைவாக

கலை என்பது மின்சாரம் போன்றது, அதை வைத்து எந்த இயந்திரத்தையும் இயக்கி வெற்றி பெறலாம் என்ற இரகசியம் தெரிய வேண்டும் என்பதாகும். அது போல் ஒரு கவிஞனைப் பற்றி கூறும் போது அவன் என்ன சாதித்தான்? என்பதை விட என்னென்ன சாதித்தான் என்பதைப் பார்க்க வேண்டும் என்பதே ஒரு ஆழமான கருத்தாகும். கவிதைகளைப் பாடும் கவிஞர்களின் படைப்புக்கள் கவிதைத் தொகுப்பாக படிக்கப்படும் போது தான் அழியாப் புகழடையும். அந்தப் பாடல்கள் தொடர்ந்து பட்டி தொட்டி எல்லாம் ஒலிக்கும் போது படிப்பறியா பாமரர் இதயங்களில் பட்டு பிரதிபலிக்கும் போது தான் மந்திர ஒலியாக மாறிப் பலம் கொடுக்கும்.

### துணைநின்ற நூல்கள்

1. வாலியும் வாழ்க்கையும் - வாலி பதிப்பகம் (2016 வெளியீடுகள்)
2. கவிஞானியும் கலைஞானியும் - வாலி பதிப்பகம் (2016 வெளியீடுகள்)
3. நினைவு நாடாக்கள் - விகடன் பிரசுரம்

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கல்வி

***முனைவர் உ. கருப்பத்தேவன்***
உதவிப்பேராசிரியர் (ம) தலைவர் (பொ)
இலக்கியத்திறனாய்வியல் துறை, தமிழியற்புலம்
மதுரை காமராாசர் பல்கலைக்கழகம், மதுரை

***ச. சங்கர லெட்சுமி***
முழுநேரமுனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியற்புலம்
மதுரை காமராாசர் பல்கலைக்கழகம், மதுரை

## முன்னுரை

மனித இனமானது பண்பாட்டையும், மரபுகளையும் கல்வி தன் வாயிலாக அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்கிறது. மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வி மிகவும் அவசியமானது. கல்வி ஒன்று மட்டும் தான் பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதனோடு காலத்திற்கும் வரக்கூடியது. தமிழர்கள் 3000 ஆண்டுகளுக்கு முன்பே ஒப்பற்ற இலக்கண இலக்கியங்கள், காப்பியங்கள் படைக்கும் அளவிற்கு கல்வியறிவில் சிறந்து விளங்கினர். தனது மேம்பட்ட நுண்ணறிவு மற்றும் சித்தரிக்கும் கற்கும் திறனின் காரணமாக ஏனைய உயிரிகளை விட மனிதன் உயர்வாகக் காணப்படுகின்றான். ஒரு தனி மனிதனின் பன்முக வளர்ச்சிக்கும் சமூகத்தின் பன்முக வளர்ச்சிக்கும் வழி வகுத்துக் காட்டுவது கல்வி. இத்தகைய கல்வியின் சிறப்பை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வழி கூறப்படுகின்றது. திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நூலாயினும், இன்றும் அதன் கருத்துகள் நம் நடைமுறை வாழ்க்கையில் பயன்படும்படியாகவும், உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக விளங்குகிறது. இந்நூலுக்கு எந்த ஒரு நூலையும் இணையாகச் சொல்ல இயலாத வகையில் அனைத்து வகையான சிந்தனைகளையும் ஒருங்கே கொண்டதாக விளங்குகிறது.

## கல்வி என்பதன் பொருள்

கல்வி என்னும் சொல்லுக்கு 'கல்லுதல்', 'தோண்டுதல்' என்றும் 'உயர்த்துதல்', 'மேன்மையாக்கல்'[1], என்னும் பொருளில் கூறப்படுவதால் மனிதனிடம் புதைந்து கிடைக்கும் ஆற்றலையும், திறனையும், வெளிகொணர்ந்து மலர்ந்திடச் செய்யும் செயலே கல்வி, இக்கல்வி காலத்திற்கேற்ப சங்க காலம் முதல் இன்று வரை பல மாற்றங்களை பெற்றும் வளர்ந்தும் வருவதைக் காணலாம்.

## கல்வி குறித்த அறிஞர்களின் வரையறை

உலகிலுள்ள படைப்புகளிலேயே மனிதன் தனித்தன்மை மிக்க ஓர் அறிவார்ந்த உயிரியாகும். நுண்ணறிவு மற்றும் ஆற்றலைப் பயன்படுத்தி தான் இருக்கும். சுற்றுச் சூழலையும், இக்கட்டான நிலைமையையும் சமாளிக்கும் திறன் கல்வி கற்ற ஒருவனாலேயே சரியாக அமைத்துக் கொள்ள முடியும் என்றும், 'இவ்வுலக மாயைகளின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கக் கூடிய இறுதி உண்மைகளை, மனம் கண்டறிய உதவுவதே கல்வியாகும்'[2] என்பது இரவீந்திரநாத் தாகூரின் கூற்றாகும். மேலும் சுவாமி விவேகானந்தர், 'கல்வி என்பது மனிதனிடம் இயற்கையாக உறைந்துள்ள தெய்வீகமான முழுமை தன்மையை வெளிப்படுத்துவதாகும்"[3] என்கிறார். மேலும், கல்வியைப் பற்றியும், அதன் தேவையைப் பற்றியும், கல்வியின் சிறப்பையும் பேசாத அறிஞர்கள் இல்லையென்றே கூறலாம். ஒரு சமூகத்தின் அடிப்படை வளர்ச்சிக்குக் கல்வியே மூலக் காரணமாகும். 'கல்வி என்று சொல்லப்படுவது வாழ்க்கையோடு தொடர்புடையதாகவும் நாட்டுக்கும், ஆன்மாவுக்கும் நன்மை பயப்பதாகவும் இருக்க வேண்டும். கல்வி

மாணவரின் மனதில் ஆன்மீகப் பண்புகளையும் சமூக அறநெறிப்பண்புகளையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும்"[4] என்கிறார் அரவிந்தர்.

**கல்விக்கோட்பாடு**

கல்வி என்பதற்கான கோட்பாட்டை மேலைநாட்டு அறிஞரான ஜான் லாக், "செடிகள் வளர நிலத்தைப் பண்படுத்துவது போல, மனிதர்களைப் பண்படுத்தப் பயன்படுவதே கல்வி"[5], (Plants were developed by cultivation and men by education) என்கிறார். ஒவ்வொரு மனிதனிடமும் நிறைந்திருக்கும் ஆற்றல்களை இயல்பான, திறமைகளை வெளிக்கொண்டுவருவதே கல்வியின் இன்றியமையாமையாகும் என்பது புலனாகும்.

**கல்விச் செல்வம்**

ஒருவனிடத்தில் பொன்னும் மணியும் பொருளும் எவ்வளவு இருந்தாலும் அவை ஒருநாள் அழிந்தே போகும். ஒருவனுக்கு அழிவில்லாத செல்வமாகக் கருதப்படுவது கல்வி ஒன்றுதான் என வள்ளுவரும்,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றவை யவை"[6] (குறள் 400)**

தன் மகனைக் கல்வி கேள்விகளில் சிறந்தவன் என சான்றோர்கள் கூறக்கேட்கும் தாய், அவனை ஈன்ற பொழுதிலும் மிக்க மகிழ்ச்சி அடைவாள், இதனை,

**"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"[7] (குறள் 69)**

மேலும், சமூதாயத்தில் பெற்றோர்களைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்வது குழந்தைகளின் கல்வியறிவு, கல்வியறிவில்லாதவர்களின் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளின் இழிதொழில்களை எண்ணிக் கவலை கொள்வர் என்றும்,

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையகத்து**
**முந்தி இருப்பச் செயல்"[8] (குறள் 67)**

பண்டையக் காலத்திலேயே இதனை உணர்ந்த சான்றோர்,

**"சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"[9]**
**(புறம் 312)**

என்று பொன்முடியார் கூறியுள்ளார். மேலும் காரியாசானும், கல்வி என்ற செல்வத்தைப் பெற்றுவிட்டால் மற்ற செல்வங்களான பொன்னும், பொருளும் தானாகவே கிட்டும் என்பதில் ஐயமில்லை என்பதனை,

**"பொன்பெறும், கற்றான், பொருள்பெறும்,**
**நற்கவி"[10] சிறுபஞ்ச (54)**

என சிறுபஞ்சமூலம் கூறுகின்றது. ஒரு சமுதாயத்தில் முழுமையான மனிதராக வாழ வேறு செல்வங்களைக் காட்டிலும் கல்விச் செல்வமே இன்றியமையாதது எனலாம்.

**பிறவிப்பயனும் கல்வியும்**

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை ஆற்றக்கூடிய நல்ல செயல்களால்தான் பிற உயிரினங்களிலிருந்து, வேறுபட்டு காணப்படுகிறான், முக்தி அடைகிறான் என்றும் இதனையே வள்ளுவரும் மனிதன் இறந்த பின்பு மீண்டும் மறுபிறவி எடுப்பதாகவும், ஏழு பிறவிக்கும் தான் கற்ற கல்வி நன்மைபயக்கும் என்கிறார்,

**"அறிவுஅற்றம் காக்கும் கருவி"[11] (குறள் 421)**
**"கல்லார் பிணிக்கும் கடுங்கோல் அது**
**வல்லது"[12] (குறள் 570)**
**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"[13] (குறள் 398)**

எனக் கூறுவது கல்வி இப்பிறப்பில்மட்டுமின்றி ஏழு பிறவிக்கும் பயன்தரும் என்பதனை கீழே வரும் நாலடியார் பாடலும் விளக்குகிறது.

**"இம்மை பயக்குமால் ஈயக்குறை வின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து"[14]**
**(நாலடியார் 132)**

என்ற பாடலில் கல்வியானது இம்மை, மறுமை ஆகிய இரண்டிற்கும் பயன்தரும் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதாலும் குறைவடைவதில்லை. மயக்கத்தைப் போக்கும் அருமையான மருந்து கல்வியே. தேவர் உலகத்திலும் காணமுடியாத அரிய மருந்து கல்வியே என்பதனை சமணமுனிவர்கள் அறிந்திருந்தனர். ஒருவன் சமுதாயத்திலுள்ளோர் அனைவரும் போற்றும்படி வாழ வேண்டுமாயின் கல்வி இன்றியமையாதது. மேலும், தலைமுடியை சீர்படுத்தவதால் பெறும் அழகோ, முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் புசுவதால் கிடைக்கும் அழகோ அழகல்ல, நடுநிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே

மிகவுயர்ந்த உண்மையான அழகு என்பதனை,

***"குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்***
***மஞ்சள் அழகும், அழகல்ல நெஞ்சத்து***
***நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்***
***கல்வி அழகே அழகு".[15] (நாலடி 131)***

பழங்காலத்தில் சிறந்த ஆளுமையைக் கொண்டிருந்த அரசனே மக்கள் அனைவருக்கும் உயிராக வாழ்ந்து வந்தார், இதனையே,

***"நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று***
***மன்னர் உயிர்த்தே மலர்தனை உலகத்து"[16]***
***(புறம் 186 : 1-2)***

என புறநானூறு சுட்டுகின்றது. அரசர்களுக்கான நல்லாலோசனையை வழங்குவதற்கு அமைச்சர்கள் இருந்தனர். அவர்களும் பலதுறை அறிவுமிக்கவராகவும், கல்வியறிவு உள்ளவராகவும் இருத்தல் அவசியம். இன்றும் கூட சமுதாயத்தில் ஒருவர் உயர்பதவி பெற வேண்டுமானால் கல்வியறிவு இருந்தால் மட்டுமே வாழ்வில் உயர முடியும்.

**கல்வியும் மகிழ்ச்சியும்**

கல்வியறிவில்லா ஒருவன் பலர் முன்னிலையில் எதையும் சிந்தித்துப் பார்த்து உரையாட மாட்டான். ஆனால் கற்றறிந்தவர் எப்போதும் அனைவரும் மகிழும்படி மற்றவர்களுடன் கூடிப் பழகி நற்கருத்துக்களை எடுத்துரைப்பர். தங்கள் கருத்துக்கள் பிறர் நினைத்துப் பார்க்கும் வகையில் கூறிப்பிரிவர். இதனை

***"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்***
***அனைத்தே புலவர் தொழில்"[17] (குறள் 394)***

எனும் குறட்பாவால் அறியலாம். மேலும் கல்வியறிவுடைய சான்றோர்கள் கலந்து உரையாடும் போது மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். கேடில்லாத பழைய கல்வி ஞானம் உடையவர்கள் தம்முள் மாறுபாடில்லாமல் அறிவுக்கூர்மையால் கூடியிருந்து மகிழும் மகிழ்ச்சி இனியது. அவ்வாறு கூடி மகிழ்வது வானத்திலிருக்கும் தேவலோகத்தை விட இனிதாக இருக்கும் கல்வியினால் மகிழும் மகிழ்ச்சிக்கு ஈடு இணையாக தெய்வலோகத்திலும் இல்லை யென்பதனை,

***"தவல் அருந் தொல் கேள்வி தன்மை யுடையார்***
***இகல் இலர் எகுடையார் தம்முள் குழீஇ***
***நகலின் இனிதாயிற் காண்போம் அகல்வானத்து***
***உம்பர் உறைவார் பதி"[18] (நாலடி 137)***

என்று நாலடியார் கூறுகின்றது.

**முன்னறிவும் கல்வியும்**

ஒவ்வொரு மக்களும் தங்களது வாழ்வில் பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றனர். மேலும் பல தடைகளையும் கடந்து வாழ்ந்து வருகின்றனர். அத்தடைகளை முன்கூட்டியே அறிந்துகொண்டு அவற்றை நிவர்த்தி செய்து, செயல்பட்டால் தான் வாழ்வை நன்முறையில் அமைத்துக் கொள்ள முடியும். கல்வியானது மக்களை இக்கட்டான சூழலின் பின்வரும் விளைவுகளை முன்பே அறிந்து தனக்கு ஏற்படும் பிரச்சனைகளிலிருந்து விடுபட செய்கின்றது. இதனை,

***"அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்***
***அதறி கல்லா தவர்"[19] (குறள் 427)***

எனும் குறட்பாவில் மக்களை அறிவு வழியில் செல்லவும், கல்லாதவர் முன்னறிவில்லாதவர் என்பது வலியுறுத்துகின்றது. கற்றவரின் சிறப்பினை ஆசாரக்கோவை சுட்டிக்காட்டுமிடத்துபெறுவதற்கு அரிய நூற்கேள்விகளை நன்கு உணர்ந்தவர் தவறியும் பலர் கூடியிருக்கும் அவையில் ஒருவரையும் தூற்ற மாட்டார்கள். ஏனெனில் இகழ்வதால் உண்டாகும் இன்னல்களைக் கற்றறிந்தவர்கள் ஆராய்ந்து பார்த்துச் செயல்படுவதனால் பின் விளைவுகள் இன்றி வாழ்வில் முன்னேற முடியும் என்பதை,

***"பழியார் இழியார் பலருள் உறங்கார்***
***இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி***
***இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார் தள்ளியும்***
***தாங்களும் கேள்வி யவர்"[20]***
***(ஆசாரக்கோவை 50)***

என்பதன் மூலம் அறியலாம்.

**கல்வியும் நட்பும்**

ஒவ்வொருவர் வாழ்விலும் நட்பு என்பது மிக இன்றியமையாத இடத்திலுள்ளது. நட்பினைப் பற்றி சங்கப்பாடல்,

***"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்***
***நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"[21] (நற் 335)***

என்று நற்றினை நட்பிற்கு இலக்கணம் கூறுகிறது.

கல்வி கற்ற சான்றோரின் நட்பானது பிறருக்கு கெடுதல் இன்றி நிலைத்து நின்று பல நன்மைகளை

மட்டுமே உண்டாக்கும் என்பதனை ஐந்திணை எழுபதில்,

**"சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி வலியாகிப் பின்னும் பயக்கும் மெலிவில்"[22]**
***(ஐந்திணை. எழு 5)***

எனும் வரிகளில் அறியலாம். மேலும் வள்ளுவரும்,

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்"[23]** ***(குறள் 785)***

கூடிப் பேசிக் கலந்து பழகுதல் வேண்டாம் என்றும், இருவரும் ஒத்த அறிவுடன் உணர்ந்து பேசிப் பழகும் நட்பே நீடித்த உறவைத் தரும் என்னும் குறளின் மூலம் அறியலாம்.

### கல்லாதவர்களின் நட்பு

சமுதாயத்தில் கல்லாதவர்களுடைய நட்பினை யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் பல இடங்களில் நமக்கு துன்பம் தருவதாக அமைந்து விடும். இதனால் ஒருவர் நட்புறவு கொண்டு தன்னுடைய கருத்தைப் பரிமாறிக் கொள்ள கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது ஆகும். என்பதனை,

**"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும் கொள்ளார் அறிவுடை யார்"[24]**
***(குறள் 404)***

எனும் குறட்பா மூலம் கல்லாமையின் இழிவை வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார். தீயவர்களிடமும் கல்லதவர்களிடமும் நட்பு கொள்வது என்பது தீமையையும், துன்பத்தையும் தரும்' மக்களுடைய வாழ்வில் இருளை நீக்கி நல்லுணர்வைத் தருவது கல்வியே ஆகும். மேலும்,

**"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர் பொல்லாத தில்லை ஒருவற்கு - நல்லாய்"[25]**
***(பழமொழி 64)***

என முன்றுறையரையனாரும் கல்லதவரிடம் கொள்ளும் நட்பு கேட்புனைத் தரும் என்கிறார்.

### கல்லாதவர்களும் களர்நிலமும் விலங்கும்

கல்லாமைக்கு களர்நிலத்தை ஒப்புமை கூறும் வழக்கம் இலக்கியங்களில் வாயிலாகக் காணமுடிகிறது. களர்நிலம் உழவர்களுக்கு எவ்வித பயனையும் தருவதில்லை. பார்ப்பதற்கு நிலமாக காட்சிதந்தாலும் அதனால் எவ்வித பயனுமில்லை. அதுபோல கல்வியறிவில்லாதவர் மனிதராக இருந்தும் சமுதாயத்திற்கு எவ்வித பயனுமில்லை. களர்நிலம் ஒருவருக்கும் பயன்படாமல் இருப்பது போல கல்லாதவர் தன்னுடன் வாழ்ந்தாலும் சமூகத்திற்கு பயன்படமாட்டார் என்பதனை உணர்ந்த வள்ளுவரும்,

**"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக் களரனையர் கல்லா தவர்"[26]** ***(குறள் 406)***

எனும் குறட்பாவின் மூலம் கூறியுள்ளார்.

விலங்கிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவது சிந்தித்துச் செயல்படும் பகுத்தறிவாகும், அதைப் பெறவேண்டுமெனில் கல்வி இன்றியமையாதது. மனிதன் மனிதனாகச் சமுதாயத்தில் வாழச் செய்வது கல்வி, இந்தக் கல்வியறிவு இல்லாத மனிதன் சமுதாயத்தில் எவ்வகையான இழிசெயல்களையும் செய்யத் தயங்குவதில்லை. இந்த விலங்குச் செயல்களிலிருந்து மனிதனை நல்வழிப்படுத்துவது கல்வி, சமுதாயத்தில் கற்றவர்களே மக்கள் என்றும், கல்லாதவரின் செயல்கள் விலங்குகளுக்கு ஒப்பாக விளங்குவதை வள்ளுவரும்,

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்"[27]** ***(குறள் 410)***

எனும் குறள் மூலம் கல்லாமையின் இழிவைக் கூறுகின்றார். மேலும் கல்லாதவரின் நட்பினை கூறும் வள்ளுவர், போர்க்களத்தில் பயிற்சிபெறாத குதிரை களத்தில் தன்மீது அமர்ந்துள்ள வீரனை கீழே விழக் செய்து ஓடிவிடும். அதுபோல கல்லாதவரும் நமக்கு துன்பம் நேரும் போது ஆபத்தான காலங்களில் உடனின்றி நம்மை விட்டு ஓடிவிடுவர். அதுபோல கல்லாதவருடன் நட்பு கொள்வதை விட தனித் திருப்பதே மேலானதாகும் என்கிறார். இதனை,

**"அமரகத்(து) ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார் தமரின் தனிமை தலை"[28]** ***(குறள் 814)***

என்ற குறட்பா மூலம் கல்லாமைக்குப் பயிற்சியில்லாதக் குதிரையை உவமையாக்குகின்றார்.

### கல்லாதார் பின் செல்லல்

கற்றறிந்த சான்றோர்களாக இருந்தாலும் காலச் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளல் வேண்டும். மேலும் கற்றறிந்தவர் சமுதாயத்தில் செல்வந்தர்களிடம் நட்பு கொள்ளலாம், அரிய குணங்களையுடைய பெருமையுடையோரும்

தங்களுக்கு ஆகவேண்டிய காரியத்தின் சிறப்பினை முன்னிட்டு கல்லாதவர்கள் பின்னும் செல்லலாம். அவ்வாறு செல்லுதல் அறிவில்லாச் செயல் அன்று அது அறிவுடைய செயலேயாகும். இதனை,

**“கரும் வரிசையாற் கல்லாதார் பின்னும்**
**பெருமை யுடையாகுஞ் சேறல் - அருமரபின்**
**ஓதம் அரற்றும் ஒலிகடற் றண்சேர்ப்ப**
**பேதைமை யன்றி தறிவு”[29]** ***(நாலடி 249)***

எனும் பாடலின் மூலம் அறியலாம். மேலும் சமுதாயத்தில் கற்றவர்கள் போற்றப்படுவது போல் கல்லாதவரும் போற்றப்படவேண்டுமானால் அவர்கள் கற்றோர் முன் ஏதும் சொல்லாமல் இருக்க வேண்டும். கல்லாதவர்கள் சமுதாயத்திற்கு அர்த்தமற்ற கருத்துக்களைக் கூறுவதால் மற்றவர்களால் எள்ளல் பேச்சுக்கு ஆளாவார்கள். கற்றவர் அவையில் ஏதும் பேசாமல் இருக்கக் கூடுமாயின் கல்லாதவர்களும் மிக நல்லவர் என்பதனை வள்ளுவர் பின்வரும் குறளில் விளக்குகிறார்,

**“கல்லா தவரும் நனிநல்லார் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்”[30] *(குறள் 403)***

ஓர் அறிவு நூற்புலவர், அரசியலறிஞர், வாழ்வியற்கணக்கர், தமிழ்மக்களின் பழக்க வழக்கங்களாகிய ஒழுக்கமுறைகளான அகம், புறம் தழுவி அறம், பொருள், இன்பம் என முப்பாலாக்கி பண்பாட்டை நிலைநிறுத்தியவர் என்றால் மிகையாகாது. திருக்குறள் மட்டுமின்றி சங்க இலக்கியமும், அற இலக்கியங்களும் நமது வாழ்வியலுக்கான அறத்தை கூறுகிறது என்றால் மிகையாகாது.

**முடிவுரை**

தமிழரின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் உலகம் வியந்துரைக்கின்றது எனில் அதற்கு தமிழிலக்கியம் முதன்மைச்சான்றாகும். தமிழ் இலக்கியங்களிலுள்ள நீதிநூல்கள் அரிய கருத்துச் செல்வங்கள் நிறைந்தது எனப் பலராலும் பல நேரங்களில் எடுத்தாளப்படுகிறது. எளிய சொற்களில் இனிய முறையில் அமைந்து விளங்கும் சுவை நயமும் கொண்டு, கற்றவர் கல்லாதவர் என அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறச்சிந்தனைகளையும், கல்வி பல கற்று இனம், மதம், மொழி என்று பாராமல் அனைவரும் கற்று கல்லாதோர் ஒருவரும் இல்லையெனும் நிலைமாறி வாழ்வது நமது கடமையாகும்.

**பார்வை நூல்கள்**


1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்., சு.வே.சுப்பிரமணியன்., மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. திருக்குறள்., பரிமேலழகர் உரை., சாரதா பதிப்பகம், சென்னை.
3. மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி., பேரா.கி.நாகராஜன்., சென்னை.
4. இலக்கியத்தொகுதி10.,புறநானூறு.,முனைவர் தமிழண்ணல்,(பதி.ஆ).,வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.


**அடிக்குறிப்பு**

1. பேரா.கி.நாகராஜன், மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, ப-2
2. பேரா.கி.நாகராஜன், மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, ப-4
3. பேரா.கி.நாகராஜன், மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, ப-4
4. பேரா.கி.நாகராஜன், மலரும்இந்திய சமுதாயத்தில் கல்வி, ப-11
5. பேரா.கி.நாகராஜன், மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, ப-5
6. பரிமேலழகர்,(உ.ஆ) திருக்குறள் எண்-400
7. பரிமேலழகர்,(உ.ஆ) திருக்குறள் எண்-69
8. பரிமேலழகர்,(உ.ஆ) திருக்குறள் எண்-67
9. பொன்முடியார்., புறநானூறு பா.எண்-312
10. சிறுபஞ்சமூலம்.', பா.எண்-54
11. பரிமேலழகர்(உ.ஆ).,திருக்குறள் எண்-421
12. பரிமேலழகர்(உ.ஆ).,திருக்குறள் எண்-570
13. பரிமேலழகர்(உ.ஆ).,திருக்குறள் எண்-398
14. கிருஷ்ணமூர்த்தி.ச.,(உ.ஆ).,நாலடியார் பா.எண்132
15. கிருஷ்ணமூர்த்தி.ச.,(உ.ஆ).,நாலடியார் பா.எண்131
16. மோசிக்கீரனார், புறநானூறு பா.எண்-186
17. பரிமேலழகர்,(உ.ஆ)திருக்குறள் எண்-394
18. கிருஷ்ணமூர்த்தி.ச.,(உ.ஆ)நாலடியார் பா.எண்137

19. பரிமேலழகர்,(உ.ஆ)திருக்குறள் எண்-427
20. ச.வே.சுப்பிரமணியன், (உ.ஆ) ஆசாரக் கோவை பா.எண்-50
21. நற்றிணை பா.எண்-335
22. ச.வே.சுப்பிரமணியன்,(உ.ஆ)ஐந்திணை எழுபது பா.எண்-5
23. பரிமேலழகர்,(உ.ஆ)திருக்குறள் எண்-785
24. பரிமேலழகர்,(உ.ஆ) திருக்குறள் எண் - 40425.
26. வே.சுப்பிரமணியன், (உ.ஆ) பழமொழி நானூறு பா.எண்-64
27. பரிமேலழகர், (உ.ஆ) திருக்குறள் எண்-406
28. பரிமேலழகர், (உ.ஆ) திருக்குறள் எண்-410
29. பரிமேலழகர், (உ.ஆ) திருக்குறள் எண்-814
30. ச.வே.சுப்பிரமணியன், (உ.ஆ) பழமொழி நானூறு பா.எண்-249
31. பரிமேலழகர், (உ.ஆ) திருக்குறள் எண்-403

# ஐங்குறுநூறு கூறிடும் சங்ககால வாழ்க்கை

***த. சங்கீதா,*** *எம்.ஏ.எம்.எட்.பி.எச்.டி*
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
பிசப் தார்ப் கல்லூரி, தாராபுரம், (தாலூக்கா), திருப்பூர்

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க இலக்கியத்தில் ஐங்குறுநூறு என்பது தலைவனும் தலைவியும் சந்தித்து ஒருவரை ஒருவர் அறிந்து களவு மணம் புரியாமல் தோழியின் உதவியோடு செவிலித் தாயிடம் கூறியும், இருவரின் அன்பை எடுத்துச்சொல்லி தலைவனின் நாட்டுச் சிறப்புகளைத் தோழி செவிலித் தாயிடம் உரைத்தும், தலைவன், தலைவிக்கு மணமுடித்து வைப்பதும், இருவரும் ஒருமித்த அன்பால் இல்லற வாழ்வை தொடங்குவதும், தலைவன் நாட்டு வளங்களும் அங்கு இருக்கக்கூடிய நீர் நிலைகள், ஏரிகள், மலர்கள், உணவு வகைகள், விழாக்கள் தலைவன் தலைவிக்குள் ஏற்படும் ஊடலும் கூடலும், தலைவியை விட்டுப்பிரிந்து பரத்தையர் மேல் காதல் கொண்டு தலைவன் பிரிந்து சென்று மீண்டும் திரும்பினாலும், அவன் குற்றங்களை சுட்டிக்காட்டாமல் ஏற்பதும், தலைவன்மேல் கொண்ட அன்பின் நிலையை உணர முடிகிறது. தலைவன் தலைவியைப் பிரிந்து வேறு நாடுகளுக்குப் பொருள் தேடச்சென்றபிறகு தலைவி தன் வேதனையைத் தோழியிடம் பகிர்ந்து கொள்வதும் சங்ககால மக்கள் எவ்வாறு வாழ்ந்துள்ளனர் என்பதையும் அக்காலங்களில், இடம் விட்டு இடம் நீண்ட தூரம் குடும்பங்களைப் பிரிந்து ஆண்கள் சென்று, வாழ்ந்துள்ளனர் என்பதை இவ்வாய்வின் மூலம் அறியலாம்.*

## முன்னுரை

நமது பண்பாடு என்பது வீட்டிற்கு வந்த விருந்தினர்களை உபசரித்தலும் அவர்களுக்கு உதவி செய்தலும், பெண்களின் கடமையாகத் தொன்றுதொட்டு நிகழ்ந்து கொண்டுள்ளது. திருமணம் முடிக்கும் தலைமகன் தனது குடும்பத்திற்குச் செல்வங்கள் சேர்க்க வேண்டும் என்பதற்காக, வேறு நாடுகளுக்குப் பொருள் தேடிச் செல்வதும் போருக்காகச் செல்வதும், கல்விக்காகச் செல்வதும் சங்ககாலத்தில் மட்டுமல்லாமல் இக்காலங்களிலும் நாம் காண்கிறோம். இப்போது ஆண்களோடு சேர்ந்து பெண்களும் செல்கிறார்கள். அன்றைய காலகட்டத்தில் ‘முன்நீர் வழக்கம் மகடுவோடு இல்லை’ என்று இருந்தது. இன்றைய பொருளாதார வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்ய இருவருமே பணிகளுக்குச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. சில இடங்களில் இன்னும் தலைவன் மட்டுமே பொருள் தேடி வேறு நாடுகளுக்குச் செல்வதும், பெண்கள் மட்டும் குடும்பத்தைப் பாதுகாத்து வருவதும் பல இடங்களில் நடைமுறையில் உள்ளது. ஐங்குறுநூறு பாடல்களை ஆய்வு செய்யும் போது ஆண்கள் கடல் கடந்து தொழிலுக்காகப், பொருள் ஈட்டுவதற்காகச் சென்றுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. தமிழர்களுக்கென்று தனித்துவமான வாழ்க்கை, பண்பாடு, பழக்கவழக்கம், நாகரீகம் கொண்டவர்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதை இவ்வாய்வின் வழி அறியலாம்.

## தலைவியை மணமுடிக்கத் தோழி கூறுதல்

தாமரை மொக்குகள் நிறைந்த பொய்கைகளுடைய மருதநிலத் தலைவனே என் தலைவியை நீ மணம் முடித்துக் கொள்க. எங்கள் தந்தையும், தாயும் என் தலைவியை மணமுடித்துக் கொடுப்பதாக விரும்புகிறார்கள். என்று, தோழி தலைவனிடம் கூறினாள். தலைவன் தலைவியை மணம் கொள்ளவும் தலைவியின் காதல் நிலையை ஊர்மக்கள் பழி கூறப்படாது காத்தல் வேண்டியும் தோழி தலைவனிடம், தலைவியின் மேல் கொண்ட பாசத்தால் இவ்வாறு அறிவுறுத்தினாள். நல்லறம் சிறந்து விளங்கவும், நன்கு பெருகி மலர்ந்த புக்களை உடைய மருத

மரத்தில் நீர்வாழ்ப் பபறவைகள், விளங்கும் நீர்த் துறைகளையுடைய மருதநிலத் தலைவன் உன்னுடைய ஊருக்கு உன் மனைவியாக்கிக் கொண்டு அழைத்து செல். என்று தோழி தலைவனிடம் தலைவியின் அன்பைப் பற்றி உரைத்தாள். சங்க காலம் முதல் இக்காலம் வரை அன்பு கொண்ட தலைவன், தலைவிக்கு இடையில் தோழிகள் தூது செல்வதும், சிறந்த முடிவுகளை எடுக்கும்படி கூறுவதும், நல்ல வாழ்க்கைக்குத் துணை நிற்பதும், காதல் வாழ்வில் ஒரு அங்கமாக நிகழ்ந்து கொண்டுதான் உள்ளது.

***"தண்துறை ஊரன் தன்னொடு***
***கொண்டனர் செல்க எனவேட் டேமே"***

***பா:10.பக்:27.(1)***

மாஞ்சோலையில் மயில் இனிது ஆடி மகிழ்தல் போலத் தலைவனது மனையில் தலைவி இனிது வாழ வேண்டும் என்பதும் அறிய முடிகிறது.

பூக்கும் மாமரங்கள் காய்த்தும் கனியும் தரும் தன்மை போல் களவு ஒழுக்கத்தில் கூடும் தலைவன் அதனைத் துறந்து கற்பொழுக்கம் மேவ தலைவியை மணம் கொண்டு தன்னோடு அழைத்துச் செல்லுதல் வேண்டும் என்பதும் தலைவியின் நிலையைத் தலைவனிடம் தோழி எடுத்துரைக்கிறாள்.

### அன்னையிடம் தோழியுரைத்தள்

***"மாரி கடிகொளக் காவலர் கடுகு***
***வித்திய வெண்முளை கள்வன் அறுக்கும்"***

***பாடல்:29பக்:44 (2)***

காதலோடு காத்து இருந்த தலைவியை மணம் கொள்ள தலைவன் உரிய உறவுகளோடு வருதலும் தலைவிக்கு உரிய தமர் மணவினையை மறுத்துக் கூறிய நிலையில் தோழி, செவிலித் தாயிடம் "அன்னையே! மழையானது மிகுதியாகப் பொழியவும் காவல் செய்பவரும் விரைவாக தமது பணியைச் செய்யவும் விதைகள் மென்மையான முளைகளைப் பெற அவற்றினை நண்டுகள் கவர்ந்து திரியும் அப்படிப்பட்ட சிறப்பை உடைய மருத நிலங்களின் தலைவன் தலைவியின் மார்பைத் தழுவி இன்புற்றான், அதனால் உன் மகள் பசலை நோய் கொள்ளுதலும் அவளின் நிலையும் கண்டு விரைந்து மணம் கொள்வதற்கு மேற்கொள்க" என்று தோழி செவிலித் தாயிடம் உரைக்கிறாள். களவொழுக்கத்தில் மகிழ்ந்த தலைவி, தன்னுடைய பேரழகினை இழக்கலாமோ? விரைவாக மணம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். செவிலித் தாயிடம் தலைவியின் நிலையை தோழி எடுத்துரைக்கிறாள். அதனைக் கேட்ட தாய் மிகுந்த வேதனை அடைந்து தலைவியின் நிலையை உணர்ந்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறாள்.

பெண்கள் காலம் காலமாக தனது நிலைகளை மனதின் எண்ணங்களையும், ஆசைகளையும் தாயிடமே கூறுகிறார்கள் என்பதையும், இதன் வாயிலாக நாம் உணர முடிகிறது.

### தலைவியின் சிறப்புக்கள்

தலைவி குடும்ப பாங்கோடு இல்லறம் பேணும் தன்மையால் நெல் வளமும்' நீர் வளமும் பொன் பொருளும் பெருகும் வகையால் சிறப்பாக இருந்தது அவள் வாழ்க்கை. தலைவன் மனையின் கண்ணிருந்து இல்லறப் பணியை ஆற்றினாலும் தலைவி அத்தகைய அறத்தில் குறையாதவளாய், நெல்வளம் பெருகவும், விருந்தினர்களை உபசரித்தலும் ,மற்றவர்களுக்கு உதவி செய்தலையும் விரும்பி ஏற்றாள். தலைவன் மேல் குறை காணாமல் தலைவன் தன்னுடைய வருவாயைப் பரத்தையிடம் சேர்த்து அவளோடு வாழ்ந்து வந்தாலும், இல்லறத்தை பழியாக்காதவாறு தலைவனோடு தலைவி இருந்து வாழ்தலை அவள் ஏற்றிருந்தாள். தலைவன் காட்டும் அன்பில் நெஞ்சம் நெகிழ்ந்து மகிழ்வோடு வாழ்க்கையை நடத்துகிறாள்.

***"பால்பல ஊறுக பகடுபல சிறக்க!***
***எனவோட யாமே!யாமே,"***

***பாடல் :3.பக்.21.(3)***

***மூத்த கரும்பிற் காய்ந்த நெல்லின்***
***கழனி யுரின் மார்பு***
***பழம் அதற்கு எனவேட்டேமே***

***பாடல்: 4பக்21.(4)***

தலைவியானவள் நாட்டில் பகையின் மையும் நல்ல நெறிகள் ஓங்கும் வகையில் அந்தணர்கள் வேதங்கள் ஓம்புதலும் விரும்பினாள். வாழ்வில் தலைவனுக்கு அனைத்து நிலைகளிலும் ஏற்றவளாக, விட்டுக் கொடுத்துச் செல்லும் மனப்பக்குவத்தோடு, குடும்பத்தை நடத்தியும், தலைவனின் செயல்களுக்குத்

தடையில்லாமல், பக்க பலமாக வாழ்ந்திருக்கிறாள் என்பதையும் பாடல்வழி அறிய முடிகிறது.

**தலைவன் பரத்தையர் மேல் காதலால் பிரிவு, தலைவி காத்திருத்தலும்**

**"கொடிப்பு வேழம் தீண்டி அயல்**
**வடிக்கொள் பார்த்து வண்தளிர் நுடங்கும்"**
***பா:14:பக்31.(5)***

தலைவன் பரத்தையர் பால் சார்ந்து தலைவியைப் பிரிந்த நிலையில் தலைவி தன் தலைவனை எண்ணி மிகுந்த வேதனை கொள்கிறாள். அப்போது, தோழி தலைவனது போற்றா ஒழுக்கத்தை உரைக்கிறாள். தலைவியோ தலைவன் மீது கொண்ட அன்பினால் நம்மைமறந்தாரையும்நான்மறக்கவில்லை,என்று இனிய நினைவுகளைக் கூறுகிறாள்.

நாணல் செடியின் வெண்ணிற பு தீண்டுதலால் அழகிய மாந்தளிர்கள் அசையும் அதுபோல மருத நிலத் தலைவனின் மார்பில் துயிலுறும் தன்மை இனிமையாகும் என்றும், தலைவனை நெஞ்சில் நினைப்பதால் என் கையில் உள்ள வளையல் நெகிழ்ந்து கழல்கின்றது" என்று தோழியிடம் உரைக்கிறாள்.

"தோழியே! என்னைத் திருமணம் செய்யும் பொழுது, நல்லவாறு சொல்லி மணம் கொண்ட பின்னர் இப்பொழுது புறத்தொழுக்கத்தில் சார்ந்து, என்னைப் பிரிந்து செல்லேன் என்று உறுதி செய்து பின்னர் இன்று நீங்கியது ஏனோ?" எனது அமைதியான வாழ்வைப் புறஒழுக்கத்தால் அச்சுறுத்தி வருத்து வதும் ஏனோ? என்று பிரிவின் வேதனைகளைத் தோழியிடம் வெளிப்படுத்துகிறாள். சங்க காலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் கணவன் மனைவி பிரிவு என்பதும், கணவன், மனைவியை விட்டு விலகிச் செல்வதும், துன்பத்தில் பெண்கள் வருந்துவதும் காலம் காலமாக தொடர்ந்து வருவதையும் அறிய முடிகிறது.

**"காதற்பரத்தையரின் காதல் கூற்று"**

**"அம்ம வாழி தோழி! மகிழ்நன்**
**ஒண்தொடி முன்கையாம் அழப்பிரிந்துதன்**
**பெண்டிர் ஊர் இறை கொண்டனன் என்ப**
**கெண்டை பாய்தர அவிழ்ந்த**
**வண்டு பிணி ஆம்பல் நாடு கிழவோனே."**
***பா:40,பக்:53.(6)***

நாடு காக்கும் உரிமையுடைய தலைவன் தன் தலைவியோடு இருந்து குலதெய்வ வழிபாடு, ஊர் கோயில் வழிபாடு போன்ற செயல்களில் ஈடுபடுவது மரபு. அத்தன்மையில் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். ஆம்பல் மலரைக் கெண்டை மீன் மோதி விரியச் செய்தாலும் வண்டு ஒன்றே தேனை நுகரும் தன்மையுடையது. அத்தகைய நிலையில் வண்டாகிய தலைவன் ஆம்பல் மலர் ஆகிய என்னை விரைவில் வந்தடைவான் என்று தனது தோழியிடம் காதல் பரத்தை கூறுகிறாள். இதன் வாயிலாக அவள் தலைவன் மேல் கொண்ட காதலையும் திரும்பி வருவான் தன்னிடம் என்ற நம்பிக்கையையும் அவள் கொண்டுள்ளதை உணர முடிகிறது.

**ஐங்குறுநூறில் வாழ்க்கையோடு ஒன்றியவைகள்**

ஐங்குறு நூறு என்பது தலைவனும் தலைவியும் ஒருங்கு கூடி வாழ்தல் வேண்டும் எனும் கருத்தில் பாடப்பட்ட அகத்துறை நூலாகும். இல்லற வாழ்வில் சிவபெருமானும் உமா தேவியும் உள்ள தன்மை போல உலகத்தில் மக்கள்அன்போடு இனிது வாழ வேண்டும். இவர்களது வாழ்வில் மருதத்திணையும், நெய்தலும், முல்லையும் சிறப்பிடம் பெறுகிறது. இந்திரனும், சிவபெருமானும் உயர்ந்தோறல் வைத்துப் போற்றப்படுகின்றனர். ஆடவர்களில் சாற்றப்படும் பெயர்கள் கிழத்தி, கிழவன், மனைவி, உழவர், உழத்தியர், பரத்தையர், கடையர், கடைச்சியர்களும் வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்பும், குருகு, ஆகிய பறவைகளும் விலங்கினத்தில் எருமை, நீர்நாய் மருதநிலமான தலைவனுக்குரிய நாட்டின் வளமாக உரைக்கப்படுகிறது. புக்களில் தாமரை, குவளை, செங்கழுநீர்ப்புவும், மரங்களில் மருதம், வஞ்சி, காஞ்சி மரங்களும் புவரசன் உண்டு. மக்களின் உணவு வகைகளில் செந்நெல்லரிசியும், வெண்ணெல்லரிசியும் பயன்படுத்தினர். அழகான விழா எடுத்து வாழ்ந்துள்ளனர். களை கட்டுதல், கடா விடுதல், புனல் நீராடுதல் என மக்கள் இன்பமாக வாழ்ந்துள்ளனர்.

**தலைவி தன்நிலையைத் தோழியிடம் உரைத்தல்**

**கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்**
**மண்புரை பெருகிய மரமுளி கானம்**

***இறந்தன ரோம்நம் காதலர்?***
***மறந்தன யோகி மறவா நம்மே"***

***பாடல் :319,பக்.323.(7)***

தலைவியிடம் எதுவும் உறைக்காது தலைவன் பிரிந்து சென்றது அத்துயிரத்தை ஆற்றாது தலைவி தன் தோழியிடம், "கண்களை வருத்துமாறு வெங்கதிர் எரிக்கும் மலை இடத்தே மண்துளைகள் பெருகியதும், மரங்கள் எரிந்து கிடப்பதுமான காட்டினை நம் தலைவர் கடந்து எவ்வாறு சென்றனர்? நம்மை ஒருபோதும் மறவாதவராக விளங்கி என்னோடு பேசி மகிழ்ந்தவர் எப்படி என்னை மறந்தனரோ?" அழகான கண்ணுக்கு இனிமையான எந்தன் தேன் ஊரும் என் அழகுப் பேச்சும்,என்னை நுகர்ந்து மகிழ்தலை விடுத்து பொருளாசையால் தனியே விட்டு அச்சம் தரும் நெருப்பு பரவியறிக்கும் நிலையில், என்னை மறந்து கானகத்தை அடைந்து இரக்கமின்றி நெஞ்சத்தில் ஊடுருவ அன்புரையைப் பேசி மகிழ்ந்தவரை எண்ணியே நினைவில் கலங்குவது வேதனை தருகிறது. பிரிவென்னும் பெருந்தீங்கினையும் உடல் நோயினையும் செய்த தலைவன் தானும் வேதனைகளில் வெம்மை மேவும் கொடிய பாதையில் சென்று பொருளீட்டும் ஆசையால் எவ்வாறு துன்புறுகிறாரோ? என்னால் தானே தலைவன் இத்தகைய துன்பத்திற்கு உள்ளானான் என்று தோழியிடம் வருந்திக் கூறுகிறாள்.

தலைவனைப் பிரிந்த பிரிவுத்துயர்நிலை

***"அவிர்தொடி கொட்பக் கழுதுபுகவு அயரக்***
***கருங்கண் காக்கையொடு கழுகு விசும்பகவச்***
***சிறுகச் யானை ஆள்வீழ்த்துத் திரியம்***
***நீளிடை அருச்சுனன் என்ப நம்***
***தோழிடை முனிவர் சென்ற வானே"***

***பா:314,பக்:318.(8)***

தலைவியை விட்டுத் தலைவன் வேறு நாடு பிரிந்து சென்றான். குறித்த காலத்தில் வருவதாகச் சென்ற காலமும் வந்தது, ஆனால் தலைவன் வரவில்லை அவனோடு சென்ற சிலர் ஊர் திரும்பி விட்டார்கள். வந்த அவர்கள் அவர்களுக்குள்ளேயே காட்டு வழியில் கொடிய நிலையை எண்ணிப் பேசியதைக் கேட்ட தலைவி பெரிதும் வருந்தியவளாய் தோழியிடம் மிகுந்த வேதனையுடன் கூறினாள். "காட்டில் திரியும் யானை எதிரில் வருபவர்களைத் தாக்கித் திரியவும், புலிகள் இரைதேடித் திரியவும் உள்ள காட்டினிடத்தே சென்றானே" கொடிய காட்டு வழி என்று வந்தவர்கள் கூறினர். நம்முடைய தோளைத் தழுவுவதற்கு உடன்படாது வெறுத்து பிரிதலை விரும்பிச் சென்றவரின் பாதையைப் பற்றிச் சென்று திரும்பியவர் உரைத்ததை நீ கேட்டாயோ? தலைவன் என்னை எக்காலத்திலும் பிரிந்து செல்ல மாட்டேன் என்று, என்னோடு மகிழ்ந்து வாழ்ந்து இருந்த தலைவன் பொருள் மீது கொண்ட விருப்பத்தால் என் அன்பைத் துறந்து சென்றது மட்டுமல்லாது கொடுமையுடையதாய் எரிபரவும் காட்டு வழியில் உயிரையும் பணயம் வைத்தாற்போல் சென்றமை எனது நெஞ்சை வதைக்கிறது என்று, தலைவி தோழியிடம் தனது வேதனையை வெளிப்படுத்தினாள். எல்லாக் காலங்களிலும் எதிர்பாராத இடையுறு நடக்கும் அக்காலங்களில் வழிப்பாதையும் விலங்குகளின் நடமாட்டமும் அதனால், ஏற்படும் ஆபத்துகளும் அச்சம்தரும் அவலங்களாகப் பல பாடல்களில் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது. இன்றைய சூழலிலும் வாழ்க்கையின் தேவைக்காகத் தனது குடும்பத்தை, குழந்தைகளை மனைவியைப் பிரிந்து வேற்று நாடுகளுக்குத் தலைவன் செல்வது இயல்பாக நடந்து கொண்டு தான் உள்ளது. வேற்று நாடுகளிலும் பல இன்னல்களுக்கு ஆண்கள் ஆளாவதும் காலத்திற்கு காலம் மாறுபட்டாலும் துன்பங்கள் என்பது வாழ்வின் ஒரு அங்கமாகவே உள்ளது.

## முடிவுரை

சங்க நூல்களில் ஐங்குறுநூறு பாடல்களை ஆய்வு செய்யும் போது, பெண்கள் என்பவர்கள் எப்போதும் விட்டுக் கொடுத்தும், அமைதியான சூழலில் குடும்பத்தைக் கொண்டு செல்பவர்களாகவும்' கணவன் செய்யும் சிறு தவறுகளை ஏற்று வாழ்க்கையின் நிலைக்குத் தகுந்தபடி தன்னை மாற்றிக் கொள்ளும் பெண்களாகவும் வாழ்ந்துள்ளார்கள். இன்றைய காலகட்டங்களிலும், பண்பாடு, ஒழுக்கம், குடும்பத்தின் பொறுப்புகளை ஏற்று தலைவனிடம் விட்டுக் கொடுத்தும், சமுதாயத்தில் தனக்கென்று உள்ள ஒரு அங்கீகாரத்தோடும் பெண் என்பவள் தனது குடும்பத்தையும், தலைவனையும் எந்த

சூழ்நிலையிலும் விட்டுத் தராமல், கணவனோடு வாழும் நிலையும், அவர்களுக்குத் தோழிகள் தரும் ஆதரவு, ஆண்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கும் இயல்பு, காலம் காலமாகப் பெண் என்பவள் பொறுமைசாலியாகவும் குடும்பத்தை நிர்வகிக்கும் தன்மை கொண்டவர்களாகவும் பெண்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை ஐங்குறுநூறு பாடல்களின் மூலம் அறிய முடிகிறது.

### அடிக்குறிப்பு

1. ஐங்குறுநூறு,பாடல் எண்:10பக்கம்27
2. மேலது,பா:29,பக்:44.
3. மேலது, பா :3 பக்:21.
4. மேலது, பா :4 ,பக்,:21.
5. மேலது, பா :14பக்:31.
6. மேலது, பா:40,பக்:53.
7. மேலது,பா:319,பக்:323.
8. மேலது ,பா:314,பக்:318.

### துணைநூற் பட்டியல்

1. ஐங்குறுநூறு மூலமும் உரையும் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவத்திபுரம், ஸ்ரீ இலட்சுமி பிரஸ்ஸில் பதிப்பிக்கப் பெற்றது, முதற் பதிப்பு 1938.
2. ஐங்குறுநூறு பாடலும் உரையும், உரையாசிரியர், வ. த. ராமசுப்பிரமணியம். எம். ஏ, திருமகள் நிலையம், சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்" தி.நகர், சென்னை 600 017. முதற் பதிப்பு 2011.

# பாத்திரப்படைப்புகள்

***ரா. சத்தியசீலா***
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, மதுரை

## முன்னுரை

ஒரு நாவலுக்கு கதைக்கரு, பாத்திரங்கள், கதைப்பின்னல், இடப்பின்னணி, காலப்பின்னணி, உரையாடல், நடை போன்ற முக்கிய கூறுகள் தேவைப்படுகின்றன. இவற்றுள் நாவலுக்குச் சிறப்பை நல்குவது பாத்திரப்படைப்பு ஆகும். கதைக் கருவிற்கு ஏற்ப பாத்திரங்கள் அமையும். புதினம் என்பது பல கூறுகளைக் கொண்ட மொத்த தொகுப்பாகும். இவற்றில் பாத்திரம் என்பது ஒரு கூறு. இதுவே புதினத்திற்கு இன்றியமையாததாக இருப்பதோடு புதினக் கூறுகளில் சிறப்பு வரிசையில் முதலிடம் வகிப்பது பாத்திரமாகும். பாத்திரம் சிறப்பாக அமைந்தால் தான் கதைக்கரு அழுத்தம் பொறும். கதை மாந்தர்கள் இல்லாமல் கதை இயங்காது. ஆதலின் நாவலுக்குப் பாத்திரப்படைப்பு இன்றியமையாததாகும். எஸ்.ராமகிருஷ்ணன் நாவல்களின் பாத்திரப்படைப்பை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## பாத்திரப்படைப்பு

ஒரு நாவலைப் படித்ததும் அதன் நடையோ, நோக்குநிலையோ மனதில் நிற்பதில்லை. பாத் திரங்களில் சில மறக்க முடியாத நிலையில் அமையும். ''நாவலில் பாத்திரங்கள் உயிர் நாடியாய் அமைகின்றன''[1] என்பார் க.கைலாசபதி. ஒரு நாவல் சிறப்புடையதாகக விளங்க வேண்டுமென்றால் அதன் பாத்திரப்படைப்பு சிறப்புடையதாக இருக்க வேண்டும். நாவல் கூறுகள் பலவற்றினுள் முதன்மையானதும், படிப்பவர் மனதில் ஆழ்ந்த உணர்வுகளைத் தோற்றுவிப்பதும் பாத்திரப் படைப்பே. ''நாவல் கூறுகளுள் முதன்மையானது சிறப்புமிக்கது நெஞ்சைக் கொள்ளை கொள்வது பாத்திரபடைப்பே ஆகும்.''[2] கதாபாத்திரங்கள் இல்லாமல் கதை நிகழ்வதில்லை. புதினத்தில் பாத்திரப்படைப்பே இன்றியமையாதது. ''ஒரு நாவலில் கடைசியாக எஞ்சி நிற்பது அதன் கதாபாத்திரங்களே''[3] என்பதின் மூலம் பாத்திரப் படைப்பின் தேவையை உணர முடிகிறது. நாவல்களைப் படித்து பல ஆண்டுகள் ஆன பிறகு நாவலின் கரு, நடை ஆகியன மறந்து போகிறது. ஆனால் நாவலின் பாத்திரங்களை மறக்க முடிவதே இல்லை. கற்பனைத் திறன் மிக்க கலைஞர்கள் தம் கற்பனையில் படைத்துள்ள மாந்தர்கள் கற்பவர் நெஞ்சில் உண்மை மனிதர்கள் போல் நெடுங்காலம் நிற்கின்றனர் என்று பாத்திரங்களின் தனித்தன்மை பற்றிக் குறிப்பிடுகிறது.

## பாத்திரங்களைப் படைக்கும் முறை

நாவலில் வரும் பாத்திரங்கள் நடமாடித் திரியலாம். பேசலாம். ஆனால் அவை பல சமயங்களில் உயிருடன் இருப்பதாக படிப்பவர் நினைக்க முடிவதில்லை. காரணம் அப்பாத்திரங்கள் படிப்போர் கற்பனையில் சென்று பொருந்துவதில்லை. சிறந்த நாவலில் படைக்கப் பெறும் பாத்திரங்கள் நாம் வாழும் உலகில் நம்மைப்போல் தலை நிமிர்ந்து நடப்பவர்களாக இருக்க வேண்டும். ''கதை மாந்தர் உண்மையில் நடமாடும் மக்களைப் போல் படைக்கப்பட்டால் கற்பவருக்கு மட்டுமல்லாமல் படைப்பவர்க்கும் அவர்கள் அவ்வாறு உண்மை மனிதர் போல் ஆகி விடுகின்றனர்.''[4] என்று மு.வ அவர்கள் கதைமாந்தர் படைப்பு பற்றிய கருத்தினைக் கூறுகின்றார். தன் கதை மாந்தருடைய இயல்புகளைக் கற்போர்க்கு அறிவிக்கப் படைப்பாளர்கள் கையாளும் முறைகள் பல.

''படைப்பாளன் வாழும் மாந்தரையே படைத்தல் வண்டும். கதை மாந்தரை அன்று.''[5] என எர்னஸ்ட் எமிங்வே கூறுகிறார். இதன் மூலம் ஆசிரியர் எப்படிப்பட்ட மாந்தரைப் படைக்க வேண்டும் என்பது தெரிகிறது. விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு கிராமத்தில் பிறந்த எழுத்தாளரான எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் நாவல்களில் காணப்படும் ஒவ்வொரு பாத்திரங்களையும் நமது வாழ்க்கையோடு ஒன்றிணைந்து வாழ்வது போன்ற உணர்வினை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு நாவல்களின் பாத்திரங்களும் அமைத்துள்ளார்.

### பாத்திரப்படைப்பின் இன்றியமையாமை

ஒரு கதைக்குக் கதை மாந்தர்கள் இன்றியமையாதவர்கள். ஆசிரியர் நினைக்கும் கருத்துக்களை இவர்கள் வாயிலாகத் தான் கூற முடிகிறது. தானே நேரடியாக சொல்லிக் கொண்டு வந்தால் அது கதையாக இருக்காது. கட்டுரையாக ஆகி விடும். எனவே ''கதைக்கு வேண்டிய பாத்திரங்கள், பாத்திரங்களை இயக்கிச் செல்லும் நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளுக்கேற்ற சூழ்நிலைகளுக்கும் பாத்திரப் பண்புகளுக்கும் ஏற்ற உரையாடல்கள் இவ்வளவும் வேண்டும்.''[6] கதை மாந்தரைப் பொறுத்தவரை ஏனோ தானோ என்று வந்து போகும் நிலையில் இருந்தால் அது படிக்கும் ஆர்வம் குறைந்து போகும். கதை மீது வெறுப்பு தோன்றும். கதை மாந்தரைப் படைப்பது சிறப்புற அமைய வேண்டும். மனித சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் நாவலில் மனித பிரச்சினைகளே முதலிடம் பெறுகின்றன. இப்பிரச்சினைகளுக்குக் கதை மாந்தர்களே காரணகர்த்தாவாக இருப்பதால் நாவலில் கதை மாந்தர் படைப்பே முக்கியத்துவம் பெறுகின்றது. எஸ். ராமகிருஷ்ணன் நிமித்தம் நாவலில் காணப்படக்கூடிய தேவராஜின் உடற்குறைப்பாட்டின் மூலம் அவரது வாழ்க்கையில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளும், மன வேதனைகளும் நம் கண் முன்னே வெளிப்படையாகத் தோன்றுகின்றது.

### பாத்திரப்படைப்பின் பயன்

கதை மாந்தர்களின் மூலம் சமுதாய உணர்வினை ஆசிரியர் பிரதிபலிக்கிறார். தனி மனித உணர்வுகளைக் காட்டும் கதைக் கருவையும், கதை மாந்தர்களையுமே படிப்போர் விரும்புகின்றனர். அத்தகைய விருப்பத்தின் விளைவாகவே நாவலாசிரியர் படைக்கும் கதை மாந்தர்கள் சமுதாயத்தின் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தினர். இப்பாத்திரங்களின் மூலம் சமுதாய உணர்வும், சமுதாய மாற்றங்களும் வெளிக் கொணரப்பட்டன. சமுதாய நோக்குடைய நாவலைப் படைப்பனே சிறந்த நாவலாசிரியராகிறார். ''தனி மனித உணர்வுகளையே பெரிதுபடுத்தி எழுதும் ஜெயகாந்தனை விட சமுதாய நடவடிக்கையே தன் கதைகளுக்கு கருவாகக் கொள்ளும் பார்த்த சாரதிகளே நமக்கு நல்ல வழிகாட்டிகளாக இருக்க முடியும் என எனக்குத் தோன்றுகிறது. இந்த தேவை சாத்தியமான பின்னர் தனிமனித உணர்வுக் கதைகளில் நாம் நமது கவனத்தைத் திருப்ப வேண்டும்.''[7] நிமித்தம் நாவலில் காணப்படக் கூடிய தேவராஜின் உடற்குறைப்பாட்டிற்கு காரணம் அவன் ஒன்றும் காரணம் அல்ல. அவனது தனிமனித உணர்வினை யாரும் புரிந்து கொள்ளாமல் கேலியாகப் பேசுவதும், இழிவாக நடத்து வதும் நாவலைப் படிக்கும் மனவேதனையை உண்டாக்குகின்றது. இடக்கை நாவலில் விளிம்பு நிலை மக்களின் நிலைகளும், அவர்களை இழிவுப்படுத்தும் முறைகளும் காண முடிகின்றது.

### முதன்மைப் பாத்திரம்

கதையின் மையக் கருவோடு தொடர்புடையதாக அமைவன தலைமைப் பாத்திரங்களாகும். நாவலில் இடம் பெறும் செய்திகள் அனைத்தும் தலைமைப் பாத்திரங்களைச் சுற்றியே அமைகின்றன. கதையில் வரும் பாத்திரங்களைக் கையாளும் முறையே பாத்திரப்படைப்பு., அதன் பயனாக நாவலாசிரியர் பாத்திரத்தை உருவாக்குகின்றார். இதன் மூலம் கதைப்பாத்திரத்தின் ஆளுமையை உணரும் படி அமைகின்றது. நாவலில் தொடக்கம் முதல்

இறுதிவரை உயிரோட்டமுள்ள பாத்திரமாக விளங்குபவை தலைமைப் பாத்திரங்கள். இவையே நாவலில் வெற்றிக்குப் பெரும் பங்கு வகிக்கின்றன. ''ஒரு பாத்திரத்தைப் பற்றி மற்றப் பாத்திரங்கள் சொல்லுகின்ற கருத்துக்களின் மூலமும் உணர்கின்ற உணர்வுகளின் மூலமும் அந்த பாத்திரப் பண்பை விளக்குவது.''[8] என்று முதன்மைப் பாத்திரத்தின் பண்பைப் பற்றி இரா.தண்டாயுதம் கூறுகின்றார்.

## நிமித்தம் நாவலில் தேவராஜ்

எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களால் படைக்கப்பட்ட நிமித்தம் நாவலானது வாழ்வில் புறக்கணிக்கப்பட்டு காது கேளாதவர்களின் துயரை வெளிப்படுத்தும் வகையில் இந்நாவல் அமைகின்றது. தேவராஜினைப் போல உடற்குறைபாடு கொண்ட பலரையும் இந்த சமூகம் நடத்துகின்ற அவலநிலையினையும், புறக்கணிப்பிற்கும், அன்பிற்கான ஏக்கத்தின் வெளிப்பாடாகவும் ஒரு மனிதனின் வாழ்க்கையினை இந்நாவலின் மூலம் அறிய முடிகின்றது. காது கேட்காத குறைப்பாட்டின் மூலம் மற்றவர்களின் கேலி கிண்டல்களுக்கும் ஆளாகின்றான்.

''காது கேட்காத முண்டம், உனக்கு எல்லாம் எதுக்குப் படிப்பு? பேசாமல் எருமை மாடு மேய்க்கப் போக வேண்டியது தானே, இங்கே வந்து ஏண்டா உசிரை வாங்குறே''[9] என்று சொல்லி ரசாக் சார் அடிப்பார். பள்ளிக் கூடத்தில் மற்ற மாணவர்களின் முன்னிலையில் இழிவாக நடத்தியும், துன்புறுத்தவும் செய்தனர்.

## இடக்கை நாவலில் தூமகேது

இடக்கை நாவலானது நீதி கிடைக்காத மனிதனின் துயர வாழ்வினையும், விளிம்பு நிலை மக்களின் நிலையையும் கூறுகின்றது. சாமர் என்ற இனத்தைச் சேர்ந்த தூமகேது செருப்பு தைப்பது, தோல் பதப்படுத்துவது, கழிவுகளை சுத்தப்படுத்துவது என அவர்களின் தொழிலாகும். அவர்கள் அனைத்து செயலுக்கும் இடக்கையைப் பயன்படுத்துவர். ஆட்டுத்தோல் பதப்படுத்தும் தூமகேது விதியின் வசத்தால் கைதாகி காலா சிறையில் அடைக்கப்பட்டு அங்கு அடைந்த துயரங்கள், கொடுமைகள் வார்த்தைகளினால் சொல்ல முடியாத வகையில் அமைகின்றது. ''காலா விசாரணைக் கைதிகளின் கூடமாக இருந்த போதும் அதற்குள்ளும் சாதியும், குரூரமான கட்டுப்பாடுகளும் தடைகளுமிருந்தன. தூமகேதுவைப் போன்ற சூத்திரர்கள் கிணற்றில் குளிக்க அனுமதிக்கப்படவில்லை. மீதமான உணவுகளே அவனுக்கு அளிக்கப்பட்டன.''[10] நீதிக்காக காத்திருக்கும் ஒவ்வொரு மனிதனும் தனக்கான நீதி கிடைத்து விடும் என உறுதியாக நம்புகிறான். நீதிக்காக காத்திருக்கும் எளிய மனிதர்களின் நிலையை உணர்த்துகின்றது.

## நிமித்தம் தேவராஜும், இடக்கை தூமகேதுவும்

இவ்விரு நாவல்களில் காணப்பட கூடிய பாத்திரங்கள் வேவ்வேறு சூழ்நிலையும், வெவ்வேறான மனநிலைகளையும் கொண்டிருந்தாலும், ஏற்படக் கூடிய மனவேதனைகளும் இழிவுப்படுத்தும் முறைகளும் ஒரு வகையில் ஒரே உணர்வினை உண்டாக்குகின்றது.

தேவராஜ் காது கேளாதக் குறைப்பாட்டின் மூலம் அனைவரின் இழிவு நிலைக்கு ஆளாவதும், தூமகேது சாமர் இனத்தைச் சேர்ந்து காலா சிறையில் அடைக்கப்பட்டு நடைபெறுகின்ற கொடுமைகள் சொல்லி மீளமுடியாத வகையில் மனவேதனையையும், மீளாத துயரத்தையும் உண்டாக்குகின்றது.

தேவராஜ் சிறுவயதில் பள்ளியில் தெரியாமல் செய்த தவறுக்கு தண்டனையாக நாற்காலியில் இருந்த சிறுநீரை நாக்கினால் துடைக்க செய்தார். ''இப்போ துடைக்கப் போறயா? இல்லே டவுசரைக் கழட்டி அம்மணக்குண்டியா அலையவிடனுமா எனக் கேட்டார். அது இன்னும் அவமானம் என்பதால் நாக்கால் அந்த முத்திர நாற்காலியைத் துடைத்தான். குமட்டிக் கொண்டு வந்தது.''[11]

காலா சிறையில் இரண்டு கிணறுகள் இருந்தன. ஒன்று உயர்சாதியினருக்கு மற்றொன்று தூமகேதுவை போன்ற கீழ்சாதியினருக்கு ஒரு நாள்

கிணற்றில் வாளியில்லை என உயர்சாதியினர் குளிக்கும் கிணற்றில் இருந்த தண்ணீர் வாளியை எடுத்து விட்டான். அதற்காக, நாயின் மலத்தை கரைத்து அவனது வாயில் ஊற்றினர். ‘‘இரண்டு பேர் தூமகேதுவின் தலையை அழுத்தி பிடித்துக் கொண்டார்கள். ஒருவன் அவன் வாயைக் கிழிப்பது போல இழுத்துப் பிடித்தான். மண்கலயத்திலிருந்த நாய்ப்பீயை அவன் வாயில் ஊற்றினார்கள்.’’[12]

இவ்விரண்டு பாத்திரங்களும் சூழ்நிலையில் மாறுபட்டு காணப்பட்டாலும் இழிவுப்படுத்தும் முறைகள் ஒன்று போல கொடுமைகளையும், மனவேதனைகளையும் காணக் கூடிய வகையில் அமைந்துள்ளது. இவ்வாறு இருவரின் மனக் குமுறல்கள் நமது கண்களின் முன் காட்சியளிக்கின்றது. மனித பிறப்பு என்பது அனைவரும் சமம் என்ற உணர்வு அனைவரிடமும் காணப்பட்டால் மட்டுமே இது போன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் அனைவரும் சகோதர உணர்வுடன் வாழ முடியும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

### முடிவுரை

நாவலின் கதைப்போக்கிற்கு வலுச்சேர்ப்பது பாத்திரபடைப்பு. நாவலுக்கு உயிரும், உணர்ச்சி மிக்க வாழ்வும் தருகிறது. உலகப்புகழ் பெற்ற நாவல்கள் அல்லது காப்பியத்தை நினைவு கூறும் போது கதைக்குப் பதிலாகப் பாத்திரங்கள் நீடித்த வாழ்வுஉடையனவாகவிளங்குகின்றனஎன்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. எஸ்ʼ.ராமகிருஷ்ணன் நாவல்களில் மனிதர்களின் மன வேதனைகளையும், அவர்களின் இழிவு நிலைகளையும், கொடுமைகளையும் அதனால் ஏற்பட்ட வாழ்வின் புறக்கணிப்பினையும் தனது நாவல்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு நாவல்களுக்கும் அதன் பாத்திர அமைப்புகளை மையமாகவும், முதன்மை பண்புக் கொண்டதாகவும் அமைவதை அறிய முடிகிறது.

### அடிக்குறிப்புகள்

1. க. கைலாசபதி.தில்லி - தமிழ்ச் சங்க வெள்ளி விழா மலர் ப - 39
2. இரா.மோகன், டாக்டர் மு.வ.நாவல்கள் ப - 57
3. இரா.பாலசுப்பிரமணியன், நாவல்களங்கள் ப - 26
4. க.பிரபாகரி, இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும் ப - 188
5. மேலது ப - 188
6. அகிலன், கதைக்கலை ப - 53
7. ம.மதியழகன், மலேசியத் தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம் ப - 89
8. இரா.தண்டாயுதம், தமிழ் நாவல்கள் ப - 97
9. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப - 19
10. எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை ப - 133
11. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப - 21
12. எஸ்.ராமகிருஷ்ணன், இடக்கை ப - 170

# அம்பை சிறுகதைகள் அடையாளப்படுத்தும் பாலின பாகுபாடு

***வெ. சந்தியா***
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*தமிழ் இலக்கியத்தின் இக்கால இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதையானது காலந்தோறும் மனித சமுதாயம் சந்தித்து வரும் எந்த ஒரு சிக்கலையும் வெளிப்படுத்த தவறுவதேயில்லை. இன்றைய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை உலகுக்கு உணர்த்த எந்த வித தயக்கமும் காட்டாத படைப்புகளாகவே அம்பையின் சிறுகதைகள் அமைந்துள்ளன. மனித வாழ்வின் எல்லா காலக்கட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் பாலின பாகுபாடானது இன்றளவும் நம் சமூகத்தை ஆட்கொண்டுள்ளது. அத்தகைய மனித இனத்தின் மிகப்பெரிய சவாலான பாலின பாகுபாட்டை அம்பை சிறுகதைகளின் வழியே இக்கட்டுரை ஆராய உள்ளது.*

**முன்னுரை**

பாலின பாகுபாட்டால் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவனது விருப்பப்படி வாழும் உரிமையானது மறுக்கப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் தனிப்பட்ட விதிகளால் நம் சமூகம் கட்டமைக்கப்பட்டுள்ள சூழலை அம்பையின் சிறுகதைகள் உணர்த்துகின்றன. ஆணோ, பெண்ணோ அவர்களுக்கான வரையறையிலிருந்து சற்றே விலகினாலும் சமுதாயத்தின் பார்வையில் அவர்கள் வித்தியாசமானவர்களாக மாறிவிடுகிறார்கள். அதனால் அவரவருக்கான விதிமுறைகளை ஏற்று கொண்டவர்களாக வாழ பழகி கொள்கின்றனர். பாலின பாகுபாட்டால் ஆண் மற்றும் பெண் மட்டுமில்லாமல் மூன்றாம் பாலினத்தோரும் பாதிக்கப்படுவதை அம்பை சிறுகதைகள் வலியுறுத்தியுள்ளன. காலங்காலமாக நம் சமூகம் பின்பற்றும் பாலின பாகுபாடு சார்ந்த மனித செயல்கள் மற்றும் வாழ்க்கை முறைகளை அம்பையின் சிறுகதைகள் வழியே அடையாளப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பாலின சமத்துவமும் பாகுபாடும்**

மனித சமுதாயத்தில் ஆண் பெண் என்ற பேதமின்றி அவர்களுக்கான சமமான உரிமைகளும் வாய்ப்புகளும் வழங்கப்படுவதே பாலின சமுத்துவத்தின் அடிப்படையாகும். கல்வி, பணி ஆகியவை தொடர்பாகச் சமுதாயத்தில் அனைத்து நிலைகளிலும் காணப்படும் சமத்துவமும், வாழ்வின் பிற நிலைகளில் நிலவும் சமத்துவமும் பால் சமத்துவம் என குறிப்பிடப்படுகிறது மகளிர் மேம்பாடு- *2006*- ப.*1* பாலின சமத்துவம் மறுக்கப்- பட்டு வேறுபாடுகள் தோன்றும் போது அங்கு பாலின பாகுபாடு உருவெடுக்கின்றது. உலகின் அனைத்துச் சமூகங்களிலும் ஆண், பெண் என்ற இரு பாலினருக்குமென்று வெவ்வேறான செயல்பாடுகளும் விதிமுறைகளும் விதிக்கப் பட்டிருக்கின்றன. அனைத்துச் சமயங்களும் மொழிகளும் ஆண், பெண் என்ற இரு பாலினருக்குமென்று வெவ்வேறானவிழுமியங்களையும் நெறிமுறைகளையும் செயல்பாடுகளையும் கற்பிக்கின்றன. இதன் விளைவாகவே ஒழுங்கு முறை படுத்தப்பட்ட பாலின பாகுபாடு கட்டமைக்கப்படுகிறது. சிறார் வழுக்காறுகள் - *2006*-ப.*24* இத்தகைய பாலின பாகுபாடானது மனித குலத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாகி போகும் சூழலை உருவாக்குகின்றது.

**புனர் சிறுகதை அடையாளப்படுத்தும் பாலின பாகுபாடு**

***சமூக அமைப்பில் ஆணுக்கான அங்கீகாரம்***

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆணுக்கான அடையாளம் மாறாமல் இருப்பதை லோகிதாஸ் என்ற கதாபாத்திரத்தின் மூலம் புனர் சிறுகதைப்

பதிவு செய்கிறது. ஆண் என்றாலே சம்பாதிப்பவன் என்றும் அவனது படிப்பும் தொழிலும் விருப்பம் சார்ந்து அமைவதை விட வருமானம் சார்ந்தே அமைய வேண்டும் என்ற நோக்கிலும் லோகிதாஸின் தந்தையின் சிந்தனை அமைந்திருப்பதை கதையின் வழியே அறிய முடிகிறது. பொருளாதாரத்தைத் தேர்வு செய்து மேலாண்மை படிக்க விரும்பும் லோகிதாஸின் விருப்பத்துக்கு மாறாக கணிதத்தைத் தேர்ந்தெடுத்து பொறியியல் படித்தால் ஃபோர் ஃபிகர்சம்பளம்கிடைக்கும்என்றுஅவனதுதந்தை அறிவுறுத்துவதிலிருந்து ஆணாகபிறந்துவிட்டால் சம்பாதிப்பது மட்டுமே அவனது கடமையாகி விடுவதையும் கதைப் பதிவு செய்கிறது.

***நீ சம்பாதிப்பவன்***
***நீ வேலைக்குச் செல்பவன்***
***நீ உரிமைகளை உடையவன்***
***நீ ஓட்டு போடுவன்***
***நீ அழக்கூடாதவன்***
***நீ உறுதியானவன்***
***நீ தீர்மானங்கள் செய்பவன்***
***நீ உலகை மாற்றுபவன்***
***நீ திண்மையானவன்***
***நீ பெண்களைச் சுகிப்பவன்***
***நீ படுக்கையின் ஆக்ரமிப்பாளன்***
***நீ மேலதிகாரிகளைக் கவருபவன்***
***நீ ஆண்***

என சமூக அமைப்பில் ஆணானவன் பெற்றுள்ள அடையாளத்தையும் புனர்சிறுதை வெளிக் கொணர்ந்துள்ளது அம்பை-1988-பக்.109-125.

**சமூகம் கட்டமைத்துள்ள பெண்ணுக்கான வரையறை**

பெண்ணுக்கென்றே நம் சமூகம் வகுத்திருக்கும் வரையறைகளானது புனர் சிறுகதையில் இடம் பெறும் சபரி என்னும் கதாப்பாத்திரத்தின் வழியே வெளிப்பட்டுள்ளது. ஒரு பெண்ணுக்கான படிப்பு, விளையாட்டு, வேலை போன்றவற்றில் அவளது உரிமை பறிக்கப்படும் சூழல் இருப்பதையும், எந்த ஒரு செயலும் கட்டாயத்தின் பேரில் திணிக்கப்படுவதையும் இக்கதைப் பதிவு செய்கிறது. பேச்சுப் போட்டியில் கைத் தட்டல்களுடன் தன் திறமையை நிரூபிக்கும் சபரிக்கு கிடைக்கும் எதிர்மறை விமர்சனங்கள் பெண்ணுக்கான பேச்சுரிமை மறுக்கப்படும் தருணத்தை உணர்த்துகிறது. பெண்கள் ஏரோநாடிக்ஸ் படிப்பதை விட சரித்திரம் படிப்பதே சிறந்தது என்றும் சமையலே அவர்கள் வாழ்வின் அடித்தளம் என்றும் சபரிக்கு வழங்கப்படும் அறிவுறைகள் மூலம் பெண் என்ற பாலின பாகுபாடானது ஆரம்ப நிலையிலேயே அவர்கள் மனதில் விதைக்கப்படுவதையும் இக்கதையின் வழியே அறிய முடிகிறது.

***நீ வீட்டைப் பேணுபவள்***
***நீ அழகு சாதனங்களுக்கானவள்***
***நீ அடக்கமானவள்***
***நீ தீர்மானங்களைக் கேட்டுக்கொள்பவள்***
***நீ தேவியானவள்***
***நீ உபயோகமானவள்***
***நீ சுகத்தைத் தருபவள்***
***நீ தேவைக்காக மட்டுமே வேலை செய்பவள்***
***நீ பாதுகாக்கப்பட வேண்டியவள்***
***நீ பெண்***

என சமூகம் பெண்ணுக்கென விதித்திருக்கும் வரையறைகளையும் இச்சிறுகதைப் பதிவு செய்துள்ளது. அம்பை-1988-பக்.109-125

**வாகனம் சிறுகதை அடையாளப்படுத்தும் பாலின பாகுபாடு**

**குழந்தைப் பருவமும் ஆண்-பெண் பேதமும்**

குழந்தைப் பருவத்தின் விளையாட்டுப் பொருட்களில் கூட ஆண்-பெண் பாகுபாடு இருப்பது அவர்கள் வளர்ந்த பிறகும் ஏற்படுத்தும் பாதிப்பை வாகனம் சிறுகதையில் இடம்பெறும் பாக்கியம் என்னும் கதாபாத்திரத்தின் வழியே உணர முடிகிறது. பாக்கியம் குடும்பத்தின் அனைத்து ஆண் குழந்தைகளும் மூன்று சக்கர சைக்கிளுடனோ, சின்ன மோட்டார் வண்டியில் அமர்ந்தபடியோ எடுத்துக் கொண்ட புகைப் படங்களும், மரப்பாச்சி பொம்மையைக் கையில் பிடித்தபடியோ அழகிய வேலைப்பாடு செய்த வெல்வெட் மெத்தை பதித்த மர நாற்காலியின் கையை அல்லது நீளமான காலைப் பிடித்த படியோ இருக்கும் பாக்கியத்தின் புகைப் படங்களும்ஆண்-பெண்பேதமானதுகுழந்தைப் பருவத்திலே தொடங்கி விடும் சூழலை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. பாக்கியத்தின் தம்பிக்கு ஒரு வயதாகும் போது வாங்கப்பட்ட

கறுப்பு வண்ண மூன்று சக்கர சைக்கிளையும், நான்கு வயதாகும் போது வாங்கப்பட்ட சிவப்பு வண்ணப் பூச்சுடன் வழுக்கும் சிவப்பு ரெக்ஸீன் இருக்கை கொண்ட இரண்டு சக்கர கைக்கிளையும் தொட்டுத் தொட்டு ரசித்த அவளது உணர்வுகள் கதையில் எதார்த்தமாக வெளிப்பட்டுள்ளது. பாக்கியத்தின் சைக்கிள் பற்றிய உள்ளார்ந்த உணர்வுகளே சைக்கிளுடன் வானில் பறக்கும் அவளது கனவுக்கு காரணமாகி போகும் தருணத்தையும் கதையின் வழியே அறிய முடிகிறது. அம்பை- 2000-பக்.67-75.

### ஒட்டக சவாரி சிறுகதை அடையாளப்படுத்தும் பாலின பாகுபாடு

### புறக்கணிக்கப்படும் மூன்றாம் பாலினத்தோர்

சொந்த ஊரை விட்டு தொலைதூர நகரங்களுக்கு விரட்டியடிக்கப்படும் மூன்றாம் பாலினத்தோரின் வாழ்க்கைப் போராட்டத்தை ஒட்டக சவாரி என்ற சிறுகதைப் பதிவு செய்கிறது. பிறந்து வளர்ந்த சூழலை விட்டு துரத்தியடிக்கப் பட்டு மும்பையின் தெருக்களிலும், வீதிகளிலும் சுற்றித்திரியும் அலிகளில் ஒருத்தியான யமுனாவின் மூலம் மூன்றாம் பாலினத்தோரின் வாழ்வியல் சிக்கல்கள், சவால்கள் மற்றும் புறக்கணிப்புகளை இச்சமூகத்திற்கு கதை அடையாளப்படுத்தியுள்ளது. குடும்பத்தால் புறக்கணிக்கப்படும் இவர்கள் சமூக அமைப்பிலும் அவர்களின் உரிமைகளுக்காக போராடும் சூழல் இருப்பதையும் இச்சிறுகதை சுட்டிக் காட்டுகிறது. குடும்பத்தினரால் புறக் கணிக்கப்பட்டாலும் ஏதோ ஒரு தருணத்தில் அவர்களை நினைவு கூறுபவர்களாக மூன்றாம் பாலினத்தோர் இருப்பதையும் யமுனா கதாப்பாத்திரம் வெளிப்படுத்துகிறது. யமுனாவின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கும் கதைச் சொல்லியின் கதாப்பாத்திரத்தின் வழியாக இன்றைய சமூகம் நம்மில் ஒருவராக மூன்றாம் பாலினத்தோருக்கு கொடுக்க வேண்டிய அங்கீகாரத்தையும் கதை அறிவுறுத்துகின்றது. அம்பை-2000.பக்.34-37

### முடிவுரை

அம்பை சிறுகதைகள் ஆணுக்கு சமூகம் அளித்துள்ள அங்கீகாரத்தையும், பெண்ணுக்கு வகுத்துள்ள வரையறைகளையும் வெளிப்படுத்தி யுள்ளன. இந்த பாலினபாகுபாடானது ஆண்களுக்கு சாதகமாகவும் பெண்களுக்கு பாதகமகவும் இருப்பதையும் கதைகளின் வழியே உணர முடிகிறது. பாலின பாகுபாடானது குழந்தை பருவத்திலேயே தொடங்கி விடும் சூழலையும் குழந்தைகள் வளர்ந்த பிறகும் அந்த பாகுபாடுகள் அவர்கள் நினைவலைகளில் நீங்காமல் இருக்கும் தருணத்தையும் கதைகள் பதிவு செய்துள்ளன. குழந்தைகளாக இருக்கும் போதே ஆசைகள் நிராகரிக்கப்படும் காரணத்தினால் அவர்களின் குழந்தைப் பருவம் கற்பனையிலே கழிந்விடும் சூழலையும் கதைகள் வெளிக் கொணர்ந்துள்ளன. பாலின பாகுபாட்டால் புறக்கணிக்கப்படும் மூன்றாம் பாலினத்தோரின் வாழ்வியல் போராட்டங்களையும் அம்பையின் சிறுகதை வெளிப்படுதியுள்ளது. பாலின பாகு பாடானது சமூதாயத்தில் சமத்துவமின்மையை உருவாக்கி மனித மனங்களில் ஆறாத வடுவாகி விடுவதையும் அம்பையின் சிறுகதைகள் இச்சமூகத்திற்கு அடையாளப் படுத்தியுள்ளன.

### பார்வை நூல்கள்

1. அம்பை - வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, காலச்சுவடுபப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -1988.
2. அம்பை - காட்டில் ஒரு மான், காலச்சு வடுபப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,. 669, கே.பி. சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு -2000.
3. சைமன்ஜான்.சா - சிறார் வழுக்காறுகள், (இயல்புகளும் சமூகவயமாதலும்) வல்லினம் வெளியீடு, புதுச்சேரி -605008. முதற்பதிப்பு -2006.
4. கல்யாண சுந்தரி.கே. - மகளிர் மேம்பாடு ஜெயபூபதி தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., தெய்வானை.ஆர். 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600098. முதற்பதிப்பு -2006.

# சமூகவியல் நோக்கில் நாட்டுப்புறக் கலைகள்

***முனைவர் பா. சிங்காரவேலன்***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

***ஆய்வுச்சுருக்கம்***

*நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்படும் கலைகளே நாட்டுப்புறக் கலைகளாகும். மக்களின் சமூகப் பண்பாட்டுக் சூழலுக்கு ஏற்ப நிகழ்த்து கலைகளில் அழகும், நேர்த்தியும், திறமையும் வெளிப்படும். நிகழ்த்துதலின் நோக்கம் பார்வையாளர்களைச் சென்றடையத் தக்கதாகவும் இருக்கும். வட்டாரத் தன்மை கொண்ட நாட்டுப்புறக் கலைகள், ஓவ்வொரு வட்டாரத்திற்கும் ஓவ்வொரு கலைகள் செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம்.*

சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களின் மொழி, பண்பாடு, அரசியல், கலாச்சாரம், நாகரீகம் இவற்றிற்கு உட்பட்டுக் குழுவாக இணைந்து வாழுகின்ற மக்கள் கூட்டமாகும். ''மக்கள் தம்மைப் பேணிப் பாது காத்துக் கொள்வதற்கும், அழியாமல் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மானிடக்குழு சமூகம்'' என்கிறது வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி எட்டு, ப.588). இப்படி கலைக்கும் சமூகத்திற்குமான தொடர்பினைக் கள ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**கலைகள் அறிமுகம்**

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்று இன்பமும், துன்பமும் இணைந்ததுதான் மனித வாழ்க்கை. அவற்றை உணர்ந்து அனுபவிப்பது மனம். மனிதனின் மனத்திலிருந்து பல்வேறு உணர்வுகள் எழுகின்றன. அவையாவும் பல்வேறு வடிவங்களாக வெளிப்படுகின்றன. பின்னால் கலைகளாக மலர்கின்றன. அவற்றைச் சுவைப்பவன் பாராட்டுகின்றான். மக்களிடம் பாராட்டைப் பெறும் கலைஞன் புதிது புதிதாகச் செய்ய முனைகின்றான். தங்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் செய்யப்படுகின்ற செயல்பாடுகள் அனைத்தும் கலைகளாக அமைகின்றன. மக்கள் வாழும் நிலப்பரப்பிற்கு ஏற்ப கலைகள் பல்வேறு விதமாகக் காணப்படுகின்றன. சமூக மாற்றத்தில் கலைகளைச் செவ்வியல் கலை, நாட்டுப்புறக்கலை என்ற பாகுபாடு உருவாயிற்று.

''செவ்வியல் கலைகள் (பரதம், வாய்ப்பாட்டு, மிருதங்கம்) திட்டவட்டமான இலக்கண வரையறை கொண்டவை. தீவிர முயற்சியும், முறையான பயிற்சியால் மட்டும் அக்கலைகளின் அறிவைப் பெற இயலும். பெரும்பாலும் உயர்வாக்கத்தினரோடு தொடர்புடையவை ஆகும்.

நாட்டுப்புறக் கலைகளோ திட்டவட்டமான இலக்கண வரையறைகளற்றவை. எளிய பயிற்சிகளால் அறிந்து கொள்ளத்தக்கவை. நெகிழ்வான தன்மைகள் கொண்டவை. பெரும்பாலும் அடித்தட்டு மக்களோடு தொடர்புடையவை''[1] என்கிறார் ஆறு. இராமநாதன். கற்கப்படுவன அனைத்தும் கலையே எனக் கருதும் மரபு தமிழில் உண்டு. சதற்காலத் தமிழ் அகராதி ''கலை என்ற சொல்லுக்குப் பார்ப்பவர், கேட்பவர் முதலியோர் மனத்தில் அழகுணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் வெளிப்படுவது, தொழில் நுட்பத்தோடு கூடியது. சமையல் கலை, பீடா சுற்றுவதும் ஒரு கலை தான்''[2] என்கிறது. கலை என்பது ஒன்றைச் செய்வதில் அல்லது ஒன்றை உருவாக்குவதில் உள்ள திறமை என்று கூறுகிறார்[3] சிலம்பொலி செல்லப்பன் இதனை மற்றொரு கோணத்தில்

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ‘‘கலை என்பது கலைஞனது அனுபவத்தினால் அவன் வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்று அதன் வெளிப் பாட்டினையே கலைஞன் உணர்வு நிலையில் துய்க்கின்ற அனுபவமாகும்’’[4]. இப்படி அறிஞர்கள் பல காரணங்களைக் கண்டறிந்து கூறினாலும், நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்குத் திருவிழாக்கள் தான் காரணமாக அமைகிறது. நாட்டுப்புற விழாக்கள் மூலம் மக்களின் பண்பாடும் நாகரீகமும் வெளிப்படுகின்றன என்கிறார் ஆறு. இராமநாதன்.

மக்கள் கலைகளை உருவாக்கப்படும் நோக்கங்களுக்கு ஏற்ப கலைகளின் பயன்பாடு அமைகிறது. வழிபாட்டுக்காக உருவாக்கப்படும் ஓவியங்கள், சிலைகள், நிகழ்த்து கலைகள் முதலியவை தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.

ஓவியங்களில் சிலைகளுக்குக் கண் திறத்தல் முக்கியமான சடங்காகவும், தெய்வத்திற்கு உயிரூட்டும் நிகழ்வாகவும் கருதப்படுகின்றது. வழிபாட்டின் போது எடுக்கப்படும் சக்திக்கரகம் தலையிலிருந்து கீழே விழாமல் இருப்பதற்குக் காரணம் ‘‘தெய்வசக்தி’’ என்ற நம்பிக்கையினைக் மக்களிடம் காணமுடிகிறது. வழிபாட்டிற்காக அன்றி வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்படும் கலைகளின் பயன்கள், அவை பயன்படுத்தப்படும் சூழலை அடிப்படையாகக் கொண்டமைகின்றன. சான்றாக தற்காலத்தில் மணமேடை அலங்காரம், மணமக்கள் அமர்வதற்கான இடம் என்பதைப் பிறருக்கு அறிவிப்பதோடு, திருமணம் குறித்த ஒரு புனிதச் சூழலையும், அழகையும் தருகிறது. அதைப்போல் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, கலைப்பொருட்கள் முதலியவை நிகழ்த்தாக் கலைகள்5 என்று குறிப்பிடுகிறார் ஆறு. இராமநாதன். மேலும் மருத நிலமக்கள் அறுவடை முடிந்த காலம் தொடங்கி மீண்டும் விவசாய வேலைகள் தொடங்கும் காலம் வரை கோடைகாலத்தில் மகிழ்வுடன் பொழுது போக்க நாட்டுப்புறக்கலைகள் பெரிதும் பயன்படுகின்றன. தஞ்சைப் பகுதியில் நிகழ்த்து கலைகளில் ஒன்றான இரணிய நாடக அமைப்பு குறித்து முனைவர் பட்டத்திற்காக 1996-களில் கள ஆய்வு செய்த சுந்தர்காளி என்ற ஆய்வாளர், நெல் அறுவடை முடிந்தவுடன் பத்துநாட்கள் முழு இரவு நடைபெறும் நாடகத்திற்குப் பாத்திரத்தேர்வு, கதை வசனம், ஒப்பனை, மேடை என நிகழ்ச்சிக்கான முன் ஏற்பாடுகள் நடைபெறும். ஒரு நபர் கடந்த ஆண்டு நடித்த கதாபாத்திரத்தை, மறு முறையும் நடிக்க இயலாது. கதாபாத்திரத்தேர்வு குலுக்கள் முறையில் நடைபெறும். வருடத்திற்கு ஒரு முறை மட்டும் நாடகம் நிகழ்த்தப்படுவதால், ஒவ்வொரு கதாபாத்திரங்களும் இரட்டை வேடத்தில் வருவர். மேடையின் இடப்புறம் கதையினைத் தொடங்கி, பாத்திரம் அறிமுகம் நடந்து முடிந்தவுடன், அதே கதை நிகழ்வை மேடையின் வலப்புறம் உள்ள கலைஞர்களும் மக்கள் முன் நிகழ்த்துவர். இதனால் பார்வையாளர்கள் புராணச் செய்தியை மனதில் பதிய வைத்துக் கொள்ள ஏதுவாக அமைகிறது. எனவே மேடையில் இரண்டு விநாயகர், இரண்டு பிரகலாதன், இரண்டு இரணியன், இரண்டு நரசிம்மம் என கத் தோன்றுவதைக் கள ஆய்வின் வழி உற்றுநோக்கியதை முனைவர் பட்ட ஆய்வேட்டிலும் பதிவு செய்துள்ளார்.

தமிழறிஞர் மு.வரதராசனார் கலை தோன்றுவதற்குரிய காரணங்கள் நான்கினை முன் வைக்கின்றார். அவை,

1. தன்னுணர்ச்சியை வெளிப்படுத்தும் ஆர்வம்
2. பிறர் வாழ்வில் உள்ள அக்கறை
3. உண்மை உலகின் மீது உள்ள ஈடுபாடு
4. கற்பனை உலகைப் படைக்கும் ஆர்வம்

ஆகியவையாகும். உளவியல் அறிஞர் ஃபிராய்டு கலைகள் குறித்துக் கூறும்போது மனிதனின் அடிமனத்தில் பதிந்து கிடக்கும் உணர்ச்சிகளைத் தூண்டுவது கலைகளாகும் என்கிறார். மேலும், காந்தியச் சிந்தனை வழி கவிதை படைக்கும் நாமக்கல் கவிஞர் ‘‘கலையென்றால் உணர்ச்சி களைக் கவர வேண்டும். களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்’’[6] என்கிறார். கலைப்படைப்பென்பது படைப்பாளியின் உணர்ச்சி வெளிப்பாடே ஆகும். இவ்வுணர்ச்சி வெளிப்பாடு வெற்றி பெற்றதாக அமைந்தால், அது பார்வையாளர்களைச் சென்றடையும். கலை

உணர்ச்சிப் பரிமாற்றத்திற்குப் பயன்படும் ஒரு கருவியே ஆகும்[7] என்கிறார் ஆர்.சி.காலிங்வுட்.

நாட்டுப்புறக்கலைகள்பார்வையாளர்களைத் திருப்திப்படுத்துதல் என்ற நோக்கத்திற்காக மட்டுமன்றிநாட்டுப்புறஆட்டக்கலைஞர்களின் மனமகிழ்ச்சிக்காவும் ஆடப்படுவனவாக உள்ளன. தொன்மையானதும், தோற்றம் காண இயலாதவையுமாகிய நாட்டுப்புறக் கலைகள் சந்தப்பாங்கோடு தாமே ததும்பி வழியும் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாகவே உள்ளன. நாட்டுப்புறக் கலைகள் பண்பாட்டின் இருப்பிடமாக விளங்குவதுடன் ஒரு நாட்டின் மனநிலை, கலைநயம், எளிமை, சமுதாயநிலை, பழக்கவழக்கம், நம்பிக்கை முதலியவற்றை வெளிக்காட்டும் கண்ணாடிகளாகத் திகழ்கின்றன என்கிறார்[8] நாட்டுப்புறவியல் பேராசிரியர் மு.முருகேசன்.

### நாட்டுப்புறக் கலைகளின் வகைப்பாடுகள்

நாட்டுப்புறக் கலைகள் மரபுவழிப்பட்டனவாக மட்டுமன்றி தொன்மையான கலைகளாகவும் விளங்கி வருகின்றன. இக்கலைகளைக் கண்டு இரசித்த ஆய்வாளர்கள் தாங்கள் சேகரித்த கலைகளை ஒன்று திரட்டி, தொகுத்தவற்றைப் பகுத்து அவற்றின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தியுள்ளனர். நாட்டுப்புறக் கலைகளை ஏ.என்.பெருமாள் அவர்கள் ஐந்து பிரிவாகப் பிரித்துள்ளார்.

1. சமூகச் சார்புக் கலைகள்
2. வழிபாட்டுக் கலைகள்
3. தெய்வமேறிய கலைகள்
4. தொன்மவிளக்கக் கலைகள்
5. நாடக அமைப்புக் கலைகள்

சு.சக்திவேல் அவர்கள் மூன்று பிரிவாகப் பிரித்துள்ளார்.

1. நிகழ்த்துக் கலைகள்
2. நிகழ்த்தா கலைகள்
3. பொருட் கலைகள்

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளை ஆறு. இராமநாதன் களஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆறு வகைகளாகப் பிரித்துள்ளார்.

### கருவி இசை ஆட்டங்கள்

கல்வி இசைக்கு ஏற்ப ஒருவரோ பலரோ ஒப்பனையுடன் ஆடும் ஆட்டம் கருவி இசை ஆட்டமாகும். கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, மாடு, மயில், கரடி, ஆட்டம், புலிவேடம், தப்பாட்டம், தேவராட்டம், சேவையாட்டம் ஆகியன கருவி இசை ஆட்டங்கள் அடங்கும்.

### பாட்டு ஆட்டங்கள்

கருவி இசையோடு பாடல்கள் பாடிக்கொண்டு ஆடுவதாகும். குறவன் குறத்தி, கும்மி, கோலாட்டம், ஓயிலாட்டம், பேயாட்டம், சாமியாட்டம், கருப்பாயி ஆட்டம், பாம்பு நடனம்கைச்சிலம்பாட்டம்ஆகியஆட்டங்களில் பாட்டுடன் ஆட்டமும் இடம் பெறும்.

### அரங்கக் கலைகள்

கதையை அடிப்படையாகக் கொண்டு, கதைப்பாத்திரங்களாக வேடம் புனைந்து கொண்டு, கருவி இசையின் துணையுடன் ஆடியும்பாடியும்,பேசியும்,நடித்தும்அரங்கத்தில் நிகழ்த்தக் கூடிய கலையாக அரங்கக் கலை விளங்குகிறது. இதில் தெருக்கூத்து, கணியான் கூத்து, பகல்வேடம், பாவைக்கூத்து, நாடகம் ஆகியன ஆகும்.

### கதை கூறல்

இசைக்கருவிகளின் துணையுடன் பாடலாகவும், வசனமாகவும் மக்கள் முன் கதை கூறுவதாகும். வில்லுப்பாட்டு, உடுக்கை நிகழ்ச்சி, இலாவணி (விவாதம் செய்வது போல் ஒருவரை ஒருவர் ஏளனம் செய்து பாடுவது) முதலியவை இதில் அடங்கும். தஞ்சையினை ஆண்ட மராத்தியர்களால் தமிழகத்திற்குக் கிடைத்த கலைவடிவம் ''லாவணி'' ஆகும். அது அரசியல், சமூகப்பிரச்சி னைகளை விவாதிக்கும் கலைவடிவமாகும்.

### போர்க் கலைகள்

போரிடுவதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வந்த போர்ப்பயிற்சிகள் இன்றைய நிலையில் பொழுதுபோக்கிற்கு மக்கள் முன் நிகழ்த்தப்படும்

போர்க்கலைகளாக மாறியுள்ளன. சிலம்பம், கத்திச்சண்டை, கிடாய்ச் சண்டை, சேவல் சண்டை முதலியன போர்க்கலைகளாகும்.

**வித்தைகள்**

மக்களைக் கவருவதற்காக நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் பலவற்றிலும் வித்தைகள் இடம்பெறுகின்றன. கண் கட்டு வித்தை, சாட்டை அடி, பாம்பு, குரங்கு, கரடியினை வைத்து வித்தை காட்டுதல், கண்ணைக் கட்டிக் கொண்டு தேங்காய் உடைத்தல், கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு சேலை உடுத்துதல், பானைமீது ஏறி நிற்றல், ஏணியில் ஏறி இறங் குதல், கண்ணால் ஊசி எடுத்தல் எனப்பல விதமான வித்தைகளைக் காட்டிப் பிழைப்பு நடத்துபவர்கள் பலராவர்.

நாட்டுப்புறவியல் துறையில் பேராசிரியர் ஆறு. இராமநாதன் ஆராய்ந்து கண்ட உண்மைகளை வகைப்படுத்தியுள்ளதைக் கண்டோம் இத்தகைய நாட்டுப்புறக் கலைகள் மக்களை எவ்வாறு சென்றடைகின்றன என்பதையும் அவற்றுள் தமிழகத்தில் இங்கேயே தோன்றி வளர்ந்தவை பல. பிற மாநிலங்களிலிருந்து இங்கு வந்து மக்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிட் டவை சில. இருப்பினும் தமிழ் மண்ணோடும் மக்களோடும் வாழ்வோடும் பிண்ணிப் பிதைந்திருக்கின்றகதைகள் சிலவற்றைக் கீழ்க்காண்போம்.

**கரகாட்டம்**

தமிழகத்தில் மாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய வழிபாட்டுக் கலையாக விளங்குவது கரகாட்டமாகும். கர்நாடக மாநிலம் கோலார், பெங்கர், மைசூர் பகுதியில் திரௌபதி அம்மன் வழிபாட்டோடு இணைத்துக் கதைகள் கூறுகின்றனர்.

''குருசேத்திரப் போருக்குப் பின் பாண்டவர்களும், திரௌபதியும் சொர்க்கத்திற்குச் சென்று கொண்டு இருந்தனர். அப்பொழுது திரௌபதி மயக்கமுற்று விழுகிறாள். நினைவு திரும்பியதும் அவளருகில் பாண்டவர்களைக் காணவில்லை. அப்பொழுது திமிரா சூரன் என்னும் அரக்கன் திரௌபதியைத் தாக்கத் தொடங்கினான். திரௌபதி வீரவடிவம் எடுத்துத் தலையில் கும்பத்துடன் (கரகம்) தோன்றி அவனைக் கொன்றழிக்கின்றாள். இதன் அடிப்படையில் கரகம் ஆடப்படுவதாகக் கருதப்படுகிறது. இந்த ஆட்டத்தை வட தமிழகத்தில் வாழும் வன்னிய குலச் சத்திரியர்கள் ஆடி வந்ததாகக் குறிப்பிடுகின்றனர்[10] எனத் தக்சினி என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். திரௌபதி அக்னியிலிருந்து தோன்றியவள் என்பதும், அக்னியிலிருந்து தோன்றியவர்கள் வன்னியர்கள் முதலில் கரகாட்டத்தை ஆடி வந்தார்கள் என்ற செய்தியும் எண்ணிப் பார்ப்பதற்குரியன. மாரியம்மன் சக்தியின் மறுபிறப்பு என்பதால், கரகாட்டக்கலை சக்தி வழிபாட்டோடு தொடர்புடையதாக விளங்குகிறது. இத்தகைய தொன்மக்கலை பாமரமக்களின் ஆட்டக் கலையாக மாறியது என்பதற்குச் சான்றுகள் இல்லை என்கிறார் முனைவர் கு.முருகேசன். தமிழகம் முழுவதும் பரவலாக கரகாட்டக் கலைகளும், கலைஞர்களும் நிறைந்துள்ளதைக் கள ஆய்வில் காணமுடிகிறது. அனைத்துச் சமூகத்தினரும் விரும்பி பயின்று வருவதையும், கரகம் என்பதைச் சக்திக்கரகம், ஆட்டக்கரகம் எனப்பிரித்து, வழிபாட்டோடும், பொழுது போக்கோடும் இணைந்துள்ள கலையாகவும் உள்ளது.

சக்திக் கரகத்தைப் பூசாரி அருளோடு சுமந்து வர, நையாண்டி மேள இசைக்குத் தொழில்முறைக் கலைஞர்கள் ஆடி வருவர். சக்திக் கரகத்தைச் சுமந்து வரும் பூசாரியின் உடையும் ஒப்பனையும், சமூக அங்கீகாரமும் தனிக் சிறப்புக்குரியன. ஆனால் ஆட்டக்கரகத்தை அடி வருவோர் மக்களின் கவனத்தை ஈர்க்கும் விதமாக ஆடை அணிந்து, ஒப்பனை செய்து வருவதைக் காணமுடிகிறது. செவ்வியல் கலைக்கும் கலைஞர்களுக்கும் கிடைக்கும் அங்கீகாரம் நாட்டுப்புறக் கலைக்கும் கலைஞர்களுக்கும் இல்லை. இருப்பினும் பெரும்பான்மை மக்களால் விரும்பப்படும் கலையாகக் கரகாட்டக்கலை இருப்பதை மதுரை

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் காணமுடிகிறது.

**காவடி**

முருகப்பெருமானின் வழிபாட்டோடு தொடர்புடைய கலை காவடி ஆட்டக் கலையாகும். பால் காவடி, பன்னீர்காவடி, மச்சக் காவடி, சேவல் காவடி, பறவைக் காவடி என பக்தர்கள் பல வண்ணக் காவடிகளைச் சுமந்தும், ஆடியும், பாடியும் அறுபடை வீட்டிற்கு அடியவர்கள் வருவர். பழனி முருகன் மீது கவிஞர் கண்ணதாசன்,

''**மலைதெரியுது மலைதெரியுது கண்ணி லே-பழனி**
**மகராஜன் முகம் தெரியுது விண்ணிலே**''

என்று பாடியுள்ளார்.

''**காவடியாம் காவடி**
**இது கந்தவேலன் காவடி**
**கண் கொள்ளாக் காட்சி தரும்**
**கடம்பனுக்குக் காவடி**''

என்று பக்தர்கள் காவடியேந்தி ஆடிப்பாடி வருவதைக் காணமுடிகிறது. முருகன் வழிபாட்டில் பக்தர்கள் பால்குடத்துடன் காவடியேந்தி வருவதையும், முளைப்பாரி போடும் பக்தர்கள் காவடி வடிவில் அலங்காரத்துடன் வளர்த்து தலையிலும், தோளிலும் சுமந்து வருவதையும் காணமுடிகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் பதலை, முழவு போன்ற இசைக் கருவிகளைத் தோளில் காவடி போல் சுமந்து வருவர் என்ற குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. பக்தியோடு நெருங்கிய தொடர்புடைய காவடியாட்டத்தைத் தொழில் முறைக் கலைஞர்கள் கையில் எடுத்து, மக்கள் மத்தியில் கலை நிகழ்ச்சியாக அறிமுகம் செய்தனர். நையாண்டி மேளம், நாதஸ்வரம் என்ற இசைகளுக்கு ஏற்ப தலை, கழுத்து, தோள், நெற்றிப்பட்டை என்ற இடங்களுக்கு நகர்த்தி துரிதமாக ஆடிவருவதையும் காணமுடிகிறது. காவடியாட்டம் துணைக் கலையாக உள்ளதால் தனக்கென ஒதுக்கப்பட்ட காலஅளவில் மக்களை மகிழ்விக்க அத்தனை வித்தைகளையும் செய்து முடிக்கின்றனர். இளையோரும், முதியவரும், பெண் குழந்தைகளும் காவடியாட்டத்தை அரசு நிகழ்ச்சியில் தொழில் முறையாக ஆடிவருகின்றனர். இன்றைய சூழலில் நாட்டுப்புறக்கலைகளுக்கான முக்கியத்துவம் குறைந்து உள்ளதால் பள்ளி, கல்லூரிகளில் பயிற்றுனராகவும், கலைப்பொருட்களைச் செய்து கொடுத்து வாழ்வை நகர்த்துவோராகவும், பிற தொழிலில் ஈடுபட்டு வருவோராகவும் உள்ளனர்.

**தப்பாட்டம்**

தப்பு என்ற தோற்கருவியை இசைத்து அதன் இசைக்கு ஏற்ப ஆண்களால் ஆடப்பட்டு வரும் கலையாகத் தப்பாட்டக் கலை விளங்குகிறது. இன்று மகளிர் அமைப்பும் ஆண்களுக்கு நிகராக தப்பாட்டம் ஆடிவருகின்றனர். கோயில் திருவிழா, இறப்பு வீடு, தேர்தல் பிரச்சாரம், விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி, திருமணம் மற்றும் பூப்பூச் சடங்கில் சீர் கொண்டு செல்வோர் தப்பாட்ட இசையுடன் செல்வதைக் காணமுடிகிறது. தப்பு, தண்டோரா, தம்பட்டம், தமுக்கு என்ற இசைக்கருவிகளின் தொன்மை வடிவம் ''றை'' ஆகும்.

பறை அல்லது தப்பு என்ற வட்டவடிவ இசைக் கருவி பசு, எருமை, மான் போன்ற விலங்கின் தோலால் போர்த்தப்பட்ட கருவியாகும். இக்கருவியைப் பட்டியலின மக்கள் முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். பெரும்பாலும் இறந்தவர் வீட்டில் இசைக்கப்படுவதால் சாக்காட்டுப்பறை, பிணப்பறை, சாக்கொட்டு, சாப்பறை என்றெல்லாம் மக்கள் அழைக்கின்றனர். தப்பு எனும் கருவியிலிருந்து வரும் ஒலி இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இதனைச் சப்பரத்து அடி (தேர் இழுக்கும்போது அடித்தல்), கப்பா அடி, பாடம் அடி, ஜாயிண்டு அடி, சாமி சாட்டுதல் அடி, சினிமா அடி, வாழ்த்து அடி என வகைப்பட்ட அடிகள் இருப்பதைத் தப்பாட்டக் கலைஞர் மதுரை மாவட்டம் பனையூர் ராஜா குறிப்பிடுகிறார். நாகர்கோவில் பகுதியில் தப்பாட்டத்துடன் செண்டைமேளம் வாசிக்கப்படுவதாக நிகழ்த்து கலைப் பயிற்றுனர் மற்றும் அதன் நிறுவனர் வின்செண்ட் கூறுகிறார். தப்பாட்டத்தில் புதிய

உத்திகளாகத் தீப்பந்தம் சுற்றுதல், சிலம்பம் சுற்றுதல், ட்ரம் மீது ஏறி நின்று இசைத்தல் என உப கலைகளைச் செய்து, தொழிலைத் தக்க வைத்துக் கொள்வதைக் கலைஞர்களிடம் காணமுடிகிறது.

**ஒயிலாட்டம்**

மதுரை, திருச்சி, கோவை போன்ற மாவட்டங்களில் குறிப்பிட்ட சமூகத்தினர் (மலைவேடர், வலையர், மூப்பனார், தேவேந்திரர், நாடார், சேர்வை ஆகும். ஆட்டம் ஒயிலாட்ட மாகும். திருவிழா காலங்களில் ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டும், கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்துக் கொண்டும் இசைக்கேற்ப துணியை வீசி ஆடும் குழு ஆட்டமாகும். ‘‘தேரோடும் எங்கள் சீரான மதுரையிலே ஊரார்கள் கொண்டாடும் ஒயிலாட்டம்’’ என்ற பாடல் பாகப்பிரிவினை திரைப்படத்தின் வழி கிராமிய கலைகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. 12 முதல் 20 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபெற்று, மக்கள் முன்னிலையில் நிகழ்ச்சியை நடத்தும் போதும், கலைஞர்களின் ஒப்பனையும், கைவீச்சும், உடலசைவும், நையாண்டி மேளம், டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகளின் இசையும் ஆடாத கால்களையும் ஆடவைப்பதை மதுரை மாவட்டக் கள ஆய்வில் காணலாம். ஊராகப் பகுதியில் வாழ்வோர் அம்மன் வழிபாட்டில் முளைப்பாரி சடங்கின்போது வட்டமாய் நின்று கும்மி கொட்டுவதைப்போல், பெரிய அளவில் வயது வித்தியாசமில்லாமல் அனைவரும் பங்குகொண்டு ஒயிலாட்டம் ஆடுவதைக் களஆய்விலும், இணையவழிப் பதிவுகளிலும் காணமுடிகிறது. திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் இராமாயணக் கதையை வாத்தியார் பாட, கலைஞர்கள் ஆடுகின்றனர். காலமாற்றத்தில் நாட்டுப்புறக் கலைகளைக் காப்பாற்றவும், கலைஞர்கள் வாழ்வாதாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள புதிய வித்தைகளைக் காட்சிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

**தேவராட்டம்**

மதுரை, தேனி, சேலம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் கம்பளத்து நாயக்கர்கள் தேவதுந்துமி இசைக்கு ஏற்ப, அந்த இனமக்கள் முழுமையும் ஆடும் ஆட்டமாகும். பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா நிகழ்வுகளிலும் தேவராட்டம் இடம்பெறும். ஆந்திர மாநிலம் பெல்லாரி மாவட்டத்திலிருந்து, இசுலாமியப் படையெடுப்பாளர்களின் இடையூறுக்குப் பயந்து தமிழகத்தில் குடியேறியவர்கள், பல ஆண்டுகளுக்குப் பிறகும், தம் இனத்தின் தனித்துவம் குன்றாது ஆடிவருகின்றனர். தேவராட்டத்தின் அடவுமுறைகள் குறித்து ஆய்வு செய்த அ.கா.பெருமாள் 72 அடவுகளும், ஆறு சப்தக் கூறுகளையும் உடையன என்கிறார். பின்னர் சோ.சேகர் செய்த ஆய்வில் 19 ஆட்ட வகை என வகைப்படுத்துகிறார். இறைவனை, சித்தர்களை அழைத்தல், நிலத்தைச் சீர் செய்தல் - பயிரிடல், தண்ணீர் பாய்ச்சுதல், தேன் எடுத்தல், சாமி மாடுகளை அழைத்தல், கம்பினைச் சுழற்றுதல் உள்ளிட்ட பாவனைகளைச் செய்வதன் மூலம் தொடக்கால முல்லை நில, குறிஞ்சி நில வாழ்க்கையினை ஆடல்வழிப் பதிவு செய்துள்ளனர். இன்று வேளாண்மை தவிர பிற வழிபாட்டுத்தளங்கள், தமிழ்ச்சங்கம் உள்ளிட்ட அரசு மற்றும் தனியார் கலைநிகழ்ச்சிகளுக்குச் செல்வதன் மூலம் பொருளாதார வளத்தைப் பெருகிக்கொள்கின்றனர். ஈரோட்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் மக்களிடம் வாக்குச் சேகரிக்க தேவராட்டக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளோடு சென்றதைத் தொலைக்காட்சிச் செய்தியின் வழி அறியமுடிந்தது.

கம்பளத்து நாயக்கர்கள் சேவையாட்டத்தையும் ஆடி வருகின்றனர். சிவபெருமானுடைய பிரம்மஹத்தி தோசத்தைப் போக்குவதற்குத் திருமாலால் ஆடப்பட்ட ஆட்டமாகும். இதனைத் தாதராட்டம் என்றும் அழைப்பர். புனிதத்தன்மை கொண்ட ஆட்டம் வழிபாட்டுத் தலங்களில் கலைஞர்கள் ஆடிவருகின்றனர். குறிப்பிட்ட சமூகத்தாருடைய ஆட்டம் இன்று தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியின் காரணமாகப் பலரும் கண்டு

ரசிப்பதைக் காணமுடிகிறது. காந்தி கிராமப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒ.முத்தையா கம்பளத்து நாய்கர்களின் ஆட்டங்களை, வாழ்வில் அம்சங்களை விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

### துணை ஆட்டங்கள்

கரகாட்டத்தில் துணை ஆட்டமாக மயிலாட்டம் இடம்பெறுகிறது. மயிலின் உடல் கூட்டினைத் தோளில் சுமந்துகொண்டு, உடல் கூட்டில் உள்ள பச்சைத்துணியைக் கால்கள் மறையும்படி அணிந்து கொண்டு கலைஞர்கள் நையாண்டி இசைக்கு ஏற்ப ஆடுகின்றனர். மயில் கண்ணாடி டம்பளரில் உள்ள நீரை உறிஞ்சுதல், பணத்தை வாயினால் கவ்வி எடுத்துதல் உள்ளிட்ட வித்தைகளைச் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர்.

மாட்டின் கூட்டினைச் சுமந்து கொண்டு நையாண்டி இசைக்கு ஆடுவதும், பார்வை யாளர்களை முட்டுவதற்குத் துரத்துவதுமாகப் பாவனை செய்வர். குறிப்பிட்ட சமூகத்தார்கள் சீர்வரிசையினைத் தூக்கிச் செல்லும் போது, அதன்முன்பாக தப்பாட்டம், கரகம், மாடாட்டம் இடம் பெறுவதை உசிலம்பட்டி பகுதி களஆய்வில் காணமுடிகிறது. வேளாண்மையோடு தொடர்புடைய விலங்கு என்பதால் மாடாட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

கலை உருவாக்கங்களில் ‘‘போலச் செய்தல்’’ பண்புகளை அடியொற்றி ஆடப்படும் ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. இதனைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடுவாய் ஆட்டம் என்பர். வெற்றுடம்பில் கோடுகளை வரைந்து புலிவேடம் புனைந்து ஆடுவர். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் ஒன்று புளியாட்டமாகும். புலிவேடத்தில் சாதாரணப் புலிவேடம், இராசங்கப்புலிவேடம் என இரண்டு முறை காணப்படுகிறது. இராசாங்கப் புலிவேடத்தில் ஒளிரும் வண்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றனர். மாமன் மைத்துனர் உறவுடையவர்கள் ஒருவர் புலிவேடமும், மற்றொருவர் சிலம்பினைச் சுழற்றி ஆடிவருவதைக் காணமுடிகிறது. தமிழகத்தில் தஞ்சைப்பகுதியில் புலிவேடக் கலைஞர்கள் அதிகம் உள்ளனர். இவர்கள் திரைப்படம், தொலைக்காட்சித் தொடர், நாடகங்களிலும் நடித்து வருகின்றனர். மேலும், மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டு ஆடுவதாலும், பொய்யான குதிரையை உடம்பில் சுமந்து கொண்டு ஆடுவதாலும் இதனைப் பொய்க்கால் குதிரையாட்டம் என்று அழைக்கப் படுகின்றது. புரவியாட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களும் இதற்கு உண்டு. ஆணும் பெண்ணும் ராசா-ராணி வேடத்தில் ஆடுவர். ஆந்திராவில் இருந்து விசயநகர ஆட்சியின்போது தமிழகத்தில் குடியேறிய நூற்றுக்கணக்கான குடும்பங்களில் பலர், பொய்க்கால் குதிரையாட் டத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள். இக்கலையும் கரகாட்டத்தில் துணைக் கலையாக இடம் பெறுகின்றன. இவை தவிர சிலம்பம், கிழவன் கிழவி, கரடியாட்டம், ஆகியன துணை ஆட்டங்களாக கரகாட்டத்திடல் இடம்பெறுகின்றன.

### முடிவுரை

நாட்டுப்புறக் கலைகள் உணர்ச்சிகளின் உண்மை வடிவமாய் விளங்குகின்றன. எளிய இனிய தன்மையை உடையன. நுட்பமான கலைத்தன்மை உடையதாகவும் உள்ளன. தெய்வ நம்பிக்கையை ஊட்டுவனவாகவும் உள்ளன. புனிதச் சூழலையும் அழகியல் உணர்வையும் ஊட்டவல்லன. விவசாயிகளின் பொழுதுபோக்குச் சின்னமாகவும், மகிழ்வை ஊட்டுவனவாகவும், அறத்தை வலியுறுத்துவதாக உள்ளன. குறிப்பிட்ட பகுதியில் வாழும் இனக்குழு மக்களின் பண்பாட்டுச் சின்னமாக விளங்குவதால், அம்மக்கள் கலைகளைப் பாதுகாத்து வருகின்றனர் இப்படி தமிழகத்தில் மாவட்டத்திற்கு மாவட்டம் கலைகளின் வடிவங்கள் வேறுவேறாக இருந்தாலும், அதன் பயன்பாடு மக்களை மகிழ்வூட்டுவனாகவே உள்ளன. கன்னியாகுமரியில் வில்லுப்பாட்டு, திருநெல்வேலியில் கணியன் கூத்து, விழுப்புரம், கும்பகோணம் பகுதியில் இரணிய நாடகம், செங்கல்பட்டு பகுதியில் தெருக்கூத்து கோவை மாவட்டத்தில் உடுக்கடிப்பாட்டு என நாட்டுப் புறக்கலைகள் வழக்கில் உள்ளன. அரசு நிறுவனங்கள் அல்லது தொண்டு நிறுவனங்கள் அல்லது அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களை

நாட்டுப்புறக் கலைகள் வாயிலாக மக்களிடம் எடுத்துக்கூறி வருகின்றனர். குடும்பக் கட்டுப்பாடு, முதியோர்கல்வி, பெண் சிசுக்கொலை, வரதட்சணை, வேலையில்லாத் திண்டாட்டம், மருத்துவம், விவசாயம், பொதுக்கழிவறை பயன்பாடு ஆகியவற்றைத் தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், தெரு நாடகம் ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்தப் படுகிறது. சமூகத்தின் ஒரு அங்கமாகத் திகழும் கலைஞர்களையும் அவர்களது கலைகளையும் மக்கள் நேசித்தால் மட்டுமே கலைகள் வளரும். கலைஞர்களும் மகிழ்வர். மக்களை மகிழ்விப்பதைத் தவிர பிற தொழில்களை அறியாதவர்கள் கலைஞர்கள். ஆனால் சமூக நலனில் அக்கறைகாட்டி, சமகால நிகழ்வை மக்கள் மனதில் பதிவு செய்யும் கலைஞர்களை நேசிப்போம். வாழ்க்கை வளத்திற்கும், சமூக நலத்திற்காகவும் கலைகளை ஆதரிப்போம். இயந்திர உலகில் அழிந்து வரும் கலைகளை மீட்டெடுப்போம்?

**அடிக்குறிப்புகள்**

1. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறக் கலைகள், ப.23 (2001)
2. மேலது, ப.16
3. நாட்டுப்புற இலக்கியம், ப.86 (பாவைப் பதிப்பகம், 2009)
4. மேலது, ப. 87
5. ஆறு. இராமநாதன், தமிழர் கலை இலக்கிய மரபுகள், ப. 468 (2007)
6. கு.முருகேசன், கரகாட்டம், ப. 203
7. மேலது, ப. 204
8. மேலது, ப. 26
9. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக்கலைகள், ப. 45
10. கு.முருகேசன், மு.நூ.ப46
11. பா.சிங்காரவேலன், மதுரைச் சீமை நாட்டுப் புறக் கலைகளும், கலைஞர்களும், ப. 158 (2014)

# முல்லைநில மக்களின் உணவுப்பொருட்களும் மருத்துவமும்

***முனைவர் க. சிங்காரவேலு***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது பழமொழியாகும். மனிதன் நோயின்றி வாழ உணவுப் பொருள்கள் அவசியமானதாகும். உணவுப்பொருள்களே மனிதனின் உடல் வளர்ச்சியையும் நோய் எதிர்க்கும் திறனையும் தருவதாகும். உணவுப்பொருட்களானது ஒவ்வொரு நிலத்திற்கு தகுந்தவாறும் காலநிலைக்கு ஏற்றவாறும் மனிதனின் உடல்நிலைக்கு ஏற்றவாறும் மாறுபடுகிறது. நிலத்தின் தன்மைக்கும் தட்பவெப்ப நிலைக்கும் ஏற்றவாறு உணவுப்பொருட்கள் நிலத்தில் இயற்கையாகவே மனிதனுக்கு விளைந்தது. ஐவகை நிலங்களில் முல்லை நிலத்தில் விளைந்த பொருட்களே சிறுதானிய பொருள்களாக விளங்குகிறது. நவீன காலத்தில் நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்க சிறுதானிய உணவுகளே சிறந்ததாகும். முல்லைநிலத்தில் விளைந்த சிறுதானிய உணவுப்பொருட்களே ஐவகை நிலங்களில் விளைந்த உணவுப்பொருட்களைக் காட்டிலும் சிறந்த உணவுப்பொருள்களாக அமைகிறது என்ற அடிப்படையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *தோரை, இறுங்கு, முதிரை, காணம், கூலம், பஞ்சந்தாங்கி*

**முன்னுரை**

பழந்தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நிலங்களை நிலத்தின் தன்மைக்கேற்ப ஐந்து நிலங்களாகப் பகுத்து வாழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என தமிழ் நிலத்தில் நான்கு வகை நிலங்கள் இருந்தாலும் அவற்றை தன் நிலையிலிருந்து திரிந்த நிலங்களின் அடிப் படையில் பாலை என்று ஒரு நிலத்தையும் படைத்துள்ளனர். ஐவகை நிலங்களாக நிலங்களை வகுத்த போதும் ஒவ்வொரு நிலத்திற்கும் மக்களின் வாழ்வியல் கூறுகள் மாறுபட்டு காணப்படுகிறது. ஒவ்வொரு நில மக்களின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் வேறுபட்டு காணப்படுவதை அறிய முடிகிறது. நிலத்திற்கேற்பவும் நிலத்தின் பொழுதிற்கேற்பவும் உணவுப்பொருட்கள் ஐம்பூதங்களின் ஆற்றலால் நிலத்தில் விளைவிக்கப்பட்டன. அவ்வாறு விளைவிக்கப்பட்ட பொருட்கள் மருத்துவத்தன்மை கொண்டதாகவும் அந்நிலத்தின் தன்மைக்கேற்ப மக்களுக்கு பயன்படும் உணவாக இருந்துள்ளதை அறிய முடிகிறது. எனவே உணவுப்பொருட்களில் மருத்து வத்தன்மை அறிந்து நிலத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற உணவு என்பது முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஐவகை நிலங்களில் முதன்மை நிலமாக முல்லை நிலத்தினை முதன்மைப் படுத்து வதினை தொல்காப்பியரின் நூற்பாவான,

**மாயோன் மேய காடுறை உலகமும்**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த பகுதியாகும். அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர் எனப்பட்டனர். நிலவகை உணவுகளில் முல்லைநில உணவுகள் அதிகளவு ஆற்றலையும் நோய் எதிர்ப்புத் தன்மையையும் தரக்கூடியது என்ற அடிப் படையில் ஆராய்வதே இவ்வாய்வாக அமைகிறது.

**உணவின் அவசியம்**

உணவு என்பது உடலை வளர்ப்பதற்கும் உயிரைப் பாதுகாப்பதற்கும் உதவியாக அமைகிறது. உணவு இல்லையெனில் உடல் வளர்ச்சி பெறாது.

உடலிலும் நோய் குடிகொள்ளும். நல்ல வகையான உணவுகளை உண்பதன் மூலம் நீண்ட நாள் வாழ முடியும். உடல் என்பதே உணவால் அமைவது என்பதை,

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டிக் கொடுத்தோரே உயிர் கொடுத்தொர்**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே**[1]

உடம்பானது உணவால் அமைந்த பிண்டம். உடம்பில் உயிர் இருக்க வேண்டும் என்றால் உணவு வேண்டும். உண்ணும் உணவு நிலமும் நீரும் இணைந்த கூட்டுப்பொருள் ஆகும். நிலத்தில் நீரைச் சேர்த்து வைத்தால் உணவுப்பொருளின் விளைச்சலைப் பெருக்கலாம். எனவே நிலத்தில் நீர் தங்கும்படி சேமித்து வைத்தவர் உடலில் உயிரைப்படைத்தவர் என்ற பாடல் விளக்கத்தின் மூலம் உணவே ஒருவனுடைய உடல் வலிமையைத் தீர்மானிக்கும் காரணியாக அமைகிறது.

ஐவகை நிலங்களுக்கும் அறுவகைப் பெரும் பொழுதையும் சிறுபொழுதையும் வகுத்து ஒவ்வொரு நிலத்தின் சூழலுக்கேற்ப உணவுப் பொருட்களை விளைவித்து தங்கள் வாழ்வை வளமுள்ளதாக கொண்டு செயல்பட்டுள்ளனர். முல்லை நிலத்திற்கு பெரும்பொழுதாக கார்ப் பொழுதும், சிறுபொழுதாக மாலைப்பொழுதும் வகுக்கப்பட்டுள்ளதை,

***காரும் மாலையும் முல்லைக்குரித்தனவே()***
***மல்குகார்மாலை முல்லைக்கு வகுத்தலும்***
***(இலக்கணவிளக்கம்.அகம்.14)***

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

கார்காலத்திற்குரிய காலமாக ஆவணி, புரட்டாசி மாதங்களில் உயிர்கள் உடலால் வலிமை பெறும். பூமியானது வேனிற்காலம் முடிந்து குளிர்ச்சியைப் பெறும். இக்காலத்தில் நெய்ப்புக்குணமும் புளிப்புக்குணமும் வலிமை பெறும். வெப்பம் தணிந்து உள்ளத்திற்கு களிப்பையும் தரக்கூடிய காலமாக கார்காலம் அமையும் என்பதை,

***ஈரிரு மதிகளில் இனன்றரு வெம்மை***
***ஏற்றிரு நிலத்துள உயிரினம் வன்மை***
***ஏரிரிந் திடவயர் உறுவயின் தண்மை***
***எல்வளி கவிமுகி லெறிபொழி பண்பு***
***சேரிரு மனலெழச் செயுமது மண்ணில்***
***தீம்புனல் அழுக்கமி ல்லமுறு மென்னில்***
***காரிரிந் திடுபெரும் பொழுதியல் பென்னும்***
***காசினி யில்தெரி கலைவல நல்லோர்***
***(சி.ம.சு.299)***

என்ற பாடலடிகள் மூலமாக அறியலாம்.

அறுவகைப் பெரும் பொழுதிலும் அறுசுவை உணவு உண்பதே நலத்திற்குரியதாகும். ஆயினும் ஒவ்வொரு காலத்திற்கும் சேர்க்க வேண்டிய உணவுகளை சுவையின் அடிப்படையில் உண் பதை எடுத்துக் கூறப்பட்டுள்ளதை,

***ஆறிருது களிலுணவி லாறுசுவை***
***கலந்த நல மமையு மெனினும்***
***கூறுமிகு பனிகளிலும் கார்ப்போழ்தும்***
***இனிப்பு வர்ப்பு குறைந்த புளிப்பு***
***சாறுதருங் கரும்பு வில்லோன் காலத்தே***
***கடுகைப்புஞ் சமன்செய் துவர்ப்பும்***
***வீறுமிகுங் கதிரவனின் வேனலிலே***
***இனிப்புதட்பம் மிகுதல் நலமே. (சி.ம.சு)***

என்பதை இப்பாடலடிகள் மூலம் அறியலாம்.

### முல்லைநில உணவுப்பொருட்கள்

முல்லை நிலம் என்பது காடு சார்ந்த பகுதியாவதால் காட்டில் விளைந்த பொருட்களே அப்பகுதியில் உணவுப்பொருட்களாக அமைந்துள்ளது. உணவுப்பொருட்கள் தாவர வகையிலிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பெறப்பட்டது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட பதினாறு வகையான கூலப்பொருட்கள் என்பது முல்லைத் திணையைச் சார்ந்ததாகும். இவையாவும் முல்லைநிலத்தில் விளையக்கூடியவையாகும் என்பதை,

***பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு***
***மாட மறுமும் கூல வீதியும்*** [2]

என்ற பாடலடிக்கு உ.வே.சா அவர்கள் உரை கூறும் விதமாக,

***நெல்லுப் புல்லு வரகுதினை சாமை***
***இறுங்கு தோரை யிராகிஎண் கூலம்***
***எள்ளுக் கொள்ளுப் பயறுமுந் துவரை***

**கடலை துவரை மொச்சை யென்றாங்**
**குடனிவை முதிரைக் கூலத் தூரைவே³**

இவ்விளக்கத்தின் மூலம் பதினாறு வகையான பொருட்களை குறிப்பிடுகிறார். இவற்றில் முல்லைத்திணைக்கான உணவுப்பொருட்களாக வரகு, தினை, சாமை, சோளம், கேழ்வரகு, எள், கொள்ளு, துவரை, கடலை, மொச்சை போன்றவற்றோடு புல் என்ற கம்பு முல்லைநில உணவுப்பொருட்களாக அமைகிறது.

### வரகு

வரகிற்கு கோத்திரம் என்ற வேறு பெயர் உண்டு. இதன் அறிவியல் பெயர் Panicum milliaceum என்பதாகும். தமிழர்களின் உணவுப்பொருட்களின் வரகு என்பது இன்றியமையாததாகும். அவையன்றி எந்த உணவும் இருக்காது என்பதை,

**கருங்கால் வரகே இருங்கதிர் தினையே**
**சிறுகுடிக்கொள்ளே பொறிகிளர் அவரை யொடு**
**இந்நான் கல்லது உணாவும் இல்லை**
**(புறம்.335)**

என்ற பாடலடிகளால் அறியலாம். வரகில் இரண்டு வகை உண்டு. இரண்டும் ஒரே தாவரவியல் குடும்பத்தைச் சார்ந்தவை. அவை 1. பனிவரகு 2. கேழ்வரகு

### பனிவரகு

பனிவரகென்பது பழுப்பு நிறம் கொண்டது. ஏழடுக்கு தோல்களைக் கொண்டது. இதன் தோல்களை நீக்கியே வரகரிசி உண்ண முடியும். பனி நீரையும் குறைந்தளவு நீரையும் கொண்டு குறுகிய காலத்தில் அறுவடைக்கு வந்துவிடும் காரணத்தால் பனிவரகு என்று அழைத்தனர். வரகில் வைட்டமின் பி, புரதம், கால்சியம் ஆகிய உயிர்ச்சத்துக்கள் அடங்கியுள்ளன. வரகை விளைவித்த பின்பு கொள்ளினை விதைப்பர் என்பதை,

**வெள் வரகு உழுத கொள் உடை கரம்பை**
**(பதிற்றுபத்து.11)**

என்பதை அறிய முடிகிறது. வேளூரை ஆண்ட குறுநில மன்னனான பூதன் என்பவன் ஔவை பெருமாட்டிக்கு வரகரிசி சோறு கொடுத்ததை விரும்பி உண்டதாக ஔவை குறிப்பிடுவதாக,

**வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் கூட்டும்**
**முரமுரவென் றேபுளித்த மோரும் -**
**பரிவுடனே புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந்**
**திட்டசோ றெல்லா வுலகும் பெறும்**
**(ஔவையார் தனிப்பாடல்.11)**

என்ற பாடல் மூலம் அறியலாம். வரகு உணவானது உடல் வறட்சி, சொறி சிரங்கு, அழல் போன்ற நோய்களை நீக்கி இளைப்பு நோய்களையும் நீக்கும் தன்மையுடையது என்பதை,

**எறிகபத்தோ டேபலநோ யெய்தும் வறட்சி**
**சொறிசிரங்கு பித்தந் தொடரும் - நிறையுங்**
**கரகமெனப் பூரித்த கச்சுமுலை மாதே**
**வரகரிசிச் சோற்றால் வழுத்து**
**(அ.குணபாடம்.498)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

### கேழ்வரகு

சமஸ்கிருதத்தில் கேழ்வரகிற்கு இராஜிகா என்ற பெயரும் உண்டு. இராஜிகா என்ற வார்த்தையே பின் நாளில் இராகி என்று மாறியிருக்கிறது. மலையாளத்தில் தற்போதும் இராகி என்றே அழைக்கப்படுகிறது. தமிழில் கேழ்வரகு என்று அழைக்க காரணம் கேழ் என்றால் நிறம் என்ற பொருளும் உண்டு. நிறத்தையுடைய வரகு என கேழ்வரகு என்ற பெயர் உருவாயிற்று. ஆனால் சங்க இலக்கியங்களில் வரகு என்று பொதுவாகவே அழைத்துள்ளனர்.

**எருதுகா லுறாஅ திளைஞர் கொன்ற**
**சில்விளை வரகின் புல்லென் குப்பை**
**(புறம்.327)**

என்ற பாடல் வரிகள் மூலம் எருது கொண்டு நிலத்தை உழாது போர் வீரன் காலில் உழுது கேழ்வரகை விதைக்கிறான் என்பதை அறிய முடிகிறது. மேலும்,கேழ்வரகிற்கு நிலம் அளவான நிலையிலே உழுதால் போதும் என்பதும் அறிய முடிகிறது.

**கருங்கால் வரகே இருங்கதிர் தினையே**
**(புறம்.335)**

என்ற பாடலடியின் மூலம் கருங்கால் வரகு

என்பது கேழ்வரகினைக் குறிப்பதாக அமைகிறது. கேழ்வரகின் தாவரவியல் பெயர் Eleusine coracona என்பதாகும். இது செடி வகைத் தாவரமாகும். வரகானது முல்லை நிலத்தில் வளரும் என்பதை குறுந்தொகையில் குறிப்பிடுவதை,

**பழமழைக் கழித்த புதுப்புன வரகின்**
**இரலை யேந்த குறைத்தலைப் பாவை**
**இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை**

***(குறுந்.220)***

என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

மேலும் கேழ்வரகானது கோயில்களின் கலசங்களில் வைக்கப்படும் நவதானியங்களுள் ஒன்றாக வைக்கப்பட்டு இடியினுடைய காந்த ஒளியிலிருந்து பாதுகாத்து பனிரெண்டு ஆண்டுகள் உயிரோட்டம் உள்ளதாக இருக்கும். பனிரெண்டு ஆண்டு காலம் கழித்தும் முளைக்கும் தன்மையுடையது. குறைவான நீரிலே உற்பத்தியாகி உரமின்றி பூச்சிகள் தாக்குதலின்றி வளரக் கூடிய இயல்புடையதாகும். அரிசிக்கு சிறந்த மாற்று உணவாக காணப்படுகிறது. பாலை விட மூன்று மடங்கு அதிகம் சுண்ணாம்பு சத்து நிறைந்துள்ளது. அரிசியைவிட பத்து மடங்கு சுண்ணாம்பு சத்து நிறைந்தது. ட்ரிப்டோஃபேன் எனும் அமிலம் கேழ்வரகில் உள்ளதால் நீரிழிவு நோயாளிகளுக்கு பசியுணர்வை தடுப்பதாகவும் உள்ளது. மெத்யோனையன் எனும் அமிலோ அமிலம் லெசித்தின் எனும் அமிலோ அமிலங்கள் இரத்தத்திலுள்ள கொழுப்பையும் கரைத்து கெட்ட கொழுப்பை நல்ல கொழுப்பாக மாற்றுகிறது. மேலும் இரும்புச்சத்து அதிகம் இருப்பதால் உடலில் இரத்த சோகையைத் தடுக்கும். இரத்தத்தில் சர்க்கரை அளவையும் கட்டுக்குள் வைத்திருக்கும். செரிமான மண்டலத்தில் சர்க்கரையை கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடும் தன்மையுடையது. மேலும் உடலினை இளமையாக வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. உடலின் வெப்பத்தை தவிர்க்கவல்லது. தமிழகத்தில் இதனை கேப்பை என்றும் குறிப்பிடுவர். இதற்கு பஞ்சந்தாங்கி என்ற பெயரும் உண்டு என்பதை,

**கந்தஅனி லந்தன்னைத் தோற்றுவிக்கும் அல்லவெனில்**
**பித்தவனி லத்தைப் பிறப்பிக்குஞ் - சித்ரமலர்த்**
**தாழ்குழலே! நீடுபஞ்சந் தாங்கியெனச் சொல்லுகின்ற**
**கேழ்வரகின் செய்தியிது கேள்**

***(அ.குணபாடம்.)***

என்ற பாடல் மூலம் பஞ்சந்தாங்கி என்பதை அறிய முடிகிறது. களி மற்றும் கூழ் செய்து உண்டு வருகின்றனர். பழந்தமிழர்களின் உணவுப் பொருட்களில் வரகு என்பது முக்கியமான உணவுப்பொருளாகும்.

**சாமை**

சாமையின் அறிவியல் பெயர் Panicum sumatrense என்பதாகும். சாமை சாதாரண மக்களின் உணவாக திகழ்வதால் சாமை என்று பெயர் பெற்றது. சாமையானது உடலுக்கு அழகைத் தரும். சர்க்கரை நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். மலச்சிக்கலிலிருந்து விடுவிக்கும். காய்ச்சலினால் ஏற்படும் நாவறட்சியைப் போக்கும். சளி சம்பந்தமான நோய்களும் தீரும் என்பதை,

**உடலிலிறு தாகசுரம் ஓடும்மே கம்போம்**
**அடலினுறு வாதம் அகலுங் - கடலிலுறை**
**ஆமை யனையபதத் தன்னமே மேனியிடு**
**சாமை யரிசிக்குத் தான்**

***(அ.குணபாடம்.653)***

என்ற பாடல் மூலம் அறியலாம்.

சாமையில் புரதச்சத்து, கொழுப்புச்சத்து, தாது உப்புகளான மக்னீசியம், சோடியம், பொட்டாசியம், காப்பர், மாங்கனீசு, துத்தநாகம், நார்ச்சத்து, மாவுச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து ஆகிய ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

**உழுந்து**

உழுந்து தற்போது உளுந்து என்ற பெயரில் வழங்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் குறிஞ்சிப்பாட்டில் உந்தூழ் என உளுந்தின் மலரைக் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது. உழுந்து செடி வகையைச் சார்ந்ததாகும். இதன் அறிவியல் பெயர் vigna mungo என்பதாகும்.

உளுந்தில் புரதம், பொட்டாசியம், கால்சியம், நியாசின், தியாமின், ரிபோஃப்ளேவின் ஆகிய ஊட்டச்சத்துக்கள் உள்ளன. உழுந்து பெரும்பாலும் உணவில் முதன்மைப் பொருளாக அல்லாமல் துணைப்பொருளாகவே சேர்க்கப்பட்டுள்ளது. உணவில் உழுந்தைச் சேர்த்து பயன்படுத்தியுள்ளதை,

***உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை***
***(அகம்.86)***

எனும் பாடல் மூலம் அறியலாம்.

***நெய்யோடு சேர்த்து உழுந்தைப் பயன்படுத்தியதை,***
***நெய்யொடு மயக்கிய உழுந்துநூற் றன்ன***
***(ஐங்குறுநூறு.211)***

எனும் பாடல் குறிப்பிடுவதை அறிய முடிகிறது. உழுந்தில் புரதச்சத்து, நார்ச்சத்து, இரும்புச்சத்து நிறைந்துள்ளது. நரம்புமண்டலத்தை பலப்படுத்துகிறது. இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்வதால் சிறுநீரக கற்கள் உருவாவதைத் தூண்டுவதாக அமைகிறது. உளுந்தை மாவாக்கி பண்டங்களாக உண்பதன் மூலம் சிறுநீரக சம்பந்தமான நோய்கள் நீங்கும். உடலுக்கு நல்ல ஊட்டத்தையும் பெண்களின் இடுப்பிற்கு வலிமையையும் உடலுக்கு குளிர்ச்சி யையும் தரும் என்பதை,

***செய்யஉளுந் திற்குச் சிலேத்மவனி லற்பிறக்கும்***
***வெய்யபித்தம் போமந்தம் வீறுங்காண் - மெய்யதனில்***
***என்புருக்கி தீரும் இடுப்புக் கடுபலமாம்***
***முன்பு விருத்தியுண்டாய் முன்***
***(அ.குணபாடம்.226)***

பாடல் மூலம் அறியலாம். திருமணங்களில் உளுந்தினை மணமக்களை வாழ்த்த பிற மங்கலப்பொருட்களோடு உளுந்தையும் தூவி வாழ்த்தியிருப்பதையும் அறிய முடிகிறது. சீதைக்கான சுயம்வர விழாவில் வாழ்த்து ம்பொழுது அங்கே உளுந்து கீழே விழுவதற் குக்கூட இடம் இல்லாமல் இருந்தது என்பதை,

***உழுந்து இட இடம் இலை உலகம் எங்கணும்***
***அழுந்திய உயிர்க்கும் எலாம் அருட் கொம்பு ஆயினான்***
***(கம்பராமாயணம். பால காண்டம்.23)***

என்பதை பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

**எள்**

எள்ளின் அறிவியல் பெயர் Sesamum Indicum என்பதாகும். எள் செடி வகையைச் சார்ந்த தாவரமாகும். எள் எண்ணெய் வித்துக்களில் முதன்மையானதாகும். எள் பெரும்பாலும் எண்ணெய் எடுப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. எள்ளில் மூவகை உண்டு. அவை அதன் விதையின் நிறத்திலிருந்து அறியப்படும். வெள் எள், கருப்பு எள், செவ்வெள் என்பதை அறிய முடிகிறது. மலைபடுகடாமில் எள்ளைப் பயிரிட்டுள்ளதை,

***கௌவை போகிய கருங்காய் பிடி ஏழ்***
***நெற்கொள ஒழுகின பல்கவர் ஈர்எண்***
***(மலைபடுகடாம்.105-106)***

காட்டில் ஒரே பிடியில் ஏழு காய்கள் காய்த்துள்ளதை கௌசிகனார் குறிப்பிடுவதை அறியலாம். தொல்காப்பியர் இலக்கியத்திலிருந்து இலக்கணம் பிறப்பதை குறிப்பிட எள்ளை உதாரணமாக காட்டுவதை,

***எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல***
***(பேரகத்தியத்திரட்டு.1)***

எனக் குறிப்பிடுவதை அறியலாம். சங்க காலத்தில் கணவனை இழந்த கைம்மை மகளிர் எள்ளை உணவாக உட்கொண்டதை,

***அடை இடைக் கிடந்த மைபிழி பிண்டம்***
***வெள் எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட***
***வேளை வெந்தை வல்சி ஆக (புறம்.246)***

என்ற பாடல் மூலம் அறியலாம். பெரியாழ்வார் எள்ளை குழந்தைகள் உண்ணும் உணவாக குறிப்பிடுவதை,

***கன்னல் இலட்டுவத்தோடு சீடை***
***காரெள்ளின் உண்டை கலத்தில் இட்டு***
***(பெரியாழ்வார் திருமொழி.9)***

பாடல் மூலம் அறியலாம். கருப்பு எள் அதிக மருத்துவப் பயன்கள் கொண்டவை. இதில் உடலுக்குத் தேவையான கால்சியம், இரும்பு, வைட்டமின் பி1, வைட்டமின் சி, ஆக்ஸாலிக் அமிலம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை நிறைந்திருக்கின்றன. எள்ளை உண்பதால் உடல் உறுதி பெறுவதை,

***இளைத்தவனுக்கு எள்ளு கொழுத்தவனுக்கு***
***கொள்ளு ஏழைக்குத் தகுந்த எள்ளு***

ஆகிய பழமொழிகள் குறிப்பிடுவதை அறியலாம். எள்ளானது உடலுக்கு வலிமையைத் தரும். அசுத்த இரத்தத்தை நீக்கும். கண்ணுக்கு நல்ல ஒளியையும் உடலின் வெப்பத்தையும் குறைக்கும் தன்மையுடையதாகும் என்பதை,

***எள்ளுமருந் தைக்கெடுக்கும் ஏறனாலந் திண்மைதரும்***
***உள்ளிலையைச் சேர்க்கும் உதிரத்தைத் - தள்ளுமிரு***
***கண்ணுக் கொளிகொடுக்குங் காசமுண்டாம் பித்தமுமாம்***
***பண்ணுக் கிடர்புரியும் பார்***

***(அ.குணபாடம். 259.)***

பாடல் மூலம் அறிய முடிகிறது.

**கம்பு**

கம்பினுடைய அறிவியல் பெயர் Pennisetum glaucum என்பதாகும். உடம்பு என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் கம்பஞ்சோற்றின் அருமையை விளக்கியுள்ளார். கம்பின் அருமையை கம்பர்,

***நீரெல்லாஞ் சேற்றுநாற்ற நிலமெலாங்***
***கல்லுமுள்ளும் ஊரெல்லாம் பட்டிதொட்டி***
***யுண்பதோ கம்பஞ்சோறு***

***(கம்பர்தனிப்பாடல்.)***

என்ற பாடல் மூலம் கம்பஞ்சோற்றை முல்லைநில மக்கள் உண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் இதனை புற்கைக் கஞ்சி என்று கம்பை குறிப்பிடுவதை,

***என்ஐ புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே***

***(புறம்.84)***

என்ற பாடல் மூலம் அறியலாம். கம்பு குளிர்ச்சித் தன்மை வாய்ந்தது இதனை மழைச்சோறு என்று நாட்டுப்புற மக்கள் குறிப்பிடுவதை அறியலாம். கம்பின் குளிர்ச்சித் தன்மையானது உடலில் வெப்பத்தை அகற்றும், மூல நோய்கள் நீங்கும், வயிற்று நோய்களும் தீரும் என்பதை,

***கம்பு குளிர்ச்சியெனக் காசினியிற் சொல்லுவர்***
***காண் பம்பு சொறிசிரங்கைப் பாலிக்கும் -***
***வெம்பும் உடலின் கொதிப்பகற்றும் உட்பல***
***முண்டாக்கும் அடலயிற்கண் மாதே யறி***

***(அ.குணபாடம்.50)***

என்ற பாடல் மூலம் அறியலாம். அரிசியைக் காட்டிலும் கால்சியம், புரதம், இரும்புசத்து, உயிர்ச்சத்து என அனைத்து சத்துக்களையும் கொண்ட தானியமாக கம்பு விளங்குகிறது. ஐந்து சதவீத அளவிற்கு எண்ணெய் சத்தும் இருக்கிறது. உடலுக்கு உகந்த நல்ல கொழுப்பை தருவதுடன் பொட்டாசியம், பாஸ்பரஸ், மெக்னீசியம் போன்ற தாதுச்சத்துக்களும் கம்பில் உண்டு. உடல் சோர்வு, மனச்சோர்வு இரண்டையும் நீக்கி உடலுக்கு புத்துணர்வை தரும் தன்மையுடையது என்பதை,

***கம்புமாக் கூழுணக் காத்திரந் துய்தாய்***

***(தேரையர் யமக வெண்பா.50)***

பாடல் மூலம் அறியலாம்.

**சோளம்**

சோளத்தின் அறிவியல் பெயர் sorghum vulgare என்பதாகும். இறுங்கு என்று இலக்கியங்களில் குறிப்பிடுவதை அறியலாம். இதில் கருஞ்சோளம், செஞ்சோளம், வெள்ளைச்சோளம் என பலவகை சோளங்கள் உண்டு. பழங்காலங்களில் சோளங்களை சேமிக்க பெரிய குழியை வெட்டி சேமிப்பர். இதனை சோளக்குழி என்று குறிப்பிடுவர். சோளத்தின் புரதச்சத்து, மணிச்சத்து, சுண்ணாம்புச் சத்து, இரும்புச்சத்து, கால்சியம், தயாமின் ஆகிய பொருட்கள் உள்ளன. சர்க்கரையைக் குறைக்கும் தன்மை மற்றும் கண் குறைபாடுகளை சீர் செய்யவும் பீட்டோ கரோட்டின் சோளத்தில் அதிகமாக உள்ளது. மேலும், இது உடலுக்கு வலுவானதாகவும் குளிர்ச்சி தன்மையைத் தருவதாகவும் அமைகிறது.

**மொச்சை**

மொச்சையின் அறிவியல் பெயர் vicia faba என்பதாகும். செடி வகையைச் சார்ந்த தாவரமாகும். மொச்சையில் பொட்டாசியம், மெக்னீசியம், வைட்டமின் பி6 ஆகிய ஊட்டச்சத்துக்கள் உள்ளன. நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த துணை உணவுப்பொருளாக அமைகிறது. உடல் வறட்சி யைப் போக்கும் தன்மையுடையது என்பதை,

***அனிலபித்த வைய மனைத்தையுமுண் டாக்குந்***
***தொனியெடுக்க வாயுவினைத் தூண்டும் - தனிவேள்***

**குனிக்குஞ் சிலைப்புரு வக்கோதையே நாளும்**
**இனிக்குமொச் சைக்கொட்டையே**
***(ப.கு.சி.878)***

என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

### கடலை

கடலையின் அறிவியல் பெயர் Cicer arictinum என்பதாகும். மலமிளக்கி, சூரம் என்பது இதன் வேறு பெயர்களாகும். கடலையை பெரும்பாலும் எண்ணெயாக பயன்படுத்துகின்றனர். இந்தியர்களின் உணவில் தவிர்க்கமுடயாத துணைப்பொருளாக கடலை எண்ணெய் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கடலையில் கொழுப்புச்சத்து, புரதச்சத்து, வைட்டமின் ஈ, போன்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளன. கடலையை நெய்யில் வறுத்து உண்டதை,

**நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டு**
**பெருந்தோ டாலம் பூசல் மேவர *(புறம்.120)***

என்ற பாடல் மூலம் அறியலாம்.முதிராத பச்சைக் கடலையைச் செடியிலிருந்து எடுத்து உடனே அருந்த இரத்தக்கழிச்சல் நீங்கும். கடலையைக் குளம்பிக்கொட்டையை போல வறுத்து பொடித்து கொடுக்க வயிற்றுப்பொருமல் நீரடைப்பு போன்றவை நீங்கும். இது உடலுக்கு வலுவைக் கொடுக்கும் என்பதை,

**சூரமேனிக்குரத தொக்கவுண்டாகும்**
***(தேரையர் குணபாடம்.298)***

என்ற பாடல் மூலம் அறியலாம்.

### புளி

புளி சிந்தூரம் மற்றும் எகின் என்பது இதன் வேறு பெயர்களாகும். புளியமரத்திலிருந்து பெறப்படும் கனி ஆகும். இதன் அறிவியல் பெயர் Tamarindus indica என்பதாகும். அறுசுவைகளில் ஒன்றான புளிப்புச் சுவையைக் கொண்டதாகும். புளியில் வைட்டமின் ஏ, வைட்டமின் சி, வைட்டமின் கே, வைட்டமின் ஈ, வைட்டமின் பி1, வைட்டமின் பி6, வைட்டமின் பி2 ஆகிய வைட்டமின்களும் நியாசின், போலிக் அமிலம் ஆகிய அமிலங்களும் உள்ளன. புளிப்புச்சுவை நிறைந்த உணவினை மக்கள் உணவாக உட்கொண்டுள்ளனர்.

**எயிற்றியவர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
***(சிறுபாணாற்றுப்படை. 175-177)***

எயிற்றியர் புளிச்சோற்றுடன் இறைச்சியையும் உண்டதை அறிய முடிகிறது. கருவுற்ற பெண்கள் புளியங்காயை விரும்பி உண்டதை குறிப்பிடுவதை,

**பசும்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்**
***(குறுந்.287)***

என்ற பாடல் மூலமும்,

**கருப்பமட வார்க்குக் கனவிருப்பம் உள்ளே**
**பருப்பையுறாப் பைம்புளியங் காய்**
***(அ.குணபாடம்.361)***

என்ற பாடல் மூலம் புளியின் மருத்து வத்தன்மையை அறியலாம்.

### கொள்ளு

கொள்ளு முதிரை என்பது இதன்வேறு பெயராக அறியப்படுகிறது. காணம் என்று தென் தமிழகத்தில் அழைக்கப்படுகிறது. இதன் அறிவியல் பெயர் Macrotyloma Uniflorum என்பதாகும். கொள்ளில் புரதச்சத்தைக் காட்டிலும் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. இதில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து போன்ற தாதுக்கள் உள்ளது. நீரிழிவு நோயினை தடுக்கும் தன்மையுள்ளது. பழுப்பு மற்றும் செம்மண் நிறத்தில் காணப்படும். எலும்பு மற்றும் நரம்பிற்கு வலுவினைத் தரக்கூடியது. கடினமான பணிகளை செய்யும் குதிரைகளுக்கு உணவாக கொடுக்கப்பட்டது. சிறுநீரக கற்கள் ஏற்படாமல் தடுக்கிறது. இருமல், உடல்வலி சோர்வை நீக்கும் தன்மையுடையது. செரிமானக் கோளாறுகள் மற்றும் சளியை நீக்குவதோடு பெண்களுக்கு ஏற்படும் மாத விலக்கை சீர்செய்யும் மருந்தாக பயன்படுகிறது. கொள்ளினை பாலுடன் சேர்த்து உணவாக பயன்படுத்தியதை,

**கொள்ளொடு பயறுபால் விரைஇ வெள்ளிக்**
**கோல் வரைந்தன்ன வால் அவிழ் மிதவை**
***(அகம்.37)***

என்பதை இப்பாடல்மூலம்அறியலாம். கொள்ளு உடலை உறுதிப்படுத்தும் உணவுப்பொருட்களில் முக்கியமான இடம் பெறுகிறது. கொள்ளு குறித்து பழமொழியாக,

**இளைத்தவனுக்கு எள்ளு கொழுத்தவனுக்கு கொள்ளு**

என்பதை அறியலாம். இதன்வழியாக உடலில் தேவையற்ற கொழுப்புகளைக்கரைக்கும் எரிசக்தி நிறைந்த உணவுப்பொருள் என்பதை அறிய முடிகிறது. சூடான கொள்ளுச்சாறானது கண்நோய்கள், வெப்பு நோய் போன்றவற்றை நீக்கும் என்பதை,

**உற்றடர் கண்ணன் புண்ணோ டுறுபிணி**
**யொழியும் வெப்பைப் பெற்றிடுங் காணச்**
**சாற்றாற் பெருஞ்சல தோடம் போமே**

***(அ.குணபாடம்.-596)***

என்ற பாடலால் அறியலாம்.

### அவரை

அவரை சிம்பை, சிக்கடி போன்ற வேறு பெயர்களும் உண்டு. கொடி வகையைச் சார்ந்த தாவரமாகும். இதன் அறிவியல் பெயர் Lablab purpurcus என்பதாகும். அவரையில் வைட்டமின் பி1, வைட்டமின் பி2, வைட்டமின் சி, நியாசின் ஆகிய உயிர்ச்சத்துக்கள் அடங்கியுள்ளன. அவரையில் இருபத்தைந்து வகையுள்ளதாக தேவநேயப்பாவாணர் குறிப்பிடுகிறார். அவரை சங்க கால மக்களின் உணவில் தவிர்க்க முடியாத உணவுப்பொருளாக இருப்பதை,

**கருங்கால் வரகே இருங்கதிர் தினையே**
**சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு**
**இந்நான் கல்லது உணாவும் இல்லை**

***(புறம்.335)***

எனும் பாடல் உறுதிசெய்வதை அறிய முடிகிறது. பெரும்பாணாற்றுப் படையில் முல்லைநில மக்களின் விருந்தோம்பும் பண்பைக் குறிப்பிடுவதிலிருந்து அவரையை சமைத்து உண் பதை,

**அவரை வான் புழுக்கு அட்டி பயில்வுற்று**

***(பெரும்பாண்.195)***

பாடல் மூலம் அறியலாம்.அவரைப் பிஞ்சை உண்பதால் முக்குற்றம் நீங்கும். காய்ச்சல், கண் நோய்கள் போன்றவற்றை நீக்குவதோடு நோயுற்றோருக்கும் பிற மருந்து உண் போர்களுக்கும் இரவு உணவாக அமையும் என்பதை,

**கங்குலுண விற்குங் கறிக்கும் உறைகளுக்கும்**
**பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர்**
**- தங்களுக்குங் கண்முதிரைப் பில்லநோய்க்**
**காரருக்குங் காழுறையா வெண்முதிரைப்**
**பிஞ்சாம் விதி**

***(தேரையர் குணபாடம்.88)***

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

### துவரை

துவரையின் அறிவியல் பெயர் cajanus cajan என்பதாகும். செடி வகையைச் சார்ந்ததாகும். செடி ஆடும் தன்மையைக் கொண்டு ஆடகி எனவும், நிறத்தைக் கொண்டு தங்க நிறத்தை ஒற்றி இருப்பதால் ஆடகம் எனவும் அழைக்கப்படுகிறது. சிலப்பதிகார உரையில் தோரை என்றும் அழைக்கப்படுகிறது. இது பதினெட்டு வகையான கூலவகை பொருட்களில் ஒன்றாகும். பத்தியத்திற்கு சிறந்த மருந்தாகவும், எழக்கூட முடியாதவர்களை எழவைக்கும் தன்மையுடையதாகவும் இருக்கும் என்பதை,

**விழுந்துவரை யாது மெலிந்தாரைத் தேற்றும்**
**கொழுந்துவரை யாயினீ கொள்**

***(அ.குணபாடம்.114)***

என்ற பாடல் மூலம் அறியலாம். மேலும் இது வாய்ப்புண், ஈறுப்புண் போன்றவற்றை நீக்கும். துவரையில் வைட்டமின் சி, வைட்டமின் டி, கால்சியம், இரும்புச்சத்து, மெக்னீசியம் ஆகிய உயிர்ச்சத்துக்கள் உள்ளன.

### முடிவுரை

பழந்தமிழர்கள் நிலத்தின் தன்மைக்கேற்பவும் காலநிலைக்கு ஏற்பவும் உடலுக்கு தகுந்தவாறும் உணவுகளை உட்கொண்டனர் என்பதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் ஐவகை நிலங்களில் முல்லை நிலத்தை முதன்மைப்படுத்தி குறிப்பிடுவதன் மூலம் முல்லை நிலத்தின் மேன்மையை அறிய முடிகிறது. உயிர் வாழ உணவு உடலுக்கு இன்றியமையாதது. உடல் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணியாக உணவு முக்கியத்துவம் பெறுகிறது. உணவைத் தீர்மானிக்கும் காரணியாக நிலமும் நீரும்

முக்கியக்காரணியாக அமைவதை புறநானூற்று பாடல் வழி அறிய முடிகிறது.

முல்லைநில கருப்பொருள்களுள் உணவுப் பொருள்களான வரகு, சாமை, எள், கொள்ளு, கம்பு, துவரை, அவரை, கடலை, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்கள் உணவுப்பொருள்களாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது. முல்லைநில தானியங்கள் அனைத்தும் சிறுதானியங்களாக இடம்பெறுகிறது. முல்லைநில உணவுப் பொருட்கள் மற்ற நான்கு நில வகை உணவுகளைக் காட்டிலும் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளதாகவும் நாட்பட்ட நோய்களான சர்க்கரை கொழுப்பு இரத்த அழுத்தம் போன்ற நோய்களைத் தீர்க்கும் உணவுப்பொருள்களாகவும் உடலை நீண்ட நாள் ஆரோக்கியமாக வைப்பதற்கும் நோய் எதிர்ப்புத் திறனை மேம்படுத்துவதாகவும் அமைவதை சித்த மருத்துவ நூல்கள் மூலம் அறிய முடிகிறது. தற்காலத்திலும் முல்லைநில சிறுதானிய உணவுப்பொருட்களே நோய்க்குட்படுபவர்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்களாக மட்டுமல்லாமல் உடலில் வலிமை மற்றும் அழகு பெறுவதற்கான உணவு மூலங்களாக அமைகிறது என்பதை அறியலாம்.

**அடிக்குறிப்பு**

1. உ.வே.சா உரை. புறநானூறு மூலமும் உரையும். பக்-18.
2. உ.வே.சா உரை.சிலப்பதிகாரம் மூலமும் உரையும்.பக். 386.
3. மேலது.பக்-386.

**துணைநூற்பட்டியல்**

1. உ.வே.சா(ப.ஆ), சிலப்பதிகாரம் மூலமும் அரும்பத உரையும், (அடியார்க்குநல்லாருரையும்) உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1892.
2. உ.வே.சா(ப.ஆ), புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.முதற்பதிப்பு 1894.
3. க.சு.உத்தமராயன், சித்தமருத்துவாங்கச் சுருக்கம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை. சென்னை. முதற்பதிப்பு 1983.
4. முருகேச முதலியார், குணபாடம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை. சென்னை. முதற்பதிப்பு 2013.
5. ப்ரியா பாஸ்கர். தமிழர் சமையல், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை. 2013.

# எஸ்.ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் காணலாகும் புனைவுத் திறன்கள்

***ரா. சுமித்ரா***
**(Ph.D., Reg. No.MKU23PFOL11135)**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), மதுரை

***முனைவர் வளர்மதி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), மதுரை
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது

**Abstract**:
*Novels and short stories are the most popular genres of literature road by people today. In today's situation, the short story has a unique place to entertain us as it suits to our time. A short story is often a literary genre that describes a central plot or event experience. Most of the story are based on our day today life. A small scene of life, a lightening event, a gentle movement, the rotation of a hurricane, the circle of a water bubble or the movement of an atom can be included as a scene in his short stories.*

*Behind a short story lies the artistic power of the creator. Intellectual energy is manifested in their imagination. Only a good imaginer can create meaningful illustrations. Imagination steals our soul. S.RA-makrishnan is shortly called as S.RA. who knows how to steal the hearts of the readers with his fiction skills Ramakrishnan. This research paper is designed to highlights the fictional skills found in his short stories.*
***Keywords****: Artifacts, Paper birds, Feather sprouts, Sword and Flower, Spears, Veeramangai Adventure.*

***ஆய்வுச்சுருக்கம்***
*இன்று மக்களால் அதிகம் விரும்பி படிக்கப்படும் இலக்கிய வகைகள் புதினமும் சிறுகதையும் தாம். இன்றைய சூழ்நிலையில் நம் நேரத்திற்கு ஏற்றாற்போல் நம்மை மகிழ்விப்பதில் சிறுகதைக்கு தனித்த இடமுண்டு. சிறுகதை பெரும்பாலும் ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். பெரும்பாலும் கதை நடப்பியல் போக்கில் எழுதப்படும். வாழ்க்கையின் ஒரு சிறு காட்சி யையோ மின்னல் போன்ற நிகழ்ச்சியையோ மெல்லிய அசைவோ, சுறாவளியின் சுழற்சியோ நீர்க்குமிழியின் வட்டமோ ஏதாவது ஒரு அணுவின் சலனமோ சிறுகதையாக இடமுண்டு.*

*ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ளது படைப்பாளரின் கலை ஆற்றல். அக்கலை ஆற்றல் அவர்களின் கற்பனைத் திறனில் வெளிப்படும். நல்ல கற்பனையாளரால்தான் பொருள் செறிந்த உவமைகளைப் படைக்க முடியும். கற்பனைத் திறம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அவ்வாறு வாசகர்களின் உள்ளத்தை தன் புனைவுத் திறத்தால் கொள்ளை கொள்ளும் உத்தி தெரிந்தவர். எஸ்ரா என்று அழைக்கப்படும் எஸ்.ராமகிருஷ்ணன். அவருடைய சிறுகதைகளில் காணப்படும் புனைவுத் திறன்களை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *புனைவுத்திறன்கள், காகிதப் பறவைகள், இறகு முளைக்கிறது, வாளும் மலரும், ஈட்டிகள், வீரமங்கைச் சாதனை.*

**முன்னுரை**

ஒரு நல்ல சிறுகதை என்பது ஒரு சுவைமிக்க மாம்பழத்தை இறுதிவரை விரும்பிச் சுவைப்பது போன்றதாகும். அவ்வாறு இன்றி மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசி எறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால் அச்சிறுகதையினால் பயன் ஒன்றும் இல்லை என்பது யாவரும் அறிந்ததே.

கற்பனை என்பது மனத்தின் ஆற்றல். ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத திறனே அவனது கற்பனை ஆற்றல் ஆகும். கதை ஆசிரியர்கள் தாம் கண்டு கேட்டது மட்டுமன்றிக் காணாததையும் கற்பனையில் கண்டு தங்கத்துக்குச் செம்பு சேர்ப்பது போல் சேர்த்து மெருகூட்டுகிறார்கள். அவ்வகையில் தன்னுடைய புனைவுத்திறத்தால் புன்சிரிப்போடு வாசகர்களை தன் பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்த ''எஸ்.ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் காணலாகும் புனைவுத் திறன்கள்'' என்ற தலைப்பின் மூலம் அவருடைய கற்பனைத் திறன்களால் சமூகத்தில் நிகழும் நிகழ்வுகளை படம்பிடித்துக் காட்டிய உத்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு நெறிமுறைகள்**

**காகிதப் புனைவுகள்**

''காகிதப் பறவைகள்'' என்ற கதையில் உண்மையான பறவைகளைவிடவும் காகிதத்தில் செய்த பறவைகள் வசீகரமானவையாய் இருந்தது மட்டுமல்ல ''ஸ்டெல்லா''-வின் கைவண்ணத்தால் அவை வீட்டிற்குள் பயமின்றி மிதக்கின்றன. ஏனெனில் அக்காகிதப் பறவைகளின் வானம் அவள் வீட்டுக் கூரைதானே.

''ஸ்டெல்லா'' வண்ணக் காகிதங்களை வெட்டி காகிதப் பறவைகள் செய்வாள். ஒவ்வொரு பறவை செய்து முடித்தவுடன் அவள் அதை வெளியே எடுத்து வந்து அதற்கு வானத்தைக் காட்டுவாள். ஏன் இப்படிச் செய்கிறாய்? என்று சுபாஷ் என்பவர் கேட்டபோது காகிதப் பறவை என்றாலும் அது பறவை தானே எனவே அது வானத்தைத்தான் முதலில் பார்க்க வேண்டும் என்றாள். உனக்கு நிஜப்பறவைகள் ஏன் பிடிப்பதில்லை என்று கேட்டதற்கு அவள் தந்த விளக்கத்தில் தான் கதையாசிரியரின் கற்பனைத் திறன் மேலோங்கி இருக்கிறது. நிஜப்பறவை பயப்படும். பயப்படுகிற பறவை எனக்குப் பிடிக்காது என்றாள். காகிதப்பறவை என்னைப் போல் பேசாதது. திட்டும் போது சிரிச்சிட்டா நமக்கு வலிக்காது. இதைச் சொல்லிக் கொடுத்ததும் இந்தப் பறவை தான் என்று கூறினாள்.

அதுமட்டுமல்ல நட்சத்திரங்கள் எல்லாம் பகலில் பறவையா மாறியிருது. அது எனக்கு மட்டும் ஒரு ரகசியம் சொல்லவே இங்கு பறவையா இருக்கு. எனக்கு ஒரு கஷ்டம்னா என்னை வானத்துக்கு அழைச்சிட்டு போயிடும் அதான் ரகசியம். நானும் பறவைதான் எனக்கும் பறக்கத் தெரியும் ஆனால் யாருக்கும் தெரியாது. அவளும் ஒரு காகிதப் பறவை என்பதை உவமைப்படுத்திக் கூறியுள்ளார்.

''மரியா'' என்ற எதிர்கதைமாந்தர் பண்பின் மூலம் ''ஸ்டெல்லா'' எனும் காகிதப் பறவையையும் பறக்கச் செய்துள்ளார். ''திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்''[1] என்று குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா. பார்த்தசாரதி கூறியது போன்று ஸ்டெல்லா-வின் அழகை காகிதப் பறவைகளின் வண்ணங்களைக் கொண்டு தன் வாழ்க்கையை வண்ணமயமாகக் கற்பனை செய்து கொண்டாள். பெண்களின் மனநிலையை ஒரு பறவைகளோடும் ஆனால் இந்த சமூகத்தில் ஒரு காகிதப் பறவைபோல் வானத்தைப் பார்த்து நிறைவேறாத ஆசைகளை அசைபோடுவதையும் மிக அழகாக சித்தரித்துக் காட்டியுள்ளார்.

**கவிதைப் புனைவுகள்**

''வாளும் மலரும்'' என்ற சிறுகதையில் யுவான் ஷீ மற்றும் லின்டேயு என்ற இரு கதாபாத்திரங்கள் சிறந்த கவிஞர்களாக இருந்தனர். லின்டேயு - என்ற பெண் கூறிய கவிதையில் ஆசிரியரின் புனைவுத்திறன் கவிபாடியது. அவளுடைய கவிதைகள் பல மாயங்கள் செய்யக்கூடியதாக

இருந்ததாகவும் அது உடைவாளையே ஒரு மலராக மாற்றி விடும் அந்த அளவு சக்தி கொண்டதாகவும் இருந்தது. அவள் ஒரு கவிதை சொன்னால் மறுநிமிடம் அரசனின் உடைவாள் ஒரு மலராக மாறியது. மலரை வைத்து எப்படி ஒரு வீரனால் சண்டையிட முடியும் என்று கேட்டதற்கு வாளால் வெல்ல முடியாததை மலரால் வெல்ல முடியும் என்று அகிம்சை வழியை அவள் கவிதை மூலம் நிலவச் செய்துள்ளார்.

**''அகிம்சை என்பது கோழையின்**
**கேடயமாக ஒரு போதும்**
**பயன்படுத்தக்கூடாது. இது**
**துணிச்சலானவர்களின் ஆயுதம்''[2]**

**- மகாத்மா காந்தி**

என்ற காந்தியின் கூற்றிற்கிணங்க அவள் கவிதையால் தேசமெங்கும் அமைதி நிலவியதை கூர்மையாக சித்தரித்துக் காட்டியுள்ளார்.

இதனால் அவள்மேல் பொறாமை கொண்ட சிலரது சூழ்ச்சியால் யுவான் மனதில் அவளைப் பற்றி சந்தேகத் துளி விழச்செய்து அதனால் அவளை கொல்லும் அளவுக்கு அவன் முயற்சித்தான். அப்போது லின்டேயு சொன்ன கவிதையில் மறுநிமிடமே அனைத்து மலர்களும் ஆயுதமாக மாறி போர்க்களமாக தேசம் காட்சியளித்தது. இதில் யுவான் இறந்தான்.

**''உன்னை சிறை பிடிக்க நினைத்தால்!**
**நீ சிறகவிழ்த்து பறந்திடு!''[3] - அஞ்யுகா ஸ்ரீ**

என்ற கவிதை வரிகளுக்கு ஏற்ப ஒரு பெண் தன்னை தற்காத்து கொண்டதை ஒரு கற்பனை கலந்து சமூகப் பிரதிபலிப்பில் பெண் செய்யும் செயலை அழகுறச் சொல்லியிருக்கிறார்.

### பயணப் புனைவுகள்

''மழைப்பயணி'' என்ற சிறுகதையில் ''ராதிகா'' என்ற கதாபாத்திரம் கொண்டு அவளின் வழிநெடுப் பயணங்களில் கதையாசிரியர் பயன்படுத்தியுள்ள புனைவுத்திறன் நம்மையும் நம் இளமைக் காலத்திற்குள் கொண்டு செல்வது போல் இருந்தது.

ஒரு பெண்ணின் நீண்ட தூர தனிப்பயணம் சமூகத்தின் பார்வையில் தவறான கண்ணோட்டமாகவே இருக்கும் அவலநிலையைக் கூறுவது இன்றையச் சூழலை பிரதிபலித்துக் காட்டியுள்ளது. ராதிகாவின் அம்மா சாந்தா, சாதாரண ஒரு பெண் போலவே சமூகத்திற்கு மகுடி போல தன் பிள்ளையை வளர்க்க நினைத்தவள். ஆனால் ராதிகாவின் அப்பாவோ அவளை ஒரு வீரமங்கையாக வளர்க்கவும், அவளுடைய மனப்பூர்வமான ஆசைகளை நிறைவேற்றும் ஒரு ஆசானாக செயல்பட்டு வந்தவர். தன்மகள் ''பைக்'' கேட்டதற்காக சற்றும் தயங்காமல் வாங்கிக் கொடுத்து உலா வருவதை உளமார ரசித்தவர்.

கிராமத்து அடுக்களைப் பெண்ணாகவே சாந்தா போன்ற பெண்மணிகள் இருப்பதையும் இதற்கு நேர் மாறாக ராதிகா போன்ற பெண்மணிகள் போன்று இளம் வயதிலேயே கராத்தே, ஸ்கேட்டிங், நீச்சல் என எல்லாம் கற்றுக் கொண்டு வீரப்பெண்மணிகள் இருப்பதையும் ''ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக'' பெண்களை வேற்றுமைப்படுத்தி உள்ளார். தன் தன்னம்பிக்கை பயணத்திற்கு தந்தை கொடுத்த ஊக்குவிப்பு பல கனவுகளை அவளுடன் சுமந்து அக்கனவினை மெய்ப்பிக்க உதவிய பாங்கையும், அவள் பயணங்களில் சாரல்துளிகளாய் புனைவுகளைக் கொண்டு இடையிடையே ஆசிரியர் அலங்கரித்து இருப்பது பெண்மைக்கு மகுடம் சேர்த்து மேலும் அழகூட்டியது. இறுதியில் தன் மகள் சொல்லும் நன்றி அப்பா! என்று சொன்ன ஒரு வார்த்தையில் ஆண்கள் சமூகத்தையே கர்வப்படச் செய்திருக்கிறது.

### விசித்திரப் புனைவுகள்

''இரண்டு ஜப்பானியர்கள்'' என்ற சிறுகதையில் ''தாஷிமாவின்'' கலை சொல்லும் விசித்திரமான புனைவுகளின் அழகுத் திறனை பறவைகளின் சிறு கண்ணில் எழுத்துகளை சித்திரமாக்கியிருந்தது. பூக்குவளையில் மூன்றவாது மடல் இல்லாமல் இருந்ததற்கான காரணமும் அதன் விசித்திரமும் வியப்பல்ல. அக்கலையில் ஆயிரம் பொருள் இருந்தது. அக்கதையில் ''வித்திரமான கலைப் பொருட்களைவிடவும் விந்தையானவர்கள் மனிதர்களே'' என்ற கருத்தே கதையாசிரியரின் விசித்திரமான போக்கை கண்கலங்க வைக்கிறது.

### உணர்ச்சிப் புனைவுகள்

''காற்றில் பறக்கும் மலர்'' என்ற கதையில் ''கரண்'' என்ற கதாபாத்திரத்தின் மூலம் பெற்றோர்களின் உணர்வுகளை உண் மையாகவே காட்சிப்படுத்தியுள்ளார். ஒரு மகன் வீட்டை விட்டு வெளியேறுவதை மரத்தில் இருந்து பிரிந்த பறவைக்கும், கயிறு அறந்து போன பட்டம் காற்றில் தன்னிஷ்டம் போலப் பறப்பதற்கும் உவமைப்படுத்தியுள்ளார். ஒரு பெற்றோரை புரிந்து கொள்ளாத குழந்தைகள் வாழ்க்கையில் யாரைப் புரிந்து கொள்வார்கள் என்ற எண்ணம் தோன்றினாலும் பதினேழு வயதுப் பையனைக் கையாள்வது கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீரைக் கையாள்வதற்கு ஒப்புமைப்படுத்தி கூறியுள்ளார். குமரப்பருவத்தின் கோபம் விநோதச் சுடர் ஒன்று எரிவது போன்றது. குழந்தைகளை கையாளும் போது நீர்க்குமிழி என விடவும் முடிவதில்லை. எரிகற்கள் எனத் தொடவும் முடிவதில்லை என்று வேற்றுமைப்படுத்தியுள்ளார். குழந்தை வளர்ப்பில் பெற்றோர்கள் அடையும் குழப்பம் என்பது சேற்று நிலம் போல அதில் காலை வைத்து நடக்கத் துவங்கிவிட்டால் எளிதாக வெளியேற முடியாது. ஒரு அடி வைப்பது கூட எளிதானதில்லை என்பது உணர்வுப்பூர்வமாக உணர வைக்கிறது.

### முடிவுரை

ஒரு படைப்பாளியின் கற்பனை வாசகர்களின் மனதில் புதுமையான பொருள்கள், மக்கள், கருத்துகள் போன்றவற்றை உருவாக்கி வியப்படையச் செய்வது ஒரு தனித்திறன். அவ்வகையில் காகிதத்திலும் கற்பனையை காற்றாய் பறக்கச் செய்து, கவிதையிலும் கற்பனையை கவிபாடச் செய்து ஆக்கல், அழித்தல் சக்தியை வெளிப்படுத்தியும், பயணத்தோடு கற்பனையையும் ஓடச் செய்து பெண்ணின் பயணம் பெருமைப்படுத்தும் தருணமாய் அமைந்ததையும், விசித்திரமான கலைப்பொருள்கள் விடவும் விந்தையானவர் மனிதர்களே என விசித்திரப் புனைவுளை விந்தையாக காட்டிய விதத்திலும் எஸ்ராவின் தனித்திறமையைக் கண்டு வியப்படையச் செய்துள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. நா. பார்த்தசாரதி - குறிஞ்சிமலர் நாவல் (பாகம் - 1) ப.எண்.38
2. மகாத்மா காந்தி - சத்திய சோதனை
3. அஞ்யுகா ஶ்ரீ - அன்பே நீ புயலா? தென்றலா? கவிதை நூல்

### துணைநூற்பட்டியல்


1. எஸ்.ராமகிருஷ்ணன் (2021) ஐந்து வருட மௌனம் (சிறுகதை தொகுப்பு) தேசாந்திரி பதிப்பகம் டி-1, கங்கை அப்பார்ட்மெண்ட், 110, 80 அடி ரோடு, சத்யா கார்டன், சாலிக்கிராமம், சென்னை - 600 093.
2. நா. பார்த்த சாரதி (2019) குறிஞ்சி மலர், ஶ்ரீ செண்பகா பதிப்பகம், புதிய எண். 32டீ, கிருஷ்ணா தெரு, பாண்டி பஜார், சென்னை - 600 017.
3. மகாத்மா காந்தியின் சுயசரிதை (2001) சத்திய சோதனை, காந்திய இலக்கியச் சங்கம், காந்தி மியூசியம், மதுரை - 625 020.
4. அஞ்யுகா ஶ்ரீ அன்பே நீ புயலா? தென்றலா? கவிதை நூல் (இணையக் கவிதை)

# ''விளக்கின் கீழே நிழல்'' ஹைக்கூக் கவிதைகளில் பன்முகச் சிந்தனைகள்

***முனைவர் மு. செந்தில்குமார்***
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பாரதியின் புதிய கவிதை நடைக்கு மரபாளர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புத் தோன்றியதைப் போல பாரதி தொடங்கிவைத்த துளிப்பாக் கவிதைகளுக்கும் தொடக்கத்தில் தமிழகத்தில் எதிர்ப்பு இருந்தது. இன்றைக்கு அந்நிலை மாறி உலகம் முழுவதும் துளிப்பாக் கவிதைகளும், கவிஞர்களும் பெருகியுள்ளனர்.

''சகா'' என்றழைக்கப்படும் ச.கஜேந்திரன் - எளிய குடும்பச் சூழலில் ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தின் மேட்டூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இயற்பியலில் முதுகலைப் பட்டத்தை முடிப்பதற்கு முன் குடும்பச் சூழலால் 1981 - இல் அஞ்சலக உதவியாளராய் பணியேற்றார். கடுமையான உழைப்பால் மத்திய அரசுப் பணித் தேர்வில் வென்று - 1983 - இல் தென் மண்டல மத்திய கலால் மற்றும் சுங்கத்துறையில் பணியேற்றார். த.மு.எ.க சங்கத்தில் இலக்கியப்பணி, தொழிற் சங்கப்பணி இரண்டிலும் கவனம் செலுத்தினார். தன்னம்பிக்கை, விடாமுயற்சிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறார். த.மு.எ.க சங்கத்தில் பல பொறுப்புக்களைச் சுமந்து தற்போது அலுவலகப் பணியிலிருந்து ஓய்வு பெற்று மாவட்டக் குழு உறுப்பினராய் தொடர்ச்சியான கலை - இலக்கியப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். தனது முதல் படைப்பாக ''விளக்கின் கீழே நிழல்'' துளிப்பாத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு கவிதைக்கும் ஆங்கில மொழியாக்கத் தினைத் தானே எழுதியுள்ளார். ஜப்பானில் நடைபெற்ற துளிப்பாக் கவிதைப் போட்டியில் ''பாசோ'' நினைவுப் பரிசினைப் பெற்ற கவிதை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

''விளக்கின் கீழே நிழல்'' தொகுப்பில் காணும் பன்முகச் சிந்தனைகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## விவசாயம்

***''உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது***
***எழுவாரை எல்லாம் பொறுத்து'' (1032)***

பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் உழவர்களே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி என வள்ளுவர் போற்றுகிறார். இந்திய இலக்கியங்கள் விவசாயத்தை உயர்த்திப் பேசுகின்றன. பருவகால வேறுபாடுகளும், அரசின் வேளாண்மைக் கொள்கைகளும் உழவுத்தொழிலையும், உழவர்களையும் உயர்த்திப் பிடிப்பதாகத் தெரியவில்லை.

***''அறுவடை முடிந்து***
***இன்னும் முடியவில்லை***
***இடுபொருள் கடன்'' (பக்கம்-60)***

அதிகமான விளைநிலங்களை வைத்திருந்து பல விவசாயப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் விளைச்சலில் மேடு பள்ளம் வந்தால் தாங்கிக் கொள்கின்றனர். குறு விவசாயிகள் வேளாண்மைக்காக கூட்டுறவுக் கடன் வாங்கி பயிர் அறுவடை செய்த பிறகு கணக்குப் பார்த்தால் விவசாயத்திற்கு வாங்கிய இடுபொருள் கடனையே புர்த்தி செய்ய முடியாததை எண்ணி பரிதவிக்கின்றனர். விளைச்சல் இருந்தால் விலை இல்லாததும், விலையிருந்தால் விளைச்சல் இல்லாததும் பல ஆண்டுகளாய் நீடிப்பதை கவனமாய் கவிஞர் சுட்டுகிறார்.

''**கோவணத்தோடு விவசாயி**
**பரிதாபப்படுகிறது**
**வயல்காட்டுப் பொம்மை**'' ***(ப-62)***

விளைநிலங்களின் விளைச்சலைக் கண்டு கண்ணேறு படாமல் இருப்பதற்கும் பறவைகளிடமிருந்து விளைச்சலைக் காக்கவும் துணிக்குள் வைக்கோல் திணித்து வயல்காட்டுப் பொம்மையை வரப்புகளில் நிறுத்துவது வழக்கம். வயற்காட்டுப் பொம்மை முழுமையாய் துணியால் மூடப்பட்டுள்ளது. விவசாயி கோவணத்தோடு வேலை செய்வதைக் கண்டு பொம்மை வருத்தப்படுவதாகக் கூறுகிறார். ''உழுதவன் கணக்குப் பார்த்தால் தார்க்கோல் மிஞ்சாது'' என்னும் சொலவடையை நிரூபணம் செய்வதுபோல கவிதை வெளிப்பட்டுள்ளது.

''**மேய்ந்து திரும்புகினறன**
**கால்நடைகள்**
**விவசாயிக்குப் பசி**'' ***(ப-38)***

கவிதையில் குறிக்கப்படும் ''மேய்ந்து திரும்புகின்றன கால்நடைகள்'' என்னும் வார்த்தை வேளாண்மை தவிர இதர வேலைகள் செய்யும் வணிகர்கள் உள்ளிட்டவர்களை குறியீடாய் உணர்த்துகிறது. குறிப்பிட்ட பொருளுக்கு நிலையான விலையும், நிலையான கூலியும் கிடைக்கிறது. வணிகர்களும் பிறரும் ஓரளவு வயிறார உணவுண்டு நிம்மதியடைகின்றனர். விலை - விளைச்சல் வேறுபாட்டினால் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல், முழுமையாய் உண்ண முடியாமல் விவசாயிகள் வேதனையோடிருப்பதைக் காட்சிப்படுத்துகிறார்.

**அரசியல்**

அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம் அல்லது கொள்கை, வாழும் முறை (way of life) அல்லது வாழ்க்கை முறை (way of living) ஆகும். அரசியல் சமுதாய வாழ்க்கைக்கு அமைதியைத் தரும். பலர் கூடி வாழ்வதற்கும் பொருளியல் ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுக்கும்.

சிறந்த அரசியல் நிலவும் நாட்டில் ஒழுங்குகள் நிலவும், வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான அனைத்தும் எளிதில் கிடைக்கும். அனைத்துத் துறைகளும் மேம்படும்.

உலகியலில் அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கினறன. இந்தியாவும் விதிவிலக்கல்ல, இந்திய அரசியல் நிகழ்வுகளைத் துளிப்பாக்கள் நுண்மையாய் பிரதிபலிக்கின்றன.

''**ஐந்தாண்டுக்கொரு**
**சந்தை கூடுகிறது**
**வாக்குக் கொள்முதல்**'' ***(ப-40)***

உலகின் மிகப்பெரும் சனநாயக நாடான இந்தியாவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடப்பதை சந்தையென விமர்சிக்கிறார். சந்தையில் தான் பேரங்கள் (பொருளுக்கான விலை மதிப்பைக் கூட்டுவதும் - குறைப்பதும்) நிகழும். எங்கு குறைந்த விலைக்கு பொருள் கிடைக்கிறதோ அங்கு கூடுதல் கொள்முதல் நிகழும். கவிஞர் கொள்முதலாக வாக்கினை முன்னிலைப்படுத்துகிறார். கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை எளிதான வார்த்தைகளில் அனைவருக்கும் புரியும் படியாகப் பேசி மக்களை ஏமாற்றி அரசியல்வாதிகள் ஆட்சியைப் பிடித்து விடும் அவலத்தைப் பதிவு செய்கிறார். இன்றைய அரசியல் சூழலில் வாக்குறுதிகள் மட்டுமே போதுமானதாக இல்லை. அரசியல்வாதிகள் ஒவ்வொரு வாக்கினையும் வாக்காளரையும் விலைபேசிக் கொள்முதல் செய்யும் அரசியல் சந்தை நுண்மையாய் விளக்கப்படுகிறது.

''**வீசிய வலையில்**
**மீன்களில்லை**
**வாக்காளர்கள்**''

வலை வீசுவது மீன்களைப் பிடிக்கத்தான். வீசப்பட்ட வலையில் மீன்கள் இல்லை. துளிப்பாக்களில் மூன்றாவது வரி வீரியமுள்ளதாய் அமைய வேண்டும். பலரது கவிதைகள் அவ்வாறு அமைவதில்லை, இக்கவிதை மூன்றாவது வரியில் வீரியத்தை விதைக்கிறது. வீசிய வலைக்குள் சிக்கியது வாக்காளர்கள் எனக் குறிப்பிடுகிறார். போலியான வாக்குறுதிகள், போலியான நடிப்பால் வாக்காளர்களை எளிதில் வலைக்குள் அரசியல் விதிகள் வீழ்த்திவிடுவதை மீண்டும் நிலைநிறுத்துகிறார்.

**தன்னம்பிக்கை**

விஞ்ஞான வளர்ச்சி வியத்தகு சாதனைகளுக்கு வித்திட்டாலும் மனிதர்களின் தன்னம்பிக்கைக் குறைவினால் ஏற்படும் தற்கொலைச் சாவுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. மனிதர்களைத் தவிர எந்த உயிரினங்களும் தற்கொலை செய்வதில்லை.

''**பட்டாசுப் புகை கடந்து**
**பறக்கிறது குருவி**
**சிறகுகளுக்குக் கீழே புமி**'' (ப-15)

சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை இரசாயன உரம் மற்றும் கதிர்வீச்சுக்களால் குறைந்தாலும் புவியில் இருக்கும்வரை பிரச்சனைகளை எதிர் கொண்டு வாழ முனைகிறது. பட்டாசு மற்றும் ஆலைகளின் புகை குருவிகள் பறக்கும் திசையில் குறுக்கிட்டாலும் தயங்காமல் எதிர்கொண்டு தாண்டிச் செல்கிறது. நீண்ட தொலைவு பறந்தாலும் எவ்விடத்தில் இறங்கினாலும் தன் சி றுகுகளுக்குக் கீழுள்ள புமி தன்னைக் கைவிடாது என்னும் நம்பிக்கை குருவிகளுக்கு இருக்கிறது. மனிதர்களுக்குத்தான் இல்லையென்பதை நினைவுட்டுகிறார்.

''**நிழலை உதைத்து**
**மேலேயெழுகிறது நாரை**
**காலுக்குக் கீழே கடல்**'' (ப-22)

பலர் குளிர்ந்த நேரத்திலேயே தங்களது பணிகளை முடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். வெயில் சிறிது தென்படினும் வேலையைத் தள்ளிப் போடுவர். நாரைப் பறவை எங்கு நின்றாலும் அதன் நிழல் விழும். வெயில், மழை எனப் பார்க்காமல் உணவுத் தேவைக்காக பல மணி நேரம் காத்திருக்கும். அடுத்தடுத்த இடங்களுக்கு பறந்து கொண்டேயிருக்கும். இக்காட்சி மனிதர்களுக்குப் பாடமாகிறது. எப்பேர்பட்ட சூழல் நேரிடினும் மனிதர்கள் அதனை எதிர்கொண்டு முன்னேறவேண்டும். விண்ணைத்தவிர கடலும், புமியும் நமக்குள்தான் என்பதனை மறந்து விடக்கூடாது என நம்பிக்கையுட்டுகிறார்.

மேற்கண்ட கவிதை ஜப்பான் நாட்டில் புகழ்பெற்ற துளிப்பாக் கவிஞரான பாசோவின் பெயரில் நடத்தப்பட்ட துளிப்பாக் கவிதைப் போட்டியில் பரிசு பெற்று அதற்கான சான்றிதழும் கவிஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**இயற்கை**

தத்துவக் கவிஞராக இருந்தாலும், புரட்சிக் கவிஞராக இருந்தாலும் இயற்கையிடமும், காதலியிடமும் மனதைப் பறிகொடுக்காமல் இருந்ததில்லை.

''**அடர்வனத்தில்**
**வெளிச்சப்புள்ளிகள்**
**சிதறிய சூரியன்கள்**'' (ப-14)

அடர்ந்த வனத்தில் சூரியனுடைய முழுக் கீற்றினைப் பார்க்க முடியாது. கிளைகளுக்கிடையிலான சிறு இடைவெளியில் சூரியனின் கீற்று புள்ளிகளாகத் தெரிகிறது. இதனைச் 'சுசிதறிய சூரியன்கள்சுசு என புதிய மொழியில் பன்மையில் குறிப்பிடுகிறார் கவிஞர்.

''**இயற்கை**
**எப்போதும் அழகுதான்**
**அவளில்லாதபோது**'' (ப-30)

சாதாரண மனிதர்கள் இயற்கையைக் கண்டு இரசிக்காமல் கடந்து செல்கின்றனர். கவிஞர்கள் தனக்கான மனதை இயற்கையிடம் பறிகொடுத்து பேசி மகிழ்கின்றனர் தான் காணும் இயற்கைக் காட்சிகள் அனைத்தும் அழகு எனச் சொன்ன கவிஞர் தன் காதலி வந்துவிட்டால் அவள்தான் பேரழகு, இயற்கைக்கான இடம் இரண்டாம் இடம்தான் எனக் காதலியையும், இயற்கையையும் விட்டுக்கொடுக்காமல் பேசுகிறார்.

கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பில் அழகியல், அரசியல், பெண்ணியம், வேளாண்மை, பகுத்தறிவு எனப் பன்முகத்தன்மை கொண்ட கவிதைகள் விரவிக்கிடக்கின்றன. ஒவ்வொரு கவிதைக்குமான ஆங்கில மொழியாக்கம் நளினமாகவும், எளிமையாகவும் உள்ளது.

**மூலநூல்**

1. விளக்கின் கீழே நிழல் - சகா, அகநி வெளியீடு - டிசம்பர் - 21, வந்தவாசி - 604 408.

# சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள் – ஓர் அறிவு உயிர்

*முனைவர் கோ. தேவிபூமா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

உலகத்து உயிர்களை உயிர் நூலார் நிலையுயிர், இயங்குயிர் என இரு பெரும்பிரிவாகப் பிரிப்பர். இப்பாகுபாட்டில் அடங்காத சில நுண் உயிர்களும் உள்ளன. அந்நுண்ணிய உயிர்கள் இவ்விருவகை உயிர்களின் சில இயல்புகளைத் தம்மிடத்தே கொண்டுள்ளன. உயிரினங்கள், அவை கொண்டுள்ள உற்றுணர்வு, வளர்ச்சி, இனப்பெருக்கம் முதலிய பண்புகளின் அடிப்படையில் உணர்த்தப் பெறுகின்றன. இவற்றின் தலையாய பண்பு இவை மண்ணில் நிலைத்து நிற்பதாகும். "நிலையியல் உயிரியல் (Botany) என்ற துறையை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் Leonard Fuchs என்னும் ஜெர்மானியர் ஆவார். பண்டைத் தமிழர்கள் தாவரங்களின் புறவமைப்பு, அறிவியலார் நிலையியல் உள்ளமைப்பு கொண்டும் இனம் பிரித்துக்காட்டியுள்ளனர். உயிர்களை வெளியமைப்பியல், உள்ளமைப்பியல் செயலியல் (Physiology), மரபியல் (Genetics), வகைப் பாட்டியல் (Taxonomy) எனப் பகுத்துக் கூறுவர். "நிலையியலுயிரியலின் தந்தை போற்றப்படும் Theophratus நிலையியல் உயிர்களை Herbs, Shrubs, Trees எனப் பகுத்துள்ளார். இப்பாகுபாடு அவற்றின் தண்டின் அடிப்படையில் அமைந்தது. இது போன்றே தமிழ்க்காப்பியமாம் "நீலகேசி" - மரம் (Tree), புல், செடி, கொடி (Herbs), புதர் (Shrub) என்று ஐவகையாகப் பிரிக்கின்றது. மரம், செடி, கொடி, புல், பூண்டு போன்ற தாவரங்களோடு மனிதனுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்பு உள்ளது. உணவு, உடை, உறைவிடம் என்ற அடிப்படை வசதிகள் அனைத்தையும் நிலையியல் உயிர்களிடமிருந்தே மனிதன் பெறுகின்றான். பழந்தமிழரிடம் நிலையியலுயிரியல் பற்றிய அறிவு நிலவியதைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதன் வழி அறிய முடிகின்றது. தற்கால அறிவியலார் நிலையியலுயிர்களை இனம் காண வகைப்பாடு (Taxonomy) மூலம் பிரிக்கின்றனர். உயிர்களைச் சங்க இலக்கியப் பதிவுகள் வழி இக்கட்டுரை விளக்க உரைக்கின்றது.

**கருதுகோள்**

- **"தொல்காப்பியம் ஓர் அறிவு உயிர் முதல் உயிர் பன்மியத்தைத் தெளிவாக கூறியுள்ளது.**
- **"சங்க இலக்கியத்தில் ஓர் அறிவு உயிர்கள் காணப்படுகின்றன.**

ஆகியவற்றை கருதுகோளாக கொண்டு கட்டுரை அமைகின்றது. உயிர்களின் செயல்பாடு பன்னெடுங்காலமாக தமிழ் பண்பாட்டில் பதிவாகியுள்ளது.

**தொல்காப்பியம் - நிலையியல் உயிர்கள்**

கண்ணுக்குத் தெரியாத உயிரினங்கள் முதல் மிகப்பெரிய உயிரினங்கள் வரை அனைத்தும் இயற்கையின் சொத்துக்களாகும். "உயினத்தின் தோற்றம், வளர்ச்சி, பரிணாமம் ஆகியன பூமியில் இயற்கை முறைப்படி கோடிக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறுகின்றன. இங்குள்ள சூழலுக்குத் தக்கவாறு உயிரினங்கள் தோன்றின. ஒவ்வொரு தாவரமும், ஒவ்வொரு விலங்கினமும் இங்குள்ள சூழலின் ஒத்திசைவுக்குப் பங்களிக்கும் வகையில் சீரான வாழ்க்கையையும் நியதிகளையும் வகுத்துக் கொண்டிருக்கின்றன. உயிரினத்திற்கும் சூழலுக்கும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தன்மையும், ஒன்றுக்கொன்று என்பதான ஈடுபாடும் உண்டு." (ச.மி.ஜான் கென்னடி) சூழலியல் கூட்டமைப்பில் உயிர்கள், உணவு மற்றும் பிற தேவைகளுக்காக ஒன்று மற்றொன்றைச்

சார்ந்து வாழ்கின்றன. உயிரிகளின் சார்ந்து வாழ்தல் தன்மையால் உயிரியப் ஆற்றலானது ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றம் செய்யப்படுகின்றது. பன்முகத்தைத் தெளிவுறுத்தும் தொல்காப்பியர், உயிர்களின் புலனுணர்வு அடிப்படையில் பாகுபடுத்திக்காட்டுகிறார். இதனை

**"ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே**
**யிரண்டறிவதுவேயதனொடுநாவே**
**மூன்றறிவதுவேயவற்றொடுமூக்கே**
**நான்கறிவதுவேயவற்றொடுசெவியே**
**யாறறிவதுவேயவற்றொடுமனமென**
**நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"**

***(தொல்.பொருள்.மரபியல், 1526)***

என்ற நூற்பா தாவரங்கள், விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள், ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் பற்றிய தெளிவான அறிவு நிலையோடு தொல்காப்பியம் விளக்கியுள்ளது.

**உள்ளமைப்பியல்**

நிலையியலுயிர்களை உள்ளமைப்பு அடிப்படையில் பிரித்தலை

**"புறக்காழனவேபுல் என மொழிப**
**அகக்காழனவேமரம் என மொழிப்"**

***(தொல்.பொருள். 1585)***

என்ற நூற்பா அடிகள் சுட்டுகின்றன. நிலையியலுயிர் தொகுதிகளில் புறத்தே உறுதியானவற்றைப் புல் எனவும், அகத்தே உறுதியானவற்றை மரம் எனவும் விளக்குகின்றது.

**ஓர் அறிவு உயிர்**

உற்றறியும் ஓரறிவை மட்டுமே கொண்டு பரிணாமத்தின் தொடக்கமாக நிலையியலுயிர்கள் இருப்பதை,

**"புல்லும் மரனும் ஓரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே"**

***(தொல்.பொருள். 1527)***

என்ற நூற்பா அடிகள் விளக்குகின்றன. "காழ்" என்பது மரத்தின் திண்மைக்குரிய அடிப்படைக்கூறு. இது "வைரம்" அல்லது "வயிர்ப்பு" என்றும் பொருள்படும். புல்லென்ற நிலையியலுயிர் புறத்தேவயிர்ப்பைப் பெற்றுள்ளது. தென்னை, பனை, கமுகு, மூங்கில் போன்றவை புறத் தேவயிர்ப்பைப்(உறுதி)பெற்றுள்ளனஆகையால், இவை புல்லினத்தைச் சார்ந்ததாகும். புல், மரம் இவற்றின் இலைகள் ஒளிச்சேர்க்கையைத் தொழிலாகச் செய்தாலும் அவற்றின் நரம்பமைப்பியலும், இலைத்துளை அமைப்பிலும் வேறுபாடுகள் உள்ளன. ஆகையால் தான் புல், மரம் இரண்டிற்கும் தாவர உறுப்புக்களை வெவ்வேறாகக் கூறுகிறார். ஒரு வித்திலை நிலையியல் உயிர்களின் இலைகள் தண்டுடன் உறையொன்றினால் இணைக்கப்பட்டிருக்கும். இதனை Sheath என்பர். மேலும், இவற்றில் சூரியஒளி இலையின் எல்லாப்பக்கங்களிலும் படும்படித் தண்டுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**புல் இனத்திற்கான உறுப்புக்களை,**
**தோடே மடலே ஓலை யென்றா**
**ஏடேஇதழேபாளையென்றா**
**ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்**
**புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்**

***(தொல்.பொருள். நூ. 1586)***

என்ற நூற்பா விளக்குகின்றது. புல்லினத்தின் இலையுறுப்பு - தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பூவுறுப்பு - பாளையென்றும், பழம் கொத்தாகத் தோன்றுதலின் "குலை" என்றும், நீண்ட இலையின் மையநரம்பு "ஈர்க்கு" எனவும் வழங்கப்பட்டுள்ளன. அறிவியலார் புல்வகைத்தாவரங்கள் குறித்து, "இவற்றின் இலைகள் உறை போன்ற அமைப்புக் குள்ளிருந்து வெளிவருகின்றன. இலையடிச் செதில்களைக் கொண்டவை அல்ல. இவற்றின் இலைகளில் இணைப்போக்கு நரம்பமைவு உள்ளது *(முனைவர் பொ. பொன்முருகன்)* எனக் குறிப்பிடுகின்றனர். இதுவே புல்வகைத் தாவரத்திற்கும், மரவகைத் தாவரத்திற்கும் மலர், இலை போன்ற உறுப்புக்கள் பொதுவானதாக இருப்பினும் தொல்காப்பியத்தில் தனித்தனிப் பெயரில் சுட்டப்பட்டமைக்குக் காரணமாகும். புல் ஒற்றை விதையிலைக் குடும்பத்தைச் சார்ந்தது. புல்லினத்தின் பூக்கள் இணைந்து இருக்கும். பூவையும், தண்டினையும் சேர்த்துக் கதிர் என்பர். ஒரு பருவம் அல்லது பல பருவம் வாழ்வன என புல்லினம் இரு வகைப்படும். தண்டின் கணுக்களின்

மேலுள்ள பகுதி பருவந்தோறும் அழிய, தண்டிலிருந்து புதிதாகஇலைகள் முளைத்து வளரும்.

***சங்க இலக்கியத்தில் ஓர் அறிவு உயிர்***

சங்க இலக்கியத்தில் அறுகம்புல் வளருதலை,

***"கண்ணிமருப்பின் அண்ணல்நல்ஏறு***
***செங்கோல் பதவின் வார்குரல் கறிக்கும்"***

***(குறுந்.363)***

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. அறுகம்புல்லை மான் தன் பிணையொடு உண்பதாக,

***"மணிவார்ந்தன்னமாக் கொடி அறுகை***
***பிணிகாண்மென் கொம்புபிணையொடுமாந்த"***

***(குறுந்.256)***

என்ற அடிகளில் புல்லினது மென்மைத் தன்மை விளக்கப்படுகின்றது. உணவுப் பயிர்வகைகளான நெல், தினை, வரகு முதலியனவும் புல்வகைகளே ஆகும். சூல் கொண்டு வாடிய நெல்லின் நிலையினை,

***"பீளொடு திரங்கிய நெல்லிற்கு "***

***(நற்.22)***

என்ற பாடலடி தெளிவிக்கின்றது. இப்"பீள்" என்பது கருக்கொண்ட நிலையைக் குறிக்கின்றது. தினையின் விளைந்த கதிர்நிலை "குரல்" என்ற சொல்லால் வழங்கப்படுகின்றது. "குலவுக்குரல்" (நற். 386), கொடுங்குரல் (நற். 57), பெருங்குரல் (நற்.194) என்றவாறு தினைக்கதிர் இயல்புகளைச் சுட்டும் வகையில் வருணிக்கப்பட்டுள்ளன. நெல்லின் கதிர் நிலையானது - கதிர் என்றே கூறப்படுதலை

**செவ்வரிமயிர்நிரைத் தன்னவார் கோல்வாங்கு**
**கதிர்ச்செந்நெல்**

***(நற்.73)***

என்ற அடிகள் வழி அறிய முடிகின்றது. நெல், தினை ஆகியவற்றின் தண்டுப்பகுதி தாள் என்றும், கால் என்றும் வழங்கப்படுகின்றன. இதனை,

***"பைந்தாள் செந்தினை (நற். 376)***
***கருங்கால் செந்தினை (நற். 122)***
***அரிகால் (நற். 210)***
***"எரியகைந்தன்ன தாமரை இடைஇடை***
***அரிந்து கால்குவித்த செந்நெல்வினைஞர்***

***(அகம். 116)***

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. வரகு, தினைக்கதிர்களை விலங்கினம் மேய்ந்த பின் தண்டு மட்டும் நிற்றலை,

***"குரைத்தலைப் பாவைஇருவி"***

***(குறுந். 220)***

என்ற பாடலடி உணர்த்துகின்றது. நெல், தினை இவற்றின் இலைப்பகுதி தோடு, இலை என்றும் சுட்டப்பெறுதலை,

***------------------ புனத்த***
***நீடு இலை விளை தினைக்கொடுங்கால் நிமிரக்"***

***(நற்.344)***

***அணிவரை மருங்கின் ஐது வளர்த்திட்ட***
***மணி ஏர் தோட்டாமை ஆர் ஏனல்"***

***(நற்.344)***

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. எனவே, செடி வகையினின்று வேறுபட்டுப் புல்லின் வகைப்பாட்டிலேயே இவ்வுணவுப் பயிர்களும் இடம் பெற்றுள்ளமையை அவற்றின் உறுப்புப் பெயர்கள் மற்றும் வளரியல்பு கொண்டு அறியலாம்.

***முடிவுரை***

நவீன உலகில் அறிவியல் நன்கு வளர்ந்துள்ளது. இன்றைய கால அறிவியல் பகுப்பு முறையை ஒத்த தொல்காப்பிய பகுப்பு இன்றளவும் வியப்பினை நல்குகின்றது. உலகளவில் உபகண்டம் தழுவிய பொதுப்பண்பினை தொல்காப்பியம் குறிப்பிடுவது சரியே எனினும் உயிர் அளவில் மிக துள்ளியமான இப்பகுப்பு முறை தெளிந்த உயிர் பன்மிய அறிவு மற்றும் நிலையியல் உயிர்களின் அறிவினை நன்கு உணர்ந்தே தமிழர் செயல்பட்டனர் என்பது கட்டுரை வழி புலனாகின்றது. தமிழர் பண்பாட்டில் பல்வேறு பொருண்மைகள் விளங்கினாலும் சூழலுக்குத் தக்க வாழ்வியலை அமைத்தல் என்ற நுட்பமாண அறிவு ஒன்றே ஓர் அறிவு உயிர் முதல் சங்க இலக்கிய பதிவில் இடம்பெற காரணம். தமிழரின் உயிர்கள் பற்றிய அறிவு தாவர நுண்ணறிவு பல்வேறு இலக்கியங்களில் நன்கு புலப்படுகின்றது. ஓர் அறிவு உயிர் புல் வகையில் நெல்லும் அடங்கும் என்ற பகுப்பு உயிரிய பன்மியத்தின் உச்சம் என்பது தெளிவாகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. ஐங்குறுநூறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
2. மலைபடுகடாம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
3. குறுந்தொகை - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
4. அகநானூறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
5. பெரும்பாணாற்றுப்படை - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
6. தொல்காப்பியம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
7. நற்றிணை - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
8. நலமான சூழலும் வளமான வாழ்வும் - பன்மை வெளியீட்டகம்
9. தாவரங்கள் பேசுகின்றன - விஜயா பதிப்பகம்

# திருக்குறளில் போர் மேலாண்மை விழுமியங்கள்

***முனைவர் அ. தேன்மொழி***
உதவிப் பேராசிரியர்
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

## முன்னுரை

இன்றைய நவீன உலகில் மேலாண்மைக் கல்வி என்பது பலரையும் கவர்ந்துள்ளது. இச்சூழலில் மேலாண்மை என்ற கருத்தமைவை புரிந்து கொள்வதற்குத் திருக்குறள் ஓர் அரணாக கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. அதனால் தான் “எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லை” என்று மதுரைத் தமிழ் நாகனார் திருக்குறளைக் குறிப்பிடுகிறார். ஓர் அரசுக்கு நாடு என்னும் எல்லை இன்றியமையாதது. இந்த எல்லையைத் தக்க வைத்துக் கொள்ளுதல் விரிவுபடுத்தல் போன்ற காரணங்களுக்காகவே காலம் தோறும் போர் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. நவீன உலகத்தில் போர் என்பது வளர்ச்சி பெற்ற ஒன்றாக இருந்து வருகிறது. இன்று போர் என்ற பெயரில் கோடிக்கணக்கான மக்களை இரக்கம் இன்றி கொடூரமான முறையில் கொன்று குவிக்கின்றனர். இந்நிலையில் காலத்தால் பழமையான நூலாகவும், உலகப் பொது மறையாகவும் திகழும் திருக்குறள் போர்களில் பின்பற்ற வேண்டிய முறைகளையும், போரை வழிநடத்தும் முறைகளையும் இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பே கூறியுள்ளது. இக்கருத்துக்களை “திருக்குறளில் போர் மேலாண்மை விழுமியங்கள்” என்ற தலைப்பில் விளக்கிக் கூறுவதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

## மேலாண்மை - விளக்கம்

மேலாண்மை என்ற சொல் மேலைநாட்டிற்கு மட்டுமே உரியது என்ற நிலைமாறி இன்று தமிழ் இலக்கியங்களில் பொருத்திப் பார்க்கப்படுகிறது. திருக்குறள் பல தளங்களைக் கொண்ட மேலாண்மைக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இச்சூழலில் மேலாண்மை என்பதற்கான வரைவிலக்கணத்தை விக்கிப்பீடியா “ஒரு செயலை அல்லது பணியை பிற நபர்கள் மூலமாக செய்து முடிக்கப் பெறுவது மேலாண்மை (Management) என மேரி பாலெட் (Mary Follett: *1868 - 1933)* குறிப்பிடுகிறார். மேலாளர்கள் (Managers). ஒரு வேலையை அல்லது பணியை தாமே செய்வதில்லை மாறாக அவர்கள் அந்தப் பணியை யார் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை முடிவு செய்து அவர்களிடம் அப்பணியை ஒப்படைக்கிறார். அவ்வாறு ஒப்படைப்பு பெற்ற நபரே அந்தப் பணியைச் செய்து முடிக்கிறார். மேலாளரைப் பொறுத்தவரை அந்த வேலை உரிய முறையில் செய்து முடிக்கப்படுகிறது.”1 என்று கூறுகிறது. இத்தகைய மேலாண்மைக் கருத்துக்களை திருவள்ளுவர் தனது திருக்குறளில் பதிவு செய்துள்ளார். இதனை,

> ***“இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து***
> ***அதனை அவன்கண் விடல்”***
>
> ***(திருக்குறள் - 517)***

என்ற குறள் சிறப்பாக இரண்டு அடிகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. மேலும் “தெரிந்து வினையாடல்” என்ற தலைப்பில் அமைந்துள்ள அதிகாரம் மேலாண்மைச் சிந்தனையை உள்ளடக்கியதாக உள்ளது.

## போர் மேலாண்மை விழுமியங்கள்

போர் மேலாண்மை என்பது போர் நடக்கும் இடம், காலம், போர்புரியும் எதிர் படைகளின் திறம், போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் முறை, தன்னைச் சுற்றியுள்ள சூழல் போன்றவற்றை

அறிந்து எதிர் படைகளை வீழ்த்தி வெற்றி பெறுவதும், போரில் வீரர்கள் கடைபிடிக்க வேண்டிய போர் அறங்களும் போர் மேலாண்மை விழுமியங்கள் என்பதில் அடங்கும்.

### தன் வலிமை அறிதல்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் ஒன்றே அரசியல் படை பற்றிய செய்திகளைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலாண்மை சிந்தனைகளில் முதன்மையானது தான் யார் என்பதையும் தனக்கான வலிமை என்ன என்பதையும் அறிவது. இதனை வள்ளுவர் "வலி அறிதல்" என்ற அதிகாரம் வழி எடுத்துரைக்கிறார்.

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்"**

***(திருக்குறள் - 471)***

என்ற திருக்குறள் தன் வலிமை அறிதலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒருவன் தான் செய்ய விரும்பும் வினையின் வலிமையையும், அதனை செய்து முடிப்பதற்குத் தனக்குள்ள வலிமையையும், தனக்கு மாற்றாக உள்ளவன் வலிமையையும், தனக்கும் மாற்றாருக்கும் துணையாக உள்ளவர் வலிமையையும் சீர் தூக்கிப்பார்த்து செயல்பட்டால் மட்டுமே வெற்றி பெறமுடியும். இது போர் மேற்கொண்டு செல்லும் மன்னருக்கு மிகுதியும் பொருந்திவரும். மேலாண்மையில் முதன்மை இடத்தைப் பெறும் தன்நிலை அறிதல் என்பதை "வலி அறிதல்" என்ற அதிகாரத்தின் முதல் குறளிலேயே மிகச் சிறப்பாகக் கூறிய திருவள்ளுவின் மேலாண்மைச் சிந்தனை வியப்பிற்குரியது.

### தலைமைத்துவ மேலாண்மை

மேலாண்மையில் தலைமைத்துவம் முக்கிய இடம் பெறுகிறது. ஒரு செயலில் தலைமைப் பொறுப்பை ஏற்பவர் சரியான வழிகாட்டுதலோடு செயல்பட்டால்தான் அச்செயல் சிறப்பாக இருக்கும். தலைமைப் பொறுப்பு ஏற்பவர் முன்மாதிரியாகச் செயல்பட்டு மற்றவர்களுக்கு முன்னோடியாக இருக்க வேண்டும். அதேபோல் பகைவர் மீது படையெடுத்துச் செல்லும் போது தலைமைத்துவம் என்பது இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது என்பதை,

**"நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை**
**தலைமக்கள் இல்வழி இல்"**

***(திருக்குறள் - 770)***

என்ற திருக்குறள் வழி திருவள்ளுவர் விளக்குகிறார். படைத்தலைவன் முன்னின்று சிறந்த வழிகாட்டுதலோடு போர் புரியும் போது தான் மற்ற வீரர்கள் மிகுந்த ஊக்கத்தோடு செயல்பட்டு வெற்றி பெறமுடியும் என்ற தலைமைத்துவ மேலாண்மையை "படைமாட்சி" என்னும் அதிகாரம் வழி திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

### போருக்கான சூழல் (உயிரின் மேண்மை)

பண்டைய அரசர்கள் தன் நலத்தினையும் புகழினையும் கருதி பிறருடன் போதிய காரணம் இன்றி போர்புரிவதை விரும்பாத நல்லரசர்களாக இருந்தனர். இதனை திருவள்ளுவரின் "இகல்" என்னும் அதிகாரம் வழி அறிய முடிகிறது. பிறருடன் மாறுபாடு கொள்ளாமல் கூடியவரை பகையையும் போரையும் தடுத்து நட்பு கொள்வதே சிறந்தது என்று இவ்வதிகாரத்தினால் விளக்கிய திருவள்ளுவர் "பகைத்திறன் தெரிதல்" என்ற அதிகாரத்தில் முதல் குறளில் மீண்டும் பகை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை,

**"பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற் றன்று"**

***(திருக்குறள் - 871)***

என்ற திருக்குறள் வழி வலியுறுத்திக் கூறுகிறார்.

இருப்பினும் போர் நிகழ்தல் என்பது இயல்பான ஒன்று என்பதால் அரசர் தன் மக்களையும் நாட்டையும் பாதுகாக்கும் பொருட்டுத் தக்க பாதுகாப்பு அரண்களையும், படைகளையும் பெற்றிருக்க வேண்டும் என்பதை,

**"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு"**

***(திருக்குறள் - 381)***

என்ற திருக்குறள் வாயிலாக சுட்டுகிறார் திருவள்ளுவர்.

இரு நாடுகள் அல்லது அரசர்கள் ஒன்றுப் பட்டு தம்மேல் பகை கொண்டால் அவற்றுள் ஒருவரின் பகையை மாற்றித் தனக்கு துணையாகக் கொள்ளுதல் சிறந்தது என்பதை,

***"தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்***
***இத்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று"***

***(திருக்குறள் - 875)***

என்ற திருக்குறள் வழி விளக்குகிறார்.

போர் தற்காப்பிற்காக நிகழ்த்தப்பட வேண்டும் என்பதை வள்ளுவர் குறட்பாக்கள் குறிப்பிடுகின்றன. தன் நாட்டையும் குடிமக்களையும் பாது காப்பதற்காக அரசன் போர் செய்தல் என்பது தவிர்க்க முடியாதது என்பதே திருவள்ளுவர் கருத்து. எனவேதான் அரசனுக்கு அமைய வேண்டிய உறுப்புகளில் ஆதியாகப் படையையும் அந்தமாக நாட்டு பாதுகாப்பிற்கான அரணையும் குறிப்பிடுகிறார். போர் காரணமாக உயிர்கள் மற்றும் பொருட்கள் அதிக அளவில் இழக்கப் படுவதைத் தவிர்க்கவே இயன்ற அளவு பிறருடன் பகையை ஒழித்து நட்பு கொள்க என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். இதன் வாயிலாகப் போர் மூலம் ஏற்படும் உயிர்க் கொலையைக் குறைத்து மக்களைக் காக்க வேண்டும் என்ற திருவள்ளுவரின் மேலாண்மைச் சிந்தனை வெளிப்படுகிறது.

### காலம் அறிதல்

காலம் அறிந்து செயல்பட வேண்டும் என்பதை உணர்ந்த திருவள்ளுவர் "காலம் அறிதல்" என்று ஒரு தனி அதிகாரத்தை இதற்காகப் படைத்துள்ளார். ஒரு செயலை செய்து முடிப்பதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும். காலம் வாய்த்தவுடன் விரைந்து செயல்பட்டு அச்செயலை செய்து முடிக்க வேண்டும். இதனை,

***"கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்***
***குத்துஒக்க சீர்த்த இடத்து"***

***(திருக்குறள் - 490)***

கொக்கு தனக்கு இரையாகிய உணவு கிடைக்கும் வரை காத்திருந்து பின்னர் கிடைத்தவுடன் விரைந்து கொத்திச் செல்லும் என்று காலம் கருதி காத்திருந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் திருவள்ளுவர். "ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய மாரிக்காலத்திலும் சித்திரை, வைகாசி மாதங்களாகிய இளவேனிற் காலத்திலும் பெரும்பாலும் அரசர் பகைவர் மீது போர் புரிந்து செல்லுதல் மரபு."[2] அரசன் பகைவனை வெல்லும் காலத்தை அறிந்து செயல்பட வேண்டும் என்பதை,

***"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்***
***வேந்தருக்கு வேண்டும் பொழுது"***

***(திருக்குறள் - 481)***

என்ற திருக்குறள் வழி கூறுகிறார் திருவள்ளுவர்.

கூகைக்கு இரவில் மட்டுமே பார்வை உண்டு பகலில் அவற்றால் பார்க்க இயலாது. இக்காலமே காகம் கூகையை வெல்வதற்கு ஏற்ற காலமாகும். அதுபோல் தனக்குள் மாறுபாடு கொண்ட மன்னர்கள் தனக்கான காலத்தை அறிந்து செயல்படும் போதே வெற்றி பெற முடியும்.

கூகையையும் காக்கையையும் உவமையாக எடுத்துக்காட்டிப் போரில் பகைவனை வெல்ல காலத்தை அறிதல் தேவை என்ற கால மேலாண்மையை உணர்த்திய திருவள்ளுவரின் அறிவின் மாட்சி சிறப்புடையது.

### இடன் அறிதல்

தன் வலிமையை ஆராய்ந்து செயல்படும் அரசன் பின்னர் காலத்தையும் அறிய வேண்டும். அங்கனம் காலத்தை ஆராய்ந்து செயல்படத் தொடங்கிய பின்னர் இடத்தையும் அறிந்து செயல்பட வேண்டும் என்பதை "இடனறிதல்" என்ற அதிகாரம் வழி வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

ஓர் அரசன் தன்னுடன் பகை கொண்ட அரசனை வெல்ல தகுந்த பாதுகாப்புடன் கூடிய இடத்தை அறிந்து செயல்பட வேண்டும். தனக்கான இடத்தை அறியும் வரை எந்த ஒரு செயலையும் செயலால் மட்டுமல்லாது சொல்லாலும் செய்யக்கூடாது. இவ்வாறு இடத்தை அறிந்து செயல்படும் போது

ஓர் அரசன் சிறிதளவே படையைக் கொண்டிருந்தாலும் வெற்றி பெறுவான். இதனை,

**"தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க மற்றும் இடங்கண்ட பின் அல்லது."**

***(திருக்குறள் - 491)***

**"ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து போற்றார்கண் போற்றிச் செயின்."**

***(திருக்குறள் - 493)***

**"சிறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்."**

***(திருக்குறள் - 498)***

என்ற குறட்பாக்கள் வழி திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். எனவே இடத்தை அறிந்து செயல்படும் மன்னனே பகைவரை வீழ்த்தி வெற்றியை எய்த முடியும் என்ற இட மேலாண்மைச் சிந்தனையையும் திருவள்ளுவர் தன் குறட்பாக்களின் வாயிலாகச் சுட்டுகிறார்.

**ஒற்றாடல்**

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு ஒற்றாடல் என்பது இன்றியமையாததாக உள்ளது. அரசன் பிறர் மூலம் அறியக் கூடிய செய்தியின் உண்மைத் தன்மையை அறியவும், எதிர் நாட்டுத் திட்டங்களையும், போர்த் தொடர்பான செய்திகளையும் பகைவர் அறியாவண்ணம் தெரிந்து கொள்ள ஒற்றாடல் என்பது ஒரு நாட்டிற்குத் தேவையான ஒன்றாக அமைகிறது. பகைவரின் நிலையை அறியும் இவ் ஒற்றறிதலை தொல்காப்பியர் "புடைகெட ஒற்றின் ஆகிய வேய்" என்ற துறையாகக் கூறுகிறார்.

மனித உயிர்களின் உறுப்புகளுள் கண் சிறப்பானது அதுபோல் அரசர்க்கு உரிய அங்கங்களுள் ஒற்றர் சிறப்பான இடத்தைப் பெறுகின்றார். இதனை,

**"ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும் தெற்றென்க மன்னவன் கண்"**

***(திருக்குறள் - 581)***

என்கின்றது திருக்குறள்.

ஒற்றாடச் செல்பவர் பிறரைக் கண்டு அஞ்சாமலும் பிறர் அவரை கண்டு ஐயுறா வண்ணமும் நடந்து கொள்ள வேண்டும். ஒற்றாடச் செல்பவர் செய்தியை உள்ளபடியே அறிந்து அறிந்த செய்தியை தெளி வாகக் கூறும் திறன் உடையவராக இருக்க வேண்டும் என்று ஒற்றாடச் செல்பவர்க்குத் தேவையான தகுதிகளை திருவள்ளுவர் வரையறுக்கிறார்.

அரசன் ஒன்றிற்கு மேற்பட்ட (மூன்று) ஒற்றர்களைக் கொண்டு செய்திகளை அறிந்து, அறிந்து கொண்ட செய்தியை ஒப்புமைப்படுத்தி அவற்றின் உண்மைத் தன்மையை அறிய வேண்டும். இதனை,

**"ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும் ஓர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்."**

***(திருக்குறள் - 588)***

**"ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர் சொல்தொக்க தேறப் படும்."**

***(திருக்குறள் - 589)***

என்ற குறட்பாக்கள் வழி கூறுகிறார் திருவள்ளுவர்.

மேலும் ஒற்றர்களுக்கு சிறப்பு செய்யும் போது பிறர் அறியா வண்ணம் சிறப்பு செய்ய வேண்டும் (குறள்.590) என்பதையும் வலியுறுத்துகிறார்.

ஒற்றாடுபவருக்கு உரிய தகுதிகள், அரசன் அவர்கள் கொண்டுவரும் செய்தியின் உண் மைத் தன்மையை அறியும் வழி போன்றவற்றை திருவள்ளுவர் கூறுவதன் வழி ஒற்றாடல் துறைக்கு உரிய மேலாண்மைச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

ஒரு நாட்டிற்கு வரும் போர்கள், கேடுகள் போன்றவற்றை அறிந்து முன்னெச்சரிக்கையுடன் எதிர்கொள்ள ஒரு நாட்டிற்கு ஒற்றாடல் என்பது தேவைப்படுகிறது.

**போர்ப் பாதுகாப்பு மேலாண்மை**

வில், வேல், வாள் போன்றவை போர்க் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்ட காலத்தில் நாட்டை அரண்கள் அமைத்து பாதுகாத்தனர். இது பண்டைய தமிழரின் பாதுகாப்புத் திறனை விளக்குகிறது. ஓர் அரசனுக்கு உரிய ஆறு உடைமைகளுள் ஒன்றாக அரணைக் கூறிய திருவள்ளுவர் அதன் சிறப்புணர்ந்தே "அரண்" என்ற ஓர் அதிகாரத்தைப் படைத்துள்ளார். "அரண் என்னும் சொல் அருமை என்னும்

தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றிப் போரில் அருமைப்பாடு உடையது என்னும் கருத்தில் வழங்கியது எனக் கொள்வதும் தக்கதே."[3] போர்க் காலங்களில் அரண் புகழிடமாக விளங்குவதை உரையாசிரியர் பரிமேலழகர் சுட்டிக்காட்டுகிறார்.

அரண் அமைய வேண்டிய முறையினை,

> ***"உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்***
> ***அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல்."***
>
> ***(திருக்குறள் - 743)***

என்ற திருக்குறள் வழி கூறுகிறார் திருவள்ளுவர். மதிலுடைய கோட்டையானது உயரமானதாகவும், அகலமானதாகவும், திட்பமானதாகவும் அமைய வேண்டும் என்ற திருக்குறள் அரண் உள்ளிருப்போர் பகைவர் தாக்குதலில் இருந்து பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கூறியதாகும்.

போர் நிகழும் காலத்துத் தேவையான படைக் கருவிகளையும் உணவுப் பொருட்களையும் உற்றாரையும் பிறவற்றையும் பாதுகாக்க அரண் இன்றியமையாதது என்பதை,

> ***"கொளற்குஅரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகி அகத்தார்***
> ***நிலைக்குஎளிதாம் நீரது அரண்."***
>
> ***(திருக்குறள் - 745)***
>
> ***"எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்***
> ***நல்லாள் உடையது அரண்."***
>
> ***(திருக்குறள் - 746)***

என்ற குறட்பாக்கள் கொண்டு வள்ளுவர் விளக்குகிறார்.

பண்டையகாலத்தில் ஒரு நாட்டின் பாதுகாப்பில் அரண் என்பது முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதனால் தான் திருவள்ளுவர் அரண் அமைய வேண்டிய முறையை இன்றைய கட்டிட வல்லுநர்கள் போல் அன்றே கூறியுள்ளார். இது நாட்டையும் மக்களையும் போர்க்காலங்களில் பாதுகாத்தல் வேண்டும் என்ற திருவள்ளுவரின் பாதுகாப்பு மேலாண்மைச் சிந்தனை நோக்கினை வெளிப்படுத்துகிறது.

**தூது**

போர் தொடங்கும் முன் அரசர்கள் இருவர் தங்களுக்கிடையே உள்ள பகையை மாற்றி அமைதி கொள்ளும் முயற்சியாகத் தூது அமைதல் வேண்டும். ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தூது வர்கள் பணி இன்றியமையாதது. தொல்காப்பியர் தூது செல்பவர் சிறப்புடையவராக இருக்க வேண்டும் என்பதை,

> ***"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன."***
>
> ***(அகத்திணையியல் - 972)***

என்ற நூற்பாவால் விளக்குகிறார். திருக்குறள் உரையில் பரிமேலழகர் தூதர்களின் இருவகையை "தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான்" என்று குறிப்பிடுகிறார்.

தூதுரைப்பவன் அன்புடைமை, ஆன்ற குடிப்பிறப்பு, வேந்தர் விரும்பும் பண்பு முதலியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். அறிவுடைமையும், ஆராய்ந்த சொல்வன்மையும் தூதுரைப்பவனுக்கு இன்றியமையாத பண்புகள் ஆகும். தூதுரைப்பவன் நூல் வல்லானாக இருக்க வேண்டும். நல்ல தோற்றப் பொலிவு உடையவனாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டு தான் கூற வரும் செய்தியைத் தொகுத்துக் கூறும் ஆற்றல் பெற்றவனாக இருக்க வேண்டும். தன் கடமையை அறிந்து அதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து உரைப்பதே சிறந்த தூது ஆகும். தூதுரைப்பவனுக்குத் தூய்மை, துணைமை, துணிவுடைமை, வாய்மை முதலிய பண்புகள் வாய்க்கப் பெற்றிருக்க வேண்டும். தனக்கு அழிவு நேர்ந்தாலும் தனது அரசன் சொல்லியவாறே தனது அரசனுக்கு உறுதி பயக்குமாறு செயல்பட வேண்டும். இத்தகைய பண்புகளைப் பெற்று விளங்குபவனே சிறந்த தூதுவன் ஆவான்.

திருவள்ளுவர் தூதின் சிறப்பை உணர்ந்திருந்தமையால்தான் "தூது" என்று தனியே ஒரு அதிகாரத்தை அமைத்துள்ளார். தூதுவனுக்குரிய பண்புகள், தகுதிகள் போன்ற மேலாண்மை பண்புகளைப் பண்டைய இலக்கியங்களுள் ஒன்றான திருக்குறள் வழி அறியமுடிகிறது. மேலும் இது திருவள்ளுவரின் மேலாண்மைச் சிந்தனையின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

**படைகளின் பண்புகள்**

போர் என்றதும் பெரும்படை என்பதே நம் சிந்தனையில் தோன்றும். மன்னருக்கு உரிய அடையாளங்களைக் கூறும் போது தொல்காப்பியரும் படையையே முதலில் குறிப்பிடுகிறார். ஒரு நாடு நிலைபெறவும்நலம்பெறவும் இன்றியமையாதது படை வலிமையாகும். இதுவே ஒரு நாட்டின் பெருமைக்கு அடிப்படையாகும். போர்புரியும் படை எவ்வாறு இருக்க வேண்டும் அவற்றிற்கான தகுதிகள் என்ன என்பதையும் திருவள்ளுவர் கூறத் தவறவில்லை. இதனை "படைமாட்சி, படைசெருக்கு" என்ற இரு அதிகாரங்களின் வழி வள்ளுவர் கூறுகிறார். திருக்குறளில் படைகளின் பண்புகள், செயற்பாடுகள் பற்றி விளக்கிய திருவள்ளுவர் படைகளின் வகைகளைப் பற்றி விரிவாகக் கூறவில்லை.

**படை பெற்றிருக்க வேண்டிய தகுதிகள்**

போருக்கு அஞ்சாமை என்பதே மிகமிக இன்றியமையாத பண்பு. எனவே படை என்பது போருக்கு அஞ்சாமல் இருந்தால்தான் அரசனுக்கு வெற்றியைத் தேடித்தர முடியும் என்பதை,

**"உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை"**

***(திருக்குறள் - 761)***

என்ற திருக்குறள் மூலம் திருவள்ளுவர் சுட்டுகிறார்.

மானமும் மாட்சிமைப்பட்ட நடத்தையும் தலைவனின் நம்பிக்கையும் படைக்கு சிறப்பானவை (766) மாற்றார் வகுத்து வரும் போர் படைகளின் ஆற்றலை தாங்கி போரின் தன்மையறிந்து போரிட வல்லவனாக இருக்க வேண்டும் என்பதை,

**"தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த**
**போர்தாங்கும் தன்மை அறிந்து"**

***(திருக்குறள் - 767)***

என்ற திருக்குறள் சுட்டுகிறது.

**படை தவிர்க்க வேண்டியவை**

படை சிறுமை, தலைவனிடம் நீங்காத வெறுப்பு, வறுமை ஆகிய பண்புகளைத் தவிர்க்க வேண்டும் என்பதை,

**"சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்**
**இல்லாயின் வெல்லும் படை."**

***(திருக்குறள் - 769)***

என்ற திருக்குறள் வழி விளக்குகிறார் திருவள்ளுவர்.

போர்க்களத்திற்குச் செல்லும் படைகள் பெற்றிருக்க வேண்டிய தகுதிகளைக் கூறிய திருவள்ளுவர் அப்படை தவிர்க்க வேண்டிய பண்புகளையும் கூறி ஒரு படை எவ்வாறு அமைய வேண்டும் என்ற படை மேலாண்மைச் சிந்தனையை சிறப்பாகக் குறளில் விதைத்துள்ளார்.

**முடிவுரை**

திருக்குறளில் பல்வேறு துறை சார்ந்த மேலாண்மைச் சிந்தனைகள் பொதிந்து காணப் படுகின்றன. அவற்றுள் போர் மேலாண்மை என்பது மட்டும் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. போர் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதால் வள்ளுவர் போர் மேலாண்மைச் சிந்தனைகளையும் தனது குறளில் பொதித்து வைத்துள்ளார். வள்ளுவரை பொறுத்தவரை தற்காப்பு கருதிய போரையே விரும்பியுள்ளார் என்பது அவர் குறள் வழி அறிய முடிகிறது. போரில் தலைமை அமைய வேண்டிய முறை, போர் நடைபெற ஏற்ற காலம், இடம், போன்றவற்றையும், அரசு தொடர்பான அதிகாரிகளான ஒற்றர்கள் போன்றவர்களின் தகுதிகளையும், நாட்டின் பாதுகாப்பிற்கு இன்றியமையாத அரண் முதலியவை அமைய வேண்டிய முறையினையும் மேலாண்மை என்ற நவீனகாலச் சிந்தனையோட்டத்தோடு இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பே கூறியுள்ள வள்ளுவரின் ஆற்றல் வியக்கத்தக்கது.

**குறிப்புகள்**

1. விக்கிபீடியா
2. கு. மதுரை முதலியார், திருவள்ளுவர் அரசு, பக். 127, 128.
3. தி. முருகரத்தனம், குறள் கூறும் அரசு, ப. 31

# தமிழ் நாவல்களில் பாலின வேறுபாடு

***முனைவர் எஸ். துரைமுருகன்***
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, மேலூர்

***முன்னுரை***

*தமிழ் நாவல்களில் பாலின வேறுபாடு பற்றிய ஆய்வின் நிலையாக இக்கட்டுரை அமைகிறது. காலம் காலமாக பெண்கள் அனைத்துப் பண்பாட்டுத் தளங்களிலும் பாலினத்தின் அடிப்படையில்அடிமைப்படுத்தப்படுகின்றனர். பாலின வேறுபாடு குறித்த கருத்தாக்கங்களைக் கண்டறிவது இவ்வாய்வுக்கு இன்றியமையாத தாகின்றது. மனித சமுதாயத்தில் தொடக்க காலத்தில் ஆணும், பெண்ணும் சமமாகக் கருதப்பட்டனர். காலப்போக்கில் பெண், ஆணைச் சார்ந்து தான் வாழ வேண்டும் என்ற சிந்தனை ஏற்பட்டது. கணவனைத் தெய்வமாகக் கருதுபவளே சமூகத்தில் மதிப்புடையவளாகக் கருதப்பட்டாள்.*

*“சமூகத்தால் உருவாக்கப்பட்ட ஆண்மை, பெண்மை என்ற கருத்துருவங்களின் அடிப் படையில் ஆணிலிருந்து பெண்ணை வேறுபடுத்திப் பார்ப்பது பாலின வேறுபாடு”[1]*

*“பால் என்பது உடலமைப்பின் அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உடலில் புர்வமாக இருக்கும் இயற்கையான வேறுபாடு களைக் குறிப்பது.”[2]*

*“உயிரினங்களின் உடற்கூறியல். உடல் அமைப்பியல், நடத்த இயல் ஆகிய பண்புகள் இனவிருத்திக்கு முக்கியமானவை இவையே பாலையும் நிர்ணயிக்கின்றன.”[3]*

*“பால் என்பது (மனிதாில்) ஆண் பெண் என்ற பகுப்பு (இலக்கியத்தில்) உயர்திணையில் ஆண், பெண், பலர். அஃறிணையில் ஒன்று, பல என்னும் ஐந்து வகைப் பிரிவு. அவன் என்பது ஆண்பால், அவள் என்பது பெண்பால்.”[4]*

*“செக்ஸ் என்ற சொல் பல பொருள்களையும் பல இயல்புகளையும் கொண்டதாக அமைந்திருந்தாலும் குறிப்பாக ஆண் - பெண் இனப்பிரிவு என்ற பொதுவான பொருளைத் தருகிறது.”[5]*

*“இன உறுப்புகளின் அடிப்படையில் பால் ஆண்பால் என்றும் பெண்பால் என்றும் பாகு படுத்தப்படுகின்றது.”[6]*

***குழந்தை வளர்ப்பு***

*சமூகத்தில் ஆண் குழந்தைப் பிறப்பு பொாிதும் மகிழ்வுடன் விரும்பி வரவேற்கப்படுகின்றது. பெண் குழந்தைப் பிறப்பு பெரும்பாலும் விரும்பப்படுவதில்லை. பெண் சிசுக்கொலை இன்றளவும் பரவலாக காணப்படுகின்றது. இப்போக்கு ஆணாதிக்கத்தின் அதிகாரப் போக்கையும், பெண்ணினத்தின் அவல நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது.*

*வரப்போகின்ற கணவனுக்காக வாழப்போகிறோம் என்ற எண்ணத்துடனே பெண் குழந்தை வளர்க்கப்படுகின்றாள். இந்த எண்ணம் மேலும் வலுப்பெற்றிருப்பதால் ஆண் பெண் வித்தியாசம் பார்க்கப்படுகின்றது. ஆண் குழந்தையின் கல்வியிலும் வளர்ப்பிலும் காட்டும் அக்கறையும், கவனமும் பெண் குழந்தையிடம் காட்டப்படுவதில்லை.*

*மா. மார்த்தாண்ட பூபதியின் “உறவு” நாவலில் தேனுவின் கல்வி அவள் பருவத்துக்கு வரும் முன்னே நிறுத்தப்படுகின்றது. பருவம் வந்தப் பின் திருமணம் செய்து வைத்து விடுவதாகக் கூறி, பெண் குழந்தையின் கல்வி நிறுத்தப்படுகின்றது.*

*“பொண்ணு வெவரமாதான் பேசுது. சொல்றது சாிதான். அவ இன்னும் ஒரு வருஷம் ஆறு மாசத்துல பொிய மனுசாயிடுவா. அப்புறம் ஆக வேண்டிய பாக்குரதுக்காக நாம நிறுத்த வேண்டியத*

அவளே செய்ரா" (உறவு ப.20) என்று பெண் கல்வி பாலின வேறுபாட்டால் தடைபடுவதை நாவலில் காண முடிகின்றது.

ஆண்டாள் பிரியதர்ஷினியின் "தகனம்" நாவலில் பெண் பருவமடைந்தப்பின் பள்ளிக்குச் செல்லாமல் வரப்போகும் கணவனுக்காக சமைத்துப் பழகுவதற்காகவும் வீட்டைப் பராமரிப்பதற்காகவும் வீட்டிலேயே தங்க வைக்கப்படுகின்றாள்.

"இனிமே நீ இஸ்கூலுக்குப் போவேணாம் ராணி. பொட்டப்புள்ள வூட்டோட இருந்து ஆக்கி எறக்கப்பாரு. நாளைக்கே கட்டினவன் ஊட்டுக்குப் போயி சோறாக்கப் பேய்முளி முளிச்சன்னு வையி ...... என்னத்தான் சாடை பேசுவா ............ (தகனம் ப. 46) என்ன பகுதியின் வழி ஆண் பெண் பேதைமையை நாவலில் வெளிப்படுத்துகின்றார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டுவது முதல் பாலின வேறுபாடு முக்கிய பங்கு வகிக்கின்றது. பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் சமுதாயத்தில் அரிது. ஆனால் பெண் சிசுக்கொலை என்பது கிராமங்களில் இன்றைக்கும் மிகச் சாதாரணமாகவே கருதப்பட்டு வருகின்றது. அவ்வாறு தப்பிப் பிழைக்கும் பெண் குழந்தைகள் பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

சு.தமிழ்ச்செல்வியின் "அளம்" நாவலில் பெண் குழந்தையைப் பெற்ற தந்தையே திட்டுவதைக் காண முடிகின்றது. "மோரய பாரேன் காரிப்பான சுத்து மோரி. வண்ணாஞ்சாலு கணக்கா தொப்பைய மின்னாடி தள்ளிக்கிட்டு நிக்கி சனியங்" என்று முனுமுனுத்தான். (அளம் ப. 10) என்னும் பகுதியின் வழி பெண் குழந்தை பிறப்பினை அவமானப்படுத்துவதைக் காணமுடிகின்றது.

**கைம்பெண் மறுமணம்**

ஒரு பெண் கைம்பெண ஆனதற்குப் பிறகு அவள் வேறு எந்த ஆடவனுக்கும் சொந்தமானவளாக ஆகிவிடக்கூடாது என்ற ஆணின் நோக்கம் வெகுகாலமாக நம் நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே உடன்கட்டை ஏறுதல், அவளை பார்த்து யாரும் ஆசைப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே அவள் கணவன் இறந்ததும் அவளது தலையை மழிக்கின்ற அசிங்க வேலைகள் நடந்தேறின.

சி.எம். முத்துவின் "நெஞ்சின் நடுவே" நாவலில் கைம்பெண் மறுமணத்திற்கு மறுப்புத் தெரிவிக்கும் கருத்தினைக் காணப்படுகின்றது. தனது இளம் வயது தங்கையான கைம்பெண்ணிற்குத் திருமணத்திற்கு மாப்பிள்ளை தேடும் சின்னத்தம்பியை, பஞ்சாயத்தில் நிற்க வைத்து அவமானப்படுத்தும் செயலை நாவலில் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்,

"இந்த பாருங்க இதை முளையிலேயே கிள்ளி எறிஞ்சுட்டாத்தான் ஊரோட மானத்தைக் காப்பாற்ற முடியும். அவனோட முயற்சியால் ஒருவேளை அறுத்தப் பெண்ணுக்கு கல்யாணம் நடந்துட்டா அப்புறம் இந்த ஊரை அறுத்துக் கட்டிப்பய ஜாதி ஊருல சேக்க ஆரம்பிச்சுடுவானுவோ. நம்ம ஊருக்கு இது நாளுவரைக்கும் இருந்து வந்த மட்டு மரியாதை எல்லாம் காத்துல போயிரும். அது மட்டுமல்ல ஊருல உள்ள பயலுகளுக்கு மத்த கிராமத்துலேருந்து ஒருத்தனும் பொண்ணு குட்டி தரமாட்டானுவ. நம்ப ஊரு பொண்ணுகளையும் யாரும் வந்து கட்டிட்டுப் போவ யோசிப்பானுங்க. அப்புறம் நாம் நம்பளோட கீழ்பட்ட கிராமத்துல போயித்தான் சம்பந்தம் வச்சிக்க முடியும். வெள்ளம் வர்றதற்கு முன்னாடி அணப்போட்டுக்கணும் பாருங்க .... பிரச்சனை நம்மளுதுல்லன்னு ஒரொருத்தனும் ஒதுங்கிட்டுப் போயிறக்கூடாது. இன்னிக்கே ஊரு கூட்டம் போட்டு அந்தப் பயலையும் கூட்டியாந்து இதுக்கு ஒரு வாவு வளி தீர்த்தாவணும்." (நெஞ்சின் நடுவே பக். 36 - 37) என்னும் பகுதியில் கைம்பெண்ணின் திருமணத்திற்கு ஊரார் தடை செய்வதை அறிய முடிகின்றது.

கைம்பெண்ணின் உணவு, உடை, அலங்காரம் முதலியவற்றிற்கு கட்டுப்பாடு விதிக்கும் ஆணாதிக்கச் சமுதாயம் அவளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதில்லை. கைம்பெண்ணின் மறுமணத்திற்குத் தடை விதிக்கும் சமுதாயம் அவளை வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளச் சம்மதிக்கிறது.

வெறியில பேசுறதெல்லாம் பேச்சாயிற முடியாதுடா அண்ணாமலை ..... நீயில்ல

சொல்லிப்புட்ட ஏ பொண்டாட்டி தான் எனக்கு வப்பாட்டின்னு அதை ஒலகம் ஏற்காது. அதுக்காவத்தான் சொல்றன். இன்னிலேருந்து ஏ தங்கச்சிய நீயே வப்பாட்டியா வச்சிக்கடா என்னடா ஒலகத்துல இப்டி ஒரு அண்ணன் இருப்பானான்னு யோசிக்காத. இந்த ஊருக்குள்ள ஏ தங்கச்சிக்கு மாப்ளை தேடுறது குத்தம்பாங்க. அவளை ஒருத்தனுக்கு கட்டிக் கொடுத்து வாழவைக்கிறது குத்தம்பாங்க. ஆனா அவ இன்னொருத்தனை வச்சிருந்தா குத்தம்னு ஒரு பயலும் வாயையே தொறக்க மாட்டான். ஆதனால தான் சொல்றேன் ஏ தங்கச்சிய நீயே வப்பாட்டியா வச்சிக்கன்னு. ஏலே அண்ணாமலை அவளை ஒனக்கு பொண்டாட்டியா ஆக்கிப்புடணும்னு ஏமனசுல நெனைச்சிருந்தேன். ஆனா அது முடியாம போச்சி. சொல்லி விட்டு அவன் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டான்.” (நெஞ்சின் நடுவே ப.316) என்றும் கைம்பெண் மறுமணம் செய்து வாழ முடியாமல் வைப்பாட்டியாவதைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

### சாவுச் சடங்குகளில் பெண்களின் பங்கு

இறப்புச் சடங்குகளில் பெண்களின் பங்கு முக்கியமானதாகும். இறப்புச் சடங்குகளில் முக்கியமாய் இடம் பெறுவது ஒப்பாரி ஆகும். இதற்காகவே இறப்புச் சடங்குகளில் பெண்ணை அழைப்பது சமுதாய மரபாக உள்ளது. ச. சுபாஷ் சந்திர போஸின் “பயிர் முகங்கள்” நாவலில் இரவில் பெண்கள் ஒப்பாரி வைக்க அழைக்கப்பட்டார்கள்.

***அல்லியும் தாமரயும்***
***ஆறு அடச்சுப் புத்தாலும்***
***அல்லி கொணம் அறிஞ்சு - எங்கள***
***ஆதரிக்க யாருமில்லை***
***கோரயும் தாமரயும்***
***கொளம் அடச்சு புத்தாலும்***
***கோரகொணம் அறிஞ்சு - எங்கள***
***கொண்டாட யாருமில்லை***

***(பயிர் முகங்கள் ப. 310)***

என்று வரும் பகுதி மேற்சொன்ன கருத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ச. சுபாஷ் சந்திர போஸின் “கால வெள்ளம்” நாவலில் இறந்தவர்களுக்காக ஒப்பாரி வைக்கும் செய்தி இடம் பெறுகிறது. இறந்த வீட்டில் பெண் ஒப்பாரி வைத்து அழுவது சமூக மரபு. அதனாலே யாரும் அழக்கூடாது என்ற வீரச்சாமித்தேவர் கூறினாலும் அவாின் மகள் நல்லமுத்து ஒப்பாரி வைத்து அழுகின்றாள்.

***மஞ்ச கழுத்தோட***
***மடி நெறஞ்ச மலரோட***
***மன்னருக்கு முன்னால***
***வைகுண்டம் போனியோ***
***தாலி கழுத்தோட***
***தலை நெறஞ்ச புவோட***
***தளபதிக்கு முன்னால***
***தங்கலோகம் போனியோ***
***கட்டுக் கழுத்தோட***
***கை நெறஞ்ச புவோட***
***கணவருக்கு முன்னால***
***கைலாசம் போனியோ***

***(காலவெள்ளம் ப. 182)***

என்று வரும் பகுதியின் வழி பெண்கள் இறப்புச் சடங்குகளில் ஒப்பாரி பாடுவதை அறிய முடிகின்றது.

சு. தமிழ்ச்செல்வியின் மாணிக்கம் நாவலில் பெண்கள் ஒப்பாரி வைத்து மாரடித்து அழும் செய்தி இடம் பெறுகின்றது.

***“தங்க அரிக்குஞ்சட்டி ........... சடச்சம்பா வாக்கரிசி ............***
***தம்பிக்கோட்ட பாலஞ்சுத்தி ...........***
***தனிப்பாலம் கூடசுத்தி***
***தங்காளும் வந்தேனுன்னா ............***
***தங்கா கொடம் எடுப்பேன் தவசிக்கொரு சொம்பெடுப்பேன் ..........***
***தவசி முடிஞ்ச வொன்னே ......... தங்க விசிறி கொண்டு***
***தணல அணச்சாலும் .............. தணலும் அணிஞ்சிடும்***
***நீங்க பெத்த தங்காமனம் ஆறாது .............***
***பொன்னு அரிக்குஞ்சட்டி ...............***
***புதுச்சம்பா வாக்கரிசி .........***
***புதுக்கோட்ட பாலஞ்சுத்தி ..........***

***புதுப்பாலங் கூடசுத்தி ..........***
***போண்ணாலும் வந்தேனுன்னா .............***
***பொண்ணுகொடம் எடுப்பேன் ............***
***புசைக்கொரு சொம்பெடுப்பேன் .............***
***புச முடிஞ்சவொன்னே .......... பொன்னு விசிறிகொண்டு ..........***
***பொரிய அணைச்சாலும் ............... பொரியும் அணைஞ்சிடும் ............***
***நீங்க பெத்த பொண்ணுமனம் ஆறாது ...................***

***(மாணிக்கம் ப.228)***

என்னும் பகுதிகளின் வழி பெண்கள் ஒப்பாரி சொல்லி மாரடித்துப் பாடுவதை அறிய முடிகின்றது.

ஒப்பாரி போன்ற சாவு சடங்குகளில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு பெற்றோருக்கு இறுதிக்கடன் செய்யும் உரிமை மறுக்கப்படுகின்றது. இறுதிக் கடன் செய்யும் உரிமை ஆண்களுக்கு உரியதாக சங்க காலம் தொட்டு இருந்து வந்துள்ளது. காடு வரை பெண்கள் கூட அனுமதிக்கப்படுவதில்லை. ஆண் வாரிசு இல்லாத பெற்றோருக்குக் கூட இறுதிக் கடன் செய்யும் பெண் அனுமதிக்கப் படுவதில்லை.

எஸ். கணேசராஜின் போட்டல் நாவலில் இந்த மரபை உடைத்து பெண் இறுதிக் கடன் செய்யும் கருத்து இடம் பெறுகின்றது.

“பொம்பள சுடுகாட்டுக்கு வந்து பொணத்துக்கு தீ வெச்சா ...... தப்புன்னு தொிஞ்சுச்சு ....... தடுத்துக் கேட்க யாருக்கும் தைரியம் வரலை ..... *(பொட்டல் ப. 112)* என்னும் பகுதியிலும்,

“அவமொகம் பார்த்து முழுசா பேசமுடியல. அப்படி ஒரு அக்கினி செவப்பா ...... நின்னுக்கிட்டிருந்தா ஆதிலட்சுமி. அவளை விட மூக்கமாளுக்கு உறுத்தான உசுரு இந்த உலகத்துல கெடையாது. பொம்பளைங்கிற பொறப்பை மட்டும் காரணமாக வெச்சு உறுத்த உரிமையை பறிக்கிறது எந்த விதத்தில் நாயம்” *(பொட்டல் ப. 118)* என்னும் பகுதியின் வழியும் மரபு சார்ந்த உரிமையை உடைத்தெறிந்து ஆத்த ஆத்மார்த்தமான உறவு முறையிலும் நட்பு முறையிலும் அந்த உரிமையை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளர் நாவல் ஆசிரியர் கணேசராஜ்.

பாமாவின் வன்மம் நாவலில் பெண்களே பிணத்தைத் தூக்கிக்கொண்டு சென்று குழி தோண்டிப் புதைக்கும் செய்தி இடம் பெறுகின்றது.

“ரோஸ்மோாி பஸ் ஸ்டாண்டுக்கு மாட்டு வண்டியை ஓட்டிக்கிட்டு போய் மூணு பொணத்தையும் வாங்கி வண்டியிலேயே வெச்சு கொண்டாந்தாக. தெருவுக்குள்ள வரவும் பொம்பளைக பூராம் வாயுல வகுத்துல அடிச்சுக்கிட்டு அழுதாக. போலீஸ்காரனுக இத்தினிக் கூட எரக்கமில்லாம அழுகக்கூட உடமாட்டேன்னுட்டாக. பொம்பளைகளைக் கூப்டுகிட்டு வண்டிய ஓட்டிக்கிட்டு கல்லறைக்கு போயி பெரிய குழியா ஒரு குழிய பொம்பளைகளா வெட்டி மூணு பொணத்தையும் ஒரு குழிக்குள்ள போட்டு பெதச்சிட்டு வந்தாக” *(வன்மம் ப.105)* என்னும் பகுதியின் வழி பெண்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியாத காலம் மாறிப் பெண்களே இறுதிச் சடங்கினைச் செய்வதை எடுத்துக்காட்டி உள்ளார் ஆசிரியர் பாமா.

### கற்பு

கற்பு என்பது ஒரு வாழ்க்கை நெறி. மரபு சார்ந்த வாழ்க்கை ஒழுக்கமாக வரவேற்கப் பட்டிருந்தாலும் அது பெண்களுக்கே வற்புறுத்தப்பட்டது. “கற்பெனப் படுவது கணவனினும் தெய்வம் வேறில்லை என்று வழிபட்டோர் அருந்ததி, உலோபமுத்திரை, மோனை, சிந்தி, சாவித்திரி அநுசூயை முதலியோர் என்கிறது அபிதான சிந்தாமணி.”[7]

கற்பு என்பது மணமாகாத பெண் எனில், திருமணமாகும் கணவன் ஒருவனுக்கே உண்மையுடையவளாதல், கணவன் தீயவனாயினும், பிற பெண்களுடன் தொடர்பு கொள்பவனாயினும் அவன் பிழைகளைப் பொறுத்துத் தாங்கி அவனுக்கு நேர்மையுடையவளாக இருப்பதோடு அவனையே தெய்வமெனத் தொழுதல்”[8] என எம்.ஏ. சுசிலா கூறுகின்றார்.

“கற்பு என்பது பெண்களை அடிமைப்படுத்தும் ஓர் ஆயுதம் என்கிறார் மு.வ. கற்பு என்பது இன்று கேள்விக்குள்ளாகிப்படுகிறது. காலத்திற்கேற்ப மானிட மதிப்புகள் மாற்றம் பெறுவதில் கற்புக்

கோட்பாட்டிலும் மாற்றம் உருவாகுவது இயற்கையாக அமைகிறது. மரபிலக்கிய வகைகள் சமுதாயத்தின் பொது ஒழுக்கங்களுக்கு முதன்மை இடம் தந்தன. புத்திலக்கிய வகையான நாவல் தனிமனித வாழ்க்கைக்கு முதன்மை இடம் தந்ததால் இத்தகைய மதிப்பு மாற்றங்களை சித்திரிக்கின்றன."[9]

**"கற்பு நிலையென்று சொல்ல வந்தாரிரு**
**கட்சிக்கும் அதை பொதுவில் வைப்போம்"[10]**

என்று பாரதியாரும் கற்பினைப் பொதுமைப் படுத்தியுள்ளார்.

"பெண்கள் மீது திணிக்கப்படும் கற்புக் கோட்பாடு ஆணாதிக்கத்தில் உருவான வரையறையாகும்"[11] என்கிறார் பெரியார்.

"இந்தியச் சுழலில் பெண்களின் உடலுக்கு நேரும் பாலுறவு வன்முறை அவளது வாழ்க்கை முழுவதும் கடுமையான அஞ்சத்தக்க விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. திருமண வாழ்விற்கும் அவள் அருகதை அற்றவளாகக் கருதப்படுகிறாள்."[12]

ஜோதிர்லதா கிரிஜாவின் போராட்டம் நாவலில் கற்பிழந்த பெண் மணமாகும் தகுதியை இழப்பது எடுத்துக்காட்டுள்ளது.

"மானமுள்ள பொண்ணா இருந்தா நான் கட்றேன்னு முன் வந்தாக் கூட வேணாம்னு சொல்லணும்"

"என் தங்கச்சி தானாப் போய் எவன் கூடவாச்சும் படுத்துச்சா? என்னமோ மானம் கீனம்னு பொரிய வரத்தையெல்லாம் பேசறீங்க ? அதுவாப் படுத்தா என்ன? பலவந்தவா படுக்க வெச்சா என்ன? அதனோட விளைவு ஒன்றுதானே? கற்புபோன பெண்ணை என்னால பொஞ்சாதிங்கிற உறவில கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியாது.

அதுக்கு வேற எவனாச்சும் இளிச்சாவாயன் கிடைச்சாப் பாருங்க" (போரரட்டம் ப.263) என்னும் பகுதியின் வழி கற்பு நெறியில் பெண் திண்மையாக இருத்தல் அவசியம் என்னும் கருத்தும், நெறி பிறழ்ந்ததில் ஆணுக்கும் பங்கு உண்டு எனினும் அதன் பாதிப்பு பெண்ணையே சாரும் என்ற கருத்தும் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

சமுதாயத்தில் ஒழுக்கம் தவறும் ஆண் "ஆண்மை" மிக்கவனாகக் கருதப்படுகின்றான். ஆனால் ஒழுக்கம் தவறிய பெண்ணைப் போல அவன் சமூக உரிமையையும் தகுதியையும் இழப்பதில்லை. மணம் முடிப்பதிலும் குடும்பப் பங்குநிலை வகுப்பதிலும் புறக்கணிக்கப்படுவதில்லை. சமூகம் அவனைத் தண்டிக்கவும் திருத்தவும் முற்படுவதில்லை.

## பெயர் வேறுபாடு

குழந்தை பிறந்தவுடன் பெயர் சுட்டுவதிலேயே வேறுபாடு தொடங்கிவிடுகின்றது. பெயரில் ஆண், பெண் என்ற வேறுபாடும் பிரதிபலிக்கின்றது. "பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் சமுதாயத்தில் அரிது. ஆனால் பெண் சிசுக்கொலை என்பது சில கிராமங்களில் இன்றைக்கும் வெளியுலகிற்குத் தெரியாமல் நடைபெறுவது உண்மை. ஒரு காலத்தில் பெண் குழந்தையைக் கொல்லுகிற வழக்கம் பல கிராமங்களில் மிகச் சாதாரணமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. "கச்சம்மாள், போதும்பொண்ணு" என்னும் பெயர்களைப் பெண் குழந்தைகளுக்கு இட்டுக் குழந்தைக் கொலையை ஒருவாறு சமுதாயம் குறைத்து வந்திருக்கும் குறிப்பிடத்தக்கச் சமுதாய வரலாறு பெண்மக்கட் பெயர்களின் பின்னணியில் உண்டு. ஆண் குழந்தை கசந்து விட்டது என யாரும் கச்சையா என பெயரிடுவதில்லை. இனி ஆண் குழந்தையே வேண்டாம் எனக் கூறி "போதும் ஆண்" எனப் பெயரிடும் வழக்கம் எந்தக் குடும்பத்திலும் இல்லை. "மனவருத்தம்" "துரதிஷ்டம்" எனப் பெண்களுக்கு மட்டும் பெயர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது." தவச்செல்வி, சுசுதிகட்டாக்கனி" என்று பெண்களுக்கு அருமையான பொருள் கொண்ட பெயர்களும் இடம் பெறுகின்றன. ஆண் மக்கள் பெயர்களைக் காட்டிலும் பெண் மக்கட் பெயர்களே பெரும்பாலும் சமுதாயச் சிக்கலைத் தம்முள் கொண்டு விளங்குகின்றன"[13] என சு. வேம்புலு தமது ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

தமிழ் நாவல்களில் ஆண்களின் பெயர்களைக் காட்டிலும் பெண்களின் பெயர்களே எளிதில்

அறியக்கூடிய முறையில் பாலின வேறுபாடுகளுடன் அமைந்துள்ளன. மூக்காயி, பொட்டுக்கனி, முனியக்கா (சலவான்) கிழியம்மா, கருப்பழகி (செந்நெல்) மயிலாள், காத்தாயி (தேயிலைக் கொழுந்து) வேலாயி (தப்பாட்டம்) வவுறி, செவுடி (கூளமாதாரி) போன்ற பெயர்கள் பாலின வேறுபாட்டுடன் அமைந்துள்ளன.

## விளையாட்டு

விபரம் அறியாத வயதில் ஒன்றாக விளையாட குழந்தைகளுக்குச் சமூகம் பாலின வேறுபாடுகளைக் காட்டிச் சில விதிமுறைகளைக் கட்டாயப்படுத்துகிறது. "சிறுவயதிலேயே குழந்தைகளிடம் பாலின வேறுபாடு ஊன்றப்படுவதற்குக் காரணம் அவர்களுக்கு பெற்றோரால் வழங்கப்படும் பாிசு மற்றும் விளையாட்டுப் பொருட்களின் அடிப்படையாகும். பிரிட்டனில் ஆண் குழந்தைகளுக்குப் பொம்மைகளோ, பொம்மை வீடுகளோ கொடுக்கப்படுவதில்லை. பெண் குழந்தைகளுக்குத் துப்பாக்கிகளோ அல்லது படை வீரர் போன்ற விளையாட்டுப் பொருள்களோ அளிக்கப்படுவதில்லை"[14] என்று ஓக்லி என்பவர் குறிப்பிடுகின்றார்.

"பெண் குழந்தைகளுக்கு அமைதியான, அழகான மற்றும் வீடுசார்ந்த விளையாட்டுப் பொருள்களை மிக எளிமையானதாகவும், விலை குறைவானதாகவும் வாங்கி அளிக்கின்றனர். ஆனால், ஆண் குழந்தைகளுக்கு நல்ல கற்பனை உருவாக்கக்கூடிய பொருட்களைத் தேர்ந்தெடுப்பதோடு அவை விலை மிக்கதாகவும் இருப்பினும் அவற்றை அக்கறையோடு வாங்கி அவர்களுக்குத் தந்து உற்சாகம் ஊட்டுகின்றனர். இதன் விளைவாக அக்குழந்தைகளின் மனப்பாகுதியில் தான் ஒரு ஆண் என்றும் பெண் என்றும் ஆழமாய்ப் பதிந்து விடுகின்றது"[15] என்று குட்மன் என்பவர் குறிப்பிடுகின்றார்.

ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் விளையாட்டுகள் என்று தனித்தனியாக பிரித்து வைக்கப்பட்டுள்ளன. கிளிதட்டு, சடுகுடு, கள்ளன்போலீஸ், பிள்ளையார் பந்து கிட்டிக் குச்சி, கோலிக்காய், பம்பரம் இவைகள் ஆண் பிள்ளைகள் விளையாட்டுகள் ஆகும்.

கண்ணாம் பூச்சி, தண்ணி எடுத்து ஊத்து, புச்சொல்லி விளையாட்டு, ஓடிப் பிடித்து ஒளிந்து காட்டி விளையாடும் விளையாட்டு போன்ற விளையாட்டுகள் பொம்பளப் பிள்ளைகளுக்கு உகந்த விளையாட்டுகளாகும். ஒரு சில ஆட்டங்களில் ஆண் பிள்ளைகள் விளையாட்டுகளில் பொம்பளப் பிள்ளைகளையும் பொம்பளப் பிள்ளைகள் விளையாட்டுகளில் ஆண் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்வர்.

சூரங்குடி அ. முத்தானந்தத்தின் நல்லம்மா நாவலில் பெண்கள் கண்ணாம்பூச்சி விளையாட்டு விளையாடும் செய்து இடம்பெறுகின்றது.

"கண்ணாம் பூச்சி ஆட்டம்" களைகட்டி கொண்டிருந்தது.

"எல்லார் கண்களிலும் புச்சியைப் பிடித்து ஆடவிட்டிருந்தாள். பொியமுதலாளி வீட்டு முக்குக்கு வரவும் பின்னால் திரும்பி ஒரு பார்வை பார்த்துக் கொண்டாள்" *(நல்லம்மா ப. 68)* என்னும் பகுதி வழியில் பெண்கள் தங்களுக்குரிய விளையாட்டை விளையாடுவதை அரிய முடிகின்றது. மேலும்,

ஊர் மடத்துக்கு முன்னால் கிடக்கும் மணலில் இளவட்டங்கள் ஆடும் சடுகுடு விளையாட்டு இன்னும் முடிந்த பாடில்லை. மேலும் ஆரவாரமாய்க் கேட்டுக் கொண்டிருந்தது.

"பொம்பள பிள்ளைகள் விளையாடை முடித்துக் கொண்டு அவரவர் வீட்டுகளுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்" *(நல்லம்மா ப. 71)* என்னும் பகுதியின் வழி ஆண்கள் தங்களுக்குரிய சடுகுடு விளையாட்டை விளையாடுவதை அறிய முடிகின்றது. பெண்கள் தங்களுக்குரிய விளையாட்டை விளையாடியாலும் குறிப்பிட்ட நேரம் வரைதான் விளையாட முடியும். ஆனால் ஆண்கள் நீண்ட நேரம் விளையாடுவதை அறிய முடிகின்றது.

## முடிவுகள்

1. பாலின வேறுபாடுகளில் பெண்ணடிமையானது புலப்படுகிறது
2. மறுமணம் தடை செய்யப்படுவதை அறிய முடிகின்றது

3. சாவுச் சடங்குகளில் பெண்கள் வீடு வரை என்ற நிலை மாறி சுடுகாட்டில் இறுதிக்கடன் செய்வதை புலப்படுத்துகின்றன
4. தெரிந்தோ தெரியாமலோ கற்பிழந்த பெண்கள் திருமணத் தகுதி இழப்பதை அறிய முடிகின்றது
5. விளையாட்டில் பாலின வேறுபாடு அமைந்துள்ளது காண முடிகின்றது.
6. பெற்றோரும், சமுதாய அமைப்பும் பாலின வேறுபாட்டிற்கு துணை நிற்பதைக் காண முடிகின்றது.
7. பாலின வேறுபாட்டால், பண்பாட்டு நெருக்கடிகளால் பெண்களே பெரிதும் துயரங்களை எதிர்கொள்கின்றனர்.

### அடிக்குறிப்புகள்

1. வீ. நிர்மலா ராணி, தமிழ்ச் சிறு கதைகளில் பாலினவேறுபாடும் பெண்ணடிமைத் தனமும் ப.8
2. தேவதத்தா கமலி, பெண்ணிய கலைச்சொல் விளக்க கையேடு ப. 33
3. The new encyclopeadia Britanica. P. 911
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. 713
5. இரா. மனுவேல், தற்கால தமிழ் சமூக நாவல்களில் பாலுணர்வு ப.10
6. The oxford english dictionary p 578
7. எம்.ஏ.சுசிலா, காலப்போக்கில் தமிழ்ச் சமூகப் புதினங்களில் பெண்மைச் சித்தரிப்பு. பக்.290-291
8. இ.ப.த.ம ஆய்வுக் கோவை, தொகுதி 1 1994 ப. 243
9. சிங்காரவேலு முதலியார் (பஆ) அபிதான சிந்தாமணி ப. 383
10. சு. மெய்யப்பன், பாரதியார் கவிதைகள் ப. 463
11. பெரியார், பெண் என் அடிமையானாள் ப. 13 - 14
12. சு. வேம்புலு, பெண் மக்கட்பெயர்கள் ப. 11
13. Sushila mehata, revolation and the stoctus of women in india p. 201
14. Stephene gerratt, p. 22
15. Stephene gerratt, p. 26

# சித்தர் இலக்கியத்தின் சிறப்புக்கள்

***ப. ரதிதேவி***
தமிழ்த்துறைத் தலைவர்
தேனி கம்மவார் சங்கம் கல்லூரி, தேனி

***ஆய்வுச் சுருக்கம்***
*காலந்தோறும் பல சித்தர்கள் தோன்றி மறைந்தனர் என்றாலும் "பதினெண் சித்தர்கள்" என்ற வழக்கு சித்தர்களைக் குறிப்பிடும் மரபாக இருந்துவருகிறது. பொதுவாக மனிதர்களிடம் காணப்படாத அதிசயிக்கத்தக்க ஆற்றலைக் கொண்டவர்கள் சித்தர்கள். இவர்கள் மெய்ஞானத்தில் வல்லவர்கள். மந்திரம், மருத்துவம், இரசவாதம் தெரிந்தவர்கள். எளிய வாழ்க்கை வாழந்தவர்கள். ஆடம்பரமான சமய நெறியில் ஆர்வமில்லாதவர்கள். ஆனால் ஆழமான யோகமும் ஞானமும் பற்றிப் பல பாடல்களைப் பாடியவர்கள். சித்தர்களின் பாடல்களில் மக்கள் வழக்கத்திற்கேற்ற நடையும் வடிவமும் தென்பட்டாலும் அவை ஆழமான பொருள் கொண்டவை என்பதால் இவர்களின் இலக்கியங்களின் சிறப்புக்களை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.*

**முன்னுரை**

சித்தர்கள் என்போர் யார்? சித்தர்களுக்கும் பக்தர்களுக்கும் என்ன வேறுபாடு? என்ற கேள்விகள் அனைவரது உன்மனதிலும் அசைபோட்டுக் கொண்டே இருப்பனவற்றுள் ஒன்றாகும். சித்தர்கள் இறைவனைக் கண்டு தெளிந்தவர்கள், பக்தர்கள் இறைவனைக் காணத் துடிப்பவர்கள் என்று பக்தி இலக்கிய உரையாசிரியர்கள் கூறுகின்றனர். சித்தம் என்னும் சொல் அறிவு என்னும் பொருளை உணர்த்தும். இச்சொல்லிலிருந்து தோன்றியதுதான் சித்தி என்னும் சொல் என்று கூறுவர். இத்தகைய சிறப்புமிக்க சித்தர்களின் இலக்கியத்தைப் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பதினெண் சித்தர்கள்**

சித்தர்களில் சிறந்தவர்கள் 18 பேர் என்று கூறுவது வழக்கு. அவர்களின் பெயர்ப்பட்டியல் பின்வருமாறு.

- அகத்தியர்
- புலத்தியர்
- அகண்டர்
- நந்தி
- திருமூலர்
- காலாங்கதிநாதர்
- போகர்
- கொங்கணர்
- உரோமமுனி
- சட்டைமுனி
- மச்சமுனி
- கருவுரார்
- தன்வந்திரி
- தேரையர்
- பிண்ணாகீசர்
- கோரக்கர்
- யுகமுனி
- இடைக்காடர்

ஆகியோர் ஆவார். சித்தர்கள் பற்றிய பட்டியலில் இன்று புலிப்பாணி சித்தர், பாம்பாட்டி சித்தர், அகப்பேய்ச்சித்தர், குதம்பைச்சித்தர், அழுகிணிச் சித்தர், கடுவெளிச் சித்தர், சிவவாக்கியர் ஆகியோர் பெயர்களும் காணப்படுகின்றன.

**திருமூலர்**

சித்தர் தத்துவத்தின் மூலவராகக் கருதப்படுபவர் திருமூலர் ஆவார். இவர் பாடிய திருமந்திரம்

10வது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இது சித்தர் இலக்கியங்களில் தலைமை தாங்கும் தகுதி படைத்தது எனலாம்.

சைவ சமயத்தை மக்கள் சமயமாக எக்காலத்தில் திருமூலருக்கு மிகுந்த பங்குண்டு. உடலின் இயல்பினைப் பற்றி,

**"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"**

என்று பாடுகிறார் திருமூலர்.

இறைவனை உணர ஞான அனுபவமே தேவை என்பதை,

**"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் பற்றத் பற்றத் தலைப்படும் தானே"**

என்ற பாடலில் உணர்த்துகிறார்.

**சிவவாக்கியர்**

"சித்தன் வாக்கு சிவன் வாக்கு" என்ற பழமொழிக்கேற்ப "நமச்சிவாய" எனும் ஐந்தெழுத்தின் தத்துவத்தை மிக எளிமையான பாடல்களில் மக்களுக்கு உணர்த்தியவர் இவர்.

**"நேசமுற்றுப் புசை செய்து நீறுபுசிச் சந்தனம்**
**வாசமோடு அணிந்து நெற்றிமை திலகம் இட்டுமே**
**மோசம் பொய்புனை சுருட்டு முற்றிலும்செய் மூடர்கள்**
**வேசரி களம்புரண்ட வெண்ணிறாகும் மேனியே"**

என்ற பாடல் மூலம் பொய் வேடமிட்டுத் தெய்வத்தைத் தொழுவாரை இடித்துரைக்கிறார் சிவவாக்கியர்.

**ஔவையார்**

ஔவையார் என்ற பெயர் கொண்ட பெண்பாற் சித்தர் இவர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றிற்கு பேரின்ப விளக்கம் தருகிறார் ஔவைப் பிராட்டியார்.

**"ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்**
**காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு**
**பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு"**

**பட்டினத்தார்**

திரைகடலோடி திரவியம் சேர்த்துப் பெரும் செல்வந்தராக விளங்கிய இவர், "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே" என்று முருகனுடைய அவதாரமாக விளங்கிய தன் தவப்புதல்வனால் உணர்த்தப்பெற்று, செல்வம் அனைத்தையும் துறந்து ஞானியானவர்.

**"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர்செல்வ மெல்லாம்**
**அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நாட்டில்**
**நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கு இட்டப்பட்டி**
**என்றென்றிரு மனமே உனக்கே உபதேசம் இதே"**

எனும் பாடல்வரி உலகில் உள்ளோருக்கு வாழும் நெறியை உணர்த்துகிறது எனலாம்.

**பத்திரிகிரியார்**

இவர் பட்டினத்தாரின் சீடராய் அமைந்தவர் புலம்பல் என்ற இலக்கிய வகையில் பல பாடல்களைப் பாடியவர். இவ்வுலகத் துன்பத்தை விடுத்து வீட்டுலக இன்பத்தை அடைவதற்கான ஏக்கத்தை "எக்காலம்"? என முடியும் இவர் பாடல்களில் காணலாம்.

**ஆறாத புண்ணில் அழுந்திக் கிடவாமல்**
**தேறாத சிந்தைதனைத் தேற்றுவதும் எக்காலம்?**
**"பாவி என்று பேர் படைத்துப் பாழ்நரகில் வீழாமல்**
**ஆவின்ற சூத்திரத்தை அறிவது இனி எக்காலம்?**

**அகப்பேய்ச்சித்தர்**

அலைபாயும் மனத்தின் இயல்பைப் பேய்க்கு உவமை காட்டிப் பாடியதால் இவர் அகப்பேய்ச் சித்தர் எனப்பட்டவர். தான் எனும் அகங்கார உணர்வைக் கண்டு கிள்ளி எறிந்துவிட்டால் மனம் அமைதியாகும் எனப் பாடியவர்.

**"கண்டு கொண்டேனே அகப்பேய்**
**காதல் விண்டேனே**
**உண்டு கொண்டேனே அகப்பேய்**
**உள்ளது சொன்னாயே"**

**பாம்பாட்டிச் சித்தர்**

பாண்டிய நாட்டில் பிறந்த இவர், கொங்கு நாட்டிலுள்ள மருதமலையில் முக்தி அடைந்தார். மகுடிக்கு ஆடும் பாம்பினை ஆட்டி வைக்கும் பாம்பாட்டி போல தகுதிக்கு மேல் ஆடும் மாந்தன் நிலையை இடித்துரைத்துப் பல பாடல்கள் பாடியுள்ளார்.

**"ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே**
**உதிரப் புனலிலே உண்மை சேர்த்தே**
**வாய்ந்த குயவனார் அவர்பண்ணும் பாண்டம்**
**வளையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே"**

என்று உடம்பினை, மண்பாண்டத்திற்கு உவமை செய்கிறார் பாம்பாட்டி சித்தர்.

**இடைக்காட்டுச் சித்தர்**

காட்டில் ஆடு மாடு மேய்க்கும் இடையர்கள் பாடுவது போன்று இவரது பாடல்கள் உள்ளதால் இவர் இடைக்காட்டுச் சித்தர் எனப்படுகிறார். உயிர்களைப் பசுவாகவும், அவற்றை நன்னெறியில் செலுத்த இடையனாகவும் கருதி பாடல்களை இவர் பாடியுள்ளார்.

**"மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக் கோனே! முக்தி**
**வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே!**
**சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே - யாவும்**
**சித்தி யென்றே நினையேடா தாண்டவக்கோனே!**

**கடுவெளிச்சித்தர்**

கடுவெளி என்பது பரந்த வெளியைக் குறிக்கும். பரந்த வெளியாக மனதை நோக்கி அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இவர் பாடல்கள் அமைந்துள்ளதால் இவர் கடுவெளிச் சித்தர் என்று அழைக்கப்படுகிறார்.

**நல்லவழிதனை நாடு - எந்த**
**நாளும் பரமனை நந்திய தேடு**
**நல்லவர் கூட்டத்தில் கூடு - அந்த**
**வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு**
**வைதோரைக் கூடவை யாதே - இந்த**
**வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே**
**வெய்ய வினைகள் செய்யாதே - கல்லை**
**வீணிற் பறவைகள் மீதில் எய்யாதே**

**குதம்பைச் சித்தர்**

குதம்பை என்பது காதணி. குதம்பை எனும் காதணி என்று அணிந்த மகளிரை விளித்துக் "குதம்பாய்" இவர் தம் பாடல்களைப் பாடியுள்ளதால் குதம்பைச் சித்தர்சுசு என்று அழைக்கப்படுகிறார். நெஞ்சமே நல்ல கையேடு பட்டறிவே சிறந்த ஆசிரியன், உலகமே பல்கலைக் கழகம், கடவுளே சிறந்த நண்பர் போன்ற நடைமுறை வாழ்க்கைக் கருத்துக்கள் இவர் பாடல்களில் நிறைந்துள்ளன.

**மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பவர்க்குத்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி? - குதம்பாய்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி?**

**அழுகுணிச் சித்தர்**

நாகைக் காயாரோகணக் கோயிலில் எழுந்தருளியிருக்கும்நீலதயாட்சி அன்னையிடம் முக்தியை அழுது வேண்டிப் பெற்றதால் இவர் அழுகுணிச்சித்தர் எனப்படுகிறார். இவர் பாடல்களை நோக்கும்போது பாரதியார் பராசக்தியை வேண்டும் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

**சம்பா அரிசியடி சாதம் சமைத்திருக்க**
**உண்பாய் நீயென்று சொல்லி உழக்கு நெய்பார்த்து**
**முத்துப்போல் அன்னமிட்டு முப்பழமும் சாக்கரையும்**

**தித்திருக்கும் தேனமிழ்தம் என் கண்ணம்மா**
**தின்றிகளைப் பாடினேனா!**

### கொங்கணச்சித்தர்

இவர் கொங்கு நாட்டிலுள்ள ஊதியர் மலையில் வாழ்ந்தவர். இம்மலைக்குக் கொங்கணமலை என்ற பெயரும் உண்டு. சித்தர் பாடல்கள் தவிர கொங்கணர் ஞானம், குணவாகடம் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவர் பெண்களைச் சக்தியின் வடிவமாகப் பார்க்கிறார்.

**"கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற**
**கற்பை யனித் தவரே வாழ்க**
**சிற்பரனைப் போற்றிக் கும்மியடி**
**கற்பரனைப் போற்றிக் கும்மியடி"**

### போகர்

இவர் பழநி மலையில் வாழ்ந்தவர். இவர் எழுதிய நூல்கள் போகர் ஏழாயிரம், நிகண்டு பதினேழாயிரம், சூத்திரம் எழுநூறு, போகர் திருமந்திரம் ஆகியன. இவர் அதி அற்புத சக்திகள் கொண்ட சித்தர் ஆவார்.

### சட்டை முனி

இவர் போகரின் மாணவர். சட்டைமுனி ஞானம், சடாட்சரக் கோவை, கலம்பகம் நூறு, ஞானநூறு, வாத நிகண்டு ஆகியவை பாடியுள்ளார்.

### உரோம முனி

இவர்சட்டை முனிகாலத்தவர். உடலெங்கும் உரோமங்கள் வளமாக இருந்ததால் இப்பெயர் பெற்றார். இவர் பாடியவை உரோம முனி நூல், உரோம முனி ஐந்நூறு, ஐம்புன் நூல் ஆகியவை.

### கருவூர்ச் சித்தர்

கருவுரைச் சேர்ந்த இவர், சக்தியைப் பெண்ணாக உருவகித்துப் பாடியுள்ளார். புசை செய்யும் விதிமுறைகளையும் பாடியுள்ளார். இது கருவுரார் புசை விதி என்றழைக்கப்படுகிறது.

**"காணப்பா இவளுடைய கற்பு மெத்தி**
**கண்டவர்க்குப் பெண்ணரசு நானே யென்பாள்**
**ஊணப்பா அமிழ் தடவ ரூட்டி வைப்பாள்**
**உள்வீட்டக் குள்ளிருந்து மேலே யேறப்**
**புணப்பா மனமுறைந்து வாவா வெண்பாள்**
**புத்திரனே என் மகனே யென்று சொல்லி**
**வேணப்பா வேணலெல்லாம் தருவே னென்பாள்**
**வேதாந்த சூட்சமெல்லாம் விளங்குந் தானே"**

### முடிவுரை

இவ்வாறு தமிழ் இலக்கியத்திற்குச் சித்தர்கள் ஆற்றிய தொண்டு அளப்பறியது. அவர்களது இலக்கியத்தின்வழி பிற்காலத்தில் தாயுமானவர் இராமலிங்க வள்ளலார், பாரதியார் போன்றோர் தங்கள் கருத்துக்களை எளிய வடிவில் மக்களுக்கு வழங்குவதற்கு வழிவகுத்தது எனில் மிகையாகாது. தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் இலக்கியம் ஒரு புதிய பாதையை வகுத்து தந்தது என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

### துணை நூற்கள்


1. தமிழ் இலக்கிய வரலாறு, கி. இராசா, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் - 2020
2. தமிழ் வகைமை நோக்கில் இலக்கிய வரலாறு, கு. பாக்கியமேரி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் - 2017
3. பதினெண் சித்தர்களின் பெரிய ஞானக்கோவை, வா. சரவணன் முத்துப் பிள்ளை, சைவ சிந்தாந்த நூற் பதிப்புக் கழகம் - 1995
4. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழண்ணல் நறுமலர் பதிப்பகம் - 1980
5. தமிழ் இலக்கிய வரலாறு, மு. பாலசுப்பிரமணியம் மீனாட்சி பதிப்பகம் - 1992

# பாவலர்மணி ஆ. பழநியின் அன்னிமகள் நாடகத்தில் வரலாற்றுச் செய்திகள்

***ரா. ரம்யா***
பதிவெண் R20162512 2021-22
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி

***முனைவர் ப.சு. செல்வமீனா***
இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி

***முன்னுரை***

சங்க இலக்கியங்களில் காணப்படும் சில வரலாற்று நிகழ்ச்சி குறிப்புகள் கால எல்லையை கடந்து இன்றும் ஒளி வீசி நிற்கின்றன. அவ்வரலாற்று நிகழ்ச்சிகள் தமிழ் மக்கள் மனதிலும் புலவர் நெஞ்சிலும் நிறைந்திருந்தன. இவ்வரலாறு இலக்கியங்களில் உருப்பெறத் தொடங்கிய காலம் முதல் இன்று வரை பல்வேறு மாற்றங்களையும் மரபுகளையும் கடந்து வந்துள்ளது. அதன் வழி புலவர்கள் தம் பாடல்களிலும் வரலாற்றுச் செய்திகள் வெளிப்படும் படி பதிவு செய்தனர்.அவ்வாறு சங்க இலக்கியங்களில் பதிவு செய்த ஓரிரு காட்சிகளைக் கொண்டு பாவலர்மணி ஆ. பழநி அவர்கள் தமக்கே உரிய இயல்பான கவிதை நடையில் பெரும்பாலோரை வரலாற்று மாந்தராகவும் ஒரு சிலரைக் கற்பனை மாந்தராகவும் கொண்டு வடிவமைக்கப்பட்டதே அன்னி மகள் என்னும் நாடகமாகும். இந்நாடகத்தின் வழி வரலாற்றுச் செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

***அன்னி மகள் - நாடகச் சுருக்கம்***

குறுக்கைத் தலைவன் அன்னியும் அவன் மகள் மிஞிலியும் இந்திர விழாவினைக் கண்டு மகிழும் வேளையில், அழுந்தூர் திதியன் அன்னி மிஞிலி மீது விருப்பம் கொள்கிறான்.முல்லை நில மக்களின் குல ஒழுக்கப்படி குறுக்கையில் ஏறு தழுவும் விழா நடைபெறுகிறது.அதில் அன்னியின் காளையைக் கோசர்குலக் குறுமகன் அடக்க முடியாது தோற்றோட திதியனோ அக்காளையை அடக்கி வெற்றி காண்கிறான்.

ஆனால் திதியன் குடிக்கும் தன் குடிக்கும் பகையெனக்கூறி அன்னி தன் மகளை மணமுடித்துக் கொடுக்க மறுக்கிறான்.இதனால் கோபமுற்ற திதியன் மிஞிலியை மணமுடித்தே தீருவேன் என சூளுரைத்துக் குறுக்கையின் மீது படையெடுத்துச் செல்கிறான்.இதனை அறிந்த வேள் எவ்வி தமிழரின் இன ஒற்றுமையை எடுத்துக்கூறி போரினைக் கைவிடுமாறும் தானே முன்னின்று இத்திருமணத்தை நடத்தி வைப்பதாகவும் உறுதி கூறுகிறான். இந்நிலையில் கூடல் நகரின் கோசர் தலைவன் அகுதையும் நெய்தலங்கானலில் இருந்த கோசர் தலைவன் சினவாழியும் சூழ்ச்சி செய்து வேள் எவ்வியைக் கொன்றனர்.

இந்நிலையில் அன்னி மிஞிலியின் வெண்காற் காரிகை கோசரின் நிலத்தில் உள்ள பயிரை மேய, சினங்கொண்ட கோசர்கள் ஆநிரையை கவர்ந்துச் செல்கின்றனர்.ஆநிரை மீட்கச் சென்ற அன்னியையும் உடன் வந்த இருவரின் கண்களையும் களைந்து விரட்டுகின்றனர், இதனைக் கண்ட அன்னி மிஞிலி கோசரைப் பழி வாங்காது

களத்தில் உண்ணேன், மாற்றுடை உடுத்தேன், பும்புனல் ஆடேன, தேமலர் சூடேன் எனச் சூளுரைக்கின்றாள்.

இதனை அறிந்த திதியன் தானே கோசரை அழிப்பதாக உறுதிகூறி, கதக்கண்ணனும் சின வாழியும் கோட்டையை அடைத்து வெளிவராமையாலும் திதியன் கோட்டைக்கு எரியுட்டுகின்றான். கோசர் கூண்டோடு அழிகின்றனர். தன் சூளுரை நிறைவேறிய களிப்பில் அன்னிமிஞிலி பும்புனலாடித் தேமலர் சூடித் திதியன் முன் தோன்றி அவனை மணம் புரிகின்றாள்.

**வரலாறு விளக்கம்**

மனிதன் இயல்பாகவே ஆர்வமிக்கவன் கடந்த காலத்தை வழிகாட்டியாகக் கொண்டு, நிகழ்காலத்தை புரிந்து கொண்டு எதிர்காலத்தை கணிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவன். “வரலாறு என்ற சொல்லே “இஸ்டோரியா” என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்ததுதான். இக்கிரேக்கச் சொல்லுக்கு ஆய்வு, வினவியறிதல், உண்மையை நாடல், புதுப்பொருள் தேடல், தகவல் திரட்டல், கற்றல் என்பது பொருள்”[1] மேலும் நர்மதாவின் தமிழ் அகராதி வரலாறு என்பதற்கு “சரித்திரம்”[2] என்று பொருள் தருகின்றது.

வரலாறு என்பது கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை மட்டும் சொல்வதன்று அவை எப்படி நிகழ்ந்தது என்பதையும் சொல்வதாகும். “வரலாறு என்னும் கிரேக்கச் சொல்லிற்கு விசாரணை, ஆராய்ச்சி, புதியது காணல், தகவல் என்பன பொருள் என்கிறார் பி.சேக் அலி. மேலும் வரலாறு என்பது விதிமுறைகளுக்கு உட்பட்ட ஓர் ஒழுங்கு முறையான ஆராய்ச்சி என்பார் ஜே.எச். ஹெக்ஸ்டர்”[3] என வரலாறு என்ற சொல்லிற்கு பலவிதமான விளக்கம் அளிக்கப்படுகின்றன.

“வரலாறு என்பது அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு என இரு பிரிவாக அமையும். அரசர் நிகழ்த்திய போர்களும் வெற்றிகளும் தோல்விகளும் ஆட்சித்திறனும் அரசியல் வரலாற்றுள் விரிக்கப்பெறும் மாறாகச் சமுதாய வரலாற்றுள் பொதுமக்களின் வாழ்க்கையும் அவருடன் தொடர்புடைய பல்வேறு செய்திகளும் விளக்கப்பெறும்”[4] என வரலாற்றினை வகைப்படுத்துகின்றார் க.ப.அறவாணர்.

**அன்னிமகள் நாடகத்தில் வரலாற்றுச் செய்திகள்**

**கோசர் வரலாறு**

வட வேங்கட மலைக்கும் குமரிக்கும் இடைப்பட்ட இந்நாட்டினை சேர சோழ பாண்டிய மன்னர்கள் மட்டுமே ஆட்சி செய்தன என அறுதியிட்டு கூற முடியாது. அம்மூவர்கள் வாழ்ந்த அதே காலத்தில் அவர்கள் ஆட்சிக்கு அடங்கியும் அடங்காமலும் ஏறாளமான சிற்றரசர்கள் பெறுவாழ்வுடன் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் கோசர்குடி குறிப்பிடத்தக்கதாகும். இக்கோசர் பற்றிய செய்தியை க.கோவிந்தன் தனது நூலில் “கோசர்க்குரிய நாடாகத்துளுநாடு கூறப் பெறுமேனும், அவர்கள் அங்கேயே நிலைத்த குடியினராய் வாழ்ந்திராது, தமிழகம் எங்கும் அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையினையே மேற்கொண்டிருந்தனர்”[5] எனக் குறிப்பிடுகின்றனர்.

போர்ப்பயிற்சியே இவர்களுடைய குலத் தொழில் குறி தவறாமல் வேல் எறிவதிலும் அம்பு எய்வதிலும் கை தேர்ந்தவர்கள் கோசர் குலத்து இளைஞர்கள் உயரமான மரக்கம்பத்தை நிறுத்தி அதன் உச்சியைக் குறியாகக் கொண்டு வேல்களை எறிந்து பழகினார்கள் என்பதை,

**“வெண்வேல்**
**இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்**
**இகலினர் எறிந்த அகலிலை முருக்கின்**
**பெருமரக் கம்பம்”[6]**

எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது. இத்தகைய கோசர்கள் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தனர். அவர்களுள் கூடல் நகரில் இருந்த கோசர் தலைவன் அகுதையும், நெய்தலங்கானலில் இருந்து கோசர் தலைவன் சினவாழியும் தமிழக ஆட்சியைக் குறிப்பாக சோழநாட்டைத்தன்னடிமைப்படுத்த முனைந்தனர். இந்நிலையில் கோசர்களுக்குரிய விளை நிலத்தில் உள்ள பயிரை அன்னி மிஞிலியின் வெண்காற்காரி மேய்ந்த குற்றத் திற்காக கோசர் அன்னியையும் உடன் வந்த இருவரையும் கண்களைந்து விரட்டியதனை.

***"துண்ணென நெஞ்சம் துளங்க நம்குலக்***
***கண்ணெத் திகழ்ந்த காளையை கொன்றோர்***
***கண்களைப் பறித்துக் கானிடைத் துரத்தலே***
***உரியதாம்"***

***(அன்னி மகள்:அ-3:க-3:பா-150)***

என்னுமடிகள் சுட்டுகின்றன. இதன் மூலம் கோசர் செய்த பெருஞ் செயலினை அறிய முடிகிறது.

### வேள் எவ்வி

எவ்வி சங்க காலத்துக் குறுநில மன்னன். "சங்க காலத்தில் எவ்வி நீடூர் என்ற ஊருக்குத் தலைவனாக விளங்கினான் எனவே "நீடூர் கிழவன்" என வழங்கப்பட்டான்"[7] மேலும் "வேள் என்ற சொல் "வேளாளர்' கட்குரிய பெயராதலின், எவ்வி வேளாளக்குடியைச் சார்ந்தவனாயிருத்தல் வேண்டும்"[8] என திருநீடூர்த் தலவரலாறு என்னும் நூல் சுட்டுகின்றது.

திதியனுக்கும் அன்னிக்கும் போர் மூண்ட பொழுது எவ்வி அன்னியைத் தடுத்து ஒற்றுமைப் படுத்த முயன்றதையும் (அகம்:126) வாள் வீச்சில் வல்லவனான எவ்வியின் ஏவல்படி பசும்புண் என்னும் அடைமொழி கொண்ட வேந்தனின் பகைவர்கள் நெடுமிடல் என்பவனைக் கொன்றுவிட்டு அருமணவாயில் என்னுமிடத்தில் நண்பர்களுடன் விருந்துண்டு களித்ததையும் (அகம: 266) எவ்வி போரில் மாண்ட பின் பாணர் தாம் ஊதிப் பிழைக்கும் கொம்புகளை நிலத்தில் எறிந்து விட்டதனையும் (அகம்:115) சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது. தமிழர்களின் இன ஒற்றுமையைத் தன் உயிர் துடிப்பாகவும், தமிழரை- தமிழ் வேந்தரை ஒற்றுமைப்படுத்தும் ஆற்றலில் சிறந்து விளங்கும் வேள் எவ்வியை அகுதை சூழ்ச்சியால் கொன்றதனை,

***"விசைகொடு திகிரியை வீசுகின் றனனே !***
***அசைவிலன் எவ்வி அருநிறம் பிளந்ததே !***
***நெஞ்சோ பிளந்தது ? நெறியும் இன்சொலும்***
***அஞ்சலென் றணைக்கும் அருளுமே பிளந்தன"***
***திதியன் வந்திலன் திதியன் வந்ததாப்***
***புதியதோர் சூழ்ச்சி புரிந்தன ராகி***
***எவ்வியைச் சாய்த்தனர்"***

***(அன்னி மகள்:அ-2:க-6:பா-130)***

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இன ஒற்றுமைக்காகப் பாடுபட்ட எவ்வி வீழ்த்தப்பட்டதைக் கண்டு பரணர் புலம்புவதை காண முடிகிறது.

### திதியன்

திதியன் என்ற பெயரில் நக்கீரர் வெள்ளிவீதியார் கயமனார் பரணர் போன்ற புலவர்கள் பல இடங்களில் பாடியுள்ளனர். "அழுந்தைத் திதியனையும் பொதியில் திதியனையும் பரணர் பாடியுள்ளதால் அவையிரண்டும் ஒரே திதியனைக் குறிப்பதாகக் கொள்ள முடியும். அன்னியோடு போரிட்ட திதியனையும், தலையாலங்கானத்துப்பட்ட திதியனையும் பற்றி நக்கீரர் பாடியுள்ளதால் அவ்விரு திதியர்களும் வேறு வேறானவரல்லர் ஒருவனே எனவும் கொள்ளலாம்"[9] என்கிறார் கா.கோவிந்தனார். அழுந்தூர் திதியனைக் கதைத் தலைவனாக கொண்டு தலைவியின் குறிக்கோள் நிறைவேறுமாறு நாடகத்தை அமைத்துள்ளார் ஆசிரியர். கோசரின் விளை நிலத்தில் பசுமேய்ந்த குற்றத்திற்காக ஒன்றுமொழிக் கோசர் என்னும் பிரிவினர்மாடுமேய்த்தவன்கண்ணைத்தோண்டி விட்டனர் கண் தோண்டப்பட்டவனின் மகள் அன்னிமிஞிலி. அவள் அரசன் திதியனிடம் முறையிட்டு கொண்டதனால் திதியன் கோசரைத் தாக்கி அழித்தான் (அகம்:196). பாவலர்மணி தன் நாடகத்தில் அன்னிமிஞிலி சூளுரையை நிறைவேற்றும் திதியனை,

***"..இணைகயல் விழியாய் !***
***நீயே உன்றன் நெடுமொழி முடித்தல்***
***வாயே எனினும் வட்க்கார்த் தொலைத்தலை***
***எம்பால் விடுமதி எரிசினத் தால்நீ***
***உரைத்த வஞ்சினம் ஒன்றுகுறை யாமல்***
***முற்றுறச் செய்குவெம்"***

***(அன்னி மகள்: அ-4:க-3:பா-155)***

என்று புகழ்கிறார்

### அன்னி

அன்னி, நீடூர் தலைவனான எவ்வியின் நண்பன். அன்னியின் பகைவன் திதியன். குறுக்கைப் பறந்தலை என்னும் போர்க்களத்தில் பெரும் புகழுடைய அன்னி என்பான் திதியன் என்பவனது

பரம்பரை காவல் மரமான புன்னை மரத்தை அடியோடு வெட்டினான் (அகம:145) என்ற செய்தி அகநானூற்றில் சுட்டப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் முல்லை நில ஒழுக்கப்படி குறுக்கையில் ஏறு தழுவும் விழாவில் அழுந்தைத் திதியன் அக்காளையை அடக்கி வெற்றி கொள்கிறான். அன்னியோ தம் குடிக்கும் திதியன் குடிக்கும் நெடுநாட் பகையெனக் கூறி தன் மகளை மணமுடிக்க மறுக்கின்றான்.

**"வெங்கண் அழுந்தை வேளிர் குலத்தொடு**
**நங்குலம் உறவினை நண்ணிய தில்லை**
**பழம்பகை பைப்பயனப் பாரித் தெழுந்து**
**குலம்பகை யானதும், கொள்ளலும் கொடுத்தலும்**
**தலைமுறை தலைமுறை தவிர்ந்ததும் அறிவீர்!"**

***(அன்னி மகள்:அ-1:க-4:ப-118)***

என அன்னி குறிப்பிடுவதன் வழி திதியன் மீது கொண்ட பகைமையை அறிய முடிகின்றது.

### அன்னி மிஞிலி

அகநானூற்றில் 262ஆவது பாடல் பசு பயிற்றக் கொல்லையில் மேய்ந்து, கோசகர்களிடம் அப்பசு தன்பசு என்று உண்மையை உரைத்த தன் தந்தையின் கண்களை இரக்கமின்றிப் பிடுங்கித் துன்புறுத்தியதை அறிந்த அன்னி மிஞிலி வீரமிக்க குறும்பியன் மற்றும் போர்த்திறன் கொண்ட குதிரைகள் உடைய திதியனிடம் சொல்லி முறையிட அவன் முது கோசர்களைக் கொன்றொழித்தான் என்பதிலும் அன்னி மிஞிலி பற்றிய செய்தி குறிப்பிடப்படுகின்றது.

"அகம் 262ஆவது பாடலில் உள்ள உண்ணாள், உடாஅள், மாறாள் ஆகிய பெண்பால் வினைமுற்று விகுதியும், கொடுங்குழை அன்னி மிஞிலி (196:111-12) என்னும் அடைத்தொடரும் அன்னி மிஞிலியை பெண்பாலாக உரைகாரர்கள் சுட்டக் காரணமாகும்."[10] இப்பாடலில் சுட்டப் பட்டுள்ள அன்னியின் மகளாகிய மிஞிலியை காப்பியத் தலைவியாக கொண்டு தன் தந்தையின் கண் களைந்த கோசரைப் பழிவாங்க,

**"குலமுறை யீர்! இக் கொள்கை முடியாது**
**கலத்து உண்ணேன் கூறையும் மாற்றேன்**
**பும் புனல் ஆடேன் தேமலர் சூடேன்"**

***(அன்னி மகள்:அ-3:க-4:பா-133-135)***

என்றெல்லாம் கூறும் வீரத்தின் வடிவாய் மிஞிலியைப் படைத்துள்ளார் ஆசிரியர்.

### தொகுப்புரை

வரலாறும் இலக்கியமும் ஒன்றை ஒன்று தழுவிச் செல்வன. ஒன்றன் வளர்ச்சியில் மற்றொன்றின் பங்கு அடங்கியுள்ளது. தமிழக வரலாறு மிகத் தெளிவாகவும் ஆதாரங்களுடனும் முற்றவும் அமைவதற்கு இயலாததாகவே இருக்கின்றது. ஆங்காங்கு இலக்கியங்களில் காணும் சிலபல வரலாற்றுச் செய்திகளை கொண்டே வரலாற்றை காண முடிகின்றது. அவ்வகையில் அகநானூற்றில் 45,115,126,145,196,262,266 முதலான பாடல்களில் காணப்படும் வரலாற்றுச் செய்திகளையும் வரலாற்று மாந்தர்களையும் கொண்டு அன்னி மகள் நாடகம் படைக்கப்பட்டுள்ளது. "பாவலர்மணி ஆ.பழநியின் அன்னி மகள் நாடகத்தில் வரலாற்றுச் செய்திகள்" என்னும் கட்டுரையின் வழி

- வரலாறு என்பது முடிவுடைய வேந்தர்களை மட்டுமின்றி அவர்களின் கீழ் உள்ள குறுநில மன்னர்கள் பற்றியும் மக்களின் வாழ்வியலையும் குறிக்கும் என்பதும்
- கோசர்க்குரிய நாடாக துளுநாட்டை குறிப்பிட்டாலும் அவர்கள் அங்கே நிலைத்து வாழாமல் தமிழகமெங்கும் நாடோடி வாழ்க்கையினை வாழ்ந்ததும்
- தமிழகக் குறுநில மன்னர்களுள் வேள் எவ்வி தமிழர்களையும் தமிழ் வேந்தர்களையும் ஒற்றுமைப்படுத்த எண்ணியதும்
- திதியன் என்ற பெயர் சங்க பாடல்களில் பல இடங்களில் சுட்டப்பட்டாலும் அவையனைத்தும் ஒருவனையே குறிக்கும். இந்நாடக தலைவனான திதியன் அன்னி மிஞிலியின் சூளுரையை நிறைவேற்றக் கூடியவனாக திகழ்வதும்
- அகம் 145-இல் காணப்படுவது போல அன்னி பழம் பகையை எண்ணி மகட்கொடை மறுத்ததும்
- அகம் 262-ஆம் பாடலில் உள்ள அன்னி மிஞிலியை இந்நாடகத் தலைவியாக கொண்டு கோசரை அழிக்கத்துடிக்கும்

வீரமுடையவள் என்பதையும் இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

பாவலர்மணி ஆ.பழநியின் அன்னி மகள் என்னும் செய்யுள் நாடகம் வரலாற்றுச் செய்திகளை மட்டுமின்றிக் கருத்து நயமும் கவி நயமும் மிக் கதாகத் திகழ்கிறது.

**சான்றெண் விளக்கம்**


1. தா. அசோகன், வரலாறு வரைவியல்-ஓர் அறிமுகம், ப.2
2. நர்மதாவின் தமிழ் அகராதி, ப.577
3. தி.இராசகோபாலன், வரலாற்று நாவல்களில் வரலாற்றுச் செய்திகள், ப.133
4. க.ப.அறவாணன், தமிழ் மக்கள் வரலாறு, ப.1
5. கா.கோவிந்தன், தமிழகத்தில் கோசர்கள், ப.53
6. புறம்.169: 8-10
7. செ.மா.கணபதி, சங்க கால மறவர், ப.16
8. சொ. சிங்காரவேலன், திருநிடூர்த் தல வரலாறு, ப.6
9. கா. கோவிந்தனார், தமிழக வரலாறு சங்க காலம்- அரசர்கள், ப.1052
10. த.வசந்தா, சங்க இலக்கியத்தில் மனிதநேயம், ப.108

# பனையடி புதினத்தில் இயற்கை வேளாண்மை

*முனைவர் இரா. நித்யா*
உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
அரசு மகளிர் மற்றும் கலை அறிவியல் கல்லூரி, பரமக்குடி

வாழ்கையில் எத்தகைய முன்னேற்றத்தை நோக்கி நாம் சென்றாலும் நோய் நொடியின்றி வாழக் கூடிய வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகும். இயற்கையை மறந்துவிட்டு செயற்கையை நோக்கி நாம் ஓடிக் கொண்டிருப்பதால் பிணி நம்மை பிடித்துக் கொண்டிருக்கிறது. பிணியிலிருந்து நாம் வெளிவர இயற்கை வேளாண்மையை நோக்கிச் செல்ல வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கின்றோம். கிராமங்களில் வழிவழியாக வந்த இயற்கை வேளாண்மை நிலை காலப் போக்கில் செயற்கை உரங்களைப் பயன்படுத்தும் நிலையாக பரவிவருவதை “பனையடி” புதினம் உணர்த்துகிறது. இந்திய ஆட்சிப் பணியாளரான இரா. செல்வம் பனையடி புதினத்தை எழுதியவர். இவர் பெரிய பதவிகள் வகித்தாலும் தான் வாழ்ந்து வந்த தனது குடும்ப சுழ்நிலைகளைக் கடந்து வந்த பாதைகளை எடுத்துரைக்கும் தன்னுடைய கதையாக பனையடி புதினம் இடம்பெற்று உள்ளது. இவர் விவசாயக் குடும்பத்தில் பிறந்ததாலும் வேளாண்மைத் துறையை எடுத்துப் படித்ததாலும் இயற்கை வேளாண்மை பற்றிய தாக்கம் எதார்த்தமாகவே இவரது புதினத்தில் இடம்பெறுகின்றன. எனவே பனையடி புதினத்தில் இடம்பெறும் இயற்கை வேளாண்மை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## இயற்கை வேளாண்மை

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. வேளாண்மை என்னும் சொல்லுக்குக் கொடை, உபகாரம், பயிர்த்தொழில், உண்மை எனப் பொருள் கூறுகிறது லிப்கோ தமிழ் - தமிழ் - ஆங்கிலப் பேரகராதி *(ப.964)*. இயற்கை வேளாண்மை என்பது ஒட்டு மொத்தமாக, விதைத்தது முதல் அறுவடை வரைக்கும் வேதிக் கலப்பே இல்லாத நிலை ஆகும். விதைகளைக் கடையில் வாங்காது வீட்டிலேயே உடைத்து விதைக் கடலையைச் சேமிக்கின்றனர். பக்கத்து வீட்டு குழந்தைகளையும் மற்றவர்களையும் அழைத்து கடலையை உடைத்து வைக்கின்றனர். உடைப்பவர்களுக்குக் கூலியும், விதைக்குப் பயன்படாத கடலையும் கூலியாக கொடுக்கின்றனர் என கடலை விதை நடவு குறித்து பனையடி புதினம் குறிப்பிடுவதும் இயற்கை வேளாண்மையில் ஒரு பகுதியாகும். எனவே பனையடியில் இயற்கை வேளாண்மையை நோக்கி விவசாயம் செய்தாலும் செயற்கை உரத்தையும் பயன்படுத்தினர் என்பதனை “இந்த வருஷம் வெதக் கல்லையை நாலாயிரத்துக்கு வாங்கினேன். சொசைட்டிக்காரப் பயலுட்ட பொண்டாட்டி நகையும் அடகுவச்சிட்டன். அவங்கிட்ட ஒரு மூட்ட யுரியாவும் டிஏபியும் வாங்கிப் போட்டேன். இதுக்கெல்லாம் ஒங்கப்பனா பணம் தரப் போறான்”[1] என்ற நடுப்புள்ளையின் கூற்றின் மூலம் அறிய முடிகின்றது.

## நீரின் முக்கியத்தும்

வேளாண்மைக்கு நீர் அடிப்படை ஆதாரம் ஆகின்றது. பண்டைத் தமிழர் உழவுத் தொழிலுக்கு குறைவில்லா நீர் வளம் தேவை என்பதை உணர்ந்து இருந்தனர். நீர் இல்லாமல் உலகமே இல்லை. அதாவது எவ்வகை மேம்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலகியல்

வாழ்வு நடைபெறாது என்பதால் அந்நீர் இடையறாமல் கிடைக்கும் தன்மை, மழை இல்லாமல் உண்டாகாது. இதனை

**"நீர்இன்றி அமையாது உலகெனின் யார்யாருக்கு**
**வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள்-20)**

என வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். விவசாயத்தில் பருவம் கடந்து கிடைக்கின்ற நீர் அளவிற்கு அதிகமானால் அதுவும் நமக்குப் பயன் அளிக்காது.

பக்கத்து நிலத்து மண்ணெல்லாம் வரதன் நிலத்தில் ஏகத்துக்கும் கிடந்தது. "இந்த மானம் நம்பள வாழவும் வுடாது சாவவும் வுடாது" திட்டிக்கொண்டே வரதன் வரப்பில் மண்ணை வெட்டிப்போட்டுக் கட்டினார். வரதன் கொல்லைத் தண்ணீர் தன் நிலத்துக்குள் வராதபடி அணையைத் தூக்கிப் போட்டு நிறுத்தினார் முனிசாமி"[2] என ஆசிரியர் விவசாயின் மனவேதனையைப் புலம்பலாக வெளிப்படுத்துகின்றார்.

## தொழு உரம்

வீட்டுத் தொழுக்களில் வளர்க்கப்படக்கூடிய ஆநிரைகளின் கழிவுப் பொருட்கள் மற்றும் அதற்கு உணவாக வழங்கப்பட்டு மீந்துபோன வைக்கோல், இலை, தழைகளை குப்பைக் கிடங்குகளில் சேமிப்பர். வருடம் ஒருமுறை அவற்றை நிலங்களில் உரமாக இடுவர். இதனைத் தொழு உரம் என்பர். "பனையடியில் எரு அடிக்கும் வேலை கோடையில் நடக்கும். காலையில் எரு அடித்தனர்' மூவரும்"[3] என்று தமிழ், சின்னப்பயல், சண்முகம் மூவரும் சேர்ந்து வண்டியில் எடுத்து வந்து கொல்லையில் கொட்டுகின்றனர். கொல்லையில் போட்ட சரக்கு, உரம், எரு, உழைப்பு எல்லாம் மண்ணுடன் வெள்ளத்தில் மறுநாள் அடித்துச் சென்றது என்றாலும் இயற்கை உரம் பயன்படுத்தும் முறை மாறாமல் "பனையடி" கிராமம் இருந்ததை அறியலாம்.

## நிலம் காக்கும் பனை

நமக்கும் பனைமரத்திற்குமான தொடர்பு ஆதி காலம் தொட்டே தொடர்ந்து வருகின்றது. சென்ற தலைமுறைவரை நம் முன்னோர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து நிகழ்வுகளிலும் பனை மரத்தினால் கிடைக்கும் பொருட்களின் பயன்பாடு நீக்கமற நிறைந்து வந்தது என்பதனை,

**"நடுவுருள் வேதிகை சுற்றுக்கோள் புக்க**
**படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்**
**குடி கொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கர்**
**இடுகாட்டுள் ஏற்றைப் பனை"[4]**

- நாலடியார் பாடல் கூறுகிறது.

தமிழ்நாடு முழுவதும் பரவலாகவே பனைமரங்கள் பரவி காணப்பட்டன. தமிழகத்தின் மாநில மரம் பனை. பல கோடியைத் தாண்டி உயர்ந்து நின்ற பனைமரங்கள் இன்று சில கோடி பனை மரங்களாக இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நம் முன்னோர்கள் பனைமர ஓலையைப் பதப்படுத்தி ஓலைச் சுவடிகளாக்கியுள்ளனர். பனையினால் மடலேறுதல் என்பது சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்தி ஆகும். இம்மரத்தின் அனைத்தப் பகுதிகளும் மனிதனின் உணவு, உறைவிடமாகி உதவும் பொருட்களாகும், பதநீர், கள், நொங்கு, பழம், கிழங்கு, குருத்து, பனவெல்லம் அனைத்தும் பனையிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களாகும். பனையின் ஓலையும், மரப்பலகையும் கூரை வேயவும், வீடு கட்டவும் பயன்படும் பொருட்களாகும். இவ்வாறு பனையின் அனைத்துப் பாகங்களும் பயன்படுவதால் இதனைக் கற்பகத் தருவிற்கு ஒப்பிட்டுக் கூறுவர்.

அய்யப்ப நாயக்கன்பேட்டை கிராமத்தில் ஒற்றை பனைமரம் பல கதைகளைச் சொல்லி நிற்கிறது என்கிறார் படைப்பாசிரியர். அந்த அளவிற்குப் பனை மரங்கள் கிராமத்தின் மக்களது வாழ்க்கைச் சுழலில் கலந்ததாகக் காணப்படுகின்றது. "அந்த ஒற்றைப் பனையானது வருடத்திற்குப் பத்துப் பன்னிரண்டு குலை தள்ளும். பனங் காய்கள் முத்தாக இருக்கும். மூன்று கண்ணுள்ள காய்களே அதிகம் ஒன்று இரண்டு கண்ணுள்ள பனங்காயில் கட்டை விரலை ஒருபக்கமாகி விட்டு நுங்கை வைத்து

நோண்ட வேண்டும். வயிற்றின் கொள்ளவை நுங்கு சாப்பிட்டுத் தீர்மானிக்க முடியாது. இளம் நுங்காக இருந்தால் சொல்லவே தேவையில்லை. அது பாட்டுக்கு உள்ளே போய்க் கொண்டே இருக்கும்''[5] என மக்களின் வயிற்றை நிரப்பக் கூடிய இயற்கை உணவாக இருந்துள்ளதை பனையடி மூலம் அறியமுடிகின்றது.

மழை, புயல், வெள்ளம், காற்று என இயற்கைச் சீற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மனித சமுதாயம் அல்லாடிக் கொண்டிருக்கிறது. ''பெருமழைக் காலங்களில் வாய்க்கால் வரப்பு உடைப்பு எடுக்காமல் நிலத்தைப் பாதுகாப்பது பனைமரம். நிறைய வேர்களை விட்டு, மண்ணையும் தண்ணீரையும் காத்து நிற்கும் குலசாமி''[6] என்கிறார். எனவே பனைமரம் சிறந்த காற்று தடுப்பானாகவும், நீர் மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மை கொண்டதாகவும், இயற்கை வேளாண்மைக்கு முதன்மையானதாகவும் உள்ளது என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை.

கிடை போடுதல்

ஆடு மேய்க்கும் தொழிலுக்கு ஏற்றகாலம் கோடைக் காலம். கோடைக் காலத்தில் தான் நெல் எல்லாம் அறுவடையாகி நிலம் தரிசாகக் கிடக்கும் காலமாகும். அக்காலம் தான் கிடைபோட ஏதுவாக அமையும். ஆடுகளை மேய்ப்பவர்கள் ஆநிரைகளை மட்டுமே நம்பி இருப்பதால் கிடை போடுவதன் மூலம் வருமானம் பெறுவார்கள்.

''நடுப்புள்ளையும் வன்னிமரத்துக் கொல்லைக்குள் கிடை கட்டச் சொல்வார். நடுப்புள்ளையின் கொல்லையில் கிடை கட்டுவதில் ரவிக் கோனாருக்குப் பெருமை. விளச்சல் அதிகரிக்கும் போதெல்லாம் அவர் கிடை கட்டியதுதான் காரணம் எனப் பெருமை கொள்வார். கிடை கட்டுவதில் ஆடுகளும், மாடுகளும் நிலங்களில் புழுக்கை, சாணம் போடும், மூத்திரம்விடும்'', இயற்கை வேளாண்மை கலியன்சம்பா உயர்ந்து நிற்கும். ரவிக் கோனாரும் நடுபுள்ளையும் மகிழ்ச்சியடைவார்கள்''[7] என இயற்கை வேளாண்மையில் கிடை போடுதல் முறையும் ஒரு பகுதியாக உள்ளது. கிடை போட்டதின் பலனாக நடுப்புள்ளை தங்களிடம் விளைச்சல் அதிகரித்ததனால் கிடை போட்டவர்க்கு இருநூறு, முந்நூறு பணம் கொடுத்ததோடு விளைச்சல் அதிகரித்தபொழுது மூன்று, நான்கு மூட்டை நெல்லும் தந்துள்ளார். எனவே இயற்கை வேளாண்மையால் வேலைக்கேற்ற ஊதியமாக பணத்தோடு, மூடை நெல்லும் பெறுகின்ற நிலையினைக் காணமுடிகிறது.

**மரங்கள்**

மா, பலா, வாழை என முக்கனிகளில் முதன்மையாகத் திகழ்வது மாமரம். அய்யப்ப நாயக்கன் பேட்டை கிராமத்தில் மாமரங்களும் உயர்ந்து ஆங்காங்கே நின்றன. ஒரு மரக்கன்றை நட்டு, அதனை வளர்த்து அதனால் கிடைக்கக் கூடிய இலை, பூ, காய், கனி என ஒவ்வொன்றும் மனிதர்களுக்கு பலவிதங்களில் நன்மையை அளிக்கின்றது. ஆனால் ஆராய்ந்து பார்த்தால் உயர்திணையாகிய மனிதன் பயன் அடைவதோடு பல அஃறினை உயிர்கள் பயன் அடைகின்றன என்பதனை பனையடி புதினம் காட்டுகின்றது.

''இருள் சுழ்ந்த வானம் கருமேகங்கள் இரண்டு மணிக்கே பொழுது சாய்ந்தது போல் இருந்து. தும்பிகள் தாழப் பறந்தன. பனை மரத்தில் இருந்த தூக்கனாங் சிட்டுக் கூடுகள் ஊஞ்சலளாய் ஆடின. சிட்டுகள் வெளியே வரவும் உள்ளே போகவுமாய் ஆட்டம் காட்டின. திடுமெனப் பேய்பிடித்தது போல் மாமரம் ஆடியது. மரத்தில் பறிக்காது இருந்த ஒன்றிரண்டு மாங்காய்களைக் கிளிகள் கொத்தித் தின்றுவிட்டு மேலே பறந்தன. சிலது மீண்டும் மாமரத்தில் வந்தமர்ந்தன. காற்றின் வேகம் அதிகரித்தது. கிளைகள் அமைதியை நாடின. காற்று விடவில்லை. திசைமாறி கிழக்கு மேற்காகக் காக்கைகள் பறந்து திரிந்தன. இதுகாறும் புழுக்களைப் பொறுக்கித் தின்ற மைனாக்களுக்கு ஒன்றும் புரியவில்லை''[8]. இதில் கிளிகள், காக்கைகள், மைனாக்கள் எனப் பல பறவைகள் தங்களது

வாழ்வாதாரத்தைத் தேடியது. அதாவது இயற்றை வேளாண்மையினால் கிடைக்கப் பெற்ற உணவுகளையே பறவை இனங்களும் விரும்புகின்றன என உணர்த்துகின்றது.

## முடிவுரை

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''** *(குறள்-1033)*

உழுதுண்டு வாழ்பவரே வாழ்பவராவர் ஏனைய தொழில்களைச் செய்பவர் அவரை வணங்கி அவர்களின் பின்னால் செல்பவரேயாவர் என வள்ளுவர் கூற்றுகிணங்க பனையடி புதினம் உழவுத் தொழிலை அடித்தளமாக்குகின்றது. கதை ஆசிரியரின் வாழ்க்கை அனுபவத்தை எடுத்துரைத்த விதமே அவர் இயற்கை வேளாண்மையின்மீது கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகின்றது. இந்திய ஆட்சிப்பணியில் மிக உயர்ந்த பதவியில் இருந்தாலும் தான் பிறந்த ஊருக்குச் சென்றால் இன்றும் ஏர்பிடித்து உழும் ஆர்வத்தைப் பின்பற்றுகின்றார். நோயற்ற வாழ்க்கைக்கு உழவுத் தொழிலே சிறந்தது. அதிலும் இயற்கை வேளாண்மையே முதன்மையானதாகும். எனவே மண்ணுலகத்தில் மானுடம் சிறக்க வேண்டுமெனில் மண்ணில் செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கையான முறையிலே வேளாண்மை செய்து நோயற்ற வாழ்க்கை வாழ்வோமாக!

## அடிக்குறிப்பு

1. செல்வம். இரா. பனையடி ப.23
2. மேலது ப.22
3. மேலது ப.49
4. நாலடியார் ப. 87
5. செல்வம். இரா. பனையடி ப.16
6. மேலது ப.17
7. மேலது ப.49
8. மேலது பக்.11,13

# வள்ளுவரின் எண்ணும் எழுத்தும்

*முனைவர் பா. நேருஜி*
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

சமுதாயத்தின் வளர்ச்சிக்குக் கல்வியே அடிப்படையாக அமைவதாகும். கல்வியில் சிறந்து விளங்குகிற நாடே வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிக்கிறது. இவ்வகையில் தமிழர்களின் கல்வி அறிவு சங்ககாலம் தொட்டே சிறந்து விளங்கிவருகின்றது. நீதிநூல் காலத்தில் வள்ளுவர்கல்வி என்பதை எண்ணும் எழுத்தும் என்பதில் அடக்கிவிடுகிறார். மன்னனும் மக்களும் கல்வி அறிவில் சிறந்து விளங்கினால் மட்டுமேநாடுசிறப்புபெற்றுவிளங்கும்என்பதை உணர்த்தவே வள்ளுவர்பொருட்பாலில் ''இறைமாட்சி'' என்னும் அதிகாரத்தைத் தொடர்ந்து ''கல்வி, கல்லாமை, கேள்வி'' என்னும் மூன்று அதிகாரங்களை அமைத்துள்ளார்.

## கல்வியின் சிறப்பு

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய செயல்களுள் ஒன்று உண்டு எனில் அது கல்வி கற்பதே. இளமை முதல் இறுதிக்காலம் வரை ஒருவன் தொடர்ந்து கற்றாலும் எல்லாவற்றையும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. இதை உணர்த்தும் விதமாகவே மக்களிடையே ''கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு'', ''கல்விக் கரையில கற்பவர்நாள் சில'' என்னும் தொடர்கள் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கல்லுதல் என்ற சொல்லின் பொருள் தோண்டுதல் என்பதே. சாதாரண நிலத்தை பண்பட்ட விளைநிலமாகக் கிளறி மாற்றுவதற்குக் கலப்பை பயன்படுவது போல கல்வி மனதைக் கிளறி பண்படுத்துகிறது.

## கற்க வேண்டிய முறை

ஒருவன் தான் கற்கும் நூல்களைக் குற்றமற முழுமையாகக் கற்று உணர வேண்டும். பின் கற்ற கல்வியைத் தன் வாழ்வில் செயல்பாட்டில் பின்பற்றி வைத்திருக்க வேண்டும். அப்போது தான் கற்ற கல்வியின் பயனைப் பெற முடியும். இதனை திருவள்ளுவர்கல்வி அதிகாரத்தில்,

**''கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக''** ***(குறள் 391)***

என்கிறார். கல்வியின் பயன் கற்றலோடு அதன் படி நிற்றல் என்பதை ராமகிருஷ்ண பரமஹம்சரும் ''பஞ்சாங்கத்தில் மழை எப்போது வரும் என்று போட்டிருக்கும். ஆனால் பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வராது. பின்பற்றப்படாத வெறும் தகவலறிவு, மனிதர்களிடையே எந்த வளர்ச்சியையும் ஏற்படுத்தாது. அத்தகைய ஏட்டுக் கல்வி வீண்'' என்று கூறுகிறார். இங்கு திருவள்ளுவர்இந்த வகையான நூல்களைத்தான் கற்று உணர வேண்டும் என்று குறிப்பிடவில்லை. எவ்வகை நூலைக் கற்றாலும் குற்றமற கற்றுத் தெளிந்து அதன் படி வாழ்வில் செயல்பட வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்தாக அமைகிறது.

## எண்ணும் எழுத்தும்

எண் கணிதமும், எழுத்து வடிவில் அமைந்த இலக்கிய இலக்கணங்களும் ஆகிய இவை இரண்டும்தான் மனிதன் நல்லறிவு அடைவதற்கு வழிகாட்டும் என்பதை,

**''எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு''** ***(குறள் 392)***

என்ற குறள் புலப்படுத்துகிறது. இக்குறளில் வள்ளுவர்எண்ணின்முக்கியத்துவத்தையும்அதை உறுப்பாகக் கொண்டு அமையும் கணிதத்தின் முக்கியத்துவத்தையும் முதன்மையாகக் குறிப்பிடுகிறார். ஏனை எழுத்தென்ப என்று கூறுவதன் வழி இச்சொல் முதன்மை இடத்தை

இழந்து விடுகிறது. ‘‘கணிதம் அறிவியல் கலையின் அரசி’’ என்று குறிப்பிடப்படுகிறது. உலகில் அறிவியல் ஆய்வு என்று ஒன்றை வகுத்துக்கொடுத்த கலிலியோ இயற்கை என்னும் நூல் கணிதம் என்னும் பெரிய குறியீடு மூலம் எழுதப்பட்டு இருக்கிறது என்று கூறுகிறார்’’ என்று வாழும் வள்ளுவம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இதன்வழி உலகின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமைவது கணிதம் என்பதை உணர்த்தும் வகையில் வள்ளுவர்தனது குறளில் முதலில் எண்ணையும் பின் இலக்கிய இலக்கண வகைகளைக் குறிக்கும் எழுத்தையும் குறிப்பிடுகிறார்.

**கண்ணுடையார் கற்றோர்**

எண்ணும் எழுத்துமே கண்கள் என்பதால் கற்று அறிந்த சான்றோர்கள் மட்டுமே கண்ணுடையவர்கள் என்றும் மற்றவர்களுக்கு முகத்தில் இருக்கும் கண்கள் இரண்டும் புண்களே என்றும் குறிப்பிடுகிறார். இதனை,

***‘‘கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு***
***புண்ணுடையர்கல்லா தவர்’’ (குறள் 393)***

என்ற குறள் விளக்குகிறது. இக்குறளில் கல்வி அறிவு இல்லாதவர்கள் மேல் வள்ளுவர்கொண்ட கோபம் புலப்படுகிறது. கல்வியை அனைவரும் பெற வேண்டும் என்பதே வள்ளுவரின் விருப்பமாகவும் அமைந்துள்ளது. அதனால்தான் வளரும் நாடுகளிலும் வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் கல்வி இலவசமாக அரசால் வழங்கப்படுவதைக் காணமுடிகிறது.

**கற்றவர்களின் இயல்பு**

கல்வி அறிவுடைய மக்கள் எப்போதும் மகிழும்படி மற்றவர்களுடன் கூடியே வாழ்வர். இவர்கள் எப்போதும் பிறருக்குக் கேடில்லாத நல்ல கருத்துக்களையே எடுத்துக் கூறுவர். இவர்கள் கூறும் கருத்து எப்போதும் நினைத்துப் பார்க்கும் வண்ணம் அமைந்திருக்கும் என்பதை,

***‘‘உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்***
***கடையரே கல்லா தவர்’’ (குறள் 394)***

என்ற குறள் வழி வள்ளுவர்குறிப்பிடுகிறார். கற்றலும் கற்பித்தலும் ஒருங்கே இருக்கும் இடம் எப்பொழுது நினைவிற்கு வரினும் அது சுவையையே கொடுக்கும்.

**ஆசிரியர்முன் நடந்துகொள்ளும் முறை**

செல்வந்தன் முன்பு வறியவன் இரப்பது போல கல்விக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்முன் பணிவுடன் நிற்க வேண்டும். அவ்வாறு பணிவுடன் நின்று கற்றவர்களே உயர்ந்தவர்கள் அவ்வாறு கல்லாதவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதை,

***‘‘உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்***
***கடையரே கல்லா தவர்’’ (குறள் 395)***

என்ற குறள் புலப்படுத்துகிறது. ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியனின் புறநானூற்றுப் பாடல் ஒன்று கல்வியின் மேன்மையைக் கூறுவதோடு எவ்வாறு கல்வி கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை,

***‘‘உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்***
***பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே’’***
***(புறம் 183)***

என்று குறிப்பிடுகிறது. மாணவர்கள் கற்பிக்கும் ஆசிரியருக்குத் தேவைப்படும் போது வேண்டிய உதவிகள் செய்தும், வேண்டும் பொருள்களைத் தந்தும், கற்றுச் சிறப்புற்று வாழும் பின்நாளில் இப்படி இருந்த நிலைகளை எண்ணி வருந்தாமலும் வெறுப்படையாமலும் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் இப்பாடல் ஆசிரியர். கற்றுக் கொடுக்கும் ஆசிரியரை எக்காலத்திலும் மறவாமல் இருக்க வேண்டும்.

**கல்வி என்னும் ஊற்று**

தான் இன்புறும் கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் அக்கல்வியையே பெரிதும் விரும்புவர் என்பதை,

***‘‘தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு***
***காமுறுவர்கற்றறிந் தார்’’ (குறள் 399)***

என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். கற்றுக் கொள்ளுதல் தொடக்கத்தில் கசப்புடையதா இருந்தாலும் பிற்காலத்தில் அது நம் வாழ்வை இனிமையாக்கும். எனவே கற்றுக்கொள்ளும் போதும் மகிழ்ச்சியுடன் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக் கொடுக்கும் போதும் மகிழ்ச்சியுடன் கற்றுக்கொடுப்பின் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருப்பர்.

கற்றவர்களுக்கு இவ்வளவு படித்தால் போதும் என்ற கணக்கில்லை. எவ்வளவு தூரம் மணற்கேணியைத் தோண்டுகிறோமோ அந்த அளவுக்கு நீர் ஊறுவதைப் போல் எவ்வளவு கல்வி கற்கிறோமோ

அந்த அளவிற்கு அறிவு பெருகும். இதனை,

**''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு''*(குறள் 396)***

என்ற குறள் வழி அறியமுடிகிறது. இவ்வாறு கற்றறிந்தவர்களால் சிறப்பிக்கப்படும் கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாத ஒன்று. கொடுத்தாலும் குறையாது, தீயினால் அழியாது, வெள்ளத்தால் அழியாது, யாவராலும் திருட முடியாது, எடுத்தாலும் குறையாது. ஒருவன் நாள் தோறும் தான் கற்றுக் கொள்ளும் அளவை அதிகப்படுத்துவதோடு கற்றலை ஒருபோதும் தம் வாழ்நாளில் நிறுத்தவே கூடாது.

## கற்றோருக்கு சிறப்பு

கற்றல் என்பது சிறப்பான செயல். எவ்வளவு படித்தாலும் எத்தனை மொழிகளைக் கற்றுக் கொண்டாலும்சிறப்புடையதே.கற்றவர்கள்எந்த நாட்டிற்குச் சென்றாலும் அது அவர்கள் சொந்த நாடாகும். பல மொழியிலும் உள்ள நல்ல நூல்களைக் கற்றுக் கொள்பவன் என்றும் எங்கும் போற்றப்படுவான். இதனை,

**''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு'' *(குறள் 397)***

என்ற குறள் புலப்படுத்துகிறது.

கல்வியில் விருபம் கொண்டால் அதனால் உண்டாகும் நன்மைகள் பலவாகும். ஒரு பிறவியில் ஒருவன் தான் கற்ற கல்வி அவனுக்கு ஏழு பிறப்பிலும் துணைநிற்கும் என்கிறார் வள்ளுவர் இதனை,

**''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து'' *(குறள் 398)***

என்ற குறள் வழி குறிப்பிடுகிறார். இதே கருத்தை நாலடியார்,

**''இம்மை பயக்குமால் ஈயக்குறை வின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்**
**மம்மர்அறுக்கும் மருந்து''**

***(நாலடியார் 132)***

என்ற பாடலில் கல்வியானது இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக வருவது, பிறருக்குக் கற்றுக் கொடுத்தாலும் குறைவடைவதில்லை, மயக்கத்தைப் போக்கும் அருமையான மருந்து. தேவர்உலகத்திலும் காணக்கிடைக்காத அரிய மருந்து கல்வி ஒன்றே என்பது சமணமுனிவர்களின் கருத்தாகும். கற்றலின் சிறப்பினைக் கூற வந்த ஔவையார் கற்றோரை மன்னனுடன் ஒப்பிடுகிறார்,

**''மன்னனும் மாசறக் கற்றோனை சீர் தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் மன்னனுக்குத்**
**தன்தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு''**

***(மூதுரை 26)***

இவ்வாறு மன்னரையும் கற்றோரையும் ஒப்பிடும் போது மன்னருக்கு அவன் ஆளும் தன் தேசத்தில் மட்டும்தான் சிறப்பு. கற்றோருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்று ஔவையார் கற்றோரின் பெருமையைப் பேசுகிறார். எனவேதான் ''கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்கிற வழக்கு காணப்படுகிறது. இவ்வுலகில் வாழும் அனைவரும் பிறப்பு முதல் இறப்பு வரை பலவகையான செய்திகளை அறிந்து கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் பிறப்பு முடிந்து மறுபிறப்பிற்குச்செல்லும் போதும் அணிகலனாக விளங்குவதாகக் கல்வி அறிவு விளங்குகின்றது என்பதை,

**''மறுமைக் கணிகலம் கல்வி இம்மூன்று**
**குறியுடையார் கண்ணே யுள''**

***(திரிகடுகம் 52)***

என்று நல்லாதனார் கூறுகிறார். நல்ல புத்தகங்கள்தான் அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல். இனிப்பு இருக்கும் இடத்தை நாடிச் செல்லும் எறும்புகளைப் போல, தேனிருக்கும் இடத்தை நாடிச் செல்லும் வண்டுகளைப் போல நல்ல நூல்கள் இருக்கும் இடத்தை நாடி கற்றல் ஆர்வம் உடையவர்செல்வர்.

## அழியாச் செல்வம்

''இளமையில் கல்'' என்பதை ஒருவன் உணர்ந்திருக்க வேண்டும். கல்விதான் ஒருவனுக்கு அறியாமை என்னும் இருளினைப் போக்கி வாழ்க்கைக்கு வழி காட்டுகிறது. கல்வி ஒன்றே அழியாச் செல்வம் ஏனைய பொன், மணி போன்ற செல்வங்கள் அழியக்கூடியவை என்பதை,

***“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு***
***மாடுஅல்ல மற்றை யவை” (குறள் 400)***

*என்ற குறளின் வழி அறிய முடிகின்றது. கல்வியின் சிறப்பை நாலடியாரும், சிறுபஞ்சமூலமும்*

***“குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்***
***மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து***
***நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்***
***கல்வி அழகே அழகு”***

***(நாலடியார் 131)***

***“மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்***
***உகிர்வனப்பும் காதின் வனப்பும் செயிர்தீர்ந்த***
***பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த***
***சொல்லின் வனப்பே வனப்பு”***

***(சிறுபஞ்சமூலம் 74)***

*என்று குறிப்பிடுகின்றன. எல்லா அழகை விடவும் சிறந்த அழகு கல்வி அழகே ஆகும். மற்ற அழகுகள் கால மாற்றங்களால் அழிந்து விடும், கல்வி மட்டுமே எக்காலத்தும் அழியாத அழகாக நிலைபெற்று இருக்கும் என்று கூறப்படுகின்றது.*

***கல்லாதோர் நிலை***

*கற்றோர் உள்ள சபையில் கல்லாதவர்கள் பேசுவது சூதாடும் அரங்கம் அமைக்காமல் வட்டுக்காய் உருட்டுவதைப் போன்றதாகும் என்பதை,*

***“அரங்குஇன்றி வட்டுஆடி யற்றே நிரம்பிய***
***நூல்இன்றிக் கோட்டி கொளல்” (குறள் 401)***

*என்ற குறள் புலப்படுத்துகிறது. மேலும் கற்றவர் அவையில் கல்லாதவர்பேசுவது முலை இல்லாதவள் பெண்மையை விரும்பினார் போன்றது என்பதனை,*

***“கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்***
***இல்லாதாள் பெண்காமுற் றற்று” (குறள் 402)***

*என்கிறது குறள். மேலும் குறளில் கல்லாதவர்கள் கற்றறிந்த அறிஞர்களுடன் கல்லாதவர்கள் வாய்திறவாமல் இருந்தால் அவர்கள் நல்லவர்களாகக் கருதப்படுவர்என்பதை,*

***“கல்லாதவரும் நனிநல்லார் கற்றார் முன்***
***சொல்லாது இருக்கப் பெறின்” (குறள் 403)***

*என்ற குறள் புலப்படுத்துகிறது.*

*கல்லாதவர்களின் சொல்லை கற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை,*

***“கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்***
***கொள்ளார் அறிவுடை யார்” (குறள் 404)***

*என்ற குறள் உணர்த்துகிறது.*

*கல்லாதவன் தன்னை அறிஞன் என்று கருதி கற்றோரிடையே பேசினால் அது கெட்டுவிடும் என்பதை,*

***“கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து***
***சொல்லாடச் சோர்வு படும்” (குறள் 405)***

*என்ற குறள் உணர்த்துகிறது.*

*கல்லாதவர்உயிரோடு இருக்கின்றனர்என்று சொல்லும் அளவினரே மேலும் அவர்கள் களர்நிலம் போன்று யாருக்கும் பயன்படாதவர்கள் என்பதை,*

***“உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்***
***களர்அனையர்கல்லா தவர்” (குறள் 406)***

*என்ற குறள் புலப்படுத்துகிறது.*

*எதனையும் ஆராய்ந்து அறியும் அறிவில்லாதான் அழகு மண்ணால் புனையப்பட்்ட பொம்மை போன்றது என்பதை,*

***“நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்***
***மண்மாண் புனைபாவை யற்று” (குறள் 407)***

*என்ற குறள் புலப்படுத்துகிறது.*

*கல்லாதவர்களின் செல்வம் கற்றோரின் வறுமையை விட மிக்க துன்பம் தரக்கூடியது என்பதை,*

***“நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே***
***கல்லார்கண் பட்ட திரு” (குறள் 408)***

*என்கிறது குறள். கல்லாமை என்னும் அதிகாரத்தில் கல்வி கற்காமல் இருக்கும் மனிதர்கள் மீது தன் கோபத்தை வெளிப்படுத்துகிறார் திருவள்ளுவர். அவர்களை சூதாடுபவர்கள், முலை இல்லாத பெண்கள் பெண்மையை விரும்பியது போல, அவர்கள் களர்நிலம் போன்றவர்கள், மண் பொம்மைக்கு ஒப்பாவர், கற்றோர் முன்னிலையில் கல்வி அறிவு இல்லாதவன் சொல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது, கல்வி அறிவு இல்லாதவரிடம் இருக்கும் செல்வம் என்பது துன்பம் தரும் என்று கடுமையாக சாடுகிறார் திருவள்ளுவர்.*

**தலைமுறை செழிக்கும்**

ஒரு குடும்பத்தில் ஒருவன் கல்வி கற்றால் அவன் குடும்பமும் தலைமுறையும் சிறப்புற்று விளங்கும். ஒருவன் கீழ் குலத்தில் பிறப்பினும் அவன் கல்வி கற்பானாகின் அவன் மேற்குடியை சேர்ந்தவனே என்கிறார் திருவள்ளுவர்இதனை,

***''மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்***
***கற்றார் அனைத்திலர்பாடு'' (குறள் 409)***

என்ற குறள் புலப்படுத்துகிறது. பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை. கல்வி கற்றல் ஒன்றே ஒருவனின் உயர்வை நிர்ணயிக்கிறது. இதனை,

***''தோணி இயக்குவான் தொல்லை வருணத்து***
***காணிற் கடைப்பட்டான் என்றிகழார் காணாய்***
***அவன்துணையா ஆறு போயற்றே நூல்கற்ற***
***மகன்துணையா நல்ல நூல்''***

***(நாலடியார்.136)***

என்ற பாடல் உணர்த்துகிறது. தாய் தான் பெற்ற பிள்ளைகளுள் கல்வி கற்று சிறந்து விளங்கும் ஒருவனையே விரும்புவாள். மன்னனும் பலர் இருப்பினும் கல்வி கற்றவனையே பெரிதும் விரும்புவான். நால் வருணத்துள் கீழ் நிலையில் உள்ள ஒருவன் கற்றால் அவனே மற்றவர்களை விட உயர்ந்தவன் என்ற கருத்தை,

***''பிறப்பு ஓர் அன்ன உடனவயிற்று உள்ளும்***
***சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்***
***ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்***
***மூத்தோன் வருக என்னாது அவருள்***
***அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்***
***வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்***
***கீழ்பால் ஒருவன் கற்பின்***
***மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே''***

***(புறம்.183)***

என்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பாடல் வழி அறியமுடிகிறது. உலகில் பல தலைவர்களின் வாழ்க்கையானது கல்வியால் உயர்ந்ததை அறியமுடிகிறது. இன்றும் அரசு அனைவருக்கும் கட்டாயக் கல்வியை, சமச்சீர் கல்வி என்ற முறையில்கல்விவழங்கிவருகிறது.சமச்சீர்`கல்விக் கொள்கை கட்டாயமாக்கப்படும் பொழுது வேற்றுமைகள் களையப்படும் என்ற சிறந்த நோக்கத்தைக் கொண்டு அரசு செயல்பட்டு வருகிறது.

**கற்றோர் செய்ய வேண்டியவை**

கற்றவர்கள் தான் கற்ற நூலை பிறருக்குப் புரியும்படி எடுத்துரைக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். அத்திறன் இல்லாதவர்மணம் இல்லாத புவைப் போன்றவர்ஆவர்என்பதை,

***''இணரூழ்த்தும் நாறாமலர்அனையர்கற்றது***
***உணர விரித்துரை தார்'' (குறள்.650)***

என்கிறது திருக்குறள். கல்வி பெறுவதன் பயன் தான் கற்ற ஒன்றை பிறர்அறியும்படி செய்வதே ஆகும். அவ்வாறு கற்றுக் கொடுக்கும் போது சோர்வு ஏற்படாமல் கேட்பவர்புரிந்து உணரும் வகையில் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**நிறைவுரை**

திருவள்ளுவர்பெண்கல்வி பற்றி தனியே குறிப்பிடவில்லை.அவரதுகாலத்தில்பெண்கல்வி என்பது இயல்பான ஒன்றாக இருந்திருக்கலாம். திருவள்ளுவர்கல்வியை அனைவரும் பெற வேண்டும் என்று கூறுவதில் இருந்து பெண்களும் அதில் அடங்குவர்என்பது புலப்படுகிறது. குற்றம் அற்ற நூலை முழுமையாகக் கற்று உணர வேண்டும். ஒரு அவையில் செல்வந்தர் பலர் இருப்பினும் கல்வி கற்றோரே மதிக்கப்படுவர். வாழ்வில் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். கல்வி கற்பவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதோடு கற்றுக் கொடுவனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஒருவனுக்குக் கல்வி மட்டுமே எப்பிறப்பிலும் அழியா செல்வமாக இருக்க முடியும். கல்லாதவர்களைக் கற்றவருடன் ஒப்பிடுதல் கூடாது. கல்வி கல்லாதவர் மண்பொம்மை போன்றவர். களர்நிலம் போன்றவர். கல்வி கற்காமல் இருப்பவனின் குலம் கெடும். கல்வி கற்ற ஒருவனால் அவனது தலைமுறையே செழித்து ஓங்கிநிற்கும். ஒருவன் கல்வி கற்பான் ஆகின் அவன் உயர்குலத்தைச் சேர்ந்தவன் ஆகிறான். கல்வி ஒன்றே எந்நாளும் எக்காலமும் அழியாத நிலைப்பெற்ற செல்வம் என்று எண்ணும் எழுத்தும் மூலம் விளக்கும் வள்ளுவரின் கருத்துக்கள் பின்பற்றுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

# வைரமுத்துவின் படைப்புலகம்

***முனைவர் ச. பத்மா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
நந்தா கல்வியியல் கல்லூரி, ஈரோடு

***ஆய்வுச் சுருக்கம்***

*வைரமுத்துவின் படைப்புலகம் ஆழ்ந்து விரிந்தது. தமிழ் இலக்கியங்களில் பயிற்சியும் ஈடுபாடும், வாழ்வியல் குறித்த சிந்தனையும், அழகிய யதார்த்த மொழிப்பயன்பாடும், அவரது படைப்புக்களின் தனித்தன்மை, கவிதை, புதினம், திரைப்படப்பாடல்கள், கட்டுரைகள், பயண இலக்கியம், திரைவசனம், சிறு கதை, மொழிப்பெயர்ப்பு என்ற பல்வேறு வடிவங்களில் 35க்கும் மேற்பட்ட படைப்புக்களை வைரமுத்து படைத்திருக்கின்றார். இவர் பத்துக்கும் மேற்பட்ட உரைநடை நூல்களையும், பத்திற்கும் மேற்பட்ட புதினங்களையும் வைரமுத்து சிறுகதைகள் என்னும் சிறுகதைத் தொகுப்பினையும் அவரது வெளிநாட்டு அனுபவங்களைக் குறிப்பிடும் பயண நூல்களையும் படைத்துள்ளார்.*

*வைரமுத்துவின் முதல் கவிதைத் தொகுப்பான வைகறைமேங்கள் கவிஞரது பத்தொன்பதாவது வயதில் எழுதிய கவிதைகளின் தொகுப்பாகும். இவரது கவிதைகளில் சமூக சீர்திருத்தச் சிந்தனைகள், மனிதநேயயம், தத்துவம், சமூகவியல்பார்வை, பெண்ணியக் கண்ணோட்டம், தன்முன்னேற்றச் சிந்தனைகள், அழகியல், நாட்டுப்புற வழக்காறுகள், நாட்டுப்புற மருத்துவம், இயற்கை, காதல், தொன்மம், படிமம், அங்கதம், தன்னம்பிக்கை, தாய்மை, சகோதரத்துவம், தேசப்பற்று, மொழிப்பற்று, தமிழறிஞர்களின் சிறப்புக்கள் போன்றவை பாடுபொருட்களாக அமைகின்றன. அவரது படைப்பாளுமை அதிசயிக்கத்தக்கதாக இருக்கின்றது. பாடுபொருட்களாக புதிய சொல்லாடல்கள் பல இடம்பெற்றுள்ளதை அறிகின்றோம்.*

**திறவுச் சொற்கள்:** *நுழையும்முன், கவிதை, கவிதையின் வகைகள், அழகு, கவிஞர் வைரமுத்து, இயற்கை, மரம், மழை, மருத்துவ முறை, தன்னம்பிக்கைச் சிந்தனைகள், முதிர்கன்னி, தொகுப்புரை*

## நுழையும்முன்

தமிழ் இலக்கியம் சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம் என பல முகங்களைக் கொண்டது ஆகும். இவற்றுள் இக்கால இலக்கியமும் ஒன்று. கவிதை, சிறுகதை, நாவல் முதலானவை இவ்வகையைச் சாரும். ஒரு படைப்பாளனால் படைக்கப்படும் பாத்திரங்கள் நம்மைப் போலவே உணர்ச்சியுடன், இரத்தம், எழும்பு, தோலும் கொண்டு இவ்வுலகில் இன்பத்தில் இணைந்து துன்பத்தில் துவண்டு உலாவரும் மனிதர்களாக அமைதல் என்பது படைப்பாளனுக்கு ஒரு பெருவெற்றியாகும்.

கவிதை படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் வைரமுத்து இவரது படைப்புகளில் ஒன்றான ‘‘இந்தப் புக்கள் விற்பனைக்கல்ல’’ என்னும் நூலில் அமைந்த சமுதாயச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கவிதை

கவிதை என்பது ஒரு கலையாகும். கவிஞர் தான் பெறும் அனுபவங்களைக் கற்பனை நயத்துடனும், கருத்துச் செறிவுடனும் ஒலிநயம், உணர்ச்சி, இனிமை, எளிமை ஆகியவற்றைக் கலந்து கவிதை வடிவங்களாகத் தருகின்றார். கவிதை குறித்து கவிமணி,

**‘‘உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்**
**உருவெ டுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெரிந்து ரைப்பது கவிதை’’**

***(மலரும் மாலையும், ப.51)***

என்று கூறுகின்றார். கவிஞரின் கருத்திற்கேற்ப கவிதையின் பாடுபொருள் அமையும்.

**கவிதையின் வகைகள்**

கவிதை இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. யாப்பிலக்கணத்தோடு வரையறைக்கு உட்பட்டு அமைவது மரபுக்கவிதை என்றும், இலக்கணமின்றி வரையறையற்று அமைவது புதுக்கவிதை என்றும் வழங்கப்படுகின்றது. புதுக்கவிதைக்கு இலக்கணம் கூறுகையில் பாரதியார்,

*''சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது*
*சொல் புதிது சோதிமிக்க நவ கவிதை*
*எந்நாளும் அழியாத மகா கவிதை''*
*(பாரதியார் கவிதைகள், பக்.318-319)*

என்று கூறுகின்றார். பாரதியைத் தொடர்ந்து பல கவிஞர்கள் புதுக்கவிதை இலக்கியத்திற்கு வலுசேர்த்தனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வைரமுத்து ஆவார். இவரது படைப்புகளில் ஒரு சில கவிதைகளைப் பார்க்கலாம்,

**அழகு**

*''பார் அழகு*
*பார்க்கும் விழி அழகு*
*பார்ப்பதெல்லாம் அழகு*
*இருள் அழகு - அதிலே*
*ஒரு துளி ஒளியழகு*
*மலை அழகு - ஆங்கே*
*பொழியும் மழையழகு*
*சிலை அழகு - சிற்பியின்*
*கலை அழகு*
*ஆண் அழகு - அவன்கொண்ட*
*ஆண்மை அழகு*
*பெண்மை அழகு - அவள்ஈனும்*
*தாய்மை அழகு*
*மொழி அழகு - செந்தமிழாயின்*
*அதுவன்றோ அழகு*
*உண்மை அழகு - பொதுநல*
*பொய்யும் அழகு*
*பிறப்பு அழகு - பிறர்கெனின்*
*இறப்பும் அழகு*
*திருமணம் அழகு - மனமிரண்டும்*
*ஒன்றாயின் இல்லறம் அழகு*
*துன்பம்நீக்கும் துறவறம் அழகு*
*மானம்காக்கும் மறம் அழகு*
*மகுடம்கொண்ட சிரம் அழகு*
*வாரிவழங்கும் கரம் அழகு*
*மனம் அழகு - எனின்,*
*யாவும் பேரழகு..!''*

**காதல்**

*''நீ சொற்கள் நிறுத்தி*
*பார்வை தொடங்கியதும்*
*கவிதை களைந்து*
*நிர்வாணமாகிறது காதல்!*
*இரண்டு முத்தங்கள் கொடுத்து*
*இனிப்பானதை எடுத்துக்கொள் என்றாய்*
*இயலாத செயலென*
*இரண்டையும் திருப்பிக் கொடுத்தேன்*
*யாவரிடமும் இயல்பாய்ப் பழகும் உனது சொற்கள்*
*எனது நுண்விருப்பங்களை அறிந்து கொள்ள*
*என்னிடம் மட்டும் வேவு பார்க்கின்றன*
*எப்பொழுதும் அளந்தே பேசுபவன்*
*உனது சாமர்த்தியங்களை சாத்தியப்படுத்து வதற்காகவே*
*அளவின்றி பேசுகிறேன்*
*உனது பார்வை மலரும்பொழுதெல்லாம்*
*எனது விழிகளை வண்ணத்துப்புச்சிகளாய் மாற்றிட*
*சிறகடித்து தவிக்கும் இமைகள்!*
*தனியே நீ முணுமுணுக்கும்*
*இனிய பாடல்கள்*
*இசைத்தட்டில் ஒலிக்கையில்*
*இனிமை இழப்பதேன்?''*

**கவிஞர் வைரமுத்து**

புதுக்கவிதை இலக்கியத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். தற்காலக் கவிஞர் பெருமக்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர். வானம்பாடி இயக்கத்தைச் சார்ந்தவர். இவர் மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் படைப்புகளைப் படைத்துள்ளார். சமுதாய முன்னேற்றத்தில் இலக்கிய படைப்பாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இலக்கியம் அன்றி மக்களின் வாழ்க்கையையும் கவிஞர்

வைரமுத்து தம் கவிதைகள் உலகிற்குப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

தனிமனித உணர்ச்சிகளும், சமுதாயப் பிரச்சினைகளும் இவரது கவிதைகளில் எதார்த்தமாய் எளிமையாகக் கூறபட்டுள்ளது. இத்தன்மை கருதியே மு.கருணாநிதி,

''**பலநாட்டுக் கவிஞர்கள், பலமொழிக் கவிஞர்கள் வழங்கியுள்ள வைரங்கள் பட்டை தீட்டப்பட்டுள்ள பாங்கில் ஜொலிக்கின்றன. மலையில் புத்த மலர்களைக் கூட மணம் வீசச் செய்துள்ளார்**''

**(மு.கருணாநிதி, முத்தமிழ் அறிஞர், அணிந்துரை.)**

என்று வைரமுத்துவின் கவிதைகளைப் பாராட்டுகின்றார்.

## இயற்கை

நம் முன்னோர் நமக்கு கற்றுக் கொடுத்த வாழ்க்கை "இயற்கையோடு இயைந்த வாழ்க்கை" ஆகும். இயற்கை இடைவிடாது இயங்கிக் கொண்டிருத்தலின் மூலமாகத்தான் மனிதர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தேடல்களும், தேவைகளும் நிறைந்த இந்த வாழ்க்கையை மனிதருக்கு அர்த்தப்படுத்திக் காட்டுவதும், அழகுபடுத்திக் காட்டுவதும் இயற்கைதான்.

## மரம்

மரங்கள் இயற்கையின் முக்கிய அம்சம். நீண்டகால வாழக் கூடியவை. உயிரினங்கள் வெளியிடும் நச்சுக் காற்றாகிய கரியமில வாயுவை உறிஞ்சி, ஆக்ஸிஜனைக் கொடுத்து மனித இனத்தையும் மற்ற உயிர்களையும் காப்பவை மரங்கள். மழைப் பெய்யவும், தட்பவெப்ப நிலையைச் சீராகக் காக்கவும் உதவுபவை மரங்களே ஆகும். மரங்கள் இந்த புமியின் வரம். இந்த மரங்களின் முக்கியத்துவத்தை,

''**உயிர் ஒழுகும்**
**மலர்கள்**
**மனிதன் தரா ஞானம்**
**மரம் தரும் எனக்கு**
**மனிதன் தோன்றுமுன்**
**மரம் தோன்றிற்று**
**மரம் இருக்கும்வரை புப்புக்கும்**
**இறக்கும் வரை காய்காய்க்கும்**''

**(வைரமுத்து கவிதைகள், ப.455)**

மரம் மனிதனின் முதல் நண்பன், மரமின்றி மனித வாழ்க்கை இல்லை என்று எடுத்துக்கூறுகின்றார்.

## மழை

உலக உயிர்கள் யாவும் வாழ அடிப்படையான நீரைத் தருவது மழை. அதனால்தான் புலவர்கள் கொடைக்கு மழையை உவமையாகக் கையாண்டனர். அவ்வகையில் பாரியின் கொடைத்தன்மையைக் கூறுகையில் கபிலர்,

''**மாரியுமுண்டு ஈங்கு உலகு புரப்பதுவே**''

**(புறம். 107)**

என்று குறிப்பிடுகின்றார். மழை மண்ணில் வாழும் உயிர்களின் குருதியைப்போல விளங்குகின்றது. மழை பெய்யாமலிருந்தால் மண்ணில் உயிர்களுமில்லை, பயிர்களுமில்லை என்பதை வள்ளுவர்,

''**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்ப தரிது**'' **(குறள். 16)**

என்கின்றார். கவிஞர் வைரமுத்து "மழைப் பிரசங்கம்" என்னும் கவிதையில்,

''**விண்ணுக்கும் மண்ணுக்கும்**
**தண்ணீர்ப்பாலம் பாருங்கள்.**
**மழை மழை மழை**
**மண்ணின் அதிசயம் மழை**
**புமியை வானம் புணரும் கலை மழை**
**சமுத்திரம் எழுதும்**
**சமத்துவம் மழை**''

**(வைரமுத்து கவிதைகள், ப.421)**

என்ற வரிகளில் மழையானது விண்ணுக்கும், மண்ணுக்குமான தண்ணீர்ப் பாலமாக விளங்குவதைக் குறிப்பிடுகின்றார்.

தாவரங்களுக்கன்றி மனித வாழ்க்கையிலும் மழை என்பது மூலதனமாகும். மேலும்,

''**கீழ்நோக்கிப் பொழியும்**
**மழைமட்டும் பொய்த்துவிடின்**
**மேல்நோக்கி வளர்வன**
**புமியில் ஏது?**''

**(வைரமுத்து கவிதைகள், ப.680)**

என்ற வரிகளில் மேல்நோக்கி வளரும் விதைக்கும், மனிதனுக்கும் கீழ்நோக்கிப் பெய்யும் மழைதான் முக்கியமான மூலப்பொருளாகும் என்பதை விவரிக்கின்றார். இதனால் மழையின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

**மருத்துவ முறை**

இன்றைய மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று மருத்துவம்.

**''மருத்துவம் என்பது நோய்களைக்**
**குணப்படுத்துவதற்கான கலையும்,**
**அறிவியலும் ஆகும். இதனை**
**நோய்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றை**
**குணப்படுத்தவும், அவை வராமல் தடுக்கவும்**
**உதவும் அறிவியல் அல்லது செயல்பாடு**
**எனலாம்.''**

***(வலைதளத் தேடல், மருத்துவம் - தமிழ் விக்கிப்பீடியா)***

இன்று பல கண்டுபிடிப்புகள் பல மருத்துவ முறைகள் காணப்படுகின்றன. கவிஞர் வைரமுத்து ''மருத்துவ அறிக்கை'' என்னும் தலைப்பில் புதிய மருத்துவ முறைப்பற்றியும் நோயாளிகளைக் கையாளும் முறைப்பற்றியும் நோய்களின் தன்மைகளையும் கூறுகின்றார். இதனை,

**மருத்துவ முறையை**
**மாற்றுங்கள் டாக்டர்**
**நோயாளி பாமரன்**
**சொல்லிக் கொடுங்கள்**
**நோயாளி மாணவன்**
**கற்றுக் கொடுங்கள்**
**வாய்வழி சுவாசிக்காதே**
**சுவாசிக்கும் சுத்தக்காற்று**
**நுரையீரலின்**
**தரைதொட வேண்டும்**
**சொல்லிக் கொடுங்கள்**

***(வைரமுத்து கவிதைகள், பக்.465-467)***

எனவரும் பகுதியில் நோய் உருவாகுவதன் காரணத்தையும் அதை எளிய முறையில் தடுப்பது எப்படி என்பதையும் மக்களுக்கு உணர்த்தினாலே நோய்க் குறைந்துவிடும் என்று வலியுறுத்துகின்றார். கவிஞர் வைரமுத்துவின் இந்த சிந்தனையால் நோயற்ற சமூகம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**தன்னம்பிக்கைச் சிந்தனைகள்**

தன்னம்பிக்கை என்பது மனிதர் ஒருவர் தம் எண்ணங்களின்மீதும், தன் வலிமையின்மீதும் கொண்டுள்ள நம்பிக்கையாகும். வாழ்வில் உயரத் துணைநிற்பது. விடாமுயற்சி, கடின உழைப்பு, திட்டமிட்டு செயல்படல், தோல்வி கண்டு தளராமை போன்றவை தன்னம்பிக்கைக் குரிய குணங்களாகும். கவிஞர் கவிதாசன்,

**''நமது இரண்டு கைகளையும் இயக்குகின்ற**
**மூன்றாவது கைதான் தன்னம்பிக்கை''**

என்ற வரிகளில் உடலின் உறுப்பான கை நம்முடன் என்றும் இருப்பது போல மூன்றாவது கையான தன்னம்பிக்கையும் இருக்க வேண்டு மென்பதை வலியுறுத்துகின்றார். *(செ.பழனிச்சாமி (ப.ஆ.), சிந்தனைக் கவிஞர் கவிதாசன் படைப்பிலக்கியம் - பன்முக ஆய்வு, ப.68)*

''யாருக்குத் தன்னிடம் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்'' என்று வாமி விவேகானந்தர் கூறுகின்றார். மனிதன் மனம் கலங்கி சோர்வுற்றுத் தவிக்கும் நிலையில் தன்னம்பிக்கை நிறைந்த எண்ணங்களும், எழுத்துக்களுமே அவனது மனநிலையை மாற்றி வாழ்வில் மேன்மையுறச் செய்கின்றன. கவிஞர் வைரமுத்து தன்னம்பிக்கையைப் பற்றிக் கூறுமிடத்து,

**''உருவுகண்டு எள்ளாதே**
**ஒவ்வொரு விதையிலும்**
**ஒரு விருட்சம் ஒளிந்திருக்கிறது''**

***(வைரமுத்து கவிதைகள், ப.485)***

என்றும்,

**''உயிர் என்பது ஒருதுளி விந்தின்**
**பிரயாணம் இல்லையப்பா**
**அது பிரபஞ்சத்தின் சுருக்கம்**
**உன்னை அழித்தால்**
**பிரபஞ்சத்தின் பிரதியை அழிக்கிறாய்''**

***(வைரமுத்து கவிதைகள், ப.487)***

என்றும் வரும் கவிதைகள் தன்னம்பிக்கை எண்ணங்களை எழுச்சியுடனும், எதார்த்தத்துடனும் எடுத்தியம்புகின்றன. வெற்றி தோல்வியைச் சமமாக நினைக்க வேண்டும். நாம் செல்லக் கூடிய பாதை எதுவாக இருந்தாலும் அதனை

எதிர்கொள்ள வேண்டும் (வைரமுத்து கவிதைகள், ப.491, ப.671) என்ற நம்பிக்கை உணர்வினை இளைஞர்களின் மனதில் பதிய வைக்கின்றார்.

### முதிர்கன்னி

இன்றைய வாழ்க்கையில் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய சோகம் குறிப்பிடத்தக்க வயதில் திருமணமாகாமல் வாழ்க்கையைக் கழிப்பது. வேலை பார்ப்பதினாலோ அல்லது திருமணம் செய்து கொள்வதற்கான பொருளாதார வசதியின்மையினாலோ பெண்களில் சிலர் முதிர்கன்னிகளாக வாழ்கின்றார்கள். இம்முதிர் கன்னிகளைக் கவிஞர் வைரமுத்து,

''**அல்லிப்பு தாமரைப்பு**
**ஆயிரம் புப்புத்தாலும்**
**கல்யாணப் புவெனக்குக்**
**காலமெல்லாம் புக்கலையே**''

**(வைரமுத்து கவிதைகள், ப.454)**

என்ற கவிதையில் திருமணமாகாமல் வாழ்க்கை முழுவதும் கன்னிப்பெண்களாகவே காலத்தைக் கழிக்க வேண்டிய பெண்களின் அவலத்தை எண்ணிக் கவலைப்படுகின்றார். முப்பத்தேழு வயது முடிந்தும் திருமணமாகாமல் இருக்கின்ற முதிர்கன்னியின் மன வெறுமையினை,

''**தூண்டிலில் சிக்கவில்லை**
**ஆனால் இது கற்புள்ள கருவாடு**''

**(வைரமுத்து கவிதைகள், ப.457)**

என்று தம் கவிதைகளின் மூலம் வெளிப் படுத்தியுள்ளார். பெண்களின் அவலநிலை மட்டுமின்றி,

''**தாயெனும் வடிவை தமக்கையின் வடிவை**
**மகளெனும் வடிவை மனைவியின் வடிவை**
**மூதுரை சொல்லும் முதுமகள் வடிவை**
**ஓவியத் திருவே உன்வழி காண்கிறேன்**
**உனக்கு முன்னே உயிர்பிரி யத்தான்**
**எனக்கு விருப்பம் இயற்கை உதவும்**''

**(வைரமுத்து கவிதைகள், ப.349)**

என்று பெண்களுக்குரிய மதிப்பையும் தம் கவிதைகளில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

### தொகுப்புரை

மனிதருக்கு வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் காட்டுவதும், அழகுபடுத்திக் காட்டுவதும் இயற்கை தான் என்பதைக் கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளின் வாயிலாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. இயற்கைப் புனைவுகள், அறிவியல் ஆக்கங்கள், அரசியல் சித்தரிப்புகள், தன்னம்பிக்கைத் தேடல்கள், மனித உறவுகள், பெண்களின் நிலை, குழந்தைத் தொழிலாளர்களின் நிலை போன்றவைகள் கவிஞர் வைரமுத்து கவிதைகளில் பதிவு பெறும் விதத்தால் கவிஞரின் சமூகச் சிந்தனையை அறிய முடிகின்றது.

### துணைநின்ற நூல்கள்

1. வைரமுத்து - வைரமுத்து கவிதைகள், சுர்யா வெளியீடு, டிரஸ்ட்புரம், சென்னை. எட்டாம் பதிப்பு - 2006.
2. பழனிச்சாமி, செ. - சிந்தனைக் கவிஞர் கவிதாசன் படைப்பிலக்கியம் - பன்முக ஆய்வு, (ப.ஆ.) குமரன் பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு - 2009.
3. பாரதியார் - பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். முதல் பதிப்பு - 1987.
4. priyabalaji205@gmail.com

# தற்காலத் தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலில் கட்டுரை இலக்கியத்தின் இடமும் இருப்பும்

***முனைவர் ஆ. பூமிச்செல்வம்***
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***தொடக்கமாக***

*ஏறக்குறைய ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகால தமிழ்நில மக்களின் வாழ்நிலைகளை எல்லாம் பதிவுசெய்து வெளிப்படுத்திய பெருமை சிறிதளவு நாட்டார் இலக்கியத்திற்கும் பேரளவு செய்யுள் இலக்கியத்திற்கும் உண்டு. இவ்விருவிதப் பெருமைகளையும் தற்போது ஓருங்கே பெற்றனவாக நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், திறனாய்வு, கடிதம், பயணம் மற்றும் தன் வரலாறு சார்ந்த பனுவல்கள் காணக் கிடைக்கின்றன. இவ்வித வடிவங்களின் வரிசையில் பதிவு சார்ந்த முயற்சிகளில் கணிசமான பங்கைப் பெற்றிருந்தாலும் இலக்கிய வரலாற்று வரைவியலிலிருந்து பெரிதும் தவிர்க்கப்பட்ட வடிவமாகக் காணக் கிடைப்பதுதான் ''கட்டுரை இலக்கியம்சுசு என்கிற ஒரு வகை. ஏனைய நவீனத் தமிழிலக்கிய வடிவங்களைப் போன்றே இதுவும் மேலைத் தேயங்களிலிருந்து வருவிக்கப்பட்ட ஒருவித வடிவமேயாயினும், வயதில் சிறார் முதல் அறிவுஜீவித் தனத்தில் பெரியவராகப் பாவிக்கப்படுகிற அனைவராலும் கூட ஒருமுறையேனும் பரீட்சித்து பார்க்கப்பட்ட வடிவ வகையாக விளங்கும் திறத்ததுதான் இக்கட்டுரை வடிவம் என்பது. புனைவு வகையிலிருந்து பெரிதும் விடுபட்டு உண்மைக்கு மிக நெருக்கமாகக் காணக் கிடைக்கிற இவ்வடிவம் மட்டும் ஏனோ வெகுசன வரலாற்று வரைவு நூல் வகைமையிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிற ஒன்றாகவே பாவிக்கப்பட்டு வருகிறது என்கிற நிலையில் அனைத்துவித தமிழ் இலக்கிய வெளிப்பாட்டு ஊடகங்களுக்கும் ஆதார நிலையாக விளங்கக் கூடிய தன்மைகொண்டுள்ள இக்கட்டுரை இலக்கியத்தின் மீதான கவனக் குவிவு தமிழ்ச் சூழலில் ஏன் குறைவாக உள்ளது? என்பதனைக் காணவேண்டியது. வரலாற்றுத் தேவையாக இருக்கிறது. இவ்வித நோக்கத்தை உள்ளீடாகக் கொள்வதாக இவ்வாய்வுப் பகுதி அமைகிறது.*

**கட்டுரை - சொற்பொருள் விளக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் கட்டுரை இலக்கிய வகை குறித்த விளக்கமோ விவரணைகளோ எவையும் இடம்பெற்றிருக்காத நிலையில், கட்டுரை என்னும் சொல்லுக்கான விளக்கத்தை அறிவதற்குக் கூட மேலைத் தேயத்தையே அணுக வேண்டியுள்ளது. கட்டுரை என்னும் தமிழ்ச் சொல்லுக்கான நேர் வடிவமாக ஆங்கிலத்தில் 'எஸ்ஸே' (Essay) என்கிற சொல்லே அமைகிறது. இச்சொல்லுக்கான பொருள் ''சிறுகட்டுரை'' என்பதாகும். இச்சொல்லின் ஆதி வடிவம் பிரஞ்ச் மொழியில் உள்ளது என்பர். அப்பிரஞ்ச் பதத்திற்குப் ''புது முயற்சி'' எனப் பொருள் கொண்டிருக்கின்றனர். இதன் அடிப் படையில் பார்க்கும்போது தமிழில் கட்டுரை என்பதனைக் குறித்திடப் ''பொருள் பொதிந்த சொல், உறுதியுடைய சொல்'' என்று ஏற்கனவே வார்த்தைகள் இருந்திருக்கின்றன. இவ்விதப் பொருள்கொள்ளலுக்கு அடியார்க்கு நல்லார் மையமாக அமைந்திருக்கிறார். ஆனாலும், இக்கட்டுரை என்பதற்கு ஆதிவேராகத் தமிழில் உரைநடை என்னும் சொல்லே இருந்திருக்கிறது. இவ் ''உரைநடையைச் சுட்டவெனத் தமிழில் முதலில்உரைஎன்றும்அடுத்துஉரைநடைஎன்றும் வசனம் என்றும் வியாசம் என்றும் கட்டுரை என்றும் பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன''[1] என்பார் சுபாசு.

பொதுவாக ''உரை என்றால் சொல்லுதல்''[2] ''கட்டு என்றால் வரம்பும்''[3] ''உருவாக்கல்''[4] ''கட்டுரை என்றால் ஏற்ற (பொருளுள்ள) சொல் கட்டுரைத்தல் என்றால் உறுதிபடச் சொல்லுதல்''[5]

என்கிற பொருள்களை நா.கதிரைவேற்பிள்ளையும், ''கட்டுரை (Essay- Article) என்பது ஏதேனும் ஒருபொருள்பற்றித்தகவல்தந்து, உரைநடையில் எழுதப்படும் ஒரு படைப்பு''[6] எனக் க்ரியா அகராதியும் ''கட்டுதல் என்பதற்கு உறுதியாகச் சொல்லுதல், தெளிவாகச் சொல்லுதல் என்னும் இரு பொருள்களைச் சுட்டுகிறது''[7] எனத் தமிழ் லெக்சிகனும் விளக்கங்கள் தருகின்றன. எனவே, கட்டுரை என்பது உரைநடையுடன் மிக நெருங்கியத் தொடர்புடையது உரைநடையால் மட்டுமே அமைவது என்றும், உரை எனின் உரைத்தல் நடை எனின் நடத்தல் என்றும் சுட்டுவது போல கட்டுரை என்பதை கட்டி - உரைத்தல் அதாவது பொருள் பொதிவான உரிய சொற்களை முறையாகக் கட்டி, உரைத்தல் என இவ்விடத்து அர்த்தப்படுத்தி விளங்கிக் கொள்ளலாம்.

## கட்டுரை என்றும் சொல்லுக்கான சான்றோர் விளக்கங்கள்

தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலில் உரைநடைப் பாங்கில் எழுதும்போது கதை சொல்லும் போக்கு கருத்து சொல்லும் போக்கு என்கிற இருவிதப் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் ''கருத்து சொல்லும் முறையில் அமைவதையே கட்டுரை'' என்கின்றனர். இக்கட்டுரை என்னும் சொல்லுக்கான பொருள் விளக்கமாக மேலை மற்றும் கீழைத்தேய அறிஞர்கள் பன்முகக் கருத்து நிலைகளைப் பகர்ந்துள்ளனர். அவற்றைக் கீழே நிரல்படுத்துவோம்,

''கட்டுரை (Essay) என்பது தனிமனித உணர்ச்சி களின் சொற்கோவை. ஒரு விசயத்தைப் பற்றி எழுத்தாளனுக்கு என்ன தோன்றுகிறதோ அந்த உணர்ச்சிகளைக் குறிக்கும் நிரூபணம் உணர்ச்சி உணரீ''[8] என்கிறார் கோரூர் என்பார். ''கருத்துச் செறிவும் தெளிவும் தொடர்ச்சியும் அமையப் பெற்ற ஆசிரியரின் உள்ளப் பாங்கையும் தனித் தன்மையையும் வெளிப்படுத்தும் வகையில், இலக்கியச் சுவையோடு எழுதப்படுவதே கட்டுரை''[9] என்கிறார் தெ.பொ.மீ. ''ஒரு பொருளைப் பற்றி பல கருத்துக்களை இசைத்து, கோவைபட வரையும் சொற்பெருக்கே கட்டுரையாகும்''[10] என்பார் ஞா.தேவநேயப் பாவாணர். ''சிந்தனையால் கட்டப்பட்டு உரைக்கப்படும் சொல் என்பதே கட்டுரை என்பதன் பொருளாகத் தோன்றுகிறது. அதாவது, மனிதருடைய சிந்தனைகளைப் பொருத்தமான முறையில் சேர்த்து, ஒரு வடிவமாக அமைப்பதன் மூலம் கருத்துக்கள் சொற்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய முறையில் அமைந்த கருத்து வெளிப்பாட்டையே கட்டுரை என்கிறோம் என்கிறார் மு.வ.''[11] ''கட்டுரை இலக்கியம் என்பது பலவிதமான பொருள்களை உரைநடையில் படைப்பாற்றலுடன் எழுது வதாகும். எழுதும் நிலையில் இலக்கிய அந்தஸ்து முக்கியம். இலக்கிய மரபு முக்கியம். அம்மரபை எதிர்த்திடும் சோதனைப் புரட்சி முக்கியம். இலக்கிய அமைதி முக்கியம். எல்லாவற்றிற்கும் மேலாக தனித்துவம் முக்கியம்''[12] என்பார் க.நா.சு. ''தன்னுள் இருப்பதை விட அதிகமாகக் கற்பனை செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வது கவிதை தன்னில் இருப்பதை விட எதையும் கற்பனை செய்து கொள்ளக் கூடாது என்று கட்டளை இடுவது கட்டுரை''[13] என்பார் வைரமுத்து. ''பொருள் பொதிந்த சொற்களால் உலகக் காட்சிகளை, இயல்புகளை அவரவர் கண்ணோட்டத்திற்கு ஏற்ப, சுவையான நடையில் வெறும் பொழுதுபோக்காக மட்டும் அமையாது, சிந்திக்க வைப்பதாகவோ, அறிவூட்டுவதாகவோ அமைவதே கட்டுரை இலக்கியம் ஆகும்''[14] என்பார் ச.வே.சு. ஒரு பொருளைக் குறித்து வரையறுத்து, நூல் எழுதும்முறையில் இல்லாமல், சிறிய அளவில், பொருட் செறிவுடன், விளக்கமாக, எவரொருவரும் படிக்கக்கூடிய வகையில், எளிய நடையில் அமைந்திருப்பதே கட்டுரை''[15] என்பார் அ.கி.ப.

மேற்காட்டிய வரையறைகளிலிருந்து தெரியவருவது, ஒரு படைப்பாளி, தான் சொல்ல வந்த கருத்தை நல்ல நடையில், உரிய பண்பு நலன்களுடன், ஏற்ற உத்திமுறைகளுடன், உள்ளது உள்ளவாறாக, செறிவுபடுத்திக் கட்டி உரைத்திருப்பாயின் அது கட்டுரை எனப்படும்

என்கிற முடிவுக்கு வரலாம். ஆனாலும், இவற்றை மட்டுமே முடிந்த முடிபான வரையறை என்று இவ்விடத்துக் கொள்ள முடியாது.

### கட்டுரை இலக்கியத்தின் தோற்ற முறைமை

தமிழ்மொழியில் உள்ள செய்யுள், கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், திறனாய்வு, கடிதம், பயண இலக்கியம், தன் வரலாறு, இதழியல், நாட்டுப்புறவியல் முதலான பலவும் இணைந்த தொகுதிதான் அதன் பரப்பளவு என்பர். இப்பரப்பில் ஒரு கூறுதான் கட்டுரை என்பதும். ஆனால் நாவல், சிறுகதை போன்றே கட்டுரை என்கிற இதுவும் மேலைத் தேயங்களிலிருந்து தருவித்துக் கொள்ளப்பட்ட ஒன்றே என்பதை நாம் நினைவுப்படுத்திக் கொள்ளல் நலம். அங்கு மாண்ட்டேயின், பேக்கன் முதலானோரே இக்கட்டுரை இலக்கியம் தோன்றிட வழி வகுத்துள்ளனர். தமிழகப் பரப்பில் இக்கட்டுரை தோன்றி, இலக்கியமாகப் பரிணமிக்க அச்சு முறையும் பத்திரிகையும் தொடர்புச் சாதனங்களுமே முதன்மையான அமைந்திருக்கின்றன. இவ்வரிசையில் 1930 காலகட்டத்தவையான மணிக்கொடி, நவசக்தி, சுதந்திரச்சங்கு, சுதேசமித்திரன், கல்கி முதலானவை கட்டுரை வளர்ப்பில் பேரிடம் வகிக்கும் பத்திரிகைகள் ஆகின்றன.

### கட்டுரை வகைமைப்பாடுகள்

தமிழ் உரைநடை இலக்கிய வளர்ச்சிப் பாதையில் கதையை மட்டும் சொல்லுதல் கருத்தை மட்டும் அறிவித்தல் என்கிற இரு வகைமைப்பாடுகள் உண்டு. இவற்றுள் கதை சொல்லும் அமைப்பைப் புனைகதை என்றும், கருத்தைச் சொல்ல முயல்கிற வடிவத்தைக் கட்டுரை ஒன்றும் பெயரிட்டு அழைக்கும் முறை வழக்கத்தில் உள்ளது. இக்கருத்தறிவிக்கும் கட்டுரையை இலக்கியக் கட்டுரை என்றும் கட்டுரை இலக்கியம் என்றும், பொதுவாகப் பகுத்துக் காண்கின்றனர். ''கட்டுரை இலக்கியம் என்பது ஒரு வகைப்படைப்புக் கலை, இலக்கியக் கட்டுரை என்பது பிறர் படைத்த இலக்கியத்தைப் பற்றி எழுதும் தயாரிப்பு''[16] என இவற்றை வகைப்படுத்துவார் சுபாசு. இவ்விரண்டில் இலக்கியக் கட்டுரை என்பது பிறர் படைத்த ஓர் இலக்கியப் பிரதியைப் பற்றியான விளக்கம், மதிப்பீடு, திறனாய்வு, ஆராய்ச்சியேயாகும். இதைத் தனி ஓர் இலக்கிய வகையாகக் கொள்ளார். ஆனால், கட்டுரை இலக்கியம் என்பது பிற நவீனப் படைப்பிலக்கியங்களைப் போன்ற, தனித்த இலக்கியப் படைப்பு என்கிற வகையில், இது தனித்தடம் பதிப்பதாகிறது என்றாலும் இவ்விரு பெரு வகைமையோடு ஒருவித வசதி கருதி, சிந்தனைக் கட்டுரை, கலைக் கட்டுரை, வர்ணனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, பத்திரிகைக் கட்டுரை, ஆராய்ச்சி கட்டுரை, தர்க்கம், செய்தி, விவரணை, பகுத்தாய்வு, செயல்முறை, ஒத்த தன்மை, வகைப்படுத்தல், ஒப்பீடு, புனைவுக் கட்டுரை என மேலும் சில வகைமையாகப் பகுத்துக் கொள்வது நடைமுறையில் உள்ளது.

### கட்டுரை இலக்கியத்தின் அடிப்படை இயல்புகள்

கட்டுரை இலக்கியத்தின் அடிப்படைப் பண்புகள் பற்றிப் பேசும்போது, அதன் கட்டமைப்பே அதனுடைய உயிர்மப் பண்பாகக் கொள்ளப்படுவதை உணரலாம். குறிப்பாக தலைப்பு, உணர்த்த விரும்பும் கருத்து, தொடக்கம், வளர்நிலை, முடிவு ஆகியவையே அதன் பொதுப் பண்புகள் ஆகும். படிப்பவரைத் திணறடிக்காமல், செறிவான மொழி நடையில், நிரலாகவும், தெளிவாகவும் கருத்துக்களை அடுக்கி, சொல்லிக் கடத்துவதில்தான் கட்டுரைப் படைப்பாளியின் ஒட்டுமொத்த ஆளுமையே அடங்கியிருக்கும் என்பர். அவ்விதத்தில், கட்டுரையின் கட்டமைப்புப் பற்றிப் பேசுமிடத்து, ''I. மையக்கருத்தையும் கிளைக்கருத்தாடல்களையும் கொண்டிருத்தல், II. சொல்முறையில் கருத்துக்கு முதலிடம் தருதல், III. காரண காரியத் தொடர்புடன் இருத்தல், ஐ. கலை வடிவிற்குரிய நடை உத்திகளை அளவுடன் பயன்படுத்துதல் எ.உள்ளதை உள்ளவாறு கூறி நம்பகத் தன்மையுடன் விளங்கல் என ஐந்து மூலக் கூறுகளை அறிஞர்கள் முன் மொழிகின்றனர்.''[17]

இவ்வித அடிப்படைக் கூறுகளுடன் மேலும் சில பண்பாம்சங்களும் கட்டுரை இலக்கியத் திற்கெனப் பரிந்துரைக்கப்படுகின்றன. அவை, ‘‘எப்பொருண்மை குறித்து எழுதப்படினும் உரிய தொடக்கம், நிரலான வளர்நிலை, செறிவுற்ற முடிவிருத்தல், பரப்பில் சுருக்கம், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், நன்மொழிப் புணர்த்தல், நவின்றோர்க்கு இனிமை முதலிய அழகுகள் இருத்தலும் கூறியது கூறல், மாறுபடக் கூறல், மற்றொன்று விரித்தல், உலகமலைவு முதலிய குற்றங்கள் தவிர்க்கப்படலும் இலக்கணப் பிழையின்மை, குறைத்தோ மிகுத்தோ கூறாமை உள்ளதை உள்ளவாறு விளம்பலும்.’’[18] கட்டுரை இலக்கியம் படைப்பதற்கான இயல்பான வழிமுறைகளாக விளம்பப்படுகின்றன.

### கட்டுரை இலக்கியத்திற்கான உள்ளடக்கப் பொருண்மைகள்

ஒரு கட்டுரைக்கான உள்ளடக்கக் கருத்துப் பொருண்மை என்பது எத்துறை சார்பானதாகவும் இருக்கலாம் என்பர். குறிப்பாக அரசியல், அறிவியல், தத்துவம், சமூகம், சமயம், இலக்கியம், வரலாறு அன்றாட வாழ்வியல் என எவ்வொரு பிரிவையும் அது கொண்டிருக்கலாம் தான். எனினும், அவற்றிலிருந்து தேர்ந்து கொள்ளப்படும் கருஃசிக்கல்ஃ பிரச்சினை என்பது யாது? அது யாங்ஙனம் புதிதாக இனங்கண்டு, விவாதிக்கலுற்று, தீர்வைத் தர முயன்றிருக்கிறது? என்பதைப் பொருத்துத்தான் அதன் உள்ளடக்கப் பொருண்மை அமையும். அவ்விதச் சிக்கலின் கனபரிமாணம் அணுவுலையாகவும் இருக்கலாம் அன்றாட வயிற்றுப் பாட்டிற்கு உலை வைக்க வழியின்றித் தவிப்பவரைப் பற்றியும் இருக்கலாம் என்கிற நிலையில், ஒரு சிக்கல் அதற்கான தீர்வு என்பனவே ஒரு கட்டுரை இலக்கியத்தின் உள்ளடக்கப் பொருண்மையாக அமையத் திராணி பெற்றன எனலாம்.

### கட்டுரையாளருக்கான பண்பு நலன்கள்

ஒரு கட்டுரையை உருவகித்து எழுதுதல் என்பது அவ்வளவு எளிதானதன்று. மொழி ஞானம், கருத்தியல் சார்ந்த நுண்ணறிவு இருந்தாலன்றிக் கட்டமைப்பது கடினம். இத்துடன், மொழி நடை, இலக்கணப் பயிற்சி, புதுமைகாணும் பண்பு, பன்னூற் பாண்டித்யம், பட்டறிவு என்பன ஒரு கட்டுரையை உருவாக்கும் கலைஞருக்கு இருக்கவேண்டிய திறன்களாகும். இவற்றுடன், வாழ்க்கை பற்றிய அனுபவம், கூர்ந்துநோக்கும் நுண்ணறிவு, படைப்புக்கலை சார்ந்த திறன்களும் கூடுதலாக வேண்டற்பாலனவாம்.

### தமிழில் கட்டுரை இலக்கிய முன்னோடிகள்

உலகளவில் கட்டுரை இலக்கியத் தொடக்கக் கர்த்தாக்களாக மேலை தேயத்தவர்களே விளங்குகின்றனர். குறிப்பாக, ஏ.ஜி.கார்டினர் இதன் தொடக்கக் கர்த்தாவாவார். இவருடன் மாண்டேயின், பேக்கன் ஆகியோரும் இணைத்துப் பேசப்படுகின்றனர். இக்கட்டுரை இலக்கியம் வெளிநாட்டவரின் கொடையாக இருப்பினும்கூட, அதனைத்தமிழில் நேர்த்தியாக பரீட்சித்துப் பார்த்த ஆளுமைகளும் இருக்கவே செய்கின்றனர். அவ்வரிசையில் ஏனைய நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்த ‘‘பாரதி’’யே இதற்கும் முன்னோடியாகத் தென்படுகிறார். இவரின் ‘‘சிட்டுக்குருவி’’யே இதற்குச் சிறந்த உதாரணம். இவரைத் தொடர்ந்து வீராசாமி செட்டியார் (விநோதரசமஞ்சரி), வ.வே.சு.ஐயர், உ.வே.சா, டி.கே.சிதம்பரநாத முதலியார், ச.சோமசுந்தரபாரதி, பண்டிதமணி மு.கதிரேச செட்டியார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ராஜாஜி என இப்பட்டியலில் இடம் பிடிப்பவர்களும் சிலர் உள்ளனர்.

### தமிழில் கட்டுரை இலக்கிய வளர்ச்சி நிலைகள்

தமிழில் கட்டுரை இலக்கியத்தின் வளர்ச்சி நிலைகள் பற்றிப் பேசும்போது மரபுவழிப்பட்ட தமிழிலக்கியவாதிகள் கணிசமான இடத்தை வகிப்பவர்களாக உள்ளனர். குறிப்பாக, திருமணம் செல்வகேசவராய முதலியார், மறைமலையடிகள், அ.சீனிவாசராகவன், திரு.வி.க., எஸ்.வையா புரிப்பிள்ளை, வெ.சாமிநாதசர்மா, ரா.பி.

சேதுப் பிள்ளை, தெ.பொ.மீ, ஞா.தேவநேயப் பாவாணர், அ.கி.ப., ஔவை துரைசாமிப்பிள்ளை, மா.இராசமாணிக்கனார், கா.அப்பாத்துரை, மு.வ., வ.சுப.மாணிக்கம், ஆ.வேலுப்பிள்ளை முதலானோர் இவ்வரிசையில் நிரல்படுகின்றனர்.

மேற்காட்டிய மரபிலக்கியவாதிகளுக்கு நேர்மாறாக படைப்பாளர்களாகவும் சிறுபத் திரிகையாளர்களாகவும் செயல்பட்ட சிலரும் தமிழ்ச் சூழலில் தேர்ந்த கட்டுரையாளர்களாகக் காட்சிப்படுகின்றனர். குறிப்பாக புதுமைப்பித்தன், வ.ரா., க.நா.சு, மயிலை சீனி, பிரமிள், நகுலன், சு.ரா, சிட்டி- சிவபாதசுந்தரம், க.கைலாசபதி, நா.வா தா.வே.வீராசாமி, கா.சிவத்தம்பி, இ.முருகையன், வெங்கட்சாமிநாதன், தி. பாக்கியமுத்து, பிரம்மராஜன், சி.மோகன், தொ.பா., ஆ.சிவசுப்பிரமணியன் முதலானோரைச் சுட்டலாம். மேலும், இவர்களின் வரிசையில் கோட்பாட்டினை மையமாக வைத்துக் கட்டுரை படைக்கின்ற படைப்பாளர்கள் சிலரும் நவீன தமிழ் இலக்கியக் களத்தில் உள்ளனர். ஞானி, பாலா, ராஜ்கௌதமன், தமிழவன், சா.தேவதாஸ், நோயல் ஜோசப் இருதயராஜ், எம்.டி.முத்துக்குமாரசாமி, வ. கீதா, எஸ்.வி.ராஜதுரை, அ.மார்க்ஸ், எம்.ஜி.சுரேஷ், ஜமாலன், க.பூரணச்சந்திரன், ந.முத்துமோகன், ப.மருதநாயகம், க.பஞ்சாங்கம், பக்தவத்சல பாரதி, எஸ்.தோதாத்ரி, ந.முருகேசபாண்டியன் முதலானோர் இவ்வரிசையில் அடங்குவர்.

மரபு வழியினர் மற்றும் படைப்பாளியர்க் குழாமை அடுத்துக் கல்விப்புலம் சார்ந்தோர் சிலரும் அது சார்ந்த வடிவ ஒழுங்கில் கட்டுரை எழுதுபவர்களாகக் காணக் கிடைக்கின்றனர். அவர்களுள் தி.சு.நா கி.நாச்சிமுத்து, துரை.சீனிச்சாமி, இரா.முரளி, இரா.மோகன், ம.திருமலை, இ.முத்தையா, அ.ராமசாமி, சுந்தர்காளி ஆகியோர் அடையாளங்காட்டத் தக்கவர்களாக உள்ளனர்.

### கட்டுரை இலக்கியத்தின் சமகாலப் போக்குகள்

நவீனத் தமிழ் இலக்கிய உலகில் கட்டுரைக் கலையை வளர்த்தும் வார்த்தும் எடுத்த பெருமை சிறுபத்திரிகைக்கு உண்டு எனின் மறுப்பதற்கில்லை. இதனை ஒரு கலையாகப் பாவித்து, ''கதைக் கட்டுரை'' எனும் ஒரு நவ இலக்கிய வடிவமானது சமகாலத்தில் உருவெடுத்துள்ளது. அதன் உருவகிப்பில் பங்கு கொண்டோராக அ.முத்துலிங்கம், ஜெயமோகன், எஸ்.ரா க.மோகனரங்கன், நாஞ்சில்நாடன் முதலானோர்காணக்கிடைக்கின்றனர். இவர்கள் சம காலத்தில் வளர்த்து வருகிற புதுவிதக் கட்டுரைக் கலை என்பது, எதிர்காலத்தில் இன்னும் காத்திரமாக வளரும் எனின்,மறுப்பதற்கில்லை.

### கவனிக்கத் தக்க கட்டுரைப் படைப்புகள்

பொதுவாக, ஒருவரின் எழுத்தாற்றலையும் இயம்பியுள்ள கருத்தியல் தன்மையின் திறத்தையும் அவர் எழுதியுள்ள கட்டுரையின் வாயிலாகவே கூட அறியலாம்தான். இவ்வகையில், உரிய சிக்கலைத் தேர்ந்து, கருத்துக்களை நிரல்படக் கோர்த்து, படிப்பார்க்குச் சுவை உண்டாகும்படி எளிய மொழி ஆளுகையில், சுவைபடச்சொல்லப்பட்டுள்ளகட்டுரைகளாகச் சிலவற்றைப் பின்வருமாறு நாம் இனங்காட்டலாம். சான்றாக, பாரதியின் ''சிட்டுக்குருவி'', வ.ராவின் ''பொழுது போகலையே'', புதுமைப்பித்தனின் ''உணர்ச்சி வேகமும் நடை நயமும்'', க.நா.சு வின் விமர்சனத்தின் எல்லைகள், திரு.வி.க.வின் மனிதனும் அழகும், ரா.பி.சேதுப்பிள்ளையின் ''காளத்திவேடனும் கங்கை வேடனும்'' தெ.பொ.மீயின் ''உயிர்நிலைப் பாட்டு'', ந.மு.வேங்கடசாமி ''நாட்டாரின் வீரச்சுவை'' ஆகியவை உருவ லட்சணமும் உள்ளடக்கப் பொருண்மையும்,உத்தி நேர்த்தியும் சிறப்புற அமைந்த கட்டுரைகளாக வாசிப்பில் தென்படுகின்றன.

### நிறைவாக

கட்டுரை என்பது மறுமலர்ச்சி யுகம் பெற்றெடுத்த ஒரு நவ கலை வடிவம். இன்றைய படைப்பாளர்களும் திறனாய்வாளர்களும் தங்களின் ஆழ்மன எண்ணக் கருத்தியல்களை, உள்ளது உள்ளவாறாகவும் அழகியல் பூர்வமாகவும் வெளிப்படுத்திட, அவர்களுக்குக் கிடைத்துள்ள ஓர் ஒப்பற்ற

சாதனம் இக்கட்டுரை வடிவமே ஆகும். இத்துடன், எவ்வொரு நவ கலைஞனும் புறக்கணித்து விட முடியாத உயர்வுற்ற சாதனமாகவும் இது விளங்குகிறது. இன்றைய சமூக நடைமுறைகளில் எழுகின்ற பன்முகப் பிரச்சினைப்பாடுகளையும்கூட இக்கட்டுரை என்னும் புதிய கலைச்சாதனத்தின் வாயிலாக ஆழ - அகலமாகவும், குறுக்கு நெடுக்காவும் விவாதித்து விவரணை செய்ய முடியும். நடப்புச் சூழலிலும் சரி எதிர்காலக் கட்டத்திலும் சரி, கட்டுரை என்னும் இவ்வூட கத்தின் வழி, பன்முக வாசகர்களுக்கும் பலவிதப் படிப்பினைகளைக் கற்றுத் தருவதற்கு இயல்பாகவே இயலும்தான். இனிவரும் காலங்களிலும் கூட அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம், பண்பாடு என்கிற விடயங்கள் அனைத்தையும் இதன்வழி விவாதித்து, விரிவும் ஆழமுமாக விளங்கிக் கொள்ளப் போகிறோம் எனின் நம்பிட இடமுண்டு.

### மேற்கோள் விளக்கக் குறிப்புகள்

1. முனைவர் சுபாசு, கட்டுரை இலக்கியம், ப.16.
2. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.295.
3. மேலது ப.371
4. மேலது ப.230
5. மேலது ப.372
6. பா.ரா.சுப்பிரமணியன், (மு.பதி.ஆ) க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.233
7. எஸ்.வையாபுரிப்பிள்ளை (மு.பதி.ஆ) தமிழ் லெக்சிகன் எழட-2 'யசவ-', ப.654
8. முனைவர் சுபாசு, முந்நூல், ப.19
9. மேலது ப.27
10. ஞா.தேவநேயப் பாவாணர், கட்டுரை எழுது வது எப்படி? ப.18
11. முனைவர் சுபாசு, முந்நூல், ப.316
12. மேலது ப.27
13. மேலது ப.17
14. மேலது ப.29
15. அ.கி.பரந்தாமனார், நல்ல தமிழ் எழுத வேண்டுமா? கட்டுரை எழுதுதல், ப.399
16. முனைவர் சுபாசு, முந்நூல், ப.24
17. முனைவர் சுபாசு, முந்நூல், ப.30
18. அ.கி.பரந்தாமனார், முந்நூல், பக்.379-380

# சித்தர்களின் பார்வையில் மானுடத்தின் ஓர்மை

*முனைவர் பா. பெரியவர்*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, மேலூர்

## முன்னுரை

தமிழ் நிலத்தில் 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்திட்ட தந்தை பெரியார் அவர்கள், தம்மைப் பொதுத் தொண்டில் அர்ப்பணித்துக் கொண்டபோது மானுட சமூகத்திற்கு ஒன்றைப் பிரகடனப்படுத்தினார். அதாவது, எனக்கு, நாட்டுபற்றோ, இனப்பற்றோ, இறைப்பற்றோ, மொழிப்பற்றோ கிஞ்சிற்றும் இல்லை. மாறாக, எனக்கு மானுடப்பற்று ஒன்றைத் தவிர்த்து வேறொன்றும் எனக்கில்லை என்பார். இக்கருத்தியல் சிந்தனைக்கு முன்னூரட்டமாக, அய்யன் திருவள்ளுவன் தொடங்கி சித்தர்கள் வரை மானுட ஓர்மைக்காகவே, தத்தமது ஆளுமையை, சிந்தனையை மானுட சமூகத்திற்கு வடிகால் படுத்தியிருக்கிறார்கள் என்பது திடமான திண்ணமாகும். குறிப்பாக, இவ்வாய்வில், சித்தர்களின் வாழ்வியல் விழுமியங்கள் மானுடத்தின் ஒற்றுமைக்கும் ஓர்மைக்கும் எங்ஙனம் அடித்தளமிட்டனர் என்பதை ஆய்ந்து இயம்புவதே நோக்கமாகும்.

## சித்தர்கள்-ஆளுமையும் மானுட நோக்கும்

சித்தர்கள் என்போர் சித்திகளைக் வைரப் பெற்றவர்கள், ''சித்'' என்ற சொல்லுக்கு அறிவு எனப் பொருள்படும், சித்தர்கள் சிந்தையுடையவர்கள் ஆவர். எனவே, சித்தர்கள் என்றால், அறிஞர்கள், மேதைகள், பேராண்மை படைத்தவர்கள், மானுட விஞ்ஞானிகள், மெஞ்ஞானிகள் என்று பொருள் கொள்வதே சான்றாண்மை என்பார் சாமி சிதம்பரனார் அவர்கள். மானுடச் சமூகத்தில் பீடித்துள்ள, சாதி, சமயம், உருவ வழிபாடு, மூடப் பழக்க வழக்கம் ஆகியவற்றிற்கு முற்றும் எதிரானவர்கள் சித்தர்கள், உயிர் இரக்கம், கருணை எனும் சித்தத்தில் ஆழ்ந்தவர்கள். ஆனாலும், சிவ சமயப் பொறையில் சிவநெறியைப் பூண்டு ஒழுகியவர்கள் ஆனாலும், சமயங்களில் சொல்லப்பட்டுள்ள எதிர் நெறிகளை விலக்கிவிட்டு, ஆத்ம ஞானத்தோடு சமூக ஒருமைப்பாட்டுரிமைக்கு வழிகோலியவர்கள் எனலாம்.

சித்தர்களின் முதன்மை நோக்கு என்பது, இவ்வுலகில் பிறந்ததின் பயனாய் உடலை நிலைக்கச் செய்வது, அதன் மூலம் நிலைத்த பேரின்ப வாழ்வாகிய முக்தி நிலையை அடைவதாகும். இத்தகு நிலைக்கு அடிப்படையாக இருக்க வேண்டியது, பற்றற்ற வாழ்வும், அக கட்டுப்பாடும், அறச்சிந்தனையுமாகும். நிலையாமையை நன்குணர்ந்து, நீக்குதற்குரிய குற்றங்களை அறவே நீக்கி அன்பு எனும் நெறி ஒன்றால் மட்டும்தான், இவ்வுலக மானுட வாழ்வியலைச் செழிக்கச் செய்திடும் மார்க்கம் என்று கண்டுரைத்தனர். பொதுவாக, மானுட வாழ்வியலைச் சுட்டிக்காட்டி, ஓர்மைச் சமூகமாக வாழ்வதற்கு வழிகாட்டியதோடு மட்டுமல்லாது, மானுட சமூகம் தடைகளைத் தகர்த்து முன்னேற்றம் காண்பதற்குரிய வழிகளையும் சுட்டிக்காட்டி, சாதி, மத, இன வேறுபாடற்று மாந்தரினம் வாழ்ந்தோங்கிட வேண்டும் என்ற கோட்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டவர்கள் சித்தர்கள் ஆவர்.

## மானுட சமூகத்தின் இன்றைய நிலை

மனிதன் பிறர்க்கு எள்ளளவும் தீமை செய்யாமல், உலகியல் தொடர்புகளோடு ஒற்றுமையாகவும், நேர்மையாகவும் வாழ்ந்து தன்னையும், மானுட விழுமியத்தையும்

மேம்படுத்திக் கொள்ள நிறுவிக்கொண்ட சமூக அமைப்புக்களில் முக்கியமானவை, மதமும், அரசுமாகும். இவ்விரு அமைப்புக்களின் இயங்கியல் போக்குகளின் பால், மானுட சமூகம் சிக்கலற்ற சீர்மையான வாழ்வியலைக் கட்டமைத்துக் கொள்வதே இவ்விரு அமைப்புக்களின் இலக்காக இருந்திருக்கும் அல்லது இருந்திருக்க வேண்டும்.

எனினும், மானுட சமூகத்தின் அறிவும், ஆளுமைத் தேடலும் இந்த நூற்றாண்டில், பஞ்ச பூதங்களையும் ஆய்ந்தறிந்தும், உய்த்தும் வருகிறது. ஆனாலும் மனிதர்களின் உள்ளமும், நேயமும் கடுகைவிட சிறுத்துக்கொண்டே செல்கிறது. அவன் ஈவு இரக்கமற்ற குறுகிய மானுடப்புத்திக்கு முற்றும் எதிரான மனோபாவத்தை வளர்த்துக் கொண்டே செல்கிறான். இதற்கு உச்சபட்ச நோக்கம்தான் என்ன? ஈராயிரம் ஆண்டுகளுக்குப்பின், மானுடத்தின் வாழ்வியலை வளப்படுத்த, நெறிப்படுத்த வந்த பல்வேறு சமய அமைப்புகள், அன்பையும், வாய்மையையும், காருண்யத்தையும் மனித குலத்திற்கு திடமாக முன்னிருத்தி வந்தன. ஆனாலும், வாழ்வியல் ஓட்டத்தில், கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், பிளவுகளும், பேதமைகளும், பிரித்தாலும் சூழ்ச்சிகளும் எழுச்சி பெற்று, இறையியல் கோட்பாட்டுக்கு எதிராக வளர்ச்சி பெற்று வருகின்றன. மானுட ஆற்றலுக்கு மேலான ஒன்றினை அடைந்திட காலம் காலமாக தேடிக் கொண்டேயிருக்கிறான். இச்சுழற்சியில் சிக்கிக்கொண்டு, தமது வாழ்வை, வர்க்கம், சாதி, மதம், இனம், மொழி என்கிற மனித குலத்திற்கு எதிரான வட்டத்துக்குள் தமது வாழ்க்கையையும், வாழ்வியல் எதார்த்தங்களையும் இழந்து அலைந்து கொண்டிருக்கிறான். மனிதன் தனக்குத் தானே அடிமையாகி தமது வாழ்வியல் உரிமைகளையும் இழந்து, பகுத்தாயும் சுயத்தையும் இழந்து விட்டான். அகத்தூய்மையை போலித்தனத்திற்கு காவு கொடுத்துவிட்டான். குறிப்பாக நீதி நெறிகளையும் சுய இச்ச உணர்வுக்கு ஆட்பட்டு தமது அக அறிவையும் இழந்து, மூட நம்பிக்கைகளுக்குள் புதைந்துவிட்டான். ஆம், ஆடை களைந்த பிண்டமாய் மரித்துக் கொண்டான்.

18-ம் நூற்றாண்டில் இறுதியில் வாழ்ந்த இராமலிங்க அடிகள், "மாந்தரினம் மனித நேயத்தை மறந்து பேராசையால் உந்தப்பட்டு அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது" என்று அலறினார். ஆம், அழிவைத் தடுக்க வேண்டுமானால், மனித குலத்தில் மனமாற்றம் நிகழ்ந்தாக வேண்டும். மனிதனுடைய மனதில் ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. மானுட வர்க்கம் தம்மையும் தாழ்த்தாது, பிறரையும் தாழாது வாழ்வது தான் மனித வாழ்வியல் நியதி என்று உணர்ந்திடும் நிலை தற்கால சூழலில் உருவாகிட வேண்டும்.

### சித்தர்களின் மானுட நேயம்

**''சுரமிக்கக் கற்றாலும் சிந்தையெல்லாம் பெற்றாலும்**
**முனமிரக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே''**

என்கிறார், தாயுமானவர், இக்கருத்தியலை, மேலைநாட்டு தத்துவ மேதை ஆண்ரோ கிரோம்ஸி (இத்தாலி) என்பவர் ''ஒரு சமூகத்தை ஓர்மைப்படுத்துவதும், ஒற்றுமைப்படுத்துவதும், வலுப்படுத்துவதும், வழிப்படுத்துவதும் அச்சமூகத்தில் பிறந்திட்ட அறிவாளிகளின் ஆத்மபூர்வ கடமையாகும்'' என்கிறார். இத்தகைய கருத்து நிலையோடு, நல்நேயம் படைத்தவர்களை, மானுட மாண்பு உணர்ந்தவர்களை, அறத்தூய்மை பேணுபவர்களை, நோக்கி, இப்பிரபஞ்சம் என்பது வெளிகளால் (எல்லை) விரிந்த அன்று, அது மனவிருத்தியால் விரிந்தது எனும் கோட்டுபாட்டுத் தத்துவத்தை நிலை நிறுத்தி சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே, தமக்கென வாழாது, மானுட வெளிச்சத்துக்காகவே இந்நிலத்தில் தோன்றாப் புகழோடு கோன்றியவர்கள் சித்தர்கள்.

**''அன்போடு இயைந்த வழக்கென்ப ஆர்உயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு''**

***(குறள் 73) (அ) அன்புடைமை)***

அதாவது, உயிரும் உடலும் தொடர்பு கொண்டு ஒன்றியிருக்கும் உறவானது, அன்போடு பொருந்தி

வாழும் வாழ்வியல் பயன் என்கிறார் வள்ளுவர். ஆம், அன்பும், வாய்மையும், பகுத்தறியும் நேயமும், கள்ளம் கபடமற்ற வாழ்வும், வாழ்வின் பயன்களும் மெய்யான பொழுதுதான் மனிதன் மனிதனாக வாழ்கிறான். இவ்வாறு, உள்ளத்துள் ஒளிரும் உள்ளொளி வாய்மைகளே சித்தர்கள் ஆவர். சித்தர்களின் எண்ணங்கள், மானுடத்துக்குள் ஒட்டுமொத்த அகவய ஃ புரவய புரட்சிக்கும், விதையாகவும் வினையாகவும் மானுட குலத்து க்கு விழுதாகவும் அமைந்தன எனலாம்.

**''அஞ்ஞானம் விட்டே அருள் ஞானத்து எல்லை தொட்டு**
**மெய்ஞான வீடுபெற்று வெளிப்படுவது எக்காலம்''**

அன்புடைமையும், அருள் உடைமையும் பொது உடைமையாய் மானுடம் பெறுவது எக்காலம்? அடிப்படைவாத கூறுகளான இனம், மதம், கடவுள், பேதங்கள் எனும் பழமை வாத மூடத்திலிருந்து விடுபடுவது எக்காலம்? அறிவும் அறமும் பண்படுவது எக்காலம்? மேன்மையும், ஒழுக்கமும் ஓர்மை மானுடராய் நம்மைக் காட்டுவது எக்காலம்? என்று பதறுகிறார் பத்ரகிரியார். இக்கருத்திற்கு வலுவூட்டுகிறார் தந்தை பெரியார் அவர்கள்,

**''நம் கடவுள் - சாதி காப்பாற்றும் கடவுள்**
**நம் மதம் - சாதி காப்பாற்றும் மதம்**
**நம் இலக்கியம் - சாதி காப்பாற்றும் இலக்கியம்**
**நம் மொழி - சாதி காப்பாற்றும் மொழி''**
***(நூல் - பெரியார் - 125 - (ஆசி.) அருணன் பக்கம்-18)***

என்று பழமைவாத கூறுகளை பகுத்தாய்து அறுதிடுகிறார். இக்கருத்து மேலோட்டமாகப் பார்த்தால் எதிர்மறையாக தோன்றும், ஆனால், ஆழ்ந்து சிந்தித்தால் இன்றைய வாழ்வியல் எதார்த்தங்களை விழிப்புற்று எச்சரிக்கிறார். இந்த ஐந்தின் மீதும் அவருக்கிருந்த கோபம் என்பது மானுடத்தின் மீது இருந்த பற்றால்தான் என்று உணரமுடியும். ஆம், ''வாழ்வியலின் நோக்கம் வாய்மையைத் தேடுவது, அதற்காக எதையும் துறக்கலாம், எனினும் வாய்மையைத் துறக்கலாகாது'' என்பார் கடுவெளிச்சித்தர். ''வாய்மையை உணர்வதற்கு, மனம் சுத்தமாகவும், அகத்தூய்மையோடும் இருத்தல் வேண்டும்'' என்பார், அழுகுளிச்சித்தர். ''உண்மைப் பொருள் உண்டென்னும் நல்லறமும் அன்பும் நன்றென்றுணர்ந்து தன்னை அறிந்த பின்னர் தான் முக்திநிலை என்றுணர்'' என்கிறார் பட்டினத்தார். அதனையே, ''கை விளக்காகக் கொண்டு கடலில் வீழ்வது போல், மெய் விளக்கு உன்னில் இருக்க வீழ்வதேன்'' என்பார் இடைக்காட்டுச் சித்தர். மேலும்,

**''தன்னைமறந்து ஒழுகியோர் தன்னை மறைப்பார்**
**தன்னை அறியாதவரே தன்னைக் காட்டுவார்**
**பின்னை ஒரு கடவுளைப்பேண நினைப்பார்**
**பேரொளியைப் பேணுவாய் என்றாடு பாம்பே''**

என்று சாடுகிறார் பாம்பாட்டிச் சித்தர். இதையே கிரேக்க அறிஞன் சாக்ரடீஸ் ''உன்னையே நீ அறிவாய்'' என்று முன்னமே மொழிந்தார். மேலும் ''குரு இருப்பதும் உள்ளத்திலே, மணக்கோணல் இருப்பதும் தனக்குள்ளே, பொருள் இருப்பதும் உள்ளுக்குள்ளே'' என்று ஞானச்சுடர் ஏற்றுகிறார் வாலைச்சாமி சித்தர். இங்ஙனம், ''கடவுளுக்கு முன்னால், அவனால் கருக்கொண்டவை யனைத்தும் சமம், மாந்தர்களிடம் காட்டும் அன்பொன்றே இறைவனை அடையும் வழி, மற்றவர்களின் துன்பத்தைக்கண்டு துவலாமல், அவர்களுக்கு கரம் நீட்டாமல் தேவாரம் படித்து என்ன பயன்'' எனச் சாடுகிறார் குதம்பைச் சித்தர். மேலும்,

**''உள்ளத்தில் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெல்லக் குடைந்து நின்றாடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ள மனமுடைக் கல்வியில்லோரே''**

இப்பாடல் வழி திருமூலர் உணர்த்துவது, சித்தர்களின் ஞானக்கல்வி என்பது, சுயத்தோடும், ஆன்ம ஞானத்தோடும் கற்றுணர்ந்தவர்கள் என்பதையும் மாசற்ற நேயம் பூண்டவர்கள் என்பதையும் தெளிவாக்குகிறது.

மானுட வர்க்கத்தின் எல்லா இடர்பாடுகளுக்கும் மையம் யாதெனில் ஐம்புலன்களின் சுய ஒழுக்க மின்மையே அடிப்படையாகும். மனிதகுலம் ஐம்புலன்களையும் அடைக்கியாளுகிறபோது

மேன்மையடைகின்றனர். ஐம்புலன்களாகிய கேள்வி, ஊறு, காட்சி, சுவை, நுகர்ச்சி ஆகியன ஒடுங்கும் போது, உடலின் செயல் அடங்கிச் சமநிலை அடைகிறது. அப்படிப்பட்ட ஞான ஒழுக்கம் மானுடர்க்கு வசப்படும் போது ஐம்புலன்களும் சுடர் ஒளியாய் பரவிடும் என்கிறார்கள் சித்தர்கள்.

**சித்தர்களின் மானுடப்பற்றும் வழிகாட்டுதலும்**

திருமூலர் கீழ்க்காணும் பாடலில்,

**''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ள பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத்தெளிந்தோர்க்கு சிவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனனைத்தும் காணா மணி விளக்கே''**

இக்கருத்தை திருமூலர், பெருங்கோயில், ஆலயம் என்ற இரண்டு பதங்களும் வெவ்வேறு பொருள்பட அமைக்கிறார். ஆலயம் எனும் சொல் முழுமையடைந்த கோயிலையும், பெருங்கோவில் என்பது கருவறையையும் குறிக்கப்படும் எனலாம். சிவன், சிவத்தை பூசிக்கும் மார்க்கம் எனும் பொருள்பட சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். இன்றைய, உலகில், சமயச் சண்டையும், சாதிய, இனபேதச் சலுக்குகளும் பெருகிவரும் அவலச் சூழலை நீக்கி அமைதி வழி நாட வழிகோலியவர்கள் சித்தர்கள். மனிதன் இறைவனை வழிபடப் புறச் சடங்குகளும், அருவங்களும் தேவையில்லை என்றும், இறைவனிடம் புகுதற்குரிய, நீரும், பூவும் மனித உடம்புக்குள்ளேயே இருக்கின்றன. அப்பூக்களைப் பறித்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்திடத் தேவையில்லை. மனமாகிய மலர் கொண்டு அர்ச்சித்தல் போதும், ஆடுகின்ற தீர்த்தங்கள் எல்லாம் உன் உள்ளத்திலே சுரக்கின்றன என்று மானுடர்க்கு உணர்த்து கின்றார். இன்றைய, அவசர வாழ்வியலுக்கு மாமருந்தாகவும், தீர்வாகவும் வழிகாட்டிச் செல்கிறார் பாம்பாட்டிச் சித்தர், அதாவது,

**''சமய பேதம் பலவான சாதி பேதங்கள்**
**சமயத்தோர்க்கே அல்லது கற்களுக்கோ''**

சமயபேதங்களையும், சாதியபேதங்களையும், கடவுளின் பெயரால் நிகழ்ந்து வரும் கெடுநிலைக் கண்டு கடுமையாக கண்டிக்கிறார். இவ்வாறு பன்னிரு சித்தர்களும் தம்மை வருத்திக் கொண்டு மானுட சமூகத்திற்கு நல் வழி காட்டிச் செல்கின்றனர் எனலாம்.

**நிறைவுரை**

**''ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல''**

***(அ)34, நிலையாமை குறள்-337)***

அதாவது, மனிதன் ஒரு வேளையாவது எப்படி வாழவேண்டும் என்பதை அறியாதவர்கள், தம் வாழ்வில் வீணாக பலகோடி எண்ணங்களை அடைகாத்துக் கொள்வர் என்கிறார் அய்யன் திருவள்ளுவர். குறிப்பாக, மானுட ஒர்மையையும், ஒற்றுமையையும் உள்வாங்கியவராகவே, அறிவுல சிற்பி அண்ணல் அம்பேத்கர் அவர்கள், ''ஒரு தனி மனிதன் தன் சொந்தக் கருத்துக் களையும், தனது சுதந்திரத்தையும், நலனையும், தான் சார்ந்துள்ள குழுவின் (சமுதாயம்) வரையறைகளையும், அக்குழுவின் அதிகாரத்தையம் மீறி, சகலமானவர்களுக்கும் அறிவுறுத்துவதுதான் எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் தொடக்கமாகும். மேலும், இச்சமூகத்தில் கற்றுணர்ந்தவர்களின் அறிவும், வழிகாட்டுதலும் சமநிலைச் சமூக மாற்றத்திற்கு வழிகோலாமல், எதிர்நிலையில் பயணப்படுமேயானால் அது விலங்கிலும் கொடியது'' என்கிறார். (நூல்-சாதி ஒழிப்பு-அம்பேத்கர்(அத்-2-பக்-52)

ஆக. சித்தர்கள் மக்களிடையே வாழ்ந்து ஆசைகளில் உழன்று. தம் வாழ்வியல் அனுபவத்தால். மானுட வாழ்வின் உளச்சிக்களையும். அச்சிக்களிலிருந்து விடுபடும் மார்க்கத்தையும் வகுத்தளித்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் யாவரும் கற்றுத் தேர்ந்தவர்களன்று, மாறாக, தம் அவையத்துப் புலன்களை அடக்கியாண்டு மானுட வாழ்வியலுக்கு தீர்க்கமான வழியையும். மனிதன் மனிதனாக வாழ்ந்திட நல் மார்க்கங்களையும் இவ்வுலகிற்கு வழங்கி என்றும் சுடர் ஒளியாய் துலங்கிக் கொண்டிருப்பவர்கள் சித்தர்கள் ஆவர். ஆம் சித்தர்களின் சீர்மிகு மானுட நேயத்தையும். மார்க்கங்களையும் கண்ணுற்றும். மெய்யால் உணர்ந்தும். மானுட சமூக ஓர்மை எனும், பெருங்கடல் நீரோட்டத்தில் நம்மையும் இணைத்துப் பயணிப்போமாக.

# சங்க இலக்கியத்தில் உணவு முறைகள்

***முனைவர் த. மலர்விழி***
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறை
அருள் ஆனந்தர் கல்லூரி, மதுரை

*மக்களினத்தின் நாகரிகத்தை - பண்பாட்டை உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவன இலக்கியங்கள். ஒவ்வொரு இனமும் தன் பழமைக்கேற்பத் தன் மரபுகளையும் கூரிய அறிவுத் திறத்தையும் இலக்கிய நுட்பங்களால் வெளிப்படுத்தும் அருமைமிகு செந்தமிழ் நாட்டின் மிகப் பெரும் பழமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன தொன்மை இலக்கியங்கள். வாழ்வியல் சிறப்பால் உணர்ந்து உயர்ந்த தமிழ் மக்களின் உயரிய எண்ணங்களைச் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. சங்க காலத் தமிழ்ச் சமுதாயம் தாம் உறுதியாகப் போற்றியவற்றை விரும்பியவற்றைத் தங்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளில் பதிய வைத்தது.*

*மனிதன் உயிர் வாழ இன்றியமையாத பொருள் உணவாகும். பண்டை மனிதனது முதல் தொழிலே உணவு தேடலாயிருந்தது. அவன் இயற்கையாய்க் கிடைத்த காய்களையும் விதைகளையும் கிழங்குகளையும் உண்டான்;. பின்னர்ப் பறவைகளையும் விலங்குகளையும் வேட்டையாடி அவற்றின் இறைச்சியைப் பதப்படுத்தாமலே உண்டு வந்தான்;. அறிவும் ஆராய்ச்சியும் பெருகப்பெருகத் தீயை உண்டாக்க அறிந்தான்.; அதன் பின்னரே தான் அதுகாறும் பச்சையாய் உண்டு வந்த வாயிலாகவே சமுதாய உணர்ச்சியும் வளர்ந்தது. குடும்பத்தினர் சேர்ந்து பயிர்த் தொழிலைச் செய்யலாயினர். இம்முயற்சியால் சிற்றூர்கள் தோன்றின. உணவுப் பொருள்களை உண்டாக்கி உண்ணும் முறைகள் மாற மாற உணவுடன் சுவையும் நாகரிகமும் பிறவும் வளரத் தொடங்கின. சமையல் தொழில் ஒரு கலையாய் மாறியது என்பதற்கு “நளபாகம்” “வீமபாகம்” என்னும் தொடர்களே ஏற்ற சான்றாகும். “வீமபாகம்” பற்றிய குறிப்புச் சிறுபாணாற்றுப் படையில் இடம் பெற்றுள்ளது.*

*பொருநர் பாணர் கூத்தர் என்னும் கலைவாணர் பேரரசரையும் சிற்றரசரையும் கண்டு தம் கலைகளை விளக்கிப் பரிசில் பெற்று வாழ்ந்தனர். மன்னர்கள் அவர்களை இனிய முகத்துடன் வரவேற்று நல்லுடைகளையும் பல வகை உண்டி வகைகளையும் வழங்கி உபசரித்தார்கள்; வேண்டிய பொருளுதவி புரிந்தார்கள். குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் நிலப் பொதுமக்களும் அக்கலைவாணரைத் தம்மால் இயன்ற வரை உணவு தந்து உபசரித்தனர். இவ்விரங்கள் வரும் இடங்களில் அக்காலத் தமிழர் உணவு வகைகள் குறிப்பிட்டுள்ளன. மதுரையில் ஆதுலர் சாலை இருந்தது. அங்கு வழங்கப்பட்ட உணவு வகைகள் மதுரைக்காஞ்சியில் கூறப்பட்டுள்ளன. இவற்றுடன் பல குடி வகைகளும் கூறப்பட்டுள்ளன.*

## ***குறிஞ்சி நிலத்தார் உணவு***

*சோழ நாட்டுக் குறிஞ்சி நில மக்கள் தேனையும் கிழங்கையும் உண்டார்கள்; பிற நிலத்தார்க்கும் விற்று மீன் நெய்யையும் நறவையும் வாங்கிச் சென்றார்கள் (பொரு. அடி. **214 - 215**). சிறப்பு நாள்களில் நெய் மிக்க உணவு உட்கொள்ளப்பட்டது (குறி. அடி. **304**)*

*நன்னனுக்குரிய சவ்வாது மலையின் அடிவாரத்தில் இருந்த சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் தினைச்சோறும் நெய்யில் வெந்த இறைச்சியும் உண்டார்கள் (மலை. அடி. **168 - 169**).*

**பாலை நிலத்தார் உணவு**

ஓய்மானாட்டுப் பாலை நில மக்களான வேட்டுவர் இனிய புளிங்கறியிடப்பட்ட சோற்றையும் ஆமாவின் சூட்டிறைச்சியையும் உண்டனர் (சிறு. அடி. 175 - 177). தொண்டை நாட்டுப் பாலை நில மக்கள் புல்லரிசியைச் சேர்த்து நிலவுரலிற் குற்றிச் சமைத்த உணவை உப்புக் கண்டத்தோடு உண்டார்கள்; விருந்தினர்க்குத் தேக்கிலையில் உணவு படைத்தார்கள் (பெரும். அடி. 95 - 100). மேட்டு நிலத்தில் விளைந்த ஈச்சங்கொட்டை போன்ற நெல்லரிசிச் சோற்றையும் உடும்பின் பொரியலையும் உண்டார்கள் (பெரும். அடி. 130 - 133).

**முல்லை நிலத்தார் உணவு**

தொண்டை நாட்டு முல்லை நிலத்தார் பாலையும் தினையரிசிச் சோற்றையும் உண்டனர் (பெரும். அடி. 167 - 168). முல்லை நிலச் சீறூர்களில் இருந்தவர் வரகரிசிச் சோறும் அவரைப் பருப்பும் கலந்து செய்த "கும்மாயம்" எனப் பெயர் பெற்ற உணவை உண்டனர் (பெரும். அடி. 192 - 195).

நன்னனது மலை நாட்டு முல்லை நிலத்தார் சிவந்த அவரை விதைகளையும் மூங்கில் அரிசியையும் மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லின் அரிசியையும் புளி கரைக்கப்பட்ட உலையிற் பெய்துண்டனர் (பெரும். அடி. 434 - 436). பொன்னை நறுக்கினாற் போன்ற நுண்ணிய ஒரே அளவுடைய அரிசியை வெள்ளாட்டு இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய சோற்றையும் தினைமவையும் உண்டனர் (பெரும். அடி. 440 - 445).

**மருத நிலத்தார் உணவு**

சோழநாடு சோற்று வளம் மிகுந்தது; நல்ல காய் கறிகள் மிக்கது. ஆதலின் சோணாட்டார் நல்ல அரிசிச் சோற்றையும் காய்கறிகளையும் நிரம்ப உண்டிருத்தல் வேண்டும். ஆயினும் சிலவே இந்நூலுள் குறிப்பிட்டுள்ளன. மருதநில மக்கள் கரும்பும் அவலும் குறிஞ்சி நிலத்தார்க்குக் கொடுத்து மான் தசையையும் கள்ளையும் பெற்றுக் கொண்டனர் என்பது பொருநர் ஆற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது (பெரும். அடி. 216 - 217).

**நெய்தல் நிலத்தார் உணவு**

ஓய்மானாட்டு நெய்தல் நிலத்தார் நுளைச்சி அரித்த கள்ளையும் உலர்ந்த குழல் மீனின் சூட்டிரைச்சியையும் உட்கொண்டனர் (சிறு. அடி. 156 - 163). தொண்டை நாட்டுப் பட்டினத்தில் (இக்கால மாமல்ல புரத்தில்) நெல்லையிடித்த மாவாகிய உணவை ஆண்பன்றியைக் கொன்று அதன் இறைச்சியைச் சமைத்து உண்டனர்; களிப்பு மிகுந்த கள்ளைப் பருகினர் (பெரும். அடி. 339 - 345).

**மறையவர் உணவு**

பாற்சோறு பருப்புச்சோறு ஆகுதி பண்ணுதற்கு ஏற்ற இராசான்னம் என்னும் நெல்லின்சோறு மிளகின் பொடியுடன் கலக்கப்பட்டுக் கருவேப்பிலை இடப்பட்டுப் பசுநெய்யிற் கிடந்து வெந்த கொம்மட்டி மாதுளங்காய் மாவடு ஊறுகாய் என்பனவற்றைத் தொண்டை நாட்டு மறையவர் உண்டனர் (பெரும். அடி. 304 - 310).

**மன்னர்களின் விருந்து**

சோழநாட்டு மன்னனான கரிகாலன் தன்னை நாடி வந்த பொருநனுக்கும் அவனைச் சேர்ந்தவர்க்கும் உணவளித்த திறம் பொருநர் ஆற்றுப்படையில் பின்வருமாறு பேசப்பட்டுள்ளது.

பொருநர் அரண்மனையை அடைந்தவுடன் பணிப்பெண்டிர் பருகியவரை மயங்கச் செய்யும் மகிழை (கள்ளை)ப் பொற்கலங்களில் வார்த்துத் தந்தனர் (அடி. 84-88). பொருநர் அதனை உண்டு வந்த களைப்பைப் போக்கிக் கொண்டனர். கொழுத்த செம்மறிக்கிடாயின் இறைச்சித்துண்டங்கள் சில இரும்புக் கம்பியில் கோத்துச் சுடப்பட்டன; வேறு சில இறைச்சி வகைகள் வேகவைக்கப்பட்டன; பல வடிவங்களில் அமைந்த பல்வேறு இனிப்புச் சுவையுடைய பண்ணியாரங்கள் (தின்பண்டங்கள்) வைக்கப்பட்டன. முல்லை அரும்பை ஒத்த மெல்லிய அரிசிச்

சோறும் படைக்கப்பட்டன. முல்லை அரும்பை ஒத்த மெல்லிய அரிசிச்சோறும் படைக்கப்பட்டது. பாலைக் காய்ச்சி அதனோடு கூட்டின பொரிக்கறிகளும் வைக்கப்பட்டன (அடி. 103 -116). பிரியா விடை பெறும் பொழுது இனியபூ (குங்குமப்பூ) மணக்கின்ற தேறல் (கள் தெளிவு) பருகத் தரப்பட்டது (அடி. 157).

ஒய்மானாட்டுத் தலைவனான நல்லியக் கோடன் அரண்மனையில் பாணருக்குப் பாம்பு விடம் ஏறி மயக்கினாற்போல மயக்கத்தை உண்டாக்கும் தேறல் (கள் தெளிவு) தரப்பட்டது; வீமசேனன் வரைந்த சமையற்கலை நூலிற் கண்டபடி உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு பொற்கலங்களில் படைக்கப்பட்டன (சிறு.அடி. 237 - 244).

தொண்டை நாட்டுத் தலைவனான இளந்திரையன் என்பானது காஞ்சிமாநகரத்து அரண்மனையில் சமையில் வல்லோன் பல இறைச்சி வகைகளைத் தயாரித்தான்; செந்நெற்சோற்றை வடித்தான்; கண்ட சருக்கரையோடு அடிசிலை (சருக்கரைப் பொங்கல்) ஆக்கினான். இங்ஙனம் வல்லோனால் ஆக்கப்பட்ட பல வகை உணவுப்பொருள்கள் பாணர் பிள்ளைகளுக்குச் சிறிய வெள்ளிக்கலங்களிலும் பெரியவர்களுக்குப் பெரிய வெள்ளிக்கலங்களிலும் படைக்கப்பட்டன (பெரும். அடி. 471 - 480).

## மதுரையில் உணவு

பீடு மிக்க மாடமதுரையில் வாழ்ந்த பாணர் கொழுவிய இறைச்சி வகைகளைத் தின்றனர்; பல வகைச் சோற்றை வெறுத்துக் கள்ளை மிகுதியாகப் பருகினர்; என்பது மதுரைக் காஞ்சியில் கூறப்பட்டுள்ளது (அடி. 210 - 213).

மதுரையில் பல வகைச் சோறுகள் தயாரிக்கப்பட்டன என்பது இதனால் தெரிகின்றதன்றோ? இக்காலத்தில் வெண்சோறு ஊன் சோறு தயிர்ச் சோறு சருக்கரைப் பொங்கல் வெண்பொங்கல் எனப்படும் சோற்று வகைகள் அக்காலத்திலும் இருந்தன என்று கருதலாம்.

தென்பாண்டிநாட்டுப் பரதவர் (மீனவர்) கொழுத்த இறைச்சியிட்டுச் சமைக்கப்பட்ட சோற்றைச் சிறப்பாக உண்டனர் என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது (அடி. 141).

பாண்டியர் தலைநகரான மதுரையில் ஏழைகளுக்குச் சோறிடும் சாலைகள் (ஆதுலர் சாலைகள்) இருந்தன. அவற்றில் இருந்த எளியவர்க்குப் பலாச்சுளை மாம்பழம் வாழைப்பழம் முந்திரிகைப் பழம் பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் (நீண்ட கத்திக்காய்) முதலிய (சமைத்த) காய்கள் பல வகை இலைக்கறிகள் இனிப்புப் பண்டங்கள் இறைச்சி கலந்த சோறு (பக்குவப்படுத்தப்பட்ட) பல வகைக் கிழங்குகள் பாற்சோறு பால் என்பவை படைக்கப்பட்டன (மது. அடி. 527 - 535).

பாண்டி நாட்டில் விழா நடைபெற்ற இடங்களில் விழாக்காண வந்தவர்க்கெல்லாம் சோறு படைத்தல் அக்கால வழக்கம் (மது. அடி. 201 - 203).

## புலால் அற்ற உணவு

பெரும்பாணன் தொண்டை நாட்டில் வேதியர் வீட்டில் இராசான்னம் மாதுளம்பிஞ்சைப் பிளந்து மிளகுப் பொடியும் கருவேப்பிலையும் கலந்து பசு வெண்ணெயிலே வேகவைத்த பொரியல் முதலியன கிடைக்கும் என்று கூறினானே தவிரப் புலால் கிடைக்கும் என்று கூறவில்லை (பெரும். அடி. 304 - 310). எனவே சங்க கால வேதியர் இல்லங்களில் புலால் உணவு சமைக்கப்படவில்லை என்று உணர முடிகிறது.

இங்ஙனமே காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வேளாளர் கொலை செய்யாதவர்; களவு செய்யாதவர்; தேவர்களை வணங்கினர்; அவர்களுக்கு வேள்வியில் ஆவுதி கொடுத்தனர்; பசுக்களையும் எருதுகளையும் பாதுக்காத்தனர்; வேதியர் புகழைப் பரவச் செய்தனர்; ஏழைகளுக்குப் பல பண்டங்களைக் கொடுத்தனர்; சிறந்த நல்லொழுக்கத்தைப் பின்பற்றி நடந்தனர் (பட். அடி. 109 - 205).

## ஊறுகறி

குடும்பத்துடன் உப்பை வண்டிகளில் ஏற்றி ஊர் ஊராய்ச் சென்று வாணிகம் செய்து வந்த

உமணர் ஊறுகாய்ப் பானைகளைத் தம் வண்டிகளில் கட்டிருந்தனர். ஊறுகாய் "காடி" எனப்பட்டது. அது வைக்கப்பட்டிருந்த பாத்திரம் "காடி வைத்த கலம்" எனப்பட்டது. "புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்ததனைக் "காடி" என்றார் என்பது நச்சினார்க்கினியர் விளக்கம்.

**சிற்றுண்டி**

கூவியர் (அப்ப வணிகர்) கரிய சட்டியில் பாகுடனே வேண்டுவன கூட்டி நூல்போல அமைத்த வட்டம் (இக்கால இடியப்பம் போன்றது) ஒரு வகைச் சிற்றுண்டியெனப் பெரும்பாணற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது (அடி. 377 - 378). மதுரை நகரக் கடைத் தெருவில் சிற்றுண்டிக் கடைகள் இருந்தன. அவற்றிற் பாகில் சமைத்தல் அமைந்த நல்ல வரிகளையுடைய தேனிறாலைப் போன்ற மெல்லிய அடைகள் செய்யப்பட்டன; பருப்பையும் தேங்காயையும் உள்ளீடாய்க் கொண்ட சருக்கரை கூட்டிப்பிடித்த "மோதகம்" என்ற ஒரு வகைத் தின்பண்டமும் செய்யப்பட்டது. இனிய பாகோடு சேர்த்துக் கரைத்த மாவைக் கொண்டு கூவியர் பல சிற்றுண்டி வகைகளைச் செய்தனர் (மது. அடி. 624 - 627).

**குடிவகை**

அரசன் முதல் ஆண்டி ஈறாக அனைவருமே அக்காலத்தில் குடிப்பழக்கம் உடையவராயிருந்தனர். ஆயின் அவரவர் தரத்திற்குத் தக்கபடி குடி வகை வேறுபட்டிருந்தது. "பூந்தேனைக் கொண்டு ஒரு வகைக் குடி செய்யப்பட்டது" வேறு வகைத் தேனைக் கொண்டும் குடிவகை தயாரிக்கப்பட்டது;. இஃது இக்கால "சர்பத்து'ப் போன்றதென்னலாம். தென்னங்கள் பனங்கள் அரிசிக்கள் எனப் பலவகையான குடிவகைகள் வழக்கில் இருந்தன. கள் முங்கிற்குழையில் ஊற்றி முற்றச் செய்தும் பருகப்பட்டது. மேனாடுகளிலிருந்து யவனரால் இறக்குமதி செய்யப்பட்ட குடிவகையும் இருந்தது. எளிய மக்கள் முதல் நாடாண்ட மன்னன் வரையில் இக்குடி வகை சிறப்பிடம் பெற்றிருந்தது என்னலாம். ஒவ்வொரு குடிவகையும் புலவரால் தனித்தனியே சிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி நிலத்தார் நெடிய மூங்கிலரிசி கொண்டு தயாரிக்கப்பட்ட கள்ளின் தெளிவைப் பருகினர்; தேனைக் கொண்டு தயாரித்த கள்ளை மூங்கிற் குழையுள் இட்டு முற்றச் செய்து பருகினர். இக்கள் "தேக்கள் தேறல்' எனப்பட்டது (முருகு. அடி. 195)

இல்லங்களில் நெல்லைக்கொண்டும் பிற பொருள்களைக் கொண்டும் கள் சமைக்கப்பட்டது.

**இல்லடு கள்இன் தோப்பிபருகி**

என்பது பெரும்பாணாற்றுப்படையில் உள்ள (அடி. 142) தொடராகும். இதற்கு "தமது இல்லிற் சமைத்த கள்ளுகளில் இனிதாகிய நெல்லாற் செய்த கள்ளையுண்டு" என்று நச்சினார்க்கியர் உரை வரைந்துள்ளார் (பெரும். அடி. 142). மதுரை மாவட்டத்தில் தொப்பி (தோப்பி) நெல் என ஒரு வகையுண்டு. இத்தோப்பி அரிசியைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கள் "தோப்பி"எனப் பெயர் பெற்றது போலும்!

சோழநாட்டுத் துறைமுக நகரமான காவிரிப்பூம்பட்டினத்துப் பரதவர் பனங்கள்களைப் பருகினர். அது "பெண்ணைப் பிழி" எனப் பெயர் பெற்றது (பட்.அடி.89). பெண்ணை - பனைமரம் காவிரிப்பூம்பட்டினத்துச் செல்வ மகளிர் மட்டு என்னும் பெயர் கொண்ட ஒரு வகைக் கள்ளையும் பருகினர் (பட். அடி. 108). "மட்டு - கள்" என்பது நச்சினார்க்கினியர் உரை. ஆயின் பின்னூலான சிந்தாமணியில் "மட்டுகாமபானம்" என்று நச்சினார்க்கினியரே (செ. 98 உரை) பொருள் கூறியுள்ளார். மேலே கூறப்பெற்ற செல்வ மகளிர் "மது' எனப் பெயர் கொண்ட ஒரு வகைக் கள்ளையும் பருகினர். "மது - காமபானம்" என்பது நச்சினார்க்கினியர் உரை (பட். 108). அச்செல்வ மகளிர் இராக்காலத்தில் கணவரோடு இன்புறப் பட்டாடைகளை நீக்கி மது மகிழ்ந்தனர்; என்று பட்டினப்பாலை ஆசிரியர் கூறுதலைக்காண "மட்டு" என்பது சாதாரண இன்சுவைப் பானம் என்றும் அதனால் அதனை நீக்கி வேட்கையைத் தூண்டும் "மது" என்னும்

காமபானத்தை உட்கொண்டனர் என்றும் கொள்வது பொருத்தமாகும்.

நன்னது மலை நாட்டு மக்கள் தேனால் தயாரிக்கப்பட்ட கள்ளை மூங்கிற்குழையுள் விட்டு முற்ற விட்டுப் பின்பு அதன் தெளிவைப் பருகினார்கள் என்று மலைபடுகடாம் கூறுகின்றது. அக்கள்ளின் தெளிவு "தேக்கள் தேறல்" எனப்பட்டது (மலை.171, 522). இங்ஙனம் தேனாற்செய்த கள்ளின் தெளிவை மூங்கிற் குழையில் முற்ற விட்டுப் பருகுதல் மலைநாட்டார் பழக்கம் என்று திருமுருகாற்றுப்படையும்

***நீடமை விளைந்த தேக்கள் தேறல்***

***(அடி. 195)***

எனத் தெரிவிக்கிறது.

நன்னனது மலைநாட்டார் வைக்கும் விருந்தில் கலந்து கொள்பவர் உடும்பு, கடமான், பன்றி ஆகியவற்றின் பதப்படுத்தப்பட்ட இறைச்சித் துண்டங்களை உண்டு கொண்டே இடையில் மேலே சொல்லப்பட்ட தேக்கள் தேறலைப் பருகுவார்; இறுதியில் நறவு என்னும் ஒரு வகைக் கள்ளையும் பருகுவர் என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார் (மலை. அடி. 171 - 177). எனவே, தேக்கள் தேறல் வேறு, நறவு வேறு என்பது தெளிவாகிறது. "நறவு - நெல்லாற் சமைத்த கள்" என்பது நச்சினார்க்கினியர் உரை. மலைபடுகடாம் செய்யப் பட்டு ஏறத்தாழ தொள்ளாயிரம் ஆண்டுகட்கு பின்பு தோன்றிய தக்கயாகப் பரணியில் "நறவுகொள் மகளிர் - காமபாணம் செய்யும் வாமமார்க்கப் பெண்கள்" என்பது வரையப்பட்டுள்ளது (கண்ணி.25. உரை). கம்பர் தமது இராமயணத்துள்

***காமம் வருந்திய பயிர்க்கு நீர்போல்***
***அருநற(வு) அருந்து வாரை***
***(ஊர்தேடுபடலம்.செ.107)***

***ராஜாஜி, இராமாயணம் 1995.***

என்று குறித்துள்ளார். இங்கும் நறவு என்பது காம பானத்தையே குறிக்கிறது என்னலாம்.

எனவே, மேலே சொல்லப்பட்ட மது என்பதும் இங்குச் சொல்லப் பட்ட நறவு என்பதும் காமபானம் என்பது இங்கு அறியத்தகும்.

கரிகாலன் அரண்மனையில் பருகப்பட்ட கள் "மகிழ்" (பொரு. அடி. 84) எனவும் "மகிழ் பதம்" (மகிழ்ச்சி விளைக்கும் கள்) எனவும் பெயர் பெற்றது (பொரு. அடி. 111); குங்குமப்பூ மணத்தையுடைய கள்ளின் தெளிவு "பூக்கமழ் தேறல்" எனப்பட்டது (அடி. 157); பாண்டியன் தன் அரண்மனையில் பருகியது "மணம் கமழ் தேறல்" (அடி. 780) எனப்பட்டது. அது போன்ற காமபானமாயிற்று என்பது நச்சினார்க்கியர் விளக்கம்.

இதுகாறும் கூறப்பட்ட பல குடி வகைகளை நோக்க கள் என்பது மட்டு மது நறவு தேறல் எனப்பல வகைப்பட்டது என்பதும் இவை தேன் கொண்டும் நெல்லரிசி கொண்டும் பழங்கள் கொண்டும் தென்னை பனை மரங்களின் சாறு கொண்டும் தயாரிக்கப்பட்டன என்பதும் இவற்றுட் சில மூங்கிற்குழையிலும் பிற பாத்திரங்களிலும் இட்டு முற்றச் செய்து பருகப்பட்டன என்பதும் அரண்மனை விருந்துகளில் குங்குமப்பூ இட்டு மணமேறிய பூங்கமழ் தேறல் பருகப்பட்டது என்பதும் இக்குடி வகைகள் மக்கள் வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்ப வேறுபட்டன என்பதும் தெளியலாம்.

தென்னை மரத்திலிருந்தும் பனைமரத்திலிருந்தும் இறக்கப்பட்டுப் பதப்படுத்தப்படும் நீர் இக்காலத்தில் "பதநீர்" என்னும் பெயரில் விற்கப்படுகிறதன்றோ? அந்நீர் உடம்பில் குளிர்ச்சியை உண்டு பண்ணுகிறது; களைப்பைப் போக்குகிறது; சுறுசுறுப்பை உண்டாக்குகிறது என்று நாட்டு மருத்துவரும் அதனைப் பருகுவோரும் கூறுகின்றனர். இப்பதநீர்க்குத் "தேறல்" (கள்ளின் தெளிவு) என்னும் பெயர் பொருத்தமே. இதனை எவரும் குறைந்த செலவில் பருகலாம்; செல்வர் இதிற் குங்குமப்பூ முதலிய மணப்பொருள்களைக் கலந்து மணம் மிகச் செய்து பருகுவதும் உண்டு. இத்தகைய தேறலே சங்க காலப் புலவர் - பாணர் - கூத்தர் - அரசர் - செல்வர் முதலியோர் சாதாரணமாகப் பருகினர் என்பது பொருந்தும்.

இத்தேறல், "பூக்கமழ் தேறல்" "மணங்கமழ் தேறல்" "மணங்கமழ் தேறல்" என்று சிறப்பிக்கப்பட்டது. இஃது அரண்மனை அழகிகளால் பொற்கலங்களில் நிரம்பி மன்னனுக்கும் விருந்தினருக்கும் தரப் பட்டது. மாங்குடி மருதனார் என்ற புலவர் பெருமான் பாண்டியனை நோக்கி

***விளங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய***
***மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்***
***மகிழ்ந்தினி துறைமதி பெரும!***
***வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.***

***(மது. அடி. 779 – 783) கதிர்முருகு, மதுரைக்காஞ்சி 2013.***

*என்று உளமார வாழ்த்தினர் என்பதை நோக்க இத்தேறல் தீமையைச் செய்யாதது என்பதும் இது மன்னருக்கு இன்றியமையாத குடிவகை என்பதும் நன்கு புலனாகும்.*

*சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கள்ளுக்கடைகளில் விற்கப்பட்ட மயக்கந்தரும் கள் வகையும் சங்க காலத்தில் உழைப்பாளிகளால் உட்கொள்ளப்பட்டது என்பது பொருத்தமாகும். இக்கால "பிராந்தி விஸ்கி" போன்ற மயக்கந்தரும் உயர்ந்த குடிவகைகளே "மது நறவு" எனப் பெயர் கொண்டவை என்னலாம்.*

*இன்று உணவு முறைகள் மாற்றத்தினால் பல்வேறு நோய்கள் வந்து மனிதன் தனது வாழ்வினை இழந்துவிடும் சூழல் உள்ளது. நிலத்தினையும் சூழலையும் கொண்டே உணவு முறைகள் தீர்மானிக்கபட்டன; ஆயுள் காலமும் அதிகரித்தது. அந்த நிலை தலைகீழாக மாறி வாழ்நாட்களை மருந்து மாத்திரைகளுடன் கழித்துக் கொண்டு உள்ளனர். துரித உணவு விரைவில் இறப்பினைக் கொண்டு வருகிறது. அரைசாண் வயிற்றுக்கு உணவில்லாமல் இறப்பவரும் பசி இல்லை என்று மருத்துவமனைக்கு செல்பவரும் உள்ள நிலைதான் இன்றைய நிலை.*

# கண்ணதாசன் படைப்புகளில் இலக்கியச்சுவை

***முனைவர் அ. மோகன்ராஜ்,*** **M.A.,M.Phil.,Ph.D.**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***ஆய்வுச்சுருக்கம்***
*இளமையிலேயே கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்தார். இலக்கியப் படைப்பில் ஆர்வம் மிகுதி. தந்தை பெரியாரின் சமூகச் சிந்தனைகளும், அறிஞர் அண்ணாவின் தமிழும், அரசியல் கருத்துகளும் இவரை ஈர்த்தன. சிறந்த மேடைப் பேச்சாளர் "திராவிட இயக்க முன்னணித் தலைவர்களுள் ஒருவர் ஆனார். உணர்ச்சி மானிடப் பொதுவானது. எல்லாரும் உணர்ச்சிகளால் இயக்கப்படுகிறோம். ஆனால், கவிஞன் உணர்ச்சிகளால் ஆட்டிவைக்கப்படுகிறான்" அலைக்கழிக்கப் படுகிறான். அதனால்தான் அவனது சொற்களில் மின் ஆற்றல்போல் உணர்ச்சிகள் பாய்கின்றன. தமிழ்க் கவிஞர்களிலேயே மிகுதியாக உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டவர் கண்ணதாசன்தான். அவரின் படைப்புகளில் இலக்கியச்சுவைப் பற்றி ஓர் ஆய்வு.*

***திறவுச் சொற்கள்:*** *இலக்கியச் சுவை, ஆர்வமும் ஆற்றலும், சாதனைகள், அரசியலும் கொள்கையும், படைப்புகள், உணர்ச்சி கவிதைகள், கலங்கள் பாக்கள், அவலம், காதல், விந்தையாய்த் தொடங்கும் காதல், பிரிவிலே வளரும் காதல், தாய்மை, தாலாட்டில் கலந்து வரும் அறிவுரைகள், தத்துவக் கவிதைகள், உவமைகள், உருவகங்கள், முரண்பாடுகள், தொகுப்புரை*

## நுழையும் முன்

### இலக்கியச் சுவை

படித்த உடனே மனத்திற்குள் சென்று அமர்ந்து கொள்ளும் எளிமையான சொற்கள் "ஒவ்வொரு சொல்லிலும் சந்த இசைநயம் இயல்பாகவே ஒலிக்கும். வளமான கற்பனைகள், புதுமையான மொழிநடை" சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம் இவற்றின் புலமையால் வந்த செழுமையான தமிழ்நடை இவருடையது. பெருமிதமும், காதல் உணர்வும், நகைச்சுவையும், சோகமும் இழையோடும் நடையழகு இயல்பாக அமையப் பெற்றவர் கண்ணதாசன். வாழ்க்கைப் பாதையில் மேடு, பள்ளங்கள் பல கண்டவர். இதனால் தத்துவம் இவர் எழுத்துகளில் தனி இடம் பிடித்து உள்ளது. இந்தச் சிறப்புகளால் எல்லாவகை மனிதர்களையும் எளிதில் கவர்ந்து, இதயங்களில் கலந்து நிற்கின்றன இவரது கவிதைகள்.

நண்பர்களே! கவிஞன் என்பவன் சொற்களைக் கட்டுபவன் என்று பலரும் நினைக்கின்றனர். இல்லை, அவன் சொற்களால் காட்டுபவன், அவன் காட்டும் காட்சி தெளிவாய் இருக்க வேண்டும் அழகாய் இருக்க வேண்டும். புரியாத தன்மை அறவே கூடாது. எளிமையில் செழுமை வேண்டும்.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூர். இங்கு வாழ்ந்த சாத்தப்பன்-விசாலாட்சி பெற்ற எட்டுப் பிள்ளைகளுள் ஒருவர் முத்தையா. இலக்கிய ஆர்வத்தால் தம் பெயரைக் கண்ணதாசன் என்று புனைந்து கொண்டார்.

### ஆர்வமும் ஆற்றலும் - சாதனைகள்

தமிழ்த் திரைப்பட உலகில் நல்ல தமிழும், பகுத்தறிவுக் கருத்துகளும் நுழைந்த காலப்பகுதி அது.

பாரதிதாசன், உடுமலை நாராயணகவி, கம்பதாசன் இவர்களைத் தொடர்ந்து திரைத்து றையினுள் கண்ணதாசன் புகுந்தார். அழியாத

இலக்கியங்கள் என்று பாராட்டப்படும் ஆயிரக் கணக்கான திரைப்பாடல்களை எழுதினார். இவரது திரைப்பட உரையாடல்களில் இலக்கியத் தரம் இருந்தது.

**அரசியலும் கொள்கையும்**

அரசியலில் திராவிட இயக்கத்திலிருந்து அதற்கு எதிரான தேசிய இயக்கத்திற்கு மாறினார். இந்தக் கொள்கை மாற்றம் இவரது இலக்கியப் படைப்புகளில் இருவேறு முரண்பட்ட நிலைகளை ஏற்படுத்தி விட்டது. நாடு, இனம், மொழி, சமயம் பற்றிய கருத்துகளில் இந்த முரண்பட்ட நிலைகளைக் காணலாம்.

**படைப்புகள்**

ஆறு கவிதைத் தொகுதிகள் ஆயிரக் கணக்கான திரைப்பாடல்கள் மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி என்னும் குறுங்காவியங்கள் இயேசு காவியம், கிருஷ்ண அந்தாதி, தைப்பாவை ஆகியவை இவரது கவிதைப் படைப்புகள். வனவாசம், மனவாசம், அர்த்தமுள்ள இந்து மதம் இவை இவரது உரைநடைப் படைப்புகளில் சிறந்தவை. செப்புமொழி, குட்டிக் கதைகள் ஆகிய தொகுப்புகள் புகழ்பெற்றவை. பல திரைப்படங்களுக்குத் திரைக்கதை, உரையாடல் தீட்டியுள்ளார். பல புதினங்களைப் படைத்துள்ளார். சேரமான் காதலி இந்திய அளவில் சிறந்த இலக்கியப் படைப்புக்கு வழங்கப்படும் சாகித்ய அகாதமி விருது பெற்றது. தென்றல், தென்றல்திரை, கடிதம், கண்ணதாசன் முதலிய சிறந்த இலக்கிய இதழ்களை நடத்தினார். கண்ணதாசன் தமிழின் தலைசிறந்த இலக்கிய இதழ்களுள் ஒன்றாகும்.

**உணர்ச்சிக் கவிதைகள்**

தோழர்களே! உணர்ச்சி மானிடப் பொதுவானது. எல்லாரும் உணர்ச்சிகளால் இயக்கப்படுகிறோம். ஆனால், கவிஞன் உணர்ச்சிகளால் ஆட்டிவைக்கப் படுகிறான் அலைக்கழிக்கப் படுகிறான். அதனால் தான் அவனது சொற்களில் மின் ஆற்றல்போல் உணர்ச்சிகள் பாய்கின்றன. தமிழ்க் கவிஞர்களிலேயே மிகுதியாக உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டவர் கண்ணதாசன்தான். சில சான்றுகளைப் பார்ப்போம்.

**அவலம்**

உணர்ச்சிகளிலேயே மிக்க ஆற்றல் உடையது அவலம் என்னும் துயரம்தான். அடிக்கடி உள்ளத்தின் அணையை அது உடைத்து விடுகிறது. கண்ணீர் வெள்ளப் பெருக்கிற்குக் காரணமாகி விடுகிறது.

**கலங்கல் பாக்கள்**

சொந்த வாழ்வின் சில தவறான பழக்கங்கள் காரணமாக உடலும் மனமும் பாதிப்புக்கு உள்ளானவர் கண்ணதாசன். உள்ளம் எல்லாம் நினைவுகள் நினைவுகள் எல்லாம் கவலைகள் தாம் அவருக்கு. நினைக்கத் தெரிந்த மனமே என்ற கவிதையில் (5 ஆம் தொகுதி) கலங்குகிறார்.

**"பட்டகடன் தீர்ப்பேனா**
**பாதகரைப் பார்ப்பேனா**
**பாவலர்க்கு மேடையிலே**
**பரிந்துரைக்கப் போவேனா?**
**கொட்டுகின்ற தேளை எல்லாம்**
**கும்பிட்டு நிற்பேனா?**
**கொல்லுகின்ற சூழ்நிலையைக்**
**குடித்து மறப்பேனா?"**

நெஞ்சை ஆற்ற, நிலையை மாற்ற வழி தேடுகிறாராம். காணவில்லை. கதறுகிறார்....

**"ஆற்றும்வழி தேடுகிறேன்**
**ஆறவில்லை தேறவில்லை**
**காற்றுஒன்றை இந்தக்**
**கட்டையிலே விட்டுவைத்த**
**கூற்றுவனைக் காணாமல்**
**குழப்பம் அகல்வதில்லை."**

செத்தால்தான் நிம்மதி என்று மனம் வெம்புகிறார்.

அவலம் என்னும் துன்பச் சுவையைப் பிழிந்து திரைப்பாடல்கள் பல வடித்திருக்கிறார். ஆயிரம் சான்று தரலாம். இங்கு ஒன்று காட்டப்படுகிறது.

**"எனது கைகள் மீட்டும்போது**
**வீணை அழுகின்றது**
**எனது கைகள் தழுவும்போது**
**மலரும் சுடுகின்றது**

**என்ன நினைத்து என்னைப்படைத்தான்**
**இறைவன் என்பவனே**
**கண்ணைப் படைத்து பெண்ணைப் படைத்த**
**இறைவன் கொடியவனே...”**

அவலம் ஒருவனை எந்த அளவுக்குத் தன்னிரக்கத்தில் தவிக்க விடுகிறது என்பதைக் கூர்மையாகச் சொல்கிறார்.

கண்ணிலே நீர் எதற்கு? என்று கேள்வி கேட்டுக் காலம் எல்லாம் அழுவதற்கு என்று விடை கண்டவர் அவர். நெஞ்சிலே நினைவு எதற்கு? வஞ்சகரை மறப்பதற்கு என்று துயரத்தின் உச்சியில் ஏறுகிறார். நினைவு இருப்பதே மறப்பதற்குத் தான் என்ற ஒரு முரண் ஆன கருத்துக் குழப்பத்தை ஏற்படுத்துகிறார். இந்தக் குழப்பம் அழகான குழப்பம்!

### இரங்கல் பாக்கள்

இதயத்தில் நிறைந்தவர்கள் இறக்கும் போது இதயம் துடிக்கும் துடிப்பை உணர்ச்சி குன்றாது எடுத்துரைக்க எல்லாருக்கும் முடிவதில்லை. ஆனால் கவிஞனால் முடிகிறது. கண்ணதாசன் அந்தக் கலையில் வல்லவர்.

திரைக்கவிஞர் இவர். இசைக்கலை இவர் இதயத்தின் நாதம். நாதசுர இசைமேதை ஒருவன் இறந்தான். நெஞ்சம் தாங்குமா? திருவாவடுதுறை இராஜரத்தினம் இறந்தபோது கண்ணதாசன் இரங்கல் கவிதை பாடினார். இதன் ஒவ்வொரு வரியும் கண்ணீர்ச் சரமாக இருந்தது. கலைவாணர் என்.எஸ்.கே. மரணப் படுக்கையில் கிடந்தபோது பார்க்கச் சென்றார் கண்ணதாசன். அப்போது “எனக்கும் அதைப் போல் ஒரு இரங்கல் கவிதை பாட வேண்டும்” என்று கேட்டுக் கொண்டாராம் கலைவாணர்.

கல்வி வள்ளல் அழகப்பா மறைந்தபோது இவர் பாடிய இழப்புக் கவிதை வரலாற்றின் பக்கங்களில் காய்ந்து போகாத கண்ணீராய் இருக்கிறது.

**“முதலாளி மார்களிலே முழுமுதலைக்**
**கல்விக்கே முடிந்து வைத்த**
**முதல்ஆளை நீ கொன்றாய்! மற்றவர்கள்**
**வாழ்கின்றார், முதல் அடிக்க.**
**சதிகாரச் சாவே, நின் வயிற்றினிலே**
**சர்வகலா சாலை காண**
**இதமான ஆள்வேண்டும் என்றோ எம்**
**பெருமகனை எடுத்துச் சென்றாய்?”**

ஒப்பற்ற தலைவர் ஜவஹர்லால் நேரு இறந்த போது கண்ணதாசன் பாடிய இரங்கல் கவிதை மறக்க முடியாதது.

**“சாவே உனக்கொருநாள் சாவு வந்து**
**சேராதோ சஞ்சலமே நீயும் ஒரு சஞ்சலத்தைக்**
**காணாயோ?”**

என்ற வரிகள் அவலத்தின் உச்சத்திற்கு நம்மை அழைத்துச் செல்பவை.

### காதல்

உலகின் உயிர் அனைத்திலும் நிறைந்து நிற்கின்ற “உயிர்இயற்கை” காதல். இது வாழ்வையே இயக்குகின்ற பேருணர்வு, கவிதைகளுக்கும், கலைகளுக்கும் வற்றாத ஊற்றாக இருந்து வளம்தருவது காதல். கண்ணதாசன் காதலை உடல் இன்பத்திற்கான ஒரு “போகப்” பொருளாகக் கருதவில்லை. அவரைப்போல் காதலைப் புனிதப்படுத்தி உயர்வு செய்பவர் வேறு எவரும் இருக்க முடியாது.

### விந்தையாய்த் தொடங்கும் காதல்

காதல் முன் அறிவிப்பு எதுவும் இன்றி, எதிர்பாராமல் தோன்றுகிறதாம். இதை

**“மின்னாமல் முழங்காமல் வருகின்ற மழைபோல்**
**சொல்லாமல் கொள்ளாமல் வந்தது”**

என்கிறார்.

ஒரு திருடனிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த நாட்டியக்காரியின் காதலை ஒரு திரைப்பாடலில் காட்டுகிறார்

**“காட்டினில் ஒருவன் என்னைக் கண்டான்**
**கையில் உள்ளதைக் கொடு என்றான்**
**கையில் எதுவும் இல்லை என்று**
**கண்ணில் இருந்ததைக் கொடுத்துவிட்டேன்**
**அவன்தான் திருடன் என்று இருந்தேன்**
**அவனை நானும் திருடிவிட்டேன்**
**முதன்முதல் திருடும் காரணத்தால்**
**முழுசாய்த் திருட மறந்துவிட்டேன்.”**

கண்ணில் இருந்ததைக் கொடுத்து விட்டேன்

என்பதில், காதலின்-வாசல் கண் என்பதை எவ்வளவு அழகாக உணர்த்துகிறார்!

**பிரிவிலே வளரும் காதல்**

பிரிவு தான் காதலின் ஆழத்தையும் உறுதியையும் காட்டும் அளவுக் கருவி. அத்தியைப் பிரிந்த மருதியின் உடல் மெலிகிறது. இதை-

**"வேகும் நிலவினுக்கும் - அனல்**
**வீசி வதைத்திடும் தென்றலுக்கும்**
**பாகுக் கனிமொழியாள் - ஒரு**
**பாதி உடல்தனைப் பறிகொடுத்தாள்"**
**(ஆட்டனத்தி ஆதிமந்தி)**

என்று பாடுகிறார். குளிர்ந்த நிலவும், தென்றலும் பிரிந்த காதலரைச் சுட்டு வருத்தும். இதை அழகான உணர்வு ஓவியமாகத் தீட்டுகிறார். பாதியாக மெலிந்தாள் என்பதைப் 'சுபாதி உடல்தனைப் பறிகொடுத்தாள்சுசு என்னும் போது கவிதை, உணர்ச்சி வேகம் பெறுகிறது.

**தாய்மை**

தாலாட்டுப் பாடல், தாயின் வாய்வழி ஊறிவரும் தாய்ப்பால். தன் அன்பின் ஆழ, அகலத்தை முத்தங்களால் சொன்னது போகத் தன் சொல்லால் தாய் பாடும் மிச்சங்களே தாலாட்டுகள். தாலாட்டுப் பாடுவதில் கண்ணதாசனுக்கு இணை எவரும் இல்லை. அவரது ஆண்மைக்கு உள்ளே ஒரு பெண்மை இருப்பதாக நமக்குத் தோன்றும்.

**"சிங்காரப் புன்னகை கண்ணாரக் கண்டாலே**
**சங்கீத வீணையும் ஏதுக்கம்மா?**
**மங்காத கண்களில் மை இட்டுப் பார்த்தாலே**
**தங்கமும் வைரமும் ஏதுக்கம்மா?"**

மக்கள் செல்வத்தினும் மேலான செல்வம் எது என்பதைக் கவிதை உணர்த்துகிறது.

**"மழைகூட ஒருநாளில் தேனாகலாம்,**
**மணல்கூட ஒருநாளில் பொன்னாகலாம்**
**ஆனாலும் அவை யாவும் நீ ஆகுமா ?**
**அம்மா என்று அழைக்கின்ற சேய் ஆகுமா?"**

எப்படிப்பட்ட உருக்கமான தாய் - சேய் பிணைப்பு இவ்வரிகளில் வெளிப்படுகிறது! இப்படிப் பல தாலாட்டுப் பாடல்கள்! அவற்றின் இனிமையில் கவிதை அழகு தூங்குகிறது.

**தாலாட்டில் கலந்துவரும் அறிவுரைகள்**

**"காலம்இது காலம்இது கண்ணுறங்கு மகளே**
**காலம்இதைத் தவறவிட்டால் தூக்கம்இல்லை மகளே"**

என்று தொடங்கும் ஒரு தாலாட்டு. இது பெண்ணின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் ஒவ்வொரு காரணத்தால் தூக்கம் இல்லாமல் போகும் எனவே "இப்போதே குழந்தைப் பருவத்திலேயே தூங்கிக்கொள்" என்று குழந்தைக்குச் சொல்லும் அறிவுரைகள் நிறைந்தது. பெண் வாழ்வின் சுமைகளை, போராட்டங்களை அழகாக எடுத்துச் சொல்வது. கண்ணதாசனின் கவிதைத் திறமைக்கு இந்த ஒரு பாடலை மட்டுமே சான்றாகக் காட்டலாம்.

**தத்துவக் கவிதைகள்**

வாழ்வின் இன்பங்கள்-துன்பங்கள், மேடுகள் - பள்ளங்கள் எல்லா அனுபவங்களிலும் எல்லை தாண்டி நின்றவர் கண்ணதாசன். அனுபவங்களின் சாறு தத்துவமாகத்திரள்கிறது. அது சிலவேளைகளில் சித்தாந்தம் ஆகிறது. சில வேளைகளில் ஆன்மிகம் ஆகிறது.

**சம உடைமைத் தத்துவம்**

ஆம் தொகுதியில் உள்ள ஒரு பானையின் கதை என்ற கவிதையில் ஓர் ஏழைக் குடும்பத்தின் வறுமை நிலையைச் சோற்றுப் பானையே கதையாய்ச் சொல்கிறது. அருமையான வறுமை ஓவியம் இது. கவிதையின் இறுதியில்

**"இப்படியே பசிநீளும் என்றால் இது**
**என்ன சுதந்திர புமி ? - ஏன்**
**இத்தனை ஆயிரம் சாமி ? - ஒரு**
**கைப்பிடியில் பலபுட்டை உடைத்து இன்று**
**காத்திடுவோம் எங்கள் வீட்டை - பழி**
**தீர்த்திடுவோம் இந்த நாட்டை!"**

என்று கொதிக்கிறது பானை. வறுமை பொறுமையை மீறச் செய்கிறது. புரட்சியை எழுப்பிடும் சித்தாந்தக் குரலாக ஒலிக்கிறது.

**ஆன்மிகத் தத்துவம்**

தன் உள்ளம் அறியத் தவறு செய்தவன் வருந்துகிறான். சிந்திக்கிறான். திருந்துகிறான், தத்துவம் பிறக்கிறது. கடுகு போல் சிறுத்து இருந்த உள்ளம் கடவுள் படைப்பிலேயே பெரிய உள்ளமாக விரிகிறது. கடவுளின் அரசாங்கமாக ஆகிறது. ஞான புமியாய் ஆகிறது. இதை எப்படி உணர்த்துகிறார் பாருங்கள்:

**"எறும்புத் தோலை உரித்துப்**
**பார்க்க யானை வந்ததடா - என்**
**இதயத் தோலை உரித்துப் பார்க்க**
**ஞானம் வந்ததடா."**

நண்பர்களே! கண்ணதாசனின் தத்துவப் பாடல்களைப் பற்றிப் பெரிய ஆய்வுகளே செய்யப்பட்டுள்ளன. சான்றுக்காகச் சில பாடல் பகுதிகளையே நாம் பார்த்தோம். மொத்தமாகப் பார்க்கும் போது, இவர் கவிதைகளில் உலகப் பொருள்கள் எல்லாமே உள்ளடக்கம் ஆகி இருக்கின்றன எனக் கூறலாம். பிற்காலத்தில் படைத்த கவிதைகள் பெரும்பாலும் பக்தி - கடவுள் நம்பிக்கை சார்ந்தவையாகவே அமைந்தன. 5, 6 ஆம் தொகுதிகளில் இவ்வகைக் கவிதைகளே நிறைந்து உள்ளன.

பாரதி, பாரதிதாசன், கவிமணி, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் இப்படித்தான் எழுதினார்கள். இந்தச் சிறப்பான படைப்புக் கலைத்திறன் கண்ணதாசனிடம் மிகுதியாகவே இருந்தது. அவர் பரவலாகப் புரிந்து கொள்ளப் பட்டதற்கும், புகழ் பெற்றதற்கும் காரணம் இதுதான்.

### அரிய தத்துவம்

தத்துவம் என்பது அறிவின் சாறு. வாழ்வில் பட்டு அறிந்த அனுபவ உண்மைகளின் திரட்டு. அதனால் பொதுவாக அவை புரிந்து கொள்வதற்கு எளிதாக இருப்பதில்லை. ஆனால் கண்ணதாசனின் சந்தக் கவிதைகளில் கூட, தத்துவம் குழந்தையின் சிரிப்பைப்போல் எளிமையாகப் புத்திருக்கும். இனத்தால், மதத்தால், சாதியால், செல்வ நிலையால் நமக்குள் பேதங்கள் (பிரிவினைகள்) கூடாது என்பதை எவ்வளவு எளிதாக விளக்குகிறார் பாருங்கள்:

**"சுடுகாட்டு எலும்புகளைச் சோதித்துப் பார்த்ததிலே**
**வடநாட்டு எலும்புஎன்று வந்தஎலும்பு இல்லையடி**
**தென்னாட்டு எலும்புஎன்று தெரிந்தஎலும்பு இல்லையடி**
**எந்நாட்டு எலும்பென்றும் எழுதிவைக்க வில்லையடி**
**ஒருநாட்டு மக்களுக்குள் ஓராயிரம் பிரிவை**
**எரியுட்ட வில்லைஎனில் எந்நாளும் துன்பமடி"**
**(இனமேது-4ஆம்தொகுதி)**

### குறிப்புமொழி

ஆட்டனத்தி ஆதிமந்தி கண்ணதாசன் படைத்த சிறந்த காவியம். கதையின் தலைவன் ஆட்டனத்தி, சேரமன்னன். வீரத்துடன், ஆடல் கலையிலும் வல்லவனாக விளங்கினான். இவனிடம் ஆடல் கற்க வந்த மருதி, ஆதிமந்தி இருவரும் அத்தியிடம் காதல் கொண்டனர். அவன் நெஞ்சமோ மருதியை விரும்பியது. அவளுக்காகவே கரூர் மன்னனுடன் போர் செய்தான். வென்றான். அதற்குப் படை உதவிய சோழன் கரிகாலனின் மகளான ஆதிமந்தியை மணக்க நேர்ந்தது. மருதி புத்தத் துறவியானாள். காவிரிப் புதுவெள்ளத்தில் நீராடும்போது அத்தியை வெள்ளம் அடித்துச் சென்று கடலில் தள்ளியது. அங்கிருந்த மருதி அவனை மீட்டுக் காப்பாற்றினாள். தானே மூச்சை அடக்கி உயிர் நீத்தாள். கணவனைத் தேடிக் கரைவழியே வந்த ஆதிமந்தி அவனைக் கண்டாள். இருவரும் மருதிக்குச் சிலைவடித்துக் காதல் தெய்வமாய் வழிபட்டனர். இது காப்பியக்கதை. சங்க இலக்கிய வரலாற்றுக் குறிப்பைக் கொண்டு கண்ணதாசன் படைத்த அழகிய குறுங்காவியம் இது. இதில் வரிக்குவரி அழகிய சொல்லாட்சியால் மயக்குகிறார் கவிஞர்.

ஆதிமந்தி காதல் உணர்வால் உறக்கம் இன்றித் தவிக்கிறாள். அறையை விட்டு வெளியே வருகிறாள். மருதியுடன் ஆட்டனத்தி சேர்ந்திருக்கும் காட்சியைப் பார்க்கிறாள். திகைக்கிறாள். இதைப் பண்பாடு குறையாத குறிப்பு மொழியால் வருணிக்கிறார் கண்ணதாசன். இதில் அவரது அழகிய சொல்லாட்சித் திறன் விளங்குகிறது.

**"துயிலோடும் பகையான தோகை கண்டாள்**
**தோள்தூங்கும் வாள்வீரன் துணையும் கண்டாள்**
**பயிராகிப் போயிற்றாம். அறுவ டைதான்**

**பாக்கிளன்னும் நிலைகண்டாள் பதுமை ஆனாள்"**

**உருவகச் சொல்லாட்சி**

மற்றொரு சிறந்த குறுங்காவியமான "மாங்கனி"யில் மாங்கனியின் சிவந்த உதடு காதலன் முத்தமிட்டதால் வெளுத்திருக்கிறது. இதை,

**"காதல், துடிப்பினால் சிவப்பைத் தின்ற**
**துட்டனும் யாரோ.."**

எனப் பாடுகிறார்.

மாங்கனி தன் தாயிடம் வாய்திறந்து இனிமையாகப் பேசுகிறாள். இதைக் கவிஞர்,

**"அந்தப் புக்காட்டின் வாய்ப்புட்டைத் தேன் திறக்கும்"**

என்று உருவகச் சொல்லாட்சியால் உரைக்கிறார்.

**உவமைகள்**

கவிதையின் அழகுக்கே அழகு சேர்ப்பது உவமை. கற்பனைக்கு வளம் சேர்ப்பது. ஒரு பொருளுக்கு ஒப்பாக இன்னொரு பொருளைக் காண்பவன், வாழ்க்கைக்கே புதுப்பொருள் காண்கிறான். உலகில் ஒரு முறை ஒரு வடிவத்தில் பிறக்கின்ற ஒருபொருள், எண்ணங்களில் பலமுறை பலவடிவங்களில் புதுப்பிறப்பு எடுக்கிறது. அந்தப் புதுமையில் வாழ்க்கை புதுச்சுவை பெறுகிறது. உவமை எப்போதும் இனிப்பது இதனால்தான்.

**உவமையில் புதுமை**

கண்ணதாசனின் உவமைகளிலே ஒரு புதுமை இருக்கும். மாலைப் பொழுது, மலைகளிடையே மறையும் சூரியன், காதல் உணர்வுடன் ஓர் இளைஞன் இக்காட்சியைக் காண்கிறான்.

**"மார்பகத்தின் ஆடைக்குள் கடிதம் வைக்கும்**
**மங்கையரின் கைபோல, மலைகள் ஊடே**
**தேர் உருட்டிக் கதிர் சென்றான்...."**

என்று இதை அழகான உவமையால் சொல்கிறார் கண்ணதாசன்.

ஆட்டன் அத்தியை அடித்துப் போகும் வெள்ளம் எப்படிப் பெருகி வந்தது தெரியுமா? கதை கட்டத்தை வெள்ள ஓட்டத்துடன் சேர்த்து உவமையால் காட்டுகிறார்.

**"காவிரி வெள்ளம் கணிகை மா மருதிகொண்ட**
**கவலைபோல் மேலும் பல்கும்...."**

காதலில் தோற்றுக் கண்ணீர் வடித்தபடி இருக்கும் மருதியின் துயரத்தைப் போல் மேலும் மேலும் வெள்ளம் பெருகுகிறது என்கிறார்.

**உருவகங்கள்**

உவமையின் செறிவான வடிவமே உருவகம் என்பதை அறிவீர்கள். கண்ணதாசனின் கவிதைகளில் உருவக நடை ஊடுருவிக் கிடக்கிறது. மாங்கனியை உருவகத்தால் வருணிக்கிறார்:

**"விரிக்காத தோகைமயில் ! வண்டு வந்து**
**மடக்காத வெள்ளைமலர் ! நிலவு கண்டு**
**சிரிக்காத அல்லிமுகம் ! செகத்தில் யாரும்**
**தீண்டாத இளமை நலம் பருவ ஞானம் !"**

திரைப்பாடல்களிலும் இலக்கிய வளம் சேர்த்த இயற்கைக் கவிஞர் கண்ணதாசன். குழந்தையை இளந்தென்றல் காற்றாக உருவகம் செய்கிறார். அந்தத் தென்றலைப் பற்றி மேலும் உருவகம் செய்கிறார்.

**"நதியில் விளையாடிக் கொடியில்**
**தலைசீவி நடந்த இளந்தென்றலே..."**

தென்றல் நதியில் விளையாடுகிறதாம். கலைந்த தலையைக் கொடியில் வாரிக் கொள்கிறதாம். உருவகத்துக்குள் எத்தனை உருவகம், பாருங்கள். வாழ்வே போராட்டம் ஆகிவிட்டது இளைஞன் ஒருவனுக்கு! தன் நிலையை அவனே பாடுவது போல் ஒரு திரைப்பாடல். முழுதுமே உருவகங்களால் ஆனது. உலக இலக்கியத் தரம் வாய்ந்தது:

**"மயக்கம் எனது தாயகம்**
**மவுனம் எனது தாய்மொழி**
**கலக்கம் எனது காவியம் - நான்**
**கண்ணீர் வரைந்த ஓவியம்.**
**நான்.....**
**பகலில் தோன்றும் நிலவு - கண்**
**பார்வைக்கு மறைந்த அழகு**
**திரைமூடிய சிலை நான் -துன்பச்**
**சிதையில் மலர்ந்த மலர்நான்..."**

உருவகங்களை அடுக்கி ஓர் உயிர் ஓவியம் தீட்டியிருக்கிறார். இறுதியில் "விதிவேறு மதிவேறு" என்னும் பழமொழியின் விளக்கமே நான் என்று உருவகத்தில் முடிக்கிறார்.

**முரண்பாடுகள்**

நண்பர்களே! கண்ணதாசனின் கவிதைகளின், எளிமையை, இனிமையை, அழகை, தெளிவை இதுவரை பார்த்தோம்.

**"மானிட இனத்தை ஆட்டி வைப்பேன் - அவர்**
**மாண்டுவிட்டால் அதைப் பாடிவைப்பேன் - நான்**
**நிரந்தரம் ஆனவன் அழிவதில்லை - எந்த**
**நிலையிலும் எனக்கு மரணம் இல்லை"**

என்று இறந்த பின்னும் சாகாமல் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர் கண்ணதாசன். புகழை மணந்து கொண்டவர். இவரது கவிதைகள் அனைத்தையும் ஒருசேரப் படிப்பவர்களுக்கு ஒரு கருத்துத் தோன்றலாம்.

## அரசியல் கருத்துகள்

"முன்னுக்குப் பின் முரண்படுகிறார் இவர். முரண்பாடுகளின் மொத்த உருவகமாகக் காணப்படுகிறார்" என்பதே அது. இதற்கு என்ன காரணம்? அரசியல் கொள்கைகளை அடிக் கடி மாற்றிக் கொண்டார். மாறும் கட்சிகளின் கொள்கைகளை விளக்கத் தம் கவிதையை, எழுத்தைப் பயன்படுத்தினார். இதனால் பல முரண்பாடுகள் கொண்டவராகக் காட்சியளிக்கிறார்.

பகுத்தறிவு இயக்கத்தில் இருந்தபோது கடவுள் இல்லை என்னும் நாத்திகக் கருத்துகளைப் பாடினார். பிற்காலத்தில் தேசிய இயக்கத்தில் சேர்ந்த பின்னர், படித்தாலே மனம் உருகும் பக்திப் பாடல்கள் பாடிக் குவித்தார். திராவிட இயக்கத்தில் இருந்தபோது ஆட்சிமொழிச் சட்டத்தை எதிர்த்தார். போராடினார். போராட்டங்களைக் காவியப் பொருள் ஆக்கிக் கவிதைகள் படைத்தார். ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்ட மொழியை நையாண்டிச் சொற்களால் வசை பாடினார். தேசிய இயக்கத்துக்கு மாறிச் சென்றபின் கருத்துகளை மாற்றிக் கொண்டார். முன்பு தூற்றியவை எல்லாவற்றையும் போற்றிக் கவிதை பாடினார்.

**"போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித்**
**தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து சொல்வேன்**
**ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்**
**எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்"**

என்னும் பெருமித உணர்வு கொண்டவர் கண்ணதாசன். அதனால் உள்ளே எப்படியோ அப்படியே வெளியிலும் வாழ்ந்தவர்.

## அகமும் புறமும்

வெளிவேடம் இட்டு நடிக்காமல் வாழ்ந்தவர். தம் கவிதைகளிலும் இப்படியே தம்மை வெளிப்படுத்தினார். இதனால் தான் கருத்துகளில் முரண்படுவதுபோல் கவிதைகளில் காட்சி அளிக்கிறார்.

இந்த முரண்பாடுகள் தம் வளர்ச்சியின் அடையாளங்கள் என்று அவரே கூறியிருக்கிறார். நண்பர்களே! கண்ணதாசனின் கவிதைகளை அவரது வாழ்க்கையுடன் சேர்த்து வைத்துப் படியுங்கள். அப்போது இந்த முரண்பாடுகளை உணர மாட்டீர்கள். பொய்களால் முகமூடி இட்டுக்கொண்டு வாழத் தெரியாத ஓர் உயர்ந்த தமிழ்க்கவிஞரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். உணர்வுகளைத் தொட்டு இன்பம் தரும் அவரது அழகிய கவிதைகளில் உள்ளம் கரைந்து விடுவீர்கள்.

## நிறைவாக

கண்ணதாசன் கவிதைகள் பற்றியும், அவற்றின் இலக்கியச் சிறப்புக்குக் காரணமான எளிமை, இனிமை, தெளிவு பற்றியும் தெரிந்து கொள்ள முடிந்தது. சொல்லாட்சி, உவமை, உருவகம் போன்றவை எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. துன்பம், காதல் போன்ற சுவைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. கவிதைகளில் உள்ள தத்துவக் கருத்துகள், ஆன்மிக வெளிப்பாடுகள் பற்றியும் தெரிந்து கொள்ளமுடிந்தது. உள்ளத்தை ஒளித்து வைக்காமல் உலகத்துக்குக் காட்டி வாழ்ந்த ஓர் உயர்ந்த கவிஞர் கண்ணதாசன் என்று புரிந்துகொள்ள முடிந்தது.

## துணைநின்ற நூல்கள்

1. கண்ணதாசனின் கவிதை தொகுப்புகள் - வானதி பதிப்பகம்
2. கண்ணதாசனின் அணிந்துரைகள்
3. கண்ணதாசனின் அனுபவ மொழிகள்

# இன்குலாப் கவிதைகள்: வர்க்கப் போராட்ட சுடரொளி

***முனைவர் ஆ. முத்துலட்சுமி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், மதுரை

**முன்னுரை**

மனிதச் சமுதாயம் தோன்றி வளர்ச்சி பெற்று, பரிணாமம் எய்தி தனக்கான அடையாளங்களுடன் கட்டமைந்துள்ளது. இச்சமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் அடையாளப் பெருக்கம் ஒரு குறிப்பிட்ட சாராரை அடிமைகளாக்கி அவர்களது உழைப்பில் தம்மை வளர்த்துக் கொள்ளும் மேல்த்தட்டு வர்க்கம் அதற்கான நியதிகளையும் உருவாக்கி வைத்துள்ளது. அடிமைகளால் இயற்றப்பட்ட நாடு, நகரங்கள் யாவும் அதை உருவாக்கியவர்களின் பெயர்களால் அழைக்கப்படுவதில்லை. மாறாக அவர்களது உழைப்பில் உண்டு கொழுத்த மன்னர்கள், செல்வந்தர்கள் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அதற்குக் காரணம் உடையோர், இல்லோர் என்னும் பாகுபாடாகும். பொருள் உள்ளவரைத் தான் இவ்வுலகம் போற்றும் என்ற வள்ளுவரின் கூற்றும் இங்கு வெளிப்படுகிறது. வர்க்க பேதம் என்பது இன்று நேற்றல்ல பன்னெடுங்காலப் பிரச்சினையாகும். அடித்தட்டு மக்கள் உணர்வு பெற்று அடிமைத் தளையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் மனப்பான்மை வரும் வரை அடிமைகளைத் தம் விருப்பம் போல் வேலை வாங்கியவர்கள் பெரு மன்னர்களாகக் குறிக்கப்படுகின்றனர். அல்லது பெருஞ்செல்வர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய சொகுசு வாழ்க்கைக்காகத் தம் உயிரை பணயமாக்கி உழைப்பவர்கள் பக்கம் நின்று பேசுவதே மார்க்சியத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது. உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்று கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரும். பிரகடனம் செய்தார்கள், மார்க்சியத்தின் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எழுதப்பட்ட வரலாறுகள் மீது புதிய ஒளியைப் பாய்ச்சியது. அதன் அடிப்படையில் இது வரையிலான வரலாறுகள் அனைத்தும் வர்க்கப் போராட்ட வரலாறே என்றும் குறித்தனர். இந்த வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. இந்தியாவில் பொதுவுடைமை இயக்கத்தினரால் உருவாக்கம் பெற்ற கலை இலக்கியங்கள் யாவிலும் வர்க்கப் போராட்ட ஒலி மிகுதியாக கேட்டது. அத்தகைய பொதுவுடைமைச் சிந்தனையாளர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் கவிஞர் இன்குலாப் ஆவார். வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் அடிப்படையில் தன் கவிதைகளில் அரசியல் ஊடாக இருப்பதை வெளிப்படுத்தினார். அவ்வாறான அவருடைய கவிதைகள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**உற்பத்தி சக்திகளும் உற்பத்தி உறவும்**

மனிதர்கள் இயற்கையின் இயங்கியலைப் புரிந்து கொண்டு அதனைத் தன்வயப்படுத்தும் வகையில் தொடர்ந்து செயல்படுகின்றனர். இதுவே பொருள்களை மாற்றமடையச் செய்கிறது. ஒருபெரிய பாறையானது கடின உழைப்பினால் சிற்பமாகிறது. வரலாற்றில் உற்பத்தியும் உற்பத்தியில் ஈடுபட்ட தொழிலாளர்களும் இன்றி எதுவும் மாற்றம் பெற்றிருக்க வாய்ப்பில்லை. உபரி உழைப்பின் மிகையை தம் சொத்துக்களாக மாற்றிக் கொண்டவர்கள் பெரும் நிலக்கிழார்களாக உருமாறினார்கள். உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் எவரும் அப்பொருளோடு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. எந்த ஒரு சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி

சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒரு போதும் அழிக்கப்படுவதில்லை. புதிய உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய சுற்று வட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை (சோஷலிஸ்ட் புரட்சி, ப.8) என்ற கூற்றினால் மார்க்ஸ் குறிப்பிடுவது ஒரு சமூகத்தில் நிலைபெற்றிருக்கும் உற்பத்தி சக்தியானது பிறிதொரு புதிய உற்பத்தி சக்தி வரும் வரை நீடித்திருக்கும். பழைய உற்பத்தி முறையையும் அவை முழுமையாக அகற்றுவதில்லை. உழுவதற்கான இயந்திரங்கள் கண்டுபிடிக்கும் வரை மனிதர்கள் மாடுகளைக் கொண்டு உழுத நிலை மாறுபடவில்லை. புதிய இயந்திரங்கள் வந்த போதும் மரபான உழுமுறையும் நீடித்திருப்பதைக் காணலாம். அதுபோலவரலாற்றில்படைப்பாற்றல் மிக்கவர்களாக உழைப்பாளர்களே இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார் பெருந்திரளான மக்கள், உழைக்கும் மக்கள், தொழிலாளர்களும் விவசாயிகளும் சமூகத்தில் மிக முக்கியமான உற்பத்திச் சக்தியாக இருக்கின்றனர். அவர்கள் தமது உழைப்பின் மூலம் பொருளாயதச் செல்வம் அனைத்தையும் படைக்கிறார்கள். அவர்களே வரலாற்றை உண்மையாகப் படைப்பவர்கள் (மேலது, ப.9) என்று குறிப்பிடுகின்றனர். உற்பத்தி மற்றும் இயற்கையான பொருட்களை பயன்படுத்தும் வடிவத்திற்கு மாற்றும் வகையில் உற்பத்தியில் ஈடுபடும் பெருந்திரளான மக்களே வரலாற்றினை படைப்பவர்கள் என்று கருதத் தக்கவர்கள் ஆவர். இதனை மேலும் சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் இனங்களாகக் குழுக்களாக, வர்க்ககங்களாகப் பிளவுற்ற சமூகத்தையே வர்க்க சமூகம் என்று குறிக்கின்றனர். இரு பெரும் வர்க்கங்களாக மக்கள் பிளவுற்று இருத்தல்தான் இயல்பு என்ற போதிலும் வர்க்கம் என்ற சொல் மேல், கீழ் என்னும் இரு பிரிவில் உள்ள மக்களையே குறிக்கிறது. இரு பெரும் வர்க்கம் என்ற பதம் தொடர்ந்து மார்க்ஸ், ஏங்கெல்ஸ் நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இரு பெரும் வர்க்கத்தை மட்டும் குறிப்பதாகக் கொள்ள முடியாது. மாறாக புரட்சிகர முகாம் என்பது பாட்டாளி வர்க்கம், சிறு விவசாயிகள், குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோரைக் கொண்டதாக இருக்கும் என்றும் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி என்பது அதனை முன்னணிப் படைத் தலைமையாக ஏற்றுக் கொண்ட மேற்சொன்ன எதிரெதிர் முனைகளில் உள்ள பெரும் வர்க்கங்களுக்கானபிரச்சினைமற்றவர்க்கங்களிற் சிலவற்றைத் தம் பக்கம் கவர்ந்திழுப்பதும் சில வர்க்கங்களை நடுநிலையாக்குவதும்தான். இது தான் நடைமுறை சாத்தியமேயன்றி இரு பெரும் வர்க்கங்கள் நேருக்கு நேர் நின்று சண்டை புரிவதல்ல (எஸ்.வி.ராஜதுரை, மார்க்ஸ் ஏங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, ப.139) என்று வர்க்கப் பகைமை என்பதற்கு விளக்கமளிக்கிறார் எஸ்.வி.ராஜதுரை. உலகில் உள்ள மக்கள் யாவரும் இரு படைப்பிரிவுகளைப் போன்று அணுக வேண்டிய ஒன்றாக வர்க்கங்கள் அமைவதில்லை. மாறாக பாட்டாளி வர்க்கத்திற்கு அனுகூலமான மக்கள் ஒரு பக்கமும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு அனுகூலமான மக்கள் ஒரு பக்கமாகவும் கவர்ந்திழுக்கப்பட்டுஅதன்படி ஒன்றிணைவதாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

வர்க்கப் பகைமை குறித்த சிந்தனை

மனிதர்கள் இரு விதமாக சமூகத்தில் கட்டமைவது இயல்பாகும். புனிதம், தீட்டு என்பது போன்று மேல், கீழ் தரத்தினராக பகுக்கப்படுகின்றனர். தொழிற்சாலைகள் மிகுதியாக உருவாகும் போது முதலாளிய பொருளுற்பத்தி மிகுதியாகும் போது தொழிலாளர்கள் ஒரு குடையின் கீழ் குவிவது தவிர்க்க இயலாதது. எனவே பாட்டாளி வர்க்கம் அல்லது தொழிலாளி வர்க்கம் என்பதும் முதலாளி வர்க்கம் என்பது இணை முரண்களாக இருந்து செயல்படுவது தேவையாகிறது. தொழிலாளியின் அனைத்துத் தேவைகளையும் தான் உற்பத்தி நடடிவக்கையில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் கூலியிலிருந்து செய்துகொள்வதும். உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்திற்கும் உற்பத்தி செய்தவனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றாவதும் அந்நியமாதல் தன்மையை உருவாக்குகின்றன.

இந்த அந்நியமாதல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் அதன் முழுமையை அடைவதற்குக் காரணமாக இருந்த தொழிலாளியை சார்ந்ததாக இல்லாமல் அவனுக்குக் கூலி தரும் முதலாளியைச் சார்ந்ததாக இருக்கிறது.

வரலாற்று ஏடுகளிலும் உழைப்பில் ஈடுபட்டவன், உபரி உற்பத்தியில் ஈடுபட்டு உற்பத்தியை பெருக்கியவன் பற்றிய சிந்தனை வெளிப்படாமல் அவனை அடக்கியாண்ட நிலக்கிழார்கள், மன்னர்கள், செல்வந்தவர்கள் ஆகியோரே அடையாளப்படுத்தப்படுகின்றனர் என்பதைக் காணமுடிகிறது. எனவே தான் வரலாற்றில் தனிமனிதனின் பாத்திரம் இன்றியமையாதது என்கிறார் மார்க்ஸ். அடிமை மற்றும் உழைப்பின்றி வானுயர்ந்த கட்டிடங்கள், கோபுரங்கள், கோயில்கள், பிரமிடுகள், உலக அதிசயங்கள் ஆகியன சாத்தியமில்லை. ஆனால் அவை எவற்றிலும் அடிமைகளின் உழைப்பு பற்றிய சிந்தனை ஏற்படாது. காரணம் அவை மன்னர்களின் பெயர்களையே தாங்கி நிற்கும்படி செய்யப்பட்டுள்ளன. எனவேதான் வரலாற்றை பொருள்முதல்வாத அடிப்படையில் அணுக வேண்டும் என்ற கருத்து ஏற்படுகிறது. வர்க்கப் போராட்ட வரலாறாகவே எழுதப்பட்ட வரலாறுகள் அனைத்துக் காணப்படுகின்றன.

இலக்கியமும் வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறையும்

மனிதர்கள் வாழும் இயற்கையுடன் கொண்ட தொடர்புறவின் காரணமாக கலைகளும் உற்ப்ததியாகின்றன. அவற்றில் மிக சமீபத்தியது இலக்கியம் ஆகும். எழுத்து, மொழி ஆகிய உருப்பெற்று ஓர் ஒழுங்கிற்கு வந்த பின்னர் இலக்கியம் தோன்றுகிறது. செய்யுள் நடை தவிர்த்து உரைநடைகளும் உருவாக்கம் பெற்று விடுகின்றன. தமிழில் உரைநடை வளர்ச்சியோடு புதுக்கவிதைகளும் உருவாக்கம் பெற்றுவிட்டன. அவை தளை அறுந்த கவிதைகள் என்றும் அழைக்கப்பட்டன. இலக்கிய உலகில் பல்வேறு குழுக்கள் உருவாகின. அவற்றில் மிக முக்கியமான இரண்டு கலை கலைக்காகவே, கலை மக்களுக்காகவே என்னும் குழுக்கள் ஆகும். இவற்றில் கலை மக்களுக்காகவே என்போர் பாட்டாளி வர்க்க சிந்தனையை அடிப்படையாகக் கொண்டவர்களாக வெளிப்பட்டனர். யதார்த்தவாதம் என்பது சோசலிச யதார்த்தவாதமாக உருப் பெற்றது. தமிழில் அது சார்ந்த கலை இலக்கியங்கள் மிகுதியாக வெளிப்படத் தொடங்கின. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் என அனைத்துத் துறைகளிலும் சோஷலிச யதார்த்தவாதக் கருத்துக்கள் புகுத்தப்பட்டன. அவை வரலாற்றை, வாழ்வை நுணுக்கமாக அணுகி பாட்டாளி வர்க்கச் சிந்தனையின் அடிப்படையில் பகுத்தாய்வு செய்தன.

## இன்குலாப்

தமிழில் புதுக்கவிதை ஓர் இயக்கமாக மணிக்கொடி காலத்திலிருந்து உருப் பெற்று வளர்ந்தது. வானம்பாடி கவிதை இயக்கம் சோஷலிச பதாகையை முன் தூக்கிப் பிடித்து எழுதியது. பல கவிஞர்கள் பொதுவுடைமைக் கட்சிகளில் இருந்து எழுதியவர்களாக இருந்தனர். அவர்களுள் பல்வேறு வேற்றுமைகள் இருந்தன. ஆயினும் ஒவ்வொரு கவிஞரின் பொது வுடைமைச் சிந்தனைகளும் தமிழுக்கு வளம் சேர்த்தன. இன்குலாப் என்னும் கவிஞர் தன் கவிதை வாளால் அடக்குமுறைக்கு எதிராகக் களமாடினார். அவருடைய கவிதைகளில் வரலாற்றை பொருள்முதல்வாத அடிப்படையில் அணுகும் முறை காணப்படுகிறது. வரலாற்றின் பாத்திரமாக மனிதன் இருப்பதையும் பூர்ஷ்வா வர்க்கம் தனிமனிதன் ஒவ்வொருவருடைய பாத்திரத்தையும் தனதாக்கிக் கொண்டதையும் பற்றி கவிதைகள் எழுதியுள்ளார். அவருடைய பிரமிடுகள் குறித்த கவிதையில் அக்கவிதைக்கான விளக்கத்தை தருகிறார் சீன நெடுஞ்சுவர், தாஜ்மஹால், பிரமிடுகள் உலக அற்புதங்கள் இவை என்றும் நாம் அதிசயப்படுகிறோம். இவற்றை உருவாக்கிய மன்னாதி மன்னர்களின் காலத்தைப் பொற்காலம் என்றும் புகழ்கிறோம். இந்தப் பொற்காலப் பனிப்படலம் உண்மையின் சூட்டில் உருகியோடும் பொழுது நம்முடைய கண்கள் குளமாகின்றன. நெஞ்சம் துடிக்கின்றது.

இந்த அற்புதங்கள் எந்தத் தேவதூதனின் சிறகினாலும் பூமியின் மீது எழுதப்படவில்லை. எந்த மன்னாதி மன்னனும் இவற்றை எழுப்ப மண்ணைப் பிசைந்ததில்லை. தொங்கு தோட்டத்தில் நெடுஞ்சுவரில் தாஜ்மஹாலில் ஏழைகளின் கண்ணீரும் ரத்தமும் கொட்டிக் கிடக்கின்றன. அவர்களின் மண்டையோடுகளில் எலும்புத் துண்டுகளில் இவற்றுக்கு அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது (இன்குலாப், ஒவ்வொரு புல்லையும், ப.21) என்று குறிப்பிடுகிறார்.

### பிரமிடுகள் கவிதைகள் வர்க்கச் சிந்தனை

உலகில் உள்ள அனைத்து பெரு நகரங்களும் அடிமைகளின் உழைப்பினால் உருவானவையே. அதற்கென அடிமைகளை கொண்டு சென்று விலங்கினும் கீழாக வேலை வாங்கினார்கள் என்பதை அமெரிக்க வரலாறு போன்ற நூல்கள் தெரிவிக்கின்றன. சிங்கப்பூரை உருவாக்கியதில் தமிழர்களின் பங்கு இன்றியமையாததாக இருந்தது எனக் கூறப்படுவதுண்டு. அடிமையுழைப்பிற்கு பெயர் போனவர்கள் தமிழர்கள் என்ற கருத்தும் காணப்படுகிறது.

எகிப்தின் அடையாளமாக வெளிப்படுவது பிரமிடுகள் ஆகும். அப்பிரமிடுகள் தானாக உருவானவையன்று. அதற்கென தம் உயிரைக் கொடுத்து பணி செய்த பல்லாயிரக்கணக்கான மக்களின் வியர்வையில் உருவானது. இதனை,

**இவர்கள் எழுப்பிய**
**இந்தப் பிரமிடுகள்**
**அடிமை வர்க்கத்தின்**
**வேர்வை அதிசயங்கள்**

**(ஒவ்வொரு புல்லையும், ப.23)**

என்ற கவிதை வரிகள் பிரமிடுகள் எவ்வாறு சாத்தியமாயின என்று கூறுகின்றன. அடிமைகளின் உழைப்பினால் உலக அதிசயங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் அவர்கள் வெளித்தெரிவதில்லை. அக்காலத்தில் ஆட்சியாண்ட மன்னனின் பெயரே அவ்வடையாளத்தின் அடிப்படையாக நிலைத்திருக்கிறது. ஏழைகளை மன்னர்கள் எவ்வாறு வசக்கிப் பிழிந்து வேலை வாங்கினார்கள் என்று தன் கவிதை வரிகள் வழி வெளிப்படுத்துகிறார்.

**சென்றடையாத் தூரத்தில்**
**மணலின் பொன் மஞ்சத்தில்**
**சாவுத் தேவதையின்**
**சரியாத கொங்கைகள் போல்**
**முக்கோண முகங்காட்டும்**
**பிரமிடுகள்**
**இந்த**
**மரணச் சத்திரத்தில்**
**மன்னாதி மன்னர்கள்**
**ஜீவநதியோட்டம்**
**தேங்கிய காரணத்தால்**
**வறண்டு போய்விட்ட**
**மனித வயல்கள்**
**அடடா**
**இந்த மௌனங்கள்**
**பேசிய காலத்தில்**
**எத்தனையோ ராகங்கள்**
**ரத்தம் சிந்தின**

என்ற கவிதை வரிகளில் மன்னர்களால் உருவாக்கப்பட்ட பிரமிடுகள் என்ற பெயரே நிலைத்திருப்பது கண்டு சீற்றம் பொதிந்த தன் பார்வையை வெளிப்படுத்துகிறார் கவிஞர். பிரமிடுகளை உருவாக்கியது வெகுமக்களாக இருக்கின்றனர். அவர்களுடைய இரத்தமும் வியர்வையும் உருவாக்கியது என்கிறார். வரலாறு என்பது மன்னர்களைப் பற்றியதாகவே பெரும்பாலும் காணப்படுவதற்குக் காரணம் குறிப்பிட்ட வர்க்கத்தினர் ஆதிக்கம் செலுத்தியமையே ஆகும். எளிய மக்களால் உருவான கோட்டை கொத்தளங்கள் யாவும் அம்மக்கள் பெயர் கூறுவதில்லை. மாறாக ஆட்சியாண்ட மன்னர்கள் எழுப்பியனவாகவே கூறப்படுகின்றன. இதிலிருந்து வரலாறானது ஆதிக்கவாதிகளின் வரலாறாகவே இருப்பதும் உழைக்கும் வர்க்கம் மறைக்கப்படுவதும் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. பிரமிடுகளின் வியாபகம் எண்ணி மாளாதது. அதனை எழுப்பியவர்கள் எளிய மக்கள். தம் உதிரங்கொடுத்து உழைத்தவர்கள் ஆவர்.

### விவசாயக் கலகங்கள்

அரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்ற பார்ப்பனர்கள் பெற்ற

சதுர்வேதி மங்கலங்கள் எண்ணற்றவை. எளிய விவசாயிகளின் நிலங்களை அபகரித்து அவர்களை அடிமைகளாக்கி பணி செய்ய வைத்து அதன் பலனை முழுமையாக பெற்றவர்கள். அன்றைய சோழர் ஆட்சியில் விவசாயக் கலகங்கள் நடைபெற்றன. ஆனால் அவற்றை வரலாறுகள் பெரிதாகக் கூறுவதில்லை. பார்ப்பனர்களின் ஆதிக்கம் நிறைந்த அக்காலத்து சூழலை,

***ராஜ மகேந்திர சதுர்வேதி மங்கலம்***
***மூடும் இரவில்***
***விழித்துக் கொண்டிருந்தது***
***கோயில் முற்றம்***
***சபையின் கூட்டம்***
***உழவு மக்களின் உயிர் நரம்பையே***
***எடுத்துத் தங்கள் மார்பில் அணிந்த***
***பூணூல் பார்ப்பனரின் சபை நடக்கின்றது***
***(ஒவ்வொரு புல்லையும், ப.46)***

என்னும் வரிகள் உழவர்களைத் தம் கைப்பாவைகளாக நடத்தி அவர்தம் உழைப்பினைத் தாம் திருடி உண்பது போல அவர்களால் வாழும் பார்ப்பனர்கள் ஆதிக்கவாதிகளாக கோயிலில் அமர்ந்திருக்கிறார்கள்.

***சாதி அந்தணரின் சபை விளக்குகள்***
***யார் ஊற்றிய நெய்யினால் இப்போது எரிகின்றன***
***ஐயர் ஒருவர் வருவதை அறிந்தும்***
***தோளில் போட்ட துண்டை இறக்காத***
***சூத்திரன் தண்டனையாய்க் கொடுத்த காசே***
***எண்ணெய்யாய் பிராமணர் சபையில் எரிந்தது***
***(ஒவ்வொரு புல்லையும்.ப.46)***

என்னும் வரிகள் பார்ப்பனரின் மேலாதிக்க ஒடுக்குமுறையினைப் பற்றி எடுத்துரைக்கின்றன. உழைப்பில் ஈடுபடும் மக்களையே ஒடுக்கி அவர்தம் உழைப்பின் பலனை அனுபவிக்கும் பார்ப்பனர்கள் உழைப்பாளி மக்கள் மீது தண்டனை கொடுத்தும் கொடுமைப்படுத்தினர் என்பதை மேற்கண்ட வரிகள் உணர்த்துகின்றன. பார்ப்பனரின் அதிகாரம் எந்த அளவு இருந்தது என்பது.

***தர்ப்பைக்கு முன் சோழன் செங்கோலே வளைந்து***
***நிற்கையில் இந்த நிலத்தில் உழைக்கிற***
***குடிவாரத்தார்கள் எதிர்க்குரல் கொடுக்கிறார்***
***இத்தனை ஆணவம் எதனால் விளைந்தது.***
***(ஒவ்வொரு புல்லையும், ப.47)***

என்ற வரிகள் தர்ப்பையை வைத்து பிழைக்கும் பார்ப்பனர்களின் முன் அரசனின் செங்கோலே தாழ்ந்திருக்கும். ஆனால் உழைக்கும் குடிவாரத்தார்கள் எதிர்த்துக் கேள்வி கேட்கலாம் என்று கூறுகின்றனர். அடித்தள மக்கள் தம் உரிமைக் குரலை எழுப்பும் போது அதிகாரத்தில் இருப்போர் அதனை ஏற்க மறுக்கின்றனர். அதற்குக் காரணம்,

***மனத்தில் வேர்விட்ட மனுநீதி விருட்சத்தை***
***ஜனங்கள் தோண்டிச் சாய்க்க முடியாதென்ற***
***நினைப்பு இன்று நெருப்பில் வேகுதே***
***(ஒவ்வொரு புல்லையும், ப.47)***

என்பதால் தான் எனக் கூறுகின்றார். அதாவது பார்ப்பனர்கள் கட்டி வைத்திருக்கின்ற சமூக அமைப்புக்கு எதிரான செயலாக உழவர்களின் போராட்டம் சுட்டப்படுகிறது. தம் அதிகாரம் பறிபோய் விடுமோ என்றும் அஞ்சுகின்றனர். அதனால் தான் தம் உரிமைக் குரலை எழுப்போர் நாட்டிற்கு விரோதிகளாகச் சித்திரிக்கப்படுகின்றனர்.

*உழுதவன் நிலத்தில் உரிமை கொண்டாடினால்*
***வழிவழியாய்ச் சாதி வழக்கங்கள்***
***தகருமே மன்னவன் தருமக் கொற்றக் குடை***
***ஒடியுமே வேள்வி ஒழுக்கங்கள் ஒழியுமே***
***(ஒவ்வொரு புல்லையும், ப.47)***

என்ற வரிகள் மூலம் பார்ப்பனர்கள் கட்டி வைத்திருக்கின்ற சமூக அமைப்பின் கோட்டையைத் தகர்க்கும் வகையில் ஏழை விவசாயிகள் போராட்டம் செய்தனர் என்பது கூறப்படுகிறது. சதுர்வேதி மங்கலம் கோயிலுக்கு தரப்படும் கூலியை எதிர்ப்போர் இனி நிலத்தில் கால் வைக்க வேண்டாம் என்று தீர்ப்பிடுகின்றனர். மக்கள் ஒன்று பட்டு கோயில் குருக்கள் மற்றும் அரசனுக்கு எதிராக மக்கள் குரல் எழுப்புகின்றனர்,

***நம்மைக் கடிக்கும் மேட்டுக்குடி நாய்கள்***
***கோலோச்சுகின்ற குலோத்துங்கனும் என்னவாம்***
***அவனும் நம்மை உறிஞ்சுகின்ற அட்டையே***
***நமக்கு எதிராய் வரும் நமது சனங்களுக்கு***

**உண்மையை உணர்த்தி ஒன்று படுவோம்**
**(ஒவ்வொரு புல்லையும், ப.49)**

என்று வரலாற்றில் மக்கள் மன்னருக்கு எதிராக ஒன்று திரண்டு போராட்டங்களை நடத்தியுள்ளனர். ஆனால் கற்பிக்கப்படும் பாடங்களிலோ சோழர்களின் ஆட்சி பொற்கால ஆட்சி என்பதாக கூறப்படுகிறது.

வரலாற்றை நேர் கோட்டில் அறிந்து கொள்வதிலிருந்து விலகி விமர்சன நோக்கில் வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் அறிந்து கொள்ள ஏதுவாக இன்குலாபின் கவிதைகள் அமைகின்றன. அதனால்தான் மக்களின் வியர்வையால் உருவான கோட்டை கொத்தளங்கள் குறித்த அறிதல்கள் மன்னர்களின் பெயர்களையே முன்னிறுத்திய போதிலும் அதில் பணி செய்த எண்ணற்ற உழைப்பாளி மக்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது, முடி மன்னர்களின் ஆட்சியில் மக்கள் எவ்வித துன்பமுமின்றி வாழ்ந்ததாகக் கட்டப்படும் கட்டுக் கதைகளையும் விமர்சன நோக்கில் வரலாற்றை அணுகும் போத வெளிப்பட்டு விடும்.

## முடிவுரை

வரலாறு என்பது வருடங்கள், மன்னர்கள், போர்கள், ஆட்சி மாற்றங்கள் என்பனவற்றையே பெரிதும் கொண்டிருக்கின்றன. இம்முறையிலான வரலாறு என்பது ஆயாசம் தருகின்ற ஒன்றாக இருக்கிறது. வரலாற்றின் மீது பொருள் முதல்வாத பார்வையை பாய்ச்சி அதன் மூலம் வரலாற்றினை மறுவரையறை செய்வதை மார்க்சியம் முன்னெடுத்தது. அதனை வரலாற்றுப் பொருள் முதல்வாத நோக்கு என்றும் அழைத்தது. இன்குலாபின் கவிதைகளில் அவருடைய வரலாற்று பொருள்முதல்வாத அடிப்படையிலான சிந்தனைவயப்பட்டக் கவிதைகள் இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. சீனப் பெருஞ்சுவராக இருந்தாலும், பிரமிடுகளாக இருந்தாலும், இந்தியாவின் தாஜ்மஹாலாக இருந்தாலும் மக்களின் பங்களிப்பில் உருவானவையே ஆனால் அவை அவ்வாறு அடையாளப்படுத்தப்படுவதில்லை. அதில் வியர்வையும் இரத்தமுமாய் மக்களின் பங்கேற்பு உள்ளது என்பதை எடுத்துரைக்கிறார். இது போல் சதுர்வேதி மங்கலங்கள் பார்ப்பனர்களின் கை ஓங்கியிருந்த காலத்தில் விவசாயக் கலகங்கள் நடைபெற்றன. அவற்றைப் பற்றிய பதிவுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. வரலாற்றை உரசிப் பார்த்து அதன் மேலுள்ள ஆதிக்கத் தன்மையை அகற்ற வேண்டும் அப்போதுதான் பாட்டாளி வர்க்க வரலாறு என்பது அறியப்படுகின்ற ஒன்றாக இருக்கும்.

# “குப்பை” சிறுகதை தொகுப்பில் நா. இளங்கோவின் மொழிநடை

*த. முத்துலெட்சுமி*
உதவிப்பேராசிரியர் & முனைவர் பட்ட ஆய்வாளர்
நா.ம.ச.சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை

## முன்னுரை

உள்ளம்என்பது ஆழ்கடல்.அவற்றுள்புதைந்து கிடப்பது அவர் அவர்களின் ஆளுமைப்பண்பு. ஒவ்வொரு மனிதனும் தன் உள்ள உணர்வின் சிந்தனைகள், கருத்துகள் ஆகியவற்றை தன் படைப்பின் வழியே வெளிப்படுத்துகிறான். அதன் அடிப்படையில் படைப்பாளனின் மனவோட்டத்தினை அவர்களின் படைப்பின் வழியாக அறிந்து கொள்ளலாம். மனிதர்களாக பிறக்கும் அனைவரும் படைப்பாற்றல் மிக்கவர்களாக பிறப்பதில்லை ஒரு சிலரே படைப்பாற்றல் திறன்மிக்கவர்களாக இவ்வுலகிற்கு தன்னை வெளிப்படுத்துகின்றனர். அவற்றுள் ஒருசிலரே நீண்ட காலம் தன் படைப்பின் சொல்திறத்தாலும் பொருள் புனைவாலும் நிலைத்து நிற்கின்றனர். இலக்கியம் என்பது காலத்தின் தேவைக்கேற்ப மாற்றம் பெறக்கூடியது இக்கால இலக்கியத்தினை உலகறியச் செய்ய சிறந்த ஆளுமைகள் தோன்றி மறைந்தாலும் இன்று படைப்பாளர் உலகில் நிலைத்து நின்று, சிறந்த தன் படைப்பின் வழியாக மிகச்சிறந்த எழுத்தாற்றலினை அளித்த நா.இளங்கோவின் அவர்களின் தனித்துவ மொழிநடையினை குப்பை சிறுகதை தொகுப்பின் வழி எடுத்து இயம்புவதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## மொழிநடை

ஒரு படைப்பாளனை மற்றொரு படைப்பாளனோடு மாறுபடுத்திக் காட்டுவது மொழிநடையாகும். மொழிநடை என்பது ஒவ்வொரு ஆசிரியருக்கும் உண்டான தனிப்பட்ட வெளிப்பாடாகும். இவ்வெளிப்பாடு அவரின் படைப்பின் வழியாக அவரின் சிந்தனை, வாழ்ந்த சூழ்நிலை, காலம், எண்ணங்கள், அனுபவங்கள் போன்றவற்றின் மூலமாக வெளிப்படுத்தக் கூடியவையாக அமைந்துவிடும் இதையே “நடைக்கு ஆசிரியர் மட்டும் காரணமாவதில்லை அவர் வாழ்ந்த சூழ்நிலையும் காரணமாக அமைகிறது” என்கிறார் அகிலன். அவ்வகையில் தமிழ்மொழியில் சிறுகதை எழுதும் எழுத்தாளர்கள் பலரும் தனக்கென தனித்துவமான மொழிநடையினைக் கையாண்டுள்ளனர். அவர்களுள் நா.இளங்கோ அவர்களும் தனக்கென சமுதாயத்தின் மீது அக்கறை கொண்ட நகைச்சுவை, உளவியல், இறைநம்பிக்கை தமிழ்மொழி வருணனை கலந்த யாதார்த்த நடையினை தனதாக்கி கொண்டுள்ளார். குப்பை என்னும் சிறுகதை தொகுப்பில் மொத்தம் 12 சிறுகதைகள் உள்ளன அவற்றின் கதைகளைக் களமாகக் கொண்டு இளங்கோவின் மொழிநடை ஆராயப்படுகிறது.

## நகைச்சுவை நடை

மக்களாகிய நமக்கு மட்டுமே சிரிக்கத் தெரியும். மனகவலை தீர்க்கும் அருமருந்து நகைச்சுவையாகும். இளங்கோ தனது சிறுகதைகளில் நகைச்சுவை நடையினை மிகுதியாக கையாண்டுள்ளார். சிரிப்பு என்னும் சிறுகதை திகில் கதை போல தொடங்கப்பட்டு அறியாமையுடன் காணப்படும் கிராமத்து மக்களின் மூடநம்பிக்கையை சாடி நகைசுவை உணர்வை வெளிப்படுத்திய கதையாக உள்ளது. இக்கதையில் பண்ணையார் பரமசிவமும் அவரது மனைவியும் தோட்டத்தில் அவ்வப்போது எழும் சிரிப்பு ஒலியைக் கேட்டுப்

பயந்து புசாரியை அழைக்க புசாரி அதை வைத்து பணம் பார்கிறார். ஆனாலும் அந்த சிரிப்பொலி தொடர்கிறது. மூடநம்பிக்கையால் பணம் இழந்தபின் தன் பண்ணையில் வேலை செய்யும் முனியாண்டி மறந்து விட்டுசென்ற செல்போனின் அழைப்பு மணியோசை தான் என்று தெரிந்தபின் பயம்விலகி நகை தோன்றுகிறது. கிராமத்து மக்களின் யாதர்த்தமான மனதினை "காயாம்பு புசாரி சின்னக் கொழந்த! அடிக்காதே" எனக் கூறும் பரமசிவதிடமும் "யாரு பெத்த பொண்ணோ! பச்சப் புள்ளயக் கொல்ல எப்படித்தான் மனசு வந்துச்சோ" எனப் பேய்க்காக வருத்தப்படும் தாயம்மாள் நிலையை இக்கதைவழி வெளிப்படுத்தியுள்ளார் இளங்கோ.

### உளவியல் நடை

இளங்கோ அவர்கள் தான் படைத்த கதைப்பாத்திரங்களின் மூலம் அவர்களுக்குள் நிகழும் மனக்குமறல்கள், எண்ணங்கள் போன்ற உள்ளப்பாங்கினை சமநிலையாக படிக்கும் வாசகர்களின் உள்ளத்தில் பதித்துவிடும்படி செய்யும் நடையாக உள்ளது அவரின் எழுத்து நடை. அதற்கு சான்றாய் அமைகிறது தாளம் என்னும் சிறுகதை. மொழி மக்கள் பரிச்சயம் இல்லாத ஊரில் உடன் வந்த உறவுகளை விட்டு விட்டு வழி தவறிப்போகும் வயோதிகர் கையில் அலைபேசியோ கூப்பிடும் தூரத்தில் உறவுகளோ இல்லாமல் இரவல் அலைபேசி இணைப்பிற்கான யாசகத்தில் ஏமாற்றம் அடைந்து அவரின் தவிப்பைக் கண்ட இளைஞன் ஒருவன் உதவ முன்வந்த போது அவரின் தவிப்பு தண்ணீர் ஊற்றாய் பெருக்கெடுத்தது. இதில் அவரின் மனநிலை குழந்தையினைத் தொலைத்த தாயின் தவிப்போடு ஒத்துள்ளது. சொந்தங்களைத் தொலைத்த பெரியவரின் உள்ளம். இக்கதையில் கதாப்பாத்திரங்களின் மனத்தவிப்பினை நம் கண்முன் காட்சிகளாக வடிவமைத்துள்ளார் இளங்கோ.

### வருணனை

தமிழ் பேராசிரியரான இளங்கோ அவர்கள் தமிழ்ச்சொற்கள், வருணனைகள் என தம் சிறுகதைகளில் அதிகமாக கையாண்டுள்ளார். இவ்வருணனைகள் கதையின் போக்கிற்கு தகுந்தவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பது சிறப்பு. ஒவ்வொரு சிறுகதைக்கும் அவர் கொடுத்துள்ள தலைப்புகளே அக்கதையின் மையக்கருவினை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. நாகரீகம் மிகுந்த நகரத்தில் ஒரு மாலை நேரத்தின் வருணனையினை தாளம் சிறுகதையில் காணமுடிகிறது. "வானம் மழையைக் கொட்டித் தீர்த்துவிட்டு, லேசான தூறல்களைத் தெளித்துக் கொண்டிருந்தது. வெளிச்சத்தைக் காணமுடியவில்லை. கருமேகம் திரண்டிருந்ததால் இருளே அக்கடற்கரையின் பேரரசாக மாறிக்கொண்டிருந்தது.வானில் அவ்வப்போது ஒலி எழுப்பியபடி விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. (பக் 1) ஏன நயமாய் எடுத்துரைத்துள்ளார். மேலும் சான்றாய் காலை நேரக்காட்சியினை "இளம் பட்டுக் கதிர்களைச் சிறிது சிறிதாகப் பரப்பிக் கொண்டிருந்தான் கதிரவன். இளஞ்சூரியக் கதிர்கண்டு மெல்ல மெல்லத் தம் மொட்டை அவிழ்த்து மலரத் தயாராகிக் கொண்டிருந்தன தோட்டத்துச் செம்பருத்திப் புக்கள். (பக் 84) என இயற்கை புலப்பாட்டு இடங்களிலெல்லாம் கதையின் போக்கிற்கு ஏற்றவாறு வருணனைகள் இடம் பெறுவது பாராட்டக் கூடியவையாக அமைந்துள்ளது.

### வட்டராட நடை

கதையின் கருவிற்குத் தகுந்தவாறு அந்த அந்த வட்டார பேச்சு மொழியினைக் கதாப்பாத் திரங்களின் மூலம் வெளிப்படுத்திய நடை சிறப்பானதாக அடைந்துள்ளது. இளங்கோ அவர்கள் தம் அநேக சிறுகதையில் பாமர மக்கள் பேசும் பேச்சுநடையினைதம் கதைமாந்தர்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

"ஏன் புள்ள! யாருக்கச் சோறாக்கப் போற? ஒண்ணும் வேணாம்" (பக் 8) என தண்டனை சிறுகதையிலும், "ஏய்.. ஈசுவரி, சரளா மசமசண்டு நிக்காம பொக்குண்டு பொண்ணு மாபிள்ளைக்கு

ஆலாத்தி எடுக்காத்தா *(பக் 42)* என கண்ணமாவின் குரல் ஓங்கி ஒலித்தது. என வரம்பு சிறுகதையில் மதுரை வட்டார நடையினையும் செட்டிநாடு மக்கள் பேசும் வட்டார மொழியினை "ஆமா அடைக்க! அத சாரிக்காமா வுட்டுப்புட்டோம். அப்புறந்தான் எம்புட்டு அப்பச்சி முயற்சியால நேமம் கோயில்காரக பொண்ண எடுத்தோம் அப்பேர்பட்ட அப்பச்சிக்கு ... அப்பச்சிக்கு ... "வெளிப்படுத்தியுள்ளார். அதே போல் கிராமிய பழமொழிகளை மீட்டெடுக்கும் முயற்சியாக ஆங்காங்கே ஒரு சில பழமொழிகளையம் பதிவிட்டுள்ளாார். "இருட்டு வீட்டில் குருட்டு எருமை மேய்பது போல" *(பக் 3)*

"காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதைதான்" *(பக் 33)*

**காலகட்ட நிகழ்வு**

கொரோனா காலகட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள், பாதிப்புகள் போன்றவற்றினை தன் கதைகளின் மூலம் நமக்கு பாடமாகவும், படமாகவும் காட்சிப்படுத்தியுள்ளார் இளங்கோ. கடந்து வந்த பாதைகளின் தடங்களை படித்து பார்த்து நெகிழ்வதாக ஒரு சில சிறுகதைகளை வடிவமைத்துள்ளார். சான்றாய் மாற்றி யோசி, ஐயனும் அப்பத்தாவும்,குப்பை போன்ற சிறுகதைகள் கொரோனா காலகட்டத்தில் நிகழ்வுகளை நமக்கு எடுத்துரைப்பாதகாக உள்ளது. கொரோனா காலகட்டத்தில் நடுத்தர குடும்பம் பொருளாதார ரீதியாக பாதிப்படையும் போது அதனை எதிர்க் கொண்டு தன்னம்பிக்கையுடன் சாதுர்யமாக மாற்றுத் திட்டம் தீட்டித் சாதித்து செயல்படும் படித்த பெண்ணின் சிந்தனை பற்றியதாக அமைகிறது.

"இக்கதையில் முத்து,பாக்கியம் என்ற தம்பதிகளின் மகள் சௌந்தர்யா இளநிலை இரண்டாமாண்டு படிப்பவர். பொருளாதார பொது முடக்கத்தால் முத்துவின் நண்பர் தற்கொலை செய்துகொள்ள நண்பனின் இழப்பும் தொழில்பாதிப்பும் துன்பத்திற்கு உள்ளாக்க சௌந்தர்யாவின் உற்சாக வார்த்தைகள் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றன. "அந்த வண்டியில காய்களைப் போட்டு வித்தால் என்ன? மகளின் யோசனை முத்துவைச் சற்று யோசிக்க வைத்தது" என தற்போதைய காலக் கட்டத்திற்கு ஏற்றாற்போல் நம்மை மாற்றி கொள்ளும் படித்த ஒரு பெண்ணின் அறிவினை மூலம் நமக்கு வெளிப்படுத்திருக்கிறார். ஐயனும் அப்பத்தாவும் என்னும் சிறுகதையில் வயதானவர்கள் தங்களை கொரோனா காலக்கட்டத்தில் காத்துக் கொள்ள முயலும் போதும் வீட்டில் உள்ளவர்கள் வெளியில் இருந்து வந்தமையால் தனிமை படுத்தி விட்டு அவர்களுக்கான வேலைகள் செய்யும் வயதானவர்களின் அவல நிலையினை எடுத்துரைப்பதாக இக்கதை அமைகிறது.

**இறை நம்பிக்கை**

"அவனின்றி ஒரு அணுவும் அசையாது" என்ற கருத்தை ஏற்புடையவராக உள்ளவர் இளங்கோ அவர்கள். அவரின் கதைநடையில் இறை கருத்தை அவ்வபோது வெளிப்படத்தியுள்ளார். இத்தொகுப்பில் "மெய்வருத்த" "தண்டனை" போன்ற கதைகள் இதற்கு சான்றாய் அமைகிறது. மெய்வருத்த கதையில் விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் உள்ள பிணைப்பும் அதில் எது வென்றது? இறைவன் அருளால் நிகழ்ந்தது என்ற முடிவினை நம்மிடம் தந்து கட்டமைத்துள்ளார். "கதையில் வரும் அர்ச்சனா நலம்பெறுவானா? நம்மை விட்டு பிரிவாளா? என்ற ஏக்கத்தை உண்டாக்கி இறைஅருளால் அவளின் முடிவினை நமக்கு படிமபடுத் தியுள்ளார்" டாக்டர் சீக்கிரம் வாங்க ... சீக்கிரம் வாங்க... என்று கூவியபடி வந்த நர்ஸின் குரல் கேட்டு வந்த டாக்டர் சந்திரன் நர்ஸ் ..ப்ளீஸ் சீக்கிரம் என் மொபைலை எடுத்துட்டு வாங்க சீப்கிட்ட பேசணும் மிராக்கிள், மிராக்கிள், "உணவும் கடவுளும் ஒன்று, தப்பு செய்தவனை சாமி தண்டிச்சுதான் தீரும் என்ற கருத்தை தண்டனை சிறுகதை மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

**சமுதாய அக்கறை**

சமுதாயத்திற்கு வேண்டிய நல்ல பண்புகளை வெளிப்படுத்தி கட்டமைக்கப்பட்டிருக்கும் இக்கதைகள் இளைய சமுதாயம் பெற வேண்டிய அறப்பண்புகள், நேர்மறை எண்ணங்கள் எடுத்தியம்புவதாக ஒரு சில சிறுகதைகளைக் கட்டமைத்துள்ளார். பாலியல் பலாத்காரம் என்ற கொடும்பாவத்தால் சின்னாபின்னமான குடும்பத்தின் நிலையை நெஞ்சை உலுக்க வைக்கிறது விதி செய்வோம் சிறுகதை. அரசாங்கம் போடக்கூடிய சட்டங்களை மதிக்க வேண்டும் என்றும் தன்னை அறியாமல் கொள்கை மாறவேண்டிய நிர்பந்தந்தத்தில் ஏற்பட்ட விபரீதத்தினை சாட்டை சிறுகதை வெளிப்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

இளங்கோ அவர்கள் தமக்கு ஏற்பட்ட பல்வேறு அனுபவங்களைக் கொண்டு இன்றைய சமுதாயத்தினருக்கு நம்பிக்கையுட்டும் விதமாகவும் தவறுகளைச் சுட்டிக்காட்டும் விதமாக தனது படைப்பின் வழியாக ஆளுமைப்பண்பினை அவரின் மொழிநடையில் வெளிப்படுத்தியமை போற்றுதலுக்குரியதாக அமைந்துள்ளது.

**முதன்மை ஆதாரம்**

1. குப்பை - இளங்கோ

# கலைஞர் போற்றும் குறள் இல்லறம் (திருக்குறள் கலைஞர் உரையை மூலமாகக் கொண்டு)

*முனைவர் கீழடி கரு முருகேசன்*
தமிழ்த் துறைத் தலைவர்
அரசு கலை (ம) அறிவியல் கல்லூரி, மதுரை

## அறிமுகம்

மூலநூல்களுக்கு உள்ள பெருமை உரை நூல்களுக்கும் உண்டு. சில மூலநூல்கள் உரைநூல்களால் பெருமை அடைந்துள்ளன. உரைநூல்கள் இல்லையேல் சில மூலநூல்கள் விளக்கம் பெறாமலே மறைந்தும் போயிருக்கும். இதை, மனத்திற் கொண்டால் மூலநூல்களை மக்களிடையே மதிப்புடன் வாழச்செய்யும் பெருமை உரைநூல்களுக்கே உண்டு என்பது விளங்கும். பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் வழங்கும் நூல்களில் உள்ள பொருண்மைகளை அவற்றில் உள்ளபடியேயும் அந்நூலாளர் உணர்ந்தபடியேயும் அறிய விரும்பினால் அந்நூல்கள் இயற்றப்பெற்றக் காலத்தின் நிலைமையையும் இலக்கிய மரபையும் நன்றாக உணர்ந்து கொள்வது இவ்வளவு காலத்திற்குப் பின் வந்த நம்மால் இயலாது. ஆனால், அதற்கு உதவி செய்வோர் உரையாசிரியர்கள் என்பதை அறிந்தவர் கலைஞர் ஆவார். வாழ்ந்தால் இல்லறம், வீழ்ந்தால் துறவறம், வாழ்வதும் வீழ்வதும் வந்தவள் கைவசம் என இல்லறத்தைச் சுருக்கமாக விளக்குவர். இத்தகு இல்லறம் குறித்த கருத்துகளை கலைஞர் எவ்வாறு புலப்படுத்துகிறார் என்பதை, திருக்குறளுக்குப் பிறர் இயற்றிய உரைகளோடு ஒப்பிட்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

## இல்வாழ்வான் யார்?

வானத்திற்குப் பொன்னாடை போர்த்த முயலுவதும் திருக்குறளுக்கு உரை எழுத முயலுவதும் ஒன்றே என்பதை நன்கறிந்தவர்களுள் ஒருவர் கலைஞர் ஆவார். மு.வை.அரவிந்தன், "திருவள்ளுவர் கருத்து ஏதேனும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். ஒரு குறளுக்கு ஒரு கருத்துத்தான் இருக்கமுடியும். ஆனால், திருவள்ளுவர் அவ்வாறெல்லாம் கருதினாரோ இல்லையோ, அவரது வாக்கு நமக்குப் பல வகையாய்ப் பொருள்கொள்ள இடந்தருகின்றது"[1] என்னும் கருத்திற்குச் சான்றாகக் குறளொன்று அமைந்துள்ளது.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடை மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணைசுசு என்னும் குறள் *(41)*, இல்லறத்தில் இருப்போர் மூவர்க்குத் துணையாக இருக்கவேண்டும் என்பதைக் கூறுகின்றது. அம்மூவர் யார்? என்பது குறித்து உரையாசிரியர்கள் கூறும் விளக்கங்கள் சுவைபட அமைகின்றன.

பரிதியார், "பிரம்மசாரி" வானப்பிரஸ்தன், சந்நியாசி" என மூவரைச் சுட்டுகின்றார். இக்கருத்தையே, காலிங்கர், மணக்குடவர், பரிமேலழகர், சாமி சிதம்பரனார் ஆகியோரும் சுட்டுகின்றனர். ஆனால், பாவாணர், இக்கருத்தை "திருவள்ளுவர் பிராமணீயம் என்னும் ஆரியத்தை ஒழிக்கவே நூல் செய்தாராதலின், பிரமசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் முந்நிலைப்பட்ட பிராமணரைக் காத்தலைத் தமிழ வேளாளன் கடமையெனக் கூறியிரார் என்பது தெளிவுறு தேற்றமாம்" என மறுத்து, "மூவராவார் இருவகை யந்தணருள் இல்லறத்தானான பார்ப்பானும் அரசனும் வணிகனுமாவார்" என எழுதுகின்றார். இக்கருத்து ஆய்வுக்குரியது.

வ.உ.சிதம்பரம் பிள்ளை, "இயல்பாக உடைய தாய், தந்தை, தாரம் என்னும் மூவர்" எனக் கருதுகின்றார்.

திரு.வி.கலியாணசுந்தரனார், "திருவள்ளுவர் மூவேந்தர் நினைவுடன் மூவர்க்கும் என்று குறித் திருக்கலாம்" என்கிறார். இதில், மூவேந்தர் எவர் எனச் சுட்டவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை, "உறவினர், நண்பர்கள், ஏழைகள் என்ற மூவர்" என்கின்றார்.

குழந்தை, "துறந்தார்" துவ்வாதார், இறந்தார் என்னும் மூவர் என எண்ணுகின்றார். இதில் "துவ்வாதார்" என்பதற்குப் பொருள், "வறியோர்" என்பதாகும்.

இவ்வுரைகளை ஊன்றிப்பயின்ற கலைஞர், "பெற்றோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள்" எனக்கூறி வ.உ.சி.கருத்தோடு சற்று உடன்படுகின்றார்.

"இயல்புடை மூவர்" என்னும் குறட்தொடர் திருவள்ளுவர் காலத்தில் எல்லார்க்கும் தெரிந்த மூவராய் இருந்திருக்கலாம். காலப்போக்கில் அப்பொருள் மறைந்ததால் உரைகாரர்கள் தத்தம் விருப்பிற்கு ஏற்ப விளக்கினர்.

"இல்வாழ்வான்" என இல்லறத்தை ஏற்ற ஆணே குறிப்பிடப்படுகிறான். ஆகையால், ஆதரிக்க வேண்டிய பெற்றோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் ஆகிய மூவர்க்கும் அவன், "இல்வாழ்க்கை"த்துணை எனக் கூறுவது பொருத்தமே எனலாம். இவ்வாறு கூறுவதால் ஒரே குடும்பமாக வாழ்ந்தனர் எனக் கருத வேண்டியதில்லை. தனி இல்லத்தில் வாழ்ந்தும் பெற்றோரை அடிக்கடி சென்று கவனித்தும் பொருள் தந்தும் நோயுற்றபோது உடனிருந்து உதவியும் துணையாக இருந்திருக்கலாம்.

இல்லறத்தில் இருப்பவன், "பெற்றோர், வாழ்க்கைத்துணை, குழந்தைகள்" ஆகிய மூவருக்கும் துணையாக இருக்கவேண்டும் என்ற கலைஞர் கருத்தே. பிறர் கருத்துகளைவிட காலத்திற்குப் பொருந்தும் கருத்தாக அமைகிறது. இல்லறத்திற்குக் கலைஞர் கூறிய உரையை எண்ணுகையில், வ.சுப.மாணிக்கம், "முன்னோன் எழுதிய உரைப்பொருளை பெரிதும் தழுவக்கூடாது: தாம் ஒரு தனியுரை எழுதத் துணிந்ததற்குச் சான்றாக எங்ஙனமேனும் பல குறட்குப் புத்துரை சொல்லவேண்டும் என்னும் முனைப்பே திருக்குறள் உரை பலவற்றின் தோற்றத்திற்குக் காரணம் என்று சுருங்கச் சொல்லலாம்"[2] எனக் கூறியது நினைவிற்கு வருகிறது.

## பிறர் பழிக்காத இல்லறம்

திருவள்ளுவர் காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள், அவற்றின்மீது அவரது நோக்கு ஆகியவற்றிற்கு மாறுபடாதும் வலிந்து பொருள் கொள்ளாதும் திருக்குறளில் அவர் கையாண்ட சொற்களுக்கு இதுவரை உரையாசிரியர்கள் கொண்டுள்ள பொருள் அல்லாது மற்றொரு பொருளும் உள்ளது என்ற உண்மையைக் கண்டு உரைகண்டோருள் கலைஞருக்கும் இடமுண்டு. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், "நூலாசிரியரின் அரிய கருத்துக்களை எல்லாம், உரையாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பேருபகாரிகளாகிய உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின் பண்டை உயர்நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பில்லாப்பொருள்மணிக்குவியல்களையாம் எங்ஙனம் பெறுதல் கூடும்"[3] எனக் கூறுவதை மெய்ப்பிப்பது போல ஒரு குறளின் விளக்கம் அமைந்துள்ளது.

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும், பிறன்பழிப்பது இல்லாயின் நன்றுசுசு என்னும் குறள் (49) எத்தகைய இல்லறம் சிறந்தது என்பதை விளக்குகிறது.

பரிதியார், "அது லோகம் பழியாமல் நீதியில் நடக்குமாகில் நன்று" என்பர்.

மணக்குடவர், "பிறன்பழிப்பது" என்பதற்கு, "பழிக்கப்படுவது என்றது இழிகுலத்தாளாகிய மனையாளை" என சிறப்புரை தருவர்.

பரிமேலழகர், "இருவகை அறத்தினும் (இல்லறம், துறவறம்) நூல்களான் அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. ஏனைத் துறவறமோ எனின், அதுவும் பிறனால் பழிக்கப்படுவது இல்லையாயின் அவ்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று" என்பர். இதில், "அஃதும்" என்பதற்கு "ஏனைத் துறவறமோ

எனின் அதுவும்" என்பது வலிந்து பொருள் கொள்ளப்பட்டதாகும். இக்குறளில் "அஃது" என்ற சுட்டு இல்வாழ்வைச் சுட்டியதாகக் கருதப்படவேண்டும்.

சாமி, சிதம்பரனார், "பிறனால் பழிக்கப்படாமல் இல்லறம் நடத்துவதே சிறந்தது: உயர்ந்த தர்மம்" என எளிமையாக உரை தருவர்.

பாவாணர், "பிறன்பழிக்கும் இல்வாழ்க்கை விருந்தோம்பாமையாலும் பிறனில் விழைவாலும் வரைவின் மகளிர் தொடர்பாலும் பிறவற்றாலும் நேர்வதாம்" எனக் காரணங்கூறி, "இல்லறமல்லது நல்லறமன்று"[4] என ஔவையார் கருத்தை மேற்கோளாய்த் தருவர்.

சாலமன்பாப்பையா, "அறம் என்று சிறப்பிக்கப்பட்டது மனைவியுடன் வாழும் வாழ்க்கையே: துறவற வாழ்க்கையும் பிறரால் பழிக்கப்படாமல் இருக்குமானால் நல்லது" என இக்காலத்தில் பழிக்கப்படும் சிலரின் துறவற வாழ்க்கையையும் சுட்டி சிந்தனையுரை தருவர்.

"அஃதும்" என்பது இல்வாழ்வைச் சுட்டுவதாக மணக்குடவர், பரிதியார் இருவரும் கருத, பரிமேலழகரும், பாப்பையாவும் அது துறவறத்தைச் சுட்டுவதாகக் கருதுவதும் கவனிக்கத்தக்கது.

நல்லோர் உரைகளை நயந்து நோக்கிய நல்லறிஞர் கலைஞர் "பழிப்புக்கு இடமில்லாத இல்வாழ்க்கை" என மூன்றே சொற்களில் சுருக்கவுரை தருவர்.

இக்குறளுரைகளை ஊன்றிப் பயிலுகையில், இல்வாழ்வில் ஈடுபடுவதே அறம் தான் எனக்கருதத் தோன்றுகின்றது. இல்வாழ்வில், சுற்றத்தாரைத் தாங்குதல், துறவிகளைப் பேணுதல், விருந்தினரை உபசரித்தல் முதலிய அறங்கள் செய்யப்படுவதனை, சிலப்பதிகாரம், மனையறம் படுத்த காதை,

**"மறுப்புஅருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்**
**விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்**
**வேறுபடு திருவின் வீறுபெறக் காண**
**உரிமைச் சுற்றமொடு ஒருதனி புணர்க்க"[5]**

என்றும், இல்லறத்தில் இருப்போர் அறநெறியாளர்களுக்கு உணவளித்தல், அந்தணர்களைப் பேணல், துறவியர்க்குப் பணிவிடை செய்தல், விருந்தினரை உபசரித்தல் முதலிய அறங்கள் செய்ததை, கொலைக்களக்காதை,

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்து எதிர் கோடலும்"[6]**

எனக் கூறுவதால் அறிய முடிகின்றது. பழந்தமிழரின் இல்லறத்தில் இடம்பெற்றிருந்த இவ்வறங்கள் இந்நாளில் எந்நிலையிலுள்ளன என்பதைச் சிந்தித்தல் வேண்டும். உரை வல்லுநர்கள் குறித்து, இரா.சாரங்கபாணி, "புறநாகரிகச் சார்பும் சமயச்சார்பும் அரசியற் சார்பும் முன்னிற்க, வலிந்து வேறுபட்ட உரைகளை எழுதினோரும் உளர்"[7] என்பர். ஆனால், கலைஞர், இத்தகைய எச்சார்பிற்கும் ஆட்படாமல் பழந்தமிழரின் நற்சார்பிற்கு பெருமைசேர்க்கும் விதத்தில் உரைகண்டார் என்று துணிந்து கூறலாம்.

### இல்லறத்தின் கலங்கரை விளக்கம்

தமிழரின் முகமாகக் கருதப்படும் திருக்குறளை, கலைஞர் தம் குறளுரையில் இல்லறத்திற்கு ஏற்றந்தரும் திருமுகமாக இக்காலத்திற்கு ஏற்ற எளியநடையில் முருகியல் இன்ப ஊற்றுப்போல் விளக்கியுள்ளார்.

உரைவல்லாரின் அறிவுக்கூறுகளைக் குறித்து வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகையில், "ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக்கூறுகள் வேண்டும் இன்னகாலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும் இத்தொடர் ஓடிக்கிடக்கும் முறைஇது என்ற நடையறிவும் இன்னபிறவும் இருந்தால்தான் பொருளை முரணின்றிக் காணமுடியும்"[8] என்பர். இக்கருத்திற்கு ஏற்ப உரையறிஞர் கலைஞர் உரையாக்கம் செய்ததை ஒரு குறளுரையின் மூலம் மெய்ப்பிக்கலாம்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த, மக்கட்பே றல்ல பிறசுசு என்னும் குறளில் ***(61)***

இடம்பெறும், "மக்கட்பேறு" என்னும் சொல் ஆண் மகவைக் குறிக்கிறதா? பெண் மகவைக் குறிக்கிறதா? அல்லது இருவரையும் குறிக்கிறதா என்பது குறித்த உரைகாரர்களின் புலப்பாடு சுவையாக அமைகிறது.

மணக்குடவர், "ஒருவன் பெறும் பொருள்களுள் அறிவுடைய மக்களைப் பெறுதல் பயன்படுவது. ஒழிந்த பொருள்களெல்லாம் அவற்றினும் சிறந்தவையாக யாம் கண்டறிவதில்லை" என எழுதி, "மக்கள்" என்பதை இருபாலர்க்கும் பொதுவறச் சுட்டுகின்றார். அவரைப் போலவே, பரிப்பெருமாள், "அறிவுடை மக்கள்" என்றும், பரிதியார், "பிள்ளையைப் பெறுதல்" என்றும், காலிங்கர், "நெறிக்கு உரியராகிய மக்கட் பேறல்லது" என்றும், வ.உ.சிதம்பரம்பிள்ளை, "அறிவுடைய மக்கட்பேறு அல்லாத" என்றும், மு.வரதராசன், "அறியும் நன்மக்கள்" என்றும், சாலமன்பாப்பையா, "பிள்ளைச் செல்வத்தைத் தவிர" என்றும், பாவாணர், "பிள்ளைப்பேறு அல்லாத" என்றும், சாமி சிதம்பரனார், "மக்களைப் பெறுவதைத் தவிர" என்றும் பொதுவற எழுது கின்றனர்.

இவ்வுரைகளைக் கசடறப் பயின்ற கலைஞரும்,

**"முன்னோர் மொழி பொருளே அன்றி அவர்மொழியும்**
**பொன்னேபோல் போற்றுவம்"[9]**

எனும் நன்னூல் நூற்பாவிற்கு ஏற்ப, "அறிவில் சிறந்த நல்லபிள்ளைகள்சுசு என்றே குறிப்பிட்டு மேற்குறித்தோர் கருத்திற்கு உடன்படுகின்றார்.

ஆனால், பரிமேலழகர், "அறிவறிந்த" என்ற அதனான், "மக்கள் என்னும் பெயர் பெண் ஒழித்து நின்றது" என பெண்ணை இழித்துத் தனியுரை காண்கின்றார். இவரே, "கேட்டதாய்" என்ற குறட்சொல்லிற்கு (69) "பெண்ணியல்பால் தானாக அறியாமையின்" எனப் பெண்ணைத் தாழ்த்தி உரைவகுப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால், பல்லாண்டுகளுக்கு முன்னரே, சிவப்பிரகாசர், பெண்ணின் பெருமையை உணர்ந்து, அப்பெண்ணை இழிவுபடுத்தும் இழிவான வழக்கத்தை எதிர்த்து, தமது "பெரியநாயகியம்மை கலித்துறை" நூலுள்,

**"கற்றார் அறிகுவார் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த**
**சொற்றான் ஒருபெண் ஒழித்ததென பாரொடு தொல்லுலகில்**
**நற்றாண் மகற்பெறுக என்றுஆசி சொல்பவர் நாணஉனைப்**
**பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே"[10]**

எனப் பதிவேற்றம் செய்துள்ளார். பரிமேலழகர், "மக்கள் மெய்தீண்டல்" எனும் குறள்தொடரில் (65) இடம்பெறும். "மக்கள்" என்பதற்கு, "மக்களது மெய்யைத் தீண்டுதல்" என பொதுவறவே உரை எழுதுகின்றார். "மக்கள் என்னும் பெயர் பெண் ஒழித்து நின்றது" என்னும் பரிமேலழகர் உரை திருவள்ளுவருக்கு உடன்பாடான கருத்தன்று என்பதற்கு, "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்ற குறளே (54) போதுமானது.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள், மழலைச்சொல் கேளா தவர்" என்னும் குறளில் (66) இடம்பெறும். "குழல்" புல்லாங்குழலாகும். "யாழ்", வீணையாகும். புல்லாங்குழல், கண்ணனுக்குரியது: யாழ், கலைமகளுக்குரியது. இக்கட்டுரைகள் ஆணையும் பெண்ணையும் சிறப்பிப்பனவாக நின்று திருவள்ளுவர் இருபாலரையும் போற்றுபவர் என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றது.

திருவள்ளுவரின் உள்ளக் கருத்தை அறிந்தே கலைஞர், "மக்கட்பேறு" என்பதற்கு, "அறிவிற் சிறந்த நல்ல பிள்ளைகள்சுசு என உரைவகுத்தார் எனலாம். இதன்மூலம், இல்லறத்தின் கலங்கரை விளக்கம் மக்கட்பேறாகும்: அம்மக்கட்பேறு இருபாலரையும் சுட்டும் பொதுச்சொல்லாகும் எனத்தெளியலாம் இத்தகு கலைஞரை, ஐபெருங்கதை, 2-4 (51, 52),ஸ

**"பருச்சொல் பருப்பொருள் பன்னுபு நீக்கி**
**பொருட்சொல் நிரப்பும் புலவர்"[11]**

எனப்பாராட்டலாம்.

## முடிவுகள்

திருவள்ளுவர் காலத்தில் எல்லார்க்கும் தெரிந்தவற்றிற்கு வெளிப்படை விளக்கங்கள்

கூறாது விட்டிருக்கலாம். காலப்போக்கில் அவ்விளக்கங்கள் மறைந்தாலும் அவற்றை அறிந்தோர் இல்லாமல் போனதாலும் உரைகாரர்கள் தத்தம் விருப்பிற்கு ஏற்ற உரை எழுதினர்.

கலைஞர், திருக்குறளின் சொல் வரிசைப்படியே பொருள் உரைக்கின்றார்: மொழிப்புரையாகத் தருகின்றார்: சுருக்கமாக எழுதுகின்றார், முன்னோர் உரைகளுள் ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே உரை வகுக்கின்றார்.

கலைஞர், பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவருக்கும் துணையாக இருப்பது இல்லறக் கடமையாகும், பழிப்பில்லாத இல்வாழ்க்கை இல்லறத்தின் சிறப்பாகும், இல்லறத்தின் நற்பேறு நல்லபிள்ளைகளை அடிப்படையாகக் கொண்டதாகும் எனக்கருதுகின்றார்.

இல்லறம் என்பது அறவாணர்களுக்கு உணவளித்தல், அந்தணர்களைப் பேணல், துறவியர்க்குப் பணிவிடை செய்தல், விருந்தினரை உபசரித்தல் முதலியவற்றை உள்ளடக்கியது என பழந்தமிழர் கருதினர். இவற்றில், எவ்வகை அறங்கள் இக்கால இல்லறத்தில் பேணப்படுகின்றன என்பதை நினைத்தல் அவசியமாகும்.

கலைஞர், பிறர் உரைகளை ஆழ்ந்து பயின்று தெளிவு பெற்றதுடன் பரிதியார் போல எளிமையாகவும் காலிங்கர்போல தனித்தமிழ் நடையிலும் உரை வகுத்துள்ளார்.

## குறிப்புகள்

1. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.340.
2. வ.சுப.மாணிக்கம், எந்தச் சிலம்பு, ப.41.
3. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், உரைநடைக்கோவை, ப.25.
4. ந.மு.வேங்கிடசாமி நாட்டார் (உரை), கொன்றை வேந்தன், பா.3.
5. உ.வே.சாமிநாதையர் (பதி.), சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், 2: 85-88.
6. மேலது, 16: 71-73
7. இரா.சாரங்கபாணி, உரைவேற்றுமை, நூன்முகம்.
8. வ.சுப.மாணிக்கம், சிந்தனைக் களங்கள், ப.313.
9. உ.வே.சாமிநாதையர் (பதி.), நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும், நூ.9.
10. நா.கதிரைவேற்பிள்ளை (பதி.), பெரியநாயகியம்மை கலித்துறை, பா.10.
11. சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார், கொங்குவேளிர், ப.152.

# சங்க இலக்கியத்தில் வீட்டுப் பயன்பாட்டு இரும்புப் பொருள்கள்

*முனைவர் ப. முருகேசன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

## முன்னுரை

அன்றாட வாழ்க்கையில் தினந்தோறும் இரும்பாலான பொருள்கள் வீட்டில் சில அடிப்படை தேவைகளுக்காக நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். அத்தகைய பொருள்கள் பற்றிய பதிவுகளை சங்க இலக்கியத்தின் வாயிலாக எத்தகைய சொற்கள் மூலம் அழைக்கப்பட்டு வந்தன என்று எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழங்காலத்தில் இருந்தே தமிழர்கள் தங்கள் வீட்டுப் பயன்பாட்டிற்குரிய பொருள்களை இரும்பிலே செய்து வந்துள்ளனர் என்பதை பின்வருமாறு காணலாம்.

## விளக்கு

இரவு நேரத்தில் வெளிச்சம் ஏற்படுத்த விளக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்விளக்குகள் இரும்பிலே செய்யப்பட்டிருக்கின்றன.

**அவ்இதழ் அவிழ் பதம் கமழ பொழுதுஅறிந்து**
**இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ**
**நெல்லும் மலரும் தூஉய் கை தொழுது**
**மல்லல் ஆவணம் மாலை அயர**

***(நெடுநல்.41-44)***

மாலைப்பொழுது அறிந்து இரும்பினால் செய்யப்பட்ட விளக்கில் திரி பொருத்தி நெல்லும் மலரும் தூவி மகளிர் வணங்கி வழிபட்ட செய்தியை அறிந்துகொள்ளமுடிகின்றது.

## கத்தி

இரும்பு, எஃகு ஆகிய சொற்கள் சங்க இலக்கியங்களில் கத்திக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

இறைச்சியை வெட்ட கத்தி பயன்படுத்தப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இறைச்சியை வெட்ட பயன்படுத்தப்பட்ட கத்தியும் எஃகு என்றே அழைக்கப்பட்டது. இறைச்சியை வெட்ட பயன்படுத்தப்பட்ட கத்தியானது சேம்புக்கிழங்கைச் சமைத்த மடலில் சிவந்த ஊனைப் போன்று காணப்படுவதை,

**அடைச்சேம்பு எழுந்த ஆடுறும் மடாவின்**
**எஃகு உறச் சிவந்த ஊனத்து யாவரும்**
**கண்டு மதி மருளும் வாடாச் சொன்றி**

***(பதிற்று.24:20-22)***

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## கத்திரிக்கோல்

பதிற்றுப்பத்துப் பாடலில் செல்வக்கடுங்கோ நால்வகைப் படைகளில் குதிரைப் படையில் குதிரைகளின் பிடரி மயிரை மட்டம் செய்ய கத்தரிக்கோல் பயன்பட்டது. கத்தரிக்கோல் என்பதற்கு எஃகு என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எஃகினால் செய்யப்பட்டதன் மூலமாக இப்பெயர் வந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது.

**எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவியொடு**
**மைந்துடை யாரெயில் புடைபட வளைஇ**

***(பதிற்று.62:3-4)***

என்ற சான்றின் மூலம் அறியமுடிகின்றது.

## ஊசி

பதிற்றுப்பத்தில் ஊசி என்னும் கருவி வீரர் மார்பின் புண்களை இழை கொண்டு தைக்கப் பயன்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

**மீன் தேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்**

**சிரல் பெயர்ந்தன்ன நெடுவெள் ஊசி**
**நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்**
***(பதிற்று.42:2-4)***

*மீனைப் பிடிப்பதற்குக் குளத்திலே மூழ்கி எழும் மீன் கொத்திப் பறவையின் அலகு போன்று வீர் மார்பின் புண்களை இழைகொண்டு தைக்கும் ஊசிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.*

*மகளிர் கண்களைப் போன்ற செங்கழுநீர்ப் புக்களை ஊசியால் கோர்த்துச் சுற்றிக் கட்டிய மாலையைத் தலைவன் அணிந்திருந்ததை,*

**ஒண் செங்கழுநீர்க் கண்போல் ஆய்இதழ்**
**ஊசி போகிய சுழ்செய் மாலையன்**
***(அகம்.48:8-9)***

*என்ற சான்றின் மூலம் உணரமுடிகிறது.*

*மணிமேகலைப் பாடலில் பசுமையான கம்பளத்தில் இரும்பால் செய்த ஊசியொன்று எளிதில் தைத்து இடம் தெரியாமல் போனதை,*

**பொன்னி னூசி பசுங்கம் பளத்துத்**
**துன்னிய தென்னத் தொடுகட லுழந்துழி**
***(மணி.29:17-18)***

*கம்பளம் தைக்க இரும்பில் செய்யப்பட்ட ஊசி பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது.*

### ஆணி

*பொன் என்ற சொல் இரும்பாணியைக் குறிக்கின்றது. புறநானூற்றுப் பாடல் ஒன்று இரும்பில் செய்யப்பட்ட ஆணியும் பட்டமும் அறையப்பட்ட அழகுமிக்க கேடயம் பற்றியும்,*

**விளங்குபொன் எறிந்த நலம்கிளார்**
**பலகையொடு (புறம்.15:12)**

*என்ற பாடல் மூலம் அறியலாம்.*

### சுத்தி

*கொல்லர் உலைக்களத்தில் இரும்பினைக் காய்ச்சிப் பட்டைக்கல்லின் மேல் வைத்து ஓங்கி அடிப்பதற்காகப் பயன்படுத்தும் ஒருவகைக் கருவிக்கு சம்மட்டி என்று பெயர். கழகத்தமிழ் அகராதியில் இதற்குக் "கூடம்" என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.[1] தற்கால வழக்கில் இதனைச் "சுத்தியல்" என அழைப்பர்.*

*கொல்லன் பழுக்கக் காய்ச்சிய இரும்பினை வேகமாக அடித்ததன் மூலம் கூடத்தினுள் எழுந்த ஓசைக்கு அஞ்சி அரண்மனை மாடத்தில் உறங்கிக் கொண்டிருந்த புறாக்கள் தம்முடைய உறக்கத்தைத் தவிர்த்தன.*

**கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த**
**கூடத் திண்இசை வெரீஇ மாடத்து**
**இறைஉறை புறவின் செங்காற் சேவல்**
**இன்துயில் இரியும் *(பெரும்.437-440)***

*என்ற பாடல் வரிகளில் கொல்லர் இரும்பைப் பழுக்க காய்ச்சி அடிக்கும் தொழிலின் மேன்மையை பெற்றிருந்தனர் என்பதைக் காணமுடிகிறது.*

### குறடு

*கொல்லர்கள் உலைக்களத்தில் வேலை செய்யும் போது இரும்பை கையில் எடுப்பதற்கும் குறடு பயன்படுகிறது. பார்ப்பதற்கு நண்டின் கவைக்கால் போன்று உள்ளதைப் பின்வரும் பாடல் வரிகள் தெளிவுபடுத்தும்.*

**. . . . . . . . . . . . . . . . . மென்தோல்**
**மிதிஉலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன**
**கவைத்தாள் அலவன் அளற்றுஅளை சிதைய**
***(பெரும்.206-208)***

*பழந்தமிழர் குறடைப் பயன்பாட்டின் அடிப்படையில் நண்டின் கால்கள் போன்று உருவாக்கி இருப்பதையும், வீட்டில் சமைக்கும் போது பாத்திரங்களை பிடிப்பதற்கு குறடு (இடிக்கி) பயன்படுத்தப்படுகின்றன.*

### கோடாரி

*நவியம், எஃகம் ஆகிய பெயர்கள் சங்க இலக்கியங்களில் கோடாரிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. புறநானூற்றுப் பாடலில் வடித்துக் கூராக்கப் பெற்ற கோடாரி குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் நவியம், வெட்டுதல் குறித்த செய்திகள் அறியமுடிகின்றது.*

**வடி நவில் நவியம் பாய்தலின் (புறம்.23:8)**

*என்ற சான்றின் மூலம் அறிவதோடு, வடித்தல் என்னும் சொல்லின் மூலம் கொல்லர்கள் கோடாரியை இரும்பில் வடித்திருக்கிறார்கள் ஏன அறிய முடிகின்றது.*

**அரம்**

இரும்புப் பொருள்களைத் தேய்த்து ஏற்ற வடிவம் பெறச் செய்வதற்கு அரம் என்னும் கருவியைப் பயன்படுத்தினர் என தெரிகிறது.

புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் கொல்லன் அரத்தால் கோடாரியைக் கூர்மை செய்த செய்தி கூறப்பட்டுள்ளது.

***கருங்கைக் கொல்லன் அரம்செய் அவ்வாய்***
***நெடுங்கை நவியம் பாய்தலின் நிலை அழிந்து***
***(புறம்.36:6-7)***

**முடிவுரை**

சங்க காலத்தில் கொல்லர்கள் எஃகு என்னும் உறுதியும். பளபளப்பும் வாய்ந்த ஒரு வகை இரும்பிலிருந்து பல்வேறு வீட்டிற்கு தேவையான பொருட்கள் அக்கால மக்கள் செய்து வந்துள்ளனர் என்பதையும், அறுவை மருத்துவத்திற்கும், கம்பளம் தைப்பதற்கும் இரும்பாலான ஊசி பயன்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் அக்கால மக்களின் நாகரிகம் மற்றும் பொருளாதார நிலையைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மேலும் எல்லா மக்களுக்கும் தினசரி வாழ்க்கையில் பயன்படக்கூடிய இரும்புப் பொருள்கள் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. கழகத் தமிழ் அகராதி, ப.430

**துணைநூற்பட்டியல்**

1. சோமசுந்தரனார் பொ.வே.,(உரை.) 2008, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு (பகுதி 1,2) சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
2. கழகப் புலவர் குழு, (தொ.ஆ.) 2002, கழகத்தமிழ் அகராதி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

# சிற்றிலக்கியங்களில் இழையோடும் புலம்பெயர்க் கூறுகள்

***நா. மணிகண்டபிரபு***
கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***முனைவர் ஆ. பூமிச்செல்வம்***
ஆய்வு நெறியாளர், இணைப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***முன்னுரை***

*மனிதன் காலங்காலமாக ஓரிடத்தைவிட்டு மற்றோரிடத்திற்குப் புலம்பெயர்ந்து கொண்டே தான் இருக்கின்றான். இனக்குழுக் காலத்தில் கூட்டம் கூட்டமாக உணவு தேடியும் தங்குமிடம் தேடியும் மனிதன் இடம்பெயர்ந்தான்.இவ்வாறு இடம்பெயர்ந்து கொண்டேயிருந்த மனிதச் சமூகம் ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டது. ஆற்றங்கரையோரம் நிலைபெற்று, இயற்கை யிடமிருந்து வேளாண் தொழிலைக் கற்றுத் தானியங்களைப் பயிரிட்டது. தனக்கென்று தனித்த குழு, தனித்த நிலம் என்று மாறிய பின்னர் தன் மண் சார்ந்தும், மக்கள் சார்ந்தும் பிற குழுக்களிடமிருந்து அடையாளப்படுத்திக் கொள்வதற்காகவும் ஒரு பெருஞ்சமூகமாகத் தங்களை மாற்றிடும் அவசியம் அதற்கு ஏற்பட்டது. இது தங்களுக்கெனப் புதிய கலாச்சார பண்பாட்டையும் உருவாக்கியது. இவற்றை மையமிட்டுப் பார்க்கும்போது, தமிழ்ச் சமூகமானது வணிகத்திற்காகவும், உயர் கல்விக்காகவும், போருக்காகவும், தூதிற்காகவும் மட்டுமே புலம்பெயர்ந்திருந்தது என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. இவற்றைச் சங்க இலக்கிய நூல்களும் கூட விரிவாகக் காட்டுகின்றன. சங்ககாலம் மற்றும் சங்கம் மருவிய காலத்தில் தொல்காப்பியம் சுட்டுகிற அறுவகைப் பிரிவுகளுக்காகவும் புலவர்கள் பரிசில் பெற வேண்டியும் கூடத் தம் நிலத்தை விட்டுப் புலம்பெயர்வது என்பது நிகழ்ந்துள்ளது. இவ்வறுகைப் பிரிவுகளையடுத்து, காப்பிய கால இலக்கியங்களில் தலைவன், தலைவி போன்ற கதைமாந்தர்களின் இடப்பெயர்வானது விரிவாக அமையப்பெற்றுள்ளது. வைதீக சமயங்கள் எழுச்சிப் பெற்ற பக்தி இயக்கக் காலத்தில் அச்சமயங்களின் பெரியோர்கள் தங்களுடைய இறைவனின் புகழைப் பாடிடவெனத் தலங்கள் தோறும் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.*

*இதனையடுத்து, சிற்றிலக்கிய காலத்தில் மன்னர்களிடம் பரிசில் பெறவேண்டி, புலவர்களின் இடப்பெயர்வு நிகழ்ந்துள்ளது. அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு ஆகிய இந்நான்கு உறுதிப்பொருள்களில் ஏதேனும் ஒன்றை மட்டும் மையமாக வைத்துப் பாடப்பெறும் இலக்கியம் சிற்றிலக்கியம் எனப்படும். இச்சிற்றிலக்கியம் அதிகமாக எழுந்த காலங்களாக என்பது கி.பி. 16ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரையுள்ள இருநூற்றாண்டுகளைச் சுட்டலாம். சிற்றிலக்கியத்திற்கான இலக்கணம் மற்றும் தோற்றுவாய் ஆரம்ப காலகட்டங்களிலே உருவாகியிருந்தாலும், கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், அவைகள் பெரும் வளர்ச்சி பெற்று எண்ணற்ற வகைமையிலான சிற்றிலக்கியங்களாக உருவாகின எனலாம். சங்க இலக்கியங்களில் தொடங்கி பழந்தமிழர்களின் புலம்பெயர்வானது ஒவ்வொரு காலகட்டத்திற்கேற்பவும், மக்களின் தேவைக்கேற்பவும் மாறிக்கொண்டே வருவதைப்*

போல சிற்றிலக்கியக் காலத்திலும் மனிதர்களின் புலம்பெயர்வு மாற்றம் கொண்டுள்ளன. குறிப்பாக, சிற்றிலக்கிய வகைமைகளின் அடிப்படையில் இப்புலம் பெயர்வு நிகழ்கிறது. 96 வகை சிற்றிலக்கிய வகைகளில் சிலவகை சிற்றிலக்கிய வகைமைகள் மட்டும் புலம்பெயர்வை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன. அந்தவகையில் தூது, குறவஞ்சி, பரணி, உலா ஆகிய இவ்விலக்கியங் களிலும் புலம்பெயர் கூறுகளே மையமாகக் கொண்டு அமைகின்றன இக்கூறுகளைப் பற்றி இக்கட்டுரையில் எடுத்துக்காடுவதே இவ்வாய்வின் முன்னுரையாக அமைகிறது.

### சிற்றிலக்கிய வகைமைகளில் புலம்பெயர்வு

தூது இலக்கியம் என்பது ஒருவர் காதல் கொண்டுள்ள ஒருவர் தம் காதலரிடத்து வேறு ஒருவரைத் தூதாக அனுப்புவதை மையமாகக் கொண்டதாகும். இவ்வாறு தூதாகச் செல்வதென்பது புலம்பெயர்வாக அமைகிறது. உலா இலக்கியம் தலைவன், தன் நகரின் வளத்தையும் மக்களின் நிலையையும் அறிந்து கொள்ள எண்ணி, தன் நாட்டிற்குள்ளே உலா வருகின்றான். அவ்வுலா நிகழ்வைக் காணும் பெண்கள் அவன் மீது காதல் கொள்கின்றனர் என்பதாக உலா இலக்கியம் அமைகின்றது. இத்தகைய உலா வருதல் நிகழ்வானது உள்ர் புலம்பெயர்வைக் குறிக்கிறது. குறவஞ்சி இலக்கியத்தில் குறத்திப் பெண் தலைவிக்கு குறிசொல்ல தன் மலையை விட்டு கீழே இறங்கி சமவெளிப் பகுதிக்கு பெயர்ந்து செல்கிறாள். பரணி இலக்கியத்தில் போர் காரணமாக தலைவன் புலம்பெயர்ந்து செல்கின்றான். போர் குறித்தும், போர் முடிந்த பிறகானப் போர்க்களம் குறித்தும் இதில் பாடப்படுகிறது. இந்நான்கு வகைப் பெயர்வுகளும் காலவரையறையோடு நிகழும் புலம்பெயர்வாக அறியப்படுகிறது. எனவே, இதனை மையமிட்டு சிற்றிலக்கியக் காலத்தில் நிகழ்ந்தப் புலம்பெயர்வைக் காணலாம்.

### தூது இலக்கியம்

ஒருவர் தன் மனக்கருத்தை பிறருக்கு அறிவிப்பதற்காக அனுப்பப்படுவது தூதாகும். தூது, தனி இலக்கியமாக முகிழ்த்த காலத்தில் முதன்முதலாகத் தோன்றிய நூல் பதினான்காம் நூற்றாண்டில் உமாபதி சிவாச்சாரியரால் இயற்றப்பட்ட "நெஞ்சுவிடுதூது" ஆகும். காலவளர்ச்சியில் விறலிவிடுதூது, கிளிவிடுதூது, தமிழ்விடுதூது, மேகவிடுதூது, காக்கைவிடுதூது போன்ற பல தூது நூற்கள் எழுந்தன. தூது இலக்கண நூல்களில் மிகவும் செறிவும் இனிமையும் மிக்க தன்மையுடையதாய் விளங்குவது "தமிழ்விடுதூது" ஆகும். இதில், மதுரையில் கோயில் கொண்டுள்ள சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தமிழ்மொழியினைத் தூதாக விடுகின்றாள். எனவே "தமிழ்விடுதூது" எனப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலில், தமிழ்மொழியின் சிறப்பை எடுத்துக்கூறி, அம்மொழியையே இறைவனிடம் தூதாகனுப்புகிறாள். சிவ பெருமானிடம் சென்று, அங்கு பெண்ணொருத்தி உங்களை எண்ணி காத்திருக்கிறாள் என்று கூறி,

**"துறவாதே சேர்ந்து சுகாநந்த நல்கே**
**மறவாதே தூது சொல்லி வா"**[1]

என்று தூது அனுப்புகிறாள். மேற்கண்ட இவ்வரிகளில், தலைவன் என் இருப்பிடம் தேடிவந்து என்னைவிட்டுப் பிரியாமல் இருந்து கூடி இன்புற்று நல்ல இன்பத்தை கொடுக்குமாறு மறந்துவிடாமல் தூது சொல்லி, மீண்டு அவரது பதிலை மறவாமல் வந்து கூறுவாயாக என்று கூறுகிறாள்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "அழகர்கிள்ளைவிடுதூது" நூலில் திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியுள்ள அழகர் மீது பெண்ணொருத்தி காதல் கொள்கின்றாள். இதன்பால், கிளியை அவரிடம் தூதாக அனுப்புவதாக இந்நூல் அமைகிறது.

பொதுவாக, தங்களுடைய நாட்டில் இருந்து கொண்டு, தான் கொண்ட பிரிவாற்றமையைத் தனது இணையாரிடம் அறிவிப்பதற்காக தூதனுப்பப்பட்டதாகப் பாடல்கள் அமையப்

பெற்றாலும், அக்காலத்தில் எழுந்த தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில், பரிசில் வேண்டி புலம்பெயர்ந்து சென்ற புலவன் ஒருவன் மன்னனைக் காணாது, தன்னுடைய இன்னல்களை நாரையிடம் எடுத்துக் கூறி, இந்நிலையினைத் தன் மனைவியிடம் தூது செல்ல இரைஞ்சுவதாகச் சத்திமுத்தப் புலவர் இயற்றிய பாடல் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**"நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்**
**...............**
**எங்கோன் மாறன் வழுதி கூடலில்**
**ஆடையின்றி வாடையின் மெலிந்து**
**கையது கொண்டு மெய்யது பொத்திக்**
**காலது கொண்டு மேலது தழீஇப்**
**பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்**
**ஏழை யாளனைக் கண்டனன் எனுமே"[2]**

என்று, புகலிட நாட்டில் தனக்கு ஏற்பட்ட இன்னல்களை எடுத்துரைப்பதாக இப்பாடல் அமைகிறது. இவ்வாறு, தூதாக செல்பவர்கள் புலம்பெயர்ந்து வேறொருப் புலத்திற்கு செல்வதைக் காண முடிகிறது.

## குறவஞ்சி இலக்கியம்

பொதுவாக, மனம் பித்து பிடித்தவர்களுக்கு பேய்பிடித்துவிட்டதாக எண்ணி, குறத்தியை அழைத்து குறிகேட்பது என்பது நம் தமிழர்களிடையே காலங்காலமாக இருந்துவரும் மரபாகும். சங்க இலக்கியத்திலுங்கூட, தலைவியின் காதல் நோய்த் தீர்க்க, தோழி குறத்திப் பெண் மூலம்,

**"அகவன் மகளே அகவன் மகளே**
**அவர் நல்நெடுங் குன்றம் பாடுகபாட்டே"[3]**

என்று தலைவனின் மீது கொண்டுள்ள காதலைக் குறிப்பால் உணர்த்துவதை அறிய முடிகிறது. எனவே, குறி கூறுவதற்காக ஊர் ஊராக புலம்பெயர்ந்து செல்லும் குறவர்களை அழைத்து குறிகேட்டல் என்பது இன்றளவும் தமிழர்களிடையே இருந்துவரும் வழக்கமாகும்.

திரிகூடராசப்பக் கவிராயரால் எழுதப்பெற்ற "குற்றாலக் குறவஞ்சிசுசு எனும் நூல் மலைகளில் வாழும் குறவர்களின் வாழ்வியல் நிலைகளை எடுத்துக்காட்டுகிறது. மலைகளில் கிடைக்கும் உணவுப் பொருட்களை உணவாக உண்கின்றனர். விலங்குகளின் எலும்பு மற்றும் பற்களை ஆபரணமாக மாற்றி, அவற்றை சமவெளிப் பகுதிகளில் உள்ள மக்களிடம் விற்றுத் தொழில் நடத்தி வருகின்றனர். மேலும், குறிசொல்லுதலே குறவர் இனப் பெண்களின் முக்கியத் தொழிலாக உள்ளது. அப்பெண்கள் தங்களின் மலையைவிட்டு இடம்பெயர்ந்து மக்களிடம் சென்று குறி சொல்கின்றனர். குறி சொல்லி முடித்தபின்னர் அவர்கள் தரும் பரிசினை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டு, மீண்டும் தன் இருப்பிடம் தேடி செல்கின்றனர். இதன்பொருட்டு தலைவி வசந்தவல்லிக்கு குறி சொல்வதற்காக, மலையைவிட்டு, புலம்பெயர்ந்து குறத்திப் பெண் வருவதை,

**"வஞ்சி வந்தனளே! மலைக்குறவஞ்சிவந்தனளே!**
**வஞ்சி எழில்அப ரஞ்சி வரிவிழிநஞ்சி**
**முழுமுற நெஞ்சி பலனவில்**
**அஞ்சு சடைமுடி விஞ்சை அமலனை**
**நெஞ்சில் நினைவொரு மிஞ்சுகுறி சொல"[4]**

என்று ஆசிரியர் கூறுகிறார். இவ்வரிகளில், வஞ்சிக்கொடி போன்றவள், அழகுபொன்மிக்க வடிவத்தினை உடையவள். உறுதிமிக்க மனத்தினை உடையவள். ஆணவம், அறியாமை முதலியன இல்லாமல் திருக்குற்றால நாதனை நெஞ்சில் குடிகொண்ட நினைவுகளுடன் சிறந்த உண்மையான குறிகள் சொல்வதற்குக் குறவஞ்சி வந்தாள் என்று அவ்வூர் மக்கள் புகழ்கின்றனர்.

## பரணி இலக்கியம்

தமிழர்களின் அறுவகைப் பிரிவுகளில் ஒன்றான பகைவயின் பிரிவு என்பது போருக்காகப் புலம்பெயர்ந்து செல்லுதலாகும். போர் குறித்த செய்திகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்பெற்றாலும், சிற்றலக்கியங்களில் போரினை மையமிட்டு முழுமையாக எழுந்த நூலாக "கலிங்கத்துப்

பரணி" அமைகிறது. இப்பரணியில் போர் முடிந்தபின், போர்க்களம் பாடுதல் என்ற பகுதியும் இதில் இடம்பெற்றிருக்கின்றது. இப்பகுதியில் இறந்த வீரர்களின் உடல்களும் வீரர்களின் இரத்த வெள்ளமும் பேய்கள் கூழ்சமைத்துச் சாப்பிடுவதும் காட்டப்படுகிறது. இக்களம்பாடும் பகுதி சமகாலத்தில், போர் நிறைவுற்ற பின்னர், போர்க்களத்தின் கொடுமைகளையும் போர் ஏற்படுத்திய விளைவுகளையும் போர் இலக்கியங்களாகப் பதிவு செய்துள்ளனர். இது இங்கு ஒப்புமை பார்க்கத்தக்கது. போர்க்கள வருணனைக்குச் சான்றாக,

**"விருந்தினமும் வறியவரும் நெருங்கி உண்ண,**
**மென்மேலும் முகம் மலரும் மேலோர் போலப்**
**பருந்தினமும், கழுகினமும் தாமே உண்ணப்**
**பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!"[5]**

என்ற பாடலைக் காணலாம். இவ்வரிகளில் பருந்துகளும் கழுகுகளும் கொலையுண்ட வீரர்களின் உடம்பில் நிலைத்திருக்கும் உயிர் நீங்கும் வரையிலும், அவர்களின் அருகிலேயே இருந்துவிட்டு, அவர்களை உண்ணக் காத்திருக்கின்றன என்று போர்க்களம் காட்டப்படுகிறது.

### உலா இலக்கியம்

உலா என்பது பாட்டுடைத்தலைவன் நகர் வலம் வருவதை சிறப்பித்துப் பாடுவது ஆகும். தலைவன் வீதி உலா வரும்பொழுது அவ்வீதியிலுள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக உள்ள ஏழு பருவப் பொதுமகளிரும் தலைவனைக் கண்டு காதலுற்றதாக இந்நூல் அமைகிறது. தொல்காப்பியம் இதனை,

**"ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப"[6]**

என்று கூறுகிறது. இச்சூத்திரம் உலா இலக்கியத்தின் தோற்றுவாயாக அமைகிறது. ஆனால், சிற்றிலக்கிய காலத்தில்தான் உலா இலக்கியத்தில் நூற்கள் தோன்றின. இதன் பாட்டுடைத்தலைவனாக, இறைவனோ, அரசனோ, வள்ளல்களோ அமைவர். நவீன காலத்தில் உலா இலக்கியம் பெருந் தலைவர்கள் மீதும் ஏற்றி பாடப்பட்டுள்ளது.

தமிழில் முதன்முதலில் எழுந்த உலா இலக்கியம் சேரமான்பொருள் நாயனார் எழுதிய "திருக்கையிலாய ஞான உலா" ஆகும். இதற்கடுத்ததாக, ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கச்சோழன், இராச இராச சோழன் ஆகிய மூவரின் அவைகளிலும் தலைமைப்புலவராக வீற்றிருந்தபடியால், மூவர் மீதும் உலா இலக்கியம் பாடியுள்ளார். இது "மூவருலா" என்று அழைக்கப்படுகிறது.

உலாச் செல்வதை காலவரையறையோடு நிகழும் புலம்பெயர்வு எனலாம். தன் நாட்டிற்குள்ளேயே தலைவன் வீதியுலா வருவதால் இதனை, உள்ர் புலம்பெயர்வு என்கிறோம்.

இரண்டாம் இராசஇராச சோழனுலாவில், அம்மன்னன் பட்டத்து யானையின் மீதேறி உலாவர ஆயத்தமாகின்றான் என்பதை,

**"சூழச் சுருதி யனைத்தும் - தொகுத்தெடுப்ப**
**வேழப் பெருமானை மேல்கொண்டு"[7]**

என்ற வரிகளில், வேதவல்லர்கள் ஒருசேர வேதங்கள் எடுத்து ஓத பட்டத்து யானையின் மீது ஏறி உலா வர ஆயத்தமானான் என்று ஆசிரியர் குறிக்கின்றார்.

மேலும் உலாவரும்பொழுது அவனோடு, வெளிநாட்டு மன்னர்களும் உடன் வந்தனர் என்பதை,

**"தென்னரும் சேரவரும் சிங்களரும் கொங்கணத்து**
**மன்னரும் மாளவரும் மாகதரும் - பின்னரும்**
**காந்தாரர் காலிங்கர் கௌசலர் உள்ளிட்ட**
**புந்தார் நரபாலர் முன்போத - வேந்தர்"[8]**

என்ற வரிகளில், வாட்படையுடைய தென்னவர், சேரவர்கள், சிங்களர், கொங்கணத்து மன்னர், மாளவன், மகத தேசத்து மன்னர், காந்தார நாட்டு அரசர், கோசலநாட்டு மன்னர் போன்ற மன்னர்களே முன்னே சென்றனர் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே மன்னன் வீதியுலா செல்லும்பொழுது மேற்குறிப்பிட்ட நாட்டு மன்னர்களும் புலம்பெயர்ந்து, சோழநாட்டிற்கு வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. மேலும் அவர்கள் அனைவரும் முன்னே செல்ல இரண்டாம் இராசஇராசன்

நகர் வலம் செல்கின்றான் என்று இராசராச சோழனுலா மூலம் அறியமுடிகின்கிறது.

## முடிவுரை

இவ்வாறாக உலா இலக்கியம் என்பது, புலம்பெயர்வை மையமிட்டு பாடப்பெறுகின்ற சிற்றிலக்கியம் ஆகும். உலா இலக்கியங்களைப் போலவே முன்னர் குறிப்பிட்ட தூது, பரணி, குறவஞ்சி ஆகிய மூன்று சிற்றிலக்கிய வகைமைகளும் புலம்பெயர்தலை மையமிட்டே அமைகின்றன. அதிலும் குறிப்பாக, கலிங்கத்துப்பரணி நேரடியாக போர் நிகழ்வதையும் போர் முடிந்த பின்னர் அதன் விளைவுகளையும் தன்னகத்தே கொண்டு பாடப் பெற்றுள்ளது. எனவே, சிற்றிலக்கிய காலகட்டத்தில், தமிழர்களின் அறுவகைப் பிரிவின் அடிப்படையிலும் புலம்பெயர்வை மையமிட்டும் நிகழ்கிறது. அதோடு புலவர்களின் வறுமையின் காரணமாக, மன்னர்களிடம் பரிசில் பெற வேண்டியும் எண்ணற்ற சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றன என்பதை அறிய முடிகிறது.

## சான்றெண் விளக்கக் குறிப்புகள்

1. தி.சங்குப்புலவர் (உ.ஆ.), “தமிழ்விடு தூது”, ப.106.
2. கா.சு.பிள்ளை (உ.ஆ.), சத்திமுத்தப் புலவர் (பா.ஆ.), “தனிப்பாடல் திரட்டு”, பா.எண்.92, ப.208.
3. தமிழண்ணல் (உ.ஆ.), ஔவையார் (பா.ஆ.), “குறுந்தொகை”, பா.எண்.23, ப.49.
4. புலியூர்க்கேசிகன் (உ.ஆ.), “திருக்குற்றாலக் குறவஞ்சி”, ப.64
5. புலியூர்க்கேசிகன் (உ.ஆ.), “கலிங்கத்துப்பரணி”, பா.எண். 478, ப.234.
6. ச. திருஞானசம்பந்தம் (உ.ஆ.), “முந்நூல்”, நூ.எண்.83, ப.87.
7. துரை. ராசாராம் (உ.ஆ.), “மூவருலா”, ப.192.
8. மேலது., ப.195.

# உமா மகேஸ்வரியின் "புதர்கள்" சிறுகதை: விளிம்பு நிலை வாசிப்பு

***பு. வினோதா***
முனைவர் பட்ட ஆய்வாளர், இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*பண்பாட்டு வாழ்வில் விளிம்பு நிலையினர் எனப்பட்ட ஒரு கூட்டத்தினர் சமூகத் தில் தம் இருப்பினை வெளிப்படுத்த இயலாதவர்களாக, சக சமூக உறுப்பினரோடு தன்னை இணைத்துக் கொள்ள முடியாதவர்களாக முன்னாள் அடிமைகளாக,பெண் பாலினமாக, பாட்டாளிகளாக இருக்கிறார்கள். உமாமகேஸ்வரியின் புதர்கள் என்னும் சிறுகதை மனநோய் பாதிக்கப்பட்ட பெண்ணைக் கண்டு அதிர்ச்சியுறும் சமூகத்தினர் குறித்து அமைந்துள்ளது. சமூக்கதின் ஒழுக்க விதிகள் எதையும் பின்பற்றத் தேவையில்லாத நிலையே மனநோய் என்பதாக இக்கதை அமைகிறது. மீனா, அலமேலு, ராமக்கா ஆகியோர் அவளுக்கு உடைகள் தருகின்றனர். ஆனால் அவற்றைப் பொருட்படுத்தவளாக இருக்கிறாள். தெருவில் அவளது நடமாட்டம் இருந்தாலும் புதர், காம்பவுண்ட் சுவரின் அடிவாரம் என அவளது இருப்பிடம் அமைகிறது, இத்தகையவளை கயவர்கள் தூக்கிச் சென்று வன்கொடுமைக்கு உ்ளாக்குகின்றனர். மனநோய் யாருக்கு என்ற கேள்வியை இப்பகுதியில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். இக்கட்டுரையில் மனநோயாளிகள் பொருட்படுத்தத்தக்கவர்கள் என்பதை வலியுறுத்தும் விதம் பற்றி கூறப்படுகிறது.*
***குறிப்புச் சொற்கள்:*** *மனநோய், புதர்கள், பன்றி, ஒப்பாரி, அலறல்கள், உடைகள்*

**முன்னுரை**

பல்வேறு இனக்குழுக்கள் வாழும் சமுதாயத்தில் சமூக ஏற்றத் தாழ்வுகள் சாதிய அடிப்படையிலும், பாலின அடிப்படையிலும் தொழிற்படுகின்றன. அதற்குக் காரணமாக உடைமைச் சமூகம் உருவாக்கிய திருமணம், கற்பு என்பனவாகும். சாதியச் சமூகத்தில் அகமணமுறை சாதியைக் காப்பாற்றுகிறது. அது போலவே பிற விளிம்பு நிலையினர். சாதி, பாலினம் என்பதைக் கடந்து ஒதுக்கப்பட்டோராக, இயல்பான வாழ்வியல் முறைகளைக் கொண்டவர்களாக இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் உடல் ஊனமுற்றவர்கள் ஆவர். குடும்பத்தாலும், உறவுகளாலும் அரசாலும் கைவிடப்பட் டவர்களாக இவர்கள் தெருவோரங்களில், சாலையோரங்களில், பேருந்து நிலையங்களின் ஒதுக்குப் புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் மனப் பிறழ்வுக்கு உள்ளானவர்களாகவும் இருக்கின்றனர். திருநங்கையர், தீரா நோயாளிகள் எனப் பலரும் விளிம்பு நிலையினர் எனக் கருதத் தக்கவர்கள் ஆவர். ஒரு சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து ஒதுக்கப்படுவோர் எண்ணிக்கையும் கணிசமாக காணப்படுகிறது. குற்றவாளிகள், நோயாளிகள் என்போர் சமூகத்தினரால் ஒதுக்கப்படுவதற்கு அவர்களது தாழ்ந்த நிலை காரணமாக அமைகிறது. சந்தர்ப்ப சூழல்கள் ஒருவரை மிகக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்கிறது. தொழு நோயாளிகள் முந்தைய காலங்களில் தள்ளி வைக்கப்பட்ட நிலைமை இன்று காணப்படவில்லை. ஆனால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இதில் பெரிதும் பங்கு வகிக்கின்றன. பொருளாதாரத்தில் உயர்ந்தோர் நோய்களைத் தீர்க்கும் வழிமுறைகளை உரியவாறு செய்கின்றனர். அவ்வாறில்லாதவர்கள் தெருவோரங்களில் தம் வாழ்வைக் கழிக்கின்றனர். இவ்வாறான மனிதர்களைப் பற்றிய பதிவுகள் தொடக்க காலத்தில் இருந்தே

இலக்கியங்களில் இருக்கின்றன. காப்பியங்களில் தொழுநோய், விலை மாதர், அரவாணிகள், நோயாளிகள், ஊனமுற்றோர் போன்றோர் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் தற்கால இலக்கியங்களில் விளிம்பு பற்றிய அய்வுகள் மேலெழுந்த காரணத்தால் அவர்கள் பற்றிய பதிவுகள் சிறுகதைகளிலும், புதினங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இக்கட்டுரையானது புதர்கள் என்னும் உமாமகேஸ்வரியின் சிறுகதையில் மனப்பிறழ்வுக்குள்ளான பெண் குறித்த பதிவும் சமூகம் அவள் மீது தொடுக்கும் வன்முறையும் குறித்து விளிம்பு நிலை வாசிப்பு நோக்கில் சுட்ட முற்படுகிறது.

**விளிம்பு நிலைக் கதையாடல்**

சமுதாயத்தில் பல்வேறு இனக்குழுக்கள் இணைந்து வாழ்கின்றனர். இம்மக்களுக்குள் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வுகள் படிநிலை அடிப்படையில் சாதிய ரீதியாகவும் சுட்டப்படுகின்றன. சாதிய அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் ஒடுக்குமுறைக்கும் வன்கொடுமைக்கும் உள்ளாக்கப்படும் நிலை இன்றைக்கும் காணப்படுகிறது. விளிம்பு நிலையினர் என்ற பதம் Subeltern என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். அடித்தள மக்கள் என்ற பொருளில் விளிம்பு நிலையினர் குறிக்கப்படுகின்றன. இந்த வகைப்பாட்டில் வரக் கூடியவர்கள் ஒதுக்கப்பட்ட மக்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு சமுதாய்ததிலும் பல்வேறு வகையில் ஒடுக்கப்பட்ட மக்கள் விளிம்பு நிலையினராக எஞ்சுகின்றனர். அவர்கள் சமுதாயத்தில் ஒரு பொருட்டாகக் கருதப்பட்டவர்கள் இல்லை. அடித்தள மக்கள் என்பதை மேட்டிமைக் குழுவிற்கு நேர் மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும் குறைந்த அளவு உணவு, குறைந்த அளவு உடை, குறைந்த அளவு கல்வி பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் எனப்படுகின்றனர். (ஆ.சிவசுப்பிரமணியன், அடித்தள மக்கள் வரலாறு, ப.35) என்று சாதிய அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை அடித்தள மக்கள் என்று வரையறுத்தாலும் அதில் மேலும் மக்கள் குழுக்களை இணைத்து பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவினர் என்று முன்னாள் அடிமைகள், பாட்டாளிகள், சிறைக் கைதிகள், பெண்கள், இனக்குழுக்கள், தொல்குடிகள், குழந்தைகள், முதியோர், லெஸ்பியன்கள் ஆகியோரும் இணைக்கப்பட்டனர். இவர்கள் மட்டுமின்றி அரவாணிகள், மனநலம் குன்றியோரும் விளிம்புநிலையினர் என்ற வகைப்பாட்டில் வைக்கத் தக்கவர்கள் ஆவர். கருப்பர்கள், குறையுடல் கொண்டோர் குடும்பத்தாலும், சாதியாலும் கூட விலக்கப்பட்டவர்களாக இருக்கும் மக்கள் பலர் விளிம்பு நிலையினராகக் கொள்ளத் தக்கவர்கள் ஆவர். ஒவ்வொருவரும் தனக்கான பாலியல் தனித்தன்மையை தெரிந்தெடுத்தல் என்பதுதான் சமூகத்தின் வேறொரு உறுப்பினரோடு அவர் கொள்ளும் உறவை நிர்ணயிக்கிறது. எந்தவொரு சமூகத்திலும் பிறந்து வாழத் தொடங்கும் ஒருவர் அச்சமூகம் அங்கீகரிக்கும் ஏதேனும் ஒரு பாலியல் வரையறைக்குள் தன்னைப் பொருத்திக் கொண்டாக வேண்டும் அவ்வாறு பொருத்திக் கொள்ளாதவர்கள் பொருத்த மறுப்பவர்கள் பொது வாழ்வியல் களத்தின் புழக்கத்திலிருந்து விலக்கப்படுவார்கள் (அ.மார்க்ஸ், பொ.வேல் சாமி, விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், ப.96) என்ற கட்டுரையாளர் அருணின் கூற்றானது பால் தன்மையை அங்கீகரிக்கும் வகையில் வரையறுத்தல் என்பது சமூகத்தோடு தன்னை பொருத்திக் கொள்வதற்கு இன்றியமையாதது என்று கூறுகிறது. எனவேதான் பால் தன்மையில் அங்கீகரிக்கப்படாத பாலினர் விலக்கப்பட்ட பாலினர் அல்லது அரவாணிகள் எனப்படுகின்றனர். இது போல் பதியிலார் எனப்படுவோரும் விளிம்பு நிலையினர் எனப்படுகின்றனர். விளிம்பு நிலை மக்கள் எனப்படுவோர் தம்மைத் தாழ்த்திக் கொள்வதை வழக்கமாகக் கொள்ள வலிறுத்தப்படுகின்றவர்களாக இருக்கிறார்கள். பெரிய சாதிக்காரரோடு

பேசுகையில் சின்னச் சாதிக்காரன் பேச்சின் ஊடே ஊடே தன்னைத் தாழ்த்திக் கேவலமாகப் பேச வேண்டும். தனது சாப்பாட்டை வீட்டை உடைமையைக் கேவலமாக பேச வேண்டியது முறை. (ரணஜித் குஹா, சூசி தார, தேஜஸ்வினி நிரஞ்சனா, விளிம்பு நிலை மக்களின் போராட்டங்கள், ப.24) என்ற குறிப்பானது தாழ்த்தப்பட்ட நிலையைத் தரித்துக் கொள்பவர்கள் அதை தம் வாயால் உயர்குடியினரிடம் ஒப்புவிக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே அதிலிருந்து அவர்கள் மேம்பட வாய்ப்பின்றி இருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடப்படுகிறது,

இத்தகைய பல்வேறு வகையின விளிம்பு நிலை மக்களிலும் மனநோயாளிகள் இணைக்கப்படுகின்றனர். யாராலும் அங்கீகரிக்கப்படாத அவர்கள் குரலை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளாத அவர்களது நடத்தையின் மீது எப்போதும் அச்சத்தை கொண்டிருக்கிற மனநிலை சமூகத்திடம் இருக்கிறது. உடல் நலம் குன்றியோரிலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் விளிம்பு நிலையினராகக் கருதத்தக்கவர்கள். ஆவர். மனநலம் குன்றியவர்கள் நவீனத்துவ சட்ட கத்திற்குள் அடைபடாதவர்களாக அழுக்குப் படிந்தவர்களாக அருவருக்கத்தக்கவர்களாக இருக்கிறார்கள். ஷோபசக்தியின் வெள்ளிக் கிழமை என்னும் சிறுகதையில் வரும் அழுக்கு மனிதரைப் போன்று வாழத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் அந்தச் சிறுகதையைப் படித்து விட்டு சாம்ஸன் நீங்கள் எப்படி அந்த மனுசனைக் கொலை செய்ய ஏலும் ன்று கேட்டு மேலும் வழியில்லாதவன், பிச்சை யெடுக்கிறவன், குடிகாரன் சாகத்தான் வேணுமா என்றும் அந்த மனுசனை மெத்ரோவுக்கு முன்னால் நீங்கள் எப்படித் தள்ளலாம் என்றும் அந்த மனுசனைக் கொலை செய்ய உங்களுக்கு எப்படி மனம் வந்தது என்றும் ஆற்றமாட்டாமல் கேட்கிறார் (ராமானுஜம், தற்கொலைகளைக் கொண்டாடுவோம், ப.32) என்று வெள்ளிக் கிழமை கதையில் பிச்சையெடுக்கும் அழுக்கு மனிதரை சிறுகதையில் கொன்று விடுவதாகவும் அதை நவீனத்துவ வாழ்வின் தர்க்கத்திற்குள் வைத்துப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத தன்மையும் குறித்துக் கூறப்படுகிறது. வாழ வழியில்லாதவர்கள் என்று கருதப்படும் வகையினர் சமூகத்தில் கறுப்பினத்தவர்கள், திருடர்கள், குடிகாரர்கள், மனநோயாளிகள், நோயாளிகள், முதியோர் ஆகியோரை வகைப்படுத்தும் நிலையை நவீனத்து வாழ்வு வடிவமைத்துள்ளது. இத்தகைய மனிதர்களை அங்கீகரிக்கும் அரசியல் என்பது பின் நவீனத்துவ அரசியலாக உள்ளது. பெண்ணிய, தலித் தியவாதிகளிடம் கூட மேட்டிமைத் தனம் பிறப்பெடுத்து விடுகிறது. ஆனால் விளிம்பு நிலைஎனப்பட்டன மக்களிடம் இறைஞ்சுதல் குணமே மிஞ்சுகிறது. அவர்கள் பலவற்றை இறைஞ்சி, இரந்தே பெற்றுக் கொள்கிறார்கள். நல்ல ஆடை என்பது அவர்களுக்கு இல்லை. நல்ல உணவு இல்லை. இருப்பிடம் இல்லை தான்தோன்றியாக அலைபவர்களாக இருக்கிறார்கள்.

**புதர்கள் என்னும் சிறுகதை**

உமாமகேஸ்வரியின் சிறுகதைத் தொகுதியில் உள்ள புதர்கள் என்பது ஒரு மனநோய் பீடிக்கப்பட்ட பெண்ணைப் பற்றியதாக விரிகிறது. அவள் ஆடைகளற்று இயல்பாக நடந்து வருகிறாள். அவள் காற்றில் பேசிக் கொள்கிறாள். மீனா என்னும் பாத்திரம் அவளைக் கண்டு துணுக்குறுகிறது. மீனா என்பவள் நவீனத்துவ வாழ்வின் ஒழுக்க விதிகளுக்குள் இயங்குபவள். புதர் மறைவிலிருந்து ஒரு பெண் ஆடைகள் அற்று வருவதை அவளால் எதிர்கொள்வது கடினமாக இருக்கிறது. ஆடையற்று இருக்கிறாள் என அவளுக்கு மீனா, அலமேலு ஆகியோர் தரும் உடைகளை அநாயசமாக சுற்றிக் கொள்கிறாள். அவளுடைய இருப்பிடம் புதர் மறைவாகவோ, மரத்தடியாகவோ, திறந்த காம்பவுண்ட் அருகிலோதான் இருக்கிறது. தன்னிச்சையாகப் பாடல் பாடுகிறாள். இரவில் ஒப்பாரி வைத்து பாடுகிறாள். ஒழுங்கினை சிதைத்தவளாக அவள் தென்படுகிறாள். அவளுடைய உடைகளற்ற உடல் உடைகள் பற்றியபிரம்மைகளை சிதறடிக்கின்றன.அவளை

வெறிக்கும் கண்கள், அவள் உடல் உறுப்புகளில் இறங்கி மேலேறும் இயல்பினவாக இருக்கின்றன. பின்னர் அவள் நான்கு பேரால் தூக்கிச் செல்லப்படுகிறாள். அவள் மேல் இருந்த ஓர் ஆடையும் கருவேலம் முள்ளில் படர்ந்து பறந்து கொண்டிருந்தது என்று கதை முடிகிறது.

**மனநோயாளியின் இயல்புகளாக ஆசிரியர் குறிப்பிடுவன**

இந்தச் சிறுகதையில் மனநோயினால் பாதிக்கப்பட்ட பெண் கதையின் நாயகியாக இருக்கிறாள். அவளுடைய இருப்பிடம் புதராக இருக்கிறது. அவளுடைய உடல் எவ்வித ஆடைகளுமற்று இருப்பது அவள் சுவாதீனம் இல்லாதவள் என்பதைக் காட்டுகிறது, புதர்களுக்குள் குப்பையைக் கொட்டப் போன மீனா அவளைப் பார்த்து அதிர்ச்சியடைகிறாள் இன்று மீனா குப்பையைக் கொட்டித் திரும்பும் போது எந்தப் பறவையையும் காணவில்லை. ஆனால் புதர்களுக்குள்ளிருந்து ஒருத்தி முளைத்தாள். பொட்டுத் துணியில்லாமல் மீனா உலுக்கி விழுந்தாள். அணு அணுவாய் வெளிப்படுத்தினாற் போல தோன்றியது. செம்பட்டைக் கூந்தல், புழுதி படிந்த முகம், செப்புப் போன்ற சிற்றுடல், மெலிந்து நீண்ட கைகள், தொடைகள், பெருகித் திரண்ட மார்பகங்கள் முகம் தாண்டி மிதக்கும் கண்கள் என்று அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் சிற்பமாக அவள் உருவம் காற்றில் துருத்தி நின்றது. நீண்ட கரும்பழுப்பு சுடரென பகலில் நின்றெரிந்தது (உமா மகேஸ்வரி கதைகள், ப.100) என்ற ஆசிரியரின் வர்ணிப்பு வழக்கமான பெண்ணுடல் வர்ணிப்பாக வெளிப்படுகிறது. மனநோய் பாதிக்கப்பட்ட பெண் தெருவில் நிர்வாணமாக அலைகிறாள். தெரு அவளைத் தழுவிக் கொள்கிறது. தெரு என்பது இங்கு ஆண்களின் கண்களாக உருக் கொள்கின்றன. தெரு பாரபட்சமின்றி அவளைத் தழுவிக் கொள்கிறது. அதன் ஓரங்களில் அவள் குப்பையெனக் கிடக்கிறாள். முனையில் சில நேரம் சிற்பமாய்ச் சமைகிறாள். ஒரு நதியுள் போலச் சமயங்களில் துளைகிறாள். சில வேளை நெருப்பைக் கண்ட அலறலோடு விலகியோடி அடுத்த தெருவின் மடியில் விழுகிறாள். மலையேறுதலின் திணறல், முனகலோடு திடமான முகங்கொண்டு அடிமேல் அடி வைத்து எதை நோக்கியோ நகர்வதும் சில சமயம் காணக்கிடைக்கிறது (உமாமகேஸ்வரி கதைகள், ப.101) என்ற பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அப்பெண்ணின் நிலைப் பற்றி கூறப்படுகிறது. ஆயினும் அவளுக்கு மீனா, அலமேலு, மரியா ஆகியோர் இரக்கம் கொண்டு துணிகள் கொடுக்கின்றனர்.

அவள் பேச்சுக்கள் அறுந்த உரையாடல் துண்டங்கள் என்று வர்ணிக்கிறார். மனநோயாளிகளின் பேச்சுக்கள் எவ்வித நேர்த் தன்மையிலும் இராது என்பதை இதன் வழி அறிந்து கொள்ள முடிகிறது. எங்கெங்கும் அவளுடைய அறுந்த உரையாடல்களின் துண்டங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. சில சமயம் புலம்பல், சில சமயம் அரற்றல், சில சமயம் பிலாக்கணம் என்று அவசர நடையிலிருப்பவர்களை அவள் குரல் ஓடித் தொடும். வாசலில் நிற்பவர்களின் பாதங்களை வருடகிற கல்லெறியும் சிறுவர்களின் கைகளை அந்தரத்தில் நிற்க வைக்கும் (உமாமகேஸ்வரி கதைகள், ப.102) என்ற குறிப்பிலிருந்து மனநோயுற்ற பெண்ணின் இருப்பினை வெளிப்படுத்தும் பேச்சுக்கள் யாதொரு ஒழுங்கிலும் இல்லாதது பற்றிக் கூறப்படுகிறது. எனவேதான் அவள் கல்லெடுத்து எறியப்படக் கூடியவளாக இருக்கிறாள்.

**வாழும் தகுதியற்றவர்களாக மனநோயர்கள்**

உலகெங்கும் வாழும் பலகோடி மக்களில் கறுப்பினத்தவர்கள் போல் கொடுமையை அனுபவித்தவர்கள் யாருமில்லை. அவர் செவ்விந்தியர்களான அமெரிக்காவைச் சேர்ந்த பூர்வ குடிகள் வேறு நாடுகளுக்கு கொண்டு செல்லப்படும் போது கப்பலில் பெட்டிகளில் பொருட்களைப் போல அடைத்து எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்று கூறப்படுவதுண்டு. அடிமைகள் வாழும் தகுதியை முதலாளியால் மட்டமே பெறுகின்றனர். புதர்கள் சிறுகதையில்

ஆசிரியர் மனநோயுற்ற பெண்ணின் அலைதல்களைப் பற்றி எழுதிக் கொண்டே வருகிறார். பின்னர் அவளுடைய இருப்பு ஆசிரியருக்கே அச்சத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. அவள் உயிர்த்திருப்பது ஒழுங்கான சமூக அமைப்பிற்கு நல்லதல்ல என்ற முடிவுக்கு வந்தவராக இறுதியில் அந்த மனநோயுற்ற பெண்ணை நான்கு பேர் தூக்கிச் செல்லும் விதத்தைப் பதிவு செய்கிறார். அதற்கு மேல் அவள் உயிருடன் இல்லை என்ற மனநிம்மதியைப் பெறும் வகையில் கூறப்படுகிறது. அவளை அவர்கள் தூக்கிச் செல்வது கறிக்கு பன்றியைத் தூக்கிச் செல்வது போல இருப்பதாகப் பதிவு செய்கிறார். கறிக்கு அடிக்கப் பன்றியைக் கதற கதறத் தூக்கிக் கொண்டு போவார்கள். முன்னங்கால்களைப் பிணைத்து ஒருவனும் பின்னங்கால்களைக் கட்டி இணைத்து இன்னொருவனுமாக அதன் கருத்துப் பெருத்த சகதி அப்பிய உடல் பலமற்றுத் திமிறும் வீச் வீச்சென்ற கதறல்கள் வெளியெங்கும் சிதறும். மேற்புற ரோமங்கள் சாவு பயத்தில் குத்திட்டு விறைக்க, துள்ள முடியாத திணறலோடு சே ார்ந்த கண்களும் கூர்ந்த வாய்ப்புறமும் சேர்ந்து குழந்தையின் முகபாவத்தை அமைக்க அது மரணாவஸ்தையில் துடிக்கும். அலறுவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலாமல் அதே போலத்தான் இந்த இரவில் அவளது உடல் அவர்களது கைகளில் சிக்கித் தவித்தது. திமிறத் திமிற அவளை எங்கோ தூக்கிப் போகிறார்கள். அலறல்கள், கூச்சல்கள் (உமாமகேஸ்வரி கதைகள், ப.107) என்று மனநோய் பாதிக்கப்பட்ட பெண்ணை கயவர்கள் தம் இச்சை தீர்க்க கொண்டு சென்று சீரழிக்கின்றனர். அப்பெண்ணின் நிலை யாதென்று அறியாத நிலையில் இருப்பதாகக் கூறுகிறார் ஆசிரியர் அவளது நிலையை பூடகமாக கூறி முடிக்கிறார் ஆசிரியர் புதர்கள் கலையாமல் நிரந்தரமாய் அடர்ந்த அந்தகாரத்தினுள்ளா? பசுமையோடிய அந்த உடல் படர்ந்த புதர்களின் புதரடியிலிருந்து கருத்துக் காணாமலாகி விட்டதா எந்தப் புதரடியிலிருந்தும் புகைபிம்பம் போல் அவள் இனி எழும்பி வர முடியாது. அவளைக் காவு கொண்ட பாழ்வெளி அமர்த்தலாக இறுகி இருந்தது. அங்கே புதர்கள் அசைகின்றன. அவள் தலையிலும் கழுத்திலும் சுற்றியிருந்த துணிகள் கருவேலஞ் சிம்புகளில் சிக்கிக் கிடக்கின்றன. முலைகளாய் விம்மியெழுந்தவாறும், இடையைக் கடைந்தபடியும் நீளவாக்கில் தொடைகளாக் கிழிந்து தொங்கியும் அவை காற்றில் துடித்தும் அல்லாடிக் கொண்டிருக்கின்றன (உமாமகேஸ்வரி கதைகள், ப.109) என்று ஆசிரியரே அவளின் முடிவை அறிவிக்கிறார். மனநோயுற்றவர்களை இந்தச் சமூகம் காணாமல் ஆக்குகிறது. அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதில்தான் நிறைவுறுகிறது. மன நலமற்ற பெண்ணை தம் இச்சைக்கு பயன்படுத்தும் கயவர்கள்தான் நல்ல மனநிலை கொண்டவர்களா? மனநோய் முற்றிய கொடூரர்கள் அல்லவா அவர்கள் என்று முகத்திலறைந்தது போல கூறுகிறார் ஆசிரியர். பன்றியைத் தூக்கிச் செல்பவர்களையும் அப்பெண்ணைத் தூக்கிச் செல்பவர்களையும் ஒப்பிட்டு கறிக்காக அலைபவர்கள் என்று கூறுகிறார். பெண்ணுடலை இச்சை கொண்டு மட்டுமே காணும் இயல்பினராக ஆண்கள் இருக்கிறார்கள் என்பதை மறைமுகமாக தூற்றுகிறார்.

**முடிவுரை**

அடித்தள மக்கள் ஆய்வு நோக்கில் கதைகளை எழுதுவதென்பதும் விளிம்பு நிலைப்பட்ட மக்களை கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களது இருப்பை அங்கீகரித்தல் என்பதும் இன்றைய சமுதாயத் தேவையாக இருக்கிறது. பல்வேறு வகையினராக விளம்பு நிலை மக்கள் காணப்படுகின்றனர். அரவாணிகள், அடிமைகள், நோயாளிகள், முதியோர்கள், பெண்கள் என இதன் வரிசை கூறப்பட்டாலும் பதியிலார், அரவாணிகள், மனநோயாளிகள் எனக் குறிப்பிட்ட சில பிரிவினர் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் வகையினராக சமுதாயத்தில் இருக்கின்றனர். புதர்கள் என்னும் சிறுகதை

*கூறும் மனநோய் பாதிக்கப்பட்ட பெண் உடைகள் அற்று தெருவை தழுவிக் கொள்ளும் இயல்பினளாக இருக்கிறாள். ஆடைகளற்ற அவளை வன்கொடுமைக்கு ஆளாக்கும் கெடுமதி கொண்டவர்கள் மனநோய் பாதிக்கப்பட்ட பெண்ணைக் கூட விட்டு வைக்காதவர்கள் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர்.*

## துணைநூற்பட்டியல்


1. *உமா மகேஸ்வரி, உமாமகேஸ்வரி கதைகள் இதுவரையிலான சிறுகதைகள், வம்சி பதிப்பகம், திருவண்ணாமலை, 2021.*
2. *ஆ.சிவசுப்பிரமணியன், அடித்தள மக்கள் வரலாறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2016*
3. *ரணஜித் குஹா, சூசிதாரு, தேஜஸ்வினி நிரஞ்சனா, விளிம்புநிலை மக்களின் போராட்டங்கள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2016*
4. *அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி (தொ.ஆ), விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், 2010*
5. ராமானுஜம், தற்கொலைகளைக் கொண்டாடுவோம், புலம் வெளியீடு, சென்னை, *2009.*

# இமையத்தின் சிறுகதைகளில் மருத்துவமனையும் பெண்களும்

***முனைவர் கு. ஜெயசித்ரா***
உதவிப் பேராசிரியர்
கல்வித்தந்தை ஏ.கே.ஆர்.சௌராஷ்ட்ரா ஆசிரியர் கல்லூரி, சிவகங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*இன்றைய மருத்துவமனைகள் உயிர் காப்பதற்குப் பதிலாக வருவாய் ஈட்டும் மையங்களாக இருக்கின்றன. இதில் பல்வேறு நோய்களுக்காகச் சென்று சிகிச்சை பெறுபவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எல்லா சிகிச்சை பெறுபவர்களுக்கும் துணைக்குச் செல்பவர்கள் பெண்களாக இருப்பார்கள். உறவினர்களாகவும், உடன் பிறந்தவர்களாகவும், கணவனுக்கு மனைவியாகவும் இருப்பார்கள். இன்றைக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்கு இருப்பவர்களைப் பேணுவதற்கென்று வேலையாட்களை நியமித்துக் கொள்கிறார்கள். அவர்களும் பெண்களாகவே இருக்கிறார்கள். நோயுற்றவர்களைக் கவனிக்காத தலைமுறையினராக இன்று மாறிப் போன அவலத்திலும் மருத்துவனைச் சூழல்கள் பெண்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை உணர்த்தும் மூன்று கதைகள் இமையத்தின் திருநீறு சாமி சிறுகதைத் தொகுப்பில் இருக்கிறது. குழந்தையின்மை சிகிச்சை பற்றி வரக் கூடிய சிறுகதைகளில் பெண்ணின் மீதான வசைகள், இழி சொற்கள் மிகுதியாக இருக்கின்றன. சிகிச்சைகளை மாற்றி மாற்றி உடல் நலம் கெட்டும் மருத்துவமனையிலேயே தம் காலத்தைக் கழிக்கும் நிலைக்கு ஆளாகிறார்கள். மகப்பேற்றிற்காக எடுத்துக் கொள்ளும் சிகிச்சையில் ஆணுக்குக் குறையென்றாலும் பெண்ணின் மீதுதான் குறை சொல்லப்படுகிறது. மகப்பேறின்மை என்பது சமுதாயத்தில் குற்றச் செயலாகக் கருதப்படுவதன் எதிரொலியாகத் தான் மகப்பேற்று மருத்துவமனைகள் மிகுதியாக பெருகியமைக்குக் காரணமாக இருக்கின்றன. பெண்களை மையமிட்டதாக இக்கதைகள் அமைகின்றன.*

***குறிப்புச் சொற்கள்:*** *மருத்துவம், மகப்பேறு, சிகிச்சை, புற்றுநோய், கர்ப்பப் பை, அட்டண்டர், பிணவறை, புரொசிஜர்*

**முன்னுரை**

மருத்துவம் என்பது இன்றைக்கும் பல்வேறு உச்சங்களைக் கொண்டதாக மாறியிருக்கிறது. மனிதர்கள் தம் இறப்பைத் தள்ளிப் போடுவதற்காக பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றனர். அதில் மருத்துவமனை முக்கிய பங்காற்றுகிறது. மருத்துவம் பார்த்தல் என்பது பல்வேறு வகையினங்களாக உருப் பெற்றிருக்கின்றன. இதில் மருத்துவச் சூழல் பெண்கள் மீது பல்வேறு விதமான தாக்குதல்களை நிகழ்த்துகின்றன. திருமணம் முடிந்ததும் அவர்கள் குழந்தை பெற வேண்டும். அவ்வாறு இல்லையாயின் மருத்துவமனையே கதியென்று இருக்க வேண்டும் என்பதாக இன்றைய சமூகம் கடடமைந்திருக்கிறது. பல்வேறு மருந்துகள், மாத்திரைகள், கருக்குழாய் அடைப்புகள், நீர்க் கட்டிகள், போதி ஊட்டச்சத்தின்மை, இரத்தக் குறைவு, பொட்டாசியம் குறைவு, கால்சியம் குறைவு, ஸ்கேனிங் அறிக்கை, உணவுக் கட்டுப்பாடு, நேரக் கட்டுப்பாடு என அலைக்கழிவுக்கு உள்ளாகும் வகையில் மருத்துவமனையோடு பெண்கள் அல்லாடுகின்றனர். பணி செய்யும் இடங்களிலிருந்து விடுபடுவது கூட எளிதாக இருக்கிறது. ஆனால் பெண்கள் மருத்துவமனைக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தது போல் ஆகி விடுகிறார்கள். அவர்கள் பிரச்சினைக்கு மட்டுமின்றி குடும்பத்தில் யாரொருவரின் பிரச்சினைக்கும் சொந்தமல்லாத பிறரின் பிரச்சினைக்கும் கூட பெண்கள்

மருத்துவமனையில் அலைக்கழிவுக்கு உள்ளாகின்றனர். இமையத்தின் சிறுகதைத் தொகுப்பான திருநீறு சாமி என்பதில் நான்கு சிறுகதைகள் பெண்களுக்கும் மருத்துவமனைக்கும் இடையிலான உறவைப் பேசுகின்றன. இக்கட்டுரை பெண்களின் நிலை பற்றியும் மருத்துவனைச் சூழலில் அவர்கள் படும்பாட்டினையும் குறித்து அமைகிறது.

### மருத்துவத்தின் இன்றைய நிலை

மருத்துவம் என்பது உடல் நலத்தினைப் பேணுவதற்கானது என்ற நிலை இன்று பெரிதும் மாறியிருக்கிறது. ஒரு மருத்துவரிடம் சென்று உடலை பரிசோதனை செய்தால் அம்மருத்து வரின் நம்பகத் தன்மை, சிகிச்சை அளிக்கும் முறை ஆகியவற்றைக் கடந்து அம்மருத்துவம் எத்தகைய விலைக்கு செய்யப்படுகிறது என்பதில் தான் மருத்துவமனையின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. கூடுதலான தொகை பெறுகிற மருத்துவமே சிறந்தது என்கிற நிலையில் பணத்தைப் பற்றி கவலையில்லாத உயர் வர்க்கத் தினரே மருத்துவம் செய்ய முன்வர முடியும். நடுத்தர வர்க்கத்தவர்கள், அடித்தள மக்கள் மருத்துவத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாத நிலையே காணப்படுகிறது. அல்லது அரசு மருத்துவமனைகள் அவர்களுக்காக காத் திருக்கின்றன. அங்கு போதிய வசதியின்மை, பொருளாதார தட்டுப்பாடுகள் ஆகியவற்றால் இறப்பைத் தவிர்க்க முயன்று தோற்கும் நிலையே பெரிதும் காணப்படுகிறது. மருந்துகள் என்று வழங்கப்படுவன பற்றி பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன.

தொடக்கத்தில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியினால் ஆங்கில மருத்துவம் இந்தியாவில் புகுந்தது. தமிழகத்தில் நோய்களுக்கும், மகப்பேற்றுக்குமான மருத்துவமனைகள் திறக்கப்பட்டன. ஆனால் பெரிதாக வரவேற்பில்லை. தீராத நோய்களைத் தீர்த்தபடியால் மக்களுக்குச் சிறிது சிறிதாக அந்த மருத்துவத்தில் நம்பிக்கை ஏற்பட்டது. பெண் மருத்துவர்கள் இன்மையால் பெண்கள் மருத்துவமனைக்குச் செல்வதை விரும்புவதில்லை. இதனால் மிஷனெறிகள் மூலம் மருத்துவம் செய்யும் போது பெண் மருத்துவர்களும் மறைப்பணியில் ஈடுபட்டார்கள் ஆதலால் மக்கள் மருத்துவம் பார்க்க வந்தனர். சாதிய அடிப்படையிலும் இங்கு சிக்கல்கள் நிலவின எனவே ஆங்கில மருத்துவம் என்பது வளர்ச்சி பெறுவதில் பெரும் சவால்கள் இருந்தன. படிப்படியாக இந்தியாவில் வளர்ச்சி பெற்ற ஆங்கில மருத்துவம் இன்று தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. பணம் கொழிக்கும் தொழிலாகவும் மாறிப் போனது ஆங்கிலேயர்கள் சென்னையில் கால் ஊன்றியதும் தங்களுக்கான தேவைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாகப் பூர்த்தி செய்து கொண்டே வந்தனர். அந்த வரிசையில் நோய்வாய்ப்பட்ட ஆங்கிலேயர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக கோட்டைக்குள் மருத்துவர்கள் வெளியில் இருக்கும் சென்னை பூர்வ குடி மக்களுக்கு வந்தேறிகளுக்கு மருத்துவ பார்க்க நவீன மருத்துவர்கள் யாரும் இல்லை. நாட்டு மருத்துவர்கள் தான் அவர்களின் நோய்க்கு மருந்து கொடுத்து வந்தனர். எனவே அவர்களுக்கென ஒரு நவீன மருத்துவமனைக்கான தேவை மெல்ல உணரப்பட்டது (சு.நரேந்திரன், காலனிய ஆட்சியில் நல மருத்துவமும் நம் மருத்துவமும், ப.65) அந்த அடிப்படையில் உருவான மருத்துவமனையே ஸ்டான்லி மருத்துவமனை என்னும் புகழ்பெற்ற மருத்துவமனையாகும். கிறித்தவ மறைப்பணியாளர்கள் கன்னியாகுமரிப் பகுதிகளில் பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஏற்படுத்தியவாறே மருத்துவமனைகளையும் தோற்றுவித்தனர். நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் போதே அவர்களுக்கு பிரசங்கமும் செய்வித்தார்கள். இதனால் பெருமளவில் மக்கள் கிறித்தவ சமயத்திற்கு மாற்றம் பெற்றனர் என்பதைக் காணமுடிகிறது. குமரி மாவட்டத்தில் றிங்கால் தௌபே என்னும் பாதிரியார் சமயப் பணியோடு கல்விப் பணியும் செய்தார். திருவிதாங்கூர் பகுதியில் வாழ்ந்த மக்கள் அம்மை நோயால் இறப்பது கண்டு மனம் கலங்கினார். எனவே அம்மக்களுக்கு மருத்துவத் தேவையைக் கருதி அம்மைத் தடுப்பூசி போடுவதை முதற்கண் தொடங்கி வைத்தார். மக்கள் யாரும் அச்சத்தினால்

ஊசி போட்டுக்கொள்ள முன்வரவில்லை. எனவே தானே நோய்த் தடுப்பூசியை போட்டு கொண்டு அவர்களுக்கு வழி காட்டினார். அவர் காலத்தில் முயற்சி மேற்கொண்டாலும் மருத்து வமனை கட்டவில்லை. சார்ள்ஸ் மீட் ஐயரின் காலத்தில்தான் நெய்யூரில் முதல் மருத்துவமனை தொடங்கப்பட்டது. உண்மையில் மருத்துவப் பணி என்பது சுவிஷேச பணியுடன் இணைந்தது என்பதைத் தீர்க்கமாக உணர்ந்த மீட் ஐயரின் முற்சியால் 1836 மார்ச்சு முதல் டாக்டர் ஆர்ச்பால்ட் றாம்சே என்பவரால் திருவிதாங்கூரின் மருத்துவ மிஷன் நெய்யூரில் தோற்றம் பெற்றது (ஜி.ஐசக் அருள்தாஸ், குமரி மண்ணில் கிறித்தவம், ப.197) என்ற கூற்றினால் தொடக்கத்தில் மறைப்பணி செய்தோர் தோற்றுவித்த மருத்து வமனைகள் பின்னர் தமிழக மெங்கும் பல்கிப் பெருகியது. அரசுகள் மருத்துவமனைகளை நடத்தின.

இன்றைக்கு மருத்துவம் என்பது மகப்பேற்றுக்கான பெருமளவில் காணப்படுகின்றன. ஆனால் தொடக்கத்தில் தாதிகளால் மகப்பேறு பார்க்கப்பட்டு உரிய அறிவின்மையால் இறந்த பெண்கள் மிகுதியாக இருந்தனர். இன்றைக்கு உரிய வசதிகளுடன் மகப்பேறு நடைபெறுகிறது, குழந்தையின்மை பிரச்சினைகள் பெருமளவில் தீர்க்கப்படுகின்றன. அதற்கான மருத்துவமனைகள் மிகுதியாக இன்று காணப்படுகின்றன.

இன்றைய மருத்துவப் பிரச்சினைகள் வெவ்வேறு வகையில் உருப்பெற்று உள்ளன. நோய்க்கு மருந்து என்ற நிலை போய் மருந்துக்கு நோய் என்ற நிலை வந்துள்ளது. புதிய நோய்களின் வருகை மருத்துவத்தை மேலும் வருவாய் ஈட்டும் தொழிலாக மாற்றியுள்ளது. எனவே அடித்தட்டு மக்களுக்கு மருத்துவம் சென்று சேராத நிலையே தொடர்கிறது. எப்படியோ மருத்துவமனையில் சேர்த்து விட்டாலுங் கூட சிகிச்சையின் ஒவ்வொரு மட்டத்திலும் எல்லா மருத்துவ வசதிகளையும் அடைவதற்கு அடித்தட்டு மக்கள் எதிர்கொள்ளும் தடைகளும் மருத்துவமனையில் இருக்கும் போது நோயாளியும் உதவியாளரும் வீட்டை விட்டு வெளியே வந்து தங்கியிருப்பதால் ஏற்படும் சிரமங்களும் பணமுடைகளும் ஏராளம். இவ்வாறு நவீன வசதிகள் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் குவிந்திருந்தும் அடி த்தட்டு மக்களுக்கு அவை எட்டாக் கனியாக இருப்பதே இன்றைய எதார்த்தம் (அ.மார்க்ஸ், நமது மருத்துவ நலப் பிரச்சினைகள், ப.50) என்ற கூற்றிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம்.

**மருத்துவமும் பெண்களும்**

பெண்கள் பெருமளவில் மருத்துவமனைக்குச் செல்வதற்குக் காரணியாக இருப்பது மகப்பேறாகும். அதைத் தவிர தான் சார்ந்த உறவினர்களின் பொருட்டு பெரும்பாலும் பெண்களே மருத்துவமனையில் இருக்கின்றனர். உணவு, உடை, கவனிப்புகளை பெண்களே சரியாக ஆற்ற முடியும் என்பதால் அவர்களே இருக்கின்றார்கள். அதைத் தவிர அவர்கள் மருத்து வமனைக்குச் செல்வதற்கு குழந்தையின்மைப் பிரச்சினையினால் ஆகும்.

**இமையத்தின் சிறுகதைகளில் மருத்துவம்**

இமையத்தின் சிறுகதைகள் அடித்தட்டு மக்களின் வாழ்வியலைப் பெரும்பாலும் பேசக் கூடியதகா இருந்தாலும் அவருடைய இரண்டு புதினங்கள் மருத்துவமனையின் சூழல்களை அப்படியே விவரித்தன. செல்லாத பணம் புதினம் தீக்காயப் பிரிவையும், இப்போது உயிரோடிருக்கிறேன் புதினம் சிறுநீரகப் பிரச்சினை சார்ந்த மருத்துவப் பிரச்சினைகள், மருத்துவ மனைச் சூழல்கள் எதிர் கொள்ளும் சிக்கல்கள் ஆகியனவற்றைப் பேசினவாக இருக்கின்றன. அதைத் தவிர திருநீறு சாமி புதினத்தில் சில சிறுகதைகள் மருத்துவமனைச் சூழல்களை விவரிக்கின்றன. அவை பெண்களை மையமிடடவையாக இருக்கின்றன.

**சிறுகதைகளில் மருத்துவமும் பெண்களும்**

சிறுகதை என்னும் வடிவம் காட்சிப்படுத்தும் கருத்துக்கள் மிக நுணுக்கமானவையாக மனதைத் தைக்கும் வகையில் அமைவது இன்றியமையாதது ஆகும். இமையத்தின் சிறுகதைகள் நறுக்குத்

தெறித்தாற் போன்று அமைகின்றன. மருத்துவத்தின் மூலம் சரிசெய்யக் கூடிய பிரச்சினைகள் இருந்தாலும் ஆணுக்கு மருத்துவமென்றாலும் பெண்ணுக்கு மருத்துவமென்றாலும் பெண்ணே பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறாள். உடலளவிலும் உள்ளத்தளவிலும் பாதிப்படையக் கூடியவளாக இருக்கிறாள் என்பதை இமையத்தின் மனமுறிவு என்னும் சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. அசோக், சங்கீதா இருவரும் படித்த நல்ல வேலையில் இருக்கும் தம்பதிகள். இருவருக்கும் குழந்தையில்லை. அவள் மருத்துவ பரிசே ாதனைகள் பல செய்திருந்தாள். அவளுக்குப் பிரச்சினையில்லை என்று அறிந்ததும் அசோக்கிற்கு மருத்துவப் பரிசோதனைகளை செய்து கொள்ள வற்புறுத்துகிறாள். அவனுக்கு பணிச் சுமையினால் உடலில் உயிரணுக்கள் உற்பத்தியாவதில் சிக்கல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே அவனுக்கு மருந்துகள் கொடுத்து சரி செய்யும் முயற்சி செய்கிறார்கள். இதனால் அவன் மனதளவில்தான் தான் ஆண்மையற்றவன் என்ற மனப்பான்மை மேலோங்குகிறது. அதனால் ஏற்படும் மன அழுத்தத்தினால் சங்கீதாவின் ஒவ்வொரு வார்த்தையிலும் குற்றம் கண்டு பிடித்து சண்டையிடுகிறான். பொருட்களைத் தூக்கி எறிந்து உடைக்கிறான். அவன் வெளிக்கிளம்பும் போது அவள் கூறிய வார்த்தைக்காக அவன் வம்பை வளர்க்கிறான் அசோக் நின்றிருந்த விதம் அவன் நெட்டித் தள்ளிய வேகம் குரலிலிருந்த கடுமை எல்லாம் வம்பு வளர்க்காமல் விடமாட் டான் என்ற சங்கீதாவுக்கு தெளிவாகத் தெரிந்தது (திருநீறுசாமி, ப.43) என்ற கூற்று அவன் மருத்து வத்தினால் பாதிக்கப்பட்டமையைக் கூறுவதாக அமைகிறது, இருவருக்கும் திருமணமாகிய சில மாதங்களில் ஏதேனும் விஷேசம் இல்லையா என்று கேட்பவர்களுக்கு பதில் சொல்வதற்காகவாவது மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்து இந்த விஷயத்துல லேட் பண்ணக் கூடாது இதுவே டூலேட் என்று சொன்ன அசோக் அவளைக் கட்டாயப்படுத்தி மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போனான். மருத்துவர் ஒரு மாசத்துக்கு மருந்து மாத்தர எழுதித் தர்றேன் சாப்பிடுங்க அப்பறம் தேவப்பட்டா டெஸ்ட் எடுத்துப் பாக்கலாம் என்ற சொன்னார். சரி என்று இருவருக்கும் மாத்திரைகளை வாங்கிக் கொண்டு வந்தான். மாத்திரைகள் முடிந்ததும் வா போய்ப் பார்க்கலாம் என்று கூப்பிட்டான். இன்னும் ஒரு மாசம் பார்க்கலாம். ஒன்று சங்கீதா சொன்னாள். இரண்டு மாதங்கள் கழிந்தும் மாற்றம் எதுவுமில்லாததால் மருத்துவர் டெஸ்ட் எடுங்க பார்க்கலாம் என்று எழுதித் தந்தார். சங்கீதாவுக்குத்தான் முதலில் பரிசோதனைகளை எழுதித் தந்தார். (திருநீறுசாமி, ப.59) என்று மருத்துவமனை பரிசோதனைகள் அவளுக்கு ஆரம்பித்து அவளுக்கு உடலில் பிரச்சினகள் இல்லை. அசோக்கிற்கும் அப்போதே பரிசோதனைகள் செய்ததார்கள். அவனுக்கு உயிரணுக்கள் குறைவாக இருப்பதாகக் கூறப்பட்டது. அவனது செயல்பாடுகள் இதனால் பாதிக்கப்படுகின்றான். பெண்ணுக்குப் பிரச்சினை என்றால் சோதனைக் குழாய் குழந்தைக்கு முயற்சிக்கலாம். அதுவே ஆணுக்கு என்றால் உயிரணுக்களை உற்பத்தி செய்யும் மருந்துகளைக் கொடுத்துத்தான் சரி செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். அவன் தன்னளவில் முழுமையாக இல்லை என்பதால் அவளை எப்பொழுதும் எந்த வார்த்தையைப் பயன்படுத்தினாலும் அது தன்னை நோக்கி பயன்படுத்தப்பட்டது என்று கருதி சண்டையிழுக்கின்றான். அசோக் எப்படி மாறினான். மருத்துவமனைக்குப் போக ஆரம்பித்த பிறகுதான் அவனுடைய நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டது (திருநீறுசாமி, ப.53) என்று மருத்துவப் பரிசோதனைகள் அசோக்கிற்கு எதிர்ப்பதமாக வந்ததால் அவனுடைய இயலாமையை வெளிக்காட்டக் கூடிய இடமாக சங்கீதா மாறிப் போனாள் என்பதையே சிறுகதை உணர்த்துகிறது.

பிணத்துக்குச் சொந்தக்காரி என்னும் சிறுகதை புதிய தொழில்நுட்பங்கள் உருவாகி வளர்ந்திருக்கும் இக்காலத்தில் புதிய தொழில்களும் உருவாகி உள்ளன. வீடுகளில் வேலைக்கு ஆள்சேர்ப்பதுபோலவயதானவர்கள்,

நோயாளிகளைக் கவனிப்பதற்கும் ஆட்களைச் சேர்க்கிறார்கள். அவர்களுக்கு அட்டண்டர் என்று பெயர். மருத்துவமனையில் இருக்கும் போது அவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக வேலைக்கு சேர்க்கப்படுபவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். அப்படியான ஒரு பெண்ணின் கதைதான் பிணத்துக்குச் சொந்தக்காரி. மருத்து வமனையில் இறந்து போன பெரியவரை வெளிக்கொண்டு செல்ல அவரைக் கவனித்துக் கொள்பவரை அழைக்கிறார்கள். மீனாட்சி என்னும் பெயர் கொண்டவள் பெரியவருக்காக தான் வந்திருப்பதாகக கூறுகிறாள். அவளிடம் பெரியவர் இறந்து போன செய்தியைக் கூறுகின்றனர். மருத்துவமனையிலிருந்து வெளிக் கொண்டு செல்ல உள்ள நடைமுறைகளை முடித்துக் கொண்டு செல்ல வேண்டும். அதற்காக அவள் மருத்துவரை அழைத்து இந்தச் செய்தியை இறந்தவரான ராமனின் மகன்களுக்குச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறாள். *இறந்து போனவரோட மகனும் மகளும் அமெரிக்காவில் இருக்காங்க சார். அவரோட அக்கா மட்டும்தான் இங்க இருக்காங்க. செத்திட்டாருன்னு சொல்றதுக்குப் பயமா இருக்கு நீங்க சொன்னா நல்லா இருக்கும் சார் என்று மீனாட்சி சொல்லி முடிப்பதற்குள் அது என்னோட வேல இல்ல நான் சொல்லவும் கூடாது. நான் ரிப்போர்ட் மட்டும்தான் கொடுப்பேன் என்று மருத்துவர் வெளியே போனார் (திருநீறுசாமி, ப.103)* என்ற பகுதியில் ராமனை கவனித்துக் கொள்ள வந்த வேலையாளான மீனாட்சி செய்தியைக் கூறுவதற்கு அச்சப்பட்டு மருத்துவரிடம் கூற அவர் அதைக் கண்டு கொள்ளாமல் சென்று விடுகிறார். செய்தியை மகன், மகளிடம் கூறி அவர்கள் வந்து வாங்குவதற்கு எத்தனை நாளாகும் அதுவரை பிணத்தோடு தான் இருக்கத்தான் வேண்டுமா என்ற அச்சம் மிகுந்தது. அவள் தன் குழந்தைகளைப் பார்க்கச் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தாள். அமெரிக்காவில் இருந்து இராமனின் மகனும், மகளும் வந்து பிணத்தை வாங்குவது வரை இருக்கப் போவதை எண்ணி வருந்தினாள். இந்த அட்டெண்டர் வேலைக்கு ஏஜெண்ட்டுகள் இருப்பார்கள். அவர்கள் கூறுகிற வீட்டில் சென்று வேலை பார்க்க வேண்டும் நல்ல அட்டெண்டர் என்று பெயர் எடுத்தால் அவர்களுக்கு ஊதியம் மிகுதியாகக் கிடைக்கும். ஆறு வருடமாக அட்டெண்டர் வேலை பார்க்கிறாள். இராமனின் மகன் அமெரிக்காவிலிருந்து போன் செய்து அவளை அங்கேயே இருக்கச் சொல்கிறான். *உறவினர்கள் வரும் வரை அவள் அங்கு இருக்க வேண்டும். அதுவரை பிணத்துக்குச் சொந்தக்காரி அவள்தான். பெத்த அப்பன விட்டுட்டுப் போயி அப்படி என்ன வெளிநாட்டுல பணம் சம்பாதக்கிறது (திருநீறு சாமி, ப.111)* என்று இராமனின் மகன், மகளை நினைத்து அலுத்துக் கொள்கிறாள். மருத்துவமனையிலேயே அநாதைப் பிணத்தைக் காவல் காப்பது போல காத்துக் கொண்டிருக்கிறாள் எனக் கூறப்படுகிறது.

அடுத்த கதை ஆண்டவரின் கிருபை என்பதாகும். இதில் கிறித்தவர்களான கணவன், மனைவி இருவருக்கும் மகப்பேறு இல்லை. அதற்காக மருத்துவ சிகிச்சை செய்து கொள்கிறார்கள். பிரேமா மருத்துவமனையில் எல்லா பரிசோதனைகளுக்கு ஆட்பட்டு நீர்க் கட்டிக்காக மருந்து சாப்பிட்டு, சரியாகாமல் மாற்றி மாற்றி மருந்து சாப்பிட்டு கர்ப்பப் பையில் புற்று நோய் வந்து விடுகிறது. எனவே அதனை அகற்றி விட வேண்டும் எனக் கூறி விடுகிறார்கள். அந்த சிகிச்சைக்காக மருத்துவமனை செல்கிறான். மருத்துவர்கள் அவளைப் பரிசோதித்து அறுவை சிகிச்சைக்கு தயார்ப்படுத்துகிறார்கள். குழந்தையின்மைக்காக பல்வேறு மருந்து சாப்பிட்டு உடலை கெடுத்துக் கொண்டது தான் மிச்சம் என்பது போல பிரேமாவின் நிலைமை இக்கதையில் சுட்டப்படுகிறது, உறவினர்கள், நண்பர்கள், கல்லூரிப் பேராசிரியர்களைப் பற்றி நினைத்ததுமே பிரேமாவுக்கு எரிச்சல் அதிகமாயிற்று. *கர்ப்பப் பைய எடுத்து விட்டேன் என்று சொல்லும் போது அவர்களுடைய முகபாவம் எப்படி இருக்கும் என்று யோசித்தாள்.* படுக்கையில் படுத்துக் கொண்டிருப்பது

பூமிக்கடியில் படுத்துக் கொண்டிருப்பது போல இருந்ததால் எழுந்து உட்கார்ந்துகொண்டாள். (திருநீறுசாமி, ப.114) என்று அவளது நிலை பரிதாபமானதாக மாறியமை கூறப்படுகிறது. பலரும் குழந்தை இல்லையா என்ற கேட்க ஆரம்பித்த பின்னர்தான் அவள் மருத்துவமனைக்குச் செல்ல ஆரம்பித்தாள். தொடர்ந்து மாத்திரைகள், ஸ்கேனிங் என்று அவளுடைய பிறப்புறுப்பே பாதிக்கப்பட்டது போல உணர்ந்தாள். அவளோடு அவளுடைய தாய் சுலோச்சனாவும் மருத்துவமனை மருத்துவமனையாக அலைந்தாள். ஒங்கடச் சேந்து நானும்தான் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியா அலஞ்சன். எதுக்காக? முன்பை விட இப்போது தான் சுலோச்சனாவுக்கு அதிகமாகக் கண்ணீர் வந்தது. பிரேமா சுலோச்சனாவின் தோளில் கை வைத்து பேசாம இரும்மா. கர்த்தரோட அருள் இதுதான்னா நாம என்ன செய்ய முடியும் (திருநீறுசாமி, ப.117) என்று கூறுவதன் மூலம் தாய், மகள் இருவரும் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சையின் பொருட்டு அலைகின்றனர் என்பது கூறப்படுகிறது.

பிரேமாவிற்கு அறுவை சிகிச்சை செய்து கர்ப்பப் பையை அகற்றி விடுகிறார்கள். அவள் குழந்தைக்காக சாப்பிட்ட மாத்திரைகள்தான் அவளுக்கு வினையாகி விட்டது என்றும் கூறப்படுகிறது. மருத்துவமனை மருத்துவமனையாக அலைநதது. மருத்துவர்களைப் பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருந்தது. டெஸ்ட் எடுப்பதற்காக டெஸ்ட் ரிசல்ட்டை வாங்குவதற்காக காத்திருந்தது. ஒரு வேளை தவறாமல் ஒரு நாள் தவறாமல் மாத்திரைகளை விழுங்கியது. மாதவிடாய் சமயத்தில் உயிர் போகுமளவுக்கு ஏற்பட்ட வயிற்று வலி, பித்தப்பையில் உருவாகி இருக்கும் கற்களால் ஏற்படும் வலி, வயிறு வீக்கம் என்று எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டாள். மாதவிடாய் வருவதற்கும் வந்தால் நிற்காமல் போவதைச் சரிசெய்வதற்கும் மாத்திரைகளைச் சாப்பிட்டாள். மாத்திரைகளை அதிகமாகச் சாப்பிட்டதால் வயிறு புண்ணாகிப் போனது. புண்ணாகிய வயிற்றைச் சரி செய்வதற்காகவும் மாத்திரைகளைச் சாப்பிட்டாள். ஒரு நாள், இரண்டு நாள் மாத்திரைகள் போட மறந்து விட்டால் சினை பிடித்த பசுமாட்டின் வயிறு போல் வீங்கிப் போய் விடும் (திருநீறு சாமி, ப.122) மருத்துவத்தால் ஏற்பட்ட பின்விளைவுகள் பற்றிக் கூறப்படுகிறது.

## மருத்துவத்தால் பாதிக்கப்படும் பெண்கள்

மருத்துவமனை என்றாலே பெண்களால் ஆனது என்பதைப் போன்று உடல் நலமின்மை என்பது ஆணுக்கென்றாலும் பெண்ணுக்கென்றாலும் பெண்தான் மருத்துவமனையில் மிகுதியான நேரங்களைச் செலவிடுகிறார்கள். ஆணுக்கு மருத்துவப் பிரச்சினைகள் இருந்தாலும், பெண்ணுக்குப் பிரச்சினை இருந்தாலும் அதனாலும் பெண்ணே மிகுதியாகப் பாதிக்கப்படுகிறாள் என்பதையே இமையத்தின் மூன்று சிறுகதைகளும் உணர்த்து கின்றன. மகப்பேறுக்காக மட்டுமே பெண்கள் மிகுதியாக மருத்துவமனையை நாடுகிறார்கள். அதற்காக அவர்கள் தம்மை மிகவும் வருத்திக் கொள்கிறார்கள். மாற்றி மாற்றி மருத்துவமனைகளையும் மருந்துகளையும் சாப்பிடுகிறார்கள். அவர்களுக்குத் துணையாகச் செல்பவர்களும் பெரும்பாலும் பெண்களாக இருக்கிறார்கள். இதில் யாரென்று அறிமுகமற்றவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் அவர்களுக்காகவும் அவர்களைப் பேணவும் பெண்களே நியமிக்கப்படுகிறார்கள். மருத்துவமனையையும் பெண்களையும் பிரிக்க முடியாது என்பது போன்று இக்கதைகள் அமைகின்றன.

## முடிவுரை

மருத்துவம் என்பது மகப்பேறுக்காக தொடங்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. பெண்கள் மிகுதியாக பேற்றின் போது தான் இறக்கிறார்கள் என்று கருதிய ஆங்கில ஆட்சியினர்அதற்காகவே மருத்துவமனைகளைக் கட்டினார்கள். பெண்கள் அப்போதும் அச்சம் கொண்டு கை மருத்துவமே செய்து கொண்டனர். தாதிகள் பிரசவம் பார்த்தனர். உடல் இயக்கம் பற்றி அறியாத அவர்களால் பெரிதும் இறப்புகள் நிகழ்ந்தன. சாதி, சமய கட்டுப்பாடுகள்

மருத்துவமனையில் ஆண் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற தடையாக இருப்பதைக் கண்டு பெண் மருத்துவர்கள் மறைப்பணியாளர்களால் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் மருத்துவப் படிப்பு படித்தவர்களாகவும், இங்குள்ள பெண்களை பயிற்றுவிப்பவர்களாகவும் இருந்தார்கள். பல்வேறு நோய்களை ஒழித்து விட்ட மருத்துவத்தால் சாவினை தடுக்க முடியாது. மருத்துவமனை குறித்த கதைகள் மிகுதியாக எழுதியவராக இமையம் இருக்கிறார். பெண்களுக்கான பிரச்சினைகளே இதில் பெரிதும் காணப்படுகின்றன. ஆண்களுக்குப் பிரச்சினையென்றாலும் பெண்கள் தான் மருத்துவமனையில் மிகுதியான நேரத்தையும், உழைப்பையும் செலவழிக்கிறார்கள் என்பதை அவருடைய கதைகள் சுடடுகின்றன. மகப்பேறின்மை குறித்த மருத்துவ சிகிச்சைகளுக்காகப் பெண்கள் மிகுதியாக மருத்துவமனையை நாடுகின்றனர். அதில் பாதிக்கபடுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை மூன்று சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்துகிறார் இமையம். எனவே பெண்களையும் மருத்துவத்தையும், மருத்து வமனையையும் பிரித்துணர முடியாது.

**துணை நூற்பட்டியல்**

1. இமையம், திருநீறுசாமி, க்ரியா பதிப்பகம், சென்னை, 2023
2. அ. மார்க்ஸ், நமது மருத்துவ நலப் பிரச்சினைகள், எதிர்வெளியீடு, பொள்ளாச்சி, 2008
3. சு.நரேந்திரன், காலனி ஆட்சியில் நல வாழ்வும் நம் வாழ்வும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018
4. ஜி. ஐசக் அருள்தாஸ், குமரி மண்ணில் கிறிஸ்தவம், நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், கன்னியாகுமரி, 2010.

# தமிழ்க்காப்பியங்களில் "மக்களாட்சி" தத்துவக் கூறுகள்

*முனைவர் சை. ஜெஸிமா*
உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி(த), மதுரை

**முன்னுரை**

மக்களால் மக்களுக்காக மக்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து மக்களே நடத்தும் ஆட்சி "மக்களாட்சி" என்று கூறப்படுகிறது. ஆனால், "மக்களாட்சி, தேர்தலைத் தாண்டவே இல்லை.. குறைந்தபட்ச மக்களாட்சியாகச் செயல்படுகிறது." என்று க. பழனிதுரை (உங்கள் நூலகம், மாதஇதழ், நவம்பர் 2023, ப.68) கூறுகின்றார். இம்முரண் மக்களாட்சி குறித்தும், சமூகம் நிலை குறித்தும் ஆராய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இவர் கூறுவதைப் போல் சமூகமும் அந்நிலையிலேயே உள்ளதை நாம் காண முடிகிறது. "மக்களாட்சி" என்ற சொல்லின் உட்பொருளும், தத்துவமும் ஆட்சி தலைவர்களுக்கும் மக்களுக்கும் தெரிவதில்லை. மக்களும், தலைவர்களால் வரையறுக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்குத் தீனியாகி விடுகின்றனர். ஆட்சியுரிமை கிடைத்ததும் பெரு வணிகர்களின் கைக்கூலிகளாகவும், வணிக, தொழில் வல்லுநர்களிடம் தரகு பெற்றும் செயல்படும் தலைமைச் சுழலே இன்றைய மக்களாட்சி நிலையாகக் காணமுடிகிறது. எனவே, மக்களாட்சித் தத்தவம் குறித்து ஆட்சித் தலைவர்களும், மக்களும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தமிழ்க்காப்பியங்கள், "மக்களாட்சி" குறித்த அரிய கருத்துக்களைக் கூறுகின்றன.

**"மக்களாட்சி" - தத்துவ விளக்கம்**

"மக்களாட்சி" என்ற சொல், "மக்கள்" என்று பொருள்படும் "Demos" மற்றும் "ஆட்சியதிகாரம்" என்று பொருள் தரும் "Kratos" என்ற கிரேக்க மொழிச் சொற்களில் இருந்து பிறந்தது..." தந்திரமான தேர்தல் முறைப்படி உயர் அதிகாரம் பெற்ற மக்கள் தெரிந்தெடுக்கும் அரசாங்கம் இதில் மக்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் ஆட்சியதிகாரம் பெற்றிருப்பார்கள் அவ்வாறு அமைக்கப்பட்ட அரசாங்கம் மக்களின் விருப்பதற்கு இணங்க நடைபெறும். என்பது மக்களாட்சி குறித்து விகாஸ்பீடியா எனும் வலைதளம் பகரும் தகவல். "கூட்டங்களில் உட்காருவது, பேசுவது, விவாதிப்பது, விவாதத்திற்குப் பயன்படுத்த வேண்டிய மொழி என்ற வரையறைகள் மக்களாட்சிக்கு என இருக்கின்றன ஒருவரை ஒருவர் மதித்து நடத்துதல், சுதந்திரமாக யாரையும் புண்படாது கருத்துக்களை அனைவரும் புரியும் வகையில் எடுத்து வைப்பது. அனைவரின் கருத்தையும் மதிப்பது எதிர் கருத்துக்களை மதித்து வாங்குவது என பல நியதிகளும், நடைமுறை ஒழுக்கங்களும் மக்களாட்சியில் கற்றுக்கொள்ள வேண்டியன உள்ளன கிராம சபையில் கேள்விகள் கேட்க சாதாரண மனிதர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். கேள்விகள் கேட்கும் போது பொறுமையாக அனைத்து கேள்விகளுக்கும் தலைவர் பதிலளிக்க வேண்டும். கேள்வி கேட்பதில் ஒரு வரையறை உண்டு. பதில் கூறுவதற்கும் ஒரு வரையறை உண்டு. ஆரோக்கியமான விவாதத்தை முன்னெடுத்து, விவாத ஜனநாயகத்தை வளர்க்க வேண்டும்" (க.பழனிதுரை, உங்கள் நூலகம், மாத இதழ் டிசம்பர் 2023 ப.70) எனும் கூற்றுகள் மக்களாட்சித் தத்துவக் கூறுகளையும், மக்களாட்சியில், மக்களும், மக்கட்தலைவனும் செயலாற்ற வேண்டிய முறைகளையும் விளக்குகின்றன. மக்கள் குடிமக்களாக உருவாக்குவதற்கு வலியுறுத்தும்

கூற்றுகளாகவும் தென்படுகின்றன. "குடிமக்கள் தயாரிப்பு என்பது சாதாரண நிகழ்வல்ல. காரணம், மக்களாட்சியின் விழுமியங்களான சுதந்திரம், சகோதரத்துவம், நீதி, நியதி,தியாகம், நேர்மை சேவை, மக்களை மதித்துப் போற்றும் பண்பு... முதலியன பண்டைய கால மக்களாட்சியிலிருந்து எடுத்து வளர்க்கப்பட்டவை. (க.பழனிதுரை , உங்கள் நூலகம், மாத இதழ், நவம்பர் 2023 ப.70) இவை பண்டைய மக்கள் பின்பற்றிய மக்களாட்சி விழுமியங்களை எடுத்து ணர்த்துகின்றன. இத்தகைய விழுமியங்களை உள்ளடக்கிய "மக்களாட்சி" என்ற சொல்லும், பொருளும், தத்துவமும் கிரேக்கத்திலிருந்து பரவியன என்ற கூற்று சமூகத்தில் நிலவினாலும், ஆய்வாளர்கள், "இந்திய மண்ணில் கிரேக்கத்துக்கு இணையாக ஒரு மக்களாட்சி முறை இருந்துள்ளது. அதன் விழுமியங்கள் மேற்கத்திய கலாச்சாரங்களை விட மேம்பட்டது. காரணம், பொது ஒழுக்கங்கள், ஆட்சியிலும் சரி சமூகத்திலும் சரி பேணப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக்கி வைத் திருந்தனர்."(உங்கள் நூலகம், மாத இதழ், நவம்பர் 2023 ப .70) என்ற கருத்து, நம் நாட்டு மக்களாட்சிக் கலாச்சாரத்தை அறியத் தூண்டுகிறது மேலும், அரிஸ்டாட்டில் "ஒரு மக்களாட்சி நாட்டில் மக்கள் தாங்கள் எப்படி ஆளப்பட வேண்டும். எப்படி ஓர் ஆளுகை இருக்க வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும் அதற்கான ஒழுக்க நியதிகள் அரசியலிலும் ஆட்சியிலும் எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பது குடிமக்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதுதான் ஓர் ஆட்சியின் தன்மையை குறிக்கும்" (க.பழனிதுரை, உங்கள் நூலகம், மாத இதழ், நவம்பர் 2023 ப .71) என்றும் கூறப்படுகிறது

மேற்கூறிய கூற்றுகளில் இருந்து மக்கள் குடிமக்களாக ஆ(க்)கவும் குடிமக்களில் ஒருவரான தலைவர்கள் தலைவர்களாக செயல்படவும், மக்களைச் செயல்படுத்தவும், மக்களாட்சியில் சில விழுமியங்களையும், பொது நியதிகளையும் நடைமுறை ஒழுக்கங்களையும் கற்பித்து அவை பேணப்பட வேண்டும் என்பன மக்களாட்சித் தத்துவக் கூறுகளாகப் பெறப்படுகிறது. இவற்றைத் தமிழ்க்காப்பிங்களில் இனிக் காணலாம்.

### தமிழ்க்காப்பியங்களில் மக்களாட்சித் தத்துவக் கூறுகள்

தமிழ்க்காப்பியத்தின் வழக்குரைக்காதையில், கண்ணகி பாண்டிய நெடுஞ்செழியனிடம் தனக்கு நடந்த அநீதி குறித்து வினவ வந்த பொழுது, புறாவின் துன்பத்தை நீக்கிய சிபிச் சக்கரவர்த்தியையும், பசுவின் துயரைப் போக்க, தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதி சோழனையும், "புள்ளுறு புண்கண் தீர்த்தோன் அன்றியும் வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர்நெஞ்சுசுட தான்தன் அறும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன் (வழக்குரைகாதை : 52 - 55) என்று குறிப்பிடுவாள். இவ்வடிகள், அஃறிணை உயிர்கள் கூட குற்றஞ்சாட்டினாலும் அதனைச்செவிமடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்ற நடுவுநிலைத் தவறாத ஆட்சியாளர்கள் இருந்ததை உணர்த்துகின்றன.

இதேபோல் கண்ணகி பாண்டியனிடம் வந்து நியாயம் கேட்கும் பொழுதும், குடிமக்களில் ஒருத்தி என்றெண்ணி, பாண்டிய மன்னனின் சபை அவளுக்குப் பேச்சுரிமை வழங்கி இருக்கிறது. கண்ணகியின் சினம், கடுஞ்சொல், குரலை உயர்த்திப் பேசியமை, இவையனைத்தும் மன்னனுக்கு, சபையினை மதிக்காத குடிமகளின் செயல்களாகத் தெரிந்திருந்தாலும், அதற்காக மன்னன் சினக்க வில்லை. கடுஞ்சொல் பேசவில்லை. கண்ணகியின் குரலுக்குச் செவிமடுத்தான். அமைதி காத்து, உண்மை அறிய விரும்பி, கண்ணகி பேசுவதற்ககு உரிமை கொடுத்து நடப்பதை உள்வாங்கத் தயாராக இருந்தான். கண்ணகி உடைத்த சிலம்பில் மாணிக்கப்பரல் இருப்பதைக் கண்ட மன்னன், கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொணரவைத்து, அனைவருக்கும் முன்னே கண்ணகியே உடைக்க அனுமதி அளிக்கிறான்.

குற்றச்சாட்டிற்கு மன்னன் செவிமடுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்ற உந்துதல், பெண்ணை மதிக்கும் மனப்போக்கு, அச்சமின்றிச் சுதந்திரமாக செயல்பட பெண்ணை அனுமதித்தல் தன்மேல்

குற்றம் இருப்பினும் தனக்கும் தண்டனை அளிக்கும் நடுவுநிலைமை, தன் தவறை உணர்த்த மக்களிடமே செயல்பாட்டை, முடிவை ஒப்படைத்தல் ஆகியன மன்னனின் ஆட்சிப் பண்புகளாக அறியமுடிகிறது. இவ்ஆட்சிப் பண்புகளை, குடிமக்களில் ஒருவரே உருவாக்கும் மக்களாட்சியாக உணர முடிகிறது. மக்களே மன்னனை ஆள வேண்டும் என்ற மக்களாட்சித் தத்துவத்தை நினைவுபடுத்துகிறது. மேலும், அரிஸ்டாட்டில் கூறிய கருத்தான "ஒரு மக்களாட்சி நாட்டில் மக்கள் தாங்கள் எப்படி ஆளப்பட வேண்டும். எப்படி ஓர் ஆளுகை இருக்க வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும் அதற்கான ஒழுக்க நியதிகள் அரசியலிலும் ஆட்சியிலும் எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பது குடிமக்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதுதான் ஓர் ஆட்சியின் தன்மையை குறிக்கும்" *(க.பழனிதுரை, உங்கள் நூலகம், மாத இதழ், நவம்பர் 2023 ப .71)* என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

மணிமேகலையில், சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாகிய காதையில், சிறைக் கைதிகளின் பசி நீக்கிய மணிமேகலையை அழைத்து அமுதப்பாத்திரம் குறித்தும், பாத்திரம் குறித்த சிந்தனை யாதெனவும் மன்னன் வினவ, "வறுமை தான் மனிதனைத் திருடுவதற்குத் தூண்டுகிறது. பசி மிகக் கொடிய பகை. பசியை அகற்றி விட்டால் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகி விடும். பிறகு அவன் மனம் தீய சிந்தனையில் மூழ்காது, மக்களை நல்வழிப்படுத்துவது தான் மன்னனின் தலையாய கடமை. பசி இருக்கும் வரை தான் குற்றம் இருக்கும். பசியைப் போக்கினால் குற்றம் குறையும். குற்றம் குறைந்து விட்டால், பிறகு சிறை கோட்டத்திற்குத் தேவை என்ன இருக்கப் போகிறது? எனும் எண்ணங்களை மனதில் கொண்ட மணிமேகலை, மன்னனிடம் சிறைக் கோட்டத்தை அழித்து அறக்கோட்டமாக மாற்றக் கோருகிறாள். அரசனும் அதற்கு இசைந்து, அறக்கோட்டமாக்க ஆணையிடுகிறான். இக்கருத்துக்கள் உள்ளடங்கிய பகுதிகளை "யான் செயற் பாலதென் இளங்கொடிக் கென்று வேந்தன் கூற மெல்லியல் உரைக்கும் இளையோர் கோட்டஞ் சீத்தருள் நெஞ்சத்து, அறவோர்க் காக்கும் அது வாழியரென, அருஞ்சிறை விட்டாங் காயிழை உரைத்த பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக் கறையோ ரில்லா சிறையோர்கோட்டம் அறவோர்க் காக்கினன் அரசாள் வேந "*(சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை:155-162)*" என்ற அடிகளில் காண முடிகிறது.

இவற்றிலிருந்து அறிவதாவது, மக்களில் சிறந்தவர்கள் கொடைப்பண்பு மிக்கவர்களாக இருந்துள்ளனர். மன்னனும் சாதாரண பெண்ணின் ஆலோசனை கேட்டு, மக்களில் ஒருவரின் விருப்பத்தை ஏற்று செயல்படும், செயல்படுத்தும் தலைமைத்துவத்துவம் உடையவர்களாக திகழ்தல், ஒருவரை ஒருவர் மதித்தல், எதிர்க் கருத்துக்களை மதித்து உள்வாங்குதல், கேள்வி கேட்க வாய்ப்பளித்தல், பொறுமையுடன் தலைவர் பதிலளித்தல், விவாதத்தை முன்னெடுத்து ஜனநாயகத்தை வளர்த்தல் மன்னராயினும், மக்களாயினும் பேசுவதில் வரையறுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்துதல், சுதந்திரம், நேர்மை, நியதி உண்மை நோக்கி நோக்கி செயல்படல் போன்ற விழுமியங்களைப் பின்பற்றி நடத்தல் ஆகிய மக்களாட்சித் தத்துவக் கூறுகளை உணர முடிகிறது. மன்னராட்சியில் மக்களாட்சித் தத்துவத்தை காண முடிகிறது மக்களாட்சிக் கூறுகளைப் பின்பற்றிய மன்னராட்சியை உணர முடிகிறது.ஆனால் இன்றைய மக்களாட்சி சுழலில் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அரசு தீர்மானிக்கிறது. இலவசங்களை கொடுத்து மக்களின் சிந்திக்கும் திறனை மழுங்கடிக்கிறது.

ஆனால், மக்களாட்சி நடைபெறும் இன்று உரிமைகள் மறுக்கப்படுகின்றன. கிராம சபை கூட்டம் முதல் பாராளுமன்ற வரை மக்களில் ஒருவரோ பொறுப்பில் இருக்கும் நபர்களோ நியாயமான கோரிக்கைகளை, தன் உரிமை குரலை மேலிடத்தில் முன்மொழிய அனுமதி மறுக்கப்படுகிறது மீறி பேசினால், அடி, உதை,

பணி நீக்கம் என்ற தனிப்பட்ட முறையில் பாதிப்பைச் சந்திக்க நேரடிகிறது இதுவே, இன்றைய மக்களாட்சி. ஒரு விவசாயி கேள்வி கேட்டார் என்பதற்காக அந்த கிராம பஞ்சாயத்தின் செயலாளர் காலால் எட்டி உதைத்தார் என்ற செய்தி (.(க.பழனிதுரை, உங்கள் நூலகம், மாத இதழ், டிசம்பர் 2023 ப .67), "Save Democracy" என்ற பதாகை தாங்கி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பாராளுமன்ற வெளி நடப்பு செய்த நிகழ்வு (21.12.2023) என்பன இதற்கு உதாரணங்களாகும்.

### கம்பராமாயணத்தில் மக்களாட்சித் தத்துவக் கூறுகள்

கம்பராமாயண பாலகாண்டத்தில், தசரதனின் ஆட்சி குறித்துக் கூறும் பகுதியில், மன்னன் குடிகள் மீது அன்பு செலுத்துவதில் தாய் போன்றும், உடல் வலி குன்றிய மூத்த குடிமக்களைப் பிள்ளைகள் தாங்குவது போலவும் காத்தான். தசரதன் நோய்க்கு அளவாக மருந்திட்டு ஆற்றும் மருத்துவன் போல் அளவான தண்டனை கொடுத்து தீயவர்களைத் திருத்திக் காப்பாற்றினான். (பாலகாண்டம், அரசியல்படலம், பா.எ.171) என்று குறிப்பிடப் படுகிறது. இது, ஒரு நாட்டின் தலைவன் குடிமக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு செயலாற்றும் ஆட்சியை உணர்த்துகிறது. இவைமட்டுமின்றி, யுத்த காண்டத்தில், ராமன் தன்னைத் தேடி வந்த பரதனிடம், ஒரு நாட்டை ஆளும்விதம் குறித்துக் கூறிய பொழுது இராமன், "ஒவ்வொரு நாளும் மக்களோடு கலந்து பழக வேண்டும். உன் தரிசனம் ஒவ்வொரு நாளும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும்" என்பன போன்ற பல ஆலோசனைகளைக் கூறுகிறார். யுத்த காண்டத்தில் ராம ராஜ்ஜியம் பற்றிக் கம்பர் குறிப்பிடுகையில், "மக்கள் குழந்தைகளைப் போல பாதுகாக்கப்பட்டனர் நோய், விலங்கு, திருட்டு, வறுமை ஆகியவற்றின் அச்சமின்றி வாழ்ந்தனர். மக்களின் பிரச்சனைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டன. ராமனுடைய ஒழுகலாற்றையே மக்களும் அனுசரித்து வாழ்ந்தனர். பேராசையற்று கடமைகளை ஈடுபாட்டுடன் செய்தனர்" என்று கூறுகிறார். (https://m.dinakaran.com/article/News_Detail/28042/amp) இவை, மன்னராட்சியாக இருந்தாலும், மக்களின் வாழ்வை முன்னிலைப்படுத்தும் ஒன்றாகவும் மக்களும் ஆளும் தலைவனை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்ததையும், அரசனை ஆளும் சக்தியாக மக்கள் இருந்ததையும் உணரமுடிகிறது.

### முடிவுரை

அரசும், சமூகமும் பின்பற்றிய விழுமியங்கள், பொது ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்ட, கிரேக்கத்துக்கு இணையான, மேற்கத்திய கலாச்சாரங்களை விட மேம்பட்ட ஒரு மக்களாட்சி முறை இந்திய மண்ணில் இருந்துள்ளதைக் காப்பியங்கள் வழி அறிய முடிகிறது.

மக்களாட்சி, மக்களின் விருப்பத்திற்கு இணங்க நடத்தப்படுதல், ஒருவரை ஒருவர் மதித்தல், கருத்துக்களை மதித்து உள்வாங்குதல், கேள்வி கேட்க வாய்ப்பளித்தல், பொறுமையுடன் தலைவர் பதிலளித்தல், ஆரோக்கியமான விவாதத்தை முன்னெடுத்து ஜனநாயகத்தை வளர்த்தல், மக்கள், மக்கட் பிரதிநிதிகள் பேசும் , விவாதிக்கும் மொழியில் வரையறைகள் பின்பற்றப்படுதல், தலைவர்களும், மக்களும் விழுமியங்களான சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம், நீதி, நேர்மை, நியதி, தியாகம், சேவை, உண்மை நோக்கிச் செயல்படுதல் முதலியவற்றைப் பின்பற்றி நடத்தல், ஆகிய மக்களாட்சிதத்துவக் கூறுகளை இக்கட்டுரை நமக்கு உணர்த்துகிறது.

மக்களாட்சித் தத்துவங்களின் கூறுகளாகக் கூறப்பட்டவை, மன்னராட்சியில் பின்பற்றப்பட்டுள்ளதைத் தமிழ்க்காப்பியங்களின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. இன்று, மக்களாட்சித் தத்துவம் என்பது சபைகளில் பின்பற்றப்படும் சம்பிரதாயங்களாகச் சமூகத்தில் நிலவுவதையும் காண முடிகிறது.

தமிழ்க்காப்பியங்கள் சமயப்பூச்சு உடையனவாக இருந்தாலும், அவை அனைத்தும் வலியுறுத்துவது ஒரே வகையான மக்களின் நலன் சார்ந்த ஆட்சியையே என்ற முடிவுக்கும் வர முடிகிறது.

ஆட்சியாளர்கள், மக்கள் பேசுவதற்கு அனுமதித்து, அவர்களின் கருத்துக்களை, தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை நிறைவு செய்தால் மக்களாட்சி நலம் பெறும். எனும் சிந்தனையை இக்கட்டுரைமுன் வைக்கிறது.

### துணை செய்த நூல்கள்


1. புலியுர் கேசிகன் (பதி.) - "சிலப்பதிகாரம் மூலமும் உரையும்", சரண் புக்ஸ், சென்னை. 2021
2. வேங்கடசாமி நாட்டார். ந.மு., ஔவை துரைசாமிப் பிள்ளை. சு(பதி.)., மணிமேகலை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மு.ப.1985
3. https://m.dinakaran.com/article/News_Detail/28042/amp
4. "உங்கள் உலகம்" மாத இதழ், நவம்பர் 2023, டிசம்பர் 2023, நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
5. மக்களாட்சி - ஓர் கண்ணோட்டம் - Vikaspedia

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

### Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Hosted by**

தமிழ் உயராய்வு மையம்

**அரசு கலைக் கல்லூரி**

மேலூர் – 625 106

மதுரை மாவட்டம்

Impact Factor 4.650

Articles should be mailed to bodhijournal@gmail.com

**BODHI**

**International Journal of Research in Humanities, Arts and Science**

www.bodhijournals.com

Powered & Published by

**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**

www.crrps.in